இராம காதை

(அயோத்திக் காண்டம்)

உரையாசிரியர்:
சொ. முருகப்பன்.

கம்பர் பதிப்பகம்

கம்பர் அருளிய

இ ரா ம கா தை

(அயோத்திக் காண்டம்)

உரையாசிரியர் :

சொ. முருகப்பன்

கம்பர் பதிப்பகம்

மகளிர் இல்லம் - அமராவதி புதூர்

இராமனாதபுரம் மாவட்டம்

வெளியீடு 4

முதற் பதிப்பு 1956

நூல்நிலையப் பதிப்பு ரூ. 15-00

விற்பனை உரிமை

செல்விப் பதிப்பகம்

காரைக்குடி – இராமநாதபுரம் மாவட்டம்

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை - சென்னை 14

நூல் முகம்

ராய. சொ.

இவ் இராம காதை அயோத்திக் காண்டத்துக்கு, நூல் முகம் எழுதும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டுவிட்டது. இந் நூலைத் தொகுத்து உரை கண்ட அன்பர் சொ. முருகப்பனர் சில நாட்களுக்கு முன் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்.

இராம காதையின் முதற் புத்தகமாகிய பால காண்டத்தை 1953-ல் வெளியிட்டு, அந் நூலை அன்பர் முருகப்பனர் எனக்கு உரிமையாக்கினர். இவ் இரண்டாங் காண்ட வெளியீட்டு நாளில் அன்னர் இல்லை. அவ் அறிஞர் எனக்கு முன் தந்த உரிமை கொண்டு, இதற்கு நான் நூல் முகம் வரைகின்றேன்.

அன்பர் முருகப்பனரும் நானும், நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஒன்ருகத் தமிழ் இலக்கியம் பயின்ரேம். இடையில், பல இயக்கத் தொண்டுகளிலும், ஈடுபட்டதன் காரணமாக, தமிழ் இலக்கிய ஆழியுள் தொடர்ந்து அவர் மூழ்கவில்லையாஞலும், வாழ்நாளின் இறுதிப் பகுதியில் தமிழ் நூலுள் பெரிதும் திளைத்துச் சிறப்பாக இராம காதைக் கடலுள், அடிவரை மூழ்கி நல்ல பல முத்துக்களைத் தேர்ந்தெடுத்தார்.

இராம காதைக் கடல், ஆழங் காண்டற்கு அரியது. இராம காதை போன்ற ஓர் அரிய காவியத்தை எவ் உலகத்திலும் காண்டல் அரிது. இதனை இயற்றிய கவிச் சக்கரவர்த்தி கம்பர் பெருமான், இந் நூலுக்கு இராம காதையென்றே பெயரிட்டிருத்தல் வேண்டும் என்பது அன்பர் முருகப்பனர் முடிபு. இதனை நான் முற்றும் உடன்படுகின்

றேன். 'உலகம் யாவையும்' என்ற இறை வணக்கப் பாடலுக்கு அடுத்த கவியாகிய 'ஓசை பெற்றுயர்' என்ற பாவில், 'ஏசில் கொற்றத்து இராமன் கதை யரோ' என்று கம்பர் கூறுவது இதற்குத் தக்க சான்று.

இணையற்ற பெரும் புலவராகிய கம்பர் இயற்றிய இவ் இராம காதை, மிக்க விரிவுடைய ஒப்பற்ற காவியம்; ஆறு காண்டங்களை யுடையது; கம்ப ராமாயணம் என்ற பெயரால், பதினுயிரம் பாடல்களுக்கும் மேலாகக் கொண்டு விளங்குகின்றது. அப் பதினுயிரம் பாடல்களுள் பல பாடல்கள், கம்பர் பெயரால் நாளடைவில் பலரால் புகுத்தப் பட்டன என்பது, தமிழறிஞர் பலருங் கண்ட உண்மை. அன்பர் முருகப்பனுர் ஏறக்குறையக் கம்பருடைய பாடல் களே என்று, தாம் கண்ட பாடல்களையும், கதைத் தொடர்பு விடாமல் இருப்பதற்குத் தேவையாக இருந்த வேறு சில பாடல்களையும் கொண்டு, இராம காதை ஆறு காண்டங்களை யும் தொகுத்து முடித்தார். பாடல் தேர்வு ஆறு காண்டங் களுக்குமே செய்து முடித்துவிட்டார்.

அவர் பொறுக்கிய பாடல்கள் மொத்தம் மூவாயிரத்து இருநூற்றி நாற்பத்தெட்டு.

விபரம்

பால காண்டம்	402
அயோத்திக் காண்டம்	623
ஆரணிய காண்டம்	485
கிட்கிந்தைக் காண்டம்	300
சுந்தர காண்டம்	370
இலங்கைக் காண்டம்	1068
ஆகப் பாடல்கள்	3248

இவற்றுள் பால காண்டம் உரை எழுதப்பட்டு வெளி வந்திருக்கிறது. அயோத்திக் காண்டம் முருகப்பனர் எழுதிய உரையுடன் இன்று வெளிவருகிறது. அடுத்த காண்டமாகிய ஆரணிய காண்டத்தை விடுத்து, அதற் கடுத்த கிட்கிந்தைக் காண்டம் முந்நூறு பாடல்கட்கும், அதனை அடுத்த சுந்தர காண்டத்தில் தாம் தேர்ந்தெடுத்த முந்நூற்றி எழுபது பாடல்களில் முப்பத்தாறு பாடல் களுக்கும் அன்பர் முருகப்பனர் உரையெழுதி வைத்திருக் கின்ருர்.

இந் நூலின் பெயரை, முன்னேரைப் பின்பற்றி 'அயோத்தியா காண்டம்' என்று கூருது, 'அயோத்திக் காண்டம்' என்று தமிழ் மரபுப்படி இந் நூலுக்கு அன்பர் முருகப்பனர் பெயர் சூட்டி யிருக்கின்ருர். அன்பர் முருகப் பனர் தம் வாழ்நாள் முழுதும் ஆற்றிய பொதுநலத் தொண்டு பலப்பல. இறுதியாக அவர் செய்த இவ் இலக் கியத் தொண்டு சிகரம் போன்றது. தம் வாழ்நாளின் கடைசிப் பகுதியில், இராம காதையை நன்கு ஆராய்ந்து, அரிய பாடல்களைத் திரட்டி, நல்ல முறையில் நுணுக்கமாக உரை கண்டிருக்கின்ருர் முருகப்பனர். அவற்றின் சிறப்பை நூலில் நுழைந்து அன்பர்கள் கண்டு மகிழ்வாராக.

இராம காதையில், அன்பர் முருகப்பனர் எவ்வளவு வரை ஈடுபட்டிருந்தார் என்பதை, அண்மையில் அவர் பாடிய சில வெண்பாக்கள் காட்டா நிற்கும். மகளிர் இல்லத்தில் வேலைத் தொல்லையால் அமைதியாக இருந்து உரை எழுத முடியவில்லை யென்பதற்காகச் சில நாள் குன்றக்குடியில் சென்று தங்கி எழுதி வந்தார். அங்கும் எழுதமுடியாத நிலையில் ஒரு நாள் ஊருக்குத் திரும்பி விட்டார்; திரும்பியதும் ஒரு வெண்பாப் பாடி வைத்திருக் கின்ருர்.

குன்றக் குடியிற் குமரா!நீ கேட்கிலையோ ?
அன்றிச் செவிடோ ? அறியேனே ;—இன்றுஒலியைத்
தட்டாற் பெருக்கித் தலைவலியைக் கூட்டிவந்து
விட்டார்ஊர் சென்றேன் விரைந்து.

மடத்தில் காலை 8 மணி முதல், மாலை 5 மணி வரை, கிராம போனை வைத்து விட்டார்கள். எழுதவும் முடியவில்லை; படிக்கவும் முடியவில்லை; ஊருக்குத் திரும்பினேன். அன்று சாமியார் மலேயாவுக்குச் சென்றார்.

பாடலின் கீழ் உள்ள இக் குறிப்பும் அன்பர் முருகப்பனார் எழுதியதே.

செம்மை பெறவேண்டிச் சென்று திரிந்தலைந்தேன் ;
இம்மை இருபேறும் எய்தினேன் ;—அம்மைஎங்கள்
சீதை மணவாளன் தெய்வத் திருக்கதையை
ஓதி உணர்ந்தேன் உரை.

என்ற பாடல் அன்பர் முருகப்பனார்க்கு இராம காதையில் எவ்வளவு ஈடுபாடு இருந்தது என்பதைக் காட்டுகின்றது.

கம்பர்க்கு அடிமையென்று கைச்சாத்துச் செய்துவிட்டேன் ;
இம்பர்வேறு ஒன்றற்கு இடமுண்டோ ?—கம்பர்அரும்
காதைக்கு உரைஎழுதிக் காலம் மிகுந்திருந்தால்
ஏதும்ஒன்று செய்தற்கு இடம்.

என்ற செய்யுள் இதை முடித்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பது என்று அன்பர் முருகப்பனார் கங்கணங் கட்டிக் கொண்டமையைக் காட்டுகின்றது.

கம்பர் எனைஅறிந்து கையாண்டு கொண்டுவிட்டார் ;
உம்பர் உவப்ப உரைகாண்பேன் ;—இம்பர்இனி
வாழ்வார்க்கு இராமகதை வான்மருந்து ; கேட்போரின்
ஊழ்போக்கும் என்றே உவந்து !

என்று கூறுங்கால், அன்பர் முருகப்பனார் தமது உரைச்

சிறப்பில் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தார் என்பது தெரிகின்றது. இப்பாடல்,

> புவிஅனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
> தமிழ்மொழியைப் புகழில்ஏற்றும்
> கவிஅரசர் தமிழ்நாட்டுக்கு இல்லைஎனும்
> வசைஎன்னால் கழிந்ததன்றே.

என்று மகாகவி பாரதியார் பெருமிதத்தோடு பாடிய வரிகளை நினைப்பூட்டுகின்றது.

இவ்வண்ணம் இராம காதைக்கு உரை கண்டு மகிழ்வதே தமது வாழ்நாளின் குறிக்கோள் எனக் கருதிய அன்பர் முருகப்பனர் உரை முழுதையும் முடிக்காமலேயே இவ் உலக வாழ்வை நீத்துவிட்டார்.

அவர் மறைவதற்குச் சில நாள் முன், பின் வரும் அரிய வெண்பா ஒன்றைப் பாடி யிருக்கின்றார்.

> உரைராம காதைக்கு உரைப்பன்என நின்றேன்;
> வரையாதுஎன் ஆயுள் வகுப்பாய்!—வரைஉளதேல்
> வரைக்குள் உரைமுடிய வன்மை அருள்வாய்!
> தரைக்குள் புகழ்பெருகத் தான்.

அன்பர் முருகப்பனர் உள்ளத்தில் ஏதோ ஒரு தோற்றம் உண்டாகி, இப்படி ஒரு பாடலைப் பாடி யிருக்கின்றார். பாடிய சில நாட்களில், அவர் வாழ்நாள் முடிந்துவிட்டது. உரை முற்றும் முடிவு பெறவில்லை. யார் யாரால் என்னென்ன ஆகவேண்டுமென்பது இறைவன் கட்டளையோ அவ்வளவிற்குமேல் அணுவும் ஆகாது என்ற அசையாத நம்பிக்கையால் நாம் அமைதி பெறுவோம்.

இவ் அயோத்திக் காண்டத்தின் அச்சு வேலையை அன்பர் முருகப்பனர் கிட்டத்தட்ட முடித்திருந்தார். அவர் பார்த்து முடித்திருந்த நூல்தான் இதுபோது வெளி வருகின்றது.

கதைச் சுருக்கம், கதைப் பாத்திரங்கள், கதைக் குறிப்புக்கள் ஆகியவற்றை, எனக்கும் அன்பர் முருகப்பனுர்க்கும் நெருங்கிய நண்பராகிய, வள்ளல் அழகப்பனுரின் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் ந. சுப்பு ரெட்டியார் எழுதி உதவினர்.

எஞ்சிய பகுதி உரையையும், அன்பர் முருகப்பனுர் எழுதி யிருந்தால், தமிழ்நாடு இன்னும் பயன் பெற்றிருக்கும். இறைவன் அருள் வேருக இருக்கும்போது யார் என்ன செய்யமுடியும் ?

கரும்புஆட்டிக் கட்டி சிறுகாலேக் கொண்டார்,
துரும்புஎழுந்து வேங்கால் துயராண்டு உழவார் ;
வருந்தி உடம்பின் பயன்கொண்டார், கூற்றம்
வருங்கால் பரிவது இலர்.

என்று, வாழ்க்கையின் பயன் கண்டார் இறப்புக்கு வருந்த மாட்டார் என நாலடியிற் கூறியபடி, அன்பர் முருகப்பனுர் வாழ்வின் பயன் பெற்றதாகக் கூறிய பின்வரும் பாடலே ஈண்டுத் தந்து நூல் முகத்தை முடிக்கின்றேன்.

வள்ளுவனைக் கற்றேன் ; மணிவா சகம் உணர்ந்தேன் ;
கள்ஊறு கம்பன் கடல்திளைத்தேன் ;—அள்ளுபுகழ்க்
காந்தி யடிகளைஎன் கண்ஆரக் கண்டிட்டேன் ;
வாழ்ந்தேன் ; இருந்தேன் ; மகிழ்ந்து.

உள்ளுறை

கம்பர் அருளிய

இராம காதை

அயோத்திக் காண்டம்

[அயோத்தி நகரில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறும்
காண்டம். காண்டம் - பெருப்பிரிவு]

கடவுள் வணக்கம்

403 வான்நின்று இழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறனும் உளன்என்ப ;
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்பக் கோல்துறந்து
கானும் கடலும் கடந்துஇமையோர்
இடுக்கண் காத்த கழல்வேந்தை. க

வானிலிருந்து தோன்றி எல்லை காணமுடியாத ஐம்பெரும் பூதங்களால் ஆகி இயங்கும் உலகில், உடலும்,

403. வரம்பு - எல்லை. வைப்பு - நிலவுலகம். ஊன் - உடல். கோல் - ஆட்சி. துறந்து - கைவிட்டு. இமையோர் - தேவர். இடுக்கண் - துன்பம். வேந்தை - மன்னனாகிய இராமனை.

உயிரும் உணர்வும் போல, உள்ளேயும் புறத்தேயும் பொருந்தி யிருக்கிறான் என்று அறிஞர் கூறுகின்றனர் ; யாரை ? கூனி யாகிய மந்தரையும், சிறிய தாயருள் பெரிய தாயாகிய கைகேயியும் கொடுமை செய்ததனாலே, அரசாட்சியைக் கைவிட்டுக் காட்டையும் கடலையும் கடந்து, தேவர்களின் துன்பத்தைத் தீர்த்த வீரக்கழலை அணிந்துள்ள வேந்தனாகிய இராமனை.

(விளக்கம்) வானிலிருந்து காற்று தீ நீர் மண் என்று முறையில் தோன்றிய ஐந்து பூதங்களும் கலப்பதனால் தோன்றுவது உலகமாகும். 'நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும் கலந்த மயக்கம் உலகம்' (தொல் - பொருள் 644) அந்த உலகப் பொருள் யாவற்றிலும் உள்ளும் புறமுமாக நிறைந்து பொருந்தி நிற்பது கடவுள் தத்துவம். அத் தத்து வம் அறியக்கூடிய ஊனாகிய பருப்பொருளைப் போலவும், புலனறிவில் அகப்படாத உயிராகிய நுண் பொருளைப் போல வும், இரண்டிலும் பொருந்தி நிற்கும் உணர்வைப்போலவும் கலந்து நிற்கும் என்க. ஐந்து பூதங்களும் மாறியும் கூடியும் குறைந்தும் கலப்பதனால் ஏற்படும் வேறுபாட்டுக்கு முடிவே கிடையாதாதலால், 'வரம்பிகந்த மாபூதம்' எனப்பட்டது. மந்தரை, கூன்விழுந்த உடலுடையளாதலால் கூன் எனப் பட்டாள். சிறிய தாய் இருவராதலால் அவர்களுள் மூத்தவள் என்பதை உணர்த்த, 'சிறிய கோத்தாய்' எனப்பட்டது. அரசியல் பெருமை பெற்ற தாயரிருவருள் சிறியவள் எனினும் ஆம் ; சுமத்திரை அரசு நெறியில் பங்கு பெறவேயில்லை ஆதலின். இமையோர் என்ற சொல் நல்லவர்கள் என்ற பொருளை உணர்த்தி நிற்கிறதெனக் கொள்ளலாம். அறந்தலை நிற்பவர் தேவர், அறந் திறம்புவோர் அரக்கர் என்ற கருத்தைத் தன்னுள் அடக்கி நூல் செல்கின்றது. இராமனின் குணஞ் செயல்களை உணர்ந்தனுபவிக்கும் அறிஞர்கள் பரம்

பொருளே இவன் என்று நினைக்கிறார்கள் என்பது கருத்து. கடவுள் வணக்கம்; வழிபடு கடவுள் வணக்கம் ஏற்புடைக் கடவுள் வணக்கம் என இருவகைத்து. இங்கே கதைத் தலைவனே கடவுளாதலால் அவனையே வணங்கினர்.

---

1. மந்திரப் படலம்

[மந்திரி சபையிலிருந்து ஆலோசனைசெய்ததைக் கூறும் படலம். மந்திரம் – மந்திரிசபை, ஆலோசனை; படலம் – சிறுபிரிவு.]

தயரதன் ஆலோசனை மண்டபம் அடைதல்

404 *மண்உறு முரசினம்
மழையின் ஆர்ப்புறப்
பண்உறு படர்சினப்
பரும யானையான்
கண்உறு கவரிஅம்
கற்றை சுற்றுற
எண்உறு சூழ்ச்சியின்
இருக்கை எய்தினன். க

பசை தடவப்பட்ட முரச வாத்தியங்கள் மேக முழக்கத்தைப் போல் ஒலிக்க, அலங்கரிக்கப்பட்டுக் கோபத்துடன் கூடிய யானையினது முதுகுத் தவிசில் ஏறினவனாகிய தயரத

---

404. மண்-மத்தளம் முதலியவற்றுக்குப் பூசும் பசை. மழை-மேகம். பருமம் - யானைக் கழுத்துமெத்தை. கண் - பெருமை. கவரி அம் கற்றை - அழகிய கவரிமான் மயிரின் தொகுப்பு : சாமரை. சுற்றுஉற - சுழற்றிக்கொண்டு வர. சூழ்ச்சி - ஆலோசனை.

மன்னன், பெருமை பொருந்திய அழகிய சாமரை சுழன்று வர, எண்ணி முடிவு செய்யக்கூடிய மந்திராலோசனை மண்டபத்தை அடைந்தான்.

மந்திரிகளை அழைத்தல்

405 சந்திரற்கு உவமைசெய்
தரள வெண்குடை
அந்தரத்து அளவும்நின்று
அளிக்கும் ஆணையான்,
இந்திரற்கு இமையவர்
குருவை ஏய்ந்ததன்
மந்திரக் கிழவரை
வருகென்று ஏவினன். உ

சந்திரனை யொத்த முத்தினால் ஆகிய வெண்கொற்றக் குடையானது மேலுலகம் வரை விரிந்து காத்தலைச் செய்கின்ற ஆட்சியையுடைய தயரதன், தேவேந்திரனுக்கு வியாழன் எப்படியோ அப்படித் தனக்கு வாய்த்திருக்கும் தன்னுடைய ஆலோசனைக்கியைந்த மந்திரிமார்களை அழைத்து வரும்படி உத்தரவிட்டான்.

(வி - ம்) தேவேந்திரனுக்கு வியாழன் ஒருவர்தான் மந்திரிபோல யோசனை சொல்பவராவர். தயரதனுக்குப் பலரைக் கொண்ட மந்திரிசபை இருக்கிறது. பல மந்திரிகட்கு ஒரு வியாழனை எப்படி உவமை கூறலாமென்ற ஐயத்துக்கு இடமில்லை. இங்கே அறுபதாயிரம் பேர் மந்திரிகளாக இருந்தாலும் கருத்தில் ஒருவராகவே இருப்பர். (பாடல் 409). ஆதலால் பன்மைக்கு ஒருமை உவமையாகி யிருக்கிறது.

---

405. தாளம் - முத்து. அந்தாம் - வானம். அளித்தல் - பாதுகாத்தல். இமையவர் குரு - வியாழன். ஏய்ந்த - ஒத்த. மந்திரக் கிழவர் - ஆலோசனைக்கு உரியவர்கள்.

நாலாவது கடவுள்

406 பூவரு பொலங்கழல்
பொருவில் மன்னவன்
காவல்இல் ஆணை அம்
கடவுள் ஆம்எனத்
தேவரும் முனிவரும்
உணரும் தேவர்கள்
மூவரின் நால்வராம்
முனிவந் தெய்தினன். ௩

அழகிய பொற்கழலணிந்த ஒப்பற்ற மன்னனாகிய தயரதனின், காவலில்லாது நடைபெறும் ஆட்சிக்கு ஒரு கடவுள் ஏற்பட்டிருப்பதைப் போலத் தேவராலும் முனிவராலும் உணரத்தக்க மும்மூர்த்திகளோடு நான்காவது மூர்த்தி என்று கருதத்தக்க வசிட்ட முனிவர் வந்து சேர்ந்தார்.

(வி - ம்) அரசனிடும் உத்தரவுகள் தவறாது நடைபெற்றுவரக் கண்காணிப்பாளர்கள் வேண்டும். அவர்கள் இல்லாவிட்டால் உத்தரவு பிறந்துகொண்டே யிருந்தாலும் மக்களுக்குள் புகுந்து பயனளிப்பதற்கில்லை. தயரதன் ஆட்சியில் கண்காணிப்பாளர்கள் இல்லை. அவர்கள் இல்லாமலே ஆணையானது அணுவளவும் பிறழாமல் மக்களிடம் பரவி நிலவுகிறது. காரணமென்ன வென்றால் அரசன் இடும் ஆணை தேவையுள்ளதாகவும் மக்களுக்குத் துன்பமில்லாத இன்பத்துக்குரியதாகவு மிருக்கிறது. மக்கள் எல்லோரும் அறிவும் ஒழுங்குமுள்ளவ ராதலால் அரசனதாணையைக் காத்திருந்து ஏற்று நடக்கின்றனர். அரசனுக்கும், உத்தர

406. பூ - அழகு. பொலம் - பொன். பொருவு - ஒப்பு. காவல் - அரசனின் ஆணை தவறாது நடைபெறுகிறதா என்று கண்காணிப்பவர். முனி - வசிட்டர்.

வுக்கும், மக்களுக்கும் நடுநின்று சமம் செய்யும் ஒரு கடவுளைப்போல வசிட்டர் விளங்குகிறார். தயாதனுடைய நாட்டில் ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களும் நடைபெறுகின்றன. அவற்றிற்கு மூன்று கடவுளர் பொறுப்பேற்றிருப்பதைப் போல அரசனுடைய ஆணை, உந்துவார் இல்லாமல் தானே நடைபெறுவதற்கு வசிட்டர் ஒரு தெய்வமாக விளங்குகிறார். எனவே, வசிட்டர் நான்காவது கடவுள் என்று கருதப்படுகிறார்.

நடுநிலை தவருதவர்

407 குலமுதல் தொன்மையும்
கலையின் குப்பையும்
பலமுதல் கேள்வியும்
பயனும் எய்தினர் ;
நலமுதல் நலியினும்
நடுவு நோக்குவார் ;
சலமுதல் அறுத்துஅரும்
தருமம் தாங்கினர். ௨

பரம்பரையின் அடிப்படையிலிருந்து தொன்றுதொட்டுப் பழக்கத்தினல் ஏற்படும் நற்குணங்களும், கல்வியினல் ஏற்பட்ட மிக்க அறிவும், பல பொருள்களைப் பற்றிய கேள்வியறிவும், அவற்றால் ஏற்படும் அனுபவ அறிவும் பெற்றவர்கள் ; தமக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகள் அடியோடு

407. குலம் - பரம்பரை. தொன்மை - தொன்றுதொட்டு வரும் நன்மை. குப்பை - மிகுதி. பலமுதல் - பலபொருள்கள். பயன் - அனுபவம். நலம் - வாழ்வு. முதல் - மூலம் ; வேர். நடுவு - நீதி. சலம் - கோபம்.

கெடுவதானாலும் நீதி தவறாதவர் ; கோபம் முதலிய கெட்ட குணங்களை வேரறுத்து, அருமையான கடமையை மேற்கொண்டவர்.

(வி - ம்) மந்திரிகளின் இலக்கணம் கூறப்படுகிறது. பரம்பரையாகத் தொடர்ந்த நற்குணமுள்ள குடும்ப வாழ்க்கையைப் பெற்றவராக இருக்கவேண்டும். 'பொய்ம்மை மொழி புகன்றறியோம் புகல மனம் எண்ணுகினும் மெய்ம்மையலது உரையாநா வேத நவில் பயிற்சியால்' (நைடதம்) என்றாற்போலப் பிழையே செய்யாதபடி உடலையும், மனத்தையும் பயிற்சியிலேயே கொண்டு செலுத்துவது குடும்ப வழக்கில் அமைந்திருக்க வேண்டும். அதுதான் குலம், தொன்மை, பழமை என்று கூறப்படுகிறது. 'தொன்மையுடையார் தொடர்பு' (நாலடி - 216) என்பது காண்க. கரை கடந்த கல்விப் பயிற்சி வேண்டுமென்பதைக் கலையின் குப்பையும் என்று கூறப்பட்டது. கல்வியறிவு பெற்றவர்கள் தங்கள் அனுபவங்களோடு ஒட்டிக் கூறுவதைக் கேட்பதே கேள்வியாகும். இவையிருப்பினும் தான் அனுபவித்தறியாத வரைக்கும் அறிவு முழுமை பெறுவதில்லையாதலால் பயனும் எய்தினர் என்று உரைக்கப்பட்டது. பயன், இங்கே தன்னனுபவமாகும். அனுபவ அறிவு பெற்றவர் என்றதனால் வயது முதிர்ந்தவரென்பதும் பெறப்படும். பயனை அறிந்தவரென்னாது பயனை எய்தியவர் என்று கூறப்பட்டிருப்பது காண்க. தன் வாழ்வே அடியோடு ஒழிவதாயினும் சத்தியத்தில் விடாப்பிடியுள்ளவர் ; அஃதாவது தன்னல மறுப்புள்ளவர் என்று அழுத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. கடமை செய்வதில் தன்னலம் குறுக்கிடின் கடமை தவறிப்போம். பேராசை இயக்குதற்கு முதற்காரணராகவுள்ள மந்திரிகட்குத் தன்னலத் தியாகம் இன்றியமையாதது என்பதை 'நலம் முதல் நலியினும்' என்றார்.

உயர்ந்த மருத்துவர்

408 நல்லவும் தீயவும்
நாடி நாயகற்கு
எல்லையில் மருத்துவன்
இயல்பின் எண்ணுவார்
ஒல்லைவந்து உறுவன
உற்ற பெற்றியின்
தொல்லைநல் வினைஎன
உதவும் சூழ்ச்சியார் ௫

தலைவனுக்கு நன்மை தருவனவற்றையும் தீமை தருவனவற்றையும் கருதி முன்னதாகவே அறிந்து, வைத்தியனைப்போல ஆராயவல்லவர்; விரைந்து துன்பம் நிகழுமானால் முன் செய்த நல்வினை வந்து உதவுவது போல உதவக் கூடிய திறமையுள்ளவர்.

(வி - ம்) மந்திரிக்கு வைத்தியன் உவமை. வைத்தியரில் பலவகை யுண்டு. நோய் கண்டபின் மருந்து காண்பதுமுண்டு. மந்திரியோ வருமுன்பு அறிந்து செயலாற்ற வேண்டும். நலமும் தீதும் ஆகிய புதிய எல்லையில் கால் வைக்கு முன்பே, அஃதாவது இயல்பாக இருக்கும்போதே என்பது தோன்ற 'எல்லையின்' எனப்பட்டது. கைநாடியும் உடற் கூறும் கண்டு, வரப்போகும் நிலையை அறியும் மருத்துவனைப்போல என்பதும் பொருந்தும். எதிர்பாராமல் ஏதாவது இடுக்கண் தோன்றினால் முன்செய்த நல்வினையைப் போல் உதவி செய்து தடுக்கக்கூடிய அறிவுத் திறமுமுடையார்

---

408. நாயகன் - தலைவன்; அரசன். எல்லை - வரம்பு. ஒல்லை - விரைவாக. உறுவன - வந்து பொருந்துவன. பெற்றி - நிகழ்ச்சி. தொல்லை - பழைய. சூழ்ச்சி - நுண்ணறிவு.

என்க. ‘நல்வினை என’ என்றதனால், ‘உறுவன’ துன்பம் எனலாயிற்று.

உணர்வு ஒன்றே

409 அறுபதி னுயிரர்
ஏனும், ஆண்தகைக்கு
உறுதியில் ஒன்றுஇவர்க்கு
உணர்வுஎன்று உன்னலாம்;
பெறல்அரும் சூழ்ச்சியர்;
திருவின் பெட்பினர்;
மறிதிரைக் கடலென
வந்து சுற்றினர். அ

(மந்திரியர்) அறுபதினாயிரம் பேர் என்றாலும் ஆணிற் சிறந்த தயரதனுக்கு நன்மை உண்டாக்குவதில் இவர்கட்கு உணர்ச்சி ஒன்றே என்று நினைக்கத்தக்க, (பிறருக்கு) பெறு தற்கு அருமையான திறமையைப் பெற்றவர்; எல்லாச் செல்வங்களையும் பேணி வளர்ப்பவர்; அவர்கள் அலையெறி கிற கடல் என்று சொல்லும்படி வந்து சூழ்ந்தனர்.

(வி - ம்) தயரதன் ஆண்ட ஆண்டு அறுபதாயிரம் எனப்படும். அவ்வளவு நாளும் இந்த அறுபதாயிரம் மந்திரி யரும் இருந்தனரா என்ற கேள்விக்கு, ஆள் மாறினாலும் என்றைக்கும் 60,000 மந்திரிகள் இருந்துவந்தனர் என்று பதிலுரைக்கலாம். மந்திரி சபையை நோக்கியே அரசன் கூறினான் என்றவாறு. இனி அரசன் மனைவியர் 60,000 எனப்படுகிறது. சேனை 60,000 அக்குரோணி எனப்படு

---

409. உறுதி - நன்மை. சூழ்ச்சி - உபாயம்: திறமை. திரு - செல்வம். பெட்பு - பேணுதல். மறிதிரை - எதிர்த்து எழும் அலை.

கிறது. இராமகாதையில் அறுபதாயிரம் என்பது மிகுதியைக் காட்டும் எண்ணுகக் கொள்ளப்பட் டிருக்கிறதென்று கருது தலே பொருந்துவதாம்.

வரிசையாக வந்தனர்

410 முறைமையின் எய்தினர் ;
முந்தி அந்தமில்
அறிவனே வணங்கித்தம்
அரசைக் கைத்தொழுது
இறையிடை வரன்முறை
ஏறி ஏற்றசொல்
துறைஅறி பெருமையான்
அருளும் சூடினர். எ

முறைப்படி வந்தனர். முதலில் போறிஞனுகிய வசிட்டனே வணங்கிவிட்டுப் பிறகு தங்களுடைய மன்னனுன தயாதனேத் தொழுது, தம் இருக்கைகளில் முறைப்பட வரிசையாக ஏறி, தகுதியான சொற்களின் துறைகளே முழுதுமறிந்த பெருமையையுடைய தயாத மன்னனது திருவருளேயும் பெற்றுர்கள்.

(வி - ம்) ஆலயத்துக்குச் செல்லும் முறை, அரசவைக் குச் செல்லும் முறை, கல்யாண வீட்டுக்குச் செல்லும் முறை, பிற இடங்களுக்குச் செல்லும் முறை எனப் பல முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்படியாக அரசவைக் குச் செல்லும் முறையில் சென்றுர்கள். அங்குள்ள வழக்கப் படி உட்கார்ந்தனர்.

---

410. முறைமை - ஒழுங்கு. அந்தம் இல் - எல்லேயில்லாத. இறை - இருக்கை. வரன் முறை - வழக்கம். துறை - பாகுபாடு.

ஒன்று சொல்கிறேன்

411　அன்னவன் அருள்அமைந்து
　　இருந்த ஆண்டையின்,
மன்னவன் அவர்முகம்
　　மரபில் நோக்கினன்;
உன்னியது அரும்பெறல்
　　உறுதி ஒன்றுளது;
என்உணர்வு அனையநீர்
　　இனிது கேண்மென.　　அ

அவனுடைய அருளைப் பெற்று இருந்தபொழுது, அம் மன்னவன் மந்திரிகளின் முகத்தை நோக்கவேண்டிய முறைப் படி நோக்கினன். 'நான் நினைத்ததும் அருமையாகப் பெறக் கூடியதுமான பொருள் ஒன்று இருக்கிறது. என்னுடைய உணர்ச்சியைப் போன்ற நீங்கள் இனிமையாகக் கேட்க வேண்டும்' என்று கூறியதோடு,

(வி - ம்) நான் நினைத்தது ஒன்று உளது. அது பெறு தற்கு அருமையான உறுபொருள் என்றான். அது தவத்தி னாலே பெறத்தக்க வீடு பேறாகும் என்க. தயரதனின் அடிப் படை நோக்கம் தான் வீடு பேறடைதல் ஒன்றே. இதில் இவனுக்கு நாட்டம் இருந்தாலும் அரசைப் பொறுப்புணர்ச்சி யோடு பிறரிடத்துக் கொடுத்துச் செல்ல இதுகாறும் வாய்ப் பில்லை. இப்போது இராமனிடம் கொடுத்துவிட்டுச் செல்லலா மென்று கருதுகிறான். ஆனால் ஜனநாயக ஆட்சியில் ஒரு வரிடமுள்ள ஆட்சி மற்றவருக்கு மாறும்போது ஏற்படும் கிளர்ச்சியின்றி, அரசுமாற வேண்டுமென்றும் தயரதன்

---

411. ஆண்டை - அவ்விடம். அரும்பெறல் - அருமையாகப் பெறத்தக்க. கேண்ம் என - கேளுங்கள் என்று. (கேளும் என் பது கேண்ம் என்றாயிற்று). மரபு - இயல்பு.

விரும்புகிறான். ஆதலால் முதலாவதாக அமைச்சவையைக் கூட்டித் தன் கருத்தை நயமாக எடுத்துரைக்க முற்படுகிறான். மரபில் நோக்குதலாவது யாவரையும் பொதுவாகப் பாராமல் அவரவர் இயல்புக் கேற்ப நோக்குதலாம். 'பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின், அது நோக்கி வாழ்வார் பலர்' (திருக்குறள் 528).

ஆண்ட ஆண்டு அறுபதாயிரம்

412 வெய்யவன் குலமுதல்
வேந்தர் மேலவர்
செய்கையின், ஒருமுறை
திறம்பல் இன்றியே
வையம்யான் ஆண்டஆண்டு,
உங்கள் மாட்சியால்
ஐயம்இல் அறுபதி
னாயி ரம்அரோ. ௯

சூரிய குலத்தில் தோன்றி வரும் அரசர்களாகிய மேன்மையுடையவரின் ஆட்சி முறையில், ஒரு சிறிதும் மாறுபாடின்றி, உலகை உங்கள் பெருந் தன்மையினாலே நான் ஆட்சி புரிந்த ஆண்டுகள் அறுபதினாயிரம் என்பதில் சந்தேகம் இல்லை.

(வி-ம்) சூரியகுல மன்னர்கள் ஆட்சி நெறியிலே முற்ற முடியச் சிறப்புற ஆண்டனர் என்று தயரதன் கருதுகிறான். அதனாலேயே முன்னோர்களைக் காட்டினும் மேன்மையாக நான் ஆண்டேனென்று கூறவில்லை. முன்னோர் முறையில் பிறழாமல் ஆள்வதே பெரிய காரியமென்று கருதியிருக்கிறான். அப்படி ஆள்வதற்கு அமைச்சர்களாகிய உங்கள்

412. வெய்யவன் - சூரியன். திறம்பல் - மாறுபடுதல்.

பெருந்தன்மையே காரணமென்று பாராட்டிக் கூறினன். இந்த அறுபதாயிரம் ஆண்டில் ஒரு நாளாவது முறை திறம்பினேன் என்று கூற முடியாது என்பதை வலியுறுத்தவே "ஐயம்இல்" எனப்பட்டது. ஐயத்துக்கு இடமில்லாத அறுபதாயிரம் எனக் கொள்க.

கற்பழியாத அரசு

413 கன்னியர்க்கு அமைவரும்
 கற்பின், மாநிலம்
தன்மையில் தகைதரத்
 தருமம் கைதர,
மன்உயிர்க்கு உறுவதே
 செய்து வைகினேன் ;
என்உயிர்க்கு உறுவதும்
 செய்ய எண்ணினேன். க0

பெண்கட்கு அருமையாக அமைகின்ற கற்பொழுக்கத்தைப் போல, இந்தப் பெரிய உலகமானது நல்லவழியில் கட்டுப்பட்டு நிற்கும்படி அறக்கடவுள் கைகொடுத்து உதவி செய்ய, உலகிலுள்ள உயிர்கட்குப் பொருந்தத் தக்க நல்ல செயல்களையே செய்து இதுவரை வாழ்ந்தேன். இப்பொழுது என்னுடைய உயிருக்குப் பொருந்தக் கூடிய காரியத்தையும் செய்ய நினைக்கின்றேன்.

(வி-ம்)பெண் ஒருமுறைதவறினும் கற்புடையவளாகாள். அவ்வாறு தயரதன் ஆட்சியானது ஆட்சிமுறையில் ஒருநாள் கூடச் சிறு வழுவும் ஏற்படாதபடி நடைபெறுகிறதென்பது கருத்து. மன்னன் எவ்வளவு சிறந்தவனாயினும், அமைச்சு

---

413. கன்னி - பெண். கற்பு - ஒழுக்கம். தன்மை - நன்மை. தகைதர - கட்டுப்பட்டு நிற்க. கைதருதல் - உதவிசெய்தல். உறுவது - பொருந்தக் கூடியது.

முதலிய சிறப்பு வாய்ந்திருப்பினும், பலபோது நேரிய ஆட்சி அமைவதில்லை. ஆதலால் அவற்றுடன் எனக்குத் தரும தேவதையே கைகொடுத்து எனது ஆட்சியை நேர்வழியில் செலுத்தி வந்தது என்கிறான்.

மகன் ஆளத் தந்தை விலகினர்

414 நங்குலக் குரவர்கள்
நவையின் நீங்கினர்,
தங்குலப் புதல்வரே
தரணி தாங்கப் போய்,
வெங்குலப் புலன்கெட
விடு நண்ணினர்;
எங்குஉலப் புறுவர்என்று
எண்ணி நோக்குகேன். கக

நம்முடைய குலத்திலே பிறந்த முன்னோராகிய குற்றம் நீங்கி வாழ்ந்தவர், தம்முடைய மேன்மையான மக்கள் அரசாட்சியை வகிக்கத் தாம் போய்க் கொடிய இந்திரியங்களை அடக்கி வீடுபெற்றிருக்கிறார்கள். ஆகவே எப்படி அவர்கள் குறைவுடையவராவர் என்று எண்ணி எண்ணிப் பார்க்கிறேன்.

(வி - ம்) எனது முன்னோர் குற்றமே செய்யாதவர். ஆதலால் அவர் செய்தனவெல்லாம் நெறியேயாகும். அவர்கள் மகனிடம் அரசை ஒப்புவித்துவிட்டுத் தவத்துக்குச் சென்று வீடுபெற்றனர். எப்படி அவர்களைத் தவறு செய்தவர் என்று சொல்வது என்று எண்ணி எண்ணிப் பார்க்

---

414. குலம் - பரம்பரை. நவை - குற்றம். குலம் - மேன்மை. வெம்குலம் புலன் - கொடிய தொகுதியான இந்திரிய உணர்ச்சி. (அவை: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன.) உலப்புறுதல் - குறைவடைதல்.

கிறேன். அது முடியாத காரியமாக இருக்கிறது என்கிறான். குரவர் ஐவராவர். 'அரசன் உவாத்தியான் தாய் தந்தை தம்முன் நிகரில் குரவர் இவர்.' (ஆசாரக்கோவை-16) தந்தை வழிப் பரம்பரையினர் இங்குக் குரவர்கள் என்று குறிக்கப் பட்டனர். மக்கள் வாழ்விற் பெறும் இன்பம் ஐந்து உறுப் புக்களால் அறிந்தனுபவிக்கப்படுவதாம். கண்ணாற் கண்டும், காதாற் கேட்டும், வாயால் உண்டும், மூக்கால் நுகர்ந் தும், உடலால் பொருந்தியும் பெறப்படுவதாம். இவற்றை விலக்கியிருத்தல் அருமையாகும். ஆதலால் 'வெங்குலப் புலன்' எனப்பட்டது.

உட்பகைக்கு அஞ்சுவேன்

415　வெள்ளநீர் உலகினில்
　　　விண்ணில் நாகரில்
　　தள்அரும் பகைஎலாம்
　　　தவிர்த்து நின்றயான்,
　　கள்ளரிற் கரந்துஉறை
　　　காமம் ஆதியாம்
　　உள்உறை பகைஞருக்கு
　　　ஒதுங்கி வாழ்வெனோ?　　கஉ

கடல் நீரால் சூழப்பட்ட இவ்வுலகத்திலும், மேலுலகத் திலும், கீழுலகத்திலும் நீக்கமுடியாத பகைவர்களை யெல் லாம் நீக்கி நிமிர்ந்து நின்ற யான், திருடரைப் போல மறைந்து தோன்றுகிற காமம் முதலிய (தவத்தைக் கெடுக் கும்) உட்பகைகளுக்கு இடம் கொடுத்து இனியும் வாழ்வேனா?

---

415. வெள்ளம் - கடல். நாகர் - நாகருலகம்; கீழுலகம். கள்வரில் - திருடரைப்போல. கரந்து - மறைந்து. காமம் ஆதி - காமம், வெகுளி, மயக்கம் என்பன.

(வி - ம்) புறப்பகையை வென்று வாழ்கிறேன்; ஆனால் அகப்பகையை வெல்லுதலும் என்னால் முடியும்; நீங்கள் ஐயப்படவேண்டாம் என்றான். இல்லறத்தை விட்டுத் தவம் மேற்கொள்வோர் அதைத் தாங்க வலியற்றுக் கூடாவொழுக்கினராதலும் உண்டு. அப்படித் தயரதன் தவறினால் அதனால் வரும் இழுக்கும் பழியும் உடன்பட்ட மந்திரிமார்க்கும் உரியனவாகுமாதலின் அவர்க்குச் சமாதானம் கூறுதல் இன்றியமையாததாயிற்று. நேரில் நிமிர்ந்து நிற்கும் பகையை வென்ற தனக்கு, பயந்து மறையும் பகையை விலக்குவது முடியாத காரியமல்ல என்பது தயரதன் கருத்து. இதை, 'புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரம்' (ஒளவையார் பாடல்) என வருமாற்றால் அறியலாம்.

யாருக்கு வீடு கிடைக்கும்?

416 ஒட்டிய பகைஞர்வந்து
உருத்த போரிடைப்
பட்டவர்; அல்லரேல்
பரம ஞானம்போய்த்
தெட்டவர்; அல்லரேல்
செல்வம் ஈண்டென
விட்டவர்; அல்லரேல்
யாவர் வீடுளார்? கந

சேனையோடு பொருந்திய பகைவர் வந்து சினங்கொண்டு எதிர்த்த போரில் உயிரைவிட்டவர்; அல்லராயின் மெய்ஞ்ஞானத்தையடைந்து தெளிந்தவர்; அல்லராயின் செல்வத்தை

416. ஒட்டிய - பொருந்திய. உருத்தல் - பெருஞ்சினங்கொள்ளுதல். ஞானம்போய் - அறிவுநெறியில் முடிவுறச்சென்று. தெட்டவர் - தெளிந்தவர்; (தெளி - பகுதி) ஈண்டு - இம்மை.

இம்மைக் குரியதென்று கருதித் துறவடைந்தவர்; இம் மூவரை யல்லாமல் வீடு பெற்றவர் யாவரேனும் உளரா ?

(வி - ம்) இவ்வுலக இன்பங்களிலுள்ள பற்று நீங்கினு லல்லது வீடுபேறு கிடைக்காது. போர்க்களத்தில் உயிரையே விடத் துணிந்து நின்று இறப்பவனுக்கு உலகப்பற்று அற்றுப் போகிறது. தெளிந்த ஞானியர் புளியம் பழமும் அதன் தோடும் போல் பற்றற்று வாழ்கின்றனர். இவ்விருவகையும் இல்லாதவர் பற்றற்ற துறவு பூணுதலால்தான் வீட்டினை அடைதல் கூடுமாதலால், அதனைக் கைக்கொள்கிறேன் என்று கூறுகிறுன். செல்வம் - இங்கே உலக விவகாரம் யாவற்றையும் குறிக்கும் சொல்லாக விளங்குகிறது.

இதற்கு உதவியவர் அதற்கும் உதவுக

417 உம்மையான் உடைமையின்,
உலகம் யாவையும்
செம்மையின் ஓம்பிநல்
அறமும் செய்தனென்;
இம்மையின் உதவிநல்
இசைந டாயநீர்,
அம்மையும் உதவுதற்கு
அமைய வேண்டுமால். கச

உங்களை நான் மந்திரிகளாகப் பெற்றிருந்தபடியால் உலகம் முழுவதையும் செம்மையாகக் காப்பாற்றி நல்ல அறத்தினையும் செய்தேன். இவ்வுலகில் உதவி செய்து சிறந்த புகழை உண்டாக்கிய நீங்கள், மேலுலகத்துக்கும் உதவி செய்ய உடன்படவேண்டும்.

---

417. இம்மை - இவ்வுலக வாழ்வு. அம்மை - மேலுலக வாழ்வு. நடாய - நடத்திவைத்த; உண்டாக்கிய. அமைதல் - உடன்படல்.

சுமை நீக்கும் இராமன்

418 மைந்தரை இன்மையின்
வரம்பில் காலமும்
நொந்தனென்; இராமன்என்
நோவை நீக்குவான்
வந்தனன்; இனிஅவன்
வருந்த,யான் பிழைத்து
உய்ந்தனென் போவதோர்
உறுதி எண்ணினேன். கடு

பிள்ளையில்லாமல் நெடுங்காலம் வருந்தினேன். இராமன் அவ்வருத்தத்தை நீக்குபவனாக வந்திருக்கிறான். இனி அவன் ஆள யான் (ஆட்சி செய்வதிலிருந்து) நீங்கிக் கடைத்தேறுவதென்று முடிவு செய்தேன்.

(வி - ம்) பிள்ளை இல்லையே என்று அரசன் வருந்தியதற்குக் காரணம் குழந்தை இன்பத்தை நாடிமட்டுமல்ல. தனக்குப் பின் குடிகளைக் காக்க நல்ல அரசன் வேண்டும் என்பதற்காகவுமாகும். அறுபதாயிரம் ஆண்டு அரசாண்டான். எனவே, மிக நெடுங்காலம் ஆட்சிப் பொறுப்பு இறக்கி வைக்க முடியாத தலைச்சுமையாகிவிட்டது என்க. அச்சுமையைச் சுமக்க இராமன் பிறந்தான். பிறந்ததுமட்டுமல்ல; தகுதியுள்ளவனாகப் பிறந்திருக்கிறான் என்பதில் தயரதனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆட்சியில் சலிப்பு ஏற்பட்டாலும் தகுந்த ஒருவனிடம் ஒப்புவித்துவிட்டு விலக நினைத்தான். வீடுபேற்றில் அவனுக்கு எவ்வளவு நாட்டம் ஏற்பட்டதோ அதைவிட அதிகப் பொறுப்பை, குடிகளைக்

---

418. பிழைத்து - நீங்கி (ஆபத்திலிருந்து தப்பித்து). உய்ந்தனென் - கடைத் தேறினவனாகி. உறுதி - முடிவு. வருந்த - சுமக்க.

காப்பாற்றி ஆட்சி செய்வதிலும் கொண்டிருந்தான். எனவே ஆட்சி முறை வருத்தம் தரக்கூடியதென்றோ அது வேண்டாத வெறுப்புக்குரிய செயலென்றோ அவன் கருதவில்லை. இங்கே அவன் வருந்த என்பதற்கு அவன் திறமையோடு ஆள என்றே பொருள் கொள்ளல் வேண்டும். நகைச்சுவையோடு தயரதன் பேசுகிறான். ஒரு கோடி ரூபாயை வைத்துப் பல காலம் காப்பாற்றியவன் வயது முதிர்ந்த காலத்தில் பொறுப்புள்ள மகனிடம் கொடுத்துவிட்டுச் சுமை ஒழிந்ததப்பா என்று கூறுதல் போன்றதே இது. அளவற்ற மகிழ்ச்சியில் எழும் நையாண்டியாகும் 'அவன் வருந்த' என்றது. இராமன் எவ்விதத்திலும் சிறு வருத்தமடைதலையும் சகியாதவன் தயரதன்.

இராமனுக்கு முடி சூட்டவேண்டும்

419 பெருமகன் என்வயின்
பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை
தெரியக் கண்டயான்,
அருமகள் நிறைகுணத்து
அவனி மாதெனும்
ஒருமகள் மணமும்கண்டு
உவப்ப தாயினேன். கசு

பெருமை பொருந்திய மகனாகிய இராமன் என் மகனாகப் பிறந்ததன் பயனாக, சீதையாகிய இலக்குமியை மணஞ் செய்து வைத்துப் பார்த்த யான், அருமையான மற்றொரு மகளான நிறைந்த குணமுள்ள நிலமகள் என்று சொல்லப் படும் ஒப்பற்ற மகளினது திருமணத்தையும் கண்டு மகிழ முற்பட்டேன்.

---

419. வயின் - இடத்தில். அவனி - நிலம்.

(வி - ம்) திருமாலுக்குத் திருமகள், நிலமகள் (சீதேவி, பூதேவி) எனும் இருவர் மனைவியர். இங்கே சீதையாகிய திருமகளை மணம் செய்து வைத்துவிட்டேன்; இனி, நில மகளையும் இராமனுக்கு மணம் செய்து வைக்கவேண்டு மென்று தயரதன் கூறுகிறான். நிலத்தின் அரசுரிமையை இராமனுக்கு நல்குகிறேன் என்பது பொருள். தான் அறுப தாயிரம் மனைவியரை மணம் புரிந்தவனாதலால் இராமனுக்கும் பல மணம் செய்து பார்க்க ஆசைப்படுகிறான் போலும். வாழ்க்கையின் சுவை எப்படி வளருகிறதென்பதைக் "கனி யினும் கட்டிபட்ட கரும்பினும், பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும், தனிமுடி கவிழ்த்தாளும் அரசினும், இனியன் தன்அடைந்தார்க்கு இடை மருதனே" (அப்பர்) என வருதலால் அறியலாம்.

உங்கள் கருத்து என்ன ?

420 ஆதலால் இராமனுக்கு
அரசை நல்கிஇப்
பேதைமை தாய்வரும்
பிறப்பை நீக்குவான்
மாதவம் தொடங்கிய
வனத்தை நண்ணுவேற்கு
யாதுநும் கருத்தென
இனிது கூறினான். கஎ

ஆதலால் இராமனிடத்தில் ஆட்சியைக் கொடுத்துவிட்டு, மெய்யுணர்வின்மையால் தொடர்ந்து வரும் பிறப்பை நீக்கிக் கொள்ளும் பொருட்டு மேன்மையான தவத்தைத் தொடங்க (முற்பட்டுக்) காட்டுக்குப் புறப்படும் எனக்கு, உங்கள்

420. பேதைமை - அறியாமை. தாய்வரும் - தாவித் தொடர்ந்து வருகிற. தொடங்கிய - தொடங்க.

எண்ணம் எப்படி என்பதைக் கூறவேண்டும் என்று நயமாகக் கேட்டான்.

(வி - ம்) பேதைமை என்பது இங்கே பொருளறி வின்மை. மெய்ப்பொருளை உணர்வார் பிறப்பினின்று நீங்கு வர். பிறவி நீக்கமே விடுதலை; அதுவே முக்தி; "பிறப் பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும், செம்பொருள் காண்பது அறிவு" (திருக்குறள் 358).

இரண்டு கன்றுக்கிடையில் ஒரு பசு

421 *திரண்ட தோளினன் இப்படிச்
சொல்லலும், சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய
உவகையர் ஆங்கே
வெருண்டு மன்னவன் பிரிவுஎனும்
விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக்கு இரங்கும்ஓர்
ஆஎன இருந்தார். கஅ

திரண்டு பருத்திருக்கிற தோள்களையுடைய மன்னன் இவ்வாறு கூறியதும், இராமன் அரசனாகிறான் என்பதனா லேற்பட்ட மகிழ்ச்சியானது பொங்கி மேலெழுந்து கரை புரண்டு செல்லும் மனத்தினராகிய மந்திரிகள், அதே நேரத் தில் அரசன் பிரிகிறானே என்ற வருத்தமும் ஏற்படுகிற தன்மையினாலே கலங்கி, இரண்டு கன்றுகளுக்கு இடைப் பட்ட பசுவைப் போல இருந்தார்கள்.

(வி - ம்) மன்னனுக்கு அரசாட்சியை விட்டு விலகும் படிக்கான உடல் தளர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. தோள்கள் விம்மி நிற்கின்றன. இருப்பினும் அரசாட்சியை

---

421. சிந்தை - மனம். உவகை - மகிழ்ச்சி. வெருண்டு - கலங்கி. விம்முறுதல் - பொருமுதல்.

விடுகிறான் என்ற தியாக உணர்ச்சி தோன்றத் திரண்ட தோள் எனப்பட்டது. உவகை பொங்கி மீதிடப் புரண்ட சிந்தையர் என மாற்றிக் கொள்க. ஒரு பசுவுக்கு இரு கன்றிருந்து இரு வேறுபட்ட திசைகளை நோக்கி ஓடுமானால் தாய்ப்பசு எதைத் தொடர்ந்து செல்வதெனத் தெரியாது எவ்வாறு திண்டாடுமோ அப்படியாய்விட்டது அமைச்சர்களின் நிலைமை. இராமன் அரசனாவதில் அளவற்ற மகிழ்ச்சி. தயரதனைப் பிரிவதில் அளவற்ற துன்பம். ஆதலால் சிந்தை கலங்கி யிருந்தனர். பசு ஒரு முறையில் பெரும்பாலும் ஒரு கன்றே ஈனுமாதலால் பாலூட்டும் இரு கன்றெனக் கொள்ள வேண்டியதில்லை. முன் ஈன்ற பழைய கன்றும், புதிதாக ஈன்ற இளங்கன்றும் எனக்கொள்ளலாம். இங்கே பழைய தயரதனுக்கும் புதிய இராமனுக்கும் இடையில் அன்றோ நின்றிரங்குகின்றனர் ?

வசிட்டர் கூறுகிறார்

422 இருந்த மந்திரக் கிழவரது
எண்ணமும், மகன்பால்
பரிந்த சிந்தைஅம் மன்னவன்
கருதிய பயனும்,
பொருந்தும் மன்னுயிர்க்கு உறுதியும்
பொதுவுற நோக்கித்
தெரிந்து நான்மறைத் திசைமுகன்
மகன் இவை செப்பும். கக

வேதனையோடிருக்கிற அமைச்சர்களுடைய கருத்தையும், இராமனிடத்தில் அன்புகொண்ட மனத்தினனாகிய அரசன் கருதிய பயனையும், நிலைபெற்ற உயிரினத்திற்கு

422. மந்திரம் - அமைச்சர் அவை. கிழவர் - உரியவர். திசைமுகன் - நான்கு திசைகளிலும் முகமுடையவன்=பிரமன்.

ஏற்பட வேண்டிய நன்மையையும், பொதுவாக நோக்கித் தீர்மானித்துக்கொண்டு நாலுவேதங்களையும் அறிந்த படைப்புக் கடவுளின் மகனான வசிட்டர் இவ்வாறு கூறினார்.

(வி - ம்) பரந்த அரசாட்சியை ஏற்றிருப்பவர் பொதுவான நன்மையைக் கருதி நடக்கவேண்டும். தனித்தனியாகப் பார்த்தால் குழப்பந்தான் ஏற்படும். சிறப்பாக நோக்கும்போது அரசன் ஆளவேண்டும்; காட்டுக்குப் போதல் கூடாதென்று தோன்றுகிறது. இராமன் ஆளவேண்டுமென்பதிலும் விருப்பமேற்படுகிறது. இந்நிலையில் அமைச்சர்களின் மனம் தடுமாறுகிறது. இதை நிச்சயிக்கப் பொதுநோக்கொன்றே வழியாம். அமைச்சரின் எண்ணம், அரசன் கருத்து, பொதுமக்களுக்கு ஏற்படும் நலன் ஆகிய இம்மூன்றையும் சேர்த்துப் பார்க்கும்போது சரியான முடிவேற்படுகிறது. அதை வசிட்டர் கூறுகிறார்.

தகுதியான முடிவு

423 நிருப! நின்குல மன்னவர்
நேமிபண்டு உருட்டிப்
பெருமை எய்தினர்; யாவரே
இராமனைப் பெற்றார்!
கரும மேஇது கற்றுணர்ந்
தோய்க்கு இனிக் கடவ
தரும மும்இது தக்கதே
நினைந்தனை தகவோய். உ0

மன்னனே! உனது குலத்தில் தோன்றிய மன்னர்கள் எல்லாரும் நெடுநாளாக ஆட்சிபுரிந்து பெருமையையே

---

423. நேமி - சக்கரம்=ஆட்சி. பண்டு - முன்னுள்முதலாக. உருட்டல் - இயங்கச்செய்தல்=ஆளுதல்.

அடைந்தனர். ஆனல் அவர்களுள் யாவர் இராமனைப் பிள்ளையாகப் பெற்றவர்? கற்றுணர்ந்த உனக்கு இது (இராமனுக்கு அரசை நல்கி நீ காடுசெல்லுதல்) கடமைதான்; மேலும், செய்யக்கூடிய தருமமும் இதுதான். தகுதியுடையோனே! நீ தகுதியான காரியத்தையே நினைத்தாய்.

(வி - ம்) தயரதன் தவங்கூடல் சரிதான். இராமன் அரசாள்வதும் சரிதான். இவ்விரு நிகழ்ச்சிகளால் ஆளப்படும் உலகுக்கும் நன்மையேயன்றித் தீமையில்லை என்று கருதிய முனிவர், தயரதனின் தியாகத்தோடு கூடிய கருத்தை மிகப் பாராட்டினரென்பது "கற்றுணர்ந்தோய்" "தகவோய்" என்ற சொற்களால் உணரப்படும். கடமை எல்லா இடத்தும் அறமாவதில்லை; இங்கே கடமை அறத்தோடு பொருந்தியிருக்கிறதென்பது சுட்டிக்காட்டப்பட்டது.

அறத்தின் மூர்த்தி

424 புறத்து நாம்ஒரு பொருள்இனிப்
புகல்கின்றது எவனே!
அறத்தின் மூர்த்திவந்து அவதரித்
தான்என்பது அல்லால்
பிறத்து யாவையும் காத்துஅவை
பின்நின்று துடைக்கும்
திறத்து மூவரும் திருத்திய
திருத்தும்அத் திறலோன். உக

அறக்கடவுளே வந்து தோன்றியிருக்கிறுன் என்பதல்லாமல் வேறொன்றைக் காரணம்சொல்ல என்ன இருக்கிறது? எல்லாப் பொருளையும் படைத்துக் காத்து அழிக்கின்ற

---

424. புறத்து - வேருக. பிறத்தி - பிறக்கும்படி செய்து. துடைக்கும் - நீக்குகின்ற. திறத்து - திறமையுடைய. திருத்திய - செய்த, திருத்தமாகத் செய்ய முயன்று செய்துவருகிற.

மூவரும் செய்துவருகிற தொழில்களையே திருத்துவான் அந்தத் திறமுடைய இராமன்.

(வி - ம்) இராமன் அறத்தைக் காக்கவந்த மூர்த்தியென்பதில் ஐயமில்லை. மும்மூர்த்திகளும் செய்கிற முத்தொழிலையும் தானே நின்று அறத்தின்வழிச் செலுத்துவான். பிரமன் முதலியோர் முத்தொழிலையும் செய்துவருகிறார்கள். அருமையான காரியந்தான். ஆனால் பிழைகள் ஏற்பட்டுவிடுகின்றன. பிரமன் படைப்பிலேதான் இராவணனே பிறந்துவிட்டான். எவ்வளவு அறங்கொல்லும் பாவியர் பிறந்து கொழுக்கிறார்கள். அப்படி ஏற்படும்போது திருத்துதற்கு அம் மூவராலும் முடிகிறதில்லை. அப்போது அறத்தைக் காக்க, படைப்பைத் திருத்த அவதாரம் ஏற்படுகிறது. அது தான் இது என்கிறார் முனிவர். 'துறை திறம்பாமற் காக்கத் தோன்றினன்' (வாலி வீடுற்ற படலம்) பிரமன், விட்டுணு, உருத்திரன் என்ற மூவரும் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களைச் செய்பவராவர். இவர்கள் முழு முதற் கடவுளரல்லர். இம் முத்தொழிலுக்கும் மூலமாக நிற்கும் பரம்பொருளே கடவுள். அது பரப்பிரமம், மகா விட்டுணு, பரமசிவன் என்று கூறப்படும்.

இராமனில் சிறந்தவர் இல்லை

425 மனிதர் வானவர் மற்றுளார்
அறங்கள்காத்து அளிப்பார்,
இனி இம் மன்னுயிர்க்கு இராமனில்
சிறந்தவர் இல்லை;
அனையன் ஆதலின், அரச! நிற்கு
உறுபொருள் அறியில்
புனித மாதவம் அல்லது ஒன்று
இல்எனப் புகன்றான். உஉ

---

425. உறு - பொருத்தமான. பொருள் - செயல்.

மனிதரினும், தேவரினும், மற்றவர்களினும் இராமனை அல்லாமல் அவரவர் செய்யும் கடமைகளைப் பாதுகாத்து, உலகைக் காப்பவர் இனி யாரும் இல்லை. (அவன்) அப்படிப் பட்ட சிறப்புடையனாதலின், உனக்குப் பொருத்தமான செயல், புனிதமான தவமேயன்றி வேறென்ன இருக்கிறது என்று (வசிட்டர்) கூறினார்.

(வி - ம்) புனித மாதவம் என்றது பிற உயிர்க்கு ஊறின்றிச் செய்யப்படும் விருப்பற்ற தவத்தை என்க. பிறரை அழிக்க வேண்டுமென்றும், செல்வம் முதலியவற்றைத் தான் அடையவேண்டுமென்றும் கருதித் தவம் செய்தலும் உண்டு. மக்கள் செய்யும் கடமைகள் பல திறப்பட்டன. ஆதலால் அறங்கள் எனப்பட்டது. காத்து அளிப்பார் என்பது தீமை அணுகாமல் பாதுகாத்தலும் வளர்த்தலும் எனக் கொள்க.

பெரிய மகிழ்ச்சி

426 மற்றவன் சொன்ன வாசகம்
கேட்டலும் மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன்
பிடித்தஅப் பெருவில்
இற்ற அன்றினும்; எறிமழு
வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும், பெரியதோர்
உவகையன் ஆனான். உரு

426. பிஞ்ஞகன் - சிவன். இற்ற - ஒடிந்த. எறிமழு வாளவன் - எறியப்படுகிற மழுப்படையையும் வாளினையும் உடைய பாசுராமன். இழுக்கம் - தோல்வி. உவகை - மகிழ்ச்சி.

வசிட்டர் கூறிய சொல்லைக் கேட்டவுடன் இராமனைப் பெற்ற நாளினும், வில்லை முறித்த செய்தி கேட்ட நாளினும், பரசுராமன் தோல்வியடைந்த நாளினும் ஏற்பட்டதைவிடப் பெரிய மகிழ்ச்சியை (தயரதன்) அடைந்தான்.

(வி - ம்) நெடுநாள் பிள்ளையில்லாது கவலைப்பட்ட தயரதன், இராமனைப் பெற்றபோது மிக்க மகிழ்ச்சியடைந்தான். நல்ல மகனுக்கு நல்ல மனைவி கிடைத்ததை யறிந்த போது இன்னும் மகிழ்ச்சியடைந்தான். உலக அரசர்களெல்லோரையும் வென்ற பரசுராமன் இராமனுக்குத் தோல்வியுற்றதறிந்தபோது அளவிலாத மகிழ்ச்சியை அடைந்தான். இப்பொழுது பேரறிஞனும் சான்றோனுமான வசிட்டர் வாயினால் "அறத்தின் மூர்த்தி வந்தவதரித்தான்" என்று இராமனைப் புகழ்ந்து கூறியதைக் கேட்டதும், தயரதனின் மகிழ்ச்சி வானுற ஓங்கிவிட்டது. முந்திய மூன்று காலத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டினும் இது மிகுந்தது என்க. 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் - சான்றோன் எனக் கேட்ட தாய்' (திருக்குறள்-69) என்ற குறள் தந்தைக்கும் ஆம் என்பதற்கு இப்பாடல் சான்று தருகிறது. சிறந்த அறிவாளியாகிய மன்னன், மகனின் உயர் குணங்களையெல்லாம் படிப்படியாக அறிந்து மகிழ்ந்து வந்தான். ஆயினும், சான்றோர் வாயினால் தன்மகனைச் சான்றோன் என்று கேட்கும்போது, பெற்றகாலத்து மட்டுமல்ல; பலகாலும் உயர்ந்தோன் என்று அறிந்து மகிழ்ந்த மகிழ்ச்சிக்கெல்லாம் மேலாக மகிழ்ந்தான் என்க. சிறந்த உரையாசிரியரான பரிமேலழகர் இக்குறளுக்குப் 'பெண்ணியல்பாற் றானாகஅறியாமையிற் கேட்ட தாய் எனவுங் கூறினார்' எனக் கண்ட உரை பொருந்தாதென்பதை இப்பாடலின் கருத்தாலறியலாம்.

சுமந்திரன் சொல்கிறன்

427 பழுதில் மாதவன் பின்ஒன்றும்
பணித்திலன் இருந்தான்;
முழுதும் எண்ணுறும் மந்திரக்
கிழவர்தம் முகத்தால்
எழுதி நீட்டிய இங்கிதம்
இறைமகன் ஏற்கத்
தொழுத கையினன் சுமந்திரன்
முன்நின்று சொல்லும். உச

குற்றமற்ற முனிவர் வேறென்றுங் கூருமல் இருந்தார். முற்றும் நினைத்துக் கூறும் இயல்பினரான மந்திரிமார்கள் முகத்தினுல் தெளிவுபடக் காட்டிய குறிப்பை அறிந்த முதல் மந்திரியாகிய சுமந்திரன், தயரதன் கருத்துக்கு இசையும்படி கை தொழுது கூறுகிருன்.

(வி - ம்) மாதவன் என்றது 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை' (திருக்குறள்-261) ஆகிய குணமுடைமைபற்றி. பழுதின் மாதவன் என்றது 'குறை விலா நிறைவே' (திருவாசகம், கோயிற்றிரு-5) என்ருற் போல. அங்கிருந்த அமைச்சர் யாவரும் ஒரே கருத்தாக வசிட்டர் கூற்றை ஆதரித்தனர். அந்த ஆதரவு முகத்தில் காணப்பட்டது. தெளிவாகக் காணப்பட்டது. எழுத்தாலே எழுதிக் காண்போன்கண்ணின் எதிரே நீட்டிக் காட்டுவது போலிருந்தது. எனவே 'தம் முகத்தால் எழுதி நீட்டிய இங்கிதம்' எனப்பட்டது. அக்கருத்து அரசனின் கருத்துக்கு ஏற்றதாக இருந்தபடியால், சுமந்திரன் இடர்ப்பாடின்றிக் கூற வாய்ப்பாகியது. சுமந்திரன் நல்ல அமைச்சன்

427. பழுது - குற்றம். பணித்தல் - அருளிச் செய்தல். இங்கிதம் - குறிப்பு. ('குறிப்பின் நிகழும் உறுப்பின் தொழில்')

என்பது மட்டுமன்று. சூரியகுலமன்னர் பலருடைய அமைச்சரும் சுமந்திரன் என்று கூறப்படுகின்றனர். ஆதலால் சுமந்திரன் என்றால் முதல் அமைச்சன் என்று கொள்ளவேண்டும். இவனே போரல்லாதபோது மன்னனின் தேரை ஓட்டிச் செல்லும் உரிமை பெற்றவனாகவுமுள்ளான்.

அறத்தைவிடக் கொடியது எது?

428 உறத்த கும்அரசு இராமற்கென்று
உவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீஎனும் சொல்சுடும்;
நின்குலத் தொல்லோர்
மறத்தல் செய்திலாத் தருமத்தை
மறப்பதும் வழக்கன்று
அறத்தின் ஊங்கினிக் கொடிதெனல்
ஆவது ஒன்று யாதோ? உரு

இராமனே அரசனுக்குவது பொருத்தமானது என்று மகிழ்ச்சியை அடைகிற மனத்தை, நீ துறவு பூண்டு பிரிவாய் என்ற சொல் சுடுகிறது. உனது குலத்தோர் பலர் கொண்ட இந்த நெறியை மறப்பதும் நேர்மையன்று. இந்த நிலையில் (வேறென்ன சொல்ல இருக்கிறது) அறத்தை நிச்சயித்து நடத்தல் என்பதைவிடக் கொடுமையானது வேறொன்று உண்டா?

(வி - ம்) அமைச்சர்கட்கும், சுமந்திரனுக்கும் இராமன் ஆள்வதும் தயரதன் தவத்திற்குச் செல்வதும் பொருத்தந்தான் என்று தோன்றுகிறது. வாயினால் சொல்ல வரவில்லை.

---

428. உறத்தகும் - பொருந்துவது தகுதி. துறத்தி - துறந்து விடுவாய். ஊங்கு - காட்டிலும்.

இராமன் அரசெய்துவது நல்லதுதான் ; தருமமும் அதுதான். ஆனல் நீ காட்டுக்குச் செல்லவேண்டுமே என்று திணறு கிறன். ஒரு இன்பத்தினல் பிறிதொரு துன்பம் நிகழும் போது இரண்டையும் நினைத்துக்கொண்டு பேசுபவன் நிலை எப்படித் தத்தளிக்கும் என்பது இங்கே காணக் கிடக்கிறது.

முதலில் பட்டம்

429 புரசை மாக்கரி நிருபர்க்கும்
புரத்துறை வோர்க்கும்
உரைசெய் மந்திரக் கிழவர்க்கும்
முனிவர்க்கும் உள்ளம்
முரசம் ஆர்ப்பநின் முதல்மணிப்
புதல்வனை முறையால்
அரசன் ஆக்கிப்பின் அப்புறத்து
அடுத்தது புரிவாய். உசு

கழுத்துக் கயிறணிந்த பெரிய யானையைச் செலுத் தும் அரசர்களுக்கும், நகரமக்களுக்கும், அமைச்சர்க்கும், முனிவர்க்கும், மனமானது மகிழ்ச்சியினல் ஆரவாரிக்க, உனது முதல் மகனை முறைப்படி அரசனுக்கிவிட்டுப் பின்பு உனக்குவேண்டிய செயலைச் செய்வாயாக.

(வி - ம்) இராமனுக்குப் பட்டம் கட்டுதல் எல்லோ ருடைய உள்ளத்திலும் மகிழ்ச்சியை உண்டாக்கும். அஃதா வது மங்கல நிகழ்ச்சிகளிலும், வெற்றிநாளிலும் முரசம் எவ் வாறு முழங்குமோ அவ்வாறு மக்கள் யாவருடைய உள்ள மும் முரசவாத்தியமாகவே முழங்கும் என்றன். நீண்ட

429. புரசை - யானைக்கழுத்தில் அணியப்படும் கயிறு. புரம் - நகரம். அடுத்தது - பொருந்தியது.

நாளாக (அறுபதாயிரம் ஆண்டுகளாக) மாறுதலில்லாத அரசு மற்றவர் கைக்கு மாறும்போது அமைதியாக மாற்றப்பட வேண்டும். அந்தப் பொறுப்பை அரசனே ஏற்றுக்கொள்வது நலம் என்று சுமந்திரன் கருதினான். இராமனுக்குப் பட்டத்தைக் கட்டிவிட்டு, நீ காட்டுக்குப்போ என்று கூறச் சுமந்திரனின் உள்ளம் இணங்கவில்லை. எனவே, 'அப்புறத்து அடுத்தது புரிவாய்' என்கிறான். பலதிறப்பட்டவரும் ஒப்பும் ஒருவனையே அரசனாக்க வேண்டுமென்ற அறம் இங்கே காட்டப் படுகிறது.

இராமனை அழைத்து வா !

430 என்ற வாசகம் சுமந்திரன்
இயம்பலும், இறைவன்
" நன்று சொல்லினை ! நம்பியை
நளிர்முடி சூட்டி
நின்று நின்றது செய்வது ;
விரைவினில் நீயே
சென்று கொண்டுஅணை திருமகள்
கொழுநனை " என்றான். ௨௭

என்ற சொற்களைச் சுமந்திரன் சொன்னவுடன் அரசன், 'நல்லது சொன்னாய். ஆணிற் சிறந்த இராமனுக்கு முடிசூட்டி விட்டுப் பாக்கியுள்ளதைச் செய்யலாம். நீயே போய் இலக்குமியின் கணவனான இராமனை அழைத்துவா' என்றான்.

---

430. இறைவன் - அரசன். நம்பி - ஆணிற் சிறந்தோன். நளிர் - பெருமையான. சூட்டி நின்று - சூட்டிமுடித்து. நின்றது - பாக்கியாக நிற்பதை ; வனஞ்செல்வதை. செய்வது - செய்வோம்.

சுமந்திரன் செல்லல்

431 அலங்கல் மன்னனை அடிதொழுது
அவன்மனம் அனையான்
விலங்கல் மாளிகை வீதியின்
விரைவொடு சென்றான்,
தலங்கள் யாவையும் பெற்றனன்
தான்எனத் தளிர்ப்பான்,
பொலங்கொள் தேரொடும் இராகவன்
திருமனை புக்கான். உஅ

தாரணிந்த அரசன் அடிகளை வணங்கி, அவ்வரசனின் மனமொத்த சுமந்திரன், மலைபோன்ற மாளிகைகள் உள்ள வீதியில் விரைந்து சென்றான். உலகத்தையே தான் அடைந்த மாதிரி மன எழுச்சியடைகிற சுமந்திரன், பொன் மயமான தேரை ஓட்டிக்கொண்டு இராமனுடைய செல்வ மனையை அடைந்தான்.

(வி - ம்) தயரதனுடைய ஆட்சியில் சுமந்திரன் அளவிலா மகிழ்ச்சியும் ஈடுபாடும் உடையவன். தயரதன் மனமே சுமந்திரன் எனும்படி ஈடுபட்டவன். என்றாலும் இராமன் அரசனாவதில் உள்ளம் பறிபோகிற அளவு மகிழ்கிறான். காவிரியில் நீர் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. வளமான நிலத்தில் பாய்ச்சிப் பல்லாண்டாக உழவர்கள் பயனடைந்து மகிழ்கிறார்கள். என்றாலும் புது வெள்ளம் வரும்போது அவர்களை அறியாமலே ஒரு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது.

---

431. அலங்கல் - பூமாலை. விலங்கல் - மலை. பொலன் - பொன். இராகவன் - இரகு குலத்தில் தோன்றினவன்.

இராமனைக் காணல்

432 பெண்ணின் இன்அமுது அன்னவள்
தன்னொடும் பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலும்
மருங்குஇனி திருப்ப,
அண்ணல் ஆண்டுஇருந் தான்அழகு
அருநற வெனத்தன்
கண்ணும் உள்ளமும் வண்டெனக்
களிப்புறக் கண்டான். உக

அழகிய வலிய வில்லையுடைய இலக்குவன் பக்கத்தில் அன்புடன் இருக்க, பெண்களினுள்ளே இனிய அமுதம் போன்றவளான சீதையோடு இராமன் அங்கே இருந்தான். அவனுடைய அழகு தேனாக (தன்னுடைய) கண்ணும் மனமும் வண்டாக மகிழ்ச்சி பெருகச் சுமந்திரன் கண்டனன்.

(வி - ம்) பெண் குலமாகிய பாற்கடலிலிருந்தெழுந்த அமுதம் போன்றவள் சீதை. பாற்கடலிலிருந்தபோது திருமாலும் இலக்குமியும் பிரியாதிருந்தனராயினும், இங்கே அயோத்தியிலும் மிதிலையிலுமாகப் பிரிந்திருந்தனர். இனியும் இராவணனால் பிரிக்கப்படப் போகின்றனர். இலக்குவனோ பிறந்தது முதல் கடைசிவரையும், சீதை பிரிந்த காலத்தும் பிரியாது உடனிருப்போனாதலால் பிரியாக் குரிசில் என்று கூறப்பட்டான். தயரதனைப் போலவே சுமந்திரனும் இராமனின் நலத்தில் தன்னை மறந்த ஈடுபாடுடையவனென்பது, தேனில் முழுகிப் போகிற வண்டைப் போல, கண்ணையும் மனத்தையும் இராமனின் அழகில் மூழ்கடித்துக் கொண்டான் என்பதால் பெறப்படும்.

---

432. வண்ணம் - அழகு. வெம் சிலை - உக்கிரமான வில். குரிசில் - உபகாரி. மருங்கு - பக்கம். நறவு - தேன்.

தேரில் ஏறினன்

433 கண்டு கைதொழுது 'ஐய! இக்
கடல்இடைக் கிழவோன்
உண்டொர் காரியம் வருகென
உரைத்தனன்' எனலும்,
புண்ட ரீகக்கண் புரவலன்
பொருக்கென எழுந்துஓர்
கொண்டல் போல்அவன் கொடிநெடுந்
தேர்மிசைக் கொண்டான். ௩௦

பார்த்து, கைகூப்பி வணங்கி 'ஐய! இந்த உலகத்துக்கு உரியவனான மன்னன் ஒரு காரியம் இருக்கிறது வருக' என்று கூறினன் என்று சுமந்திரன் சொன்னவுடனே, தாமரைக் கண்ணனான இராமன், விரைந்தெழுந்து மழை மேகத்தைப் போலச் சுமந்திரனது தேரின் மேல் ஏறினன்.

சாளரத்தில் தாமரை மலர்கள்

434 நீள்ள முத்தொடர் வாயினும்
குழையொடு நெகிழ்ந்த
ஆள கத்தினோடு அரமியத்
தலத்தினும் அலர்ந்த;
வாள்அ ரத்தவேல் வண்டொடு
கெண்டைகள் மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன
தாமரை மலர்கள். ௩௧

---

433. கடல் இடை - கடலால் சூழப்பட்ட நிலம். புண்டரீகம் - தாமரை. பொருக்கென என்பது விரைவுக் குறிப்பு.

434. எழு - தூண். குழை - காதணி. நெகிழ்ந்த - அவிழ்ந்த. ஆளகம் - கூந்தல்; அளகம் என்பதன் நீட்டல். அரமியம் - நிலா முற்றம். அரத்த - சிவந்த. அரத்தவேல் - சிவந்த வேல்=செவ்வரி படர்ந்த கண்.

நீண்ட தூண்கள் அமைந்த மாளிகை வாயில்களிலும், காதணியின்மேல் அவிழ்ந்து கிடக்கும் கூந்தலோடு நிலா முற்றங்களிலும் (தாமரை மலர்கள்) மலர்ந்தன. வாளாயுதமும், சிவந்த வேலாயுதமும், வண்டும், கெண்டை மீனும் நிலையின்றித் திரியச் சாளரங்களிலும் தாமரை மலர்கள் பூத்தன.

(வி - ம்) இராமன் புறப்படுகிற ஆரவாரத்தைக் கேட்ட பெண்கள் மாளிகைகளில் நின்று பார்க்க விரைகின்றனர். பெண்களின் இயற்கையான நாணம் ஒருபுறம் தடுக்கின்றது. என்றாலும் இராமனைக் காணும் ஆசையால் இயன்றவரை அடங்கியேதான் பார்க்க முற்படுகின்றனர். சிலர் முகப்பில் வந்து தூண் மறைவில் பார்த்தனர். சிலர் மேலேயுள்ள நிலா முற்றத்தில் நின்று தங்களுடைய விரிந்த கூந்தலின் மறைவில் பார்த்தனர். சிலர் மாடிகளிலுள்ள சன்னல்களின் வழியாகப் பார்த்தனர். சூரியன் வானத்தில் தோன்றியதும் குளங்களிலுள்ள தாமரை மலர் மலருவது இயல்பு ; இங்கே இராமனாகிய இளஞ்சூரியன் புறப்பட்டதும், பெண்களின் முகமாகிய தாமரை மலர்கள் எங்கும் பூத்தன. அம்முகங்கள் புது மலர்களைப் போல அன்பினாலும், மகிழ்ச்சியினாலும் மலர்ந்தன என்க. அம்மலரின் மேலுள்ள கண்கள் பலவும் பலவகையாகப் பார்த்தன. பக்கப் பாய்ச்சலுள்ள வாளைப் போலும், நேரே பாயும் வேலைப் போலும், தேன் நாடித் திரியும் வண்டைப் போலும், துள்ளி விழும் கெண்டை மீனைப் போலும் கண்கள் ஒரு நிலையின்றிப் பல படியாகப் பார்த்தன என்றவாறு. இது ஒருபுடை உருவகம். நீர்நிலை இன்மையும் வேல்போல்வன உண்மையும் அதனை விளக்கும். 'சுடரிலைவேல் சோழன் தன் பாடலம் ஏறிப், படர்தந்தான் பைந்தொடியார் காண - தொடர்புடைய, நீல அலையில் கயல் போற் பிறழுமே, சாலேக வாயில் தொறும் கண்' (முத்தொள்ளாயிரம்) என்றதுங் காண்க.

தாயைக் கண்ட கன்றுகள்

435 ஆய தவ்வழி நிகழ்தர
ஆடவர் எல்லாம்
தாயை முன்னிய கன்றெனை
நின்றுஉயிர் தளிர்ப்பத்,
தூய தம்பியும் தானும்அச்
சுமந்திரன் தேர்மேல்
போய்அ கங்குளிர் புரவலன்
இருந்துழிப் புக்கான். ௩௨

அத்தன்மையான நிகழ்ச்சிகள் நடைபெற, ஆண்.மக்கள் தாயைக் கண்ட கன்றெனும்படி நின்று மகிழ்வெய்த, செம்மைக்குணமுள்ள தம்பியாகிய இலக்குவனும் தானுமாக அந்தச் சுமந்திரன் கொணர்ந்த தேரில் சென்று, மனமகிழ்ச்சியுள்ள மன்னன் இருக்கும் இடத்தை அடைந்தான்.

இராமனை அரசன் தழுவினன்

436 மாதவன் தனை வரன்முறை
வணங்கி, வாள்உழவன்
பாத பங்கயம் பணிந்தனன் ;
பணிதலும், அனையான்
காதல் பொங்கிடக் கண்பனி
உகுத்திடக் கனிவாய்ச்
சீதை கொண்கனைத் திருஉறை
மார்பகம் சேர்த்தான். ௩௩

---

435. முன்னிய - எதிர்ப்பட்ட. தூய - செம்மையான, பரிசுத்தமான.

436. வரன்முறை - வழக்கமாகச் செய்து வருகிற முறை. வாள் உழவன் - எதிர்த்த மன்னரது மார்பை வாட்படையால் உழுப

பெருந்தவ முனிவனை வசிட்டரை வழக்கமாகச் செய்து வருகிற முறைப்படி வணங்கி, வாட்போரில் வல்லவனை மன்னனது திருவடித் தாமரைகளில் விழுந்து வணங்கினான். அவ்வாறு வணங்கினவுடனே மன்னன் தன் உள்ளத்தில் அன்பு பெருகவும் கண்கள் நீரைச் சொரியவும் கனிந்த வாயை யுடைய சீதாதேவியின் நாயகனான இராமனைச் செல்வம் பொருந்திய தன் மார்பிலே தழுவிக் கொண்டான்.

(வி - ம்) செல்வத்தைத் திருமகள் என்று சொல்வது உபசார வழக்கு, செல்வத்துக்குத் தலைவி திருமகளாதலால். இங்கே சீதையின் கணவனாக இருக்கிறான் இராமன். இனி நிலச் செல்வத்துக்கும் நாயகனாகப் போகிறான் என்றவாறு. இப்போது ஆட்சி மன்னனாக இருக்கும் தயரதனின் மார்பைத் திருவுறை மார்பகம் என்றார்.

அளவு சரிபார்த்தல்

437 நலங்கொள் மைந்தனைத் தழுவினன்
என்பதென்? நளிநீர்
நிலங்கள் தாங்குறும் நிலையினை
நிலையிட நினைந்தான்,
விலங்கல் அன்னதிண் தோளையும்
மெய்த்திரு இருக்கும்
அலங்கல் மார்பையும் தனதுதோள்
மார்புகொண்டு அளந்தான். ௩௪

வன். 'வில்லேருழவர் பகைகொளினும்' (திருக்குறள் 872) பங்கயம் - தாமரை மலர். பனி - நீர்; அன்பிலே தோன்றியநீர். கொண்கன் - கணவன்.

437. நளி - அகலமான. நிலை - தன்மை. நிலையிட - அளக்க. விலங்கல் - மலை. அலங்கல் - மாலை.

நன்மையையே பொருந்துபவனுகிய மகனைத் தழுவிக் கொண்டான் என்று கூறுவானேன்? உலகங்களை எப்படி இவன் தாங்கி ஆளுவான் என்ற தன்மையை அளவிட நினைந் தவனைப்போல, இராமனது மலைபோன்ற தோள்களையும் உண்மைத் திருமகள் வீற்றிருக்கும் அவனது மாலையணிந்த மார்பையும் தன்னுடைய தோள்களையும் மார்பையும் கொண்டு அளந்து பார்த்தான் (என்று கூற வேண்டும்).

(வி - ம்) மன்னன் இராமனை வாரி எடுத்துத் தழுவி ஞன் என்பதை, அப்படிச் சொல்வதைவிடத் தன்னைப்போல இவன் அரசாளும் தகுதி யுடையவன்தானு என்று அளந்து பார்த்தான் என்றே கூறலாம் என்று கவிக்குத் தோன்று கிறது. உள்ளத்தை அளந்து பார்த்தாய்விட்டது. தான் மட்டுமல்ல. வசிட்டர் போன்ற பேரறிஞர்களும் இராம னுடைய குணம் முதலியவற்றை அளந்து தெரிவித்துவிட்ட னர். உடலை அளந்து பார்ப்பதற்கு வலிமை மிக்க மன்னன் தானே தகுதியானவன். ஆதலால் அவனே தோளையும் மார்பையும் அளந்து பார்த்தான். உலகிலே சிறந்த மன்னன் ஆதலால் அவனுடைய தோளும் மார்புமே சிறந்த அளவு கோலாயின. முன்பாடலில் தயாதனுடைய மார்பு 'திரு வுறை மார்பகம்' எனப்பட்டது. இங்கே இராமனுடைய மார்பு 'மெய்த்திரு இருக்கும் மார்பு' எனப்படுகிறது. தயாத னுடைய மார்பில் இலக்குமி இருப்பது உபசாரந்தான். அரசச் செல்வம் நிலையற்றது. இருக்கும்; நீங்கியே போகும்; ஆனல் இராமன் திருமாலே ஆதலால் அவன் மார்பினின்றும் இலக்குமி பிரிவதற்கில்லை யென்பது குறிப்பு. ஏதாவது காரணம் பற்றிப் பிரிந்தாலும் மீண்டும் வந்து அமர்வாள். இலக்குமியின் உண்மையான இருப்பிடம் திருமாலின் மார்பு என்பது கருத்து. இராமனது இளமைத் தோளை 'விலங் கல் திண்தோள்' என்றும் மார்பை 'மெய்த்திரு இருக்கும்

மார்பு ' என்றுங் கூறி, தயரதனுடைய தோளும் மார்பும் அடையின்றி விடப்பட்டமை, இனித் தயரதனின் தோளும் மார்பும் வறிதே சோர்ந்து போகப் போகின்றன என்பதைக் காட்டும்.

தந்தையின் வேண்டுகோள்

438 ஆண்டு தன்மருங்கு இரீஇஉவந்து
அன்புற நோக்கிப்
'பூண்ட போர்மழு உடையவன்
நெடும்புகழ் குறுக,
நீண்ட தோள்ஐய! நிற்பயந்
தெடுத்தயான், நின்னை
வேண்டி எய்திட விரைவதொன்று
உளது'என விளம்பும். ௩௫

அவ்விடத்தில் தன் அருகில் இருக்கச் செய்து அன்பமையப் பார்த்து, 'போர்த்தொழிலை மேற்கொண்ட மழுப் படையையுடைய பரசுராமனின் பெரிய புகழானது சிறுமையடையும்படி செய்த நீண்ட தோள்களையுடைய ஐயனே! உன்னை மகனாகப் பெற்ற யான் உன்னிடத்தில் அவசரமாகக் கேட்டுப் பெறக்கூடிய பொருள் ஒன்று இருக்கிறது ' என்று கூறத் தொடங்கினான்.

(வி - ம்) தோளை அளந்து பார்த்ததில் தயரதன் தோள்களைக் காட்டிலும் இராமனது தோள்கள் பெரிதாகவும், வலிமையுடனும் இருந்தனபோலும். பரசுராமனைக் கண்டு தயரதன் மூச்சு அடங்கி மயக்கம் போட்டுக் கிடக்கும்போது, இராமன் சிரித்தவண்ணம் பரசுராமனை வென்றான். அதைத் தயரதன் நினைத்துக் கொண்டான். உலகிலுள்ள அரசர்களை

---

438. மருங்கு - பக்கம். இரீஇ - இருத்தி. பயந்து - பெற்று.

யெல்லாம் வென்ற தோள்களின் வலிமை குறுகிப்போக உயர்ந்த தோள்களல்லவா உன் தோள்கள் என்று வாய் விட்டுச் சொல்கிறான். உன்னையே பெற்ற நான் உன்னிடம் ஒரு வரம் கெஞ்சிக் கேட்கப்போகிறேன் என்கிறான்.

முன்னோர் சென்ற வழி

439 மைந்த! நம்குல மரபினில்
மணிமுடி வேந்தர்
தந்தம் மக்களே கடைமுறை
நெடுநிலம் தாங்க,
ஐந்தொ டாகிய முப்பகை
மருங்கற அகற்றி
உய்ந்து போயினர் ஊழிநின்று
எண்ணினும் உலவார். ௩௬

மகனே! நமது பரம்பரையில் மணிமுடி தரித்து ஆண்ட அரசர்கள், தங்கள் தங்கள் மக்களைக் கடைசியில் நீண்ட நிலத்தை ஆளும்படி செய்துவிட்டு ஐந்தொடு பொருந்திய மூன்று பகைகளைச் சுவடு கெட நீக்கித் (பிறவிப் பிணியில் நின்றும்) தப்பிப் பிழைத்தனர். எத்தனை ஊழிக்காலம் கடந்து எண்ணிப் பார்த்தாலும் (அவர்கள் தமது புகழில்) குறைவுபடமாட்டார்கள்.

(வி - ம்) ஐந் தொடாகிய முப்பகை என்றது சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐம்புலப் பற்றினால் ஏற்படும் காமம், வெகுளி, மயக்கத்தை. இவை துறவு நெறிச் செல்வார்க்குப் பகையாகும். இவை ஒழியாதபோது துறவுக்கும், மெய்யுணர்வுக்கும், வீடு பேற்றுக்கும் இடமில்லை. ஆதலால் ‘மருங்கற அகற்றி’ எனப்பட்டது. ‘காமம்

---

439. கடைமுறை - கடைசித்தரத்தில், முதுமையில். அற - ஒழியும்படி. உலவார் - குறைவுபடார்.

வெகுளி மயக்கம் இவை மூன்றின் நாமங் கெடக்கெடும் நோய்' (திருக்குறள் - 360). சுவடு கெட என்பதை 'வேரும் வேரடி மண்ணு மிலாமலே வெந்துபோகப் பகைமை பொசுக்குவான்' என்பார் பாரதி (கண்ணன் - என் அரசன்).

சுமையைச் சுமத்துதற்கு அன்று

440 அனைய தாதலின் அருந்துயர்ப்
பெரும்பரம் அரசன்
வினையின் என்வயின் வைத்தனன்
எனக்கொள வேண்டா:
புனையும் மாமுடி புனைந்துஇந்த
நல்அறம் புரக்க
நினையல் வேண்டும்; நான் நின்வயிற்
பெறுவதுஈது என்றான். ௩௭

தந்தையின் ஆட்சியை மகன் ஏற்பது இயல்பாதலின், பெருங்கவலைக்கிடமான பெரிய ஆட்சிப் பொறுப்பைச் சாமர்த்தியமாக அரசன் நம் தலையில் சுமத்திவிட்டான் என்று நினைக்க வேண்டாம். அணியத்தக்க பெருமை பொருந்திய முடியை, நீ புனைந்து இந்தச் சிறந்த அறப்பணியைச் செய்ய மனமிசைய வேண்டும். நான் உன்னிடம் பெற விரும்புவது இதுதான் என்றான்.

(வி - ம்) அரசாளுந் தொழில் துயரமானதென்று பொறுப்பு வரு முன்பு தோன்றும். நேர்மையும் தன்னடக்கமுமுள்ளவர்க்கு இது இயல்பு. ஆனால் கடமை ஆற்றுவார்க்கு இப்படியான பிற்போக்கு எண்ணம் ஏற்படக் கூடாது. இராமன் இளைஞனாதலால் பொறுப்புணர்ச்சியில் எப்படி யிருப்பானோ? ஒருவேளை ஏனடா இந்தத் தொல்லை

---

440. பரம் - பாரம். வயின் - இடம்.

யென்று அவனுடைய இளமையுள்ளம் கருதிவிடுமோ என்ற ஐயம் தயரதனுக்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. பூமியை ஆள்வதென்பது பெரிய சுமைதான். உலகத்திற்குச் சிறு ஊறும் ஏற்படாமல் ஆள முற்படுவது பெருங்கவலைக்கிடமான செயலேயாகும். என்றாலும் இதுதான் நல்லறம் என்று கூறுகிறான். தன் தலையிலிருக்கிற சுமையை நம் தலையில் கட்டிவிட்டுக் காட்டுக்கு நழுவப் பார்க்கிறான் மன்னன் என்று இராமன் நினைத்துவிடலாகாதென்றும் நினைக்கிறான் என்பதை 'வினையின்' என்ற சொல் காட்டுகிறது. தயரதன் பிள்ளைக்குத் தாங்கும் பருவம் வந்துவிட்டது, தன்னுடைய கடைசிக் காலத்தைத் தவத்திற் கழிக்கலாமென்று கருதினனே அன்றி, அரசாட்சி ஒரு வீண்செயலென்றோ, வெறுக்கத்தக்கதென்றோ அவன் கருதவில்லை. உலகை அஞ்சித் துறக்கும் மனப்பான்மை கொண்டவனாக இருந்தால் எப்பொழுதோ காட்டுக்கு ஓடிப்போயிருக்கலாம். தவத்திற்குச் செல்வதில் எவ்வளவு விருப்பங் கொண்டானோ அவ்வளவு விருப்பத்தை நாட்டின் ஆட்சியைப் பொறுப்புள்ளவரிடம் ஒப்புவிக்க வேண்டுமென்பதிலும் கொண்டிருந்தான். மூப்படைபவர்க்குத் தவம் சிறந்தது. வலிமையுடையார்க்கு ஆட்சியே சிறந்த நல்லறம் என்று கருதினான். 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்' (திருக்குறள் 543) என்பதறிக. இராமனைப் பட்டம் தாங்கச் சொல்வதில் தயக்கம் ஏற்படுதற்கில்லை. ஆனால், இங்கே ஆட்சியிலிருப்பவன் விலகப் பார்ப்பதால் ஆட்சியை ஏற்பவனுக்குச் சப்பைகட்ட வேண்டுமென்ற மனப்பான்மை தயரதனுக்கு ஏற்படுகிறது. அரசை மகனிடம் கொடுக்க வேண்டுமென்ற தயரதனது எண்ணம் இயல்பானது. இந்த நிலையில் அவன்கொள்ளும் ஐயமும் இயல்பாக எழக்கூடியது தான். 'புனையும் மாமுடி' என்றது ஏற்கத்தக்கது மட்டு

மல்ல ; ஏற்கவேண்டியது என்ற குறிப்பைக் காட்டுகிறது. நான் இறந்தால் உன் தலைக்கு வரும் : ஆனால் நான் தவத்திற்குச் செல்ல அனுமதி தருக என்ற உட்கருத்தையுங் கொண்டிருக்கிறது. தகப்பன் கேட்கும்போது நீ வரம் தரலாகாதா என்ற பரிதாபமும் 'நின் வயிற் பெறுவது ஈது' என்பதில் தொனிக்கிறது. உலகாளுந் தொழில் பொறுப்பானதென்பதை 'புவி ஆளுமொர் கடுந்தொழில் இனி துணர்ந்தோர்' என்பர் பாரதியார் (பாஞ்சாலி சபதம் 11) கீழ் வரும் பாடலும் இதனை உணர்த்தும். 'ஒரு மைந்தன் தன் குலத்துக் குள்ளானென் பதுமுணரான், தருமந்தன் வழிச் செல்கை கடனென்று தன் மைந்தன், மருமந்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன், அருமந்த அரசாட்சி அரிதோ மற் றெளிதோதான்' (பெரிய புரா - திருநகர - 44).

விருப்பமுமில்லை வெறுப்புமில்லை

441 தாதை அப்பரிசு உரைசெயத்
தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன்
கடன்இதென்று உணர்ந்தும்,
யாது கொற்றவன் ஏவியது
அதுசெயல் அன்றோ
நீதி எற்கென நினைந்தும்அப்
பணி தலை நின்றான். ந.அ.

தந்தை அவ்வாறு சொன்னதும் தாமரை மலர்போல மலர்ந்த கண்ணையுடைய இராமன் பெருவிருப்பத்தைக்

441. அப்பரிசு - அவ்விதம். கடன் - கடமை. கொற்றவன் - அரசன் ; தயரதன். நீதி - ஒழுக்கமுறை. பணி - கட்டளை. தலைநிற்றல் - முழுமையும் ஆட்படுதல்.

கொள்ளவுமில்லை; ஆனால் வெறுப்படையவுமில்லை. இது கடமை என்று கருதினன். மேலும் எதை அரசன் ஏவுகிறானோ அதைச் செய்தல்தான் எனக்கு முறையென்றும் கருதி அந்த வேண்டுகோளைத் தலைமேலேற்றான்.

(வி - ம்) உண்மை யுணர்ச்சி யுடையவர்கள் தமக்கேற்படும் இன்ப துன்பங்களை நோக்குவதில்லை. தாம் செய்ய வேண்டியதெது என்பதையே நோக்குவார்கள். அப்படி இங்கு இராமனும் தந்தைக்குப் பிறகு மகன் பட்டமேற்பது இயல்பான கடமைதான். அதோடு தந்தை சொல்வதைக் கேட்பதும் முறையாகும் என்று நினைத்தான். ஆதலால் பதவிப் பேற்றில் பெரிய மகிழ்ச்சியோ அதன் பொறுப்பில் வெறுப்போ ஏற்படவில்லை. துன்பத்தைப் பொறுத்து, நிர்வாகம் செய்யப் பின்வாங்கித் துறந்து செல்வதும், பொறுப்பு இன்னதென்றுணராமல் இன்பங் கருதி நிர்வாகத்தை ஏற்பதும் உலகியலிற் காணுங் காட்சி. ஆனால் தயாதனுக்கும் இராமனுக்கும் அன்று. கொற்றவன் என்ற சொல்லுக்குத் தந்தை என்றே பொருள் கொள்ளல் வேண்டும். தாதை என்று முதலிலே குறிப்பிட்டிருப்பதும் நோக்கத் தக்கது.

வரம் தருக

442 குரிசில் சிந்தையை மனக்கொண்ட
கொற்றவெண் குடையான்,
'தருதி இவ்வரம்' எனச்சொலி,
உயிர்உறத் தழுவிச்

---

442. குரிசில் - பெருமையுடையோன்=இராமன். சுருதி - வேதம். மந்திரச்சுற்றம் - மந்திரிகள். பொருவில் - பொரு+இல் - ஒப்பில்லாத. கோயில் - தலைமை வீடு=அரண்மனை.

சுருதி அன்னதன் மந்திரச்
சுற்றமும் சுற்றப்
பொருவில் மேருவும் பொருவரும்
கோயில்போய்ப் புக்கான். ௩௬.

இராமனது கருத்தை அறிந்த மன்னவன் இந்த வரத்தைத் தரத்தான்வேண்டும் என்று சொல்லிக்கொண்டே உயிரும் பொருந்தும்படி இராமனைக் கட்டித் தழுவி, வேதத்தைப் போன்ற தன்னுடைய மந்திரிகள் சூழ்ந்துவர வேறு ஒப்பற்ற மேரு மலையையும் உவமை கூறமுடியாத தன்னுடைய அரண்மனையை அடைந்தான்.

(வி - ம்) இராமன் தன் கருத்தை வாய்விட்டுச் சொல்லவில்லை, குறிப்பால் தெரிவித்துவிட்டான். இது தயாதனுக்கும் விளங்கிவிட்டது. என்றாலும் இதை நீ தரத்தான் வேண்டும் என்று மறுமுறையும் வேண்டுகிறான். பெரும் பதவியிலிருக்கும் பெரியவர்கள் தங்கட்குக் கீழுள்ளவரிடம் உதவிபெற நேர்ந்தால் கேட்பதும் கொடுப்பதும் இப்படித்தான் நிகழும். இராமன் சிறுவன். பெரிய மன்னனும், பெற்ற தந்தையுமான தயாதன் வரம் கேட்கிறான் மறுக்கக்கூடாதே என்ற ஏக்கத்தோடு. இராமன் வாய்மொழியில் உடன்பாடு தெரிவிக்கவில்லை; எனினும் குறிப்பால் உடன்பட்டதைக் காட்டிவிட்டான். அதனை உணர்ந்த தயாதன் மேலும் வற்புறுத்தி, ‘இந்த வரத்தைத் தரத்தான் வேண்டும்’ என்று கூறி உறுதி செய்துகொள்கிறான். ‘சுருதியன்ன’ என்றது பெருமையும் உண்மையும் கருதி. தேவர்களின் இருக்கையானது மேருமலையாம். இந்திரனே அயோத்தியை நோக்கி விண்ணப்பம் போடவேண்டியவனாக இருக்கிறான். எனவே, வேறு இணையில்லாத மேருவும் இதற்கிணையன் றென்றார். அரசன் ஆலோசனை மண்டபத்திலிருந்து கொலுமண்டபத்துக்குச் சென்றான் என்க.

இராமன் திரும்புதல்

443 நிவந்த அந்தணர் நெடுந்தகை
மன்னவர் நகரத்து
உவந்த மைந்தர்கள் மடந்தையர்
உழைஉழை தொடரச்
சுமந்தி ரன்தடந் தேர்மிசை
சுந்தரத் திரள்தோள்
அமைந்த மைந்தனும் தன்நெடுங்
கோயில்சென் றடைந்தான். ௪0

மேலான அந்தணரும், மிகுந்த தகுதிவாய்ந்த அரசர்களும், ஊரிலுள்ள விரும்பத்தக்க இளைஞர்களும், பெண்களும் பக்கத்துக்குப் பக்கமாகத் தொடர்ந்துவர, சுமந்திரனால் ஓட்டப்படும் தேரில் அழகிய வலிய தோளமைந்த இராமனும் தன்னுடைய மாளிகையை அடைந்தான்.

அரசருக்கு அழைப்பு

444 வென்றி வேந்தரை வருகென்று
உவணம்விற் றிருந்து
பொன்தி ணிந்ததோட்டு அரும்பெறல்
இலச்சினை போக்கி,
நன்று சித்திர நளிமுடி
கவித்தற்கு நல்லீர்
சென்று வேண்டுவ வரன்முறை
அமைக்கெனச் செப்பும். ௪௧

---

443. நிவந்த - மேலான. அந்தணர் - செந்தண்மை பூண்டு ஒழுகுபவர். தகை - தகுதி. உழை - பக்கத்தில்.

444. உவணம் - கருடப்பறவை. தோடு - ஓலை. இலச்சினை - அடையாள முத்திரை. நளிமுடி - பெருமை பெற்ற முடி. கவித்தல் - சூட்டல்.

வெற்றியையுடைய உலக அரசர்களை வரும்படி கருடனின் அடையாளமுள்ள அருமையான முத்திரையிட்ட ஓலையை அனுப்பி, நன்மைக்கென்றே ஏற்பட்ட அழகிய பெருமை பொருந்திய முடியைச் சூட்டுதற்குவேண்டிய முயற்சிகளை நல்லவர்களாகிய நீங்கள் முறையாகச் செய்யுங்கள் என்று (அரசன்) கூறினன்.

(வி - ம்) ஏனை அரசர்க்கு வென்றியாவது தயரதனைச் சார்ந்திருத்தலாம்.

அளவிலா மகிழ்ச்சி

445 இறைவன் சொல்எனும் இன்நறவு
அருந்தினர் யாரும்
முறையில் நின்றிலர்; முந்துறு
களியிடை மூழ்கி
நிறையும் நெஞ்சிடை உவகைபோய்
மயிர்வழி நிமிர,
உறையும் விண்ணகம் உடலொடும்
எய்தினர் ஒத்தார். ௪௨

அரசனது சொல் என்ற இனிய தேனை உண்டவரான யாவரும் மேன்மேல் ஓங்கும் களிப்பில் முழுகி நிறைகிற நெஞ்சினின்றும் மகிழ்ச்சியானது மயிர்க்காம்பின் வழியாகப் பீறிட்டு விளங்குவதினாலே கட்டுப்பாட்டின் நின்றாரல்லர்; உடலைநீக்கிப் பிற்காலத்தில் செல்லவேண்டிய மேலுலகத்துக்கு உடலுடன் இன்றே சென்றவரை ஒத்தனர்.

(வி - ம்) இராமனை மன்னனாகப் பெறப் போவதாலும், நேரிய வழியிலே செல்பவராதலாலும் இவர்கள் வானுலகம்

---

445. இறைவன் - அரசன். நறவு - தேன். முறை - மரியாதை. களி - களிப்பு. உவகை - மகிழ்ச்சி. மயிர்வழி நிமிர்தல் - மயிர்க்கூச்செறிதல், உடல்பூரித்தலுமாம். விண்ணகம் - மேலுலகம்.

அடைவது உறுதி. ஆதலால் 'உறையும் விண்ணகம்' எனப் பட்டது. மகிழ்ச்சி எல்லையற்றுப் பெருகிவிட்டதால் ஒருவருக் கொருவர் காட்டவேண்டிய சாதாரண மரியாதையை இழந்து விட்டனர் என்பதை 'முறையின் நின்றிலர்' என்றார். உட லொடும் விண்ணகம் அடையக் கூடுமானால் அதுவே முழு இன்பமாகுமல்லவா? 'எப்போதும் ஆனந்தச் சுடர்நிலையில் வாழ்ந்துயிர்கட்கு இனிது செய்வோர், தப்பாதே இவ்வுலகில் அமரநிலை பெற்றிடுவார்' (பாரதி: இந்து மதாபிமான சங்க வாழ்த்து.)

பெண்களின் மகிழ்ச்சி

446 *ஆண்டை அந்நிலை
ஆக, அறிந்தவர்
பூண்ட காதலர்,
பூட்டுஅவிழ் கொங்கையர்,
நீண்ட கூந்தலர்,
நீள்கலை தாங்கலர்,
ஈண்ட ஓடினர்;
இட்டிடை இற்றிலர். சசுரு

அவ்விடத்தில் அவ்வாறு நடக்க (முடிசூட்டுச் செய்தியை) அறிந்தவரும் மிக்க அன்புடையவருமாகிய (நான்கு பெண்கள்) கச்சு அவிழ்ந்த மார்புடனும், அவிழ்ந்து நிலத்தில் இழுபடுகிற கூந்தலுடனும், ஓடமுடியாமல் தடுக்கிற ஆடையுடனும் ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டே ஓடிவந்தனர். ஆனால், அவர்களது தள்ளாடுகிற இடை ஒடியவில்லை.

---

446. ஆண்டை - அவ்விடம். பூட்டு - முடிச்சு. கலை - ஆடை. ஈண்ட - நெருங்க. இட்டிடை - நுட்பமான இடை. இற்றிலர் - ஒடியப் பெற்றாரில்லை.

(வி - ம்) மகிழ்ச்சியால் உடல்பூரிக்கவே கச்சு அவிழ்ந்தது. விரைவாக ஓடுவதால் கூந்தல் அவிழ்ந்து பின்னாலே நீள்கிறது. அவ்வாறே முன்தானை பின்னாலே நீண்டு பறக்கிறது. இவ்வாறு தங்களை மறந்து ஆடி ஓடுவதால் மெல்லிய இடை ஒடிந்துபோமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. அதன் நுட்பம் நோக்கி இட்டிடை எனப்பட்டது. 'எம்மை யாளுடையாள் இட்டிடையின் மின்னி' (திருவாசகம் - திருவெம்); 'இட்டிடைப்பின்னை கேள்வன்' (நாலாயிரம்.)

நால்வர் கொண்டாட்டம்

447 ஆடு கின்றனர்;
பண்அடை வின்றியே
பாடு கின்றனர்;
பார்த்தவர்க் கேகரம்
சூடு கின்றனர்;
சொல்லுவது ஓர்கிலர்;
மாடு சென்றனர்
மங்கையர் நால்வரே. ௪௪

(இசை முறையிலன்றி) ஆடுகின்றனர்; இசைமுறையின்றிப் பாடுகின்றனர்; யாரைக்கண்டாலும் கைகூப்புகின்றனர். சொல்வதை அறிந்து சொல்லவில்லை. இவ்வாறான நான்கு பெண்கள் (கோசலையின்) பக்கத்தே சென்றனர்.

(வி - ம்) பண்முறையறிந்து நாட்டியமாடுவதும் அவ்வாறே பாடுவதும் இயல்பு. இப்பெண்களோ கண்டபடி ஆடுகின்றனர். கண்டபடி பாடுகின்றனர். இவ்வாறு கூறுவதால் அந்நாட்டில் பாடுவோர் பண்முறையறிந்தே பாடுவர் என்

447. பண் - தாளமும் இராகமும் சேரப் பாடுவது. அடைவு - பொருத்தம். மாடு - பக்கத்தில்.

பதும், ஆடுவோரும் முறையறிந்தே ஆடுவரென்பதும் பெறப் படும். பண்ணும் பாடலும் இயையாவிட்டால் அது வீண் என்பர் புலவர். 'பண்ணென்னும் பாடற்கியை பின்றேல், கண்ணென்னும் கண்ணோட்ட மில்லாத கண்' (திருக்குறள்-573.) பட்டத்தரசியைக் கண்டும் ஒதுங்கவில்லை. அவளை உரசிக்கொண்டு சென்றனர்.

செய்தி என்ன?

448 கண்ட மாதரைக்
காதலின் நோக்கினள்
கொண்டல் வண்ணனை
நல்கிய கோசலை ;
'உண்டு பேர்உவ
கைப்பொருள் அன்னது
தொண்டை வாயினிர்
சொல்லுமின் ஈண்டு'என்றாள். ௪௨௫

நீருண்ட மேகத்தை யொத்த நிறமுள்ள இராமனைப் பெற்ற கோசலை, மாதர் செல்வதைக் கண்டாள் ; (அவர் களின் மகிழ்ச்சியை) அன்போடு கவனித்தாள். 'ஏதோ மகிழ்ச்சிக்குரிய காரியம் ஒன்றிருக்கிறது. அதைத் தொண் டைக்கனி போன்ற வாயை யுடையவர்களே ! இங்கே சொல்லுங்கள் என்றாள்.

(வி - ம்) கோசலை பெண்களைப் பார்த்தாள். பிறகு அவர்களின் நிலையை நோக்கினள் என்க. மகிழ்ச்சிக்குரிய காரியத்தை இங்கே சொல்லிவிட்டுப் போங்கள் என்கிறாள். 'மாலாகும் வேளையில் நீலா சலமொத்து மாப்பறவை, மேலாக வந்தருள்வாய் எங்கள் கோசலை மெய்வயிறென்,

448. தொண்டை - ஆதொண்டைக் கனி.

ஆலாய் அதில் இளம் சேயாய் உறங்கி அசோதை கண்போல், சேலாய் எழும் அழ காகுல பூதரச் சீதரனே' (அழகர் கலம் பகம்) என்பதனோடு இரண்டாம் அடியை ஒப்பு நோக்குக.

உன் மகனுக்குப் பட்டம்

449 மன்நெ டுங்கழல்
வந்து வணங்கிடப்
பல்நெ டும்பகல்
பார்அளிப் பாய்என
நின்னெ டும்புதல்
வன்தனை நேமியான்
தொல்நெ டும்முடி
சூட்டுகின் றான்என்றார். ௪௬

'மன்னரெலாம் வந்து நீண்ட அடிகளில் விழுந்து வணங்க, நெடுநாள் இவ்வுலகத்தை அரசாள்வாய்' என்று உன்னுடைய மூத்த மகனுக்கு, சக்கரவர்த்தி, பரம்பரையாக வருகிற நீண்ட புகழுள்ள முடியைச் சூட்டப் போகிறான் என்றார்கள்.

(வி - ம்) நான்கு மக்களில் 'நெடும் புதல்வன்' என்றது இராமனைக் குறித்ததென்க. கோசலை நான்கு மக்களுள்ளும் வேற்றுமை கண்டாளில்லை. நால்வரையும் தன் மக்களாகவே கருதி யிருந்தாள் என்பது 'நால்வர்க்கும் மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்' (பாடல் 572) என்பதால் அறியப்படும்,

---

449. மன் - அரசன். கழல் - வீரக்கழலணிந்துள்ள பாதங்கள். பல்நெடும் பகல் - பல நீண்ட நாட்கள், பல ஆண்டு எனினும் ஆம். நெடும் புதல்வன் - மூத்த மகன்; நேமி - சக்கரம். தொல் - பழைமையான.

கடல் பெருகி வற்றுகிறது

450 சிறக்கும் செல்வம்
மகற்கெனச் சிந்தையில்
பிறக்கும் பேருவ
கைக்கடல், பெட்புஅற
வறக்கும்; மாவட
வைக்கனல் ஆனதால்,
துறக்கும் மன்னவன்
என்னும் துணுக்கமே. சஎ

பரம்பரையாகச் சிறப்படைந்து வருகிற செல்வம் மக னுக்குக் கிடைக்கிற தென்பதனல் மனத்தில் தோன்றிய பெரிய மகிழ்ச்சியானது கடல்போலப் பெருகியது. இதன் பயனுக அரசன் துறவு கொள்வானே என்னும் நடுக்கம், பெரிய வடநெருப்பைப்போல உண்டானபடியால், மகிழ்ச் சிக் கடல் பெருகுந் தன்மை கெட்டு வறண்டது.

(வி - ம்) பிள்ளைக்குப் பட்டம் வருகிறதென்பதில் இயற்கையாகவே பெரு மகிழ்ச்சி யுண்டாவதியல்பு. ஆனல் பட்டம் எங்கிருந்து வருகிறது ? வெளியிலிருந்து வரவில்லை. இதன் பயனுக அரசன் துறவு பூணப் போகிருன் என்பதை உணர்ந்தாள். கற்பரசியின் உள்ளம் மகிழ்ச்சியைத் துறந் தது. கடல் போலப் பெருகிய மகிழ்ச்சி வறண்டுபோய் விட்டது என்ருர். வடவைக்கனல் கடல் நீரை மிகாமல் செய்யும் ஆற்றலுடையது. இங்கே மகிழ்ச்சிக் கடலை அடி யோடு வற்றச் செய்யும் வலி படைத்ததாகவுள்ள ஒரு புதிய வடவைக் கனலாக மன்னவன் பிரிவென்னும் உணர்ச்சி ஆய்விட்டது.

---

450. பெட்பு - தன்மை. துணுக்கம் - நடுக்கம்.

பெருமாள் கோயில்

451 அன்ன ளாயும்
அரும்பெறல் ஆரமும்
நல்நி திக்குவை
யும்நனி நல்கித்தன்
துன்னு காதல்
சுமித்திரை யோடும்போய்
மின்னு நேமியன்
மேவிடம் மேவினள். சஅ

அவ்வாறு அவள் ஆனாலும், அருமையாகப் பெறத்தக்க மாலைகளையும், உயர்ந்த பொன் முடிப்புக்களையும், மகிழ்ச்சியுடன் அந்நான்கு பெண்களுக்கும் கொடுத்து, தன்னுடன் பொருந்திய அன்புள்ள சுமித்திரையுடன் சென்று, மின்னுகின்ற சக்கரப்படையை யுடைய திருமால் எழுந்தருளியிருக்கிற கோயிலை அடைந்தாள்.

(வி - ம்) பிள்ளைக்கு முடிசூட்டலும், அரசன் முடி இழத்தலும் ஆகிய இரு நிகழ்ச்சிகளில் குழம்பிய மனத்தை நிம்மதிப்படுத்த வழிகாணாதவளாய், தோழிபோன்ற சுமித்திரையைத் துணைக்கொண்டு தெய்வத்தினிடம் சென்றாள். கலக்கமுற்றுத் தவிப்போருக்குக் கடைசியில் 'கடவுள் உண்டு; அவர் அருள் செய்வார்' என்ற நம்பிக்கையைத் தவிர உறுதுணை இல்லை என்பது இங்கே அறிவுறுத்தப்படுகிறது. இதுவரை அரசன் இருந்தான். இராமனுக்கு ஒரு பொறுப்புமில்லை. இனி பெரிய அரசாட்சியே அவன் தலைப் பொறுப்பில் வரப்போகிறதென்றவுடன் கோசலைக்குக் கவலை ஏற்பட்டது.

---

451. அன்னள் - அப்படிப்பட்ட கோசலை. ஆயும் - ஆகியும். ஆரம் - வடம், மாலை. நிதி - பொன். குவை - குவியல், முடிப்பு. துன்னு - பொருந்திய. நேமியன் - பெருமாள்.

கோசலை வணக்கம்

452 மேவி மென்மல
　　ராள்நில மாதெனும்
தேவி மாரொடும்
　　தேவர்கள் யாவர்க்கும்
ஆவி யும்அறி
　　வும்முத லாயவன்
வாவி மாமலர்ப்
　　பாதம் வணங்கினுள். சக

(கோயிலுக்குச்) சென்று மலர்மகள் நிலமகள் எனும் இரு தேவியருடன் எல்லாத் தேவர்க்கும் உயிரும், அறிவும், முதலுமாக உள்ள திருமாலினது, நீரிற் பூக்கும் செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்கினுள்.

(வி - ம்) தேவர் யாவர்க்கும் உயிராகவும், அறிவாக வும், மூலமாகவும் உள்ள கடவுள் திருமால்; அவன் இரு வகைச் சக்தியுடன் உள்ளான் என்பது இப்பாடலின் கருத்து. வாவிமா மலர் என்பதற்கு, என்றும் வாடாத மலர் எனலும் ஆம். இது கவிக்கூற்று. முதலும் என்பதில் உள்ள உம்மை தொக்கது.

உலகை அடக்கியபவனை உதரத்தடக்கினுள்

453 என்வ யிற்றரு
　　மைந்தற்கு இனிஅருள்
உன்வ யத்ததென்
　　ருள்;உலகு யாவையும்

---

452. மலராள் - இலக்குமி; திருமகள். நிலமாது - பூமிதேவி; நிலமகள். ஆவி - உயிர். முதல் - மூலம். வாவி - நீர்நிலை.

453. என்வயின் - என்னிடமாக. வயத்தது - சார்ந்தது. மன் - நிலைபெற்ற. மாயன் - திருமால்.

மன்வ யிற்றின்
அடக்கிய மாயனைத்
தன்வ யிற்றின்
அடக்கும் தவத்தினாள். ௫0

(ஊழிக்காலத்தில்) எல்லா உலகங்களையும் தனது நிலை பெற்ற வயிற்றில் அடக்கிக் காக்கின்ற திருமாலைத் தன்னுடைய வயிற்றில் அடக்கிவைத்திருந்து காப்பாற்றும் பேறு பெற்ற அந்தக் கோசலையானவள் 'என்னிடத்தில் பிறக்கச் செய்த பிள்ளைக்கு இனி அருள் செய்யவேண்டிய பொறுப்பு உன்வசத்தில் உள்ளது' என்றாள்.

(வி - ம்) கோசலையின் பிள்ளைதான் இராமன். இது அவளுக்குத் தெரியாதா! உலகை ஆக்கலும் காத்தலும் அழித்தலும் ஆகிய எல்லாம் கடவுள் செயல்; எனவே, இராமனைப் பிறப்பித்ததும் கடவுள் செயல் என்பதை உணர்ந்த கோசலை 'என்வயின் தரு மைந்தன்' என்றாள். 'பிள்ளையை நான் வளர்ப்பதாகவும் காப்பதாகவும் எண்ணியிருந்தேன்; இப்போது என்செயலுக்கு மேலே போகிறது; எனவே நீதான் பொறுப்பு' என்கிறாள். இப்படிச் சொன்னவள் யார்? எவ்வளவு பெரிய ஆபத்திலும் யாவற்றையும் காக்கும் கடவுளைத் தன்வயிற்றில் வைத்துக் காத்தவளான கோசலை என்ற நயம் நோக்கத்தக்கது. மக்களறிவும் காவலும் எல்லைக்குட்பட்டவை. அவ்வெல்லை கடக்கப் படும்போது கடவுள் உணர்ச்சி வெளிப்படுகிறது. உலகு யாவையும் மன் வயிற்றினடக்கியதை, 'ஏழுலகுண்டு ஆலிலையில் முன்னொருவனாய முகில் வண்ணா' என்பர். (நாலாயிரம் - 2115.)

2. மந்தரை சூழ்ச்சிப் படலம்

[கூனி, கைகேயியின் மனத்தைத் தடுமாறச்செய்த படலம். மந்தரை – கைகேயியின் சீதனத்தாதி. முதுகில் கூன்விழுந்துள்ள காரணத்தால் கூனி எனப்பட்டாள். சூழ்ச்சி – மனத்தடுமாற்றம்.]

முடிசூட்டு அறிவிப்பு

454 *ஏவின வள்ளுவர்
இராமன் நாளையே
பூமகள் கொழுநனுப்
புனையும் மௌலிஇக்
கோநகர் அணிகெனக்
கொட்டும் பேரிஅத்
தேவரும் களிகொளத்
திரிந்து சாற்றினர். க

ஏவப்பட்ட வள்ளுவர்கள், 'இராமன் நாளைக்குப் பூமியின் தலைவனாக முடிசூட்டிக்கொள்ளப்போகிறான்; ஆதலால் இந்தத் தலைநகரத்தை அலங்காரஞ் செய்யுங்கள்' என்று கூறி அடிக்கிற முரசம் கேட்டு மனிதரேயன்றித் தேவர்களும் மகிழ்ச்சியடையும்படி எங்கும் சென்று அறிவித்தனர்.

---

454. வள்ளுவர் - அரசன் கட்டளையை யானைமேலிருந்து முரசடித்து அறிவிப்பவர். பூ - பூமி. பூமகள் - நிலமாகிய மகள். கொழுநன் - நாயகன்; அரசன். மௌலி - முடி. அணிகென - அணிக என. பேரி - முரசம்.

கவி அமை கீர்த்தி

455 கவிஅமை கீர்த்திஅக்
காளை நாளையே
புவிஅமை மணிமுடி
புனையும் என்றசொல்,
செவிஅமை நுகர்ச்சிய
தெனினும், தேவர்தம்
அவிஅமுது ஆனதுஅந்
நகர்உ ளார்க்கெலாம். ௨

கவியில் அமைத்துப் பாடத்தக்க புகழையுடைய அவ்விராமன் நாளையே நிலத்துக்கு அரசனாகும் அழகிய முடியைச் சூடுவான் என்ற சொல் காதால் கேட்டு உணரத் தக்கதாயினும், தேவர்களுக்கு வேள்வித்தீயிற் கொடுக்கப் படும் உணவை நிகர்த்திருந்தது அந்நகர மக்கள் யாவருக்கும்.

(வி - ம்) அளவு கடந்த புகழுடையவரே கவிகளாற் புகழப்படுவர். நிலைபெற்ற புகழுடையோரே நிலைபெற்ற கவிகளில் இடம்பெறுவர். அப்புகழில் தலைமையிடம் பெறுவோரே கவியின் தலைமகனாக விளங்குவர். இராமன் பெயரில் நூல்கள் அமைவதையே இங்குக்குறிப்பிட்டதென்க. முடிசூடுவான் என்பதில் மகிழ்ச்சி. நாளையே சூடுவான் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டது மிக்க மகிழ்ச்சிக்கிடமாகும். செவிக்கு உணவாக இச்செய்தி யிருந்தாலும் தேவர் அவியுண வுண்டு வயிறு நிறைந்தாற்போல இவர்களின் உணர்ச்சியிருந்த தென்க. 'செவிக்குண வில்லாதபோழ்து

---

455. காளை - காளையைப் போன்ற இராமன். நுகர்ச்சி - அனுபவம். அவி - வேள்வியில் தேவர்க்கு அளிக்கப்படும் உணவு. (செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின், ஆன்றாரோ டொப்பர் நிலத்து' - திருக்குறள் 413)

சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' (திருக்குறள்-412) செவிக்கு நல்லுணவு கிடைக்கவே அமிழ்தம் உண்டாற்போல வயிற்றுப் பசி அற்றே போயிற்று.

ஒரே கொண்டாட்டம்

456 ஆர்த்தனர்; களித்தனர்;
ஆடிப் பாடினர்;
வேர்த்தனர்; தடித்தனர்;
சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர்; மன்னனைப்
புகழ்ந்து வாழ்த்தினர்;
தூர்த்தனர் நீள்நிதி
சொல்லி னார்க்கெலாம். ந

(கேட்ட மக்கள்) ஆரவாரம் செய்தனர்; மகிழ்ச்சி யுற்றனர்; குதித்துக் கூத்தாடிப் பாடினர்; போட்ட ஆட்டத்தில் உடல் வியர்த்தனர்; உளமகிழ்ச்சியால் உடல் பூரித்தனர்; மயிர்க்கூச் செறிந்தனர்; அரசனைப் புகழ்ந்து வாழ்த்தினர்; இச்செய்தியைத் தெரிவித்தவர்க்கெல்லாம் ஏராளமான பொருளை வாரிக்கொடுத்தனர்.

(வி - ம்) செய்தியை வள்ளுவர் அறிவித்தாராயினும், அச்செய்தியை அறிந்தவர் ஒவ்வொருவரும் வள்ளுவருக்கு முன் விரைந்தோடி எங்குந் தெரிவித்தாராதலின் நீள்நிதி பெற்றாரென்க. மன்னன், தான் நன்றாக இருக்கும் போதே இராமனுக்குப் பட்டம் நல்குகிறா னென்பதை யறிந்ததும் அவனுடைய பெருந்தன்மையையும் தியாகத்தையும் எண்ணி

---

456. போர்த்தனர் - (நடுக்கத்தால்) மூடப்பட்டனர். தூர்த்தனர் - (கொட்டி) மூடிவிட்டனர்.

அவனைப் புகழ்ந்து வாழ்த்தினர். மகிழ்ச்சிப் பெருக்கில் பலர் பலவாறு மெய்ப்பாடடைந்தனர். ‘சிலிர்த்து மெய்ம்மயிர்’ என்பதை, ‘மெய்ம்மயிர் சிலிர்த்து’ என மாற்றிக்கொள்க.

நகர் அலங்காரம்

457 தினிசுடர் இரவியைத்
திருத்தும் ஆறும், அப்
பணிஇடைப் பள்ளியான்
பரந்த மார்பிடை
மணியினை வேகடம்
வகுக்கும் ஆறும் போல்,
அணிநகர் அணிந்தனர்
அருத்தி மாக்களே.

ஆசை நிறைந்த அந்த நகரமக்கள், ஒளிபொருந்திய சூரியனை இன்னும் ஒளி பெறும்படி திருத்தம் செய்ய முற்படுவதைப் போலவும், அந்த ஆதிசேடனாகிய படுக்கையில் பள்ளிகொண்டிருக்கிற திருமாலின் பரந்த மார்பில் விளங்குகிற மணியினை மாசுநீக்க முற்பட்டதைப் போலவும் அழகிய நகரத்தை அலங்காரம் செய்தார்கள்.

(வி - ம்) ஒளியிற் சிறந்த ஒளிவடிவமானது சூரியன். திருமாலின் மார்பில் உள்ளமணியும் அப்படியே. அவ்வாறு குறைவிலா நிறைவாக அலங்காரத்துடனிருப்பது அயோத்தி நகரம். அது எப்பொழுதும் அழகாகவே இருக்கிறது. அதை இராமனிடமுள்ள அன்பினால் இன்னும் அழகு படுத்த

457. பணி - பாம்பு. மணி - கவுஸ்துப மணி. (பாற்கடலைக் கடையும்போது எழுந்தவற்றுள் இதுவுமொன்று). வேகடம் - பளபளப்பு. வகுத்தல் - செய்தல். அருத்தி - ஆசை.

எண்ணி முற்பட்டார்கள். 'அமிழ்தினைச் சுவை செய்தன்ன அழகினுக்கழகு செய்தார் ' (பாடல்-344)என்பது காண்க.

கொடி ஏற்றம்

458 வெள்ளிய கரியன
செய்ய வேறுள
கொள்ளைவான் கொடிநிரைக்
குழாங்கள் தோன்றுவ,
கள்அவிழ் கோதையான்
செல்வம் காணிய
புள்எலாம் திருநகர்
புகுந்த போன்றவே. ௫

வெண்மை, கருப்பு, சிவப்பு, இன்னும் பலவேறு நிறங்களையுடைய எண்ணற்ற உயர்ந்த கொடிகளின் வரிசைக் கூட்டம் விளங்குவது எப்படி இருந்ததென்றால், தேன் துளிக்கிற மாலை யணிந்த தயரதனின் செல்வப்பெருக்கத்தைக் காணும்பொருட்டுக் காட்டிலும் நாட்டிலுமுள்ள பறவைக் கூட்டமெல்லாம் அயோத்தி நகரத்திற் புகுந்திருப்பதைப் போன்றிருந்தது.

(வி - ம்) மாளிகைதோறும் வரிசை வரிசையாகக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அவை பல நிறமுடையனவுமாம். அவை பறவைகள் நிறைந்திருந்தாற் போன்று தோன்றின. கருமை அந்நாளில் அமங்கல நிறமாகக் கருதப் படவில்லை.

---

458. செய்ய - சிவப்பு நிறமுடையன. கொள்ளை - நிறைந்த. வான் - பெரிய. நிரை - வரிசை. காணிய - காணும்பொருட்டு. புள் - பறவை.

தேரும் யானையும்

459 ஆடல்மான் தேர்க்குழாம்
அவனி காணிய
வீடெனும் உலகின்வீழ்
விமானம் போன்றன ;
ஓடைமாக் கடகளிறு
உதய மால்வரை
தேடருங் கதிரொடும்
திரிவ போன்றவே. கூ

நாட்டியக்குதிரை பூட்டிய தேரின் கூட்டமானவை, நிலவுலகத்தைப் பார்க்கும் பொருட்டு விண்ணுலகிலிருந்து இறங்கிய விமானங்களைப் போன்றன. நெற்றிப்பட்டத்தையுடைய பெரிய மதங்கொண்ட யானைகள், கீழ்த்திசையிலுள்ள பெரிய மலைகள் (உவமை) தேடுதற்கு அரிய சூரியனோடும் திரிந்தாற் போன்றன.

(வி - ம்) ஆடல் மான் என்பதற்கு மல்லகதி, மயூரகதி, வானரகதி, இடபகதி, வியாக்கிரகதி என ஐங்கதியையுடைய குதிரை என்பர். இது போர்க்குதிரையின் இலக்கணமாம். கீழ்த்திசையிலுள்ள மலையின்மீது சூரியன் தோன்றும் தோற்றம் போலக் கரிய பெரிய யானைகளின் நெற்றியில் அணியப்பட்டுள்ள மணிகள் பதித்த நெற்றிப்பட்டம் ஒளி வீசுகிறது. எனவே சூரியன் மலையில் நிலைத்து நிற்க அம் மலைகள் நடந்து திரிவதை யொத்திருந்தன என்றவாறு. இது இல் பொருள் உவமை.

---

459. ஆடல் - நாட்டியம். மான் - குதிரை. அவனி - நிலவுலகம். காணிய - காணும் பொருட்டு. வீடெனும் உலகு - சொர்க்கம். ஓடை - நெற்றிப்பட்டம். கடம் - மதம். களிறு - யானை. மால் - பெரிய. கதிர் - சூரியன்.

பலவகை மழை

460 பூமழை புனல்மழை
புதுமென் சுண்ணத்தின்
தூமழை தரளத்தின்
தோமில் வெண்மழை
தாம்இழை நெரிதலில்
தகர்ந்த பொன்மழை
மாமழை நிகர்த்தன
மாட வீதியே. எ

பூவைத் தூற்றுகின்றனர் ; மணங்கலந்த நீரைத் தூற்றுகின்றனர் ; மணங்கலந்த பரிசுத்தமான பொடியைத்தூற்றுகின்றனர் ; குற்றமற்ற வெண் முத்துக்களைத் தூற்றுகின்றனர் ; ஒருவருடன் ஒருவர் நெருக்கப்படுதலால் நகைகளும் நெருக்கப்பட்டு நசுங்கி உதிர்கின்றன. அவ்வாறு பொன்னும் தூற்றப்பட்டன. எனவே பல்வேறு விதமான மழைபொழிவதை ஒத்திருந்தன அந்த மாடவீதி.

(வி - ம்) புனல் மழை—பன்னீர் தெளித்தல். தங்கத்தாலான மணிகளையும் முத்துக்களையும் கோவையாக அணிவதும் பெருங்கூட்டத்தில் அவை அறுபட்டு உதிர்வதும் இயல்பாகும்.

---

460. புனல் - நீர் : பன்னீர். சுண்ணம் - கூட்டத்தில் தூற்றுவதற்கென்றே இடித்து வைத்துக் கொள்ளும் வாசனைப் பொடி. தூ - தூய்மையான. தாளம் - முத்து. தோம் - குற்றம். இழை - நகை.

கூனி தோன்றினள்

461 அந்நகர் அணிவுறும்
அமலை வானவர்
பொன்நகர் இயல்பெனப்
பொலியும் எல்வயில்,
இன்னல்செய் இராவணன்
இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக்
கூனி தோன்றினள். அ

மிகுதியாக அலங்கரிக்கப்பட்ட அந்த நகரமானது தேவர்களுடைய பொன்னகரத்தைப்போல(ஒரேமகிழ்ச்சியில்) பொலியும்போது, துன்பத்தையே செய்துவருகிற இராவணன் செய்த தீமை (திரண்டுவருவதைப்) போலப் பிறரால் நெருங்க முடியாத கொடிய மனத்தையுடைய மந்தரை தோன்றினாள்.

(வி - ம்) ஊரிலுள்ள யாவரும் மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றனர். தீமையற்ற நன்மை செய்தவரே பொன்னுலக வாழ்க்கையைப் பெறுவர். அங்கே இன்ப மயமாக இருப்பதன்றி வேறில்லை. அவ்வாறே இன்று அயோத்தி இருக்கிறது. இதற்கிடையில் ஒருத்தி கிளம்பினாள். அயோத்தியை இனி இராமனே அரசாளப் போவதால் துன்பமே இல்லாத இன்ப வாழ்வு, தெய்வவாழ்வு ஏற்பட இருந்த நேரத்தில் தீமை தோன்றுகிறது. 'பொன்னகர் இயல்பெனப் பொலியும் எல்வையில்' என்றார். இதனால் தேவலோகத்தில் தான் துன்பம் நீங்கிய இன்பம் பெறமுடியும் என்பதும் நிலவுலகத்தில் இன்பதுன்பங்கள் மாறிமாறி வருமேயன்றித் துன்பமற்ற

---

461. அமலை - மிகுதி. எல்வை - பொழுது. துன்ன அரும் - நெருங்க முடியாத. கூனி - மந்தரை: கூன் விழுந்த முதுகை உடையவளாதலால் கூனி எனப்பட்டாள்.

இன்பம் கிடைப்பதற்கில்லை யென்ற உண்மையும் பெறப்படு கின்றன. துன்பம் செய்வதற்கென்றே தோன்றினவன் இராவணன். அவன் செய்த தீமையெல்லாம் திரண்டு ஓர் உருத் தாங்கி வருவதைப் போலக் கூனி புறப்பட்டாள் என்றார். துன்னரும் கொடுமையாவது பிறர் நெருங்கி இதம் சொல்லுதற்கும் வாய்ப்புத் தராத கொடுமை. கூனி கைகேயி யின் திருமண நாள் தொட்டு அயோத்தியில்தான் இருந்து வருகிறாள். இன்று புதிதாகத் தோன்றினாற்போலக் கவி கூறுகிறார். கூனி இவ்வளவு நாளாக அங்கே யிருந்தாலும் உலக அரங்கிற்கு ஒரு பொருளாக இன்று தான் வெளிப் படுகிறாள். ஆதலால்தான் 'தோன்றினாள்' என்றார் என்க. 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலில் தோன்றாமை நன்று' என்ற தேவர் திருவாக்கை நோக்குக. (திருக்குறள்-236.) அயோத்தி மக்களின் இயற்கையான நற்குணமும் இன்றேற்பட்டுள்ள மகிழ்ச்சியும் தலை நிமிர்ந்துள்ளபோது ஒரு தீமை தோன்றுவது இயல் பன்றாதலால் இராவணன் செய்த தீமையின் விளைவே இது என்று கருதத் தோன்றுகிறது. இராவணன் மூன்றாம் முறையாக இங்கே பேசப்பட்டிருக்கிறான் (முன்பு பாடல் கள் 83, 101.)

மூன்று உலகுக்கும் துன்பம் !

462 தோன்றிய கூனியும்
துடிக்கும் நெஞ்சினள் ;
ஊன்றிய வெகுளியாள் ;
உளைக்கும் உள்ளத்தாள் ;

---

462. ஊன்றிய - ஆழப்பதிந்த. உளைக்கும்-வேதனைப் படுத்தும். கான்றுதல் - கக்குதல். நயனம் - கண். கதித்தல் - விரைதல்.

கான்றுளரி நயனத்தாள் ;
கதிக்கும் சொல்லினள் ;
மூன்றுஉல கினுக்கும் ஓர்
இடுக்கண் மூட்டுவாள். ௬

அவ்வாறு வெளிப்பட்ட கூனி (எப்படியிருக்கிறாள் ?) துடிக்கிற எண்ணத்தை யுடையவளாகவும், தீராதகோபங் கொண்டவளாகவும், வேதனைப்படுத்துகிற மனமுடைய வளாகவும், நெருப்பையே கக்குகிற கண்ணைக்கொண்ட வளாகவும், ஆத்திரத்தோடு விரைந்துதடுமாறும் சொல்லை யுடையவளாகவும், மூன்று உலகங்களுக்கும் மிகப் பெரிய துன்பத்தைக் கூட்டுவிப்பவளாகவும்,

(வி - ம்) இராமனுக்குப் பட்டம் என்ற செய்தி கேட்டவுடன் கூனி முறுகிஎழுந்தாள். பிறருக்குச் செல்வம் கிடைக்கிறது என்றால் கீழானதாமுடையார்க்கு அதனைப் பொறுக்கமுடிவதில்லை. பொறாமை பொங்கியது கூனிக்கு. வடுவில்லாத இராமன்மேல் வடுக்காண முற்பட்டாள். இதனை 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணிற் பிறர்மேல், வடுக்காண வற்றாகுங்கீழ்' என்பர். (திருக்குறள்-1079)

வில்லிலெழுந்த உண்டை

463 தொண்டைவாய்க் கேகயன்
தோகை கோயில்மேல்
மண்டினள் ; வெகுளியில்
மடித்த வாயினள் ;

---

463. தோகை - மயில் : மயில் போன்ற பெண். மண்டுதல் - இலாப நட்டந் தெரியாமல் மடமட வென்று போதல். பாணி - கை. உண்டை - மண்ணால் உருட்டப்பட்ட உண்டை. உண்டதனை - அடியுண்ட செயலை. உள்ளுவாள் - நினைத்தாள்.

பண்டைநாள் இராகவன்
பாணி வில்உமிழ்
உண்டைஉண் டதனைத்தன்
உள்ளத்து உள்ளுவாள். ௧௦

ஆதொண்டைக் கனி போன்ற வாயையுடைய மயில் போன்ற கைகேயியின் மாளிகையை நோக்கி மடமட வெனச் சென்றாள். கோபத்தினால் மடிபட்ட வாயை யுடைய அவள், முன்னொருநாள் இராமன் தன்கையிலுள்ள வில்லிலிருந்து (தன்னுடைய கூனல் முதுகில்) தெறித்த உண்டையால் அடி பட்ட நிகழ்ச்சியைத் தனது உள்ளத்தில் நினைத்துக்கொண் டாள்.

(வி - ம்) இராமன் சிறு பிள்ளையாக இருக்கும்போது மண் உருண்டைகளை வில்லிலிட்டுத் தெறித்து விளையாடுவான். கைகேயியின் வீட்டிலேயே பெரும்பாலு மிருக்கும்போது அங்கே நடமாடும் கூனியின் கூனலைக் குறிவைத் தடிப்பான். அது அவள் நெஞ்சில் உறுத்தி, இராமன் மேலே ஆத்திரத்தை உண்டாக்கி யிருந்தது. இராமனிடம் தோன்றிய இவ் வெறுப்பே இப்பொழுதேற்பட்ட கூனியின் கோபத்திற்கு அடிப்படையாகும். பெருங்கடலின் நடுவே சிறு மண் மேடு இருந்தாலும், பெரும்பாறையின் நடுவே சிறு வெடிப்பு இருந் தாலும் அதைத் துணைக்கொண்டு முளைத்துக் கிளைத்துப் பெருமரம் வளர்ந்துவிடும். அவ்வாறு கூனியின் சிறு கோபத் தைத் துணைப்பற்றித் தீவினை வளரத்துவங்கியது. தீமை தன்னலத்தை அடிப்படையாகக் கொண்ட தென்பது உண்டை உண்டதன் விளைவு என்று காட்டப்பட்டது. யாராக இருந்தாலும பிறர் நெஞ்சு வருந்தும்படி விளையாட் டாகச் செய்வதும் பிழையென்பது இராமன் உண்டை எறிந்த தன் விளைவினால் காட்டப்பட்டது. இவ்விரு பாடல்களும் வெகுளியாலேற்படும் மெய்ப்பாட்டை விளக்குவன.

கூனி கைகேயியை அணுகுதல்

464 நாற்கடற் படுமணி
நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப்
பவள வல்லியே
போற்கடைக் கண்அளி
பொழியப் பொங்குஅணை
மேற்கிடந் தாள்தனை
விரைவில் எய்தினள். கக

நான்கு கடல்களிலும் தோன்றும் மணிகளையணிந்த தாமரை மலர்கள் பூத்துளதோர் பாற்கடலில் தோன்றுகிற அலையின் நடுவில் கிடக்கும் பவளக் கொடியைப்போல, கடைக்கண்களிலே கருணை ததும்ப, சிறந்து விளங்குகிற படுக்கையின்மேல் உறங்குகிற கைகேயியின் அருகில் சென்றடைந்தாள்.

(வி - ம்) வெண்ணிறமான மெத்தையில் கைகேயி படுத்து உறங்குகிறாள். அவளது உடல் பாற்கடலில், அலைநடுவில் கிடக்கிற பவளக்கொடிபோல இருக்கிறது. அந்தப் பவளக் கொடியில் முகமும், கண்ணும், கையும், பாதமும் தாமரை மலர் பூத்திருப்பதைப் போன்றிருக்கின்றன. பல மணி பதித்த நகைகள் பொருந்தியிருக்கின்றன. மூடியிருக்கிற கண்களைப் பார்த்தால் கருணை பொழிகிற தோற்றம் பொலிகிறது. களங்கமற்ற கருணை யுள்ளமுடையார் தூங்கும் போது (முக்கியமாகக் குழந்தைகள்) புன்னகை தவழும் களங்கமற்ற முகமும் கண்ணும் பொலியும் என்பது காணத்

464. நாற்கடல் - நான்கு திசையிலுமுள்ள கடல். மணி - முத்து, பவளம், மரகதம், கோமேதகம், மாணிக்கம், வயிரம், வயிடூரியம், புட்பராகம், நீலம் எனும் ஒன்பது வகை மணிகள். நளினம் - தாமரை. வல்லி - கொடி. அளி - கருணை. பொங்கு - விளங்குகிற.

தக்கது. இவ்வாறுன தூய்மையும் அன்பும் பொலிய தூய பாற்கடலில் களங்கமற்ற அமைதியில் விளங்கும், அழகுத் தெய்வத்தை, துன்னரும் கொடிய பேயுருவம், தன் முழு உருவ வெளிப்பாட்டுடன் கொதித்தெழுந்து தீண்ட வருவதே போல வருகிறது.

காலைத் தொட்டாள்

465 எய்திஅக் கேகயன்
மடந்தை ஏடவிழ்
நொய்தலர் தாமரை
நோற்ற நோன்பினுல்
செய்தபேர் உவமைசால்
செம்பொற் சிறடி,
கைகளில் தீண்டினுள்
காலக் கோள்அனுள். கஉ

பின்னர் வரப்போகும் தீமையின் அறிகுறியைக் காட்டும் தீய கிரகத்தைப் போன்றவளாகிய கூனி, கைகேயியின் வீட்டினுள்ளே சென்று, இதழ் விரிந்து மெதுவாக மலர்கின்ற தாமரை மலரானது தான் செய்த தவத்தின் பயனுக உவமை சொல்லப்படும் பேறு பெறும்படி விளங்குகிற, தங்கத்தால் செய்யப்பட்டது போன்ற (கைகேயியினது) சிறிய பாதங்களைத் தடவினுள்.

(வி - ம்) கைகேயியின் பாதங்களுக்கு உவமை சொல்ல வேறு பொருள் இல்லை. தாமரைப் பூ மட்டும் ஒருவாறு உவமை சொல்லத் தக்கதுபோலிருக்கிறது. கைகேயியின்

465. ஏடு - பூஇதழ். நொய்து - மென்மை. நோற்ற செய்த. நோன்பு - தவம். சால் - பொருந்திய. செம் பொன் - தங்கம். சிறடி - சிறிய அடி. காலக் கோள் - பின்வரும் கெட்ட காலத்தை முன் கூட்டி அறிவிக்கும் கோள்.

பாதங்களுக்கு உவமை கூறும் பெருமை கிடைக்க, அந்தப் பூ எத்தனையோ ஆண்டுகள் தண்ணீரில் ஒற்றைத்தாளின் நின்று தவமியற்றி யிருக்கிறதல்லவா? தாமரைப்பூ தவம் செய்து கைகேயியின் பாதங்கட்கு உவமை சொல்லப்படும் பேறு பெறும்படியான பெருமை பெற்ற பாதங்களைப் பாம்பு பிடிப்பதைப்போலக் கூனி தன் கைகளால் பற்றினுள். தூங்கும் அரசியைத் தட்டி எழுப்புதல் இயலாது. கூவி அழைத்தலும் தகாது. எனவே கால் வருடுபவளைப்போல மெதுவாகப் பாதங்களைத் தடவினுள் என்க.

தெய்வக் கற்பினுள்

466 தீண்டலும் உணர்ந்த அத்
தெய்வக் கற்பினுள்,
நீண்டகண் அனந்தரும்
நீங்க கிற்றிலள்;
மூண்டெழு பெரும்பழி
முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை
சொல்லல் மேயினுள். கஅ

கூனியின் கைபட்டவுடனே உணர்ந்து விழிப்படைந்த சிறந்த கற்புடைய கைகேயி, விரிந்த கண்களிலுள்ள தூக்க மயக்கம் நீங்கினுளில்லை. (அதற்கு முன்னதாகவே) வேகத்தோடு எழுந்த பெரிய பழியை முடிக்க முன்னிற்கும் கொடிய தீவினையானது தூண்டிடக் கூனி உறுதிமொழிகளைச் சொல்லத் தொடங்கினுள்.

---

466. தெய்வக்கற்பு - குறைவின்றி நிறைந்த நல்லிலக்கணமெல்லாம் பொருந்திய கற்பு. அனந்தர் - உறக்கம். மூளுதல் - பற்றிப் பிடித்தல். கட்டுரை - உறுதி பயக்கும் உரை.

(வி - ம்) காலைத் தொட்டதும் உணர்ந்து விழித்தாள். என்றாலும், தூக்கமயக்கம் தெளியவில்லை. கூனிக்கும் சொல்வதில் தயக்கந்தான். ஆனால் அவளைக் கருவியாகக் கொண்டு பெரியதொரு பழியை முடிக்கத் தீவினை உந்தித் தள்ளுகிறது. கைகேயிக்கு உறுதி பயக்குமென்றுதான் கருதிச் சொன்னாள். ஆதலால் 'கட்டுரை' எனப்பட்டது. இவ்வுண்மை யுணர்ந்த இராமன் இந் நிகழ்ச்சியை 'விதியின் பிழை' என்றான் (பாடல் 640) கணவனிடத்து அணுவளவும் மாறுபடாத உள்ளன்புடைய பெருமகளாதலால் 'தெய்வக் கற்பினள்' என்றுரைக்கப்பட்டது. 'தேவி தூய சிந்தையும் திரிந்தது' என்று வருவதுங் காண்க. (பாடல் 488).

என்ன உறக்கம்!

467 அணங்குவாள் விடஅரா
அணுகும் எல்லையும்
குணங்கெடாது ஒளிவிரி
குளிர்வெண் திங்கள்போல்,
பிணங்குவான் பேர்இடர்
பிணிக்க நண்ணவும்
உணங்குவாய் அல்லை; நீ
உறங்குவாய் என்றாள். கச

துன்பத்தைச் செய்கிற கொடிய விடமுள்ள பாம்பு (இராகு) விழுங்குகிறவரையும், தன் குணத்தில் சிறிது கூடக் குறையாமல் ஒளியைப் பரப்புகிற குளிர்ந்த தூய மதியைப் போல, மாறுபடுகிற பெரிய துன்பக் கட்டம் நெருங்கி வரும்போதும் கவலைப்படுகிறாயில்லை; உறங்குகிறாய் என்றாள்.

---

467. அணங்கு - துன்பம். வாள் - கொடுமை. அரா - பாம்பு. பிணங்கு - மாறுபடுகிற. வான் - மிகுந்த. பிணிக்க - கட்டுப்படுத்த. உணங்குதல் - துன்பப்படுதல்.

(வி - ம்) சந்திரனைப் பூமிக்குத் தெரியாதவாறு இராகு குறுக்கிட்டு மறைக்கும் நிகழ்ச்சியைப் பாம்பு விழுங்கிய தென்று கூறுதல் புராணமரபு. களங்கமற்று விளங்கும் கைகேயியின் முகத்தை நோக்கும்போது, கூனியின் உள்ளமும் பாராட்டுகிறது. கைகேயியாகிய சந்திரனுக்கு அரவாக வந்திருப்பவள் கூனியேயாம். 'கைகளில் தீண்டினாள் காலக் கோளனாள்' என்று கூறினர் (பாடல் 465). ஆனால், அந்தக் கூனியாகிய இராகு, வேறொரு இராகு வந்து கைகேயியைப் பிடிக்கப் போகிறதென்று கூறுவது நோக்கத்தக்கது. இன்றிருக்கிற மிகப் பெரிய வாழ்வில் மாறுபடுகிற பெரிய துன்பத்தைப் 'பிணங்குவான் பேரிடர்' என்றார். வான், பேர் ஒரு பொருளில் வந்த மிகுதிப் பொருளன.

அருமையான மக்கள், துன்பமேது ?

468 வெவ்விடம் அனையவள்
விளம்ப, வேற்கணாள்
தெவ்அடு சிலைக்கைஎன்
சிறுவர் செவ்வியர் ;
அவ்அவர் துறைதொறும்
அறம்தி றம்பலர் ;
எவ்இடர் எனக்குவந்து
அடுப்பது ஈண்டுஎன்றாள். கஅ

கொடிய நஞ்சு போன்ற கூனி இவ்வாறு கூற, 'வேல் போன்ற கண்களையுடைய கைகேயி, 'எதிரிகளை ஒழிக்கும் வில்லைக் கையிலேந்திய என் மக்கள் செம்மையாக இருக்கின்

468. தெவ் - பகைவர். அடு - ஒழிக்கும். துறை - தமக்கென வகுக்கப்பட்ட கடமைகளைக் கொண்ட பகுதி. அறம் - கடமை. அடுப்பது - நெருங்குவது.

றனர் ; (நாட்டிலுள்ள மக்கள்) அவரவர் செய்யுஞ் செயல்களில் நெறிதவறினரில்லை. இந்நிலையில் எனக்குத் துன்பம் இங்கே எப்படி வரும் ?' என்றாள்.

(வி - ம்) இராமன் முதலிய நான்கு பிள்ளைகளும் வீரராகவும், ஒழுக்கமுடையவராகவு மிருக்கும்போது இடர்வர வழியில்லை யென்று கைகேயி உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருக்கிறாள். பிள்ளைகள் மட்டுமல்ல ; நாட்டு மக்கள் யாவரும் அவரவருடைய கடமைகளில் தவறாமல் வாழ்கிறார்கள். மக்களுக்குத் துன்பம் ஐவகையால் நேருமென்றனர். 'தன்னால், தன்பரிசனத்தால், ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர் தம்மால் ஆனபயம் ஐந்து' (பெரிய புராணம், நகரச். 36) அவ்வவர் என்றதற்கு அச்சிறுவர்கள் என்று பொருள் கண்டனர். 'செவ்வியர்' என்ற பிறகு 'அறந் திறம்பலர்' என்று கூறல் மிகை, அறந் திறம்புபவர் செவ்வியரல்லராதலால். ஆளுவோர் நெறியில் நிற்பவரானாலும் நாட்டு மக்கள் மாறுபட்டுத் தாம் செய்ய வேண்டிய கடமைகளில் தவறுவராயின் நாட்டில் குழப்பமே ஏற்படுமாதலால் மக்களும் செம்மையாகச் செயலாற்றி வாழ்ந்தனர் என்பதே கொள்ளத்தக்க பொருளாகும். மக்கள் தோன்றா எழுவாய். நான்கு குழந்தைகளும் தனித் தனித் துறைகளை ஏற்றிருந்தாரில்லை. நேர்மை யிருப்பினும் வலிமையின்றேல் ஆட்சி நடவாதாதலால் 'சிலைக்கை என் சிறுவர்' எனப்பட்டது. இந்நிலையில் எனக்கு எந்தவிதமான (இல்லாத விசித்திரமான) துன்பம் வரப்போகிறதென்கிறாய் என்ற ஏளனக் குறிப்பை 'எவ்விடர்' என்ற தொடர் விளக்கும். 'ஈண்டு' என்பது இந்த அயோத்தியில், இந்த மாலையில் என்ற உறுதியை விளக்குகிறது. கைகேயியின் கண்கள் கோபத்தோடு கூனியை உருத்துப் பார்த்தனவாதலின் 'வேற்கண்' எனப் பட்டது.

இராமனைப் பெற்ற எனக்குத் துன்பமா?

469 பராவரும் புதல்வரைப்
பயக்க, யாவரும்
உராவருந் துயரைவிட்டு
உறுதி காண்பரால்;
விராவரும் புவிக்கெலாம்
வேத மேஅன
இராமனைப் பயந்தஎற்கு
இடர்உண் டோ? என்றாள். கசு

புகழ்ந்து கூறிமுடிக்க முடியாத பிள்ளைகளைப் பெறுவதனால், பரந்து வருகிற துன்பத்தில் நின்றும் நீங்கி முழு நன்மையையும் (மக்கள்) அடைவார்கள். (பஞ்சபூதக்) கலப்பினாலே தோன்றுகின்ற இவ்வுலகுக்கெல்லாம் வேதத்தை ஒத்த இராமனை மகனாகப் பெற்ற எனக்குத் துன்பமும் உண்டாகுமா? என்றாள்.

(வி - ம்) சிறந்த பிள்ளையைப் பெற்றவர் துன்பம் நீங்கி நிலையான இன்பத்தைப் பெறுவதியற்கை. உலகத்துக்கே முழு இன்பத்தையும் தரவல்ல இராமனைப் பெற்ற எனக்கு ஏது துன்பம் என்று கைகேயி கேட்கிறாள். மூன்று தாயரும், நான்கு பிள்ளைகளையும் தங்கள் தங்கள் பிள்ளைகளாகவே கருதினார்கள். அந்நால்வருள் இராமன் சிறந்தவனென்பது யாவருமறிந்தது. இராமனைப் பிள்ளையாகப் பெற்றால் துன்பமில்லை என்பது உறுதிதானே. இந்த உறுதியை மேற்கொண்டிருக்கிறவரை எவருக்கும் துன்பமேற்படவில்லை. அறியத்

---

469. பராவ அரும் - துதித்தற்கு அருமையான. பயக்க - பெற்றதனால். உராவவரு - பரந்து வருகிற. உறுதி - பெற வேண்டிய பொருள். விராவ வரும் - கலப்பினாலே தோன்றுகிற.

தக்க அனைத்தையும், அறிய முடியாதவற்றையும் அடக்கி விளங்குவது வேதம். எனவே இராமனுக்கு வேதம் உவமை.

நீ கெட்டாய்! கோசலை வாழ்ந்தாள்!

470 ஆழ்ந்தபேர் அன்பினுள்
அனைய கூறலும்,
சூழ்ந்ததீ வினைநிகர்
கூனி சொல்லுவாள்;
'வீழ்ந்தது நின்நலம்;
திருவும் வீந்தது;
வாழ்ந்தனள் கோசலை
மதியினால்' என்றாள். கஎ

(இராமனிடத்து) அழுத்தமான பெரிய அன்பையுடைய கைகேயி அவ்வாறு கூறியவுடன், பக்கமெல்லாம் வளைந்து கொண்ட கொடிய வினையைப் போன்ற கூனி சொல்லத் தொடங்கி "உன்னுடைய நன்மை சாய்ந்தது. செல்வம் ஒழிந்தது. கோசலை புத்திசாலித்தனத்தால் வாழ்வு பெற்றாள்" என்று கூறினாள்.

(வி - ம்) இதுவரை கைகேயி இன்பத்தையும் புகழை யுமே கண்ணெதிரில் கண்டனுபவித்துக் கொண்டிருந்தாள். இனிமேல் துன்பமும் இகழ்ச்சியும் தொடர வருகின்றன என்பதை வலிய வந்து நாற்புறமும் சூழ்ந்து வளைத்துக் கொள்கிற தீவினையைப்போல என்பார் 'சூழ்ந்த தீவினை நிகர் கூனி' என்றார். இராமனைப்பற்றி மட்டும் சொன்னால் ஏறா தென்று கண்ட கூனி சக்களத்தியான கோசலையை நினைப் பூட்டிக்கொண்டு செல்கிறாள்.

---

470. வீந்தது - ஒழிந்தது.

ஊர் சிரிக்கிறது

471 ஆடவர் நகையுற,
ஆண்மை மாசுற,
தாடகை எனும்பெயர்த்
தையலாள்பட,
கோடிய வரிசிலை
இராமன், கோமுடி
சூடுவன் ; நாளைவாழ்வு
இதெனச் சொல்லினாள். கஅ

வீரர்கள் சிரிக்கும்படியும், ஆண் தன்மைக்கே பழுதேற்படும்படியும், தாடகை யென்ற பெயரையுடைய ஒரு பெண் இறக்கும்படி அறத்தை யழித்த வில்லையுடைய இராமன் சக்கரவர்த்தியாக முடிசூடப்போகிறான். நாளைக்கு வாழ்வு இது என்று சொன்னாள்.

(வி - ம்) பெண்ணைக் கொன்று வில்லறத்தையே கோணலாக்கியவன். வீரர்களெல்லாரும் சிரிக்கிறார்கள். வீரத்துக்கே இழுக்கேற்பட்டுவிட்டது. அப்படியான இராமன் நாளை மன்னனாகப் போகிறான் என்கிறாள் கூனி. 'தெவ்அடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர்' (பாடல் 469) என்று கைகேயி சொன்னதை இங்கே, 'ஆடவர் நகையுற...... கோடிய வரிசிலை இராமன்' என்று கூனி மறுப்பது நோக்கத்தக்கது. ஆனால் இப்பாடலிலுள்ள 'இராமன் கோமுடி சூடுவன் நாளை' என்ற வாக்கியம் மட்டுந்தான் கைகேயியின் காதில் புகுந்தது. தூய உள்ளமும், தூய ஆழமான அன்புமுடையளாதலால் நீரை நீக்கிப் பாலைக் கொள்ளும் அன்னமெனக் கைகேயி இருந்தாளென்பது பெறப்படும்.

---

471. கோடிய - நெறிதவறிய ; வளைந்த.

மாலைப் பரிசு

472 ஆயபேர் அன்பெனும்
அளக்கர் ஆர்த்தெழ,
தேய்விலா முகமதி
விளங்கித் தேசுற,
தூயவள் உவகைபோய்
மிகச் சுடர்க்கெலாம்
நாயகம் அனையதோர்
மாலை நல்கினாள். கக

உண்டாகிய மிகுந்த அன்பாகிய கடல் ஆரவாரித்துப் பெருகவும், தேய்வில்லாத சந்திரனைப்போன்ற முகமானது விளங்கி ஒளிபெறவும், களங்கமற்ற மனத்தையுடைய கைகேயி, மகிழ்ச்சி கரைகடந்து அதிகப்பட்டதனால் ஒளி யுடைய இரத்தினங்களுக்கெல்லாம் நாயகம் என்று சொல்லத் தகுந்த ஒரு இரத்தினமாலையைக் (கூனிக்குக்) கொடுத்தாள்.

(வி - ம்) தேய்விலா முகமதி என்பதைத் தேய்விலா மதி முகம் எனக்கொள்க. மதிக்குத் தேய்வுண்டு. தேய்விலா மதி எனவே வளர்ந்து முடிந்த முழுமதி பின்னர்த் தேய்வுறா திருப்பின் எவ்வாறோ அவ்வாறான முகம் என்க. தேசுற என்றதனால் மதிக்குள்ள களங்கம் இங்கில்லை என்பதாயிற்று. தூயவள் என்பதும் அது. கம்பர் கருத்தின்படி 'தேவி தூய சிந்தையும் திரிந்தது' என்ற 488-ம் பாடல்வரை, கைகேயி குறையென்பதே அணுவளவும் இல்லாத தூய்மையுடையவ ளாவாள். சுடர்க்கெலாம் நாயகம் என்பதற்கு ஒளிகள் யாவற்றுக்கும் தலைமைப் பேரொளியாக விளங்கும் சூரியன் எனினும் ஆம்.

---

472. அளக்கர் - கடல். தேசு - கவர்ச்சி செய்யும் மெருகு. உவகை - மகிழ்ச்சி. போய்மிக - வளர்ந்து முடிவின்றிச் செல்ல.

வாங்கி எறிந்தாள்

473 தெழித்தனள் ; உரப்பினள் ;
சிறுக்கண் தீஉக
விழித்தனள் ; வைதனள் ;
வெய்துஉ யிர்த்தனள் ;
அழித்தனள் ; அழுதனள் ;
அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தைஅக்
கொடிய கூனியே. ௨௦

(கொடுத்தவுடனே) அந்தக் கொடிய கூனி கத்தினாள் ; அதட்டினாள் ; சிறுத்துப்போன கண்களிலிருந்து தீப்பொறி உதிரும்படி விழித்தாள் ; திட்டினாள் ; வெப்பமான பெருமூச்சுவிட்டாள் ; தன் அமைப்பை அழித்துக்கொண்டாள் ; அழுதாள் ; அழகிய பொன் பொதிந்த மாலையை எறிந்து நிலத்தைக் குழியுண்டாகச் செய்தாள்.

(வி - ம்) நிச்சயமாக இச் சூழ்ச்சி பலிக்குமென்று முடிவு செய்துகொண்டு கூனி வந்தாள். பலிக்கவில்லை யென்பது மட்டுமல்ல ; என்றுங் காணாத மகிழ்ச்சியைக் கைகேயி அடைந்துவிட்டாள். இனி மகிழ்ச்சியைக் குறைத்து அதன் பின்னரே வேறு வழிக்குத் திருப்ப வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுவிட்டது. தோல்வி யல்ல, படுபாதாளத் தோல்வி ஏற்பட்டுவிட்டது. பெருந் தோல்வியில் கூனிக் கேற்பட்ட கோபத்தின் மெய்ப்பாடே இப்பாடல். அழித்தனள் என்பது தன் உடலின் நிலையைக் கலைத்ததுதான். பறட்டைத் தலை மயிரையும் உடுத்திருந்த ஆடையையும் பிய்த்துக் கொள்

473. வெய்து உயிர்த்தல் - கோபத்தில் தோன்றும் பெருமூச்சு.

வதைத் தவிர வேறென்ன ? பொன்மாலை என்றது இரத்தினங்களைப் பதித்துப் பொன்னால் பொதியப் பட்ட மாலையை.

உன்சக்களத்தியின் தாதிக்குத்தாதியா ?

474 வேதனைக் கூனிபின்
வெகுண்டு நோக்கியே,
'பேதைநீ ! பித்தி ! நிற்
பிறந்த சேயொடும்
மாதுயர் படுக ! நான்
நெடிதுஉன் மாற்றவள்
தாதியர்க்கு ஆட்செயத்
தரிக்கி லேன்'என்றாள். உக

துன்பத்தை யடைந்த கூனியானவள் பிறகும் கோபித்துக் கைகேயியைப் பார்த்து, நீ முட்டாள், நீ கிறுக்கி, உன்னிடத்தில் பிறந்த பிள்ளையோடு பெருந்துயரத்தை அடைந்துகொள். கடைசி வரை உன் சக்களத்தியின் தாதிக்குத் தாதியாக அடிமை வேலை செய்யும் பொருட்டு நான் இங்கே இருக்க மாட்டேன் என்றாள்.

(வி - ம்) இராமன் முடி சூடினால் ஆட்சி கோசலை வசமாகும். கோசலைக்குக் கீழாகக் கைகேயி இருக்க நேரிடும் என்பதை மறை முகமாக, 'மாற்றவள் தாதியர்' என்று கைகேயியையும் தாதியர் குழுவிற் சேர்க்கிறாள். அரசிக்குத் தாதியாக இருந்த நான் இனி அரசியின் தாதிக்குத் (கைகேயிக்கு) தாதியாக இருக்கமாட்டேன் என்றபடி.

---

474. வேதனை - துன்பம். பித்தி - சுவாதீனமற்றவள் (இராமன்பால் அன்புப் பித்துப் பிடித்தவள்). ஆட் செய்தல் - ஏவினைதைச்செய்தல். தரிக்கிலேன் - தங்கமாட்டேன்.

சிவந்தவாய்ச் சீதை

475 சிவந்தவாய்ச் சீதையும்
கரிய செம்மலும்
நிவந்தஆ சனத்துஇனி
திருப்ப, நின்மகன்
அவந்தனுய் வெறுநிலத்து
இருக்கல் ஆனபோது
உவந்தவாறு என்? இதற்கு
உறுதி யாதுஎன்ருள். உஉ

சிவப்பு நிறமான வாயையுடைய சீதையும், கரிய நிற முள்ள 'செம்ம'லும் (இராமனும்) உயர்ந்த இருக்கையில் இனிதாக வீற்றிருக்க, உன் மகன் பயனற்றவனுக வெறுந் தரையில் இருக்க நேர்ந்துள்ள பொழுது மகிழ்ச்சி யடைகிற காரணம் யாது? இதற்குப் பொருள் என்ன? என்ருள்.

(வி - ம்) கள்ளமில்லாத உள்ளமும், இனிய பேச்சு முள்ள சீதை வாய்திறக்கும் போதெல்லாம் மக்களைக் கவர்வது அவளுடைய வாயின் சிவப்பு நிறமாகும். அறிவு முதிராமல் வயது முதிர்ந்தவருக்கு இளைஞர்களின் செய்கை, தோற்றம் ஒவ்வொன்றும் பொருளாகப்படாது, எரிச்சலாக வும் தோன்றும். குறை சொல்ல முடியாதபோது, நிறை வையே குறைவாகக் கற்பித்துக் கூறவும் முற்படுவ தியற்கை. இந்த உணர்ச்சியில் 'சிவந்தவாய்ச் சீதை' என்கிருள். வாயைத் திறக்கத் தெரியுமன்றி வேறென்ன தெரியும் என்றவாறு. இராமனே, சிறந்த பெருமையுடையோன் அஃதாவது 'செம்மல்' என்று பலரும் கூறுகின்றனர். கைகேயியும் அப்படித்தான் கூறுகிருள். ஆதலால் அச்

475. செம்மல் - பெருமையிற் சிறந்தோன். நிவந்த - உயர்ந்த. அவந்தன் - பிறரால் வணங்குந் தகுதியற்றவன்.

சொல்லையே ஏளனக் குறிப்பில் கூனி எடுத்தாளுகிருள். ‘செம்மல்’ என்பது கூனியின் உண்மை உரையன்று. பரதனை ‘நின் மகன்’ என்றது இராமன் வேறொருத்தி மகன் என்பதைப் பிரித்துக் காட்டவேயாம்.

நீ பெற்றதால் பரதன் வீணுகிவிட்டான்

476 மறந்திலள் கோசலை
உறுதி ; மைந்தனும்
சிறந்தநல் திருவினில்
திருவும் எய்தினன் ;
இறந்திலன் ; இருந்தனன் ;
என்செய்து ஆற்றுவான் !
பிறந்திலன் பரதன் ; நீ
பெற்றதால் !’ என்ருள். உங

கோசலை செய்யவேண்டிய காரியத்தை மறக்கவில்லை ; அவள் மகனும், சிறந்த நல்ல செல்வத்திற் சிறந்த மன்னர் மன்னனுகும் செல்வத்தைப் பெற்றுவிட்டான். (பரதனே) சாகவில்லை, இருக்கிருன். எதைச் செய்து இந்தத் துயரத்தை ஆற்றிக் கொள்ளப் போகிருன். நீ பெற்றதனுல், பிறந்தும் பிறவாதவனுகிவிட்டான் என்ருள்.

(வி - ம்) கோசலை சமயம் பார்த்துக் கொண்டேயிருந்து வாய்த்தபோது காரியத்தைச் சாதித்துக் கொண்டாள் ; எவ்வளவோ நல்ல செல்வங்கள் உலகில் உண்டு ; அவைகளுக்கெல்லாம் பெரிய சக்கரவர்த்திப் பதவியை இராமன் பெற்றுவிட்டான் ; இதைக் கேட்டதும் பரதன் செத்திருக்க வேண்டும். அவன் உயிர் போகவில்லை ; இருக்கிருன்.

---

476. திருவினில் திரு - செல்வத்திலெல்லாம் மேலான செல்வம்.

பெற்ற தாய் இப்படி இருந்தால் அவன் செய்ய என்ன இருக்கிறது? என்று வருந்திக் கூறினுள். மேலும், மன்னர் வரிசையில் பரதன் எண்ணப்படான் என்பதால் 'பிறந்திலன்' என்ருள். உண்மை என்னவென்ருல் பட்டம் கட்டுகிற செய்தி மற்றைய மக்கட்குத் தெரிந்த பிறகே கோசலேக்குத் தெரிந்தது (பாடல் 448). ஆனுல், கூனியோ கோசலே திட்டமிட்டு அரசைப் பெற்ருள் என்று கூறுகிருள்.

அன்று அனுப்பினது இன்று தெரிகிறது

477 பாக்கியம் புரிந்திலாப்
பரதன் தன்னைப்பண்டு
ஆக்கிய பொலங்கழல்
அரசன் ஆணையால்
தேக்குயர் கல்அதர்
கடிது சேணிடைப்
போக்கிய பொருள்எனக்கு
இன்று போந்ததால். உச

தங்கத்தால் செய்யப்பட்ட கழலே யணிந்திருக்கிற தயாத மன்னன் (அரசாள்வதற்கு) நல்வினை செய்யாத பரதனை முன்னமேயே உத்தரவிட்டு, தேக்கு மரங்கள் உயர்ந்துள்ள மலங் காட்டு வழியில் அவசரமாக நீண்ட தூரத்திற்குப் போகும்படி செய்த தந்திரம் எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. (என்ருள்)

(வி - ம்) இராமனைக் காட்டிலும் பரதன் ஒன்றிலும் குறைந்தவனல்லன்; ஆனுல் அதிட்டமில்லே என்கிருள். பெற்ற தாய் சரியாக இல்லே என்பதைத்தான் கைகேயிக்குச்

---

477. பண்டு - முன்பு. பொலம் - பொன். உயர்கல் - மலே. அதர் - வழி. சேண் - தூரம். போந்தது - விளங்கிற்று.

சுட்டிக் காட்டுகிருள். முன் பாடலில் கோசலைமேல் பழி சொன்னுள். இங்கே அரசன் மேலே பழி சுமத்துகிருள்.

தந்தையும் பாவி! தாயும் பாவி!

478 மந்தரை பின்னரும்
வரைந்து கூறுவாள்:
அந்தரம் தீர்ந்துஉலகு
அளிக்கும் நீரினுல்,
தந்தையும் கொடியன்; நற்
ருயும் தீயளால்;
எந்தையே! பரதனே!
என்செய் வாய்என்ருள். ௨௫

கூனி மறுபடியும் கைவிட்டவளைப்போலக் கூறுவாளாகி, நடுவு நிலை தவறி உலக ஆட்சியை (இராமனிடத்துக்) கொடுக்கிற தன்மையினுலே தகப்பனும் கொடியனுனன்; பெற்ற தாயும் தீயவளானுள். என் அப்பனே! பரதா! என்ன செய்யப் போகிருய்? என்ருள்.

(வி - ம்) முந்திய பாடல் வரை, கைகேயியை எப்படியாவது திருப்பி விடலாமென்று தான் பலபடியாகக் கைகேயியை நோக்கி எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். கைகேயி அசைவதாக இல்லை. எனவே கூனிக்கு நம்பிக்கை போய்விட்டது. செய்வதின்னதென்று தெரியாமல் புலம்பத் தொடங்கினுள். தயரதன் உயிருடனிருக்கும் போதே பரதனைக் கேகயநாட்டிற் கனுப்பிவிட்டு என் இராமனிடம் அரசைக் கொடுக்க முற்பட்டான் என்ற ஐயம் கூனிக்கு ஏற்படுகிறது. அதை அழுத்தப்படுத்தி நடுநிலை தவறினுன் தந்தை என்ருள். இந்த அநீதியைக் கண்டும் தாய் சரி என்

478. வரைதல் - கைவிடுதல். அந்தரம் - நடுவுநிலைமை. அளித்தல் - கொடுத்தல். நீர்மை - தன்மை. நற்ருய் - பெற்றதாய்.

கிறாளே ! இதனால் பரதனின் கதி என்ன ஆவது என்று கூனி கதற முற்பட்டாள்.

சொன்னாலும் கேட்கவில்லை, தன்னாலும் தெரியவில்லை

479 அரசர்இல் பிறந்து, பின்
அரசர் இல்வளர்ந்து,
அரசர்இல் புகுந்து, பேர்
அரசி ஆன நீ !
கரைசெயற்கு அருந்துயர்க்
கடலில் வீழ்கின்றாய் !
உரைசெயக் கேட்கிலை !
உணர்வி லோய் ! என்றாள். உசு

அரசர் குலத்தில் பிறந்து, பிறகு அரசர் வீட்டில் வளர்ந்து, அரசர் வீட்டில் வாழ்க்கைப்பட்டு, பெரிய அரசியான நீ கரை காணுதற்கு இயலாததான துயர்க் கடலில் விழுகிறாய். சொன்னாலும் கேட்கிறாயில்லை. புத்திகெட்டவளே ! என்றாள்.

(வி - ம்) கைகேயி மாலையை வழங்கியது முதல் வாய் பேசாதிருக்கிறாள். கூனி பலப்பல வகையாகக் கூறிப் பார்த்தாள். கடைசியில் வசமிழந்து அரசன் கொடியவனென்றும், கைகேயி தீயவள் என்றும் கூறியதோடு நேரே உணர்விலோய் ! என்றும் திட்ட முற்படவே கைகேயியின் பொறுமை கலங்கிவிட்டது. கோபமே வந்துவிட்டது. அரசர் அரசர் என்று பல வகையில் கூறுவது கூனியின் ஆத்திரத்தை விளக்கும். தன்னாலும் தெரியவில்லை ; சொன்னாலும் கேட்கவில்லை என்கிறாள். சொல்லச் சொல்லக் கேட்டுக்கொண் டிருந்த படியால், கைகேயி அரசி என்பதையும், தான் வேலைக்காரி என்பதையும் உணர்ச்சி வேகத்தில் மறந்துவிட்டாள் கூனி என்க.

புல்லில் கொட்டிய அமுதம்

480 கல்வியும் இளமையும்
கணக்கில் ஆற்றலும்
வில்வினை உரிமையும்
அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும்
பரதற்கு ஏயது
புல்இடை உகுத்தஅமு
தேயும் போல்என்றாள். உஎ

படிப்பும், இளமைப் பருவமும், அளவில்லாத வல்லமையும், வில் தொழிலில் பெற்றுள்ள திறமையும், அழகும், வீரமும், இன்னும் அளவு கூறமுடியாத சிறந்த குணங்களும், பரதனுக்குப் பொருந்தியுள்ள தானது, புல்தரையில் கொட்டிய அமுதத்தை ஒக்கும் என்றாள்.

கண் சிவக்கிறது

481 *வாய்க யப்புற மந்தரை
வழங்கிய வெஞ்சொல்
காய்க னற்றலை நெய்சொரிந்
தெனக்கதம் கனற்றக்
கேக யற்கிறை திருமகள்
கிளர்இள வரிகள்
தோய்க யற்கண்கள் சிவப்புற
நோக்கினள் சொல்லும். உஅ

---

480. ஆற்றல் - வல்லமை. வில்வினை - வில்வித்தை. உரிமை - தகுதி. எல்லையில் - வரம்பு கூற முடியாத. உகுத்தல் - கொட்டுதல். எயும் - ஒக்கும்.

481. கயப்பு - கசப்பு. கனல் + தலை = கனற்றலை - நெருப்பில். கதம் - கோபம். கனற்ற - கொதிக்க. கேகயர் - கேகய தேயத்தின் மக்கள். இறை - அரசன். கிளர் - விளங்குகிற. வரிகள் - கண்ணின் வெள்ளை விழியில் விழுந்திருக்கும் சிவப்பு, கருப்பு நிறமுள்ள இரேகைகள். தோய் - பொருந்திய.

வாய் கசப்படையும்படி கூனி வீசிய கொடுஞ் சொற்கள், காய்கிற நெருப்பில் நெய்வார்த்த மாதிரியாகிக் கோபத்தை மிகுவிக்க, கேகய மன்னனின் செல்வ மகளான கைகேயி, விளங்குகிற சிறிய செவ்வரிகள் படர்ந்த கெண்டை மீன் போன்ற கண்கள் சிவக்கக் கூனியைப் பார்த்துச் சொல்கிறாள்.

(வி - ம்) வாய் கயப்புறுதல்—காய்ச்சலடித்துச் சன்னி கண்ட நிலை. வாய் கசப்படைந்துவிட்டால் எந்தச் சுவையும் தெரிவதில்லை. கசப்பு ஒன்றே தெரியும். அப்படியாய் விட்டாள் கூனி என்பது. கைகேயிக்குக் கோபம் வந்தது. என்றாலும், மனத்திலுள்ள தூய்மையைக் கண்கள் கடுங் கோபத்திலும் காட்டின என்பதை, திருமகள் கிளர் இளவரிகள் தோய் கயற் கண்கள் என்றது உணர்த்தும்.

மூடமே! என்ன சொல்கிறாய் ?

482 எனக்கு நல்லையும் அல்லை; நீ
என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை; அத்
தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை; வந்து
ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை!
மதியிலா மனத்தோய்! உஉ

நீ எனக்கு நன்மை செய்பவளும் அல்ல; என் மகன் பரதனுக்கு நன்மை செய்பவளுமல்ல; அரசு நெறியை உணர்ந்தால் உனக்கு நன்மை செய்பவளுமல்ல; பழைய வினைவந்து தூண்ட உன் மனத்தில் நல்லன என்று தோன்றியதைச் சொன்னாய். பகுத்தறிவிலா மனம் உடையவளே!

---

482. தருமம் - நீதி : சட்டம். மனக்கு - மனத்திற்கு. மதி - பகுத்தறிவு.

(வி - ம்) எனக்கு நன்மை தேடுபவளைப் போலவும் என் மகனுக்கு நன்மை செய்பவளைப் போலவும் பேசுகிறாய். உன் பேச்சைக் கேட்டு நடந்தால் பழியும் பாவமுந்தான் வரும். எனவே எங்களுக்கு நன்மைசெய்பவளல்ல. சட்டத்தை நோக்கினால் உனக்கும் நன்மை ஏற்படாது. நீ நல்லவளாகத் தான் இருந்தாய். ஏதோ ஊழ்வினை வந்து உன்னை இப்படிச் சொல்லச் செய்கிறது என்கிறாள். மதியிலா மனத்தில் தோன்றும் நல்லன சொல்லினை என்பது நகைச் சுவைக்கு உறுப்பு. இதுகாறும் நான்கு பிள்ளைகளையும் தன் மக்கள் என்று பேசிவந்த கைகேயியின் நா இங்கே 'என் மகன் பரதன்' என்று தடுமாறுகிறது. கூனியின் விடா முயற்சி காரணமாக ஏற்பட்டது இது. மனம் மொழி மெய் என்ற வரிசையில் தீமை தோன்றி வளர்வது இயல்பு. மனங்கெட்டுப் பின்னர் சொல் தோன்றிச் செயற்படுதல் கெட்டமனமுடை யார்க்கு ஆவதாம். இங்கே கைகேயியின் மனம் தூய்மை யாகவே இருக்கிறது. ஆனால் நாத் தடுமாறிவிட்டது.

நேரில் நில்லாதே போ

483 போதி என்எதிர் நின்று; நின்
புன்பொறி நாவைச்
சேதி யாதுஇது பொறுத்தனென்;
புறம்சிலர் அறியின்
நீதி அல்லவும் நெறிமுறை
அல்லவும் நினைந்தாய்
ஆதி! ஆதலின் அறிவிலி
அடங்குதி என்றாள். ௩௦

483. போதி - போவாய். புன்மை - அற்பத்தனம். பொறி - நெருப்புப் பொறி (அதைப் போன்ற சொல்). சேதித்தல் -அறுத்தல். ஆதி - ஆவாய்.

என் எதிரே நின்றும் (விலகிப்) போய்விடு. உன்னுடைய அற்பத்தனமான பேச்சைச் சிதறுகிற நாக்கை அறுக்காமல் இக்குற்றத்தைப் பொறுத்துக்கொண்டேன். வெளியிலுள்ள (யாராவது) சிலர் அறிந்தால், நீதிக்கு எதிராகவும் அரசுநெறிச் சட்டத்திற்கு எதிராகவுமுள்ள செயலை நினைந்த (குற்றத்திற்கு) ஆளாவாய்! ஆதலின் அறிவில்லாதவளே அடங்கிக் கிட என்றாள்.

(வி - ம்) அறிவும் அடக்கமும் ஒழுக்கமும் நிரம்பியவள் கைகேயி என்பதைக் கடுங்கோபத்தில் எழுந்த இப்பாடல்களால் அறியலாம். 'ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்' (திருக்குறள் 139).

அஞ்சி அகலவில்லை

484 அஞ்சி மந்தரை அகன்றிலள்
அம்மொழி கேட்டு
நஞ்சு தீர்க்கினும் தீர்கிலாது
அது நலிந்து என்ன;
'தஞ்ச மேஉனக்கு உறுபொருள்
உணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலி' என்று அடிமிசை
வீழ்ந்து உரை வழங்கும். ௩க

நஞ்சை உண்டவர்க்கு மாற்று மருந்து கொடுத்து ஒழிக்க முற்படினும் அது நீங்காது வருத்தப் படுத்தினாற் போலக் கைகேயியின் மொழி கேட்டும், பயந்து கூனி விலகிச் செல்லவில்லை. (எனக்குப்) பற்றுக்கோடாக இருப்பவளே! வஞ்சிக்கொடிபோன்றவளே! உனக்குப் பொருந்திய நல்லனவற்றை எடுத்துச் சொல்வதில் நின்றும் தவிரமாட்டேன்

---

484. நலிந்து - வருத்தியது.

என்று கூறிக் கைகேயியின் காலில் விழுந்து சொல்லத் தொடங்கினுள்.

(வி - ம்) நஞ்சை உண்டு நேரமாகிவிட்டால் உடல் முழுமையும் பரவிவிடும். பின்னர் மருந்து வேலே செய்யாது. நஞ்சு தன் வேலேயைச் செய்துகொண்டிருக்கும். அது போலக் கூனியின் நிலேயிருந்தது. நீ என்ன செய்தாலும் உன்னே விடமாட்டேன்; நீதான் எனக்கு அடைக்கலம் என்கிருள் கூனி. பேசாதிருந்த கைகேயி பேச முற்பட்டதும், 'என் மகன் பரதன்' என்று சொல்லியதும் கூனிக்கு வாய்ப்பளித்தன என்க.

செல்வம் வந்தால் புத்திமாறும்?

485 அறம்நி ரம்பிய அருளுடை
அருந்தவர்க் கேனும்,
பெறல்அ ரும்திருப் பெற்றபின்
சிந்தனே பிறிதாம்;
மறம்நி னேந்துஉமை வலிகில
ராயினும், மனத்தால்
இறலு றும்படி இயற்றுவர்
இடையரு இன்னல். ௩௨

அற வழியிலே தலே சிறந்து அருள் நிறைந்த அரிய முனிவராக இருந்தாலும், பெறுதற்கு அருமையான செல்வத்தைப் பெற்ருல் எண்ணம் வேறுபடுவது இயல்பு. அவ்வாருக, பகையென்று எண்ணி உங்களேத் துன்புறுத்தாவிட்டாலும் மனம் ஒடியும்படி தொடர்ந்த துன்பத்தை உண்டாக்குவர்.

---

485. பெறல் அரும் - பெறுதற்கு அருமையான. சிந்தனே - எண்ணம். மறம் - பகை. நலிகிலர் - துன்புறுத்தமாட்டார். இறல் - ஒடிவு. இன்னல் - மனவருத்தம்.

(வி - ம்) கூனி தன் நினைவு பெற்றுச் சமாளிக்கிறாள். விட்டுக் கொடுத்துப் பேச முற்படுகிறாள். புதிய ஆட்சியி லுள்ள எல்லாருமே உன்னோடும், உன் மகனோடும் பகை கொண்டு உங்கள் உடலைத் துன்புறுத்த மாட்டார்கள் என்று லும், அவர்கள் செய்யும் செயல்கள் உன் மனத்துக்குத் துன்ப மாகத்தான் முடியும் என்றாள். உன் கையில் (அரசன் மூல மாக) இருந்த ஆட்சி அவள் கைக்குப் (சட்டப்படி) போவ தால் அரசியல் துறையினர் அவ்வளவு பேரும் அவளை நோக்கியே நிற்பர். மக்களும் அவ்வாறே யாவர். பிறருக்கு ஏதாவது செய்வதானால் அவள் கருத்தின்வழியே எதிர் நோக்குவர். இது உலகியற்கை.

அவள் தந்தால் உண்டு

486 **புரியும் தன்மகன் அரசெனில்**
பூதல மெல்லாம்
விரியும் சிந்தனைக் கோசலைக்கு
உடைமையாம்; என்றால்,
பரியும் நின்குலப் புதல்வற்கும்
உனக்கும்இப் பார்மேல்
உரிய தென்? அவள் உதவிய
ஒருபொருள் அல்லால். ௩௩

தன்மகன் அரசுபுரிகிறான் என்றால் பூவுலகெல்லாம் (அடையவேண்டும் என்ற) பேராசைகொண்ட கோசலைக்குச் சொந்தச் சொத்தாகும். அப்படியானல் இரங்கப்படத்தக்க நின்னுடைய மேன்மையான மகனுக்கும், உனக்கும் இந்நில வுலகத்தில், அவள் பார்த்துத் தருகிற பிச்சைப் பொருளல் லாமல் சொந்தமாக இருப்பது என்னை ?

---

486. விரியும் சிந்தனை - பேராசை. பரிதல் - இரக்கப்படுதல்.

(வி - ம்) இராமன் அரசனுனல் சட்டப்படி உரிமை கோசலை கைக்குப் போய் விடும். அரசன் வனத்துக்குச் சென்றுவிடுவான். பரதன் இராமனின் குடிகளில் ஒருவன் தான். நீயும் அப்படித்தான். இப்பொழுதோ மன்னன் நீங்காமல் இங்கேயே இருக்கிருன். மந்திரி முதலிய யாவரும் இங்கே நாள்தோறும் வருகின்றனர். நீதான் அரசை நடத்துகிருய் என்று கருதும்படி சொன்னதெல்லாம் எளிதாக நிறைவேறுகிறது. அரசன் காடு நோக்கினுல் இந்தச் செல்வாக்கு ஒழிந்துபோகும். பிறகு இத்தனையும் கோசலையின் அரண்மனையில்தானே நடைபெறும்? பின்னர் நீயும், நின்மகனும் இரண்டு மனிதர்களாக இருக்கலாம். உங்களுக்கென்று உடைமைப் பொருள் சட்டப்படி என்ன இருக்கிறது? அவள் பார்த்து ஏதாவது உத்தரவிட்டால் உண்டு என்ற பொருளையெல்லாம் அடக்கி நிற்கும்படி 'பூதல மெல்லாம் கோசலைக் குடைமையாம்' என்றும், 'அவள் உதவிய ஒரு பொருளல்லால், பார்மேல் உங்களுக்கு உரியதென்?' என்றுங் கூறினுள். கண்டவர்கள் பரிதாபப் படும்படி பரதன் நிலை ஆகிவிடுமென்பாள் 'பரியும்' என்ருள் என்க.

இல்லை என்பாயா ? உயிரை விடுவாயா ?

487 தூண்டும் இன்னலும் வறுமையும்
தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துஉனை இரந்தவர்க்கு,
இருநிதி அவனை
வேண்டி ஈதியோ? வெள்குதியோ ?
விம்மல் நோயால்
மாண்டு போதியோ ? மறுத்தியோ ?
எங்ஙனம் வாழ்தி ? ௩௪

487. இன்னல் - மனத்துன்பம். துயர் - உடல் வருத்தம். இருநிதி - சங்கநிதி பதுமநிதி. வெள்குதல் - வெட்கப்படுதல்.

(இரக்கும்படி) பிடித்துத் தள்ளுகிற மனத்துன்பமும், வறுமையும் உடையவராய் மெய்வருந்தி இங்கே வந்து உன்னை நோக்கிப் பிச்சை கேட்பவருக்கு இரண்டுவகைப்பட்ட செல்வத்தை அவளைக் கேட்டு வாங்கிக்கொடுக்கப் போகிறாயா? வெட்கப்பட்டு அடங்கப் போகிறாயா? வாய் பேச வராமல் விம்மி விம்மி அழுது சாகப்போகிறாயா? அல்லது (அப்பால் உயிரை வைத்துக்கொண்டு) இல்லையென்று சொல்லப் போகிறாயா? எப்படி வாழ்வாய்?

(வி - ம்) இரப்பது இழிவான காரியம். இரப்பவரும் இரப்பது இழிவென்று தெரிந்திருக்கின்றனர். ஆனால் துன்பமானது அவரை இரக்கும்படி பிடித்துத் தள்ளுகிறபடியால் 'தூண்டும் இன்னலும்' எனப்பட்டது. துன்பமும் வறுமையும் நீங்குமென்று பலநாள் எதிர்பார்த்தும் நீங்காமல், நீங்குமென்ற நம்பிக்கையும் இழந்துபோய்விடுவதாலேயே இரக்கமுற்படுகின்றனர் என்பதை, 'தொடர்தர' என்பதும், வறுமையால் உடலும் நடக்க முடியாமல் நலிவுற்றிருப்பர் என்பதனை, 'துயரால் வந்து' என்பதும் குறிப்பனவாம். இரவலர் வந்து கேட்பதைக் கொடுக்க உனக்கு இடமில்லை; உணவு நோக்கி வரினும், சிபாரிசு நோக்கிவரினும் நீ அவளுக்குச் சொல்லி அல்லது மந்திரி முதலியோர் அவளிடம் கூறி உத்திரவு பெற்றுத்தானே செய்ய இயலும். அப்படி நீ கேட்டு வாங்கிக்கொடுக்கப் போகிறாயா? என்று தொடங்கினாள் கூனி. ஈ என உன்சக்களத்தியிடம் இரக்கப்போகிறாயா என்ற துன்பகரமான கேள்வி வண்மைக் கேகயன் மகள் காதில் புகுந்தது. கேட்க வெட்கப்பட்டுத் தலைகுனிந்து நிற்பாயா? அவள் இல்லையென்று சொல்லிவிட்டால் அழுது செத்துப் போவாயா? அதற்கப்பாலும் உயிருடனிருந்து 'இல்லை' என்ற சொல்லைச் சொல்வாயா? என்றாள். 'சாதலின் இன்

ஞதனில்லை இனிது அதூஉம், ஈதல் இயையாக்கடை' (திருக்குறள் 230) இரத்தல் இழிவுதான். ஆனல் ஈ என இரந்து பிறருக்கு அதைக் கொள் எனக் கொடுத்துவிட்டால் அதனல் இழிவு மிஞ்சாது. 'கோசலையைக்கேட்டு அவள் இல்லையென்ருல் இரப்பவர்க்கு இல்லை எனல் வேண்டுமே என் செய்வாய்!' என்ற சொல் கைகேயியின் பரிசுத்தமான வண்மையுள்ளத்தைக் கலக்கிவிட்டது. 'ஈ என இரத்தல் இழிந்தன்று அதனெதிர் ஈயேனென்றல் அதனினும் இழிந்தன்று' (புறம் 204). இல்லை என்ற சொல்லை உபயோகிப்போர் பின்னர் உயிர் சுமந்திருக்கலாமன்றி, சிறப்புற்ற புகழ்வாழ்வு வாழமுடியாதென்பதை நினைவூட்ட 'எங்ஙனம் வாழ்தி' என்ருள். வாழ்வென்பது புகழ்பெற இன்புற்றுக் குறைவற்று வாழ்தலாம். உயிர் சுமந்திருத்தலன்றென்க.

தூய சிந்தை திரிந்தது

488 தீய மந்தரை இவ்உரை
செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது
சூழ்ச்சியின்; இமையோர்
மாயையும், அவர் பெற்றுள
வரம்உண்மை யாலும்,
ஆய அந்தணர் இயற்றிய
அருந்தவத் தாலும். ௩௫

கொடிய கூனி இந்தச் சொற்களைச் சொன்னவுடன், தேவர்கட்கு ஆக்கந்தரும் இயற்கை நிலையும், அவர் பெற்றுள்ள வரமும் உண்டு ஆதலாலும், ஆராய்ச்சியையுடைய அந்தணர்கள் செய்துள்ள அரிய தவத்தின் பயனலும்

---

488. சூழ்ச்சி - மனத்தடுமாற்றம். திரிதல் - மாறுபடுதல். உண்மை - உளவாம் தன்மை. ஆய - ஆராய்தலையுடைய.

கைகேயியின் தூய சிந்தை இயற்கையினின்றும் தடுமாறி மாறுபட்டது.

(வி - ம்) நேர்மையினின்று அணுவளவும் மாறாத தேவியின் தூய மனமும் தடுமாறிவிட்டது. இதற்குக் காரணம் தேவர் வரமும் அந்தணர் தவமும் ஆம். அந்தணர்—அழகிய கருணை உடையவர்; அறந்தவறாதவர் என்க. 'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந் தண்மை பூண்டொழுகலான்' (திருக்குறள் 30). கைகேயி சிறந்தவள் என்பதையும் பால்போன்ற மனமுடையாளென் பதையும் 'தேவி' 'தூய' என்ற சொற்கள் உணர்த்தும். சிந்தையும் என்பதிலுள்ள உம்மை, பிழையான வழியில் ஈடுபடாத உறுதியான மனமுடையாள் என்பதை வலி யுறுத்தும். இப்பொழுதும் இயல்பாகத் திரியவில்லை; இயற் கையும் வரமும் தவமும் சேர்ந்து புரட்டிவிட்டன என்பார் 'சூழ்ச்சியின் திரிந்தது' என்றார். இதுவரை அரக்கருக்கு உதவியாக இயற்கை இருந்து வந்தது. இனி, தேவருக்கு உதவியாக இயற்கை திரும்பும் சூழ்நிலை ஏற்பட இருப்பதைத் 'தேவர் மாயையும்' என்றார். மாயை என்றது உலகை ஆக்கும் மூலப் பிரகிருதியை.

"காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தங்கண்டாம், பாரில் மண் திரிகை பண்ணு மவன்முதல் துணைநிமித்தம், தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தியாக, ஆரியன் குலால னய்நின் றாக்குவன் அகில மெல்லாம்" (சிவஞான சித்தியார் 38). வரமும் என்பதன் உம்மை தொக்கது. தேவர் மாயையும் என்றதற்குத் தேவரின் மாயச்செயல் என்று பொருள் கண்டனர். மாயம் செய்பவர் தேவரல்லர், அரக்கரே! ஆதலின் அவ்வுரை பொருந்தாதென்க.

நல்ல அருளைக் கைவிட்டாள்

489 அரக்கர் பாவமும், அல்லவர்
இயற்றிய அறமும்,
துரக்க நல்அருள் துறந்தனள்
தூமொழி மடமான்;
இரக்கம் இன்மைஅன் றோஇன்றுஇவ்
உலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப்
பருகுகின் றதுவே. நகூ

அரக்கர்கள் செய்த தீவினையும் அவரல்லாத மற்றை யோர் செய்த நல்வினையும் ஏவ, நல்ல கருணையை (கைகேயி) இழந்தனள். தூய மொழியையுடைய இளமான் போன்ற (அக்) கைகேயியினது இரக்கமற்ற தன்மையினாலல்லவா இவ் வுலகத்தவர் இன்றைக்கும் இராமனுடைய விரிந்து நிற்கும் நிலைத்த புகழாகிய அமுதத்தை அருந்துகின்றனர்.

(வி - ம்) முன் பாடலில் இமையோரும் அந்தணரும் கொண்ட வரத்தாலும் தவத்தாலும் மனந்திரிந்தது. இப் போது அரக்கர் தீவினையும், இமையோரும் அந்தணருமல்லாத ஏனையோரின் நல்வினையும் சேர்ந்து அவள் உள்ளத்தில் பெருகியிருந்த அருளை ஓட்டிவிட்டன. கைகேயி அருளோடு பொருந்தி யிருப்பாளானால் இராமனுடைய கதை முடிசூடி அரசாண்டதோடு முடிந்திருக்கும். தியாகமும் தவமும் அறமும் வெளிப்படா. இராம கதையே உருப்பெற்றிராது. அவள் இரக்கமற்றவளாகி விட்டபடியாலேயே கதை அழியாத புகழுக்கிலக் காயிற்றென்க. காவியம் செய்ய முற்பட்டோருக்

---

489. துரக்க - ஏவ. தூ - தூய. மடம் - இளமை. பரக்கும் - விரிந்துநிற்கின்ற. தொல்புகழ் - பழங்காலமாகத் தொடர்ந்து நிலை பெற்றிருக்கிற புகழ். புகழ் அமுது - புகழாகிய அமுதம்.

கெல்லாம் முதலிலக்காக நின்றது இராம கதை. காவிய மாகவும் ஓவியமாகவும் போற்றிப் புகழப்பட நிற்பதற்குக் காரணமாக இருந்தது கைகேயியின் இரக்கமற்ற நெஞ்சமே யாகும். இங்கே 'தீமையும் நன்மையை உண்டாக்கும்' என்ற உண்மை விளக்கப்படுகிறது. இராமபக்தி நித்தியமான இன்பத்தை அளிக்கவல்லதென்பார் 'அமுதம்' என்றார்.

என் மகனுக்கு முடிசூட்ட வழிசொல்!

490 அனைய தன்மையள் ஆகிய
கைகயன் அன்னம்,
வினைநி ரம்பிய கூனியை
விரும்பினள் நோக்கி,
'எனைஉ வந்தனை! இனியைஎன்
மகனுக்கும்! அனையான்
புனையும் நீள்முடி பெறும்படி
புகலுதி!' என்றாள். நஎ

அந் நிலையடைந்த கைகேயி திறமை மிகுந்த கூனியை விருப்பத்துடன் பார்த்து, 'என்னிடத்தில் மிக்க விருப்பம் வைத்திருக்கிறாய்; என்னுடைய மகன் பரதனிடத்திலும் இனிய அன்புடையவளா யிருக்கிறாய்; அப்பரதன், அலங்கரிக்கப்பட்ட நீண்ட முடியைச் சூடும்படியான விதத்தைச் சொல்வாயாக' என்றாள்.

(வி - ம்) மனம் மாறுமுன் 'கண்கள் சிவப்புற நோக் கினள்' 'எனக்கு நல்லையுமல்லை' 'என் மகன் பரதன் தனக்கு நல்லையுமல்லை' (பாடல் 482) என்று கூறினாள். மனம் மாறுபட்ட பின்பு 'விரும்பினள் நோக்கி' 'எனை

490. அன்னம் - அன்னம் போன்ற மகள். வினை - செயல் திறன். புனைதல் - அலங்கரித்தல். பெறும்படி-பெறுகிற விதத்தை.

உவந்தனை' 'இனியை என் மகனுக்கும்' என வருதல் காண்க. இபற்கையாக இருந்தபோது 'இராமனைப் பெற்ற எற்கு' (பாடல் 469) என்ற இடத்து இராமன் தான் தனக்கு உரிய மகன் என்று கருதியிருந்தாள் என்பதும், கூனி புகுந்து கலைத்த பொழுது 'என் மகன் பரதன்' என்ற இடத்து என் மக்கள் நால்வரின் பரதன் என்று பெயரைச் சுட்டினள் என்பதும், மனந்திரிந்த பின்னர் பெயரையும் குறிக்காமல் 'என் மகன் தனக்கு' என்று கூறினள் என்பதும் நோக்கத்தக்கது. முதலில் தன் மக்கள் நால்வர் ஆவாருள் முதலாமவன் இராமன் என்று எண்ணியிருந்த எண்ணம் மாறித் தன் மகன் பரதன் ஒருவனே யாவான் வேறில்லை என்றேற்பட்டு விட்டதென்க.

ஈரேழு உலகமும் உன் மகனுக்கு

491 மாழை உண்கணி உரைசெயக்
கேட்டமந் தரை, 'என்
தோழி வல்லள்! என் துணைவல்லள்!
என்று அடி தொழுதாள்;
தாழும் அந்நிலை என்உரை
தலைநிற்பின், உலகம்
ஏழும் ஏழும்உன் ஒருமகற்கு
ஆக்குவென்' என்றாள். ௫௮

மாவடுப் போன்ற அழகிய கண்களையுடைய கைகேயி அவ்வாறு சொல்ல அதைக்கேட்ட கூனி, 'என்னுடைய தோழி மிகச் சமர்த்தி; எனக்குத் துணையாக வாய்த்தவள் திறமையுடையவள்' என்று கூறி அடியில் விழுந்து தொழுதாள். 'என்னுடைய ஆலோசனையைக் கடைப்

---

491. கணி - கண்ணையுடையவள். தலைநிற்றல் - உறுதியாக நிற்றல்.

பிடித்தால் இராமனுக்குப் பட்டம் என்ற நிலைமை வீழ்ச்சி யடையும்; பதினான்கு உலகங்களையும் உன்னுடைய ஒப்பற்ற மகனுக்கு உரிமையாக்கி விடுவேன்' என்று கூறினாள்.

(வி - ம்) தன் உரைக்கு உடன்பட்டதும் அளவில்லாத மகிழ்ச்சி கூனிக்கு ஏற்பட்டது. 'என் உரை தலை நிற்பின் அந்நிலை தாழும்' 'என் உரை தலை நிற்பின் ஆக்குவென்' என இரண்டிடத்திலும் கொள்க. இப்பொழுது இராமனுக்குப் பட்டம் என்றாகியிருக்கிறது. அது நீங்கவேண்டும். பிறகு பரதனுக்கு முடிசூட்டப்பட வேண்டும். முன்னது தானாகவே நழுவி விடுமாம். 'பரதனுக்கு முடியை நான் சூட்டுகிறேன்' என்கிறாள். இது கூனியின் அளவு கடந்த மகிழ்ச்சியில் வரும் சொற்கள். தயரதனின் ஆட்சி ஓரளவுக்குட்பட்டது தான். ஆனால், கூனி தன் மகிழ்ச்சிப் பெருக்கால் பதினாலு உலகங்களையும் உரிமையாக்குகிறேன் என்கிறாள். கைகேயியின் அசையாத உள்ளத்தைத் திருப்பிய தனக்கு எதுதான் முடியாது என்ற இறுமாப்பு வெளிப்படுகிறது. மாழை - மாவடு. இதை இரண்டாக வகிர்ந்தால் பெண்களின் கண்களைப் போன்றிருக்கும். 'மாழை ஒண்கண் பரவையைத்தந்து ஆண்டானை' (சுந்தரர் தேவாரம்). ஏழு ஏழு உலகங்களென்றது கீழ் ஏழு, மேல் ஏழு என்ற பதினான்கு உலகங்களை.

இரண்டு வரத்தையும் கேட்டு வாங்கு

492 நாடி ஒன்றுஉனக்கு உரைசெய்வேன்
நளிர்மணி நகையாய்!
'தோடுஇ வந்ததார்ச் சம்பரன்
தொலைவுற்ற வேலை,

---

492. நாடி-தேடியறிந்து. நகை-பல்வரிசை. இவர்ந்த-விரிந்த. வேலை-காலம். ஆடல் - போர். கோடி-கொள்ளுதி. கோடிய-வளைந்த.

ஆடல் வென்றியான் அருளிய
வரம்அவை இரண்டும்
கோடி' என்றனள் உள்ளமும்
கோடிய கொடியாள். நக

. குளிர்ந்த முத்துப்போன்ற பல்வரிசையையுடைய கைகேயி ! ஆராய்ந்து ஒன்று உனக்குச் சொல்கிறேன். இதழ் விரிந்த மாலையை அணிந்த சம்பராசுரன் மாய்ந்த காலத்தில் போரில் வெற்றி பெற்ற தயரத மன்னன் விரும்பித் தந்த வரம் (இருக்கின்றனவே) அவை இரண்டையும் (இப்போது) கொள்வாயாக என்றாள். (அவள் யார் ?) உள்ளமும் கோணலான தீய கூனி.

(வி - ம்) கூனி இதுகாறும் உடல் மட்டும் கோணலாக இருந்தாள். இப்போது உள்ளமும் கோணலானாள் என்பது 'உள்ளமும்' என்பதிலுள்ள உம்மையால் பெறப்படும். இரண்டு கோணிய பிறகு சொல்லும் கோணலென்பது 'கோடி' என்பதால் பெறப்படும். பாடல் செல்கிற வேகத்தில் 'கொள்க' என்ற சொல் கோடி என்று விழுந்து கிடக்கிறது. கோடி என்று கூனி சொன்ன சொல்லே யாவும் நிலைகலங்கக் காரணமாயிற்றென்பது குறிப்பிடத்தக்கது.

பரதனுக்குப் பட்டம் இராமனுக்குக் காடு

493 'இருவ ரத்தினில் ஒன்றினல்
அரசுகொண்டு, இராமன்
பெருவ னத்திடை ஏழிரு
பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி ஒன்றினல் ;
செழுநில மெல்லாம்
ஒருவ ழிப்படும் உன்மகற்கு ;
உபாயம் ஈது' எனருள். ௬0

493. பருவம் - ஆண்டு. செய்வது - செய்க.

(அந்த) இரண்டு வரங்களுள் ஒன்றினல் அரசாட்சியைப் பெற்றுக்கொண்டு, மற்றொன்றினல் இராமன் பெருங் காட்டிடைப் பதினன்கு ஆண்டுகள், சென்று திரியும்படி செய்வாயாக. அப்படிச் செய்தால் செழித்த மண்ணுலகம் முழுமையும் உன் மகனுக்கு ஒரே வழியாகக் கிடைத்துவிடும். இது தான் உபாயம் என்ருள்.

(வி - ம்) பரதனுக்கு அரசு வேண்டுமென்ருல் மட்டும் போதாது. அரசனும் ஆட்சியாளரும் மக்களும் இராமனை ஆதரிப்பாராதலால் அரசு ஒரு வழிப்படாது. இராமனைக் காட்டுக்குச் செலுத்திவிட்டால் தொல்லை ஒழியும். சாதாரண மக்களைச் சட்டத்தால் கட்டுப் படுத்திவிடலாம். இராமனிடம் அடங்காத காதலுடையவர் அவனேடு சென்று விடுவர். எனவே அரசு ஒருவழிப்படும் என்ருள் என்க.

இனி சக்கரவர்த்தியின் தாய் கூனிதான் !

494 உரைத்த கூனியை உவந்தனள்
உயிருறத் தழுவி ;
நிரைத்த மாமணி ஆரமும்
நிதியமும் நீட்டி,
'இரைத்த வேலைசூழ் உலகம்என்
ஒருமகற்கு ஈந்தாய் !
தரைக்கு நாயகன் தாய்இனி
நீ!' எனத் தணியா. சக

இவ்வாறு கூறிய கூனியை மகிழ்ச்சியோடு உயிரே ஒன்றும்படி கட்டித் தழுவி, சிறந்த மணிகள் பதிக்கப்பெற்ற மாலையையும் திரண்ட பொருளையும் கொடுத்து, 'முழங்குகிற கடலால் சூழப்பட்ட உலகத்தை என் ஒரே மகனுக்கு ஈந்து

494. நிரைத்த - வரிசையாகப்பதிக்கப்பெற்ற. நீட்டி - கொடுத்து. இரைத்தல் - இரைச்சலைச்செய்தல். வேலை - கடல்.

விட்டாய். இனி நிலத்துக்கு அரசனான பரதனின் தாய் நீ தான்' என்று கூறி மன அமைதி பெற்று.

(வி - ம்) கூனி கூறிய உபாயம் மிகச் சரியானது; தவறாமல் அவ்வாறே முடித்து விடலாம் என்ற முடிவு கைகேயிக்கு ஏற்பட்டது. எனவே, பரதனைத் தரைக்கு நாயகன் என்றும், இதற்கு வழி தனக்குத் தெரியாதிருப்ப, கூனி கூறிய படியால் அவளே இனிப் பரதனுக்கு உண்மைத் தாயாகக் கருதப்படுவாள் என்றும் கூறினாளென்க. உயிருறத் தழுவுதலாவது மகிழ்ச்சிப் பெருக்கில் தன்னை மறந்து தழுவுதல். பரதனுக்கு அரசு கிடைப்பது உறுதி என்று கருதியதால் 'ஈந்தாய்' என்று இறந்த காலத்தாற் கூறினாள்.

வரம்பெறுதல் அல்லது சாதல்

495 'நன்று சொல்லினை! நம்பியை
நளிர்முடி சூட்டல்!
துன்று கானத்தில் இராமனைத்
துரத்தல்! இவ்இரண்டும்
அன்ற தாம்எனில் அரசன்முன்
ஆருயிர் துறந்து
பொன்றி நீங்குதல்! புரிவென்யான்!
போதி நீ!' என்றாள். சஉ

நன்றாக ஆலோசனை சொன்னாய். ஆணிற் சிறந்த பரதனுக்குக் குளிர்ந்த முடியைச் சூட்டல் - இராமனை அடர்ந்த காட்டிற்குத் துரத்துதல் - இந்த இரண்டும் செய்யா விட்டால், அரசன் முன்னிலையில் அரிய உயிரை விட்டு இறந்து ஒழிந்து போதல் - நான் செய்கிறேன்; நீ போ; என்றாள்.

---

495. துன்று - நெருங்கிய. துரத்தல் - திரும்பிப் பாராமல் போகும்படி விரட்டியடித்தல். அன்றதாம் எனில் - அது அன்றாம் எனில். பொன்றுதல் - சாதல்.

(வி - ம்) கைகேயி உள்ளத்தை உள்ளத்தோடு ஒட்டி யோசித்துக்கொண்டே பேசுகிருள். ஆதலால் வாக்கியங்கள் தொடர்புருது நிற்கின்றன. 'பொன்றி நீங்குதல்' என்ற அளவு இழுத்து இழுத்துச் சொல்கிருள். 'புரிவென்யான் போதி நீ' என்ற சொற்கள் விரைந்து வெளிப்படுவனவாம். மனத்தை விஷயத்தில் ஒட்டிப் பாடலைப் பாடிப் பார்க்கவேண்டும். இந்த முடிவிலிருந்து என்ன ஆனாலும் அணுவளவும் மாறுவதில்லை யென்று உறுதி செய்து விட்டாள் எனும் உறுதி 'புரிவென் யான்' என்பதில் காணப்படும். எல்லாருக்கும் இனிய ஆட்சியை நடத்தும் முடி என்பாள் நளிர் முடி என்ருள். குறித்த மூன்றினைக் கையாள்வது என்று அழுத்தி மனத்திற் பதிந்து கொண்டபடியே கடைசி வரை இம் மூன்றனையே வற்புறுத்தினள் என்பது பின்வரும் நிகழ்ச்சி களால் அறியப்படும்.

கோலம் அழித்தல்

496 கூனி போனபின், குலமலர்க்
குப்பைநின்று இழிந்தாள்;
சோனை வார்குழற் கற்றையில்
சொருகிய மாலை,
வான வார்மழை நுழைதரு
மதிபிதிர்ப் பாள்போல்,
தேன்அ வாவுறு வண்டினம்
அலமரச் சிதைத்தாள். சஙு

---

496. குலம் - அழகு. குப்பை - குவியல். இழிதல் - இறங்கு தல். சோனை - மழைமேகம். வார் - நீண்ட. சொருகிய - செருகிய. மழை - கருத்தமேகம். பிதிர்த்தல் - பிதுக்கி எடுத்தல். அலமால் - துன்பப்படல்; தவித்தல்.

கூனி சென்ற பின்பு, அழகிய மலர் நிறைந்த படுக்கையை விட்டு இறங்கினாள். மழை மேகத்தைப் போன்ற நீண்ட கூந்தல் தொகுதியில் செருகிய பூ மாலையை, வானத்தில் உள்ள நீண்ட மழை மேகத்தினுள்ளே நுழைகிற சந்திரனைப் பிதுக்கி எடுப்பாள்போல, தேனை விரும்பி மொய்த்திருக்கிற வண்டுக் கூட்டம் தவிக்கும்படி (எடுத்துப்) பிய்த்தெறிந்தாள்.

(வி - ம்) கருநிற மேகத்தினுள் மதி புகுந்தாற்போலக் கைகேயியின் கூந்தலினுள்ளே வைத்துச் சுற்றிய மாலை, பாதி மறைந்து விளங்கியது. அதைப் பிதுக்கிக் கசக்கி எறிந்தாள். மலர்க் குப்பை ஆகுபெயராகப் படுக்கையை உணர்த்திற்று. 'பொங்கணை மேற்கிடந்தாள்' (பாடல் 464) இழிந்தாள் என்க.

அலங்கோலமாதல்

497 விளையும் தன்புகழ் வல்லியை
வேர்அறுத் தென்னக்
கிளைகொள் மேகலை சிந்தினள் ;
கிண்கிணி யோடும்
வளைது றந்தனள் ; மதியினில்
மறுத்துடைப் பாள்போல்
அளக வாள்நுதல் அரும்பெறல்
திலதமும் அழித்தாள். சஅ

வளர்கின்ற தன்னுடைய புகழாகிய கொடியை வேரோடு அறுத்தாற்போல, கிளைத்திருக்கிற மேகலையைச் சிதறினாள் ; காலில் அணிந்துள்ள கிண்கிணியோடு கையில் அணிந்துள்ள

---

497. வல்லி - கொடி. மேகலை - ஒட்டியாணம். கிளை - ஒட்டியாணத்திலுள்ள அரும்பு முதலியன. கிண்கிணி - பாதசரம். மறு - களங்கம். அளகம் - கூந்தல். வாள் - ஒளி. நுதல் - நெற்றி.

வளையல்களையும் கழற்றி எறிந்தாள். சந்திரனில் இருக்கும் களங்கத்தைத் துடைப்பவளைப் போலக் கூந்தலையொட்டி ஒளி செய்யும் நெற்றியில் அருமையாக இடப்பெற்ற பொட்டினை யும் அழித்தாள்.

(வி - ம்) கைகேயியினுடைய புகழ் தங்குதடை யின்றி ஏறிக் கிளைத்துப் பூத்துப் பயனளிக்கும் கொடியைப் போல வளர்ந்தேறிக் கொண்டிருந்தது. அது வேரொடு வெட்டுப் படப் போகிறதென்பதை இங்கே கவி குறிப்பிடுகிறார். தயரதனின் புகழை ‘ ஓங்கி ஓங்கி வளர்ந்துயர் கீர்த்தியின், பூங்கொழுந்து பொலிவன போன்றவே ’ என்று கூறுதல் (பாடல் 341) காண்க.

தரையிற் புரண்டாள்

498 தாவின் மாமணிக் கலன்மற் றும்
தனித்தனிச் சிதறி,
நாவி ஓதியை நானிலம்
தைவரப் பரப்பி,
காவி உண்டகண் அஞ்சனம்
கான்றிடக் கலுழா,
பூஉ திர்ந்ததோர் கொம்பெனப்
புவிமிசைப் புரண்டாள். சரு

குற்றமற்ற சிறந்த இரத்தினங்களாலான நகைகள் யாவற்றையும் தனித்தனியாகக் கிடக்கும்படி எறிந்து, மணமிட்ட கூந்தலைத் தரையில் இழுபடும்படி பரப்பிவிட்டுச்

498. தா - குற்றம். கலன் - நகை. நாவி - கஸ்தூரி. தைவருதல் - தடவுதல் (இவள் புரள்வதால் கூந்தல் கிடந்து தரையைத் தடவுகிறது.) காவி உண்கண் - சிவப்புநிற மேறியகண். கான்றிட - கக்க. கலுழ்தல் - அழுதல்.

சிவந்த கண்களிலிருந்து மை கரைய அழுது கொண்டு பூக்கள் உதிர்ந்த வெறுங் கொம்புபோல நிலத்திற் கிடந்து புரண்டாள்.

(வி - ம்) கூனி பேச்சைக் கேட்டு மனந்திரிந்தது மட்டுமல்ல, உண்மையிலேயே ஆட்சியிலேற்படும் ஆசை வெறியே வந்துவிட்டதால் கண் சிவக்க, மைகரைய அழ ஆரம்பித்துவிட்டாள் என்க.

பின்னே வரவிருக்கும் கைமைக் கோலத்தை முன்னரே கைகேயி அடைந்துவிட்டாள் என்ற குறிப்பு மறைந்து தோன்றுகிறது.

மூதேவிபோலக் கிடந்தாள்

499 நவ்வி வீழ்ந்தென, நாடக
மயில்துயின் றென்ன,
கவ்வை கூர்தரச் சனகியாம்
கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்கும்என்று அயோத்திவந்து
அடைந்தஅம் மடந்தை
தவ்வை ஆம்எனக் கிடந்தனள்
கேகயன் தனயை. சசு

(துள்ளுகின்ற) மான் விழுந்தாற்போலவும், ஆடிக் கொண்டிருந்த மயில் விழுந்து தூங்கினாற்போலவும், கேகய மன்னன் மகள் துன்ப மிகுதியால் தரையில் கிடந்தாள். சீதையாகிய மணமிகுந்த தாமரை மலரில் இருக்கிற தாய் (இந் நகரைவிட்டு) நீங்குவாள் என்று முன்னதாக அறிவிப்பதைப்போல, அயோத்தியில் வந்து அடைந்த அந்த இலக்குமியின் அக்காள் வந்து கிடந்ததை ஒத்திருந்தது அந் நிகழ்ச்சி.

---

499. நவ்வி - மான். கவ்வை - துன்பம். அவ்வை - தாய். தவ்வை - அக்காள். தனயை - மகள்.

(வி - ம்) திருமகளே சீதையாக வந்திருக்கிறாள். இனி அவள் நீங்குவாள். அவள் நீங்கினால் அதற்குப் பதிலாக அவளுடைய அக்காளாகிய மூதேவி இடங்கொள்வாள். இங்கே முன்னறிவிப்பாகக் கைகேயி மூதேவிக் கோலத்திற் கிடக்கிறாள் என்றவாறு.

---

3. கைகேயி சூழ்வினைப் படலம்

[கைகேயியானவள் சதிச்செயல் புரிந்ததைக் கூறும் படலம். கைகேயி - கேகயன் மகள். சூழ்வினை - சதிச் செயல்.]

கைகேயியின் அரண்மனைக்கு அரசன்சென்றான்

500 *நாழிகை கங்குலின் நள்அ
டைந்த பின்றை.
யாழிசை அஞ்சிய அஞ்சொல்
ஏழை கோயில்
வாழிய என்றுஅயில் மன்னர்
துன்ன வந்தான்
ஆழி நெடுங்கை மடங்கல்
ஆளி அன்னான். க

---

500. நாழிகை - காலம். கங்குல் - இரவு. நள் - நடு. கோயில்- மாளிகை : அரண்மனை. அயில் மன்னர் - வேல் தாங்கிய அரசர். துன்ன - நெருங்கிச் சூழ.

காலமானது இரவின் நடுவை அடைந்த பிறகு யாழினது இனிய இசையும் பின் வாங்கும் படியான இனிய சொல்லையுடைய கைகேயியின் மாளிகைக்கு, ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்துகின்ற நீண்ட கையையுடைய ஆண் சிங்கத்தை நிகர்த்த தயரதன், வாழ்க என்று வாழ்த்திக் கொண்டு வேல் மன்னர் சூழ்ந்து வர வந்து சேர்ந்தான்.

(வி - ம்) இனிய குரலும் இசை பயின்ற நாவுமுடைய சிறந்த பெண்கட்கு, பேச்செல்லாம் பண்மயமாகி விடுதல் கூடும். எனவே, அவர்கள் வாய்திறந்தால், யாழ் கூடப் பேச அச்சப்படுமென்று தோன்றுகிறது. (குரலின் இசையைக் கேட்போரின் விரல், வீணையைச் சரியாக மீட்டாது போலும்) ஆளுடைய நம்பி ' பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரை உடையேன் " என்பர் (சுந்தரர் தேவாரம்). ' அயில் மன்னர் ' வேலைக் கையிலேந்திக் கொண்டு வழிவிலக்கி வருகிற மன்னர் ஆவர். மடங்கல் ஆளி - மடங்கிய பிடரிமயிரையுடைய சிங்கம் : ஆண் சிங்கம் என்றபடி. கைகேயியின் நிலையை இப்பொழுது பார்ப்பவர் இரக்கப்படும்படி யாய்விட்டதென்பார் ' ஏழை ' என்றார். கைகேயி அறிவுத் திறமுடையவள். இப்பொழுதும் மன்னர், முனிவர், மந்திரியர் முதலிய யாவரையும் மிஞ்சி உலகையே தலைகீழாக்க முன்னிற்பது அவளுடைய அரசியற் பேரறிவினாலேயாம். இதனை 'மாயன் நெடுமையால் அன்றளந்த உலகெலாம் நினைந்து செய்யும் ' (பாடல் 946) என்றதனால் அறியலாம். எனினும், ' சென்ற விடத்தாற் செலவிடா தீதுஒரீஇ, நன்றின்பால் உய்ப்பது அறிவு' (குறள் 422). ஆதலின், தீமையில் சேர்த்த அறிவு அறிவின்மையின்பாற் பட்டதென்க.

பாயல் துறந்த ஆயிழை

501 வாயிலில் மன்னர் வணங்கி
நிற்ப வந்துஆங்கு
ஏயின செய்யும் மடந்தை
மாரொடு ஏகிப்
பாயல் துறந்த படைத்த
டங்கண் மென்தோள்
ஆயிழை தன்னை அடைந்தனன்
ஆழி மன்னன். உ

மன்னர்கள் வாயிலில் வணங்கி நிற்க (அவர்களை நீங்கி உள்ளே) வந்து, அங்கே நின்ற ஏவற் பெண்களோடு அப்பாற் சென்று, படுக்கையை நீங்கிய வேல்போன்ற விசாலமான கண்களையும், மெல்லிய தோள்களையுமுடைய கைகேயி கிடக்கும் இடத்தை மன்னன் அடைந்தான்.

(வி - ம்) வாயிலோடு மன்னர்கள் திரும்பிவிட்டனர். அரசன் உள்ளே வந்து கைகேயி வழக்கமாகப் படுத்திருக்கும் இடத்திற் பார்த்துக் காணாமையால், ஆங்கு நின்ற ஏவற் பெண்களோடு சென்று கைகேயியை அவள் கிடந்த தனி இடத்திற் கண்டா னென்க. 'ஆயிழை' என்றது இங்கே பெண் என்ற பொருளில் நின்றது.

---

501. ஏயின - இட்ட வேலையை. பாயல் - படுக்கை. படை - வேல் வாள் முதலிய ஆயுதங்கள். ஆயிழை - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்தவள். (பெண்)

மானை எடுக்கும் ஆனை

502 அடைந்துஅவன் நோக்கி அரந்தை
என்கொல் வந்து
தொடர்ந்தது எனத்துயர் கொண்டு
சோரும் நெஞ்சன்,
மடந்தையை மானை எடுக்கும்
ஆனை யேபோல்
தடங்கைகள் கொண்டு தழீஇ
யெடுக்கல் உற்றான். ௩

அவ்விடத்தை அடைந்து அங்குள்ள நிலைமையை நோக்கித் துன்பம் ஏது வந்து தொடர்ந்தது என்று துயர்ப் பட்டுத் தளர்கின்ற மனத்தையுடையவனாகி, மானைத் தூக்கி எடுக்கும் ஆனையைப் போல, விசாலமான கைகளைக் கொண்டு கைகேயியைக் கட்டிப்பிடித்துத் தூக்க முற்பட்டான்.

(வி - ம்) ஆனை, கை ஒன்றே உடையது ஆதலால் இங்கே வலிமைக்கு மட்டும் உவமையாம்.

மின்னல் துவள்கிறது

503 நின்று தொடர்ந்த நெடுங்கை
தம்மை நீக்கி,
மின்துவள் கின்றது போல
மண்ணில் வீழ்ந்தாள் ;
ஒன்றும் இயம்பலள் ; நீடு
உயிர்க்கல் உற்றாள் ;
மன்றல் அருந்தொடை மன்னன்
ஆவி அன்னாள். ௪

---

502. அரந்தை - துன்பம். மடந்தை - பெண் : கைகேயி. தழீஇ - தழுவி.

503. உயிர்க்கல் - பெருமூச்சுவிடுதல். மன்றல் - மணம். தொடை - தொடுக்கப்பட்டது : மாலை.

நின்று நீட்டித்தொடர்ந்து எடுத்த கைகளை விலக்கி, மின்னல் கிடந்து துவண்டாற்போல மண்ணில் வீழ்ந்தாள், ஒரு சொல்லும் சொல்லவில்லை. நீண்ட பெருமூச்சு வாங்கினாள். (அவள் யார்?) மணம் மிக்க அருமையான மாலையணிந்த மன்னனின் உயிரையொத்த கைகேயி.

(வி - ம்) கைகேயி படுத்துக்கிடக்கிறாள். அரசன் நின்று குனிந்து கையை நீட்டித் தழுவி எடுக்க முற்படுகிறான். ஆனால் (கையில் பிடிபடாமல்) துவண்டு விழுகிறாள். அவள் விழுவது அரசனுக்கு உயிர் நழுவுகிற மாதிரி இருக்கிறது.

நான் செய்வதைப் பார்!

504 அன்னது கண்ட அலங்கல்
மன்னன் அஞ்சி,
'என்னை நிகழ்ந்தது? இஞ்ஞாலம்
ஏழில் வாழ்வார்;
உன்னை இகழ்ந்தவர் மாள்வர்;
உற்ற தெல்லாம்
சொன்னபின் என்செயல் காண்டி!
சொல்லிடு!' என்றான். ரு

அதைக் கண்ட மாலையணிந்த மன்னன் அச்சப்பட்டு நடந்ததென்ன? இந்த ஏழு உலகங்களில் வாழ்பவருள் (யாரேனும்) உன்னை இகழ்ந்தவர் (உண்டானால் அவர்) சாவது திண்ணம். நடந்த வெல்லாம் சொன்னபிறகு என்னுடைய செயலைப் பார்! சொல்! என்றான்.

(வி - ம்) முதலில் கைகேயியைப் பற்றியது உடல் நோயா, மனநோயா என்று அறிந்தானில்லை. இப்போது

---

504. ஞாலம் - உலகம். காண்டி - காண்பாயாக.

உடல் நோயன்று மன நோய்தான் என்று தெரிந்து கொண்டான். நடந்ததென்ன என்ருன். தன் அருமைக் காதலியை - மன்னர் மன்னனின் மனைவியை யாரேனும் புண்படுத்திஞல் அவர் தலை மண்ணில் உருள வேண்டாமா? உருட்டுகிறேன் என்று துடிக்கிருன் மன்னன். தயரதனின் வீரப் பெருக்கில் 'மாள்வர்' என்று தன் வினையில் சொல் விழுகிறது. செய்தி கேட்கத் தாமே மாள்வர் என்றபடி. தயரதனை எதிர்த்து நிற்பார் பிறரின்மையின் அவன் வாக்கில் 'மாள்விப்பேன்' என்ற சொல் வருதல் சாலாது.

என்னிடத்தில் அருள் உண்டா?

505 வண்டுளர் தாரவன் வாய்மை
கேட்ட மங்கை,
கொண்டல் நெடுங்கணின் ஆலி
கொங்கை கோப்ப,
'உண்டுகொ லாம்அருள் என்கண்
உண்மை நோக்கில்
பண்டைய இன்று பரிந்துஅ
ளித்தி! என்ருள். சு

வண்டுகள் துவைத்தற்கிடமான மாலையை அணிந்த மன்னனது சொற்களைக் கேட்ட கைகேயி, மழை மேகத்தைப்போல நீண்ட கண்களிலிருந்து நீர்த்துளிகள் இடையீடின்றி மார்பில் ஊற்ற, என்னிடத்து (உனக்கு) கருணையிருக்கிறதா? (அப்படியாஞல்) உண்டு என்ற நோக்கத்தில் முந்தியவற்றை இன்று அன்புடன் தருவாயாக என்ருள்.

(வி - ம்) உண்மை உண்டுஎன்னும் தன்மை. அன்று தந்த வரத்தைக் காலம் நீட்டிப்புக் கருதி இல்லையென்று

505. ஆலி - நீர்த்துளி. உண்மை நோக்கில் - உண்டு என்ற கருத்தோடு. பண்டைய - முன்னுளில் தந்தவை.

சொல்லாமல் இன்று தரவேண்டும் என்று கேட்டாள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்தவரத்தை இப்பொழுதென்ன கேட்கிறாய் என்று கூறி மறுத்துவிடுவானோ என்று ஐயப்பட்டாள். அதனாலேயே 'உண்மை நோக்கில் பண்டைய' என்றாள் என்க. எதற்கும் கால அவதி கூறுதல் மரபு. அவ்வாறு அரசன் கூற முற்படாதிருக்கவேண்டுமென்று கைகேயி கருதினாள். சிறந்த மன்னர்கள் முறை செய்யும்போது கால அவதி கருதார் என்பது, 'சால மறைத் தோம்பிச் சான்றவர் கைகரப்பக், காலை கழிந்ததற் பின்றையும் - மேலைக், கறவைக்கன்று ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான், முறைமைக்கு மூப்பிளமை இல்' (பழமொழி 93) என்றதனால் விளங்கும்.

உண்டு, இராமன்மேல் ஆணை

506 கள்ளவிழ் கோதை கருத்துணராத மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கான்;
'உள்ளம் உவந்தது செய்வென்; ஒன்றும் உலோபேன்;
வள்ளல் இராமன்உன் மைந்தன் ஆணை!' என்றான். எ

தேன் வடிகின்ற கூந்தலையுடைய கைகேயியின் உட்கருத்தை உணராத மன்னவன், மிகுந்த நீண்ட ஒளியையுடைய மின்னல் போல விளங்கும்படி (பல்தெரிய) சிரித்தான். (உன்) உள்ளம் விரும்பியதைச் செய்வேன். ஒன்றிலும்

---

506. கள் - தேன். வெள்ளம் - மிகுதி. உலோபேன் - உலோபித்தனம் செய்யமாட்டேன்.

உலோபித்தனம் செய்யமாட்டேன் ; வள்ளலாகிய இராமன் இருக்கிருனே உன் மைந்தன் ; அவன் மீது ஆணை என்ருன்.

(வி - ம்) முன்பு வரங் கொடுத்த காலத்தில் ஒரு குறிக் கோளுமின்றி, 'உனக்கு விருப்பமானபடி இரண்டு வரம் தரு கிறேன்' என்று சொன்னுன். மீண்டும் இப்பொழுது என்ன வரம் வேண்டுமென்று கேளாமல் 'உள்ளம் உவந்ததைச் செய்வேன்' என்று கூறினுன். வரம் இன்னதென்று கூருமலே பழைய வரத்தைப் புதுப்பித்துக் கொண்டாள் கைகேயி. கேட்டதெல்லாம் இல்லையென்னுது கொடுத்து வருகிற வள்ள லாதலால் என்ன வரமென்று கேட்கத் தோன்றவில்லை. கொடுப்பதனுல் தீமை விளையுமென்பதை அவன் அறிந்தா னில்லை யென்பதுமொன்று. 'உன் மகன் இராமன் ஆணை' என்று இந்த இடத்தில் சொல்லியது விதி செய்யும் வேடிக் கையே யன்றி வேறென்ன?

பழைய வரங்களைத் தருக

507 ஆன்றவன் அவ்வுரை கூற,
ஐயம் இல்லாள்,
'தோன்றிய பேர்அவலம்
துடைத்தல் உண்டேல்
சான்று இமையோர் குலம்ஆக
மன்ன! நீஅன்று
ஏன்ற வரங்கள் இரண்டும்
ஈதி!' என்ருள். அ

அறிவின் மிக்க தயரதன் அவ்வாறு சொல்ல, ஐயம் தீர்ந்தவளாய், 'தோன்றியிருக்கிற மிக்க துன்பத்தைப்

507. ஆன்றவன் - அறிவும் ஒழுக்கமுமுடையவன். அவலம் - துன்பம். துடைத்தல் - நீக்குதல். சான்று - சாட்சி. ஏன்ற - ஏற்றுக் கொண்ட.

போக்க வேண்டுமானுல், தேவர் குலம் சாட்சியாக மன்ன வனே! நீ அன்று ஒப்புக் கொண்ட வரங்கள் இரண்டையும் தருவாயாக' என்ருள்.

(வி-ம்) இராமன் மேல் ஆணையிட்டு விட்டான். இனித் தவற மாட்டான் என்று உறுதிப்பட்டதால் 'ஐயமிலாள்' எனப்பட்டது. ஆனுலும், நிகழ விருக்கிற காரியம் மிகப் பெரிய தாதலால் இன்னும் உறுதிப்படுத்த நினைக்கிருள். எதைக் கேட்கப் போகிருளென்ப தறியாமல் மன்னன் உடன்படுகிருன் என்பதை அவள் அறிந்துதானே இருக் கிருள். சொல் தவருதவனுனுலும் தான் கேட்கும் பொரு ளறிந்தால் மறுப்பானே என்ற அச்சத்தால் இன்னும் உறுதி செய்ய முற்படுகிருள். தேவர்கள் ஆணையாகச் சொல் என்று கேட்டாள். வரந் தராவிட்டால் துன்பந் தீராது என்பதையும் தெளிவாக்கிவிட்டாள். உலகத்து உயிர்களின் துன்பந் துடைப்பது தயாதனின் குறிக்கோள் என்பதை அறிந்தபடியால் இவ்வாறு கூறினுள்.

சொல்! தருகிறேன்!

508 'வரங்கொள இத்துணை மம்மர்
அல்லல் எய்தி
இரங்கிட வேண்டுவ தில்லை;
ஈவென்; என்பால்
பரங்கெட இப்பொழு தேப
கர்ந்திடு என்ருன்;
உரங்கொள் மனத்தவள் வஞ்சம்
ஓர்கி லாதான். கூ

---

508. மம்மர் - தடுமாற்றம். அல்லல் - துன்பம். பாம் - பாரம்: சுமை.

(தருவதாக ஒப்புக் கொண்ட) வரங்களைப் பெற இவ்வளவு தடுமாற்றமும் வருத்தமும் அடைந்து பரிதாபப்பட வேண்டுவதில்லை. தருகிறேன். சுமை நீங்கும்படி என்னிடம் இப்பொழுதே சொல் என்றான். (யார்?) வலிய நெஞ்சத்தை யுடையவளான கைகேயியின் வஞ்சனையை உணராத மன்னன்.

(வி - ம்) தயரதனின் பெரிய உள்ளம் இதற்கென்ன இவ்வளவு சப்பைக் கட்டு என்று கருதுகிறது. சொன்னபடி வரத்தைக் கொடுத்து இவளைச் சுகப் படுத்தாமலிருப்பதே அவனுக்கு ஒரு பெருஞ் சுமைபோலாகிவிட்டது. விரைந்து சொல்; கழுத்தை முறிக்கிற இச்சுமையைக் கீழே தள்ளி விடுகிறேன் என்றான். உரங்கொள் மனம் என்றது கல்லாகப் போன மனம் என்றபடி.

என் மகன் ஆள, சீதை கணவன் போக

509 ஏய வரங்கள் இரண்டின்
ஒன்றி னால்என்
சேய்அர சாள்வது; சீதை
கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது; எனப்பு
கன்று நின்றாள்
தீயவை யாவை யினும்சி
றந்த தீயாள். ௧0

நீ அளித்த வரங்கள் இரண்டில், ஒன்றினால் என் மகன் அரசாள வேண்டும். மற்றொன்றினால் சீதையின் கணவன் (நாட்டை விட்டுப்) போய்க் காட்டில் வசிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு நின்றாள். (அவள் யார்?) தீயவை

---

509. சேய் - மகன். கேள்வன் - கணவன். சிறந்த - தீமையிற் சிறந்த.

என்று சொல்லப்படும் பொருள் எத்தனை உண்டோ அத்தனைக்கும் மேம்பட்ட தீயவளாகிய கைகேயி.

(வி - ம்) இவ்வளவு கொடிய சொல்லைச் சொல்லிவிட்டுக் கலங்காது நிற்பதால் 'நின்றாள்' என வலியுறுத்தப்பட்டது. அரசனுக்கு மக்கள் பலராதலின் 'என் சேய்' என்றாள். கோசலை மகன் என்று இராமனைக் கூறாது சீதை கேள்வன் என்றது, மகன் என்ற பாசந்தருஞ் சொல்லை நீக்கி, சீதையின் வசப்பட்டவன் என்ற குறிப்பைக் காட்டி இராமனைச் சிறிது தள்ளி நிறுத்த எண்ணினாள் என்க. வனம் ஆள்வது என்பது மங்கலவழக்கெனக் கொள்க. 'தாலி பெருகிற்று' என்றாற் போல.

வேகம் அடங்கிய வேழம்

510 நாகம் எனும் கொடி யாள்தன்
நாவின் வந்த
சோக விடந்தொட ரத்து
ணுக்கம் எய்தா,
ஆகம் அடங்கலும் வெந்த
ழிந்துஅ ராவின்
வேகம் அடங்கிய வேழம்
என்ன வீழ்ந்தான். கக

நாகப்பாம்பென்று சொல்லத்தக்க கொடியவளாகிய கைகேயியின் நாவில் தோன்றிய, சோகம் என்னும் நஞ்சு பற்றிப் பரவ நடுக்க மெய்தி, உடல் முழுமையும் வெந்து அழிந்து, பாம்பின் விடத்தினால் தன் வலிமை யிழந்த யானையைப் போலக் கீழே விழுந்தான்.

---

510. துணுக்கம் - நடுக்கம். ஆகம் - உடல். அரா - பாம்பு. வேகம் - வலிமை. வேழம் - யானை.

(வி - ம்) விடமுள்ள பிராணிகள் பல. அவற்றுள் நாவில் விடமுடைமை பற்றி 'நாகமெனும் கொடியாள்' என்றார். பாம்பு தீண்டினால் விடம் பரவும். இங்கே சோகம் என்ற உருவத்தில் விடம் பரவியது. விடம் உயிரை அடங்கச் செய்யும். இங்கே சோகம் வலிமையை அடங்கச் செய்து விட்டது. உயிரிருந்தாலும் வலிமை முற்றும் அற்றால் உடலுக்கு என்ன உண்டு? வீழ்ந்து கிடக்கிறது என்றபடி. 'மானை எடுக்கும் ஆனை' (பாடல் 502) இப்பொழுது 'வேகம் அடங்கிய வேழம்' ஆயிற்று. களங்கமற்ற 'மான்' கொடிய விட 'நாகம்' ஆயிற்று. 'சோகம்' பற்றிய அரசன் 'விடம்' பற்றிய வேழமாயினன். ஆகம் வேதல்-துக்கம் தாங்காமல் உள்ளம் புண்ணாகி உடலும் வேதனை யடைதல்.

சொல்ல முடியாத துன்பம்

511 பூதலம் உற்று,அத னிற்பு
ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர்
சொல்ல வல்லார்?
வேதனை முற்றிட வெந்து
வெந்து கொல்லன்
ஊதுஉலை யிற்கனல் என்ன
வெய்து யிர்த்தான். கஉ

நிலத்திற் கிடந்து புரள்கிற மன்னனின் பெரிய துயரத்தினைச் சொல்ல வல்லவர் யாவர்? துன்பம் வளர்ந்து ஏறியதால் மேலும் மேலும் வெந்து வெந்து கொல்லனது ஊது உலையில் வரும் நெருப்பைப் போலப் பெருமூச்சு விட்டான்.

---

511. பூதலம் - நிலம். கனல் - நெருப்பு.

(வி - ம்) அதிர்ச்சி ஏற்பட்டால் காய்ச்சல் தோன்றி விடும். கொடுஞ் சொல்லைக் கேட்டவுடனே தயாதனுக்குக் குளிர் காய்ச்சல் வந்துவிட்டது. உடலெல்லாம் ஒரே நடுக்கம். பெருமூச்சு நெருப்பாகவே வருகிறது. கொல்லன் துருத்தி வைத்து ஊதும்போது உலையில் சீறி வரும் நெருப்பாகவே இருக்கிறது.

துடிக்கிறான்

512 மேவி நிலத்தின் இருக்கும்;
நிற்கும்; வீழும்;
ஓவியம் ஒப்ப உயிர்ப்பு
அடங்கி ஓயும்;
பாவியை உற்றுஎதிர் பற்றி
எற்ற எண்ணும்;
ஆவி பதைப்ப அலக்கண்
எய்து கின்றான். கந

உயிர் துடிக்க, துன்பத்தை யடைந்த மன்னன், எழுந்து உட்காருவான்; நிற்பான்; விழுவான்; சிலையைப் போல மூச்சு அடங்கிக் கிடப்பான்; பாவியாகிய கைகேயியைப் பிடித்துக் கொல்ல வேண்டுமென்று நினைப்பான்.

(வி - ம்) தன் நினைவு கலங்கிக் குழம்பி விட்டதால் எழுந்தும், இருந்தும், நின்றும், விழுந்தும், மூர்ச்சித்தும், கோபங் கொண்டும் கிடந்தான். தன்னினைவோடு செய்யும் செயல் இல்லை என்றபடி.

---

512. மேவி - எழுந்து. ஓவியம் - சிலை. உயிர்ப்பு - மூச்சு. எற்றுதல் - கொல்லுதல்.

கைகேயி அசையவில்லை

513 கம்ப நெடுங்களி யானை
அன்ன மன்னன்,
வெம்பி விழுந்துஅழும் விம்மல்
கண்டு வெய்துற்று
உம்பர் நடுங்கினர் ; ஊழி
பேர்வ தொத்தது ;
அம்பன கண்ணவள் உள்ளம்
அன்ன தேயால். கச

தூணில் கட்டிய மிக்க மதமுள்ள யானையை ஒத்த மன்னன், வெம்பி விழுந்து அழுது விம்முதலைக் கண்டு மனங் கலங்கி (என்ன நேருமோ என்று) தேவர்கள் நடுங்கினார்கள். உலகமே நிலைபெயர்வதாகத் தோன்றிற்று. அம்பு போன்ற கண்களையுடைய கைகேயியின் உள்ளம் மட்டும் இருந்தபடி (ஒரு மாற்றமுமின்றி) இருந்தது.

என்ன பிசகு சொல்

514 இந்நிலை நின்றவள் தன்னை
எய்த நோக்கி,
நெய்ந்நிலை வேலவன் ‘ நீ ! தி
சைத்த துண்டோ ?
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த
வஞ்சம் உண்டோ ?
அந்நிலை சொல்எனது ஆணை,
உண்மை’ என்றான். கரு

---

513. கம்பம் - தூண். வெய்துறுதல் - மனங்கலங்குதல். உம்பர் - மேலுலகத்தவர் : தேவர். ஊழி - உலகம். அன - அன்ன, ஒத்த.

514. எய்த - பொருந்த. நெய் - ஆயுதங்களுக்குத் தடவும் கொழுப்பு. திசைத்தல் - திகைத்தல்.

இவ்வாறு நிற்கிற கைகேயியை உற்றுப் பார்த்து நெய் பூசப்பட்ட வேலையுடைய தயாத மன்னன், 'நீ (ஏதாவது) திகைப்படைந்ததுண்டா? (யாரேனும்) புரட்டுக்காரர் சொல்லிக் கொடுத்த வஞ்சம் உண்டா? அத்தன்மையை என்மேல் ஆணையாக உள்ளபடி சொல்' என்றான்.

(வி - ம்) சோகக் கடலாக அரசன் கிடக்கிறான். தெளிவுக் கடலாகக் கைகேயி நிற்கிறாள். நேற்று வரை இருவரும் ஒரே படித்தாகக் காதற் கடலில் திளைத்தவர்கள். இதைக் கண்டதும் அரசனுக்கு மயக்கத்தினிடையே ஒரு தெளிவேற்பட்டது. தூய மனமுள்ள கைகேயிக்கு ஏன் இவ்வாறான கல்மனம் ஏற்பட்டது என்பதை அவளைக் கேட்டு அறிய முற்பட்டான். ஏதோ பெரிய புரட்டுக் கலந்திருக்கிறதென்று கருதியதால் 'உண்மை சொல்' என்றான். அவ்வளவோடும் நில்லாது, 'என்மேல் ஆணையாகச் சொல்' என்றுங் கூறினான். மிகப் பெரிய புரட்டு ஏற்பட்டுள்ள தென்றபடி.

ஒன்றுமில்லை வரத்தைத் தா

515 'திசைத்ததும் இல்லை; எனக்கு
வந்து தீயோர்
இசைத்ததும் இல்லை; முன்ஈந்த
இவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்! தரின் இன்று
கொள்வென்; அன்றேல்
வசைத்திறன் நின்வயின் நிற்க
மாள்வென்' என்றாள். கசு

நான் திகைக்கவுமில்லை; என்னிடத்தில் தீயவர் வந்து சொல்லித் தந்ததுமில்லை; கடிவாளம் பூட்டிய குதிரைகளை

515. குசை - கடிவாளம். பரி - குதிரை. நின்வயின் - உன்னிடத்தில்.

உடைய மன்னனே! முன் தருவதாக வாக்களித்த இவ் விரண்டு வரங்களையும் இன்று பெறுவேன். அல்லது தீராத பழி உன்மேல் நிலைநிற்கும்படி சாவேன் என்றாள்.

(வி - ம்) மற்ற பேச்செல்லாம் எதற்கு? நடந்த தொன்றுமில்லை! இப்போதே வரம் வேண்டும். அல்லது சொல் தவறினன் என்ற பழியை உன்மேல் சுமத்திவிட்டுச் செத்துப் போவேன் என்றாள். தான் தேர் ஓட்டியதாலேயே வெற்றியும் புகழும் கிடைத்ததோடல்லாமல், இந்த அயோத்தி அரசுங் கிடைத்தது என்பாள் போலக் 'குசைப் பரியோய்' என்று விளித்தாள் எனினும் ஆம்.

வெந்த புண்ணில் வேல்

516 இந்த நெடுஞ்சொல்அவ் ஏழை
கூறு முன்னே,
வெந்த நெடும்புணில் வேல்நு
ழைந்தது ஒப்பச்
சிந்தை திரிந்து,தி கைத்து,அ
யர்ந்து, வீழ்ந்தான்;
மைந்தன் அலாதுஉயிர் வேறுஇ
லாத மன்னன் கஎ

இராமன் என்ற மைந்தன் அல்லாது வேறு உயிரில்லாத அரசன், இந்த முடிவு இல்லாத சொல்லை அந்த ஏழைக் கைகேயி சொல்லத் தொடங்கி, அச்சொல் முடிவதற்கு முன் பாகவே, வெந்த பெரும் புண்ணில் வேலை நுழைத்தாற் போலத் (துன்பம் மேலேறி மிகுதலால்) சிந்தை தடுமாறித் திகைத்துச் சோர்ந்து கீழே விழுந்தான்.

(வி - ம்) மாற்றமில்லாத சொல் ஆதலால் 'நெடுஞ் சொல்' என்றார். 'நெடும்புண்' என்றதும் அது. இராமனல் லாமல் தயரதனுக்கு உயிர் வேறில்லை என்பது, 'வேயுயர்

கானம் தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும் போயினன் என்றான் என்ற போழ்தத்தே ஆவி போனான்' (பாடல் 737) என்பதனாலறிக.

சத்தியம் சாகட்டும்

517 'ஆகொடி யாய்!' எனும்; ஆவி
காலும்; 'அந்தோ
ஓகொடி தேஅறம்' என்னும்;
'உண்மை ஒன்றும்
சாக' எனாஎழும்; மெய்த
ளாடி வீழும்;
மாகமும் நாகமும் மண்ணும்
வென்ற வாளான். கஅ

மேல் கீழ் மண் என்னும் மூன்று உலகங்களையும் வெற்றி கொண்ட வாளாயுதத்தை யுடைய மன்னன், ஆ! கொடியவளே என்பான். உயிரைக் கக்குவான். ஐயோ, ஓ! அறம் கொடியதுதான் என்பான். உண்மை என்ற ஒன்று இருக்கிறதே அது சாகட்டும் என்று தலையைத் தூக்குவான். தள்ளாடி விழுவான்.

(வி - ம்) மூன்று உலகங்களையும் வென்ற கத்தி இடுப்பில்தான் இருக்கிறது. கைகேயியின் மீது செல்லவில்லை. அறமும் வாய்மையும் குறுக்கே நிற்கின்றன. இருதரப்பினரும் அறத்தொடு நின்றால் அறம் இன்பமாகும். ஒருவர் மாறுபட்டால் அறம் செயல்பட முடியாது. இதை 'தர்ம சங்கடம்' என்பர். இராமனுக்கு அரசு கொடுப்பது அறம். வரத்தை நிறைவேற்றுவதும் அறம். இரண்டிற்கும் இடையில் தவிக்கிறான் மன்னன். நீதி புரிவதற்கிடையில் அறமும் வாய்மை

---

517. காலுதல் - கக்குதல். மாகம் - மேலுலகம். நாகம் - கீழுலகம்.

யும் நின்று தடுக்கின்றன. 'பதியின் பிழையன்று; பயந்து நமைப்புரந்தாள் மதியின் பிழையன்று; மகன் பிழையன்று; மைந்த! விதியின் பிழை' (பாடல் 640) என்று இராமன் கூறுவதறிக.

பெண் குலத்தையே ஒழிக்கிறேன்

518 நாரியர் இல்லைஇஞ் ஞாலம்
ஏழும் என்னக்
கூரிய வாள்கொடு கொன்று
நீக்கி, யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வென்
என்று பொங்கும்;
வீரியர் வீரம் விழுங்கி
நின்ற வேலான். கக

வீரர்களின் வீரத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கும் வேலையுடைய தயரத மன்னன், ஏழுலகங்களிலும் பெண்களே இல்லை யென்று சொல்லும்படி கூர்மையான வாளாயுதத்தைக் கொண்டு கொன்று அழித்து விட்டு நானும் பாவிகளுடைய எண்ணிக்கையில் சேர்ந்து கொள்வேன் என்று கொதித்தான்.

(வி - ம்) தீயவரின் கல்மனச் செயலை எண்ணினாலேயே நல்லவன் தீயவனாகி விடுவான் என்ற உண்மை இங்கே காணக் கிடக்கிறது. தான் நரகத்துக்குப் போனாலும் குற்றமில்லை. இவளைக் கொல்லாமல் விடக்கூடாது என்று நினைக்கிறான். ஒரு பெண் செய்யும் கொடுமைக்காகப் பெண்குலம் அடங்கக் கொல்வேன் என்று கிளம்புவது கோப வெறியினாலென்க.

518. நாரியர் - பெண்கள். பூரியர் - கீழ்மக்கள். எண்ணிடை - எண்ணிக்கையில். வீரியர் - வீரர். விழுங்குதல் - தன்னுள் இழுத்துக் கொள்ளல்.

நெய்பட்ட நெருப்பு

519 கையொடு கையைப் புடைக்கும்;
வாய்க டிக்கும் ;
மெய்யுரை குற்றம் எனப்பு
ழுங்கி விம்மும் ;
நெய்எரி உற்றென நெஞ்சுஅ
ழிந்து சோரும் ;
வையகம் முற்றும் நடந்த
வாய்மை மன்னன். ௨௦

நில முழுதும் தன்னுடைய சொல்வழி நடக்கச் செய்த மன்னன், கையோடு கையைத் தட்டுவான் ; வாயை மடித்து அதுக்குவான் ; உண்மைப் பேச்சே குற்றமுடையதாகும் என்று கூறி ஆத்திரப்பட்டு விம்முவான் ; நெருப்பிலே நெய் பட்டாற்போல மனமுடைந்து மயங்கித் தளர்வான்.

(வி-ம்) தயாதனுடைய சொல்லுக்கு உலகமே பணிந்து கிடந்தது. அச்சொல் இங்கே செயலற்றுவிட்டது. இதை நினைத்ததால் மனம் ஒடிந்து மூர்ச்சை யுண்டாகிறது. கிடந்து தவிக்கிறான். அளவிற்கு மேற்பட்ட சலிப்பில் ஏற்பட்ட உணர்ச்சியால் உண்மை பேசுவதே குற்றமென்று தோன்று கிறது.

கெஞ்சிப் பார்க்கலாம்

520 ஒறுப்பினும் அந்தரம் ; உண்மை
ஒன்றும் ஓவா
மறுப்பினும் அந்தரம் ; என்று
வாய்மை மன்னன்,

---

519. கடித்தல்-ஆத்திரத்தில் கீழுதட்டை மடித்துக் கடித்தல்.

520. ஒறுத்தல் - தண்டித்தல். அந்தரம் - தீமை. ஓவா - நோக்காமல். பொறுத்தல் - மன்னித்தல். நிலை - பிடிவாதமான நிலை. இறுத்தல் - வெட்டுதல். ஆவது - ஆகத்தக்கது.

பொறுப்பினும், இந்நிலை போகி
லாளை வாளால்
இறுப்பினும், ஆவது இரப்பது!
என்றுள ழுந்தான். உக

(இவளை) தண்டித்தாலும் தீமை; உண்மையைச் சிறிதும் நோக்காமல், (இல்லை என்று) மறுத்தாலும் தீமை; என்று கருதிய உண்மையின் அரசன், இந்தப் பிடிவாத நிலையிலிருந்து விலகாதவளை மன்னிப்பதைக் காட்டிலும், வாளினால் வெட்டுவதைக் காட்டிலும், செய்யக்கூடியது இரந்து கேட்பதுதான் என்று எழுந்தான்.

(வி - ம்) அநீதியாக வரத்தைப் பயன்படுத்த நினைக்கிற இவளைத் தண்டிக்கலாம்; அல்லது தரமுடியாது என்று மறுத்து விடலாம்; இவ்விரண்டும் தீமையையே தரும் என்று கருதினான். சாதாரணமாக உலகினர் எண்ணக்கூடிய எண்ணமே கோபத்தில் தோன்றியது. அதனை உண்மை மன்னனாதலின் விலக்கிக்கொண்டான். இவளுடைய கொடுமையை மன்னித்து, விட்டுவிடலாம்; அல்லது வெட்டிக் கொல்லலாம். ஆனால், இவ்விரண்டையும் செய்யாமல் கெஞ்சிக் கேட்டு அவளைக்கொண்டே வரத்தை மாற்றிவிடலாம்; அதுதான் இந்தச் சமயத்தில் நன்மை தரும் என்று கருதி எழுந்தான் என்றவாறு.

காலில் விழுந்தான்

521 கோல்மேற் கொண்டும் குற்றம்
அகற்றக் குறி கொண்டார்
போல்மேல் உற்றது உண்டுஎனில்,
நன்றுஆம் பொறை என்னக்

521. கோல் - அரசாட்சி. உற்றது - நன்மை. கந்து - கட்டுத்தறி. மிடைதல் - நெருங்குதல்.

காலமேல் வீழ்ந்தான் ; கந்துகொல்
யானைக் களி மன்னர்
மேல்மேல் வந்து முந்தி
வணங்கு மிடை தாளான். உஉ

கட்டுத் தறியை முறிக்கிற யானையிலேறிக் களிப்புடைய மன்னர்கள் மேலும் மேலும் வந்து ஒருவரை யொருவர் முந்திக்கொண்டு வணங்கிச் சூழுகிற பாதங்களையுடைய மன்னன், அரசாட்சியை மேற்கொண்டிருந்தாலும், குற்றத்தை நீக்கவேண்டுமென்ற நோக்கமுடையவரைப் போல, இனி நன்மை ஏற்படுமென்றால் பொறுமை நன்மை ஆகும் என்று கருதிக் கைகேயியின் கால்மேல் வீழ்ந்தான்.

(வி-ம்) தயரதன் மனத்தை ஒருவகையில் சமாதானப்படுத்திக் கொண்டான். நாம் அரசனாக இருந்தாலென்ன, செய்யும் காரியத்தால் நன்மை ஏற்படுமானால் பொறுமையோடு ஏன் தாழ்ந்துபோகக்கூடாது என்றுகருதினான். தான்கொடுத்த வாக்கின்படி இராமன் அரசாளவேண்டும்; கைகேயிக்குக் கொடுத்த வரமும் தவறக்கூடாது. இரண்டு வாக்கையும் நிறைவேற்ற வேறுவழி கிடையாது. எனவே, கைகேயியின் மனம் திரும்பினால்தான் இரண்டிலுமிருந்து சமாளிக்கலாம். எனவேகெஞ்சிப் பார்க்கலாமென முடிவுக்கு வந்தான். போர்க் களிறுகளிலேறி வந்த ஆயிரமாயிரம் மன்னர் தன்காலிலே விழுந்து வணங்க இடங்கிடைக்காமல் தவிக்கும்பொழுது, இவன்வந்து கைகேயி காலில் விழுகிறான் எனில்விதி செய்யும் செயல் அல்லவா ?

பழிபூணுவதில் பயனுண்டா ?

522 'கொள்ளான் நின்சேய் இவ்வரசு ;
அன்னான் கொண்டாலும்
நள்ளாது இந்த நானிலம் ;
ஞாலந் தனில்என்றும்

522. நள்ளுதல் - விரும்புதல். ஓதுதல் - சொல்லுதல்.

உள்ளார் எல்லாம் ஓத
உவக்கும் புகழ் கொள்ளாய்!
எள்ளா நிற்கும் வன்பழி
கொண்டுஎன் பயன்' என்ருன். உ௩

இந்த அரசை உன் மகன் ஏற்கமாட்டான். (ஒருவேளை) அவன் ஏற்றுக் கொண்டாலும் இந்த உலக மக்கள் விரும்ப மாட்டார்கள். உலகத்தில் என்றென்றும் உள்ளவர் எல்லாரும் ஓதும்படி மகிழ்ச்சிதரும் புகழைக் கொள்கிருயல்லை. (யாவரும்) இகழும்படி நிலைத்து நிற்கக்கூடிய கொடிய பழியை ஏற்றுக்கொள்வதால் என்ன பயன் ஏற்படும் என்ருன்.

(வி - ம்) மன்னன் புரண்டான்; புலம்பினுன். ஒருவாறு தெளிவு ஏற்பட்டபோது கெஞ்சிப் பார்க்கலாமென்ற எண்ணம் ஏற்பட்டது. தெளிவு வலிமையடைந்தது. பேசிப் பார்க்கிருன். ஆகாத காரியத்தில் தலைப்பட்டு ஏன் பேரைக் கெடுத்துக் கொள்ளவேண்டு மென்கிருன். 'என்சேய் அரசாள்வது' என்று (பாடல் 509) கைகேயி சொல்லியபடியால் இங்கே அரசனும் 'கொள்ளான் நின் சேய்' என்று கூறினுன்.

கண்ணை வேண்டுமானுலும் தருகிறேன்

523 'கண்ணே வேண்டும் என்னினும்
ஈயக் கடவேன்! என்
உள்நேர் ஆவி வேண்டினும்
இன்றே உனது அன்ருே!
பெண்ணே! வன்மைக் கேகயன்
மானே! பெறுவாயேல்
மண்ணே கொள் நீ! மற்றையது
ஒன்றும் மற!' என்ருன். உ௪

---

523. கடவேன் - கடமையுடையேன். ஆவி - உயிர். மானே - மான்போன்றவளே.

என்னுடைய கண்ணைக் கேட்டாலும் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுள்ளே பொருந்தியிருக்கிற உயிரைக் கேட்டாலும் அது இப்பொழுதே உனது அல்லவா? பெண்ணே! கொடையிற் சிறந்த கேகய மன்னனது மான் போன்ற மகளே! பெறவேண்டுமென்று விரும்பினால் மண்ணுலக ஆட்சியை நீ பெற்றுக்கொள்! வேறொன்று சொல்கிறாயே அந்த ஒன்றை மட்டும் மறந்துவிடு என்றான்.

(வி - ம்) உடலுறுப்பில் கண்ணே சிறந்தது. 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை' (நான்மணிக்-56) அதைத் தருகிறேன் என்றால் உடலுறுப்பில் எதை வேண்டுமானாலும் தருகிறேன் என்றாயிற்று. உடலினும் சிறந்த உயிரையும் தருகிறேன். அரசாட்சியையும் எடுத்துக் கொள். இராமனை மட்டும் காட்டுக்குப் போகும்படி சொல்லாதே என்று கெஞ்சுகிறான். 'மண்ணே கொள்நீ' என்றதால் பரதன் ஏற்கமாட்டான் என்பது வலியுறுகிறது. இராமன் காடு செல்ல வேண்டுமென்ற சொல்லைச் சொல்ல அரசனின் நா மறுக்கிறபடியால் 'மற்றையது' என்றான். வள்ளலின் மகளல்லவா என்று தூக்கிப் பேசுகிறான். உலோபத்தனம் செய்யலாமா என்றபடி. 'மண்' என்றதால், நீ ஆளுவதற்கு என்ன இருக்கப் போகிறது? இருந்தாலும் உருப்படப் போகிறதா? நாடாக இராது, மண்ணாகத்தான் இருக்குமென்று கூறினான் என்க. இதனை, 'பெற்றுடைய மண் அவளுக்கு ஈந்து பிறந்து உலகம்; முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி, உற்றுறைதும்' (பாடல் 627) என்பதாலறிக. தயரத மன்னன் இராமனை மகனாகப் பெற்றபோதே அவனுடைய உயிர் இராமனோடு ஒட்டிப் போய்விட்டது. இறைவனோடு பிணைந்த உயிர் அப்பிணைப்பை விட்டு என்றும் நீங்குவதில்லை. இதனை, 'மைந்தனலாது உயிர் வேறு இலாத

மன்னன்' (பாடல் 516) என்பதா லறிக. மைந்தன் என்றது மற்ற மக்களை ஒழித்து இராமன்மேல் நின்றதாம். தயரதனுக்கு உடலுமுண்டு; உயிருமுண்டு. ஆனால், அவ்வுயிர் இராமனோடு கலந்துவிட்டது. இனி, தயரதனது உயிரினின்றும் உடலைப் பிரிக்க முடியுமன்றி இராமனினின்றும் உயிரைப் பிரித்தல் ஆவதில்லை. உலகவாழ்வில் பொருந்தி யிருப்பவன் பற்ற வேண்டியது கடவுளின் தொடர்பையேயாம். ஆனால், தவம் பூண்டு உலகப்பற்றை விட்டுவிட நினைத்தாலும் அக் கடவுளின் பற்றைத்தான் பற்றவேண்டும் என்பார், 'பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' (திருக்குறள் 350) என்றாரென்பது இங்கே நினைவு கூரத் தக்கதாம். கடவுளை ஒருமுறை பற்றிக்கொண்டால் பின்னர் மற்ற பற்றுக்கள் நீங்குவதன்றி, கொண்ட கடவுளின் பற்று நீங்குவதே இல்லையென்க. 'உன்பற்றொழிய ஒருபற்றுமில்லை உடையவனே' (பட்டினத்தார்) என்றதும் அது. எனவே, 'ஆவி உனதன்றோ' என்றதற்கு, 'தன்னுடைய உயிரை விட்டு உடலைப் பிரிக்கச் சொன்னாலும் உடன்படுகிறேன்' என்பது தான் கொள்ளத்தக்க பொருளாகும். உயிர், பிரித்துக் கொடுக்கக் கூடிய பொருளுமன்று. 'எதை வேண்டுமானாலும் தருகிறேன்' என்று உள்ளத்தில் எழுந்த வேகத்தை விளக்கவந்த சொற்களே இவையாம்.

சத்தியத்துக்கு வேறு யார் உண்டு?

524 இன்னே இன்னே பன்னி
இரந்தான் இகல்வேந்தன்;
தன்னேர் இல்லாத் தீயவள்
உள்ளம் தடுமாறாள்;

524. பன்னுதல் - விடாமல் திருப்பிச் சொல்லல்.

'முன்னே தந்தாய் இவ்வரம்,
நல்காய், முனிவாயேல்
என்னே! மன்னா! யார்உளர்
வாய்மைக்கு இனி' என்றாள். உரு

வெற்றியையுடைய மன்னன் இவ்வாறு சொல்லிச் சொல்லி இரந்தான். (தீமை செய்வதில்) தனக்கு இணையில்லாத தீயவளாகிய கைகேயி, மனந்தடுமாறாதவளாய் 'முன்னே இவ்வரத்தைத் (வாயினால்) தந்தாய். (இப்பொழுது செயவில்) தராமல் கோபப்படுவாயானால் என்ன அநியாயம்! அரசனே! சத்தியத்தைக் காப்பதற்கு இனி யார் இருக்கின்றனர் என்றாள்.

(வி - ம்) நீ இப்படிச் சொல்மாறுவதென்றால், சத்தியமே உலகில் இராது தொலைந்து போகுமே என்று கூறுகிற கைகேயியைத் 'தன்னேர் இல்லாத் தீயவள்' என்றார். நன்மைக்கு அடிப்படையான வாய்மையையே தீமைக்கும் அடிப்படையாகக் கொண்டு கைகேயி பேசுவது நோக்கத்தக்கது. உண்மையானாலும் தீமைக்கு இடமளிப்பதாயின் அது வாய்மை அன்றென்பது, 'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்; தீமையிலாத சொலல்' (திருக்குறள்) என்பதால் அறியப்படும்.

இன்னும் பிச்சைதான் கேட்கிறேன்

525 அச்சொற் கேளா, ஆவி,
புழுங்கா, அயர்கின்றான்
பொய்ச்சொற் கேளா வாய்மொழி
மன்னன்; பொறைகூர

---

525. வாய்மொழி - வாய்மை மொழி. நாணுதல் - மனங்குன்றுதல். முச்சற்றார் - நடைப்பிணம் போன்றார்.

நச்சுத் தீயே பெண்ணுரு
அன்றே எனநாணு,
முச்சற் றூர்போல் பின்னும்
இரந்தே மொழிகின்றான். உசு

பொய்யான சொற்களைக் கேளாத வாய்மையை யுடைய மன்னன், கைகேயி அவ்வாறு கூறியதைக் கேட்டு உயிர் அவிந்து, அயர்ந்துபோய் பொறுமை மிகுதியினாலே, நஞ்சு கலந்த தீதான் இப்பெண்ணுருவாக வந்திருக்கிறது என்று மனங்குன்றி உயிரிருந்தும் இல்லாதவரைப் போலப் பின்னும் கெஞ்சியே பேச முற்பட்டான்.

(வி - ம்) தயாதனுக்கு நல்லோர்களே நட்பினராதலால் பொய் பேசார். தீயோர் இவன் முன்பு பொய்பேச அஞ்சினர். எனவே, பொய்யான சொல்லையே கேட்டதில்லை என்றார். பொறுமை கொண்டு பேசி அவளை வழிக்குக் கொண்டுவா நினைத்தானாதலால் கோபம் மிகுவதை அடக்கிப் பொறுமை மிகுவதை, 'பொறைகூர' என்றார். முச்சற்றார் —மூச்சு அற்றார்; வாழ்க்கையின் மூச்சாகிய மானம் போனவர் என்றவாறு. தயரதன் மன்னர்மன்னன்; பண்பு நிறைந்தவன்; தேவராலும் முனிவராலும் மதிக்கப்படுபவன். தன் பெருமையைக் கைவிட்டுக் கைகேயியின் காலில் விழுவதற்கு அற்பக் கூனியின் இடையீடே காரணமாம். 'நிறைகயத்து, ஆழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும், யானை நிழல்காண் பரிது' (நீதிநெறி விளக்கம் 54). நஞ்சு பிறர் உயிரை நீக்குதற்கும், தீ கொடுமைக்கும் உவமை. வாய்மொழி - வாயில் வரத்தக்க மொழி. அதுதான் வாய்மை. தீய சொல் முதலியன வாயில் வரத்தக்கன அல்ல. ஆதலால் அவை வாய்மை அல்ல. பின்னும் என்பதன் உம்மை இழிவு சிறப்பு.

நீ ஆண்டுகொள்! இராமனை விடு!

526 'நின்மகன் ஆள்வான்; நீஇனிது
ஆள்வாய்; நிலமெல்லாம்
உன்வயம் ஆமே; ஆளுதி!
தந்தேன்! உரைகுன்றேன்!
என்மகன், என்கண், என்உயிர்,
எல்லா உயிர்கட்கும்
நன்மகன், இந்த நாடுஇற
வாமை நய'என்றான். உஎ

நின் மகன் பரதன் ஆள்வானாக; நீ இனிதாக ஆட்சி புரிவாயாக; உலகமெல்லாம் உன்வசமாகிவிடும்; (மன மகிழ்ச்சியோடு) ஆண்டுகொள்; தந்துவிட்டேன்; சொல் தவறமாட்டேன்; (ஆனால்) என்னுடைய மகன், என்னுடைய கண், என்னுடைய உயிர், (எனக்கு மட்டுமா?) உலகிலுள்ள எல்லா உயிர்கட்கும் நல்ல மகன். அவன் இந்த நாட்டை விட்டுச் செல்லாதிருக்கும்படி கருணை செய்வாயாக என்றான்.

(வி - ம்) உன் மகன் ஆளட்டும். என் மகனைக் காட்டுக்குப் போகும்படி சொல்லாமலிரு என்று கெஞ்சினான். என் மகன் மட்டுமா? என் கண்; என் உயிர்; எனக்கு மட்டுமா? உலகின் உயிர் வருக்கம் யாவுக்கும் அவன்தான் நல்ல மகன் என்றபொழுது கைகேயியின் தன்னலத்தின் இழிவு விளக்கமாகிறது.

என் உயிர் உனக்கு அபயம்

527 மெய்யே என்றன் வேரற
நாறும் வினைநோக்கி,
நையா நின்றேன்; நாவும்
உலர்ந்தேன்' நளினம்போல்

526. வயம் - வசம். நய - அருள்செய்.

கையான் இன்றுஎன் கண்ணெதிர்
நின்றும் கழிவானேல்,
உய்யேன் ; நங்காய்! உன்அப
யம்என் உயிர் !'என்ருன். உஅ

உண்மையே, என்னுடைய வேரை அறும்படி அழிக்கின்ற செயலை எண்ணித் துன்பப்படுகிறேன் ; நாவிலும் (உன்னோடு பேசியதால்) நீர் வற்றிக் காய்ந்து விட்டது. தாமரை மலர் போன்ற கைகளையுடைய இராமன், இன்று என் கண்ணுக்கு முன்பாக நிற்பதை விட்டு (காட்டுக்கு) நீங்குவானானால், நான் பிழைக்கமாட்டேன். பெண்ணே ! என் உயிர் உனக்கு அடைக்கலம்.

(வி - ம்) உயிர் என்றது இராமனை என்க. தயரதன், தான் இறப்பதைப் பற்றி அணுவளவும் கவலை கொள்ளவில்லை. 'உண்ணோராவி வேண்டினும் இன்றே உனதன்றோ' (பாடல் 523) என்றானதலின். தயரதனுக்கு உயிர் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இப்பொழுது இராமன் அருகிலிருந்தால் உயிரிருக்கும் ; அவன் பிரிந்தால் உயிர் பிரியும் ; இவ்வுறுதி பற்றியே மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன் என்றார். இதனால் அரசன் உயிர் இராமனோடு இரண்டறக் கலந்துவிட்ட தென்க. மேலும், தன்னுயிரை விடச் சம்மதிக்கிறான் ; இராமன் காட்டுக்குப் போவதை மறுக்கிறான். எனவே தன்னுயிரின் உயிர் இராமனே என்பது திண்ணமாகிறது. அவ்வாறாயின் இங்கே என் உயிர் உனக்கு அடைக்கலமென்றபொழுது இராமன் உன் அடைக்கலம் என்றே பொருள் கொள்ளப்பட வேண்டும். இராமனை இவளுக்கு அடைக்கலப் பொருளாக்கினால் அவ் அடைக்கலப் பொருளை வைத்துப் பாதுகாப்பது தள்ளமுடியாத கடமை

527. நளினம் - தாமரைப்பூ. கழிதல் - நீங்குதல். உய்யேன் — பிழைக்கமாட்டேன்.

யாகிவிடுமென்பது மொன்று. தான் தவம்பூண நினைக்கும் போது இராமனைப் பிரியச் சம்மதித்த தயரதன் இப்பொழுது ஏன் உயிரைவிட முற்படுதல் வேண்டும்? கைகேயி இராமனைக் காட்டுக்குத்தவம் செய்யவே அனுப்புகிறாள். தயரதனும் தவம் புரிவதில் பெருவிருப்புக்கொண்டிருக்கிறான். எனவே, மகிழ்ச்சியோடு இராமனை அழைத்துக்கொண்டுதயரதன்வனத்திற்குச் செல்லலாமல்லவா? தயரதன் முன்பு செய்த ஏற்பாட்டினால் இராமன் நாட்டிலும் தான் காட்டிலுமாகப் பிரிந்திருக்க நேர்ந்தது. இப்பொழுதோ இருவரும் இணைபிரியாது இருக்கலாமன்றோ ? தயரதன் கருத்து அதுவன்று. நாடு நன்றாக ஆளப் படவேண்டும்; தான் கடைசி காலப்பேறாகத் தவம்புரியவேண்டும் என்பது அவன் கருத்தென்க. ஆளும் தகுதி யுடையோர் தவம் பூணல் தகாதென்பதும் ஒன்று.காடு துன்பம் நிறைந்தது. நாடு இன்பம் நிறைந்தது. இளமைப் பருவமுள்ள இராமன் எல்லா இன்பங்களையும் துய்த்து மன்னர் மன்னனாக ஆட்சி புரிய வேண்டும் என்று கருதினான். இங்கே இராமனின் பிரிவு தயரத மன்னனை விட்டுப் பிரிதல் மட்டுமன்று ; இன்பத்தையும் நாட்டையும் விட்டுப் பிரிதலும் ஆம். மேலும், காட்டில் இராமன் துன்பப்படுவான் என்பதையும் எண்ணினான். பாடல் 417-ல் 'இனி அவன் வருந்த' என்றதற்கு உண்மையிலேயே இராமன் துன்பப்பட என்று பொருள் காண்டல் பொருந்தாதென்பது ஈண்டு உணரப்படுவதாம்.

தந்தை இல்லை என்பது அறமாமா ?

528 இரந்தான் சொல்லும் இன்னுரை
கொள்ளாள் ; முனிவுஎஞ்சாள் ;
மரந்தான் என்னும் நெஞ்சினள் ;
நாணாள் ; வசைபாராள் ;

---

528. எஞ்சுதல் - தணிதல். சரம் - அம்பு. உரம் - வலிமை. நாணுதல் - கூச்சமடைதல்.

'சரந்தாழ் வில்லாய்! தந்த
வரத்தைத் தவிர்கென்றல்
உரந்தான் அல்லால் நல்லறம்
ஆமோ? உரை!' என்ருள். உகூ

இரந்து கேட்க முற்பட்ட தயரதன் சொல்கிற இனிய உரையைப் பொருளாகக் கொள்ளாதவளும், கோபம் தணியாதவளும், பட்டமரம் எனத்தக்க மனத்தையுடையவளும், தீமை கண்டு கூச்சப்படாதவளும், பழியை எண்ணிப் பாராதவளு மான அக் கைகேயி, 'குறி தவருது அம்பினை எய்யும் மன்னனே! தந்த வரத்தை விட்டுக்கொடு என்று கூறுதல் வன்கண்மையே அல்லாமல் நல்ல அறமாகுமா சொல்' என்ருள்.

(வி - ம்) தனக்குக் கணவன். உலகுக்குச் சக்கரவர்த்தி. அவன் காலில்விழுந்து வணங்கி இரந்து இனிய உரையால் கேட்கிருன். இந்நிலையில் ஒருவருக்கு உண்டாக வேண்டியவை: உரையைக் கேட்டல், கோபம் தணிதல், இரக்கமுண்டாதல், நிலைமையை எண்ணி மனங் குன்றல், பழிக்கு அஞ்சுதல், முதலிய குணங்கள் ஆம். இவையொன்றும் கைகேயியிடம் காணப்படவில்லை. எதனுல்? நெஞ்சுபட்ட மரமாயிற்றென்க. உயிர்த் தத்துவம் அற்றுப் போய்விட்டது. மேலும் என்ன கூறினுள்? உன்னுடைய அம்பு எதிரிகள்மேல் தவருது பாயும். அதை நினைத்துக் கொண்டு என்னிடத்து வலிமை காட்டுகிருய். இதுசிறந்த அறமாகுமா? வாய்மை மன்னனை நீயே சொல் என்ருள். சொல்ல இனிஎன்ன இருக்கிறது.

அரசன் கீழே விழுந்தான்

529 கொடியாள் இன்ன கூறினள்;
கூறக் குலவேந்தன்,
முடிசூ டாமல் காத்தலும்
மொய்கான் இடைமெய்யே

---

529. காத்தல் - தடுத்தல்.

நெடியோன் நீங்க நீங்கும்
என்ஆவி இனிஎன்னா,
இடியேறு உண்ட மால்வரை
போல்,மண் ணிடைவீழ்ந்தான். ௩௦

கொடியவளான கைகேயி இப்படிப்பட்ட சொற்களைச் சொன்னாள். சொல்ல, பாம்பரையிற் சிறந்த அரசன், 'முடியை (இராமன்) சூடாதபடி தடுத்து விட்டபடியால், மரமடர்ந்த காட்டினிடை உண்மையாகவே நெடியோனாகிய இராமன் (நீங்குவான். அவன்) நீங்குவானாகில் என் ஆவி இனி நீங்கும்' என்று சொல்லிக்கொண்டு பேரிடியால் தாக்குண்ட பெரிய மலையைப்போல நிலத்தின்மேல் வீழ்ந்தான்.

கிடந்து புரள்கிறான்

530 வீழ்ந்தான் வீழா வெந்துய
ரத்தின் கடல்வெள்ளத்து
ஆழ்ந்தான்; ஆழா அக்கட
லுக்குஓர் கரைகாணான்;
சூழ்ந்தாள் துன்பம் சொற்கொடி
யாள்சொற் கொடுநெஞ்சம்
போழ்ந்தாள் உள்ளப் புன்மையை
நோக்கிப் புரள்கின்றான். ௩௧

(மன்னன் தரையில்) வீழ்ந்தான். விழுந்து கொடிய துயரமான கடலினது நடுவெள்ளத்து ஆழ்ந்தான். ஆழ்ந்து அத்துயரக் கடலினின்று வெளியேறுவதற்குரிய ஒரு கரையையும் கண்டானில்லை. துன்பத்துக்கு வழி கண்டவளும், சொல்லெல்லாம் கொடுமை பூண்டவளும், சொற்

530. வீழா - வீழ்ந்து. சூழ்தல் - ஆலோசித்தல். போழ்தல் - பிளத்தல்.

களைக் கொண்டு நெஞ்சைப் பிளந்தவளுமான கைகேயியின் உள்ளத்தில் ஏற்பட்ட அற்பத்தனத்தை எண்ணிக் கீழே கிடந்து புரண்டான்.

கணவனைக் கொல்வாளா?

531 ஒன்று நின்ற ஆருயி
ரோடும் உயர்கேள்வர்
பொன்று முன்னம் பொன்றினர்
என்னும் புகழல்லால்,
இன்றோர் காறும் எல்வளை
யார்தம் இறையோரைக்
கொன்றார் இல்லை; கொல்லுதி
யோ நீ கொடியாளே! ௩௨

உயர்வுக்குரிய தங்கணவர் இறக்கும்போது, அவர் உயிருடன் பொருந்திய அரிய உயிருடன் தாமும் இறந்தனர் என்று புகழப்பட்டாரல்லாமல், இன்று வரையும் ஒளி பொருந்திய வளையலணிந்த பெண்களில் தம் கணவரைக் கொன்றார் யாரும் இல்லை. கொடியவளே! நீ (என்னைக்) கொல்கிறாயா?

(வி - ம்) கணவன் இறந்தால் மனைவியும் உயிருடன் விழுந்து இறப்பதைத்தான் கேட்டிருக்கிறோம். இதுவரை கணவனைக் கொன்ற கதையைக் கேட்டதில்லையே என்கிறான். இன்றோர் என்பதிலுள்ள ஓர் - அசை. கேள்வர் இறையோர் என்ற பன்மைச் சொற்கள் தனித் தனிப் பெண்கட்குத் தனிக் தனிக் கணவன் என்ற பொருளின் நிற்பனவாம்.

---

531. ஒன்றுதல்-பொருந்துதல். கேள்வர்-கணவர். பொன்றுதல் - சாதல். எல் - ஒளி. இறையோர் - கணவர்.

மனைவியாலா சாவு?

532 மன்னுள் கின்றூர் ஆகி,
வலத்தால் மதியால்வைத்து
எண்ண நின்ருர் யாரையும்,
எல்லா இகலாலும்
விண்ணோர் காறும் வென்ற
எனக்கு,என் மனைவாழும்
பெண்ணால் வந்தது அந்தரம்
என்னப் பெறுவேனே? ௩௩

நிலத்தை ஆள்பவராகி வலிமையினுலும் அறிவு நுட்பத்தாலும் மேலாக வைத்து எண்ணும்படி ஆட்சி புரிந்த யாவரையும், எல்லாவிதமான போர் முறையினுலும் வானில் வாழ்வோர் வரை வெற்றி கொண்ட எனக்கு, என் மனைவியினல் வந்தது முடிவு என்று சொல்லும்படியான நிலைமையை அடைகின்றேனே.

(வி - ம்) ஒருவனை மற்றவன் வெல்ல இருவகையுண்டு. உடல் வலிமையும் அறிவு வலிமையுமாம். இவ்விரண்டிலும் நிகரற்றிருந்தவன் தயரதன். அவன் இருக்கிற வரையும் புகழோடிருந்தான். நல்ல வகையில் சாதல் வேண்டுமென்று கருதினன். 'ஒட்டிய பகைஞர்வந் துறுத்த போரிடைப், பட்டவர் அல்லரேல் பரம ஞானம் போய்த், தெட்டவர் அல்லரேல் செல்வம் ஈண்டென, விட்டவர் அல்லரேல் யாவர் வீடுளார்? (பாடல் 415) என்று கூறிய தன்னுடைய முடிவு காலம் இப்படியா முடிய வேண்டும் என்று ஏங்கினன். 'மனைவி' என்று சொல்ல நாணி 'மனை வாழும் பெண்' என்றுனென்க. தேவர்கட்கு இடையூறு செய்து விண்ணில் வாழ்வோர்களை விண்ணவர் என்றூர்.

---

532. இகல் - போர். அந்தரம் - முடிவு. விண்ணவர் - வானில் வாழ்வோர்.

துன்பத்தால் தவிக்கிறான்

533 என்றென்று உன்னும்; பன்னி
உயிர்க்கும்; இடர் தோயும்;
ஒன்றொன்று ஒவ்வா இன்னல்
உழக்கும்; உயிருண்டோ
இன்றுஇன்று என்னும் வண்ணம்
மயங்கும்; இடியும்; பொற்
குன்றுஒன்று ஒன்றோடு ஒன்றியது
என்னக் குவிதோளான். நஉச

பொன்மலை ஒன்றோடு ஒன்று பொருந்தியிருப்பதைப் போன்ற திரண்ட தோள்களையுடைய மன்னன், மேற் கூறிய வாறு பலபடியாக நினைப்பான்; சொல்லிச் சொல்லிப் பெரு மூச்சு விடுவான்; துன்பக் கடலில் மூழ்குவான்; ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் துன்பப்படுவான்; உயிர் இருக் கிறதா இல்லை இல்லை என்பான்; நிறம் மாறுபடுவான்; மனம் உடைவான்.

(வி - ம்) ஒரு நிகழ்ச்சி பற்றி ஒரே நினைவாகப் படுகிற துன்பம் ஓரிடத்தில் நின்று சலித்து ஆறிவிடக் கூடும். ஒன்றினாலேற்பட்ட துன்பத்தில் பல நினைப்புக் கிளைக்குமா னால் துன்பம் பெருகுவதன்றி அடங்காது. பிள்ளை இல்லை யென்ற பெருந்துன்பம் ஏற்பட்டது. அதுநீங்கி ஒரே இன் பத்தில் திளைத்திருந்தான். இப்பொழுது எதிர்பாராத பெருந் துன்பம் வந்திருக்கிறது. இனிமேல் எப்படியெல்லாம் வருமோ என்ற நினைப்பினால் தயரதனுக்குத் துன்பம் வளர் கிறது. மறந்த நிகழ்ச்சியெல்லாம் நினைவுக்கு வருகின்றன. அதனை, 'ஒன்றொன் றொவ்வா இன்னல்' என்றார்.

---

533. உன்னுதல் - நினைத்தல். உழத்தல் - வருந்தல். வண்ணம் - உடலின் நிறம். மயங்குதல் - மாறுபடுதல். இடிதல் - உடைதல்.

சொன்னபடி தராவிட்டால் சாவேன்

534 ஆழிப் பொற்றேர் மன்னவன்
இவ்வாறு அயர்வெய்தி,
பூழிப் பொற்றோள் முற்றும்
அடங்கப் புரள்போழ்தில்,
'ஊழிற் பெற்றால் என்உரை!
அன்றேல் உயிர்மாய்வென்!
பாழிப் பொற்றார் மன்னவ!'
என்றாள் பசைஅற்றாள். ௩௫

சக்கரத்தைக் கொண்ட, பொன்னினால் அழகு செய்யப் பட்ட தேரையுடைய மன்னவன் இவ்வாறு தளர்ச்சியடைந்து அழகிய தோள் முழுமையும் புழுதிபடியப் புரண்டுகொண்டு கிடக்கும்போது 'என் வரத்தை முறையாகப் பெற்றால் (உயிருடனிருப்பேன்.) அன்றெனில் உயிரை மாய்த்துக் கொள்வேன். வலிமையுடைய அழகு பொருந்திய மாலை அணிந்த அரசனே! என்றாள் உள்ளத்தில் ஈரமற்றவளாகிய கைகேயி.

(வி - ம்) பொழுது விடியப்போகிற நேரம் நெருங்கி வருகிறது. ஊர் திரண்டால் ஒன்றும் எளிதாக நடவாது. ஆதலால் இனித் தாமதிக்கப்படாதென்று கருதினாள். அறிவு கலங்கிப் புலம்பிக்கொண்டு கிடந்து உழல்கிற மன்னன் அருகில் வந்து சொன்னபடி வரத்தைத் தருகிறாயா சாகட்டுமா என்று தன் கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டு மிரட்டினாள் போலும். பொன் மாலை யணிந்த கழுத்தில் பழிமாலை சூட்டுவேன் என்றாள் என்க. பெற்றால் என்னும் எச்சம் சொல்லின் வேகத்தில் முடிவடையவில்லை. அடுத்த வாக்கியத்தை அவாவி நின்றது.

---

534. ஆழி - தேரின் உருளை. பூழி - புழுதி. ஊழ் - முறை. பாழி - வலிமை.

தந்தேன்! தந்தேன்!

535 வீய்ந்தா ளேஇவ் வெய்யவள்
என்னு மிடல்வேந்தன்,
'ஈந்தேன்! ஈந்தேன் இவ்வரம்!
என்சேய் வனம்ஆள,
மாய்ந்தே நான்போய் வானுலகு
ஆள்வென்; வசைவெள்ளம்
நீந்தாய்! நீந்தாய்! நின்மக
னேடும் நெடிது!' என்றான். ௩௬

(வரத்தைக் கொடாவிட்டால்) இக் கொடியவள் இறந்த வளே யாவாள் என்று கருதி வலிமையுடைய அரசன் இவ் வரத்தைத் தந்தேன்; தந்தேன். என் மகன் வனத்திற் செல்ல நான் மாய்ந்துபோய் வானுலகத்தை அடைவேன். என்றென் றும் நின் மகனேடு சேர்ந்து (இன்று விழுகிற) பழிக் கடலில் கிடந்து நீந்திக் கரையேற மாட்டாய் என்றான்.

(வி - ம்) இவள் இறப்பாள். இறந்தால் நாம் கொடுத்த வாக்கு நிறைவேறியதாகாது. பெண் கொலைக்கு ஆளாவது மாகுமென்று மன்னன் அஞ்சி அலறிக்கொண்டு வரம் தந் தேன் என்றான். இரு வர மாதலின் இரு முறை ஈந்தேன் என்று கூறினனென்க. உறுதி பற்றி எனினும் அமையும். விரைவு பற்றி 'வீய்ந்தாள்' என இறந்த காலத்தாற் கூறப் பட்டது. வெள்ளத்திலிருந்து கரையேறமாட்டாய் என்னுது நீந்தாய் என்றது வெள்ளத்தில் அமிழ்ந்தே போவாய் மிதக் கவே மாட்டாய் என்றவாறு. வினையிலான கனம் குறைந்தால் உயிர் மேலே செல்லும்; வினையின் கனம் ஏறஏற உயிர் கீழே அழுத்தப்படுமாதலின் நீ கீழேதான் போவாய் என்பதும்

535. வீதல் - சாதல். மிடல் - வலிமை. நெடிது - நீண்ட காள்.

ஒன்று. 'நெடிது' என்ற சொல்லின் வேகம் 'என்றென்றும்' என்ற பொருளைத் தரும்.

கவலை நீங்கித் தூங்கினள்

536 கூறு முன்னம் கூறு
படுக்கும் கொலைவாளின்
ஏறும் என்னும் வன்துயர்
ஆகத்து இடைமூழ்கத்
தேறான் ஆகிச் செய்கை
மறந்தான்; செயல்முற்றி
ஊறு நின்ற சிந்தையி
னாளும் துயில்வுற்றாள். ௩௭

அரசன் இவ்வாறு சொல்லி முடிக்கும்போதே, உடலை வெட்டிச் சிதைக்கும் கொலைவாள்களின் தலைமைவாள் என்று சொல்லத்தக்க வலிய துயரமானது மனத்தில் அழுந்த, அறிவிழந்து செயலற்றுக் கிடந்தான். தன் காரியத்தை முடித்துக் கொண்டு களிப்பு ஊறிப் பெருகுகின்ற உள்ளத்தாளாகிய கைகேயி (நன்றாகப் படுத்துத்) தூங்கினாள்.

(வி - ம்) இதுவரை இடையிடையே அரசனுக்குத் தெளிவேற்பட்டது. இப்போது நிகழ்ச்சி ஒருவாறு முடிந்துவிட்டபடியால் தெளிவடையாமல் ஒரே விழுக்காடாகி விட்டான். வரம்தருவானோ தரமாட்டானோ என்று கலக்கமுற்றிருந்த கைகேயிக்கு வரம் கிடைத்து விட்டதால் கவலை நீங்கியது. காரியசித்தி பெற்றோமென்ற மகிழ்ச்சி ஏற்படவே ஆனந்தமாகத் தூங்கத் தொடங்கிவிட்டாள். பெருந்துயருற்றார்க்கும் பெருமகிழ்ச்சி யடைந்தார்க்கும் அயர்வு ஒன்றேயாயிற்றென்னும் நயம் உணரத் தக்கதாம். அவனும் செய

---

536. ஏறு - ஆண். ஆகம் - மனம். தேறான் - தெளிவு பெறாதவன். ஊறுநின்ற - ஊறுகின்ற. துயில்வு - தூக்கம்.

லற்றுக் கிடந்தான்; அவளும் செயலற்றுத் தூங்கினள். கொலை வாளில் சிறந்ததை 'வாளின் ஏறு' என்றார். 'சிங்க ஏறு' என்றாற் போல. மிகுந்த தோய்ச்சல் கொடுக்கப்பட்ட வாள் என்றவாறு.

இரவு நீங்கிற்று

537 *சேண்உ லாவிய நாள்எ லாம்உயிர்
ஒன்று போல்வன செய்துபின்
ஏண்உ லாவிய தோளி னான்இடர்
எய்த ஒன்றும் இரங்கிலா
வாள்நி லாநகை மாத ராள்செயல்
கண்டு மைந்தர்முன் நிற்கவும்
நாணி னாள்என ஏகி னாள்நளிர்
கங்கு லாகிய நங்கையே. ௫அ

(மணம் செய்துகொண்டதிலிருந்து) கழிந்து சென்ற நாட்களிலெல்லாம் ஒரு உயிரேபோன்ற செயல்களைச் செய்து, பிறகு வலிமை பொருந்திய தோள்களையுடைய அரசன் துன்பப்படும்போது ஒரு சிறிதும் இரங்காத, ஒளி பொருந்திய நிலவைப் போன்ற பல்வரிசையைக் கொண்ட கைகேயியின் செயலைக்கண்டு, குளிர்ந்த இரவாகிய நங்கை ஆண்மக்கட்கு எதிரில் நிற்கவும் வெட்கப்பட்டாள் என்று சொல்லும்படி சென்றாள்.

(வி - ம்) இது கவிக்கூற்று. இரவு பெண்ணாகக் கற்பிக்கப்பட்டது. ஒருவர் செய்யும் பிழை அவ்வினத்தையே தாக்குவது இயல்பு. ஒரு பெண் பிழை செய்ததால் பெண் குலத்துக்கே இழிவு வந்ததாகக் கருதித் தானும் பெண்ணாகலால் ஆண்களின் முன் நிற்கவும் நாணி மறைந்தாள் என்று,

---

537. சேண் - நீளம். ஏண் - வலிமை. வாள் - ஒளி. கங்குல் - இரவு.

நிகழ்ச்சியை இயற்கையின்மேல் வைத்துக் கூறினர். ஒருவர் தவறு செய்தால் அந்த இனம் முழுமைக்கும் பழி ஏற்படும் என்ற உலகியல் இங்கே இரவின் மேலேற்றிக் கூறப்பட்டது. பெண் குலத்திற் பிறந்த கைகேயி செய்த தீமைக்குப் பெண் குலத்தையே ஒழிக்கலாமென்ற அளவுக்குப் பெண்ணினத்தைத் தயரதன் நோக்கினன். 'நாரியர் இல்லைஇஞ் ஞால மெங்கும் என்னக், கூரிய வாள் கொடு கொன்று நீக்கி' என்றான் (பாடல் 518). சீதையைக்கண்ட அனுமன் அவளின் மேன்மை மாதர் எல்லார்க்கும் ஆயது என்று கூறினன். 'சோகத்த ளாய நங்கை கற்பினல் தொழுதற் கொத்த, மாகத்தார் தேவி மாரும் வான் சிறப்புற்றார்' (திருவடி தொழுத படலம்). கைகேயி கொடியவளாதலின் கங்குல் குளிர்ச்சியுடையவள் எனப்பட்டது.

விரித்த பந்தரைப் பிரித்தது

538 சிரித்த பங்கயம் ஒத்த செங்கண்
இராம னைத்திரு மாலைஅக்
கரிக்க ரம்பொரு கைத்த லத்துஉயர்
காப்பு நாண்அ ணிதற்குமுன்
வரித்த தண்கதிர் முத்த தாகிஇம்
மண்அ னைத்தும்நி ழற்றமேல்
விரித்த பந்தர் பிரித்த தாம்என
மீன்ஒ ளித்தது வானமே. ௩௧

மலர்ந்த செந்தாமரையைப் போலச் சிவந்த கண்களையுடைய திருமாலாகிய இராமனது, யானையின் துதிக்கையைப் போன்ற கையிலே சிறந்த காப்புநாணைக் கட்டுவதற்கு முன்பு,

---

538. சிரித்தல் - மலர்தல். பங்கயம் - தாமரை மலர். கரி - யானை. கரம் - கை. பொரு - ஒத்த. நாண் - கயிறு. வரித்த - கட்டிய. நிழற்ற - நிழல் செய்ய.

கட்டின குளிர்ந்த ஒளியுள்ள முத்துக்களை யுடையதாய் இவ் வுலக முழுமையும் நிழல் செய்யும்படி விரித்துப் போடப்பட் டிருந்த பந்தரைப் பிரித்து விட்டார்கள் என்று சொல்லும்படி வானமானது நட்சத்திரங்களை மறைத்தது.

(வி - ம்) மங்கல காரியம் தொடங்கும்பொழுது, அது இனிது நிறைவேறும் பொருட்டு இடையூறு நிகழாதிருக்க வேண்டுமென்று மஞ்சள் தோய்த்த நூற்கயிறு கொண்டு கையில் காப்புக் கட்டுதல் மரபு. இராமன் உலகுக்கு நாயக னாதலால் உலகம் முழுமைக்குமே ஒன்றாகப் பந்தர் போடப் பட்டிருந்த தென்பது கற்பனை. சக்கரவர்த்தியின் மகனான இராமனுக்கு முடி சூட்டு விழா. திருமாலுக்கே முடி சூட்டு கிறார்கள் என்றால் சிறிய பந்தர் போதுமா? முடி சூட்டு நாளுக்கு முதல் நாள் இரவில், முத்துக்களால் ஒரு பந்தரை அமைத்தமாதிரி வானம் விளங்கியது. ஆனால், பட்டம் இல்லை என்றவுடன் பந்தரைப் பிரித்துவிட்டாற்போல மீன்கள் மறைந்து விட்டன என்ற கற்பனை மேம்பட்டதாகும். இர வில் ஏராளமான மீன்கள் வானம் நிறைய இருந்தன. விடிய வும் மறைந்தன என்பதுதான் பொருள்.

சூரியன் உதித்தான்

539 தூபம் முற்றிய கார்இ ருள்பகை
துள்ளி ஓடிட உள்எழும்
தீபம் முற்றவும் நீர்த்துஅ கன்றென
சேயது ஆர்உயிர் தேய்தலால்,
பாவம் முற்றிய பேதை செய்த
பகைத்தி றத்தினில் வெய்யவன்
கோபம் முற்றி மிகச்சி வந்தனன்
ஒத்தனன் குணக் குன்றிலே. ௬௦

---

539. தூபம் - புகை. நீர்த்து - குளிர்ந்து; அணைந்து. அகன்று : நீங்கி. முற்றிய - பழுத்த; மிகுந்த.

புகையைப் போல நிறைந்த கரிய இருளாகிய பகைவன் துள்ளி ஓடவும், மாளிகையினுள் எறிந்த விளக்குகள் யாவும் அவிந்து (ஒளி) நீங்கிடவும், தன் மகனான தயரதனுடைய அரிய உயிர் தேய்தலால் பாவம் மிகுந்த பேதைக் கைகேயி செய்த பகைக்கொடுமையைக் கண்டவனாகிய சூரியன் பெருங் கோபங் கொண்டு கிழக்கு மலையிலே மிகச் சிவந்தவனை ஒத்தனன்.

(வி - ம்) சூரியன் உதித்தான் என்பது பொருள். சூரியன் கோபத்தால் சிவந்தான்; நம்மீதுதான் கோபமோ என அஞ்சி இருள் ஓட்டமெடுத்தது; விளக்கெல்லாம் ஒழிந்தன; கோபம் ஏன் வந்ததென்றால் தன் பரம்பரையில் வந்த மகன் உயிரை ஒருத்தி தலைப்பட்டுத் தேய்த்துவிட்டாள். அவ்வுயிர் அழிகிறது. ஆதலால் கோபம் வந்தது. இது ஓர் அற்புதமான கற்பனை. ‘புகை பழுத்த கார் இருள்’ ‘பாபம் பழுத்த பேதை’ ‘கோபம் பழுத்துச் சிவந்தனன்’ எண்ணி இன்புறத் தக்கன. உயிர் தேய்தலாவது உடல் முழுமையும் விரிந்து பரந்து நிற்கும் உயிர் சிறிது சிறிதாக அடங்கி வலி குறைந்து வருதலாம். ‘சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றும் திருப்பெருந் துறையுறை சிவனே’ (திருவாசகோயில் - திருப். 7) என்பதானறிக.

மன்னர் வெள்ளம்

540 *இமிழ்திரைப் பரவை ஞாலம்
  எங்கணும் வறுமை கூர
உமிழ்வதுஒத்து உலவு காதல்
  உந்திட வந்தது அன்றே;

---

540. இமிழ் - ஒலி. பரவை - கடல். ஞாலம் - நிலம். குமிழ்- நீர்க்குமிழி. கொண்கன் - கணவன்.

குமிழ்முலைச் சீதை கொண்கன்
கோமுடி புனைதல் காண்பான்
அமிழ்துஉணக் குழுவு கின்ற
அமரரின் அரச வெள்ளம். சக

ஒலிக்கின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட நிலவுலகம் முழுமையும் மக்கள் இல்லையென்னுமாறு (பிடித்து வெளியே)தள்ளுவதை ஒத்து, உள்ளத்திலே எழுகின்ற ஆசை செலுத்திட, குமிழ் போன்ற தனத்தினையுடைய சீதையின் கணவனது சிறந்த முடி சூட்டுவிழாவைக் காணும்பொருட்டு, அமுதம் உண்ணுதற்குக் கூடிய தேவர் கூட்டத்தைப்போல மண்ணரசர் கூட்டம் கடல்போல வந்துகொண்டிருந்தது.

(வி - ம்) மக்கள் இல்லாவிட்டால் ஊரில் செல்வமேது? அழகேது? மக்கள் யாவரும் அயோத்தியை நோக்கி வெளியேறி விட்டனர். எனவே, அயோத்தியைத் தவிர்த்த ஏனை இடமெல்லாம் வறுமை யடைந்துவிட்ட தெனப்பட்டது. சோழன் பிறந்தநாள் விழாவில் யாவரும் இன்புற்றனர்; (வீடு சுத்தம் செய்தபடியால்) சிலம்பி தன் கூட்டினையும் இழந்தது என்ற உயர்வு நவிற்சி இங்கு நோக்கத்தக்கது. 'அந்தணர் ஆவொடு பொன் பெற்றார் நாவலர், மந்தரம்போல் மாண்ட களிறு ஊர்ந்தார்—எந்தை, இலங்கிலைவேற் கிள்ளி இரேவதி நாள் என்னோ சிலம்பிதன் கூடிழந்தவாறு. (முத்தொள்ளாயிரம்) நகரங்கள் தம்முள் உள்ள மக்களை வெளியே தள்ளுதலால் 'உமிழ்வதொத்து' என்றார். பெருங் கூட்டமாக நிறைந்து அயோத்தி நகருள் வருகிறாராதலின் அரசவெள்ளம் எனப்பட்டது. இராமன் அங்கே இருக்கிறவரை வெள்ளம் பெருகிற்று. அவன் வெளியேறியபொழுது, அயோத்தியில் இருந்த மக்களும் சேர்ந்து செல்ல ஊர் அடியோடு வற்றி வறுமை யடையும் என்பது, 'ஏவிய குரிசில்பின் யாவர் ஏகி

லார்,......ஓவியம் ஒழிந்தன உயிரிலாமையால்' (பாடல் 697) என்பதால் அறியப்படும்.

மகளிர் கூட்டம்

541 குவளையின் எழிலும் வேலின்
கொடுமையும் குழைத்துக் கூட்டித்
திவளும் அஞ்சனம் என்று ஏய்ந்த
நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளஒண் மதியுள் வைத்த
தன்மைசால் தடம்கண் நல்லார்
துவளும்நுண் இடையார் ஆடும்
தோகைஅம் குழாத்தில் தொக்கார். சஉ

நீலோற்பல மலரின் அழகையும் வேலின் கொடுந் தன்மையையும் சேர்த்துக் குழைத்து, அஞ்சனம் என்று பொருந்திய நஞ்சையும் விளங்கத் தடவி, வெண்மையான தூய சந்திரனில் பதித்து வைத்ததைப்போன்ற தன்மையைக் கொண்ட விசாலமான கண்களையுடைய நல்லாராகிய துவள்கின்ற மெல்லிய இடையையுடைய பெண்கள், ஆடும் மயிற் கூட்டத்தைப் போல வந்து கூடினார்கள்.

(வி-ம்) பெண்களின் முகம் நிறைமதி போன்றது. அதில் பெரிய கண்கள் பதித்து வைக்கப்பட்டன போன்றிருக்கின்றன. அவைகளில் அழகிருக்கிறது. கொடுமையிருக்கிறது. கொல்லும் நஞ்சுமிருக்கிறது. பெருந்தன்மையுமிருக்கிறது. உயர்ந்த குணமும் சிறந்த அழகும் நீண்ட கூந்தலுமுள்ள பெண்களை ஒரு கூட்டமாகச் சேர்த்துப் பெருவிழாவில் விட்டுப் பார்த்தால் இப்பாடலின் வேகம் தெரிய வரும். நேருக்கு நேராகவே கண்டு கவி கூறுகிறார் என்ன

541. குவளை - நீல மலர். திவள்தல் - விளங்குதல். ஏய்தல் - பொருந்துதல். தவளம் - வெண்மை.

லாம். அவருடைய உள்ளம் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நேரே கண்டனுபவிக்கப் பாடல்கள் வெளிவந்துள்ளன என்க.

போங்கள்! போங்கள்!

542 பாகியல் பவளச் செவ்வாய்ப்
பணைமுலைப் பரவை அல்குல்
தோகையர் குழாமும் மைந்தர்
சும்மையும் துவன்றி, எங்கும்
'ஏகுமின்!' 'ஏகுமின்!' என்று என்று
இடைஇடை நிற்றல் அல்லால்,
போகில மீள கில்லா
பொன்னகர் வீதி எல்லாம். ௬௩

வெல்லப் பாகு போன்ற இனிமையும், பவளம்போற் சிவந்த நிறமும் உடைய வாயையும், பணைத்த மார்பையும், பரந்த அல்குல் பாகத்தையுமுடைய மயில் போன்ற பெண்களின் கூட்டமும், ஆடவரின் கூட்டமும் கலந்து, எங்கு பார்த்தாலும் போங்கள் போங்கள் என்று சொல்லிக்கொண்டு இடையிடையே நிற்பதல்லாமல், ஒருவரும் போகவும் முடியவில்லை. திரும்பவும் முடியவில்லை. (ஒரு வீதியில் மட்டுமல்லாமல்) அழகிய அந் நகரிலுள்ள எல்லா வீதிகளிலும் இப்படி நிறைந்து விட்டனர்.

(வி-ம்) நகரின் அகலத்துக்குமேல் மக்கள் வந்துவிட்டனர். எல்லா வீதியும் நிறைந்துவிட்டன. போங்கள் போங்கள் என்று எல்லாரும் சொல்லுகின்றனர். ஆனால், ஒரு அடி நகர்வதும் நிற்பதுமாக இருக்கிறதே யல்லாமல் செல்ல வழியில்லை. திரும்பியாவது போகலாமென்றால் பின்னாலேயும் அப்படித்தானிருக்கிறது.

---

542. தோகை - மயில். குழாம் - கூட்டம். சும்மை - கூட்டம். துவன்றி - கலந்து.

எது மிகுதி

543 வேந்தரே பெரிதுஎன் பாரும்
வீரரே பெரிதுஎன் பாரும்
மாந்தரே பெரிதுஎன் பாரும்
மகளிரே பெரிதுஎன் பாரும்
போந்ததே பெரிதுஎன் பாரும்
புகுவதே பெரிதுஎன் பாரும்
தேர்ந்ததே தேரின் அல்லால்,
யாவரே தெரியக் கண்டார். சச

வந்திருப்பவருள் அரசர் கூட்டந்தான் மிகுதி என்பர் சிலர்; அல்ல போர் வீரர்தான் மிகுதி என்பர் சிலர்; அல்ல ஆண்மக்கள் கூட்டந்தான் மிகுதி என்பர் சிலர்; அல்ல பெண்களின் கூட்டமே மிகுதி என்பர் சிலர்; வந்து சேர்ந்த மக்கள் தான் மிகுதி என்பர் சிலர்; இன்னும் வந்து கொண்டிருப்பவர் தொகைதான் மிகுதி என்பர் சிலர்; இவ்வாறு தாம் அறிந்ததை அறிந்ததல்லாமல் யார்தான் சரியாகப் பார்த்தவர்கள்?

(வி - ம்) ஒவ்வொருவரும் நின்ற இடத்தை விட்டு ஒருபுறமும் போக முடியவில்லை. ஆனால், கூட்டம் அதிகமென்று தெரிகிறது. ஒரு பக்கம் பார்த்தால் அரசராகத் தெரிகிறது. ஒருபுறம் பெண்ணாகத் தெரிகிறது. ஊருக்குள் வந்திருக்கும் மக்களே அதிகமென்று தோன்றுகிறது. பின்னாலிருந்து கூட்டம் வந்து வந்து நெருக்கிக்கொண்டே யிருப்பதால் வருவது அதிகமென்று தோன்றுகிறது. நின்ற இடத்தில் நின்றுகொண்டு மதிப்பிடுகிறதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லாமற் போய்விட்டது. 'தோள்கண்டார் தோளே

543. மாந்தர் - சாதாரண மனிதர். போந்தது - உள்ளேவந்து சேர்ந்தது. தேர்ந்தது - அறிந்தது.

கண்டார் தொடுகழற் கமலம் அன்ன, தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண்டாரும் அஃதே, வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்' (பாடல் 335) என்றதனோடு ஒப்பு நோக்குக.

அரசர் மண்டபம் புக்கனர்

544 சந்திரர் கோடி என்னத்
 தரளவெண் கவிகை ஓங்க
அந்தரத்து அன்னம் எல்லாம்
 ஆர்ந்தெனக் கவரி துன்ன
இந்திரற்கு உவமை சாலும்
 இருநிலக் கிழவ ரெல்லாம்
வந்தனர்; மௌலி சூடும்
 மண்டபம் மரபில் புக்கார். சரு

கோடிக்கணக்கான சந்திரர்கள் கீழிறங்கி வந்தனர் என்று கூறும்படி, முத்துக்களோடு கூடிய வெண் கொற்றக் குடைகள் உயர்ந்து விளங்க, அன்னப் பறவை யெல்லாம் மேலே பறந்து வந்து பொருந்தியதென்னும்படி சாமரைகள் நெருங்கிச் சுழல, தேவேந்திரனுக்கு உவமை சொல்லக்கூடிய அரசர்கள் எல்லாரும் வந்து முடிசூடுகிற மண்டபத்திற்குள் முறைப்படி புகுந்தார்கள்.

(வி - ம்) அவரவர் தகுதிக்கேற்ப யார் முதலில் செல்வது என்ற வரிசைப்படி செல்வதை முறைப்படி என்றார். உலகுக்கு ஒரு சந்திரன்தான் உண்டு. இங்கே விழாக் காண மிகுதியான சந்திரர்கள் வந்த மாதிரி இருக்கிறது, குடைகள்

---

544. கவிகை - குடை. அந்தரம் - வானம். ஆர்தல் - பொருந்துதல். துன்ன - நெருங்க. நிலக்கிழவர் - நிலத்துக்குத் தலைவர்; மன்னர். மௌலி - முடி. மரபு - வான்முறை.

பிடிக்கப்பட்டிருப்பதை நோக்கினல். கோடி என்பது மிகுதியைக் குறிக்கும் ஓர் எண் என்க. சந்திரனுக்கும் சந்திர வட்டக் குடைக்கும் வேறுபாடில்லை என்பதை, 'வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையைப், பாற எறிந்த பரிசயத்தால்—தேருது, செங்கண்மாக் கோதை சினவெங் களியானை, திங்கள்மேல் நீட்டும்தன் கை' (முத்தொள்ளாயிரம்) என்ற பாடல் வலியுறுத்தும்.

முடிசூட்ட வசிட்டர் வந்தார்

545 ஆயதோர் அமைதி யின்கண்
ஐயனை மகுடம் சூட்டற்கு
ஏயும் மங்கலங்க ளான
யாவையும் இயையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத
பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்கள் நெருக்கம் நீங்க
மாதவக் கிழவன் வந்தான். சசு

ஒரு அமைதியான நேரத்தில் இராமனுக்கு முடி சூட்டுவதற்குப் பொருந்திய மங்கலப் பொருள்களான யாவற்றையும் பொருத்தமாக எடுத்துக்கொண்டு, தூய்மையான நாலு வேதங்களையும், வேதம் வல்லவர் ஓதிக்கொண்டு வர, பழைமையான வாயில்களில் நெருங்கி நின்ற மக்கள் விலகி வழி விடப் பெரிய தவத்துக்கு உரியவரான வசிட்ட முனிவர் வந்தார்.

---

545. ஏயும் - பொருந்திய. பாரகர் - தாங்குபவர். கிழவன் - உரியவன்.

தீர்த்தங்கள் வந்து சேர்ந்தன

546 கங்கையே முதல வாய
கன்னிஈ ருன தீர்த்த
மங்கலப் புனலும், நாலு
வாரியின் நீரும் பூரித்து,
அங்கியின் வினையிற்கு ஏற்ற
யாவையும் அமைத்து, வீரச்
சிங்கவா தனமும் வைத்து,
செய்வன பிறவும் செய்தான். எஎ

கங்கை முதலாகக் கன்னியாகுமரி முடிவாக இடையிலுள்ள தீர்த்தங்களாய மங்களகரமான நீரையும், நான்கு கடல்களின் நீரையும் (குடங்களில்) நிறைத்து வைத்து, நெருப்பில் செய்யும் ஓமத்துக்கு ஏற்ற யாவையும் அமைத்து, வீரச் சிங்காசனமும் வைத்து இன்னும் செய்யவேண்டியவைகளையும் (வசிட்டமுனிவர்) செய்தார்.

(வி - ம்) அயோத்தியில் முடிசூட்டு நடைபெறுவதால் அண்மையிலுள்ள கங்கைமுதல் என்றார். வீரன் வீற்றிருப்பதற்குரிய ஆதனம் வீரச் சிங்காதனம் எனப்பட்டது. ஆதனத்தில் செதுக்கப்பட்டிருந்த சிங்கம் வீரவுணர்ச்சியோடு அமைந்திருந்தது எனினும் ஆம்.

தயரதமன்னனை அழைத்துவா

547 கணிதநூல் உணர்ந்த மாந்தர்
காலம்வந்து அடுத்த தென்னப்
பிணிஅற நோற்று நின்ற
பெரியவன் 'விரைவின் ஏகி,

---

546. வாரி-கடல். அங்கி - நெருப்பு. கன்னி-கன்னியாகுமரி.

547. கணித நூல் - சோதிட நூல். பிணி - கட்டு : பாசம். நோற்று - தவம் செய்து. வல்லை - விரைவு. காதல் - விருப்பம். பரிவு - அன்பு.

மணிமுடி வேந்தன் தன்னை
வல்லையில் கொணர்தி' என்ன,
பணிதலை நின்ற காதல்
சுமந்திரன் பரிவில் சென்றான். ௫௮

சோதிட நூலைக் கற்று உணர்ந்தவர்கள், குறித்த காலம் வந்து நெருங்கியது என்று கூற, பாசம் அறும்படி தவம் செய்து உயர்ந்து நின்ற பெரியவராகிய வசிட்டர், 'விரைவில் சென்று அழகிய முடிதாங்கிய மன்னனை (தயரதனை) விரைவாக அழைத்துவா' என்று சொல்ல, பணி செய்தலைத் தலைமேற்கொண்டு நின்ற விருப்பத்தோடுகூடிய சுமந்திரன் அன்போடு சென்றான்.

பிள்ளையை அழைத்துவா

548 விண்தொட நிவந்த கோயில்
வேந்தர்தம் வேந்தன் தன்னைக்
கண்டிலன்; வினவக் கேட்டான்;
கைகயள் கோயில் நண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரில்
சொல்லமற்று அவரும் சொல்ல,
பெண்டிரில் கூற்றம் அன்னாள்
'பிள்ளையைக் கொணர்க' என்றாள். ௫௯

வானத்தை ஒட்டி உயர்ந்த அரண்மனைக்குச் சென்று, அங்கே சக்கரவர்த்தியைக் கண்டானில்லை. (அங்கிருந்தோரைக்) கேட்க (அவர்கள் சொன்ன பதிலைக்) கேட்டான்; கைகேயியின் அரண்மனைக்குச் சென்று (அங்கு நின்ற) சிவந்த வாயையுடைய பெண்களின் மூலமாகச் சொல்லியனுப்ப, அச் செய்தியை அப்பெண்கள் கைகேயியிடம்

548. நிவந்த - உயர்ந்த. தொண்டை - ஆதொண்டைக்கனியைப் போல் சிவந்த.

சொல்ல, அப்பெண்களிடம் பெண்குலத்தில் உண்டான எமன்போன்ற கைகேயி, 'பிள்ளையைக் (இராமனை) கூட்டிக் கொண்டு வரட்டும்' என்றாள்.

(வி - ம்) தன்னிடத்தில் எவ்வித மாறுதலுமில்லை யென்பதைக் காட்டும் பொருட்டு, 'பிள்ளையைக் கொணர்க' என்றாள். இது உண்மையல்ல என்பதைக் காட்டக் கவி, 'பெண்டிரிற் கூற்றமன்னாள்' என முன்னதாகவே குறிப் பிட்டாரென்க. 'கூற்றத் தூதன் கைதொழு தேத்த' (சிலப் பதி - கொலைக் - 115) என்பதும் காண்க. இதுவரையில் ஆண்குலத்தில்தான் எமன் என்று ஒருவன் இருந்துவரு கிறான்; அவன்தான் பெண்களின் உயிரையும் பிரித்துக் கொண்டு போகிறான். கதறக் கதற இரக்கமின்றி உயிரைப் பிரிக்கிற காரியம் பெண்குலத்துக்கு இயலாததாக இருந்தது. இப்பொழுதோ ஒரு பெண்எமனே தோன்றிவிட்டது என் றார். கணவனுடைய உயிரைக் கதறக் கதற வாங்குகிறது. அறுபதாயிரம் மனைவியரின் உயிரையும் வாங்கப்போகிற தல்லவா இந்தப் பெண் எமன்? சுமந்திரன் அங்கங்கே முழுத்தகவலையும் தெரிந்துகொள்ளாமல் விஷயத்தை விளங் கிக்கொண்டு விரைந்து செல்வதுபோல பாடலிலும் வாக்கியங் கள் அரை குறையாக விழுந்திருப்பதை அறிந்து மகிழ்தல் வேண்டும். கடைசி அடிக்குக் கைகேயி சுமந்திரனிடம் நேரிற் சொன்னாள் என்று பொருள் கண்டனர். கைகேயி செய்தி கொண்டு சென்ற பெண்களிடமே பதிலுரைத்தாள். அப்பெண்கள் திரும்பிவந்து, அவள் சொன்ன செய்தியைச் சொன்னார்கள் என்பதை அடுத்த பாடலின் தொடக்கத்தில், 'என்றனள் என்னக் கேட்டான்' என வருதல் கொண்டு அறியலாம். 'பெண்களிற் கூற்ற மன்னாள், பிள்ளையைக் கொணர்க என்றாள்' என்பது கவிக்கூற்று.

சுமந்திரன் இராமனை அடைதல்

549 என்றனள் என்னக் கேட்டான்;
எழுந்தபே ருவகை பொங்கப்
பொன்திணி மாட வீதி
பொருக்கென நீங்கிப் புக்கான்;
தன்திரு வுள்ளத் துள்ளே
தன்னையே நினையும் மற்றக்
குன்றுஇவர் தோளி னானைத்
தொழுது,வாய் புதைத்துக் கூறும். ௰

(பிள்ளையைக் கொணர்க) என்றனள் என்று (திரும்பி வந்து) சொல்லக்கேட்டதும் எழுந்த பெரிய மகிழ்ச்சி பொங்கிப் பெருக பொன் பொதிந்து அலங்கரிக்கப்பட்ட மாடங்களை யுடைய வீதிகளை (சுமந்திரன்) விரைந்து கடந்து (இராமனுடைய அரண்மனையுள்) புகுந்தான். தன்னுடைய உள்ளத்தினுள்ளே திருமாலைத் தியானித்துக்கொண்டிருக்கிற மலையை ஒத்த தோள்களையுடைய இராமனைத் தொழுது வாய் புதைத்து நின்று கூறுவானாயினன்.

(வி-ம்) அகமுகமாக மனத்தைச் செலுத்தித் தியானத்திலிருந்த இராமனைச் சுமந்திரன் கண்டான். பெரிய செயலை மேற்கொள்ள முற்படும்போது அறிஞர்கட்குக் கடவுள் சிந்தனை ஏற்படுவது இயல்பு. இராமன் நினைப்பது திருமாலைத் தான். அவன் திருமாலவதார மாதலால், ‘ தன்னையே நினையும் ’ என்றார் கவி. கடவுள் மனிதனாக வந்தால் மனிதப் பண்பில் நின்றுதான் செயலாற்றக்கூடுமென்பது இங்கே இராமன் கடவுளை நோக்கித் தியானித்தான் என்பதால் விளக்கமுறும். கைகேயி பிள்ளையை அழைத்து வருக என்

549. பொன்திணி - பொன்னினால் சித்திரவேலை செய்யப்பட்ட. பொருக்கென - விரைவாக.

றதும் முடிசூட்டத்தான் என்று கருதியபடியாலேயே சுமந்திரன் அளவிலா மகிழ்ச்சி யடைந்தான் என்க. இப்பொழுது தான் இராமன் இலக்குவனைப் பிரிந்து தனியாகச் சென்றிருக்கிறான்.

மகுடம் சூட வருக

550 'கொற்றவர் முனிவர் மற்றும்
குவலயத் துள்ளார் உன்னைப்
பெற்றவன் தன்னைப் போலப்
பெரும்பரிவு இயற்றி நின்றார் ;
சிற்றவை தானும் ஆங்கே
கொணர்கெனச் செப்பி னாள்;அப்
பொற்றட மகுடம் சூடப்
போதுதி விரைவின்' என்றான். ௫௧

அரசர் முனிவர் மற்ற உலகின் பல பகுதிகளிலுள்ள மக்கள் யாவரும் உன்னைப் பெற்ற தயாரத மன்னனைப் போலப் பேரன்பு கொண்டு காத்து நிற்கின்றனர். சிறிய தாயார் தன் அரண்மனைக்கு அழைத்துவருக என்று கூறினாள். (ஆகவே) அந்த அழகிய பெரிய முடியைச் சூடிக்கொள்ளுதற்கு விரைவில் புறப்பட வேண்டும் என்றான்.

இராமன் தேரில் சென்றான்

551 ஐயனும் அச்சொற் கேளா,
ஆயிரம் மௌலி யானைக்
கைதொழுது, அரச வெள்ளம்
கடலெனத் தொடர்ந்து சுற்ற,

---

550. குவலயம் - நிலவுலகம். சிற்றவை - சிறிய அவ்வை : சிறிய தாய்.

551. ஆயிரம் மௌலியான் - திருமால். இரைத்து - பெருமூச்சுடன்.

தெய்வகீ தங்கள் பாடத்
தேவரும் மகிழ்ந்து வாழ்த்த,
தையலார் இரைத்து நோக்க,
தார்அணி தேரில் சென்றான். ருஉ

இராமனும் அந்தச் சொல்லைக் கேட்டு, திருமாலைக் கைகூப்பி வணங்கி, அரசர் கூட்டம் கடலென்று சொல்லும் படி தொடர்ந்து சூழ்ந்துவர, தெய்வத்தன்மை பொருந்திய பாடல்களை உரியவர் பாட, தேவர்களும் மகிழ்ந்து வாழ்த்த, பெண்கள் ஓடிவந்து பார்க்க மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட தேரில் சென்றான்.

(வி - ம்) ஒரு முடியைச் சூடிக்கொள்ளுதற்கு ஆயிரம் முடி சூடியுள்ள கடவுளை வணங்கிச் சென்றானென்ற நயம் குறிப்பிடத்தக்கது. ஆயிரம் முடிசூடிய திருமாலான இராம னுக்கு இந்த முடி வருவதும் போவதும் ஒரு பொருள் அன்று என்பதும் தொனிக்கிறது. பெண்கள் ஓடிவந்ததால் உண் டான பெரு மூச்சுடன் கண்டனர் என்பதை, 'இரைத்து நோக்க' என்றார்.

இருபுறமும் பெண்கள் மொய்த்தனர்

552 திருமணி மகுடம் சூடச்
சேவகன் செல்கின் றான்என்று,
ஒருவரின் ஒருவர் முந்திக்
காதலோடு உவகை உந்த,
இருகையும் இரைத்து மொய்த்தார்;
இன்உயிர் யார்க்கும் ஒன்றாய்ப்
பொருவரும் தேரில் செல்லப்
புறத்திடைக் கண்டார் போல்வார். ருந

552. சேவகன் - வீரன். இருகையும் - இரண்டு பக்கங்களி லும். புறத்திடை - வெளியில்.

சிறப்புள்ள அழகிய முடியைச் சூடிக்கொள்ள இராமன் செல்கிறான் என்று ஒருவரை முந்தி ஒருவராக அன்போடு மகிழ்ச்சி உந்தித் தள்ளத் தேரின் இருபுறங்களிலும் இரைச்சலிட்டுக்கொண்டு (பெண்கள்) கூடினர்; இனிய உயிரானது எல்லாருக்கும் ஒன்றேயாகி ஒப்பற்ற தேரில் செல்வதைக் கண்ணெதிரே கண்டவரைப் போன்றனர்.

(வி - ம்) உயிர் உடலினுள்ளேதான் இருக்கும். வெளிப்பட்டுத் தோன்றாது. இப்போது எல்லாருடைய உயிருஞ் சேர்ந்து ஒன்றாகி இராமன் உருப்பெற்று எதிரே தோன்றுகின்றதென்ற உணர்ச்சியைப் பெண்கள் அடைந்தனர். தம் உயிர் இராமனையன்றி வேறில்லையென்று எல்லாருங் கருதினர் என்பது கருத்து.

எங்கள் ஆயுளையும் நீ சேர்த்து வாழ்க

553 உய்ந்ததுஇவ் வுலகம் என்பார்;
 ஊழிகாண் கிற்பாய் என்பார்;
மைந்தநீ கோடி எங்கள்
 வாழ்க்கைநாள் யாவும் என்பார்;
ஐந்துஅவித்து அரிதில் செய்த
 தவம்உனக்கு ஆக என்பார்;
பைந்துணர்த் தெரிய லாய்க்கே
 நல்வினை பயக்க என்பார். ௫௪

உலகம் கடைத்தேறிவிட்டது என்றனர்; ஊழிக்காலம் வரை இருந்து காண்பாயாக என்றனர்; மைந்தனே! இனியுள்ள எங்கள் வாழ்நாள் முழுமையும் நீயே எடுத்துக்கொள் என்றனர்; ஐம்பொறிகளையும் அடக்கி அரும்பாடுபட்டுச் செய்த எங்கள் தவத்தின் பயனை நீ அடைவாயாக என்றனர்;

---

553. உய்தல் - துன்பமற்றுவாழ்தல். ஊழி - உலகின் அழிவு. கோடி - கொள்ளுதி.

அழகிய மாலையணிந்த உனக்கு எங்கள் நல்வினை, பயன் தருவதாக என்றனர்.

(வி - ம்) இப்படியாக ஆண்மக்கள் தங்கள் தகுதிக்கேற்ப வாழ்த்தினர். ஊழிவரை வாழ்தலாவது நீடூழிவாழ்க என்னும் வாழ்த்துரையை. உன்னைப்பார்த்தபோதே எங்கள் வாழ்நாள் பயனை அடைந்தது. இனி, எங்கட்கு மிஞ்சியுள்ள ஆயுள் நாட்களையெல்லாம் நீயே சேர்த்து வாழ்வாயாக என்றனர் என்பதை, 'கோடி எங்கள் வாழ்க்கைநாள் யாவும்' என்றார். 'யான் வாழு நாளும் பண்ணன் வாழிய' (புறம்-173) என வருதல் காண்க. 'துணர்த் தெரியல்' என்பதை, 'துழாய்த்தெரியல்' என்று பாடங்கொண்டு துளசி மாலையணிந்தவனே என்று பொருள் கண்டனர். திருமால் என்றால் இத்தனை வாழ்த்தும் தேவையில்லை. உயர்ந்த மகன் என்று கருதியதாலேயே இவ்வாறு வாழ்த்த முடிந்ததென்க. சிறந்த அரசனைக் காணும்போது காப்புக் கடவுளான திருமாலின் நினைவு வருவதியல்பு. எனவே, திருமாலைப்போன்றவனென்று நினைக்கின்றனர். 'நாரணன் ஒக்கும் இந்த நம்பி. (பாடல் 555) எனவரும்.

தயரதன் செயலுக்குக் கைம்மாறுண்டோ?

554 உயர்அருள் ஒண்கண் ஒக்கும்
தாமரை, நிறத்தை ஒக்கும்
புயல்பொழி மேகம், என்ன
புண்ணியம் செய்த என்பார்;
செயல் அரும் தவங்கள் செய்து,இச்
செம்மலைத் தந்த, செல்வத்
தயரதற்கு என்ன கைம்மாறு
உடையம்யாம் தக்கது? என்பார். ௫௫

554. ஒண்கண் - ஒண்மை+கண்: விளக்கமான கண்.

இராமனது மிக்க கருணையை உடைய ஒள்ளிய கண்களைப் போன்றிருக்கிற தாமரைப் பூவும், அவனது நிறத்தைப் போன்றிருக்கிற மழையைப் பெய்கிற மேகமும் என்ன புண்ணியத்தைச் செய்துள்ளன என்றனர். செய்தற்கு அருமையான தவங்களைச் செய்து இவ் விராமனைப் பெற்றுத் தந்த— செல்வத்துக்கே நிலைக்களனான தயரத மன்னற்குத் தகுந்த பதிலுதவி செய்ய நம்மிடம் என்ன இருக்கிறது என்றனர்.

(வி - ம்) 'செயலரும் தவங்கள் செய்து இச்செம்மலைத் தந்த செல்வத் தயரதன்' என்றார். 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்' என்ற திருக்குறள் (70) இங்கே நினைவுகூரத் தக்கதாம். தயரதன் கொடுத்த வரத்தால் இராமன் இப்பொழுது காட்டுக்குப் போகிறான் என்பதை அறியாத மக்கள் தயரதன் செய்த உதவிக்குக் கைம்மாறுண்டோ என்று கூறுவது எண்ணி மகிழத் தக்கது.

காரணமில்லாத கண்ணீர்

555 வாரணம் அரற்ற வந்து
கராஉயிர் மாற்றும் நேமி
நாரணன் ஒக்கும் இந்த
நம்பிதன் கருணை என்பார் ;
ஆரணம் அறிதல் தேற்றா
ஐயனை அணுகி, நோக்கி,
காரணம் இன்றி யேயும்
கண்கள்நீர் கலுழ நிற்பார். ருசு

(கசேந்திரன் என்னும்) யானை ஓலமிடக் (கேட்டு) வந்து முதலையின் உயிரைப் போக்கிய சக்கரத்தை ஏந்திய நாராயண

555. வாரணம் - யானை; கசேந்திரன். அரற்றல் - ஓலமிடுதல். கரா - முதலை. நம்பி - ஆணிற் சிறந்தோன் ; இராமன். ஆரணம் - வேதம். தேற்றா - முடியாத. கலுழ்தல் - வழிதல்.

மூர்த்தியின் திருவருளை ஒப்புச் சொல்லலாம், இந்த இராம னுடைய கருணைக்கு என்பர். வேதங்களாலும் அறிய முடியாத ஐயனை (இராமனை) நெருங்கிப்பார்த்துக் காரணமில்லாமலேயே கண்களில் நீர் வழிய நிற்பார்.

(வி-ம்) இராமனைப் பார்க்கும்போதே திருமாலின் நினைவு ஏற்படுகிறது. 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்' (நாலாயிரம் 3047) 'ஆரணம் அறிதல் தேற்றா ஐயனை' என்பது கவிக்கூற்று. இராமனைக் கண்டவுடனேயே ஒன்றும் புரியாமல் கண்ணீர் பெருகிற்று. நல்ல உள்ளமுடையார்க்கு உயர்ந்த பொருளைக் கண்டாலேயே கண்ணில் நீர் பெருகுவதியல்பு.

இவன் புகழ் குலத்துக்கே புகழ்

556 ஆர்கலி அகழ்ந்தோர், கங்கை
அவனியில் கொணர்ந்தோர், முந்தைப்
போர்கெழு புலவர்க் காகி
அசுரரைப் பொருது வென்றோர்,
பேர்கெழு சிறப்பின் வந்த
பெரும்புகழ் நிற்பது ஐயன்
தார்கெழு திரள்தோள் தந்த
புகழினைத் தழுவி என்பார். ருள

கடலைத் தோண்டினவருக்கும், கங்கையை உலகுக்குக் கொண்டு வந்தவருக்கும், முன்னாளில், போரில் ஈடுபட்ட அசுரரை, தேவர் பக்கம் நின்று எதிர்த்து வெற்றியடைந்தவருக்கும், பெயர் விளங்குகிற சிறப்பினாலே கிடைத்த பெரிய புகழெல்லாம் நிலைத்து நிற்பது இந்த இராமனுடைய மாலை

556. ஆர்கலி - கடல். அகழ்தல் - தோண்டுதல். அவனி - பூமி. கெழு - விளங்குகிற.

யணிந்த திரண்ட தோள்கள் தந்திருக்கிற புகழினை ஒட்டியே என்பார்.

(வி - ம்) புகழ் பரம்பரையாகத் தொடர்ந்து வரவேண்டும். இடையில் ஒருவன் தவறு செய்வானாயின் தொடர்ந்த புகழ் நிலைபேறெய்தாது. புகழுடையவன் பெயர் நின்று நிலவும். அப்பொழுது முன்னோர் யாரென்று கேட்கத் தோன்றும். இருப்பவன் இழிந்தவனானால் முன்னோரைப் பற்றிய பேச்சே எழுவதில்லை. எனவே, 'ஐயன் தார்கெழு திரள்தோள் தந்த புகழினைத் தழுவி' எனப்பட்டது. இனி முன்னோர் புகழாகிய கொடி இராமன் புகழாகிய கொள் கொம்பைத் தழுவி வளர்கிறது எனினும் ஆம். தோள் தந்த புகழ் :—தாடகை வதை, மிதிலையில் வில்லை முறித்தது, பரசுராமனை வென்றது ஆகியவை என்க. கடலைத் தோண்டியவர் : சகரர் ; கங்கையைக் கொண்டு வந்தவன் : பகீரதன்; அசுரரை வென்றவர் : ககுத்தன், முசுகுந்தன் முதலியோர்.

தன் கன்று தாவி வருகிறது !

557 *மின்பொருவு தேரின்மிசை
வீரன்வரு போழ்தில்
தன்பொருவுஇல் கன்றுதனி
தாவிவரல் கண்டாங்கு
அன்புருகு சிந்தையொடும்
ஆஉருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி
நஞ்சுருகி நிற்பார். ருஅ

மின்னலை ஒத்த தேரின்மேல் வீரனாகிய இராமன் வருகின்றபோது, தன்னுடைய ஒப்பற்ற கன்று தனியாகத்

557. பொருவு - ஒத்த. ஆ - பசு. நஞ்சு - நைந்து.

தாவி வரும்போது அதனைக் கண்டு அங்கே அன்பு கனிகிற உள்ளத்தோடு தாய்ப் பசுவானது எவ்வாறு மனங் குழையுமோ அவ்வாறு எலும்புடன் கூடிய உடல் உருகி நெஞ்சு உருகி தம் வசமிழந்து நிற்பார்.

(வி - ம்) தாயன்பில் தலைசிறந்தது பசுவின் அன்பென்பது அறிஞர் கருத்து. பின்னர் 'கன்றுபிரி காராவின் துயருடைய கொடி' (பாடல் 943) என்பர். எலும்பு ஆகுபெயராய் உடலை உணர்த்திற்று. நெஞ்சு - மனம்: மனிதர் யாவருக்கும் உள்ளது. சிந்தை - சிந்திப்பது: ஆராய்ந்து பார்க்கக் கருவியாக வுள்ளது: அறிஞர்க்குரியது. பொருளைப் பகுத்தறியும் ஆற்றலில்லார்க்குச் சிந்தையும் சிந்தனையும் இல்லை யென்க. சிந்தையில் அன்பு பெருகிற்று; ஏனை நினைப்பற மனம் அற்றதாம். நைந்து என்பது நஞ்சு எனத் திரிந்தது. நைந்து - வசமிழந்து.

இனிப் பிள்ளையைப் பெறுதல் வீண்

558 சத்திரம் நிழற்றநிமிர்
தானையொடும் நானா
அத்திரம் நிழற்றஅரு
ளோடுஅவனி ஆள்வார்
புத்திரர்இ னிப்பெறுதல்
புல்லிதென நல்லோர்
சித்திரம்எ னத்தனி
திகைத்துருகி நிற்பார். ௫௬

குடைகள் நிழலைச் செய்யவும், விளங்குகின்ற சேனைகளுடன் பல படைகள் ஒளி செய்யவும் அருளுடன் நிலத்தை

558. சத்திரம் - குடை. நிமிர்தல் - விளங்குதல். தானை - சேனை. நானா - பலவகையான. அத்திரம் - ஆயுதம். புல்லிது - வீணானது.

ஆளுகின்ற அரசர்கள், இனிமேல் (இராமன் பிறந்த பிறகு) ஆண் குழந்தையைப் பெறுவது சிறுமையுடைய செயல் என்று கூற, அவர் மனைவியர் வாய் பேச முடியாமல் சித்திரப் பதுமை என்று சொல்லும்படி (இராமனைப் பார்த்துத்) திகைத்து மனமுருகித் தனித்தனி நின்றனர்.

(வி - ம்) சேனைகள் சூழ அரசர்கள் மனைவியருடன் நிற்கின்றனர். அரசர்கள் ஆண் குழந்தையை விரும்புவது உலகில் வீரனென்று பேர் பெற்று உலகை ஆண்டு புகழ் பெருக்குவதற்குத்தானே. அழகுக்கும், வீரத்துக்கும், வெற்றிக்கும், புகழுக்கும் சொல்லப்பட்ட எல்லாவற்றிற்கும் உயர்ந்து நிற்கும் இராமன் இருக்கும்பொழுது எவ்வளவு உயர்ந்த பிள்ளையைப் பெற்றாலும் பயனில்லை. இவனுக்கு மேற்பட்ட பிள்ளையைப் பெற்றால்தானே இனிப் புகழ் கிட்டும்? அது முடிகிற காரியமல்ல. ஆகவே, ஆண் பிள்ளை பெறுதலே வீண் காரியமென்று தோற்றுகிறது; அவர் மனைவியரோ பிள்ளையை நினைக்கவும் செயலற்றுப் போயினர் என்க.

மணிகளைக் கொட்டி வழியை மறி

559 கார்மின்னெடுஉ லாயதென
நூல்கஞலும் மார்பன்
தேர்மிசை நம் வாயில்கடிது
ஏகுதல் செய்வானே
கூர்கனக ராசியொடு
கோடிமணி யாலும்
தூர்மின்நெடு வீதியினை
என்றுசொரி வாரும். ௬௦

கார்காலத்து மேகம் மின்னலோடு உலா வருகிறது என்று சொல்லும்படி, பூணூல் விளங்குகிற மார்பையுடைய

559. கஞலுதல் - விளங்குதல். ராசி - குவியல்.

இராமன் தேரிலிருந்தபடியே நம் வீட்டு வாயிலை விரைந்து கடந்துவிடுவானே? என்று நிறைந்த தங்கக் குவியலுடனே பல மணிகளாலும், நீண்ட வீதியைத் தடுக்கவேண்டும் என்று கொண்டு கொட்டுவாரும் (ஆயினர்).

(வி - ம்) கோயில் சுவாமி புறப்பட்டு வீதியில் வருகிற தென்றால் தங்கள் வீட்டுக்கு முன்பு நிறுத்திப் பார்க்க விரும்புபவர் ஒரு பந்தலைப் போட்டு வைப்பர். அங்கே சுவாமியைச் சிறிது நிறுத்துவார்கள். பெரிய மனிதர்கள் வரும்போது ஒரு விழா என்று கூறி ஏற்பாடு செய்தால் அங்கே சிறிது தங்கிச் செல்வார்கள். அவ்வாறே தங்கள் வீட்டின் முன்பு இராமனைச் சற்று நிறுத்தி நன்றாகப் பார்க்க வேண்டுமென்று கருதினார்கள். சொல்லி நிறுத்த முடியுமா? நகைகளையும் நவமணிகளையும் வழியில் கொட்டி வைத்தால் அதனை அப்புறப்படுத்து என்று சொல்லமாட்டானா? அதனால் சிறிது தாமதம் ஏற்படாதா என்று கருதினர் என்க.

பூமி இனிப் பொது

560 பாவமும் அருந்துயரும்
  வேர்பறியும் என்பார்;
பூவலயம் இன்றுதனி
  அன்று,பொது என்பார்;
தேவர்பகை உள்ளனஇவ்
  வள்ளல்தெறும் என்பார்
ஏவல்செயும் மன்னர்தவம்
  யாவதுகொல் என்பார். சுக

செய்த பாவங்களும் அதன் காரணமாக வரும் மிகுந்த துன்பங்களும் வேரோடு அற்றுப் போகும் என்பார்;

560. பூவலயம் - உலக வட்டம். தெறும்-ஒழிப்பான். யாவது-எது.

பூவுலகம் இன்று முதல் தனிப்பட்ட ஒருவனுடைய ஆட்சிக்கு உட்பட்டதல்ல; எல்லாருக்கும் பொது என்பார். தேவர்க்குப் பகையாக உள்ளவர்களை இந்தவள்ளல் (இராமன்) ஒழிப்பான் என்பார். இவனுக்கு ஏவல் செய்ய இருக்கிறார்களே அரசர்கள், அவர் செய்த தவந்தான் எவ்வளவு பெரிது! என்பார்.

(வி - ம்) இவனுடைய ஆட்சியில் பாவமே செய்யத் தோன்றாது. அதனால் துயரமே இல்லை. மண்ணுலக ஆட்சி இதுவரை ஒரு அரசனுடையதாக இருந்து வந்தது; இனி, பொதுவுடைமையாகிவிடும். இதற்குமேல் என்ன வேண்டும் என்று மகிழ்ந்தனர். இதுதானே ராம ராஜ்யம்! இவனுக்கு அருகிலிருந்து ஏவல் செய்ய இருக்கின்றார்களே மன்னர்கள், அவர்கள்தாம் தவம் செய்தவர்கள் என்று கூறுவது, அப்பேறு தமக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தின்பாலது. தவம் செய்து அரசராகப் பிறந்து முடிதாங்குவது பேறு, வேறு அரசருக்குத் திறை செலுத்தி வாழ்தல் இழிவின்பாற்படும். இராமனின் குணநலத்தில் கொண்ட அன்பின் பெருக்கால், மற்ற மன்னர்கள் ஏவல் தொழில் புரிவதும், பெறற்கரிய, பெரும் பேறு என்று மக்கள் கருதுவாராயினர்.

எமனைப்போல் எதிரே வந்தாள்

561 *ஆயது நிகழும் வேலை
அண்ணலும் அயர்ந்து தேறாத்
தூயவன் கிடந்த சூழல்
குறுகினன் வருதல் நோக்கி,
நாயகன் உரையான் வாயால்
நான்இது பகர்வென் என்னாத்
தாயென நினைவான் முன்னே
கூற்றுஎனத் தமியள் வந்தாள். சுஉ

561. சூழல் - இடம். குறுகுதல் - நெருங்குதல். தமியள் — தனியானவள்.

அவ்வாறான நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது அண்ணலாகிய இராமனும், வசமிழந்து தெளிவடையாத தூயவனாகிய தயரதன் கிடந்த இடத்துக்கு அருகே வருதலைக் கண்டு, நாயகன் (ஒன்றும்) வாயினால் சொல்ல மாட்டான், நானே இதைச் சொல்வேன் என்று முடிவு செய்துகொண்டு, இவள் பெற்ற தாய்தான் என்று நினைத்திருக்கிற இராமனுக்கு முன்பாக எமன் மாதிரி தனியாக வந்தாள்.

(வி - ம்) அரண்மனைக்கு யாரும் சென்றால் வெளி வாயிலில் நின்று தெரிவித்து அனுமதி பெற்றுப் பிறகு உள்ளே செல்ல வேண்டும். இராமனுக்குக் கைகேயி வீட்டிற்குச் செல்லத் தடையும், முறையும் ஏது? மடமடவென்று உள்ளே புகுந்து மன்னன் கிடக்கும் மண்டபத்தை நெருங்கி வந்து கொண்டிருக்கிறான் என்பதை அறிந்த கைகேயி எதிரே வந்து மறித்துக் கொண்டாள். உடலாகிய மன்னனையும் உயிராகிய இராமனையும் ஒன்றுபட ஒட்டாது குறுக்கே நின்று பிரிக்கிறாளாதலால் 'கூற்றென வந்தாள்' எனப் பட்டது. தமியள் - நிகரற்ற கொடுமை யுடையவள் எனினும் ஆம். 'உடரெலாம் உயிரிலா எனத் தோன்றும் உலகத்தே ஒருத்தி அன்றே இடரிலா முகத்தாள்' (பாடல் - 947) என்று பரதன் கூறுவதும் காண்க.

தாயைக் கண்ட கன்று

562 வந்தவள் தன்னைச் சென்னி
மண் ணுற வணங்கி, வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய்
செங்கையில் புதைத்து, மற்றைச்

---

562. சிந்தூரம் - நெற்றியில் அணியும் சிவப்புப் பொடி. தானை - வேட்டியின் முந்தானை. ஆன் - பசு.

சுந்தரத் தடக்கை தானை
மடக்குறத் துவண்டு நின்றான்;
அந்திவந்து அடைந்த தாயைக்
கண்டஆன் கன்றின் அன்னான். ௬௨

(விரைந்து) வந்தவளான கைகேயியை, நிலத்தில் தலை பொருந்த விழுந்து வணங்கி, மணமுள்ளதும் சிந்தூரத்தை யும் பவளத்தையும் ஒத்ததுமாகிய சிவந்த வாயினைச் சிவந்த கையினால் பொத்திக்கொண்டு, மற்றொரு அழகிய விசாலமான கையினால் ஆடையின் முந்தானையை மரியாதையுடன் மடக்கிப் பிடித்துக்கொண்டு வணங்கி, மாலை நேரத்தில் வீடு திரும்பும் தாய்ப் பசுவைக் கண்ட கன்றினைப் போன்றவனாக நின்றான்.

(வி - ம்) பிரிந்த தாயைக் கண்ட கன்றைப் போலத் தன் தாயைக் கண்டு தன்னை அழைத்த காரணத்தை அறியும் ஆவலோடு நின்றான் என்க. பணிவான மொழி, தானை மடக்கல், வாய் புதைத்தல் முதலியன அடக்கத்தின் அங்கங் களாம். 'வாசச் சிந்துரப் பவளச் செவ்வாய்' என்பதை, 'கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?' (நாலாயிரம் 567) என்ற பாசுரத்தோடு நோக்குக.

இரும்பு நெஞ்சு

563 நின்றவன் தன்னை நோக்கி,
இரும்பினால் இயன்ற நெஞ்சின்,
கொன்றுஉழல் கூற்றம் என்னும்
பெயர்இன்றிக் கொடுமை பூண்டாள்,

---

563. இயன்ற - ஆகிய. உழல் - திரிகிற. எயது - பொருந்திய அது. உந்தை - உன் தந்தை.

'இன்றுஎனக்கு உணர்த்தல் ஆவது
ஏயதே என்னின் ஆகும்
ஒன்றுஉனக்கு உந்தை மைந்த
உரைப்பதோர் உரைஉண்டு' என்றாள். கூசு

அன்பும் மரியாதையுங் கொண்டு வணங்கி நின்றவனாகிய இராமனைப் பார்த்து, இரும்பினால் ஆகிய மனத்தோடு உயிர்களைக் கொன்று திரிகிற யமன் என்ற பெயர் பூணாமல் (கைகேயி என்னும் வண்மைக் குடிப் பெயரைத் தாங்கிக் கொண்டு அந்த யமனைப் போலக்) கொடுமை பூண்டவளாகிய கைகேயி, 'மகனே! உன் தந்தை உனக்குச் சொல்லக்கூடிய ஒப்பற்ற ஓர் உரை உண்டு; அவர் உரைக்க வேண்டிய அதை இன்று யான் சொல்லலாமென்றால் (சொல்லக்) கூடும்' என்றாள்.

(வி-ம்) நீ சொல்வானேன் அரசனே சொல்லட்டுமென்று சொல்லிவிடுவானானால் காரியம் கைகூடாது. எனவே, அவனை உடன்படுத்திக்கொண்டு காரியத்தைச் சொல்ல நினைத்தாளாதலால், 'உணர்த்தலாவதே என்னில் ஆகும்' என்றாள். மைந்த என்று அணைத்துக் கூறியது அவன் ஐயமுறாதிருத்தற் பொருட்டு. இவளுக்குப் பெயரை எமன் என்று வைத்திருக்கவேண்டும். ஏதோ பெற்றோர் தவறுதலாகக் கைகேயி என்று வைத்துவிட்டார்கள்; பெயர் அவ்வாறு இல்லாவிட்டாலும் கொடுமை எமனுக்குச் சரியாகவே அமைந்திருக்கிறது என்பார், 'பெயரின்றிக் கொடுமை பூண்டாள்' என்றார். மூன்றும் அடி, தெளிவில்லாமல் அமைந்திருப்பது, கைகேயி பிள்ளையின்மேலுள்ள அன்பால் சொல்ல முடியாமல் திண்டாடுவதுபோல் செய்யும் பாசாங்கு நடையாகுமென்க. அது திணறித் திணறி வருதல் காண்க.

தந்தையும் தாயும் நீர்தான்

564 'எந்தையே ஏவ, நீரே
உரைசெய, இயைவது உண்டேல்,
உய்ந்தனென் அடியேன்; என்னில்
பிறந்தவர் உளரோ? வாழி!
வந்ததுஎன் தவத்தின் ஆய
வருபயன்; மற்றென்று உண்டோ?
தந்தையும் தாயும் நீரே!
தலைநின்றேன்; பணிமின்!' என்றான். ௬௫

என் தந்தையே கட்டளையிடத் தாயாகிய நீரே அதனைத் தெரிவிக்க இயைந்தது உண்டு என்றால் (வேறென்ன வேண்டும்) அடியேன் கடைத்தேறினேன். என்னைப் போலப் பிறப்பினால் பயனடைந்தோர் உலகத்தில் உண்டா? (அச் சொல்) வாழ்க. என் முந்திய தவத்தினால் ஏற்பட்டு வாத் தக்கபயன் வந்துவிட்டது. இதைவிட வேறு பயன்உண்டோ? தந்தையும் தாயும் நீர்தான். (நீர் சொல்லப் போவதைத்) தலைமேற் கொண்டு நிற்கின்றேன். கட்டளை இடுவீராக என்றான்.

(வி - ம்) பிள்ளைக்கு இடும் கட்டளை தாயிடமிருந்து வரும். அல்லது தந்தையிடமிருந்து வரும். சிலபோது ஒன்றற்கொன்று மாறுபடுவதுமுண்டு. இருவருமே சேர்ந்து ஒரு கருத்தாக ஒரு கட்டளை இடுவது அருமை என்பதை, 'இயைவது உண்டேல் என்றான்.' முன் பாடலில் அவள் தயங்கிப் பேசினளாதலால் நீர் கூறத் தயங்குவானேன்? உமது வாயால் சொல்லப் பெறுதலே சிறப்பு என்பான் 'நீரே உரை செய' என்று பாராட்டிக் கூறினான். புதல்வராகப் பிறந்த

564. இயைவது - பொருந்துவது. என்னில் - என்னைப்போல. தலைநிற்றல் - உறுதி கொள்ளல். பணித்தல் - கட்டளையிடல்.

வருள், பெற்றோர் இருவரும் சேர்ந்து ஏவும்படியான பேற்றைப் பெற்றவர் இல்லை என்பதை, 'என்னிற் பிறந்தவர் உளரோ' என்று மகிழ்ந்தான். 'நல்ல தாய் தந்தை ஏவ நான் இது செய்யப் பெற்றேன்' என்றதும் நோக்கத் தக்கது. (பெரிய புரா - அப்பூதி - 24) இனி, அரசன் உள்ளே இருப்ப அவனைக் காணவொட்டாதபடி வழிமறித்துக் கட்டளையிடுவதாலும், தந்தை சொன்னானென்று தான் சொல்வதாலும், தான் பிரியும்போது தந்தையைப் பார்க்க இயலாது போனதாலும், இந்நிலையில் தந்தையும் நீயிர் தான் என்பான் 'தந்தையும் தாயும் நீரே' என்றான் என்பதும் ஆம்.

போய்—வா

565 'ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீபோய்த்
தாழ்இரும் சடைகள் தாங்கி,
தாங்கஅரும் தவம் மேற்கொண்டு,
பூழ்இரும் கானம் நண்ணி,
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டு ஆண்டின் வாஎன்று
இயம்பினன் அரசன்' என்றாள். கூகூ

கடலால் சூழப்பட்ட உலகம் முழுமையும் பரதனே ஆள நீ அதனை விட்டுப் போய், நீண்டு அடர்ந்த சடையைத் தாங்கிக்கொண்டு, பெறுதற்கு அரிய தவச்செயலை ஏற்று, பறவைகள் சஞ்சரிக்கின்ற பெரிய கானகத்தை அடைந்து, புண்ணிய நதித்துறைகளில் நீராடி, ஏழிரு வருடங்களில் வந்து சேர்வாயாக என்று மன்னன் கட்டளையிட்டான் என்றாள்.

---

565. ஆழி - கடல்; ஆட்சி. இரும் - பெரிய. நண்ணி — பொருந்தி. துறை - நீர்த்துறை. பூழ் - பறவை.

(வி - ம்) 'ஆழிசூழ் உலகம்' என்பதற்கு 'மன்னர் ஆட்சிக்கு உட்பட்ட உலகம்' என்று கொண்டு கோசல நாட்டில் மட்டுமல்லாமல் எந்த மன்னரையும் அண்டியோ எதிர்த்து வசப்படுத்தியோ இருக்தலாகாதென்று கூறினள் என்னலாம். அரசாளும் மன்னரை அண்டி இருந்தால் படை திரட்டிப் பரதனை எதிர்க்கக் கூடுமென்ற ஐயமே அதற்குக் காரணம். எனவே, ஆழி சூழுலகத்தை விட்டு நீ வெளியேறி வனத்தை நண்ணவேண்டும் என்முள். கைகேயியின் திட்டம் பரதன் நிலத்தை யாளவேண்டு மென்பதும், அதற்கு இராம னும் அவனிடத்து அன்பு கொண்டவர்களாலும், இடையூறு ஏற்படக்கூடாதென்பதும் ஆகும். இதனைக் கடுமையில்லாமல் நயமாகச் சாதித்துக்கொள்ள வேண்டுமென்பது மாகும். ஆதலால்தான் தயரதனிடத்து, பழைய வரத்தை நினைவுபடுத்திக் காரியத்தை இன்னதென்று சொல்லாமல் இரு முறை எளிதாக உறுதி வாங்கிய பின்னரே காரிய மின்ன தென்முள். அவ்வாறே அரசனை மறைத்து வைத்து நடை பெற்றதொன்றும் பிறரறியாமல் செய்துவிட்டு, 'பிள்ளையைக் கொணர்க' (பாடல் 548) என்றும் 'மைந்த' (பாடல் 563) என்றும் கூறி ஐய மேற்படாதபடி பக்குவமாகப் பேசினள். இராமனிடத்திலும் நயமாக, 'உணர்த்தல் ஆவதென்னில் ஆகும்' (பாடல் ௸) சொல்லலாமென்னில் சொல்கிறேன் என்று கூறி அவனிடம் 'தலை நின்றேன் பணிமின்' (பாடல் 564) என்ற உறுதியைப்பெற்றுக் கொண்டாள். அதற்கேற்ப 'புண்ணியத் துறைகளாடி ஏழிரண்டாண்டின் வா' என்று இனிமையாகக் கூறுகிருள். ஆனல், 'பூழிவெங் கானம்' என்று பாடங்கொண்டு கொடுமையான காடு என்று பொருள் கண்டனர். காரியம் கைகூடும்வரை நயமாகப் பேசிச் சாதிப்

படதே கைகேயியின் இயல்பு. ஆதலின், 'பூழி வெங்கானம் என்ற பாடம் பொருந்தவில்லை. வனத்தில் இராமன் தங்கிய இடங்கள் வெங்கானமு மன்று. தண்ணிய கானமேயாம். கைகேயி சொற்காத்த அவன் வெங்கானம் என்று கைகேயி கூறியிருந்தால் குளிர்ந்த கானகத்தில் வசித்திருக்க மாட்டான் என்பதும் ஒன்று. 'அருந்தவம்' எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியதன்று என்றவாறு. மனைவியைத் துறந்து செய்யும் தவத்தையே அருந்தவ மென்றாள் என்க. இராமன் மனைவியோடு செல்வானானால் குழந்தை பிறக்கும். பின்னர் ஆட்சிக்கு உரிமைபெறும். பதினான்காண்டு பிரிந்திருந்து பின்னர் குழந்தை உண்டாகுமானால் காலாவதி ஏற்பட்டுப் போமென்பது கருத்து. இராமன் திரும்பி வந்து அரசு கேளாதிருக்க வேண்டுமென்பதைக் கருதியே, கூறும்போது 'ஏழிரண்டாண்டின் வா' என்றாளே யன்றி 'வந்து அரசைப் பெற்றுக் கொள்' என்று கூறினாளில்லை. மேலும், பரதன் பதினான்கு ஆண்டு ஆள்வான் என்று கூறவில்லை. ஏகாரத் தேற்றங் கொண்டு பரதனே என்றென்றும் ஆள என்றாள் என்க. நன்றாகச் சிந்தித்துச் செய்திருக்கிறா ளென்பது 'மாயன் நெடுமையால் அன்றளந்த உலகெல்லாம் தன் மனத்தே நினைந்து, செய்யுங் கொடுமையால் அளந்தாள்' (பாடல் 946) என்று கூறப்படுதலால் அறியலாம். 'இயம் பினன் அரசன்' என்றதனால் வாய்ச்சொல்லால் இடப்பட்ட கட்டளை ஆம் என்றாள் என்க. அனுப்புகிறபோது 'போ' என்று கூறுதல் மரபன்று. எனவே 'போய் வா' என்று தான் கைகேயி சொன்னாள். ஆனால் போய்—வா என்பதற் கிடையில் நீண்ட நிபந்தனையைப் புகுத்திக் கூறியிருப்பது, மரபும் திறமையும் விளங்க நிற்பதாகும்.

செந்தாமரையை வென்றது

566 இப்பொழுது எம்ம னோரால்
இயம்புதற்கு எளிதோ? யார்க்கும்
செப்பரும் குணத்து இராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்,
ஒப்பதே முன்பு; பின்புஅவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா
மரையினை வென்றது அம்மா. சுஎ

எவருக்கும் சொல்ல முடியாத மேலான குணங்களை யுடைய இராமனது திருமுகத்தின் அழகை இப்பொழுது பார்த்தால் என்னைப்போன்ற புலவர்களால் சொல்லுதற்கு எளிதா? (அல்ல) முன்பெல்லாம் (அப்பொழுது மலர்ந்த) செந்தாமரை மலரை ஒத்ததாக இருந்தது. (கைகேயி சொல்லிய) அச் சொற்களைக் கேட்ட பின்பு அப்பொழுது மலர்ந்த செந்தாமரை மலரை வெற்றி கொண்டுவிட்டது.

(வி - ம்) இராமனுடைய முகம் ஒருபொழுதும் வாட்டமடைந்ததில்லை. அன்றலர்ந்த செந்தாமரை மலரை ஒத்து விளங்குவது. ஆனால், கைகேயியின் கட்டளையைக் கேட்டதும் முகம் இன்னும் விளக்கமுற்றது. இயற்கையாகவுள்ள முகம் இன்னும் அழகு பெற்றது எதனால்? தாயும் தந்தையும் சேர்ந்து இடும் பணி கிடைத்ததே என்ற மகிழ்ச்சியால் என்க. 'பின்பு—வென்றதம்மா' என்ற தொடருக்கு, 'அரசு புரியும் சுமை அப்போது நீங்கிவிட்டது கருதித் தோன்றிய மகிழ்ச்சியால்' என்று விசேட உரை கண்டனர். அது உரையன்று. அரசன் வயிற்றிற் பிறந்த மகன் ஆட்சியைச் சுமை என்று கருதுதல் பேடிமையின்பாற்படும். அர

566. எம்மனோர் - எம்மைப்போன்ற புலவர். செவ்வி - அழகு. அலர்ந்த - மலர்ந்த.

சாள அஞ்சி விலகுதல் வீரனது இலக்கணமன்று. சுமையஞ்சி இராமன் விலகுவதானல் பரதன் தலையில் அச்சுமையைச் சுமத்திவிட்டுப் போதல் அறவழி நிற்பவனுக்கு அறமன்றாம். தவிர நீ முடி சூட்டிக்கொள்ள வேண்டுமென்று தயரதன் சொன்னபோது, 'காதலுற்றிலன் இகழ்ந்திலன் கடன் இதென்றுணர்ந்தும், யாது கொற்றவன் ஏவியது அது செய லன்றோ, நீதி எற்கென நினைந்தும் அப்பணி தலைநின்றான்' (பாடல் 441) என்பதனாலறியலாம். இப்பொழுதும் காதலுற் றிலன் இகழ்ந்திலன் கடன் இதென்றும், தந்தை பணியென் றும் தலைநின்றான் என்க. ஆனால் இந்தக் கட்டளையில் தாயின் பணியும் உடன் சேர்ந்ததால் முகம் முன்னையிலும் மகிழ்ச்சி கூடியதென்பது.

விடையும் கொண்டேன்

567 மன்னவன் பணிஅன் றாகின்,
உம்பணி மறுப்பெ னோ?என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றது அன்றோ?
என் இதின் உறுதி? அப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்!
மின்ஒளிர் கானம் இன்றே
போகின்றேன்! விடையும் கொண்டேன்! ௬௮

சக்கரவர்த்தியின் கட்டளை அல்ல என்றாலும் உன் கட் டளையை மறுக்கவா போகிறேன். எனக்குப் பின்வந்த தம்பி பெற்ற செல்வம் அடியேன் பெற்றதல்லவா? பின்பு இதற்கு மேல் முடிவென்ன? இக்கட்டளையைத் தலைமேல் ஏற்றுக் கொண்டேன்; மின்னலின் ஒளி பரவும் கானகத்திற்கு இதோ போகிறேன்; அனுமதியையும் பெற்றுக்கொண்டேன்.

567. பின்னவன் - தம்பி.

(வி - ம்) தன்னை வலிதில் அழைத்து அரசைப் பெற்றுக் கொள்ளும்படி சிபாரிசு செய்துதந்த மன்னவன், இப்பொழுது, தான் மறைந்திருந்து இவள்மூலம் சொல்லியிருப்பான் என்பதில் ஐயமேற்பட்டதனுலேயே" மன்னவன் பணி அன்றுகில் ; என்றான். போய்—வா என்று கூறிய தாயைப் பார்த்து, 'போகின்றேன்' என்றானே தவிர 'போய்வருகிறேன்' என்றானில்லை திரும்பி வருதலை அவள் விரும்புவாளோ என்ற ஐயத்தால். கட்டளையை ஒப்புக்கொண்டான். போகின்றேன் என்றான். அவள் வாழ்த்தி விடை கொடுக்கவில்லை. எனவே விடையும் பெற்றுக்கொண்டேன் என்று கூறிக்கொண்டான் என்க.

---

4. நகர் நீங்கு படலம்

[இராமன் காடுசெல்லுவதற்காக அயோத்தியை விட்டு நீங்குவதைக் கூறும் படலம். நகர் - அயோத்தி நகர்.]

கோசலையின் வீட்டை நோக்கினன்

568 என்றுகொண்டு இனைய கூறி,
அடி இணை இறைஞ்சி மீட்டும்,
தன்துணைத் தாதை பாதம்
அத்திசை நோக்கித் தாழ்ந்து,
பொன்திணி போதி னாளும்
பூமியும் புலம்பி நையக்,
குன்றினும் உயர்ந்த தோளான்
கோசலை கோயில் புக்கான். க

என்று மேற்கண்டவாறு கூறிக்கொண்டு கைகேயியின் இருபாதங்களையும் மறுபடியும் வணங்கி, தன்னையே துணையாக

568. திணிதல் - நிறைதல். போது - தாமரை மலர். நைதல் - துன்புறுதல்.

எண்ணியிருக்கிற தந்தையின் பாதங்களேயும் அவன் கிடக்கிற திசையை நோக்கித் தொழுது அழகு நிறைந்த செந்தாமரைப் பூவினுறையும் இலக்குமியும், பூமிதேவியும் புலம்பி வருந்த, மலையைக் காட்டினும் உயர்ந்த தோளேயுடைய இராமன் கோசலையின் மாளிகையை அடைந்தான்.

(வி - ம்) கைகேயியின் மாளிகைக்கு வந்தபோது என்றும் போல் இருந்த மனப்பாங்குடைய நிலையில் வணங்கிய இராமன் நாடு துறந்து காட்டிற்குச் செல் என்று கூறிய பிறகு இன்னும் மகிழ்ச்சியோடு வணங்கினன். ஆனல் அப்பொழுதும் அவள் அவனே வாழ்த்தவில்லை. இரண்டாம் முறை வணங்கினபடியால் 'மீட்டும்' என்ருர். அரசனே அண்டி நிற்பன செல்வமும் நிலமுமே யாம். (செல்வமும் பயிரும்) இவன் பிரிவை எண்ணி இரண்டும் வருந்தின என்ருர். இவ்விரண்டு மின்றேல் அரசனில்லை. சிறந்த அரசன் ஆளுகையில்தான் இவ்விரண்டும் செழித்திருக்கும். இவ்விரண்டு தத்துவமுமே அழத் தொடங்கின என்க. தன் தந்தை கிடக்கிற இடத்திற்குச் செல்ல விடாது குறுக்கே கைகேயி நிற்பதால் அவளே எதிர்த்து உள்ளே செல்ல விரும்பினனில்லை.

விதி முன்னல்! தருமம் பின்னல்!

569 குழைக்கின்ற கவரி இன்றிக்
கொற்றவெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம் பின் இரங்கி ஏக,

569. குழைதல் - வீசுதல். கொற்றம் - வெற்றி. இழைத்தல் - உண்டாக்குதல். இரங்குதல் – கருணை காட்டல். கவித்தல் - சூட்டுதல். தமியன் - தனி ஆள்.

மழைக்குன்றம் அனையான் மௌலி
கவித்தனன் வரும்என்று என்று
தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்
முன்,ஒரு தமியன் சென்றான். உ

வீசப்படுகிற சாமரம் இல்லாமல், வெண் கொற்றக் குடையும் பிடிக்கப்படாமல், நடத்திவைக்கிற விதி முன்னே வழிகாட்டிச் செல்ல அறக்கடவுள் (தரும தேவதை) பின்னே கருணையுடன் தொடர்ந்து வர, மேகம் சூழ்ந்த மலையை ஒத்த இராமன் முடிசூடிக்கொண்டு வருவான் என்று என்று மகிழ்ச்சி பெருகுகின்ற உள்ளத்தாளாகிய கோசலையின் முன் தன்னந் தனியனாகச் சென்றான்.

(வி - ம்) சாமரம் இரட்ட, குடைபிடிக்க முடியணிந்து மன்னர் மன்னனாக மகன் வரப்போகிறானென்று எதிர்பார்த்து, உள்ளம் ஒவ்வொரு சாண் உயர்ந்து கொண்டிருக்கிறாள் கோசலை. அரச அங்கம் எதுவுமின்றி என்றுமுள்ள இரதமுமின்றிக் கால் நடையாக வந்து சேர்ந்தான். இராமன் உலகுக்கு நடந்து அறங்காட்ட வந்தவனாதலின் விதி செல்லத் தொடர்ந்து சென்றான். அற வழியினின்று அணுவும் பிசகினானில்லை யாதலால் அவன் சென்ற வழியிலேயே அறம் செல்லவேண்டியதாயிற்றென்க. இராமன் தயரதனின் பொறுப்பில் அவன் காட்டிய வழியில் தந்தை கீழ்ப் பிள்ளையாக இருந்தான். இன்றுதான் தனியன் ஆகிறான். அது தொடங்குகிற தொடக்கத்திலேயே அவனுடைய ஒழுக்கத்தின் குறிக்கோள் விளக்கப்பட்டது.

முடிசூட இடையூறு உண்டோ ?

570 புனைந்திலன் மௌலி ; குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் ; என்கொல் ! என்னும்
ஐயத்தாள், நளின பாதம்

வனைந்தபொற் கழற்கால் வீரன்
வணங்கலும், குழைந்து வாழ்த்தி,
'நினைந்தது என்? இடையூறு உண்டோ
நெடுமுடி புனைதற்கு?' என்றாள். ௩

முடிசூடவில்லை; தலைமயிர் அபிடேகப் புனிதநீரால் நனையவில்லை; என்ன காரணம் என்ற ஐயங்கொண்ட கோசலை, தன்னுடைய தாமரை மலர்போன்ற அடிகளில் வீரக்கழலணிந்த வீரன் விழுந்து வணங்கினவுடனே மன முருகி வாழ்த்தி (அரசன் உனக்கு முடிசூட்டுவதாக எண்ணின) எண்ணம் என்ன ஆயிற்று! நீண்ட முடியைச் சூடுதற்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டதா? என்றாள்.

(வி - ம்) மன்னுதி மன்னனாக, மகன் அரச பரிவாரங்களோடு வருவான் என்று எதிர்பார்த்தவள் கால்நடையில் வருகிற பிள்ளையைப் பார்த்துப் பதறி அடித்துக்கொண்டு புலம்பவில்லை. நிதானமாகவே கேட்கிறாள். ஏதோ காரணம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறாள். கணவன், சக்களத்திகள், பிள்ளைகள், மந்திரிகள், பொது மக்கள் யாவரும் நல்லவர்களாதலால் பிழை யொன்றும் ஏற்படாது என்பதில் உள்ள உறுதியே அவளது அமைதிக்குக் காரணமாகும்.

தம்பி பரதன் சூடுகிறான்

571 *மங்கை அம்மொழி
கூறலும், மானவன்
செங்கை கூப்பிநின்
காதல் திருமகன்

570. மஞ்சனம் - நீராட்டம். வனைந்த - கட்டிய. குழைதல்- மனம் நெகிழ்தல். இடையூறு - செயலின் இடையில் ஏற்படும் ஊறு தடை.

571. மானவன் - வீரன்: (மனுகுலத்தில் வந்தவன் எனினும் ஆம்). பங்கம் - குறைவு. துங்கம் - பரிசுத்தம்.

பங்கம்இல் குணத்து
எம்பி பரதனே
துங்க மாமுடி
சூடுகின் ருன்என்ருன். ௪

மங்கை (கோசலை) அந்தச் சொற்களைச் சொன்னவுடனே வீரனுகிய இராமன் தன்னுடைய சிவந்த கைகளைக் குவித்து வணங்கி, உன்னுடைய அன்பிற்குரிய பெருமை பொருந்திய மகனுகிய குற்றமற்ற குணமுள்ள என்தம்பி பரதன், பரிசுத்தமான சிறந்த முடியைச் சூடிக்கொள்ளப் போகிருன் என்ருன்.

அவன் உன்னைவிட நல்லவன்

572 முறைமை அன்றென்பது
ஒன்றுஉண்டு ; அதுஅல்லது
நிறைகு ணத்தவன்
நின்னினும் நல்லனுல் ;
குறைவி லன்எனக்
கூறினள் நால்வர்க்கும்
மறுவில் அன்பினில்
வேற்றுமை மாற்றினுள். ௫

(மூத்தவனிருக்க இளையவனுக்கு முடி சூட்டுதல்) முறையன்று என்ற ஒரு குறை உண்டு. அதுவல்லாமல் நிறைந்த நற்குணங்கள் பொருந்தியவன் ; உன்னைவிட நல்லவன் ; அவனுக்குக் குறைவு வாது என்று கூறினுள். (யார் ?) நால்வரிடத்தினும் குற்றமற்ற அன்பில் வேறுபாடு காணுதவளாகிய கோசலை.

(வி - ம்) பெற்ற தாய், கைக்கு வந்த பட்டத்தை வழியில் பறிகொடுத்துவிட்டு வந்திருக்கிற மகனிடத்தில் பரதன்

572. முறைமை - வரன்முறை. மறு - குற்றம்.

உன்னைவிட நல்லவன் அவனுக்குக் குறைவு வராது என்று கூறுவதென்றால் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கிறாள் என்பது விளங்கும். நல்ல பிள்ளை நாலில் எது ஆண்டா லென்ன? பரதன் ஆளுவதால் அரசு முறைக்குக் குறை வுண்டாகாதென்கிறாள். யார் ஆளினும் ஆட்சி நன்கு நடை பெற வேண்டுவதுதானே என்று கருதுவது சிறந்த தாயின் இயல்பாம்.

ஒற்றுமையாக வாழுங்கள்

573 என்று பின்னரும்,
 'மன்னவன் ஏவியது
அன்று எனாமை
 மகனே உனக்குஅறன்;
நன்று நும்பிக்கு
 நானிலம் நீகொடுத்து,
ஒன்றி வாழுதி
 ஊழி பல' என்றாள். ௬

என்று சொல்லி, மறுபடியும் மன்னவன் இட்ட கட்டளை யைக் 'கூடாது' என்று சொல்லாமலிருப்பதுதான் மகனே உனக்கு அறமாகும்; நல்லது; 'உன் தம்பிக்கு உலக ஆட்சி யைக் கொடுத்து நீ (அவனுடன்) பொருந்தி பல ஊழிக்காலம் வாழ்ந்திருப்பாயாக' என்று வாழ்த்தினாள்.

(வி - ம்) இரு தாயரில் கைகேயி பரதன் ஆளவேண்டும் என்று எண்ணினாள்; இராமனைக் காட்டுக்குத் துரத்த முன் னின்றாள். கோசலையோ பரதன் ஆளட்டும் என்றாள். அதற்கு இராமனை உதவியாக இருக்கச் சொன்னாள். இவ் விருவரும் கூனியும் தவிர ஏனைய யாவரும் இராமனது ஆட்சி யையே விரும்பினர்; பரதனது ஆட்சியை விரும்பினாரில்லை.

---

573. ஒன்றி - பொருந்தி.

எனக்கு இடப்பட்ட வேறுபணி உண்டு

574 தாய்உ ரைத்தசொல்
கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தைஅத்
தோமில் குணத்தினன்,
'நாய கன்எனை
நன்னெறி உய்ப்பதற்கு
ஏயது உண்டுஓர்
பணி' என்று இயம்பினன். எ

தாய் சொன்ன சொற்களைக் கேட்டு மகிழ்ச்சி வளர்கிற பரிசுத்தமான உள்ளத்தையுடைய அந்தக் குற்றமற்ற குணங்களையுடைய இராமன் 'அரசன் என்னை நல்வழியில் செலுத்துவதற்காக இட்ட கட்டளை ஒன்று உண்டு' என்று கூறினன்.

(வி - ம்) தான் முடி சூடாததற்கும் பரதன் முடி சூடுவதற்கும் ஏதாவது வருத்தப்படுவாளோ என்ற நினைவிற்கு இடமில்லாமற் போனதில் இராமனுக்கு அளவிலாத மகிழ்ச்சி ஏற்பட்டது என்பது, 'கேட்டுத் தழைக்கின்ற தூய சிந்தை" என்பதால் விளங்கும்.

பதினான்கு ஆண்டு வனவாசம்

575 ஈண்டுஉ ரைத்த
பணிஎன்னை என்றலும்,
'ஆண்டுஓர் ஏழிரேடு
ஏழ்அகன் கான்இடை,

---

574. தோம் - குற்றம். ஓர் - ஒரு. பணி - கட்டளை.

575. அகன் - அகன்ற. மாண்ட - மாட்சிமைப்பட்ட. (மாண் பகுதி) வைகுதல் - தங்கியிருத்தல்.

மாண்ட மாதவத்
தோருடன் வைகிப்பின்,
மீண்டு நீவரல்
வேண்டும்'என் ருன்என்ருன். அ

இங்கே நீ சொன்ன கட்டளை என்ன என்று தாய் கேட்க, பதினுன்கு ஆண்டுகள் பரந்த காட்டில் மாட்சிமை யுடைய பெரிய தவமுனிவர்களுடன் வாழ்ந்து பிறகு திரும்பி நீ வரவேண்டுமென்று (மன்னன்) கூறினுன் என்ருன்.

(வி - ம்) இராமனிடம் மன்னன் நேரில் கூறவில்லை. என்ருலும் மன்னனின் கட்டளை என்றுதானே கைகேயி கூறினுள்.

கோசலையின் தவிப்பு

576 ஆங்குஅவ் வாசகம்
என்னும் அனல்,குழை
தூங்கு தன்செவி
யில்தொட ராமுனம்,
ஏங்கி ஞள் ;இளைத்
தாள் ;திகைத் தாள் ;மனம்
வீங்கினுள் ; விம்மி
ஞள் ;விழுந் தாள்அரோ. கூ

அப்பொழுது அந்தச் சொற்கள் என்னும் நெருப்பு, குழையணிந்திருக்கிற அழகிய தன்காதுகளில் சரியாக நுழையு முன்பாகவே ஏக்கங் கொண்டாள்; உடல் இளைத்துப் போனுள் ; (இதென்ன விபரீதம் என்று) திகைப்புற்ருள் ; மனம் வெடிக்கும் என்னும்படியானுள் ; மூச்சுத் திணறி ஞள் ; கீழே விழுந்தாள்.

---

576. குழை - காதில் தொங்கும்படி அணியும் ஓர் அணி.

(வி - ம்) மனம் வீங்குதலாவது துக்கம் அதிகரிப்பதால் நெஞ்சு வெடித்துப் போகுமோ என்ற உணர்ச்சியேற்படுதல். இவை துன்பத்திலேற்படும் மெய்ப்பாடு.

உன்னை ஆளச்சொன்னது வஞ்சனையாலா ?

577 வஞ்ச மோமக
  னேஉனே, 'மா நிலம்
தஞ்ச மாகநீ
  தாங்கு' என்ற வாசகம்
நஞ்ச மோஇனி
  நான்உயிர் வாழ்வெனே
அஞ்சும்! அஞ்சும்!என்
  ஆருயிர் அஞ்சுமால்! கo

மகனே! உன்னை நோக்கி இப்பெரிய உலக ஆட்சியைப் பொறுப்பாக ஆளவேண்டும் என்று சொன்ன சொல் வஞ்சனையா? விடமா? இனிமேல் நான் உயிரை வைத்துக் கொண்டு வாழ்வேனா? என் இனிய உயிர் நடுங்கும்; நடுங்கும்; நடுங்கும்.

(வி - ம்) அரசில்லை என்பதை அவள் பொருட்படுத்த வில்லை. காட்டுக்குப் போகச் சொன்னான் என்றதைக் கேட்டவுடன் ஏதோ மோசம் வந்துவிட்டதென்று துடிக்கிறாள். ஆளச் சொல்லிக் காட்டுக்கனுப்புதல் குளிர்ச்சியாக இருந்து கொல்லும் நஞ்சினியல்பாக இருக்கிறதே என்று கோசலை அஞ்சுகிறாள். பரதனிடத்து 'நீ அரசை ஏற்றுக்கொள்' என்றபோது 'நஞ்சினை நுகர் என நடுங்குவாரினும் அஞ்சினன் அயர்ந்தனன் அருவிக் கண்ணினன்' (பாடல் 896) என வருதலோடு ஒப்பு நோக்குக. கூனி கைகேயியின் காலைப் பிடிக்கும்போதே 'கைகளில் தீண்டினாள் காலக் கோளனாள்'

---

577. தஞ்சம் - பொறுப்பு.

(பாடல் 465) என்றார். தயரதனை வரம் வேண்டும்போது கைகேயியை, 'நாகமெனுங் கொடியாள் நாவின் ஈந்த, சோக விடம் தொடர' (பாடல் 510) என்றார். கூனி கொடுத்த விடம் நாடு முழுமையும் பிடித்தாட்டுகிற தென்க. 'என் ஆருயிர் அஞ்சும்' என்று மும்முறை சொன்னாள்; மூன்றுக்குமேல் சொல்லக்கூடா தென்பது விதி, ஆயிரம் முறை சொன்ன மாதிரிதான்.

இலையைத் தளிரால் பிசைகிறாள்

578 கையைக் கையில்
　　நெரிக்கும்; தன் காதலன்
வைகும் ஆலிலை
　　அன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி
　　ரால்பிசை யும்; புகை
வெய்து யிர்க்கும்;
　　விழுங்கும்; புழுங்குமால். கக

ஒரு கையை மற்றொரு கையோடு சேர்த்து நெரிப்பாள்; தன் அருமை மகன் தங்கியிருந்த ஆலிலை போன்ற வயிற்றினை வளையணிந்த இளந்தளிர் போன்ற கைகளினால் பிசைவாள்; நெருப்புப் புகை வெளிப்படும்படி பெருமூச்சு விடுவாள்-மூச்சை உள்ளே இழுப்பாள்; புழுக்கமுறுவாள்.

(வி - ம்) பேரூழிக் காலத்து நீர்ப் பெருக்கின்மேல் ஆலிலையில் திருமால் கண்வளர்வான் என்பது புராணம். அந்த ஆலிலைபோன்ற வயிறு என்றார். பெண்களின் வயிற்றுக்கு ஆலிலையை உவமை கூறுவது இயல்பு.

578. நெரித்தல் - புறங்கையுடன் புறங்கையைச் சேர்த்து மடக்குதல். காதலன் - மகன். பெய்தல் - அணிதல். தளிர் - தளிர் போன்ற கை.

திருமாலாகிய இராமன் இந்த ஆலிலையில் பத்து மாதம் தூங்கினனல்லவா? வயிறாகிய ஆலிலையைக் கையாகிய தளிராற் பிசையும் என்ற அருமைப் பிரயோகம் எண்ணி எண்ணி இன்புறத் தக்கதாகும். இதனை 'மாலாகும் வேளையில் நீலாசல மொத்து மாப்பறவை, மேலாக வந்தருள்வாய் எங்கள் கோசலை மெய்வயிறென், ஆலாய் அதில் இளம் சேயாய் உறங்கி அசோதை கண்போல், சேலாய் எழும் அழகா குல பூதரச் சீதரனே' (அழகர் கலம்பகம் 21) என்று பாராட்டினதறிக.

காட்டுக்குப் புறப்படலாம் வா!

579 நன்று மன்னன்
கருணை எனநகும்;
நின்ற மைந்தனை
நோக்கி நெடுஞ்சுரத்து
என்று போவது
எனஎழும்; இன்னுயிர்
பொன்றும் போதுஉறல்
உற்றது போலுமே. கஉ

மன்னனது அருள் நன்றாக இருக்கிறது என்று சிரிப்பாள்; எதிரில் நிற்கிற மகனைப் பார்த்து, நீண்ட பாலை நிலத்திற்கு எப்போது போவது என்று எழுந்திருப்பாள்; இனிய உயிரானது அடங்கும்போது படும் பாடு (மரணவத்தை) போன்றது (அவளின் நிலைமை).

(வி - ம்) அரசனது சத்தியத்தில் ஐயப்படாத கோசலை கருணையில் தவறிவிட்டானென்று நினைக்கிறாள். துயரப் பெருக்கால் புத்தி குழம்பிவிட்டாள். இராமனை நோக்கிக்

579. நகுதல் - சிரித்தல். சுரம் - பாலை நிலம். பொன்றுதல் - இறத்தல்.

காட்டுக்குப் போகலாமா என்று கேட்கிறாள். அரசனது கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் குழப்ப நிலையிலும் தோன்றுகிறது. மகனோடு பிரியாது பிணைந்திருக்கும் அன்பு காரணமாக 'என்று போவது' என்று தன்னையும் மகனையும் சேர்த்தே சொல் வருவது காண்க. இச்செய்தி கேட்டதும், உயிர் பிரியும்போது ஏற்படும் மாணவத்தையை அடைந்தாள் என்றவாறு.

அரசனுக்கு நீ ஏதாவது பிழை செய்தாயா?

580 அன்புஇ ழைத்த
மனத்துஅர சற்கு, நீ!
என்பி ழைத்தனை?
என்றுநின்று ஏங்குமால்
முன்பு இழைத்த
வறுமையின் முற்றினோர்,
பொன் பிழைக்கப்
பொதிர்ந்தனர் போலவே. கரு

அன்பு காட்டிய மனத்தையுடைய அரசனுக்கு நீ என்ன பிழை செய்தாய் என்று கூறிநின்று, முன்பு வறுமை இழைத்த துன்பத்தினின்றும் நீங்கினவர் கிடைத்த பொன் தவறிப் போக நடுங்கினாற்போல ஏங்குவாள்.

(வி - ம்) அரசன் சொல் தவறமாட்டான் என்பதில் ஏற்பட்ட உறுதியால் இவன்தான் ஏதாவது பிழை செய்திருப்பானோ என்று நினைக்கிறாள். இழைத்த வறுமையின் என்றதை வறுமை இழைத்ததின் என்று பிரித்துக் கூட்டுக. வறுமை இழைப்பது துன்பம். முற்றினோர்—அத்துன்பத்

580. பிழைக்க - தவறிப்போக. பொதிர்தல் - நடுங்குதல். முற்றினோர் - முடிவு கண்டவர்.

தைக் கடைசிவரை அனுபவித்தவர்; எனவே அதனினின்றும் விடுபட்டவர் என்க. பிள்ளையில்லாது நெடுங்காலம் தவங்கிடந்து பெற்ற பிள்ளையைக் காட்டுக்கு அனுப்புதல், வறியவன் அரும்பாடு பட்டுச் செல்வத்தைப் பெற்று, எதிர்பாராத விதமாக அதனை இழத்தல்போன்றது என்றார். இதை, 'கண்ணிலான் பெற்றிழந்தான்' (பாடல் 58) என வருதலால் அறிக.

கன்றைப் பிரிந்த கறவை

581 அறம்எ னக்கிலை
யோஎனும் ஆவி நைந்து
இறவி டுத்ததுஎன்
தெய்வதங் காள்எனும்
பிறஉ ரைப்பதென்
கன்று பிரிந்துழிக்
கறவை ஒப்பக்
கரைந்து கலங்கினள். கசு

எனக்குத் தருமம் துணை செய்யாதோ என்பாள்; உயிர் வாடி அழியும்படிச் செய்தது என்ன காரணம் ஏ தெய்வங்களே என்பாள்; வேறு சொல்லி ஆவதென்ன? கன்று பிரிந்தபோது தாய்ப்பசுவைப் போல அழுது கலங்கினள்.

(வி - ம்) அழுததைக் கரைந்து என்றார். உயிர், துன்பத்தைத் தாங்காமல் கரைந்து கண்ணீராக வருகிறதென்றபடி. பல இடங்களில் கோசலையைப் பசுவாகவும் இராமனைக் கன்றாகவும் கூறப்படும்.

---

581. இறுதல் - அழிதல். கறவை - பசு. கரைதல் - அழுதல்.

அரசனைப் பொய்யனுக்கலாமா?

582 இத்தி றத்தின்
இடர்உறு வாள்தனைக்
கைத்த லத்தின்
எடுத்து,அருங் கற்பினேய்!
பொய்த்தி றத்தினன்
ஆக்குதி யோ?புகல்!
மெய்த்தி றத்துநம்
வேந்தனை நீஎன்ருன். கரு

இவ்வாறு துன்பப்படுகிற கோசலையை, தன் கையினுல் தூக்கி, 'அரிய கற்புடையாளே! சத்தியத்திலே நிலைபெற்ற நம் அரசனை நீ பொய்யின்பாற் பட்டவனுக்குகிருயா! சொல்!' என்ருன்.

(வி-ம்) கணவன் இட்ட கட்டளைக்கு மாறுசொல் வாளோ என்ற நினைப்பினுல் அவளை 'அருங் கற்பினேய்' என்று விளித்தான். தந்தையின் கட்டளையை மறுத்தல் தகா தென்பதாம்.

இதைவிட எனக்கு வேறு பேறு உண்டா?

583 சிறந்த தம்பி
திருஉற, எந்தையை
மறந்தும் பொய்யிலன்
ஆக்கி, வனத்திடை

---

582. இடர் - துன்பம். திறம் - வழி: ஆறு. திறம் - வகை: பால். திறம் - நிலைபேறு.

583. திரு - அரசாட்சி. எந்தை - என் தந்தை. உறைந்து தீரும் - வசித்து முடிக்கும். பேறு - பயன். பிறிது - வேருென்று

உறைந்து தீரும்
உறுதிபெற் றேன்! இதில்
பிறந்து யான்பெறும்
பேறுஎன்பது யாவதே. கசு

சிறந்த குணமுள்ள தம்பி அரசை அடைய, என் தந்தையை மறந்தும் பொய்யில்லாதவன் ஆக்கி, மனத்தில் வசித்துத் தீர்வதாகிய உறுதியைக் கொண்டிருக்கிறேன்; இதைக் காட்டிலும் பிறந்து அடையவேண்டிய பேறு வேறு ஏதேனும் இருக்கிறதா?

(வி - ம்) மன்னன் என்னிடம் கொண்டிருக்கிற அன்பினாலே சத்தியத்தைக்கூட மறந்துவிடுவான். அவ்வாறு மறக்க விடுவதும் சரியன்று. ஆதலின் நான் காட்டுக்குப் போயே தீருவேன் என்று இராமன் கூறினான். தயரதன் அயர்ந்து கிடந்த நிலையில், எல்லாவற்றையும் மறந்து எப்படியாவது இராமன் திரும்பி வரவேண்டும் என்று கருதிவிட்டான் என்பதை 'ஒன்றுந் தெரியா மம்மர் உள்ளத்தரசன் மெள்ள, வன் திண் சிலைநம் குரிசில் வருமே வருமே என்றான்' (பாடல் 613) என்பதால் அறியலாம்.

தந்தையின் சொல்லை மறுப்பனோ?

584 'விண்ணும் மண்ணும்
அவ்வேலையும் மற்றும்வேறு
எண்ணும் பூதம்எலாம்
இறந்து ஏகினும்

584. வேலை - கடல். வேறு எண்ணும் பூதங்களாவன: காற்றும் நெருப்புமாம். அண்ணல் - தந்தை. ஒண்ணுமோ - இயலுமா? உள் - உள்ளம்.

அண்ணல் ஏவல்
மறுக்க அடியனேற்கு
ஒண்ணுமோ? இதற்கு
உள்அழி யேல்!'என்ருன். கஎ

வானும், மண்ணும், கடலும் இன்னும் எண்ணத்தக்க வேறுள்ள பூதங்கள் எல்லாம் அழிந்து ஒழிந்தாலும், தந்தையின் கட்டளையை மறுக்க அடியேனுக்கு இயலுமா? (இயலாது. ஆதலால்) இதற்கு உள்ளம் அழியவேண்டாம் என்ருன்.

என்னையும் உடன் அழைத்துச் செல்

585 ஆகில், ஐய!
அரசன்தன் ஆணையால்
ஏகல் என்பது
யானும்உ ரைக்கிலேன்;
சாக லாஉயிர்
தாங்கவல் லேனையும்
போகின் நின்ளெடும்
கொண்டனை போகஎன்ருள். கஅ

அப்படியாளுல் மகனே! அரசனுடைய கட்டளைப்படி செல்ல வேண்டாம் என்பதாக யானும் சொல்லவில்லை. செத்துப் போகாதிருக்கிற என்னுடைய உயிரைத் தாங்க இன்னும் வலிமை பெற்றிருக்கிற என்னையும் (நீ காட்டுக்குப்) போவாயாளுல் உன்னேடு கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்ருள்.

(வி - ம்) நீ காட்டுக்குப் போகிருய் என்றதைக் கேட்டதும் உயிர் துடிக்கிறதே யன்றித் தொலைய வில்லையே என்று

585. ஏகல் - ஏகவேண்டாம். கொண்டனை - கூட்டிக் கொண்டு.

துக்கம் பொறுக்காமல் கூறினள். 'வல்லாராயினும் வல்லுந ராயினும்' என்றாற் போல (புறநானூறு 27—15) வல்லேனை யும் என்றதை எதிர்மறையாகக் கொண்டு 'சாகாதிருக்கிற உயிரைத் தாங்க வலிமையில்லாத என்னையும்' என்றுங் கொள்ளலாம்.

தவம் புரியும் தந்தைக்கு உதவிசெய்

586 வரிவில் எம்பிஇம்
மண்ணர சாய்அவற்கு
உரிமை மாநிலம்
உற்றபின், கொற்றவன்
திருவின் நீங்கித்
தவம்செயும் நாள்,உடன்
அருமை நோன்புகள்
ஆற்றுதி யாம்அன்றே. கசு

கட்டமைந்த வில்லையுடைய என் தம்பி இந்த நிலவுலக அரசனாக, அவனுக்கு இந்நிலம் உரிமையான பிறகு, அரசன் அரசு நீங்கித் தவம் செய்யச் செல்லும்பொழுது அவனுடன் இருந்து அருமையான நோன்புகளை (நீ) செய்யவேண்டு மல்லவா?

ஆண்டென்ன பதினாலு நாள் மாதிரி

587 'சித்தம் நீ,திகைக்
கின்றதுஎன் ? தேவரும்
ஒத்த மாதவம்
செய்துஉயர்ந் தார்அன்றே !

---

586. கொற்றவன் - வெற்றியையுடையவன் : தயரதன். ஆற்றுதி - செய்வாய்.

587. பகல் - நாள்.

எத்த னைக்குள
　　ஆண்டுகள்? ஈண்டுஅவை
பத்தும் நாலும்
　　பகல்அல வோ?'என்றான். உ0

நீ ஏன் மனம் திகைக்கிறாய்? தேவர்களும் மனவுறுதிக்கு ஒத்த மாதவம் செய்து உயர்ந்திருக்கிறார் அல்லவா? ஆண்டுகள் உள்ளதெல்லாம் எத்தனை? இங்கே அவை பத்தும் நாலும் நாட்கள் அல்லவா என்றான்.

(வி-ம்) இதென்ன பெரிய காரியம்; பதினாலு ஆண்டையும் பதினான்கு நாளாகக் கழித்துவிட்டு வந்து விடுகிறேன்; தவம் செய்வது நல்லதுதானே? நீ ஏன் மலைக்கிறாய் என்று கூறித் தேற்றுகிறான்.

இவன் காடு செல்வது உறுதி

588 இத்தி றத்தன
　　னைப்பல வாசகம்
உய்த்துஉ ரைத்த
　　மகன்உரை உட்கொளா,
எத்தி றத்தும்
　　இறக்கும்இந் நாடுஎன,
மெய்த்தி றத்து
　　விளங்கிழை உன்னுவாள். உக

இவ்வகையான வேறு பலசொற்களை ஆராய்ந்து சொன்ன மகனுடைய சொற்களை மனத்துட் கொண்டு, எந்த வழியிலும் இந்த நாட்டைவிட்டுச் சென்று விடுவான் என்று கருதி, விளங்குகிற நகைகளை அணிந்திருக்கிற கோசலை, (காடு செல்

588. எனை - வேறு (ஏனை என்பதன் விகாரம்). இறத்தல் - செல்லுதல். உன்னுதல் - ஆராய்தல்.

வதைத் தடைசெய்ய) உண்மையோடு கூடிய வழியை ஆராய்ந்து பார்த்தாள்.

அரசனைக்கொண்டு தடுப்பேன்

589 அவனி காவல்
பரதனது ஆகுக;
இவன்இஞ் ஞாலம்
இறந்து,இரும் கானிடை
தவன்நி லாவகை
காப்பென் தகைவிலாப்
புவனி நாதற்
றொழுதுஎன்று போயினாள். உஉ

இந்த உலகத்தை ஆளுதல் பரதனுக்கே ஆகட்டும்; இந்த இராமன் இந்நாட்டை விட்டுச் சென்று பெரிய காட்டில் தவம் செய்யாதபடி, தடுத்துச் சொல்லுவாரில்லாத உலகநாதனாகிய சக்கரவர்த்தியைத் தொழுது தடுப்பேன் என்று புறப்பட்டுச் சென்றாள்.

(வி - ம்) அரசனுக்கு முன்நின்று எடுத்துச் சொல்லித் தடுப்பவர் இல்லாமல்தான் இப்படிப்பட்ட தேவையில்லாத கட்டளை பிறந்திருக்கிறதென்று கருதுகிறாள். பட்டம் கட்டுகிறது போகட்டும்; இவனைக் காட்டுக்குத் தவம் செய்யும்படி அனுப்புவது யோசனையற்ற காரியம். இதை எடுத்துச் சொல்லி அரசனை எளிதில் உடன்படச் செய்துவிடலாமென்று கருதுகிறாள். காப்பென் என்றது தடுப்பேன் என்ற பொருளது. இருப்பதை வளர்த்தலும் அதன் அழிவைத் தடுத்தலும் காத்தலேயாம்.

---

589. அவனி - உலகம். காவல் - ஆட்சி. ஞாலம் - உலகம். இறந்து - சென்று. தவன் - தவம் (போலி). நிலாவகை - நில்லாதபடி. காத்தல் - தடுத்தல்.

இராமன் சுமித்திரையின் மாளிகை அடைதல்

590 போகின் றாளைத்
தொழுது, புரவலன்
ஆக மற்றுஇவள்
தன்னையும் ஆற்றி, இச்
சோகம் தீர்ப்பவள்
என்று, சுமித்திரை
மேகம் தோய்தனிக்
கோயிலை மேயினான். உரு

போய்க்கொண்டிருக்கிற தாயைத் தொழுது, அரசன் காரியம் இருக்கட்டும், இவளை (தாயை) ஆறுதல் செய்து இந்த வருத்தத்தைத் தீர்க்கக்கூடியவள் (சுமித்திரைதான்) என்று (எண்ணி) சுமித்திரையின் மேகத்தை ஒட்டி உயர்ந்திருக்கிற ஒப்பற்ற அரண்மனைக்குச் சென்றான்.

(வி - ம்) அரசனைத் திருத்துவது ஆகாத காரியம். என்னவோ நடக்கட்டும் என்ற கருத்தில் 'புரவலன்—ஆக' என்று இடைவிட்டு வாக்கியம் முடிந்திருக்கிறது. தாய் கொண்ட அம் முயற்சியை வேண்டாமென்று தடுக்க எண்ணிச் சிறிது யோசித்து, நடக்கட்டும் என்று விட்டமாதிரி வாக்கியம் அமைந்து கிடப்பதறிக.

கோசலை அரசன் இருக்கும் இடம் அடைதல்

591 நடந்த கோசலை
கேகய நாட்டுஇறை
மடந்தை கோயிலை
எய்தினள்; மன்னவன்

---

590. ஆக - ஆகட்டும். ஆற்றி - ஆறுதலடையச் செய்து. சோகம் - களைப்பு.

591. இறை - மன்னன். உடைதல் - அழிதல்.

கிடந்த பார்மிசை
விழ்ந்தனள் ; கெட்டுஉயிர்
உடைந்த போதின்
உடல்விழுந்து என்னவே. உச

நடந்துசென்ற கோசலை கேகயநாட்டு மன்னன் மகளி (கைகேயி) னுடைய மாளிகையை அடைந்தாள். மன்னன் கிடக்கிற இடத்தில் தரையின்மேல், நிலைகெட்டு உயிர் பிரிந்த காலத்தில் உடல் விழுகிற மாதிரியாக விழுந்தாள்.

கோசலையின் புலம்பம்

592 *பிறியார் பிரிவேது என்னும் ;
பெரியோய் தகவோ என்னும் ;
நெறியோ அடியேம் நிலைநீ
நினையா நினைவேது என்னும் ;
வறியோர் தனமே என்னும் ;
தமியேன் வலியே என்னும் ;
அறிவோ வினையோ என்னும் ;
அரசே அரசே என்னும் ; உரு

(சிறிது உணர்வு வந்த கோசலை) பிரியாதவர் பிரிவு எப்படி உண்டாயிற்று என்பாள் ; பெருமையுடையவனே ! இது உனக்குத் தகுமா என்பாள் ; இது நீதியா ? அடியார்களாகிய எங்கள் நிலையை நினையாத நினைவு எப்படி வந்தது என்பாள் ; வறியவர்கட்கு நிதியாக இருந்தவனே என்பாள் ; அடியேனுடைய வலிமையாக இருந்தாயே என்பாள் ; இது உன் நினைவோடு நிகழ்ந்ததா ? தீவினையின் பயனா என்பாள் ; அரசனே அரசனே என்பாள்.

(வி - ம்) சற்று நினைவு வந்தவுடன் ஆற்றாமல் பலவாறு சொல்லிப் புலம்பத் தொடங்கிவிட்டாள். மகன் பிரியப்

592. பிறியார் - பிரியாதவர்.

போவதில் ஏற்பட்ட துயரம் தாங்கமுடியாமல் ஆறுதல் பெறலாமென்று இங்கே வந்தாள். மன்னன் கட்டையாகக் கிடக்கிறான். கண்டு வசமிழந்து புலம்புகிறாள்.

இதுவும் அது

593 திரைஆர் கடல்சூழ் உலகின்
தவமே! திருவின் திருவே!
நிறைஆர் கலையின் கடலே!
நெறிஆர் மறையின் நிலையே!
கரையா அயர்வேன் எனை நீ
கருணா லயனே எனின்,ஒன்று
உரையா இதுதான் அழகோ?
உலகுஏழ் உடையாய்! என்னும். ௨௬

அலை பொருந்திய கடல் சூழ்ந்த உலகு செய்த தவம் போன்றவனே! செல்வத்தின் செல்வமே! வரிசைப்பட்ட கலைகளில் கடல் போன்ற அறிவுடையவனே! நீதிகள் நிறைந்த வேதத்தின் நிலைக்களனாக உள்ளவனே! கரைந்து கரைந்து தளர்கின்ற என்னை, கருணைக்கு இருப்பிடமானவன் நீ என்றால் ஒரு சொல்லும் சொல்லாதிருக்கிற இதுதான் அழகா? உலகம் ஏழையும் உடைமையாகப் பெற்றவனே! என்பாள்.

அழுகை கேட்ட மன்னர் முனிவரை அனுப்புதல்

594 இவ்வாறு அழுவாள் இரியல்
குரல்சென்று இசையா முன்னம்
ஒவ்வாது ஒவ்வாது என்னா
ஒளிவாள் நிருபர், முனிவர்

---

593. கருணாலயன் - கருணைக்குக் கோயில் போன்றவன். உரையா - பேசாத.

594. இரியல் - அழுகை. ஆறு - வரலாறு.

'அவ்வாறு அறிவாய்' என்ன,
வந்தான் முனிவன்; அவனும்
வெவ்வாள் அரசன் நிலைகண்டு
என்னும் விளைவென்று உன்னு. உஎ

இவ்வாறு அழுகின்ற கோசலையின் அழுகைக் குரல் சென்று கேட்பதற்கு முன்பு, ஒவ்வாத குரல் ஒவ்வாத குரல் என்று ஒளி பொருந்திய வாளினைக் கொண்ட அரசர்களும், முனிவர்களும் அதன் வரலாற்றை அறிந்து வரவேண்டும் என்றுகூற, வசிட்டமுனிவர் (கைகேயியின் மாளிகைக்கு) வந்தார். அவரும் கொடிய வாளினையுடைய அரசனது நிலையைக் கண்டு இதன் விளைவு என்ன ஆகும் என்று எண்ணி,

நடந்ததைக் கைகேயி சொல்லல்

595 என்னு உன்னு முனிவன்
இடரால் அழிவாள் துயரம்
சொன்னாள் ஆகாள் எனமுன்
தொழுகே கயர்கோன் மகளை,
'அன்னாய்! உரையாய் அரசன்
அயர்வான் நிலைஎன்?' என்ன,
தன்னால் நிகழ்ந்த தன்மை
தானே தெரியச் சொன்னாள். உஅ

முனிவர், துன்பத்தால் நிலை அழிந்திருக்கிற கோசலை துயரத்துக்குக் காரணம் சொல்லுபவள் ஆகாள் என்று கருதி, தொழுது முன் நிற்கிற கைகேயியை, 'தாயே! சொல் அரசன் தளர்ந்து கிடக்கிறானே அவன் நிலை என்ன' என்று கேட்க, தன்னால் நிகழ்ந்த காரியங்களைத் தெரியும்படி, தானே விரித்துச் சொன்னாள்.

---

595. உன்னு - கருதிய.

அரசனை முனிவர் தேற்றல்

596 சொற்ருள் ; சொற்ரு முன்னம்,
சுடர்வாள் அரசர்க் கரசைப்
பொற்ரு மரைபோற் கையால்
பொடிசூழ் படிநின் றெழுவி,
‘கற்ருய்! அயரேல்! அவளே
தரும்நின் காதற்கு அரசை!
எற்றே செயல்!இன்று ஒழிநீ’
என்றென்று இரவா நின்ருன். உக

சொன்னுள் ; சொல்லுமுன்பே ஒளிபொருந்திய வாளாயுதத்தையுடைய சக்கரவர்த்தியை, அழகிய தாமரைப்பூப் போன்ற தன் கைகளினுல் புழுதி படிந்த நிலத்திலிருந்தும் தூக்கி, ‘கல்வியிற் சிறந்தவனே! தளர்ச்சியடைய வேண்டாம்; அவளே (கைகேயியே) நின் அன்புக்கரசனுகிய இராமனை அழைத்துத் தருவாள்; இச்செயல் என்னே! இப்பொழுதே விடு’ என்றென்று பலகூறிக் கெஞ்சினுர் (வசிட்ட முனிவர்).

பழியை நீக்கி முடியைச் சூட்டு

597 என்றம் முனிவன் தன்னை,
‘நினையா வினையேன் இனியான்
பொன்றும் அளவில் அவனைப்
புனைமா மகுடம் புனைவித்து,
ஒன்றும் வனமென்று உன்னு
வண்ணம் செய்து,என் உரையும்
குன்றும் பழிபூ ணுமல்
காவாய்! கோவே!’ என்ருன். ௩௦

---

596. சொற்ருள் - சொன்னுள். பொடி - தூசி. படி - நிலம்.

597. என்றம் - என்று அம். பொன்றுதல் - சாதல். கோ - முனிவர் கோ.

என்று கூறிய அந்த முனிவரை (நோக்கி) 'நினையாத வினையைச் செய்ய முற்பட்டவனாகிய யான் இனிச் சாகும் போதாவது அவனுக்கு (இராமனுக்கு) அலங்கரிக்கப்பட்ட முடியைச் சூட்டி, வனம் என்ற சொல்லையே நினையாதபடி செய்து, என்வாக்கையும் குன்றத்தக்க பழிபூணாதவாறு காக்க வேண்டும் மேலானவனே!' என்றான்.

(வி - ம்) '(நான்) ஆலோசித்துப் பாராமல் செயல் புரிந்தவன். நான் இனிப் பிழைக்க மாட்டேன். இருந்தாலும் இதற்கிடையில், இராமனை வனத்துக்குச் செல்லவிடாமல் முடியைச் சூட்டிக் கைகேயிக்குக் கொடுத்த வரம் தவறியதென்ற பழிச் சொல்லும் ஏற்படாமல் செய்யவேண்டும்' என்றான். இவை அவனுடைய கலங்கிய உள்ளத்திலிருந்து எழுந்தவை. கைகேயியே இராமனை அழைத்து வருவாள் என்று, முனிவர் கூறிய தேறுதலை நம்பிக் கூறிய பதிலாகும். முனிவரும், ஏதோ சொன்னால் கைகேயி கேட்பாள் என்று கருதினார். இதுவரை அந்த இராச்சியத்தில் வசிட்டர் சொல்லை மீறினவர் கிடையாதல்லவா?

முனிவர் கைகேயியை வேண்டல்

598 முனியும் முனியும் செய்கைக்
கொடியாள் முகமே முன்னி,
'இனியுன் புதல்வற்கு அரசும்,
எனையோர் உயிருக்கு உயிரும்,
மனுவின் வழிநின் கணவற்கு
உயிரும், உதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே
புனையாய்! பொன்னே!' என்றான். ௩௧

598. முன்னி - எதிர்ப்படநோக்கி. எனையோர் - எனையோர். முனியும் - முனிவரும். முனியும் - வெறுக்கத்தக்க.

முனிவரும், வெறுக்கத்தக்க செய்கையையுடைய கொடியவளாகிய கைகேயியின் முகத்தைப் பார்த்து, இனி உன் புதல்வனுக்கு (இராமனுக்கு) அரசையும், மற்றையோருடைய உயிருக்கு உயிரையும், மனுவின் வழிவந்த நின் கணவனுக்கு உயிரையும் கொடுத்து வசையொழிந்த பரிசுத்தம் பொருந்திய புகழை அணிந்துகொள்வாயாக பொன்போன்ற கைகேயியே! என்றார்.

(வி-ம்) நீதிக்கே நிலைக்களமான மனுவின் வழிவந்தவன் உன் கணவன்; கணவன் வழி நிற்கவேண்டியவள் நீ ; ஆகவே நீதி தவறல் ஆகாது என்றார். நகரமக்கள் யாவரும் உயிருடன்தான் இருக்கின்றனர் ; இறந்து போகவில்லை. ஆனால் இராமன் பிரிந்தால் அவர்களின் உயிரில் உயிர்ச்சத்து இராது என்றபடி.

அரசன் சத்தியம் தவறினுல் சாவேன்

599 மொய்ம்மாண் வினைவேர் அறவென்று
உயர்வான் மொழியா முன்னம்,
விம்மா விழுவாள் ; 'அரசன்
மெய்யில் திரிவான் என்னில்,
இம்மா உலகத்து உயிரோடு
இனிவாழ்வு உகவேன் ; என்சொல்
பொய்ம்மா ணுமற்கு இன்றே
பொன்ருது ஒழியேன்' என்றாள். ௩௨

வலிமை மிகுந்த வினைகளை வேருமில்லாமல் வெற்றிகொண்டு உயர்ந்தவராகிய வசிட்டர் சொல்லி முடித்தற்கு முன்பு, விம்மி விழுந்தாள் ; அரசன் உண்மையினின்றும்

---

599. மொய் - வலிமை. மாண் - மிகுந்த. உகத்தல் - விரும்புதல். பொய்மாணுமற்கு - பொய் சிறப்படையாதிருத்தற்கு : (பொய் ஆகாமைக்கு) மாண் - சிறந்த. பொன்றுதல் - சாதல்.

மாறுபடுவான் என்றால் இந்தப் பெரிய உலகிலே உயிரோடு வாழ்வதை இனி விரும்பமாட்டேன் ; என் சொல் பொய்யை அடையாமலிருப்பதற்காக இப்பொழுதே சாவாதிருக்கமாட்டேன் என்றாள்.

(வி - ம்) அரசன் சத்தியம் தவறாதவன். அரசனின் சத்தியத்தைக் காக்கவே இராமன் காட்டுக்குச் செல்கிறான். அதையே தானும் கடைப்பிடிப்பதாகக் கைகேயி சொல்கிறாள். எது அறமென்று கருதப் படுகிறதோ அதுவே கொடுமைக்கும் துணையாகக் கூறப்படுகிறதென்பது நோக்கத்தக்கது.

சொன்னாலும் கேட்கவில்லை ; தன்னாலும் தெரியவில்லை

600 கொழுநன் துஞ்சும் எனவும்,
கொள்ளாது உலகம் எனவும்,
பழிநின்று உயரும் எனவும்,
பாவம் உளதாம் எனவும்,
ஒழிகின் றிலைஅன் றியும்ஒன் று
உணர்கின் றிலையான் இனிமேல்
மொழிகின் றனஎன்? என்று
முனியும் முறையன்று என்றான். ருரு

கணவன் இறந்து போவான் என்றும், உலகம் ஏற்காது என்றும், பழியானது (மலையாக) நின்று வளரும் என்றும், பாவம் உண்டு என்றும், கருதிப் பிடிவாதத்தை விடுகிறாயில்லை ; அல்லாமல் ஒன்றை உணர்கிறாயுமில்லை. யான் இதற்குமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது என்று முனிவர் கூறி இது முறையல்ல என்றும் சொன்னார்.

(வி - ம்) 'நீயாகவும் அறியவில்லை ; சொன்னாலும் கேட்கவில்லை' (பாடல் 479) என்று கூனி கூறினாள். கூனி சொல்

600. துஞ்சும் - சாவான். ஒழிதல் - விடுதல்.

லக் கேட்டு நடக்க முற்பட்ட கைகேயியை நோக்கி 'நீயாக வும் உணரவில்லை; நான் சொல்வதையும் கேட்கவில்லை" என்று இங்கே முனிவர் கூறுவது உணர்ந்தின்புறத் தக்கதாம். கைகேயி எவ்வாறு நிலைதிரிந்திருக்கிறாள் என்பது இங்கே எடுத்துக் காட்டப்பட்டது.

நீயோ போகச் சொன்னாய்

601 வாயால் மன்னன் மகனை
　　வனமே கென்னு முன்னம்
நீயோ சொன்னாய்; அவனோ
　　நிமிர்கா னிடைவெம் நெறியில்
போயோ புகலோ தவிரான்;
　　புகழோ டுயிரைச் சுடுவெம்
தீயோய்! நின்போல் தீயார்
　　உளரோ? செயல்என்! என்றான். ௩௪

அரசன் தன் வாயினாலே மகனை வனத்துக்குப் போ என்று சொல்லாததற்கு முன்பாகவே நீயா சொன்னாய். அவனோ அடர்ந்த காட்டினிடைக் கொடிய வழிகளில் போய் அடைதலில் தவறமாட்டான். புகழையும் உயிரையும் சுடுகின்ற கொடுந்தீ போன்றவளே! உன் போன்ற தீயவர் உலகில் உண்டோ (இஃது) என்ன செயல்! என்றார். (முனிவர்)

இராமனும் காட்டுக்குச் சென்றான!

602 தாவில் முனிவன் புகலத்
　　தளரா நின்ற மன்னன்
நாவில் நஞ்சம் உடைய
　　நங்கை தன்னை நோக்கி,

---

601. நிமிர் கான் - பெரிய மரங்களையுடைய காடு.
602 தாவு - தாழ்வு. படர்தல் - செல்லுதல்.

‘பாவி! நீயே வெங்கான்
படர்வாய் என்றுஎன் உயிரை
ஏவி னையோ! அவனும்
ஏகி னனோ?’ என்றான். ௩௫

தாழ்வில்லாத முனிவர் இவ்வாறு சொன்னதும், தளர்ச்சியோடு கிடக்கிற மன்னன் நஞ்சை நாக்கிலே உடைய கைகேயியைப் பார்த்து, ‘பாவி! நீதான் கொடிய காட்டிற் செல்வாய் என்று கூறி என் உயிரை விரட்டினையோ! அவனும் உன் சொல்லைக் கேட்டுச் சென்றானோ?’ என்றான்.

மனைவியல்ல எமன்

603 கண்டேன் நெஞ்சம் கனிவாய்க்
கனிவாய் விடம்நான் நெடுநாள்
உண்டேன்; அதனல் நீஎன்
உயிரை முதலோடு உண்டாய்;
பண்டே எரிமுன் உன்னைப்
பாவி! தேவி யாகக்
கொண்டேன் அல்லேன்; வேறோர்,
கூற்றம் தேடிக் கொண்டேன். ௩௬

(உன்னுடைய கொடிய) மனத்தை அறிந்தேன். கனிவோடு (உன்னுடைய) கனிந்த வாயின் நஞ்சை நீண்ட நாட்களாக உண்டு இன்புற்றேன். அதனல் நீ என் உயிரை அடியோடு தொலைத்துவிட்டாய்; முன்னாளில் தீயின் முன்பாக, பாவி! உன்னை மனைவியாக மணம் செய்துகொள்ளவில்லை; வேறு ஒரு எமனைத் தேடிக் கொண்டுவந்துவிட்டேன்.

(வி-ம்) உன்னிடத்தில் நெடுநாள் இன்பம் அனுபவித்தேன்; ஆனல் அதற்கு ஈடாக என் உயிரையே விழுங்கிவிட்டாய் என்றான். நெடுநாள் என்றதால் உயிரைச் சிறு

---

603. முதல் - வேர்; அடி. பண்டு - பழைய நாள். எரி - தீ.

பொழுதில் பிரிக்க முற்பட்டாள் என்று கொள்ளப்படும். எமன் ஒருவன் இருக்கிறான். அவன் உரிய காலத்தில் வந்து உயிரைப் பிரிப்பான். இடையிலே உயிர்பிரிக்கும் வேறு ஒரு எமனாக நீ வந்து சேர்ந்தாய் என்றான். எமன் நாம் வெறுக்கும்படி வருவான். உன்னை மனைவியாக விரும்பித் தேடிப் பெற்றேனே என்று வருந்தினான்.

கழுத்துக் கயிறே காப்புக் கயிறு

604 விழிக்குங் கண்வே றில்லா
வெங்கான் எங்கால் முளையைச்
சுழிக்கும் வினையால் ஏகச்
சூழ்வாய்! என்னைப் போழ்வாய்!
பழிக்கும் நாணாய்! மாணாப்
பாவி! இனிஎன் பல?உன்
கழுத்தின் நாண்உன் மகற்குக்
காப்பின் நாணும் என்றான். எ

விழித்துப் பார்க்கும் கண் (அவனை யன்றி) வேறில்லாத என் வழியில் தோன்றிய பிள்ளையைக் கொடுமையான காட்டிற்குச் சாமர்த்தியமான தந்திரத்தால் செல்லும்படி சூழ்ச்சி செய்துவிட்டாய். என்னைப் பிளந்துவிட்டாய். உலகோரின் பழிச் சொல்லுக்கும் வெட்கப்பட மாட்டாய். தகுதியற்ற பாவி! இனிப் பல சொல்லிப் பயனென்ன! உன் கழுத்தில் கட்டியிருக்கிறாயே தாலி, அது உன் மகனுக்கு முடிசூட்டு மங்கலத்துக்குக் காப்புக் கட்டுகிற கயிறாகும் என்றான்.

(வி - ம்) கண்ணைப் போன்றவன் இராமன்! அவனை யல்லாமல் விழித்துப் பார்க்கிற கண் வேறில்லை என்றான். இரா

---

604. கால் - சந்ததி; வழி. கால்முளை - வழித்தோன்றல்: பிள்ளை. சுழித்தல் - பித்தலாட்டம் செய்தல். சூழ்தல் - வினை புரிதல். போழ்தல் - பிளத்தல். மாண்பு - பெருமை. நாண் - கயிறு.

மன் இல்லாத உலகம் தனக்கு இருட்டாகவே இருக்கும் என்றபடி. நேரான செயலிலல்லாமல் சுற்றி வளைத்துச் சாமர்த்தியமாக வரம் பெற்றுக் காரிய சித்தியடைய முயற்சித்தாளாதலால் 'சுழிக்கும் வினையாற் சூழ்வாய்' எனப்பட்டது. நல்ல காரியத்தைத் தொடங்கும்போது காப்புக் கட்டிக் கொள்வது மரபு. அவ்வாறே பரதனுக்கு முடிசூட்டுவினை துவங்கும்போது காப்புக் கட்ட மஞ்சட் கயிறு தேட வேண்டாம்; உன்தாலிக் கயிற்றையே அறுத்துக் கட்டலாம் என்ருன்; அதாவது நான் அதற்கு முன்பே இறந்து போவேன் என்றபடி.

மனைவியும் அல்ல், மகனும் அல்ல

605 இன்னே பலவும் பகர்வான்;
இரங்கா தாளை நோக்கிச்
'சொன்னேன் இன்றே இவள்என்
தாரம் அல்லள்; துறந்தேன்!'
'மன்னே ஆவான் வரும்அப்
பரதன் தனையும் மகன்என்று
உன்னேன்! முனிவா! அவனும்
ஆகான் உரிமைக்கு' என்ருன். ௩அ

இவ்வாறு பலவும் கூறினவனுய் இரங்காத கைகேயியை உருத்துப் பார்த்துக்கொண்டு, 'சொல்லிவிட்டேன் இன்று முதல் இவள் என் மனைவி அல்லள்; நீக்கிவிட்டேன்; அரசனுக வரப் போகிற அந்தப் பரதனையும் மகனென்று நினைக்கவில்லை; முனிவனே! அவனும் எனக்கு உரிமை செய்ய ஆகான்' என்ருன்.

(வி - ம்) தயரதன் தன் உயிர் போனதுதான் என்ற முடிவில், இராமன் இல்லையாதலால் பரதன்தான் தனக்குக்

605. தாரம் - மனைவி. மன் - அரசன். உன்னேன் - மனத்திற்கொள்ள மாட்டேன். உரிமை - கடன்கழித்தல்.

கொள்ளிவைக்கப் போகிருன் என்று கருதினுன். எனவே அதனைப் பரதன் செய்யக்கூடாதென்ருன். அரசனுக்கு முன்பாகவே கைகேயி அரசனைப் பிரித்து 'என் மகன் என்று சொன்னுளாதலால் பரதன் அவள் பக்கந்தான் இருப்பானென்று கருதினன் என்க. உரிமைக்கு - மகன் என்ற உரிமைபற்றிச் செய்யும் சடங்குக்கு.

கோசலைக்கு உண்மை விளங்கிற்று

606 மாற்ருள் செயலாம் என்றும்,
　　கணவன் வரம்ஈந்து உள்ளம்
ஆற்ருது அயர்ந்தான் என்றும்,
　　அறிந்தாள் அவளும்; மனத்தைத்
தேற்ரு நின்ருள்; மகனைத்
　　திரிவான் என்ருல் அரசன்
தோற்ருன் மெய்என்று உலகம்
　　சொல்லும் பழிக்கும் சோர்வாள். ௩௧

இவ்வளவும் சக்களத்தியின் செயல்தான் என்பதையும், கணவன் வரத்தைக் கொடுத்துவிட்டு மனம் உடைந்து சோர்ந்திருக்கிருன் என்பதையும் கோசலையும் தெரிந்துகொண்டாள். தன் மனத்தைத் தேற்ற முயன்ருள்; மகன் திரும்பி வருவானுல் அரசன் மெய்யில் நின்றும் தோற்ருன் என்று உலகத்தார் சொல்லக்கூடிய பழியை எண்ணி மனம் உடைந்தாள்.

கோசலை பட்டபாடு

607 போவாது ஒழியான் என்ருள்
　　புதல்வன் தன்னை; கணவன்
சாவாது ஒழியான் என்றென்று
　　உள்ளம் தளர்வுற்று அயர்வாள்;

---

606. மாற்ருள் - சக்களத்தி: கைகேயி. தேற்றுதல் - தெளிவுபடுத்தல். திரிவான் - திரும்புவான்.

காவாய் என்னுள் மகனை ;
கணவன் புகழுக்கு அழிவாள் ;
ஆ ! ஆ ! உயர்கோ சலையாம்
அன்னம் என்உற் றனளே ! ௬0

புதல்வன் காட்டுக்குச் செல்லாமல் திரும்பமாட்டான் என்று நினைப்பாள் ; கணவன் இறவாது இருக்கமாட்டான் என்று (எண்ணி) மனத்தளர்ச்சி யடைந்து சோர்வாள் ; கணவனுடைய புகழுக்கு இழுக்கு வருமே என்று வருந்தினவளாய், மகனைக் (காட்டுக்குப் போகாமல் தடுத்து அரசனைக்) காப்பாற்றுவாய் என்று கேட்கவில்லை. ஐயோ ! உயர்ந்த குணமுள்ள அன்னப் பறவையைப் போன்ற கோசலை என்ன பாடுபட்டாள்.

(வி - ம்) துன்பம் ஏற்பட்டால் சிறிது காலத்திலாவது விடுதலை தோன்றும். வயிற்றுவலி என்றால் மருந்து உண்டால் தீருமென்ற நம்பிக்கை ஏற்படலாம். பிள்ளை இறந்தால் மற்றொன்று பிறக்கும் என்ற நம்பிக்கைக்கு இடமுண்டு. கோசலைக்கு விடிவுக்கு இடமில்லாத இருட்டு ஏற்பட்டுவிட்டது. மகன் திரும்ப மாட்டான் ; திரும்பினாலோ கணவன் புகழ் அழியும் ; திரும்பவில்லையோ கணவன் சாவான் ; எனவே 'இருதலைக் கொள்ளியுள் எறும்புபோல்' அவள் முடிவற்ற துன்பமுற்றாள்.

நீ பிரியுமுன் நான் பிரிகிறேன்

608 'பொன்னின் முன்னம் ஒளிரும்
பொன்னே ! புகழின் புகழே !
மின்னின் மின்னும் வரிவில்
குமரா ! மெய்யின் மெய்யே !

---

608. எளியேன் - இளைத்தவன். வானகம் - உயர்ந்த வீடு.

என்னின் முன்னம் வனம்நீ
அடைதற்கு எளியேன் அல்லேன் !
உன்னின் முன்னம் புகுவேன்
உயர்வா னகம்யான்' என்ருன். சக

பொன்னினுக்கு எதிரே விளங்கித் தோன்றும் பொன் போன்றவனே! புகழுக்கும் புகழாக விளங்குபவனே! மின்னலைக் காட்டினும் மின்னுகின்ற கட்டமைந்த வில்லைப் பிடித்த மகனே! உண்மையின் உண்மையாக உள்ளவனே! நான் வனஞ்செல்வதற்கு முன்பு நீ (அதை) அடைதற்கு நான் இளைத்தவனல்ல; நீ வனத்திற்குச் செல்வதன்முன் நான் உயர்ந்த மேலுலகத்திற்குச் சென்று விடுவேன். (என்று தயாதன் புலம்புகிருன்.)

(வி - ம்) தன் மகனின் உயர்ந்த பண்பை எண்ணி வருந்துகிருன். தங்கம்தான் உலோகங்கட்குள் உயர்ந்தது. அந்தப் பொன்னனது தன்னை இரும்பென்று நினைத்துக் கொண்டு இராமனைப் பொன்னென மதிக்கிறதாம். நான் யாருக்கும் தோற்றதில்லை; இப்போது உன்னை அரசனுக்கி விட்டு நான் வனத்துக்குப் போகிறேன் என்று கூறினேன். நீ எனக்கு முன்பு (திரும்பிவரக்கூடிய) கானகத்துக்குச் சென்ருல் உனக்கு முன்பாகத் திரும்பியும் வரக்கூடாத வான கத்துக் செல்கிறேன்; உனக்கு நான் தோற்கமாட்டேன் என்றபடி. இவை ஆற்ருமையாலேற்பட்ட வெறி காரண மாக எழும் உணர்ச்சியால் உண்டாவன. உண்மையில் உண்மையாக நின்றொளிர்பவன் கடவுள் ஆதலால் 'மெய்யின் மெய்யே' என்ருன். இதனை 'இதுவோ திருநகரி ஈதோ பொருநை, இதுவோ பரமபதத் தெல்லை—இதுவோதான், வேதம் தமிழ்செய்து மெய்ப்பொருளின் உட்பொருளை, ஓதும் சடகோபன் ஊர்' (தனிப்பாடல்) என்ற பாடலாலும் அறிக.

சீதையைப் பிரிந்து நீ போவதா ?

609 'நெகுதற்கு ஒத்த நெஞ்சும்,
நேயத்தாலே ஆவி
உகுதற்கு ஒத்த உடலும்,
உடையேன் ; உன்போல் அல்லேன் ;
தகுதற்கு ஒத்த சனகன்
தையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணால்,
போகக் காணேன்' என்றான். ௬௨

இளகுதற்கு இணங்கிய மனமும், அன்புக்காக ஆவி நீங்குதற்கு இணங்கிய உடலும் பெற்றவன் நான். உன் போல் (கல்நெஞ்சும் அதற்கேற்ற உடலும்) உடையவனல்ல ; (நம்முடைய) மேம்பாட்டுக்குப் பொருத்தமான சனகன் மகளின் கையைப் பிடித்துக்கொண்டு இந்நகரிற் புகுந்த சிறப்பைக் கண்ட என் கண்களால் (இந்நகரைவிட்டு) வெளியே செல்வதைக் காணமாட்டேன் என்றான்.

(வி - ம்) இராமா ! நீ இரக்கமில்லாதவன் ; அதற்கு உன் உடலும் இடங்கொடுத்துச் செல்கிறது. தகப்பன் இறக்க, தாய் புலம்ப, உலகமெல்லாம் வருந்த, கல்மனங் கொண்டு போவது எனக்கு முடியுமா ? நான் உன்னைப் போன்றவன் அல்லன். எனக்குக் குழைந்த நெஞ்சு. அதை யொட்டிய உடல். உனக்கும் நம் குடும்பத்தின் பெருமைக்கும் ஒத்த சீதை கையைப் பிடித்துக்கொண்டு இந்நகரில் நுழைந்தாயே! என்ன காட்சி! அதைக் கண் நிறையக் கண்டு மகிழ்ந்தேன். அந்தக் கண்ணால் நீ பிரிந்துபோகிற காட்சியைக் காண்பேனா ? என்று கண்ணில் அறைந்து கொண்டான் என்க.

---

609. தகுதற்கு - மேம்பாட்டுக்கு.

பெற்றேன் அருமை அறிவேன்

610 'எற்றே பகர்வேன் இனியான்
என்னை! உன்னில் பிரிய
வற்றே உலகம் எனினும்,
வானே வருந்தாது எனினும்,
பொற்றார் அரசே! தமியேன்
புகழே! உயிரே! உன்னைப்
பெற்றேன்; அருமை அறிவேன்;
பிழையேன்! பிழையேன்!' என்றான். சஉ

நான் என்னைப்பற்றி இனி என்ன சொல்லப்போகிறேன்? உன்னைவிட்டுப் பிரியும்படி மண்ணுலகத்தார் பொறுக்கவல்லவர்கள் என்றாலும், வானுலகத்தார் வருந்தமாட்டார்களென்றாலும், அழகிய தேரையுடைய அரசனே! அடியேனுடைய புகழாக இருப்பவனே! என் உயிரே! உன்னை மகனாகப் பெற்றேன்; ஆதலால் உன் அருமையை நான்தான் அறிவேன். (உன்னைப் பிரிந்து) நான் பிழைத்திருக்கமாட்டேன்! பிழைத்திருக்கமாட்டேன்!! என்றான்.

(வி-ம்) உலகமும் வானும் உன்னைப் பிள்ளையாகப் பெற்று வளர்த்து அருமை யறியாதவை. பெற்றவனுக்குத் தான் பிள்ளையின் அருமை தெரியும். நீ போனால் இந்த உலகங்களின் மக்கள் அழியவா போகிறார்கள். இருப்பார்கள். நான்தான் சாகப்போகிறேன் என்கிறான். பிறர் மக்கள்பால் அன்பு ஏற்படும்; ஈடுபாடு உண்டாகும்; என்றாலும் தன் மக்கள்பால் காணும்போதுதான் நிறைவடைகிறது என்பதை 'தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்' (குறள் 66) 'தம் மக்கள் சிறுகையளாவிய கூழ் (திருக்

610. எற்றே - என்னவென்று. உன்னில் - உன்னைவிட்டு. வற்று - கூடியது. உலகம் - உலகத்திலுள்ள மக்கள். வான் - வானுலக மக்கள்.

குறள் 64) என்றது தோன்ற 'உன்னைப் பெற்றேன்; அருமை அறிவேன்' என்றான்.

கள்ளக் கைகேயி

611 'அள்ளற் பள்ளப் புனல்சூழ்
அகல்மா நிலமும், அரசும்,
கொள்ளக் குறையா நிதியின்
குவையும், முதலாம் எவையும்
கள்ளக் கைகே யிக்கே
உதவிப், புகழ்கைக் கொண்ட
வள்ளல் தனம்என் உயிரை
மாய்க்கும் ! மாய்க்கும் !' என்றான். சச

நெருங்கிய கடல்நீரால் சூழப்பட்ட அகன்ற நிலப்பரப்பையும், அதன் ஆட்சியையும், எடுக்கக் குறையாத செல்வக் குவியலையும், இன்னுமுள்ள யாவற்றையும் வஞ்சமுள்ள கைகேயிக்கே (ஆம்படி) கொடுத்துப் புகழைக் கைக்கொண்ட என்னுடைய வள்ளல் தனம் என் உயிரை மாய்க்கும்! (நன்றாக) மாய்க்கும் !! என்றான்.

(வி - ம்) இத்தனை செல்வத்தையும் சக்கரவர்த்திப் பதவியோடு சேர்த்து ஏமாளித்தனமாக, மோசக்காரி, கொலைகாரி கையில் கொடுத்துவிட்டு சத்தியந் தவறாதவன் என்று பெயர் வாங்கியிருக்கிறேன். எப்படி? இதற்குப் பெயர் புகழ் ! நான்தான் வள்ளல் ! இந்த வள்ளல்தனமிருக்கிறதே இது எவ்வளவு முட்டாள்தனம் என்றான். உலகில் அறம், வாய்மை, சொற்காத்தல், புகழ் எல்லாம் இருக்கிற லட்சணம் வெகு நயம் என்று சிரித்தான். வேறென்ன செய்வான் ? இது கேலிச்சுவைக்கு உறுப்பாம்.

---

611. அள்ளல் - நெருக்குதல். பள்ளம் - கடல். அகல் - அகன்ற. கள்ளம் - வஞ்சகம்.

நீ வருந்தினுல் உலகம் தாங்காது

612 'மெய்யின் மெய்யே! உலகின்
வேந்தர்க் கெல்லாம் வேந்தே!
உய்யும் வகைநின் உயிரை
ஓம்பாது, இங்ஙன் தேம்பின்,
வையம் முழுதும் துயரால்
மறுகும்; முனிவ னுடன்நம்
ஐயன் வரினும் வருமால்!
அயரேல்! அயரேல்!' என்ருள். ௬௫

(இப்படியாக அரசன் புலம்பும்போது) உண்மையை நிலை பெறும்படி செய்த மன்னனே! உலகிலுள்ள அரசர்கட் கெல்லாம் அரசனே! உன்னுடைய உயிரைப் பிழைக்கும்படி பாதுகாக்காமல் இப்படிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் உலகம் முழுதும் துயரத்தினுல் கலக்கமடையும். வசிட்டருடன் நம்மகன் வந்தாலும் வருவான். கவலைப்படவேண்டா மென்று (கோசலை) தேற்றினுள்.

(வி - ம்) தேம்புதல் - துன்பந் தாங்காமல் அதை நீக்கிக்கொள்ளவும் வகைதெரியாமல் களைத்தல். கூட்டில் அடைத்த புலி வெளியே போக வழி கிடைக்குமா என்று அங்குமிங்கும் அலைவது போன்ற நிலை. நீ தேம்பினுல் உலக மக்கள் துயரில் தவிப்பர் என்ருள். தயரதன் ஆட்சியில் இப்படிப்பட்ட நிலை மக்கட்கு ஏற்பட்டதில்லை. ஐயன் - என்ற சொல் அரசன், தலைவன் என்ற பொருளது, இங்கே மகனைக் குறித்து நின்றது. தளர்ந்த பெற்ருேரைக் காப்பவன் பிள்ளைதானே! நம் ஐயன் என்றதிலுள்ள அருமைப்பாடு நோக்கத்தக்கது. கோசலைக்கு ஏற்பட்டுள்ள துன்பம் எல்லை

---

612. மெய் - உண்மை=சத்தியம். (இரண்டாவது) மெய் - உண்மை=உளவாம் தன்மை. ஓம்பல் - பாதுகாத்தல்.

யற்றது. எனினும் தயாதனது துயரை ஆற்ற முற்படு கிருள். இதனுல் அவளது பொறுமையும் இரக்கமும் புலப் படும்.

மகன் வருவாஞ? வருவாஞ?

613 என்றென்று அரசன் மெய்யும்,
இருதாள் இணையும், முகனும்,
தன்றன் செய்ய கையால்
தைவந் திடுகோ சலேயை,
ஒன்றும் தெரியா மம்மர்
உள்ளத்து அரசன், மெள்ள
'வன்திண் சிலேநம் குரிசில்
வருமே! வருமே!' என்ருன். சஈ

இவ்வாருகச் சொல்லிக்கொண்டு அரசனுடைய உடலே யும் பெரிதான இருபாதங்களேயும் முகத்தையும் தன்னுடைய சிவந்த கைகளால் தடவிக்கொடுத்துக் கொண்டிருக்கிற கோசலேயை, நினேவற்று மயங்கிய உள்ளத்தையுடைய அரசன், கண்மூடியபடியே வாயினுள்ளாக வலிய வில் ஏந்திய நம் அரசன் வருமா வருமா என்று (இடையிடையே தன்னே யறியாமல்) கேட்டுக்கொண்டு கிடந்தான்.

(வி-ம்) பலவாறு புலம்பிக்கொண்டிருந்த தயாதன் 'ஒன்றுந் தெரியா மம்மர் உள்ளத்தை' அடைந்துகிடந்தான்; ஆனுல் அவனது அடி உள்ளத்தில், வில்லேத் தாங்கிய இராமன் போகிற உருவம் மட்டும் இருக்கிறது. வருவாஞ வருவாஞ என்று ஒரு உணர்ச்சியுமில்லாமல் இடையிடையே வாய் சொல்லிக் கொண்டிருக்கிறது. 'மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருள் வில்லுந்தாங்கிக், கால்தரை தோய

613. முகன் - முகம் (போலி). தைவருதல் - தடவுதல். மம்மர் - மயக்கம்.

நின்று கட்புலக்குற்ற தம்மா, மாலுறு பிறவி நோய்க்கு மருந்து' என்று வாலி கூறினன். வாலியின் கண்ணில் தோன்றிய தோற்றமே இங்கும் 'வன்திண் சிலைநம் குரிசில்' என்க. வாலி தன் தம்பி சுக்கிரீவன் காரணமாகத் துன்பப் பட்டுக் கடவுளைக் கண்டு ஈடுபட்டான். தயரதன், தன் மனைவி காரணமாகத் துன்பப்பட்டுக் கடவுளோடு ஒன்றி விட்டான் என்க. ஒரு மனைவி துன்பப்படுத்தும்போது மற்றொரு மனைவி இருந்து உதவுகிறாள். ஆதலால் பல மனைவி இருத்தல் நலமென்று இங்கே தோன்றலாம். அது வன்று. ஒரே மனைவியாக இருப்பின் இத்தனை தொல்லையும் நேரா அன்றோ?

அரசர் சபைக்கு வசிட்டர் செல்லல்

614 *உரைசெய் பெருமை
உயர்தவத்தோர் ஓங்கல்,
புரசை மதகளிற்றான்
பொற்கோயில் முன்னர்,
முரசம் முழங்க
முடிசூட்ட மொய்த்துஆண்டு
அரசர் †இருந்த
நல்லவைக்கண் ஆயினன். சஎ

யாவராலும் புகழத் தக்க பெருமையை யுடைய உயர்ந்த தவம் செய்வாரினுள் மலையை ஒத்தவரான வசிட்டர், கழுத் துக் கயிறணிந்த மத யானைகளையுடைய மன்னனது அழகிய அரண்மனைக்கு முன்பு, முரசவாத்தியம் முழங்க முடிசூட்டும் பொருட்டுக் கூடி இருந்த அரசர்களது கூட்டத்தில் வந்து சேர்ந்தார்.

---

614. ஓங்கல் - மலை. புரசை - யானைக் கழுத்தில் கட்டப்படும் கயிறு. களிறு - ஆண் யானை.

†சரசுவதிமால் ஏடு.

அழுகைக்குக் காரணமென்ன?

615 வந்த முனியை
முகம்நோக்கி வாள்வேந்தர்
எந்தை புகுதற்கு
இடையூறுஉன் டாயதோ!
அந்தமில் சோகத்து
அழுதகுரல் தான்என்ன!
சிந்தை தெளிந்தோய்!
தெரிஎமக்குஈது என்றுஉரைத்தார். சஅ

வந்த முனிவரது முகத்தைப் பார்த்து, வாளையுடைய அரசர்கள் எங்களுக்குத் தந்தையைப் போன்ற இராமன் அரசு பெறுதற்கு இடையூறு உண்டாய் விட்டதா? முடிவில்லாத துக்கத்துடன் அழுத சத்தத்துக்குக் காரணமென்ன? மனத்தெளிவுடையவரே! எங்களுக்கு இப்போதே தெரிவிக்கவேண்டும் என்றனர்.

(வி-ம்) விடாமல், அழுகுரல் கேட்டதால் 'அந்தமில் சோகத்து அழுத குரல்' என்றனர். ஆட்சியில் ஈடுபடுதலைப் 'புகுதல்' என்றார்.

வசிட்டர் அரசற்குச் செய்தி கூறல்

616 'கொண்டாள் வரம்இரண்டு
கேகயர்கோன் கொம்பு;அவட்குத்
தண்டாத செங்கோல்
தயரதனும் தான்அளித்தான்;

---

616. கொம்பு-கொம்பு போன்ற மகள் (கைகேயி). தண்டாத-தடையற்ற. முகில் - முகில் போன்ற இராமன். ஒருப்படுத்தல் - உடன்படச் செய்தல். எண் - எண்ணிப் பார்க்க.

ஒண்தார் முகிலை
வனம்போகென்று ஒருப்படுத்தாள் ;
என்தானும் வேறுஇல்லை ;
ஈதுஅடுத்த வாறு’என்றான். ௪௯

கேகய தேயத்து மன்னன் மகள் இரண்டு வரங்களைப் பெற்றிருந்தாள் ; தடையற்று நடக்கும் செவ்விய ஆட்சியையுடைய தயாதனும் தான் விரும்பி அளித்தான். (அவை கொண்டு) ஒள்ளிய மாலையணிந்த கார் மேகம் போன்ற இராமனைக் காட்டிற்குப் போகவேண்டும் என்று கைகேயி அரசனை உடன்படச் செய்துவிட்டாள். யோசிப்பதற்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை. இதுதான் நேர்ந்தவிதம் என்றார்.

இதுவும் அது

617 வேந்தன் மதிமயங்கக்
கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தள் மிசைக்கிடந்த
பார்அளிப்பான் ஆயினன் ;
ஏந்து தடந்தோள்
இராமன், திருமடந்தை
காந்தன் ஒருமுறையே
காடுறைவான் ஆயினன். ௫0

அரசன் புத்தி குழம்ப, கைகேயியின் உண்மை மகன் (பரதன்) ஆதி சேடன்மீது கிடக்கிற நிலத்தை ஆளுபவன் ஆனன். உயர்ந்து விளங்கும் விசாலமான தோள்களையுடைய

617. மெய்ப்புதல்வன் - பெற்றமகன். பாந்தள் - பாம்பு (ஆதிசேடன்). பார் - பூமி. ஏந்து-உயர்ந்த. திருமடந்தை - இலக்குமி (சீதை). காந்தன்-கணவன். ஒருமுறையே - உறுதியாக. உறைதல் - வசித்தல்.

இராமனாகிய சீதையின் நாயகன் உறுதியாகக் காட்டில் வசிக்க வேண்டியவன் ஆனான்.

(வி - ம்) இதுவரை நான்கு புதல்வரையும் ஒரு படித்தாகக் கைகேயி எண்ணியிருந்தா ளென்பதும், இராமனையே சிறந்த புதல்வனாகப் பாராட்டி வந்தாள் என்பதுமே உலகோர் யாவரும் அறிந்ததாம். வசிட்டரும் அவ்வாறே எண்ணியிருந்தார். இப்பொழுதுதான் பரதனிடம் கைகேயி காட்டும் உரிமை விளங்கிற்று. மற்ற மூவரிடமும் கொண்ட அன்பெல்லாம் பொய்யென்று கண்டாராதலின் பரதனை கைகேயியின், மெய்ப்புதல்வன் என்றார்.

எல்லோரும் மயக்கமுற்று விழ்ந்தனர்

618 வார்ஆர் முலையாரும்,
மற்றுள்ள மாந்தர்களும்,
ஆராத காதல்
அரசர்களும், அந்தணரும்,
பேராத வாய்மைப்
பெரியோன் உரைசெவியில்
சாராத முன்னம்
தயரதனைப் போல்விழ்ந்தார். ௱௧௮

கச்சணிந்த தனங்களையுடைய பெண்களும், மற்றைய ஆடவரும், தெவிட்டாத அன்புடைய அரசரும், அந்தணர்களும் உண்மை தவறாத பெரியோராகிய வசிட்டரது சொல் செவிகளில் முற்றும் புகுதற்கு முன்பாகவே தயரதனைப் போலக் (அடியற்ற மரம்போல்) கீழே விழுந்தனர்.

(வி - ம்) தயரதன் இராமனிடத்தில் வைத்திருக்கும் அன்பைப்போலவே அரசர் முதலிய யாவரும் அன்பு கொண்

618. ஆராத - தெவிட்டாத. பேராத - அழியாத. சார்தல் - பொருந்துதல்.

டிருந்தனர். இதனை, ‘ கொற்றவர் முனிவர் மற்றும் குவலயத் துள்ளார் உன்னைப், பெற்றவன் தன்னைப்போலப் பெரும் பரி வியற்றி நின்றார் ’ (பாடல் 550) என்று சுமந்திரன் கூறினமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

ஒரே அழுகை

619 புண்ணுற்ற தீயில்
புகையுற்று உயிர்பதைப்ப,
மண்ணுற்று அயர்ந்து
மறுகுற்று, உடம்பெல்லாம்
கண்ணுற்றுஅ வாரி
கடலுற்றது ; அந்நிலையே
விண்ணுற்றது எம்மருங்கும்
விட்டழுத பேரோசை. ௬௨

புண்ணில் பற்றிய தீயினது சீற்றம் பற்றி உயிரானது துடிக்க, மண்ணிலே கிடந்து சோர்ந்து புரண்டனவாகிய உடம்பு முழுதும் கண்கள் உண்டாகி அவற்றிலிருந்து வடிந்த கண்ணீர் கடலைப்போற் பெருகிற்று. (எல்லோரும்) அந்நிலையி லிருந்தவர்களாக எல்லாத் திசைகளிலிருந்தும் வாய் விட்டழுத பெரிய ஓசையானது வானத்தைப் பொருந்தியது.

(வி - ம்) கண்ணீர் பெருகின மாதிரியைப் பார்த்தால் இரு கண்களிலிருந்துதான் நீர் வருகிறதென்று நம்ப முடியவில்லை. உடலெல்லாம் கண்ணாகி அவைகளிலிருந்து பெருகினால்தான் இவ்வளவு நீர் வரமுடியுமென்று தோன்றுகிறது. பிறரும், ‘ அங்கமெல்லாம் வாயாக அழுதிட்டாலும் அவன் எழுந்து நின் துயரம் ஆற்றலுண்டோ ’ (மலரும் மாலையும்) என்றார்.

---

619. மறுகுறல் - முன்னும் பின்னுமாகப் புரளல். வாரி -- நீர்ப்பெருக்கு.

காற்றில் சாய்ந்த பூங்கொடி

620 மாதர் அருங்கலமும்
மங்கலமும் சிந்தித்தம்
கோதை புடைபெயரக்
கூற்றனைய கண்சிவப்ப
பாத மலர்சிவப்பத்
தாம்பதைத்துப் பார்சேர்ந்தார்
ஊதை எறிய
ஒசிபூங் கொடிஒப்பார். ருகூ

பெண்கள் தாங்களணிந்திருந்த அரிய நகைகளையும், தாலியையும் சேர்த்து அறுத்தெறிந்து, கூந்தல் கட்டழிய, காதற் பார்வையையுடைய கண்கள் ஆத்திரத்தில் சிவக்க, மலர்போன்ற காலடிகள் தரையில் பட்டுச் சிவக்க, பதைத்து நிலத்தில் விழுந்தனர். (அவர்கள் எப்படிப்பட்டவர் என்றால்) வாடைக்காற்று வீசினால் சாய்ந்து போகிற பூங்கொடியை ஒத்தவர்கள்.

(வி - ம்) இராமன் முடிசூடப் போகிறான் என்று கரை கடந்த மகிழ்ச்சியோடிருந்தனர். அதே நேரத்தில் காட்டுக்குப் போகிறான் என்றதைக் கேட்டதும் ஏற்பட்ட துக்கம் வெளிப்பட்டது. இனி என்ன அலங்காரமென்று கழுத்தில் கிடந்ததை எல்லாம் பிடித்து அறுத்தெறிந்தனர் என்க.

பெருங்காற்றில் விழுந்த மரங்கள்

621 ஆஆ அரசன்
அருளிலனே யாம்என்பார் ;
காவாது அறத்தைஇனிக்
கைவிடுவோம் யாம்என்பார் ;

---

620. கலம் - நகை. மங்கலம் - தாலி. கோதை - கூந்தல். ஊதை-வாடைக்காற்று. ஒசிதல்-சாய்தல். தாம் என்பது அசைநிலை.

தாவாத மன்னர்
　　தலைத்தலைவிழ்ந்து ஏங்கினார் ;
மாவாதம் சாய்த்த
　　மராமரமே போல்கின்றார் ; ௬௪

(நிலை) தவறாத மன்னர்கள் ஆ ஆ அரசன் அருள் அற்றவனே யாவான் என்பர் ; இனி என்ன தருமம் பார்த்து நடக்கிறது நாம் நினைத்தபடி நடக்கவேண்டியதுதான் என்பர் ; (இப்படிக் கூறி) இடத்துக்கு இடம் விழுந்து ஏக்கமுற்றனர். பெருங்காற்றில் சாய்ந்த பெரிய மரங்களைப் போன்றனர்.

(வி - ம்) பெண்கள் ஊதையிற் சாய்ந்த கொடி போன்றனர் ; என்ற கவி, வலிமை யுள்ளவரான அரசர் பெருங் காற்றில் சாய்ந்த பெரிய மரங்களைப்போல் விழுந்தனர் என்றார். அரசனே அறந் தவறின பிறகு நமக்கென்ன கட்டுப்பாடும் தருமமும் என்று தோன்றுகிறது துயரம் தாங்க முடியாமையினால்.

கண்ணின் பாவம் கடலிற் பெரிது

622 மண்செய்த பாவம்
　　உளதுஎன்பார் ; மாமலர்மேல்
பெண்செய்த பாவம்
　　அதனிற் பெரிதுஎன்பார் ;
புண்செய்த நெஞ்சை
　　விதிஎன்பார் ; பூதலத்தோர்
கண்செய்த பாவம்
　　கடலில் பெரிதுஎன்பார். ௬௫

---

621. தாவாத - தவறாத. தலை - இடம். வாதம் - காற்று. மாமரம் - பெரியதொரு மரம்.

622. மண் - நிலம். மாமலர்மேல்பெண்-இலக்குமி ; செல்வம்.

பூமிதேவி செய்த பாவம் உண்டு என்றார்கள்; சிறந்த தாமரை மலரின்மேல் உள்ள பெண்ணாகிய இலக்குமி தேவி செய்த பாவம் அதைவிடப் பெரிது என்றார்கள்; விதி நெஞ்சைப் புண்ணாக்கிவிட்டது என்றார்கள்; பூமியிலுள்ளவர்களுடைய கண்கள் செய்த பாவந்தான் கடலைக்காட்டிலும் பெரிது என்றார்கள்.

(வி - ம்) அரசன் நெறி தவறினால் நாட்டில் அமைதி இராது. அமைதி இல்லை என்றால் நிலத்தை யார் உழப் போகிறார்? உழுதாலும் காப்பு ஏது? காப்பில்லையானால் நடப்பது சூறையாட்டந்தான். நிலத்துக்கு அழிவு வந்து விட்டதென்றனர். நிலமே இப்படியானால் செல்வம் என்னவாகும்? ஒரே நாளில் யாவற்றையும் சூறையாட வேண்டியது தான். ஆதலால் இலக்குமியின் நிலை அதைவிடப் பெரிதென்றனர். இவை கிடக்கட்டும்; கண் இல்லாவிட்டால் இந்தக் கொடுமைகளையெல்லாம் காணாமலிருக்கலாமே. கண் செய்த பாவந்தான் மிகப் பெரிதென்றனர்.

முடியா? சனியனா?

623 ஆளான் பரதன்
அரசுஎன்பார்; ஐயன்இனி
மீளான் நமக்கு
விதிகொடிது காண்என்பார்;
கோளாகி வந்தவா
கொற்றமுடி தான்என்பார்;
மாளாத நம்மின்
மனம்வலியார் ஆர்என்பார். ருசு

623. நம்மின் - நம்மைக்காட்டிலும். மனம் வலியார் - வலிய மனமுடையவர்.

பரதன் அரசாளமாட்டான் என்பார்கள் ; இராமன் இனித் திரும்பி வரமாட்டான் நம்முடைய விதி கொடிது என்பார்கள்; வெற்றிமுடி தீவினையின் அறிகுறியாகவா வந்து சேர்ந்தது என்பார்கள்; (இந்தக் கொடுமையைக் கேட்டதும்) சாகாத நம்மைப் போன்ற கல் மனம் படைத்தவர் யாராவது இருப்பார்களா என்பார்கள்.

(வி - ம்) பரதன் ஆளமுடியுமா என்றனர் ; அவன் ஆண்டால் என்ன ஆளாமற் போனாலென்ன ? இராமன் திரும்பிவரமாட்டானே என்றனர். எல்லாருக்கும் இதுவரை வெற்றியைத் தந்த முடி நமக்கு வினையாக முடிந்ததே என்றனர். உயிரை வைத்துக்கொண்டு கதையளக்கிறோமே செத்துத் தொலையவில்லையே என்றனர்.

காடா? நெருப்பா?

624 ஆதி அரசன்
அருங்கே கயன்மகள்மேல்
காதல் முதிரக்
கருத்தழிந்தான் ஆம்என்பார் ;
சீதை மணவாளன்
தன்னோடும் தீக்கானம்
போதும் ; அதுவன்றேல்
புகுதும் எரிஎன்பார். ௩௪

தலைவனான அரசன் அரிய கேகயன் மகள்மேல் காதல் பழுத்துப் போனதலால் கருத்தழிந்தான். ஆம் (அதே தான்) என்றனர், சீதையின் மணவாளனான இராமனோடு

624. முதிர்தல் - முற்றுதல். போதும் - போவோம். புகுதும் - புகுவோம்.

கொடுமையான காட்டிற்குப் போவோம்; அப்படியல்லாத போனல் நெருப்பில் புகுந்து சாவோம் என்றனர்.

(வி - ம்) கைகேயியின் மயக்கத்தில் மன்னன் புத்தி கெட்டுப்போனன் என்று கருதுகின்றனர். இராமன் செல்கிற காட்டுக்கு நாமும் போவோம்; முடியாவிட்டால் நெருப்பிலே விழுந்து சாவோம். இந்த ஊரில் இனி இருக்கக்கூடாதென்றனர்.

இலக்குவா! பொறுக்க முடிகிறதா?

625 கையால் நிலந்தடவிக்
கண்ணீர் மெழுகுவார்;
உய்யாள்பொற் கோசலைஎன்று
ஓவாது வெய்துயிர்ப்பார்;
அய்யா! இளங்கோவே!
ஆற்றுதியோ நீ! என்பார்;
நெய்யார் அழல்உற்றது
உற்றார்அந் நீள்நகரார். ௫அ

(கண்ணில் நீர் நிறைந்து ஊற்றுவதால் பார்வை தெரியாமல்) கைகளினல் நிலத்தைத் தடவிப் பார்த்தார்கள்; கண்ணீர் பெருகி யிருப்பதால் கண்ணீரை விட்டுத் தரையை மெழுகின மாதிரி யாயிற்று. தங்கம் போன்ற கோசலை இனிப் பிழைக்கமாட்டாள் என்று எண்ணித் திரும்பத் திரும்பப் பெருமூச்சுவிட்டார்கள்; ஐயோ! இலக்குவா! நீ இதைப் பொறுப்பாயா என்று கதறினர்கள். பற்றியிருக்கிற நெருப்பில் நெய் ஊற்றினற்போல அந்த நீண்ட நகர மக்கள் துன்பத்தை அடைந்தார்கள்.

---

625. உய்தல் - பிழைத்தல். ஓவாது - இடைவிடாமல். ஆற்றுதல் - பொறுத்தல்.

(வி - ம்) பக்கத்தில் ஏதாவது சத்தப்பட்டால் தெரிய வில்லை. கையால் தடவுகின்றனர். நீர்தான் பரந்து கிடக்கிறது. தடவி மெழுகுவதாக முடிகிறது. இராமனையும், கோசலையையும், இலக்குவனையும் நினைக்கிற போதெல்லாம் வயிறு குபீரென்று தீப்பிடிக்கிறமாதிரி துயர உணர்ச்சி மேலும் மேலும் உண்டாகிறது.

வரமா கொலையா?

626　நின்று தவம் இயற்றித்
　　　தான்தீர நேர்ந்ததோ ;
அன்று ! இவ் உலகத்துள்
　　　ஆருயிராய் வாழ்வாரைக்
கொன்று களையக்
　　　குறித்த பொருளன்றோ ?
நன்று ! வரங்கொடுத்த
　　　நாயகற்கு நன்று !' என்பார்.　　௫௬

(தயரதன்) நிலைத்த தவம் செய்து (நம்மைவிட்டுப்) பிரிய நினைத்துச் செய்ததா இது? அன்று! இந்த உலகத்தில் இராமனை உயிராகக்கொண்டு வாழ்கின்றவர்களைக் கொன்று வேர்பறிக்க நினைத்துச் செய்த காரியமல்லவா இது? நன்றாக இருக்கிறது! வரங் கொடுத்த மன்னனுக்கு இது தான் அழகான காரியம்! என்றனர்.

(வி - ம்) தான் தவம் செய்து வீடுபெறச் செல்கிறான் என்று சொன்னார்கள். நடவடிக்கையைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை; உலகையே கொன்று ஒழிப்பதற்குப் போட்ட திட்டமாக இது இருக்கிறது என்று தோன்றுகிறது.

---

626. தீர - இறக்க. களைதல் - வேரோடு பிடுங்கி எறிதல். நாயகன் - அரசன்.

அரசன் செய்யத் தக்கது இதுதான் என்பது ஆத்திரத்தில் தோன்றும் கேலி.

காடு நாடாகாதா ?

627 பெற்றுடைய மண்அவளுக்கு
ஈந்து, பிறந்துஉலகம்
முற்றுடைய கோவைப்
பிரியாது, மொய்த்தீண்டி,
உற்றுஉறைதும் ; யாரும்
உறையவே சின்னாளில்,
புற்றுஉடைய காடுஎல்லாம்
நாடாகிப் போம்என்பார். ௬௦

பெற்ற உலக ஆட்சியை (கைகேயிக்கு) அவளுக்குக் கொடுத்துவிட்டு, முதல் மகனாகப் பிறந்ததனால் உலகம் முழுமைக்கும் உரிமை பெற்ற நமது மன்னனை (இராமனை)ப் பிரியாமல் கூட்டமாக நெருங்கிப் பொருந்தி இருப்போம். எல்லாரும் காட்டில் வசித்தால் சில நாட்களில் புற்று நிறைந்த காடெல்லாம் நாடாகிவிடும் என்றனர்.

(வி - ம்) நாடென்ன காடென்ன ? நாடு எப்படி உண்டாயிற்று ? மனிதர் குடியிருக்க முற்பட்டால் கொஞ்சநாளில் எல்லாம் தானாக நாடாகிவிடும் என்று கருதுகின்றனர். நகரத்திலுள்ள மக்களெல்லாரும் நகரைவிட்டுப் போய்விட்டால் இஃது என்ன ஆகும். பாழடைந்த ஊரைக் கைகேயி ஆளட்டும் என்றதும் தொனிக்கிறது. வேகமுள்ள புரட்சிக் கருத்து இது. இப்படி நடக்கக் கூடும், என்பதைக் கைகேயி எதிர்பார்க்காமலில்லை. அதனால்தான் 'பூழிருங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடி' (பாடல் - 565) என்று ஊரில்

627. கோ - அரசன் : இராமன். ஈண்டி - கூடி.

வசித்தலாகாது என்பதைக் குறிப்பித்தாள். காட்டிலொரு ஊர் உண்டானால் இவன் அதை விட்டுக் காட்டுக்குள்ளே செல்லவேண்டு மென்பது கருத்து. கூனி கைகேயிக்கு யோசனை கூறும்போது ‘இராமன் பெருவனத்திடை ஏழிரு பருவங்கள் பெயர்ந்து திரிதரச் செய்தி’ (பாடல் 493) என இடம்பெயர்ந்து திரியவேண்டும் என்றதும் காண்க. காட்டில் கறையான் பாம்பு முதலியன வாழும் புற்று மிகுந்திருக்கும் என்பதைப் ‘புற்றுடைய காடு’ என்றார்.

மெய் நிலைத்து விட்டதோ ?

628 ‘என்னே நிருபர்
இயற்கை இருந்தவா !
தன்னேர் இலாத
தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து,
முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால்,
பிழையாதோ மெய் !’ என்பார். சுக

அரசர்களின் இயல்பு எப்படி இருக்கிறது! தனக்கு நிகரில்லாத தலைமகனான இராமனுக்கு உலக ஆட்சியை முதலில் கொடுத்து, நீதிக்குக் கேடாகப் பின்பு (அதை) தம்பிக்குக் கொடுத்தால் சத்தியம் தவறிப் போகாமல் இருக்குமோ என்றனர்.

(வி - ம்) அரசு மூத்த மகனுக்கு உரியது. அவ்வாறே கொடுக்கப்பட்டது. அதை மாற்றுவதென்றால், அவன் பேடியாகவோ கெட்டவனாகவோ எப்படியோ தகுதியற்றவனாக இருக்க வேண்டும். இராமன் எந்தக் குறைபாடும்

628. இருந்தவா - இருந்தவாறு. திரும்ப - மாறுபட.

உடையவனல்லன் என்பது 'தன்னேரிலாத தலைமகன்' என்று குறிக்கப்பட்டது. அரசனின் முதல்வாக்கு இராமனுக்குத்தான் கொடுக்கப்பட்டது. இப்போது நிகழ்ந்திருப்பது அழி வழக்கினாலேயாகும். சத்தியம் என்பதெல்லாம் வெறுங்கதை என்றனர்.

இராமனின் கண்ணைக்காண முடியாதோ!

629 உந்தாது, நெய்வார்த்து
உதாவாது, கால்எறிய
நந்தா விளக்கின்
நடுங்குகின்ற நங்கைமார்,
'செந்தா மரைத்தடங்கண்
செவ்வி அருள் நோக்கம்
அந்தோ பிரிதுமோ
ஆ!விதியே! ஓ!'என்பார். ௬௨

தூண்டுவாரின்றியும் எண்ணெய் ஊற்றி உதவி செய்வாரின்றியும், காற்றடிக்கச் சுருங்கிச் சுருங்கி எரியும் விளக்கைப்போல (உடலும் உள்ளமும்) நடுங்குகின்ற பெண்கள், செந்தாமரை மலரைப் போன்ற விசாலமான கண்களின் அருள் ஒழுகுகிற அழகிய பார்வையை ஐயோ பிரியப்போகிறோமா விதியே ஆஓ என்று அலறினர்.

(வி - ம்) ஆமணக் கெண்ணெய் விட்டு ஏற்றிய விளக்கின் திரியை அடிக்கடி தூண்டிவிட வேண்டும். எண்ணெய் வற்றும்போது மேற்கொண்டு ஊற்ற வேண்டும். இரண்டுமில்லாவிட்டால் சிறிது சிறிதாகக் குறைந்து அணைந்துவிடும்.

---

629. உந்துதல் - தூண்டுதல். கால் - காற்று. எறிய - மோத. நந்தா - அவியாத. விளக்கின் - விளக்கைப்போல. செவ்வி - அழகு.

இருவகை உதவியுமின்றி ஒளி குறைந்த நேரத்தில் காற்றடித்தால் சுடர் அணைவதுபோல மறையும்; பிறகு தெரியும். அப்படிப் பெண்களின் நிலை ஆயிற்று. உயிர் போய்விட்டதா அல்லது போகப்போகிறதா என்றிருக்கிறது. ஏக்கத்தினால் ஐயோ அப்பா என்று தவித்தனர்.

இலக்குவனின் ஆவேசம்

630 *கேட்டான் இளையோன்
　　கிளர்ஞாலம் வரத்தி னாலே
மீட்டாள், அளித்தாள்
　　வனம்தம்முனை, வெம்மை முற்றித்
தீட்டாத வேற்கண்
　　சிறுதாய்என; யாவ ராலும்
மூட்டாத காலக்
　　கடைத்தீஎன மூண் டெழுந்தான். கூரு

கொடுமை முதிர்ந்து தீட்டாமலே கூர்மையாகவுள்ள வேல் போன்ற கண்ணையுடைய சிறிய தாய், விளங்குகின்ற மண்ணுலக ஆட்சியை வரத்தினால் தன்வசமாகத் திருப்பிக் கொண்டாள்! தம் தமையனுக்குக் காட்டைக் கொடுத்தாள் என்று இளையோனாகிய இலக்குவன் கேட்டான். யாவராலும் இந்நாள்வரை மூட்டப்படாத ஊழிக் காலத்திலேற்படும் கடைசித் தீ என்னுமாறு கோபம் மூண்டு எழுந்தான்.

(வி - ம்) தோய்ச்சல் சரியாகக் கொடுத்திருக்கும் ஆயுதங்களைத் தீட்டிப் பதமாக்க வேண்டியதில்லை. எனவே 'தீட்டாத வேற்கண்' எனப்பட்டது. அவளுடைய கண் வலையில் தயரதன் அகப்பட்டு இப்படிச் செய்துவிட்டான்

---

630. மீட்டாள் - கொடுத்த அரசைத் திருப்பிக்கொண்டாள். வெம்மை - கொடுமை. முற்றி - மிகுந்து.

என்று இலக்குவன் கருதுகிருன். இது 'மற்ருெரு விரை செறி குழலிமாட்டு அளித்த மெய்யனே' (பாடல் 723) என்று கூறுதலானும் அறியப்படும். மக்களிற் சிலரும் 'அருங்கே கயன் மகள் மேல், காதல் முதிரக் கருத்தழிந் தான் ஆமென்பார்' (பாடல் 624) என்பதும் காண்க.

காக்கிறவர் காக்கலாம்

631 'புவிப்பாவை பரங்கெடப்
போர்உவந் தோரை யெல்லாம்
அவிப்பானும், அவித்துஅவர்
ஆக்கையை அண்டம் முற்றக்
குவிப்பானும், எனக்கு ஒரு
கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும், நின்றேன் ;
இதுகாக்குநர் காமின்' என்ருன். கூச

என்னேடு போர் செய்ய விரும்புபவர் யாவரையும் நில மகளின் சுமை நீங்கும்படி தொலைக்கும் பொருட்டாகவும், கொன்று அவர்களின் உடலை மேலுலகம்வரை நிறையும்படி குவிக்கும் பொருட்டாகவும், எனக்குள்ள ஒரு தலைவனுக்கு வெற்றி முடியைச் சூட்டும் பொருட்டாகவும் (உறுதிகொண்டு) நிற்கின்றேன். இதிலிருந்து காக்க முடிந்தவர் வந்து காக்க லாம் என்ருன்.

(வி - ம்) அரசன் சொன்னபடி முடி சூட்டு நடைபெற வில்லை. நான் அதைச் சூட்டப்போகிறேன். யார் எதிர்த் தாலும் கொல்லுவேன். அவர்களைக் காப்பவர் வந்து காக்க லாம் என்று சத்தமிட்டான். நல்வினை ஆற்ருத மக்கள்

631. புவிப்பாவை - நிலமகள். பரம் - பாரம். அவித்தல் - கொல்லுதல். மௌலி - முடி. கவித்தல் - சூட்டுதல்.

நிலத்துக்குச் சுமையாவர். தீ வினை புரிவோர் நீக்கத் தக்க பெருஞ் சுமை யாவார். அவர்களை ஒழித்து நிலமகளைக் காப்பது அரசனுக்குக் கடனும். அவ்வறத்தில் நில்லாமல் அரசனும் சேர்ந்து பிழை செய்வானாயின் அறத்தை நிறுத்துவது மக்கள் கடனென்று இலக்குவன் கருதினான் என்றவாறு. 'நீ பாரத அமரில் யாவரையும் நீருக்கிப், பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா' (வில்லி - கிருட்டினன் தூது. 34)

வட்டமிடுகிறான் இலக்குவன்

632 காலைக் கதிரோன்
நடுவுற்றதொர் வெம்மை காட்டி
ஞாலத் தவர்சூழ்
தராஅந் நகரத்து நாப்பண்,
மாலைச் சிகரத்
தனிமந்தர மேரு முந்தை
வேலைத் திரிகின்
றதுபோல்திரி கின்ற வேலை. சுஉ

காலையில் எழுந்த இளஞ்சூரியன் பகல் நேரத்தில் மிகுந்த வெப்பம் காட்டுவதுபோலக் கோபித்து, உலக மக்கள் சூழ்ந்து நிற்க, அந்த நகரத்தின் நடுவில் ஒழுங்கான சிகரங்களையுடைய ஒப்பற்ற மேருமந்தரம் என்னும் மலையானது முன்னொருகாலத்தில் கடலில் சுழன்றதைப் போல (இலக்குவன்) சுற்றித்திரிகிறபோது.

(வி - ம்) திருப்பாற்கடலை மந்தரமலையைக் கொண்டு கடைந்தார்கள் என்பது புராணம். அதைப்போல இலக்கு

---

632. நடு - உச்சி. நாப்பண் - நடு. மாலை - ஒழுங்கு. முந்தை - முன்னாள். வேலை - கடல் : பாற்கடல். திரிகின்றது - சுழன்றது. (காலவழுவமைதி) வேலை - பொழுது.

ஏன் இந்தக் கோலம்?

635 மின் ஒத்த சீற்றக்
கனல்விட்டு விளங்க நின்ற
பொன்ஒத்த மேனிப்
புயல்ஒத்த தடக்கை யானை,
என்அத்த! என்நீ
இமைஓரை முனிந்தி லாதாய்!
சன்னத்தன் ஆகித்
தனுஏந்துதற்கு ஏது? என்றான். ௬௨௮

மின்னலை ஒத்த கோபத்தீ, சுடர் விட்டுத் தோன்றுமாறு நின்ற பொன் நிறத்தை ஒத்த உடலையும், மேகம்போல் (எதிர்பாராது உதவும்) விசாலமான கைகளையுமுடைய இலக்குவனை நோக்கி, 'என் அப்பனே! இமைப் பொழுதேனும் கோபங் கொள்ளாதவன் அல்லவா நீ? போர்க்கோலம் பூண்டு வில் ஏந்துதற்கு உரிய காரணம் என்ன? என்றான்.

(வி-ம்) இராமனைக் கண்டதும் கோபம் சிறிது அடங்குகிறது. உடனே வந்து முட்டுகிறது. இப்படி விட்டு விட்டுத் தோன்றுவதற்கு மின்னல் உவமை. உலகமே கலங்கித் தவிக்கிறது. இலக்குவனுக்குக் கோப வெறியே பிடித்திருக்கிறது. என்ன வந்துவிட்டது? என்று ஒன்றும் அறியாதவன் போலவும் விசேடமான செயல் எதுவும் நடவாதது போலவும் கேட்கிறான் இராமன். இதனால் அவனது உள்ளம் இருக்கிற நிலையும் அமைதியும் போற்றலும் விளங்குகின்றன. ஒரு குழந்தை, தகப்பனை நோக்கிக் கோபங்கொண்டு ஒரு நெல்லை யெடுத்து முழுப்பலங்

635. சீற்றம் - கோபம். அத்தன் - தந்தை. இமை - கண்ணிமைத்தல். ஓரை - நேரம். சன்னத்தன் - போருக்கு ஆயத்தன். தனு - வில். ஏது - காரணம்.

கொண்டு மேலங்கியின் மேல் எறிந்தால் தந்தை என்ன செய்வான் ? அப்படிப்பட்ட மன நிலையில் இராமன் இருக்கிறான். இந்த உண்மை இலக்குவனுக்குத் தெரியவா செய்யும் ?

பஞ்சை எரிக்கும் தீ

636 மெய்யைச் சிதைவித்து, நின்
 மெய்ம்முறை நீத்த நெஞ்சம்
மையில் கரியாள்எதிர்,
 நின்னைஅம் மௌலி சூட்டல்
செய்யக் கருதித்தடை
 செய்குநர் தேவ ரேனும்
துய்யைச் சுடுவெம்
 கனலில் சுடுவான் துணிந்தேன். ௬௬

உண்மையை அழிவித்து, உனக்கு ஏற்பட்ட மெய்யான உரிமையைப் பொருட்படுத்தாத மையைவிட இருண்ட மனத்தை யுடையவளான கைகேயியின் முன்னிலையில், உனக்கு அந்த முடியைச் சூட்டுதல் செய்ய எண்ணி, அதனைத் தடைசெய்ய வருபவர் தேவராயினும் சரி பஞ்சைக் கொழுத்துகிற கொடு நெருப்பைப் போலச் சுடுவதென்று முடிவு செய்திருக்கிறேன்.

(வி-ம்) பஞ்சை எரிப்பதற்கு வெந்தீ வேண்டியதில்லை. யார் எனக்கு எதிர்ப்பட்டாலும் கொடுந் தீயிற்பட்ட பஞ்சைப்போல இல்லாமற் போவார்கள் ; கரி, சாம்பல்கூடக் காணக் கிடைக்காதென்பதை 'துய்யைச் சுடு வெம் கனலில்'

---

636. மெய்ம்முறை - நேரான முறையில். நீத்த - பொருட்படுத்தாத. மையில் - மையைப் போன்ற. கரியாள் - இருண்டவள். துய் - பஞ்சு. துணிதல் - முடிவு செய்தல்.

என்றான். தயரதன் தேவருக்கு உதவி செய்துள்ளானாதலின் அவனுக்குத் துணையாகத் தேவர் வந்தாலும் என்று கூறினான் என்க.

சினம் விளையாத நிலம்

637 இளையான் இதுகூற,
இராமன், 'இயைந்த நீதி
வளையா வரும் நல்நெறி
நின்னெறி யாகும் அன்றே!
உளையா அறம்அற்றிட
ஊழ்வழு வுற்ற சீற்றம்
விளையாத நிலத்து,உனக்கு
எங்ஙன் விளைந்தது?' என்றான். ௭0

இலக்குவன் இவ்வாறு கூற, இராமன், பொருந்திய நீதி முறையில் நின்றும் கோணாமல் வருகிற நல்ல நெறியல்லவா உன்னுடைய ஒழுக்க நெறி? அழியாத அறம் நீங்கும்படி, முறை தவறிய சினம் விளையாத மனமாகிய நிலத்தை யுடைய உனக்குச் சினம் எப்படி உண்டாயிற்று என்றான்.

(வி - ம்) உயர்ந்த சம்பா நெல் விளைகிற கடுங் கண்காணிப்புள்ள சொந்தப் பண்ணை நிலத்தில் சூரைச்செடி எப்படி முளைக்க முடிந்ததென்று கேட்கிறமாதிரி கேட்கிறான். "சீற்றம் விளையாத நிலம் - ஊழ் வழுவுற்ற சீற்றம் விளையாத நிலம்" என்று தன் குலத்தின் பரம்பரைப் பெருமையைப் பாராட்டிக் கூறினான்.

---

637. வளையா - வளையாது. உளையா - அழியாத. ஊழ் - முறை.

வேறு எப்பொழுது ?

638 நீண்டான் அஃது உரைத்தலும்,
நித்திலம் தோன்ற நக்குச்
'சேண்தான் தொடர்மா நிலம்
நின்னது என்று உந்தை செப்பப்
பூண்டாய்! பகையால் இழந்
தேவனம் போதி என்ருல்,
யாண்டோ அடியேற்கு இனிச்
சீற்றம் அடுப்பது? என்ருன். எக

இராமன் அவ்வாறு சொன்னவுடனே முத்துப் போன்ற பற்கள் தெரியும்படி சிரித்து, வெகுதூரம் பரந்து பெருகியிருக்கும் நிலவுலக ஆட்சி உன்னுடையது என்று உன் தந்தை சொல்ல நீ ஏற்றுக் கொண்டாய். அதைப் பகைவர் கைக்கொள்ள இழந்துவிட்டுக் காட்டுக்குப் போகிருய் என்ருல் (வேறு) எந்தக் காலத்தில் அடியேனுக்கு இனிமேல் கோபம் வருவது என்ருன்.

(வி - ம்) கோபம் என்று ஒன்று எனக்குள் இருக்கிறது. இந்தச் சமயத்தை விட்டால் அந்தக் கோபம் வருவது எந்தக் காலத்தில் என்ருன். இதைவிடப் பெரிய கொடுமை வேறு கிடையாது என்றபடி. கோபமென்று ஒன்று இருந்தால், அதைச் செலுத்த இதுவே சமயம் என்பதும், இதைத் தவற விடுதல் கொடுமை என்பதும் இலக்குவன் கருத்து. தன் கருத்துக்கு இராமன் உடன்படவில்லை என்றறிந்ததும் இரு

---

638. நீண்டான் - உலகளந்த திருமாலாகிய இராமன். நித்திலம் - முத்து: ஆகுபெயராய்ப் பல்லை உணர்த்திற்று. நக்கு - சிரித்து. சேண் - தூரம். உந்தை - உன் தந்தை.

வருக்கும் தந்தையான தயாதனை உன் தந்தை என்று கூறினான்.

தருவது, பிறகு இல்லையென்பதா ?

639 'நின்கண் பரிவில்லவர்
நீள்வனத்து உன்னை நீக்க,
புன்கண் பொறியாக்கை
பொறுத்துஉயிர் போற்று கேனோ ?
என்கட் புலமுன்உனக்கு
ஈந்துவைத்து இல்லை என்ற
வன்கண் புலந்தாங்கிய
மன்னவன் போல' என்றான். எஉ

என் கண்ணெதிரே உனக்கு அரசை (வாயால்) தந்து வைத்து, பின்னர் இல்லை என்று சொல்லிய வன்கண்மை கொண்ட மன்னவனைப்போல, உன்னிடத்து அன்பில்லாதவர் படுகாட்டில் உன்னைச் செல்லும்படி நீக்க, அற்பத்தனமான பொறியுணர்ச்சியுடன் கூடிய உடலில் உயிரை வைத்துக் கொண்டிருப்பேனோ என்றான்.

(வி-ம்) உனக்குத் தருவதும், பிறகு இல்லை என்பதும், காட்டுக்குப் போவதைச் சரி என்பதும் உன் தகப்பனாகிய மன்னனுக்குச் சரியாக இருக்கிறது. எனக்கு இந்த அநீதியைப் பார்த்துக்கொண்டு உடலோடு திரியச் சரிப்படாது என்றான்.

---

639. நின்கண் - உன்னிடத்து. பரிவு - அன்பு. புன்கண் - அற்பத்தனம். பொறுத்து - தாங்கிக்கொண்டு. கட்புலம் - கண். வன்கட்புலம் - இரக்கமற்ற தன்மை.

நல்ல நீரில்லாதது நதியின் பிழையா ?

640　நதியின் பிழைஅன்று
　　　நறும்புனல் இன்மை ; அற்றே
பதியின் பிழைஅன்று !
　　　பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின் பிழைஅன்று !
　　　மகன்பிழை அன்று! மைந்த !
விதியின் பிழை ! நீ
　　　இதற்கென்னை வெகுண்டது ? என்றான்.௬௪௰

நல்ல தண்ணீர் இல்லாமலிருத்தல் நதியினுடைய பிழையா ? அல்ல. (இஃது) அதே மாதிரிதான். தந்தையின் குற்றமல்ல ; நம்மைப் பெற்று வளர்த்தாளே (கைகேயி) அவளுடைய அறிவின் குற்றமன்று ; சிறந்தவனாகிய பரதனின் பிழையுமல்ல. மகனே ! விதியினது குற்றமாகும். இதைக் கண்டு ஏன் கோபிக்கவேண்டும் என்றான்.

(வி - ம்) நதியில் தூய்மையான நீர் வருவதே இயல்பு. அது கலங்கியோ அசுத்தங் கலந்தோ வருகிறதென்றால் அது நதியினது பிழையா ? இடையிலே திரிவுபட்டிருக்கிறதென்று உணரவேண்டும். விதிதான் இப்படி விளையாடுகிறது என்பதைத் தவிர இதில் யாருடைய குற்றமுங் கிடையாது என்பதை, 'நதியின் பிழையன்று நறும்புன லின்மை' என்றான். மகன் என்பதற்குக் கைகேயியின் மகன் என்று பொருள் கண்டனர். மூன்று தாயரும், நான்கு குழந்தைகளும், தாய் பிள்ளை என்பதை ஒரே மாதிரிதான் பார்த்தனரே யன்றி அணுவளவும் வேறுபாடு கண்டாரில்லை. இந்த

640. அற்றே - அதேமாதிரி. பதி - தலைவன். பயத்தல் - பெறுதல். புரத்தல் - காப்பாற்றுதல். மகன் - சிறந்தோன். வெகுண்டது - கோபித்தது.

உணர்ச்சியிலிருந்து முதலாவது விலகியவள் கைகேயி. அவளை எதிர்த்துப் பிரிவு கண்டவன் இலக்குவன். மற்றவர் மாறினரில்லை. பரதனுக்குப் பட்டம் என்றதும் 'நிறை குணத்தவன் நின்னினும் நல்லனல்' என்றாள் கோசலை. இராமனே 'நின் காதல் திருமகன் எம்பி பரதன்' என்று அரசு இழந்த பிறகே கூறினன். சித்திர கூடத்தில் பரதன் படையெடுத்து வருகிறானென்று இலக்குவன் போர்க்கோலம் பூண்டு பூட்டிய வில்லுடன் நிற்கும்பொழுது இராமன், 'சேனையர் தருமத்தின் தேவைச் செம்மையின் ஆணியை அன்னது நினைக்கலாகுமோ?' என்றான் (பாடல் 973). முழுக் கேட்டுக்கும் காரணமான கைகேயியையே 'பயந்துநமைப் புரந்தாள்' என்று குறிப்பிடுகிறான். எல்லாம் விதி செய்யும் செயலென்று கொண்டு கைகேயி, தயரதன் ஆகியவர் பேரிலும் குற்றங் கிடையாதென்று கூறுகிற மனப்பண்பு கொண்ட இராமன், ஊரைவிட்டுப் பல நாட்களுக்கு முன்பு போன பரதன்மேல் குற்றஞ்சாட்டி, கைகேயியின் மகன் என்று பிரித்துக் கூறினன் என்பது எவ்வாற்றானும் பொருந்தாதென்க. மகன் என்ற சொல் சிறந்தோன் என்ற பொருளது. பரதனை 'மகன்' என்றதை அடுத்து இலக்குவனை 'மைந்த' என்று விளிப்பதறிக. பரதனது அமைதி கொண்டு மகன் என்றும், இலக்குவனது போர்க் கோலங் கண்டு மைந்த என்றும் கூறினனெனினும் அமையும். இருவரும் எந்த நிலையிலும் ஒருபடித்தான தம்பியர் என்றே இராமன் கொண்டா னென்க. இவற்றால் மகன் என்பது கைகேயியின் மகன் என்ற பொருளைத் தரா தென்பது தேற்றம். 'எற்பயந்தெடுத்த மூவர்க்கும் குறைவிலா என்நெடு வணக்கங்கூறி' (பாடல் 718) என்று கைகேயியையும் சமத்துவமாகத் தாயரிற்கொண்டு கூறுதலும் அறியத்தக்கதாம்.

விதிக்கும் விதியாகும் வில்

641 'உதிக்கும் உலையுள்உறு
தீஎன ஊதை பொங்கக்
கொதிக்கும் மனம்எங்ஙனம்
ஆற்றுவென்?' கோள்இழைத்தாள்
மதிக்கும் மதியாய்முதல்
வானவர்க் கும்வலீ இதாம்
விதிக்கும் விதியாகும்என்
வில்தொழில் காண்டி!' என்றான். எச

கொல்லன் உலையினுள் இருக்கிற தீ வெளிவருவதைப் போல, மூச்சுக் காற்றுப் பொங்கிவர 'கொதிக்கின்ற மனத்தை எப்படி ஆற்றிக்கொள்வேன்? தீங்கு செய்தவள் புத்திக்குப் புத்தியாய், முதல் மூர்த்திகளான மும்மூர்த்திகளின் (வலிமைக்கும்) வலிதான, விதிக்கும் விதியாக இருக்கிற என்னுடைய வில்லின் செயலைக் காண்பாயாக என்றான்.

(வி-ம்) இராமன் சொல்லிய வேதாந்தம் உலையில் துருத்தி கொண்டு ஊதின மாதிரியாயிற்று. கோபம் மறுபடி எழுந்துவிட்டது. கைகேயியின் சாமர்த்தியமா? அவள் புத்திக்குப் புத்திவரச் செய்கிறேன்; விதியா? விதிக்கே அது சாகும்படியான விதியை உண்டாக்குகிறேன்; என் வில் என்ன செய்கிறது பார் என்று சீறினான்.

641. உதிக்கும் - வெளிப்படுகிற. உறு - பொருந்திய. ஊதை - காற்று. கோள் - தீங்கு. மதி - புத்தி. வலீது - வலிது; மேம்பட்டது.

வாயில் வந்ததைச் சொல்லாதே !

642 ஆய்தந்தவன் அவ்வுரை
கூறலும் ; ' ஐய ! நின் தன்
வாய்தந்தன கூறுதி
யோமறை தந்த நாவால்
நீதந்தது அன்றே
நெறியின்கண் நிலாதது ஈன்ற
தாய்தந்தை என்ருல்
அவர்மேல் சலிக்கின்றது என்னே ? எ௫

வருத்தத்தோ டிருக்கிற அவன் (இலக்குவன்) அவ்வாருன சொற்களைச் சொன்னபோது, ஐயனே ! உன்னுடைய வாயில் வந்ததைச் சொல்லலாமா ? வித்தைகளைப் பயின்ற நாவல்லவா ! இச் சொற்கள் உன்னல் சொல்லப்பட்டன வல்ல. நீதி நெறியில் நில்லாதது பெற்ற தாய் தந்தையரின் செயலென்ருல் (அதற்காக மகனுகிய நீ) அவர்கள் மேல் வெறுப்படைகிறது எதனைச் சேர்ந்தது ?

(வி - ம்) இராமன் சமாதானம் சொல்லுவதைக் கேட்டாலே இலக்குவனுக்குத் தாங்காமல் கோபம் மீறிவருகிறது. இராமன் தனது உபதேசத்தை மாற்றினுன். நீயா இதைச் சொன்னுய் ? உன் நாவா இப்படி வாயில் வந்ததைப் பேசும் ? அல்ல. கோபம் என்ற ஒன்றுதான் இப்படிச் செய்கிறது என்ருன். நல்ல பயிற்சியுடைய வாய், நேரானதைத்தான் பேசும் என்பதை 'பொய்ம்மை மொழி புகன்றறியோம்; புகலமனம் எண்ணுகினும், மெய்ம்மையலது உரையா நா வேதம்நவில் பயிற்சியால்' (நைடதம், அன்ன - தூது 88) என்பதாலறிக. 'தாய் தந்தையர் நெறியில் நிற்கவில்லை

642. ஆய்தருதல் - வருந்துதல். வாய்தந்தன - ஆராய்ச்சியின்றிவரும் சொற்கள். நெறியின்கண் - ஒழுக்க வழியில். நிலாதது - நில்லாமை. சலித்தல் - வெறுத்தல்.

யென்று குறைகூறுகிருயே ! நீ நெறியில் நிற்கிருயா என்று நினைத்துப்பார்! தாய் தந்தையரைக் குறைகூற மகனுக்குளென்ன உரிமையுண்டு?' என்று சிறிது கடுமையாகக் கேட்டான். 'அரசன் உவாத்தியான் தாய் தந்தை தம்முன் நிகரில் குரவர் இவர் ; இவரைத் தேவரைப்போலத் தொழுதெழுக என்பதே யாவருங்கண்ட நெறி' (ஆசாரக் கோவை 16) 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை', 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' (கொன்றைவேந்தன் 37, 38)

இப்பொழுது பார்

643　நற்ருதையும் நீ,தனி
　　நாய கன்நீ, வயிற்றில்
பெற்ருயும் நீயே ;
　　பிறரில்லை ; பிறர்க்கு நல்கக்
கற்ருய்! இது காணுதி
　　இன்று!எனக் கைம்ம றித்தான்
முற்ருமதி யம்மிலைந்
　　தான்முனிந் தானை அன்னுன்.　　எசு

எனக்கு நல்ல தகப்பனும் நீதான் ; ஒப்பற்ற கடவுளும் நீதான் ; வயிற்றில் வைத்துப் பெற்ற தாயும் நீதான் ; வேறு யாருமில்லை ; (நீ) மற்றவருக்குக் கொடுப்பதற்குப் படித்திருக்கிருய் ; (நான் படித்திருக்கிறதைப் பார்) இப்பொழுது என்று (இலக்குவன்) கூற, இளஞ் சந்திரனை அணிந்த சிவபெருமானைப் போலக் கோபங்கொண்டிருக்கிற இலக்குவனை இராமன் தடுத்தான்.

---

643. நல்தாதை - நல்ல தகப்பன். தனிநாயகன் - ஒப்பற்ற கடவுள். பெற்றஆய் - பெற்ற தாய். கைம்மறித்தல் - கையைப் பிடித்துத் தடுத்தல். முற்ருமதியம் - இளம்பிறை. மிலைதல் - சூடிக் கொள்ளுதல்.

(வி - ம்) தாயாவது தகப்பனுவது கடவுளாவது எல்லாம் நீதான். வேறொன்றுங் கிடையாது. உனக்கு விரோதம் செய்பவரைக் கொல்வேன் என்று தன் வில் நாணியை இழுத்தான். வாய்வார்த்தை இப்பொழுது பயன்படாதென்று கருதிய இராமன் இலக்குவனின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தவேண்டியதாய் விட்டது. வயிற்றில் உலகை அடக்கித் தோற்றுவிக்கும் திருமாலே இராமனென்று கருதியதால், ‘ வயிற்றில் பெற்ருயும் நீயே ’ என்ருன்.

யாரைக் கொல்லப் போகிருய் ?

644 ஆன்ருன்பகர் வான்பினும்
‘ ஐய ! இவ் வையம் மையல்
தோன்ருநெறி வாழ்துணைத்
தம்†முனைப் போர்தொ லைத்தோ !
சான்ருேர்புக ழும்*தனித்
தாதையை வாகை கொண்டோ !
ஈன்ருளைவென் ருே’ இனி
இக்கதம் தீர்வது ?! என்ருன். எஎ

இராமன் (அவ்வளவோடு விடாமல்) மறுபடியும் சொல்கிருன். ஐயனே ! இந்த உலகத்து ஆசை ஏற்படாத வழியில் வாழ்கின்ற அண்ணனைப் போரில் புறங்கண்டா ? (அல்லது) பெரியோரெல்லாராலும் புகழப்படுகிற ஒப்பற்ற தந்தையை வெற்றி கொண்டா ? அல்லது தாயை வெற்றிகொண்டா இனி இக் கோபத்தைக் கைவிடப்போகிருய் என்ருன்.

---

644. ஆன்ருன் - ஆய்ந்து அமைந்த அறிவுடையவன். பினும் - மறுபடியும். வையம் . உலகம். மையல் - ஆசை. போர்தொலைத்தல் - போரில் ஓடச் செய்தல். வாகை - வெற்றி. கதம் - கோபம்.

*சரசுவதிமால் ஏடு.

†இராமரத்தினம் ஐயர். 1926.

(வி - ம்) இராமன் பதில்பேச முடியாதபடி இலக்குவன் பதில் சொல்லிவிட்டான். வேறு புதிதாகச் சொல்ல இராமனுக்குப் பொருளில்லை. கையைப் பிடித்துக்கொண்டு தாய் தந்தை பாடத்தைத் திருப்பி ஒருமுறை அழுத்தமாகச் சொன்னான். கடவுளே கையைப் பிடித்து உபதேசித்தால் அடிமை என்ன செய்யமுடியும்.

சுமைதாங்கி !

645 செல்லும்சொல் வல்லான்எதிர்
    தம்பியும், 'தெவ்வர் சொல்லும்
சொல்லும்சுமந் தேன்;இரு
    தோள்எனச் சோம்பி ஓங்கும்
கல்லும்சுமந் தேன்;கணைப்
    புட்டிலும் கட்டுஅ மைந்த
வில்லும்சுமக் கப்பிறந்
    தேன்;வெகுண்டு என்னை? என்றான். எஅ

வீணாகாது பயனைத் தரத்தக்க சொல்லிலே வல்லவனான இராமனுக்கு எதிராக, இலக்குவன், 'பகைவர் சொல்லும் ஏளனச் சொல்லையும் சுமந்தேன் ; இரு தோள் என்று பெயர் வைத்துக்கொண்டு சோம்பரோடு ஓங்கியுயர்ந்துள்ள கல்லையும் சுமந்தேன் ; அம்பறாத்தூணியையும் வில்லையும் சுமக்கப் பிறந்தேன் ; கோபங்கொண்டு என்ன பயன் ?' என்றான்.

(வி - ம்) கோபம் வெறியின் நிலையை அடைந்தால் சமாதானம் சொல்லச் சொல்ல இழுத்துக்கொண்டிருக்குமேயன்றி முற்றாக அடங்குவதில்லை. வேகங் குறைந்தாலும்

---

645. செல்லுஞ்சொல் - தவறாது பயன்தரும் சொல். தெவ்வர் - பகைவர் (மூவர்). சொல்லும் சொல் - தூற்றிப்பேசுதல். கணைப் புட்டில் - அம்புக் கூடு.

பேசிக்கொண்டே யிருக்கச் செய்யும். அப்படியே இலக்கு வன் அடங்கினாலும் பதில் சொல்லிக்கொண்டே யிருக்கிறான். மூட்டை தூக்கிச் சுமந்ததைத் தவிரப் பயனேதுமில்லை என்று வருந்துகிறான். தோளைக் கல் போன்றது என்பார் கள். கல் அசையாது. அவ்வாறே என் தோளும் அசைய வொட்டாது செய்யப்பட்டிருக்கிறது என்ற ஆத்திரத்தில் 'தோள் எனச் சோம்பி ஓங்கும் கல்' என்றான்.

இருவரும் சுமத்திரையிடம் செல்லல்

646 அன்னான்தனை ஐயனும்
ஆதியோடு அந்தம் என்று
தன்னாலும் அளப்பரும்
தானும்தன் பாங்கர் நின்ற
பொன்மானும் உவந்து
தழீஇனப் புல்லிப் பின்னை
சொல்மாண்பு உடைஅன்னை
சுமித்திரை கோயில் புக்கான். எசு

இலக்குவனை இராமன், தொடக்கமும் முடிவும் (இவை) என்று தன்னாலும் அளத்தற்கு அருமையான தானும், தன் அருகில் நின்ற இலக்குமியாகிய மானும், மகிழ்ந்து தழுவிக் கொண்டாற்போல அன்புடன் தழுவி, பிறகு உயர்ந்த சொல்லினை யுடைய சுமித்திரையின் மாளிகை யிற் புகுந்தான்.

(வி - ம்) இலக்குமியைத் தழுவுவதுபோல் என்றதும் படிப்போர்க்கும் உரைகாண்போர்க்கும் திணறல் ஏற்படுவ தியல்பு. கவி இங்கே கடவுள் தத்துவத்தில் இராமனைக் காண்கிறார். 'தன்னாலும் அளப்பருந் தான்' என்பதை

646. ஐயன் - இராமன். அளப்பு - அளந்து கணிக்க. பாங் கர் - பக்கம். பொன் - இலக்குமி. தழீஇ-தழுவி. புல்லி - அணைத்து-

நோக்க வேண்டும். தத்துவ உருவான கடவுளையும் தத்துவ உருவான இலக்குமியையும் இலக்குவனையும் பெண்பால் ஆண்பால் என்ற உணர்ச்சி கொண்டு நோக்க இடமேது? இம்மூன்றிலும் அன்பு ஒன்றே நோக்கப்படும். இந்தக் குழப்பத்தால் பாடத்தைச் சிதைத்து இடர்ப்பட்டிருக்கின்றனர். அளப்பரும் என்பதிலுள்ள உம்மையால் பிறரால் அளக்க முடியாதென்பது தேற்றம். இப்பாடலின் மூன்றாம் அடியில் 'பொன்மானும் உவந்து' என்றதை, 'பொன் மான் உரியானும்' எனப் பாடங்கொண்டு சிவபெருமானும் என்று உரைகண்டனர். சிவபெருமான், மானைத் தாங்கிக் காப்பாற்றினாரே அன்றி உரித்தாரல்லர்; மான்தோல் புனைந் தாருமல்லர் என்பதறிக.

மரவுரி வந்திருக்கிறது

647 கார்வானம் ஒப்பான்தனைக்
காண்தொறும் காண்தொறும்போய்
நீராய்உகக் கண்ணினும்
நெஞ்சுஅழி கின்ற நீரார்
பேராஇடர்ப் பட்டுஅய
லார்உறு பிழை கண்டும்
சீராமனத் தாள்தர
வந்தன சீரம் என்றார். ௮௦

கார்காலத்து மேகத்தை ஒத்த இராமனைக் காணும் போது கண்ணில் நீர் உதிர்வதைக் காட்டிலும் மனம் (கரைந்து நீராகி உதிரும்படி) வருந்துகிற தன்மையையுடைய (சேடியர்) மீளாத துன்பப்பட்டு ஏனையோர் அடைகிற துய

647. உக - உதிர. கண்ணினும் - கண்களைக் காட்டிலும். போரா - மீளாத. பிழை - துன்பம். சீரம் - மரவுரி : மரத்திலிருந்து உரித்தெடுக்கப்படும் உட்பட்டை.

ரத்தைக் கண்டும் (கொடுமை) நீங்காத மனத்தாள்தர மாவுரிகள் வந்திருக்கின்றன என்றார்.

(வி - ம்) கைகேயியின் சேடியரானாலும் இராமனைக் கண்டு அழுகின்றனர். விதி திரித்தது கைகேயியின் மனத்தைத் தானே! சேடியர் பொதுமக்களில் சேர்ந்தவரல்லவா? இராமன் சுமித்திரை வீட்டில் இருக்கிறான் என்பதறிந்து, விரைந்து காட்டுக்குப் போகும்படி மாவுரியை அனுப்பி நினைவூட்டினாளென்க. ஒரு செயல் தொடங்கப் படுமாயின் இடையில் சோர்வுறாமல் அச்செயல் முற்றுப் பெறும்வரை தொடர்ந்து செலுத்தப்பட வேண்டும். தாழ்ப்பின் குறித்த செயல் இடையே முறிதலும் கூடும். ஆதலின் 'இராமன் எங்கே யிருக்கிறான்? என்ன செய்கிறான்' என்று நோக்கிய வண்ணம் இருக்கிறாள் கைகேயி. நகருக்குள் நீண்ட நேரம் தங்கவிடக் கூடாதென்று நினைத்தே மாவுரிகளை அனுப்பித் தூண்ட முற்பட்டாள். 'சூழ்ச்சி முடிவு துணிவெய்தல், அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது.' (திருக்குறள் 671) மாவுரி பலவாதலால் வந்தன என்றார்.

பூணப் பிறந்தான்

648 வாள்நித் திலவெண் நகை
யார்களை வள்ளல் தம்பி,
'யாணர்த் திருநாடு
இழப்பித்தவர் ஈந்த எல்லாம்
பூணப் பிறந்தானும்
நின்றான்,அவை போர்வி லோடும்
காணப் பிறந்தேனும்
நின்றேன்;அவை காட்டும்' என்றான். அக

648. வாள் - ஒளி. நித்திலம் - முத்து. நகை - பல். யாணர் - புதுமை.

ஒளி பொருந்திய முத்துக்களை ஒத்த வெண்மையான பற்களையுடைய சேடியரை நோக்கி, இராமனின் தம்பியாகிய இலக்குவன் (நாள்தோறும்) புதுமையை அடைந்துகொண்டிருக்கிற இத்திருநாட்டை (இவன் ஆளாமல்) இழக்கும்படி செய்த கைகேயியார், தருகிற யாவற்றையும் அணிந்து கொள்வதற்கென்று பிறந்திருக்கிறவனும் இருக்கிறான்; அவற்றையெல்லாம் காணப்பிறந்த யானும் போர் செய்கின்ற வில்லைச் சுமந்துகொண்டு நிற்கிறேன். அவைகளை எடுத்துக் காட்டுங்கள் என்றான்.

(வி - ம்) கோசல நாடு இருந்தபடியே இருப்பதன்று. நாள்தோறும் வளர்ச்சியுற்று வருவது ஆதலின் 'யாணர்த் திருநாடு' எனப்பட்டது. 'இழப்பித்தவர்' என்றது கேலி. சொன்னதெல்லாம் கேட்டான்; இனிக்கொடுப்பதை யெல்லாம் அணிந்துகொள்வான். எனக்கென்ன உரிமை யிருக்கிறது. என்னைவிட்டால் தெரியும் என்ற மனக்கொதிப்பின் குறிப்பு 'போர்விலோடும்' என்பதால் விளங்கும். இக் கொடுமைகளை யெல்லாம் காணவேண்டிய விதி எனக்கிருக்கிறது என்று வருந்தினான் என்க. இல்லாதவர்க்குத் கொடுத்தலே ஈதல். அச்சொல் இங்கே விழுந்திருக்கிறது. முன் பாடலில் 'தர' என்று சேடியர் கூறியிருத்தலும் நோக்கத் தக்கது.

இலக்குவன் மரவுரி அணிதல்

649 தான்புனை சீரையைத்
தம்பி சாத்திட,
தேன்புனை தெரியலான்
செய்கை நோக்கினான்;

---

649. தேன் - வண்டு. புனை - மொய்க்கிற. தெரியல் - மாலை. உறுதி - உறுதிச் சொல்.

'வான்புனை இசையினாய்!
மறுக்கி லாதுநீ
யான்புகல் இலையதுஓர்
உறுதி கேள்'என. அஉ

தான் அணிந்துள்ளது போல மரவுரியைத் தம்பியும் அணிந்துகொள்ள, வண்டுகள் மொய்க்கிற மாலையை யணிந்துள்ள இராமன், (தம்பியின்) செயலை நோக்கினான். வானத்தை முட்டிய புகழுடையவனே! மாட்டேன் என்னாமல் யான் சொல்லுகிற இந்த ஒரு நல்வார்த்தையை நீ கேட்பாயாக என்று (சொல்லத் தொடங்கினான்.)

நீ இங்கேயே இரு

650 'அன்னையர் அனைவரும்,
ஆழி வேந்தனும்,
முன்னையர் அல்லர்;
வெம்துயரின் மூழ்கினர்;
என்னையும் பிரிந்தனர்;
இடர்உ றுவகை
உன்னை நீ என்பொருட்டு
உதவு வாய்!' என்றான். அரு

தாய்மாரெல்லாரும் சக்கரவர்த்தியும் முன்னைப்போல இருந்தாரல்லர். கொடிய துன்பத்தில் மூழ்கி யிருக்கின்றனர். என்னையும் பிரிய வேண்டியவராயினர். துன்பப் படாமலிருப்பதற்கு, உன்னை என்பொருட்டாக நீ உதவ வேண்டும் என்றான்.

(வி - ம்) பெற்றோர் பெருந்துன்பங்கொண்டு வருந்தும் போது இருவரும் பிரிவது தகாது. நான் பிரிய வேண்டியது கட்டாயமாகிவிட்டது. உனக்கு விருப்ப மில்லாவிட்டாலும் எனக்காக இங்கே இருக்கவேண்டும் என்று கேட்டான்.

நான் செய்த பிழை என்ன ?

651 ஆண்தகை அம்மொழி
பகர, அன்பனும்
தூண்தகு திரள்புயம்
துளங்கத் துண்என,
மீண்டதோர் உயிர்இடை
விம்ம விம்முவான்;
'ஈண்டுனக்கு அடியனேன்
பிழைத்தது யாது?'என்றான். அச

ஆண்மைக் குணம் நிறைந்த இராமன் அந்தச் சொல்லைச் சொன்னவுடனே, அன்பனாகிய இலக்குவன் தூண் என்று சொல்லும்படியான திரண்ட தோள்கள் நடுக்கமுற்றுத் திடுக்கிட்டு இறந்துபோய் மீண்டும் வந்த ஓர் உயிர் இடையிலே கலங்கும்படி விம்முவானாகி, இப்பொழுது உனக்கு அடியேன் செய்த பிழை என்ன என்றான்.

(வி - ம்) இராமன் தடுத்தபோதே இலக்குவன் மனமுடைந்து போனான். இராமனோடு உடன் செல்லலாமென்பதில் சிறிது தேறுதல் அடைய இடமிருந்தது. அதையும் மறுக்கவே, போன உயிர் மீண்டு, இடையில் கலங்கினாற் போலாயிற்று. ஏதோ பிழை செய்துவிட்டோம் போலிருக்கிறது. அதனால்தான் தன்னோடு வரக்கூடாதென்கிறான் என்று ஏங்கிவிட்டான். அந்த ஏக்கத்தில்தான் 'அடியேன் பிழைத்தது யாது' என்கிறான்.

---

651. தூண்தகு - தூணை ஒத்த. துளங்க - நடுங்க. துண்என - திடுக்கிட்டு. பிழைத்தது - பிழை செய்தது.

சத்தியசந்தன் மகன்

652 பைந்தொடி ஒருத்திசொற்
கொண்டு, பார்மகள்
நைந்துயிர் நடுங்கவும்,
நடத்தி கான்என
உய்ந்தனன் இருந்தனன்
உண்மை காவலன்,
மைந்தன்என்று இனையசொல்
வழங்கி னாய்என. அடு

அழகிய வளையலணிந்த ஒருத்தியின் சொல்லை ஏற்றுக் கொண்டு, பூமிதேவி நைந்து உயிர் நடுங்கும்படியாகக் காட்டுக்குப் போ என்று சொல்லிவிட்டுப், பிழைத்திருப்பவனாகிய உண்மையைக் காப்பவனின் மகன் என்று என்னை நினைத்துக்கொண்டு, இந்தச் சொற்களைச் சொல்லியிருக்கிறாய் என்று கூறி, (மேலும்)

(வி - ம்) தகப்பனைப் போலத்தான் மகனும் இருப்பான். ஆதலால் அவனைப் போலவே அவன் மகனாகிய யான் உன்னைப் பிரிந்து உயிர் வாழ்வேனென்று கருதியா இங்ஙனம் கூறினாய் என்றனன் என்க. உண்மை காவலன் என்றது கேலியின் கண்ணது.

என்னைவிட்டுப் போகவா ?

653 செய்துடைச் செல்வமோ
யாதும் தீர்ந்துஎமைக்
கைதுடைத்து ஏகவும்
கடவை யோஐயா !

---

652. பைந்தொடி யொருத்தி - கைகேயி. பார்மகள் - பூமி தேவி. நைந்து - வருந்தி. நடத்தி - செல்வாயாக.

நெய்துடைத்து அடையலார்
நேய மாதர்கண்
மைதுடைத்து உறைபுகும்
வயங்கொள் வேலினய். அ௬

செயலினால் உண்டாக்கப்பட்ட செல்வம் யாவற்றையும் விட்டுவிட்டு எங்களையும் கைகழுவிவிட்டுப் போகவும் உன் மனம் சம்மதிக்குமோ? ஐயனே! பூசப்பட்டுள்ள கொழுப்பைத் துடைத்து மாற்றாரின் அன்புக்குரிய மனைவியர் கண்ணில் தீட்டியுள்ள மையையும் துடைத்துவிட்டு உறையினுள் செருகப்படும் வெற்றி பொருந்திய வேலையுடையவனே! (என்று)

(வி - ம்) நெய் பூசப்பட்டிருக்கும் வேலை உறையினுள்ளிருந்து எடுத்துத் துடைத்துவிட்டு மாற்றாரைக் கொல்வதால், அவர் மனைவியரின் கண்ணீர் பெருகித் தீட்டிய மையைக் கரைத்துக் கழுவிவிடுமென்பது கருத்து. செல்வம் நிலையாக இருப்பதன்று. வரவுக்கு வழி செய்துகொண்டேயிருக்க வேண்டும். அப்படிப் பெருகி உண்டாகியிருக்கிற செல்வத்தைச் 'செய்துடைச் செல்வம்' என்றார். மாடு, மனை, நிலம், பொன், மணி எனச் செல்வம் பலவாகலின் 'யாதும்' எனப்பட்டது. அவைகளைத்தான் விட்டொழித்தாய் என்றால் அன்பு கொண்டு உன்னையே கதி என்றிருக்கிற எங்களையுமா ஒழித்துவிட வேண்டும் என்ற பரிதாபத்தில் 'கைதுடைத்து ஏகவும் கடவையோ' என்றான்.

---

653. கடவையோ - கடமை என்று நினைப்பாயோ. அடையலார் - எதிரிகள். மாதர்கண் மை - பெண்களின் கண்ணில் தீட்டும் மை. வயம் - வெற்றி.

பேச்சு மூச்சில்லை

654 உரைத்தபின் இராமன்ஒன்று
உரைக்க நேர்ந்திலன் ;
வரைத்தடம் தோளினன்
வதனம் நோக்கினன் ;
விரைத்தடம் தாமரைக்
கண்ணின் மிக்கநீர்
நிரைத்துஇடை இடைவிழ
நெடிது நிற்கின்றான். அஎ

(இலக்குவன்) சொல்லிய பிறகு இராமன் ஒன்றையும் சொல்ல முற்படவில்லை. மலைபோன்ற விசாலமான தோளினை யுடைய இலக்குவனின் முகத்தைப் பார்த்தான். மணமுள்ள பெரிய தாமரைமலர் போன்ற கண்ணில் மிகுந்து பெருகிய நீரானது ஒழுங்காக இடையிடை சிந்திக் கொண்டிருக்க அப்படியே எவ்வளவு நேரமென்பது தெரியாமல் நிற்கிறான்.

(வி - ம்) இலக்குவன் சோக உருவாக நிற்கிறான். அவன் முகத்தைப் பார்த்து ஒரே அழுகையாக அழுது கொண்டு இராமன் நிற்கிறான். ஒருவரின் எதிரே ஒருவராக உணர்ச்சியற்று நேரந் தெரியாமல் நின்றுகொண்டிருக் கின்றனர்.

வசிட்டர் வந்தார்

655 அவ்வயின், அரசவை
நின்றும் அன்பினன்
எவ்வமில் இருந்தவ
முனிவன் எய்தினன் ;

---

654. வதனம் - முகம். விரை - மணம். தாமரை - தாமரை மலர். நிரைத்து - வரிசையாக. நெடிது - நீண்ட நேரம்.

655. வயின் - பொழுது. எவ்வம் - துன்பம். இருந்தவம் - பெரிய தவம். செவ்விய - அழகிய. சென்னி - தலை. கவ்வை - துன் பம். கால் வைத்தல் - அனுபவிக்கத் தொடங்குதல்.

செவ்விய குமரரும்
சென்னி தாழ்ந்தனர் ;
கவ்வைஅம் பெருங்கடல்
முனியும் கால்வைத்தான். அஅ

அப்பொழுது அரசர் கூட்டத்திலிருந்து அன்புடையவரான, யாதொரு குற்றமுமில்லாத பெருந் தவங்களைச் செய்த வசிட்ட முனிவர் வந்து சேர்ந்தார். அழகிய குமரர் இருவரும் தலை வணங்கினர். துன்பமாகிய பெருங் கடலில் முனிவரும் அடியெடுத்து வைத்தார்.

(வி - ம்) இதுவரை துன்பம் என்பதை அறியாதிருந்த வசிட்டர் கடல் போன்ற பெருந்துன்பத்தில் அகப்பட்டு விட்டார். இளவயதுள்ள அரசகுமரர் இருவரும் மரவுரி யுடுத்துத் தவவேடத்தில் நிற்பதைக் கண்டதும் அதில் ஈடு படாமல் இருக்கமுடியவில்லை.

அறிஞனும் அறிவிழந்தான்

656 அன்னவர் முகத்தினோடு
அகத்தை நோக்கினன் ;
பொன்அரைச் சீரையின்
பொலிவு நோக்கினன் ;
என் இனி உணர்த்துவது !
எடுத்த துன்பத்தால்
தன்னையும் உணர்ந்திலன்
உணரும் தன்மையான். அகூ

அவ்விருவருடைய முகத்தையும் அகத்தையும் நோக்கினார்; பொன் ஆடையுடுத்தும் இடுப்பில் அணிந்திருக்கிற மரவுரியின் அழகையும் பார்த்தார். இனி அவர்கட்குச்

656. அகம் - உள்ளம். பொன் - பொன்னுடை. அரை - இடை. பொலிவு - அழகு.

சொல்ல வேண்டியது யாது? தலைதூக்கிய துன்பத்தால் தன்னையே மறந்துவிட்டார். யாவற்றையும் உணர்ந்தறியும் ஆற்றலுடைய வசிட்ட முனிவர்.

முடிசூட்டு நாளில் முனிவனுவதா ?

657 வாழ்வினை நுதலிய
மங்க லத்துநாள்,
தாழ்வினை அதுவரச்
சீரை சாத்தினன் ;
சூழ்வினை நான்முகத்து
ஒருவற் சூழினும்
ஊழ்வினை ஒருவரால்
ஒழிக்கற் பாலதோ. ௯௦

நல்வாழ்வினைக் கருதிய மங்கலமான நாளில், தாழ்வு தரும் தீவினை வந்து தாக்க மரவுரியை அணிந்துகொண்டான். (பலவகையாகச் சூழ்ந்து உயிரைத் தாக்குகின்ற வினைகளை வகுத்து அமைக்கின்ற) பிரமதேவனைப் பழையவினை பற்றிக் கொள்ளுமானாலும், அவ்வூழ்வினை எவரொருவராலும் ஒழிக் கப்படும் தன்மையுடையதாகுமோ ?

(வி - ம்) இராமனுக்கு முடிசூட்டிச் சக்கரவர்த்தி யாக்குவதென்று முடிவுசெய்து, சோதிடர் கூடி' முதல் தரமான நாளைக் கண்டுபிடித்து, தெய்வம் போற்றல் முதலிய வைதீகச் சடங்குகளைத் தொடங்கி எல்லாம் நடைபெறத் தான் செய்தன. உலகையே வெற்றி கொள்ளும் அரசன், கற்பிற் சிறந்த உத்தமியான கோசலை, தவமே உருவான

657. நுதலிய - கருதிய. தாழ்வினை - தீவினை. சூழ்வினை - வந்து பொருந்துகிற முன் செய்த வினை. சூழ்தல் - பொருந்துதல். ஊழ்வினை - முன் செய்த வினையின் பயனை வந்து ஊட்டுவிக்கும் வினை.

வசிட்ட முனிவர் இன்னும் எத்தனையோ கோடிப் பேர். இவர்களுடைய கண்ணுக்கு முன்னால்—இவர்களின் விருப்பத்துக்கு மாறாக—சக்கரவர்த்தியின் முடியைத் தலையில் சூட்டும் நேரத்தில், உடுத்தின ஆடையையுமிழந்து பிறந்தது முதல் இருந்த மாளிகை நகரம் யாவையும் பறிகொடுத்து விட்டு ஆண்டியாகக் காட்டுக்குச் செல்கிறான் இராமன். அவன் போகக்கூடாதென்றும், அரசாளவேண்டுமென்றும் கருதி அழுகிறார்கள்; ஒன்றும் நடக்கவில்லை. இதற்குக் காரணமென்ன? விதியைக் கடக்கமுடியாது. விதியை விதிக்கிற கடவுளாலும் கடக்கமுடியாது என்றவாறு.

நீ காடுநோக்கினால் அரசன் வாழான்

658 விற்றடம் தாமரைச்
செங்கண் வீரனை
உற்றுஅடைந்து, 'ஐய! நீ
ஒருவி ஓங்கிய
கற்றடம் காணுதி
என்னில் கண்அகல்
மற்றடந் தானையான்
வாழ்கிலான்' என்றான். ௬௬

வில்லேந்திய செந்தாமரை மலர்போன்ற விசாலமான கண்களையுடைய வீரனாகிய இராமனை நெருங்கி 'ஐயனே! நீ (நகரைவிட்டு) நீங்கி (மரங்களும் மலைகளும்) ஓங்கி வளர்ந்திருக்கிற கற்கள் நிறைந்த வழியைக் காண்பாய் என்றால்,

658. வில் - வில்லை ஏந்திய. தடம் - விசாலமான. உற்று அடைந்து - நெருங்கி. (மீமிசை) ஒருவி - நீங்கி. கல் தடம் - பருக்கைக் கற்கள் நிறைந்த வழி. மல் தடம் தானை - மற்போரில் வல்ல மிகுதியான சேனை.

விசாலமான போர் செய்தற்குரிய மிக்க தானையையுடைய மன்னன் வாழமாட்டான்' என்று கூறினர்.

(வி - ம்) வசிட்டர் இராமனை நோக்கிக் காட்டுக்குப் போக வேண்டாம் என்று கூறவில்லை. நீ காடு நோக்கினல் அரசன் இறந்துபோவான் என்றுதான் சொன்னர். கொடுமை யான காட்டுப் பாதையைக் 'கல்தடம்' என்றார். 'பொருந் தார்கை வேல் நுதிபோல் பரல்பாய' (நாலாயிரம் 734.)

வில்+தடம்=விற்றடம்; கல்+தடம்=கற்றடம்; மல்+ தடம்+மற்றடம்.

அதைத் தடுப்பது உமது கடன்

659 அன்னவன் பணிதலை
ஏந்தி ஆற்றுதல்
என்னது கடன் ;அவன்
இடரை நீக்குதல்
நின்னது கடன் ;இது
நெறியும் ; என்றனன்
பன்னகப் பாயலுள்
பள்ளி நீங்கினன். கூஉ

மன்னனது கட்டளையைத் தலைமேற்கொண்டு செய்தல் என்னுடைய கடமையாகும். அவனுடைய துன்பத்தை நீக்கு வது உம்முடைய கடமையாகும். தருமமும் இதுவே ஆகும் என்றனன். (யார் ?) ஆதிசேடனாகிய படுக்கையில் துயிலு வதை விட்டு வந்தவனாகிய இராமன்.

---

659. பணி - கட்டளை. எந்தி - தாங்கி. கடன் - கடமை. நெறி - தருமம். பன்னகம் - பாம்பு. பாயல் - படுக்கை. பள்ளி - உறக்கம்.

அரசன் ஆலோசனையின்றிச் செய்தது

660 வெவ்வரம் பயில்சுரம்
　　விரவென் றான்அலன் ;
தெவ்வர்அம் பனையசொல்
　　தீட்டி னாள்தனக்கு,
அவ்அரம் பொருதவேல்
　　அரசன் ஆய்கிலாது
இவ்வரம் தருவென்என்று
　　ஏன்றதுண்டு என்றான். கூ

கொடிய முட்கள் பொருந்திய காட்டை அடையவேண்டுமென்று (அவன்) சொல்லவில்லை. (ஆனால்) பகைவருடைய அம்பைப் போன்ற கொடுஞ்சொல்லைச் சொன்னவளான கைகேயிக்கு, அரத்தினால் அராவிச் செய்யப்பட்ட வேலையுடைய அரசன், ஆராய்ந்துபார்க்காமல் இந்த வரங்களைத் தருவதாக ஒப்புக்கொண்டது உண்டு என்றான்.

(வி - ம்) அரசன் உன்னைக் காட்டுக்குப் போகச்சொல்லவில்லை. கொடுமையானவள் வரங்கேட்டது உண்டு. இவன் இன்னதென்றறியாமல் தந்தேன் என்று சொல்லிவிட்டான். ஆலோசித்துப் பாராமல் வரங்கொடுத்த பிழையைத் தவிர அவன் மனத்தில் இப்படி வருமென்று எண்ணவே இல்லை என்று கூறினர். அரசன் மனமார இட்ட கட்டளையல்ல. ஏமாற்றிவிட்டாள். தெரிந்திருந்தால் கொடுக்கமாட்டான். என்றெல்லாம் கருதும்படி முனிவர் சாதுரியமாகத்தான் சொன்னர்.

---

660. அரம் - முள். சுரம் - பாலை நிலம். விரவுதல் - செல்லுதல். தெவ்வர் - பகைவர். அம்பு அனைய - அம்பை ஒத்த. ஆய்கிலாது - ஆராய்ந்து பாராமல். ஏன்றது - உடன்பட்டது.

வரங்கொடுக்க இசைந்தான்

661 'என்றனன் எந்தைஇவ்
வரங்கள் ; ஏவினள்
ஈன்றவள் ; யான்அது
சென்னி ஏந்தினேன் ;
சான்றென நின்றநீ
தடுத்தியோ ?' என்றான்
தோன்றிய நல்அறம்
நிறுத்தத் தோன்றினன். கூசு

என் தந்தை (எப்படியோ) இவ்வரங்களுக்கு உடன் பட்டான்; தாய் கட்டளை யிட்டாள்; நான் அதைத் தலைமீது தாங்கிக்கொண்டேன். (விருப்பு வெறுப்பற்று) சாட்சியாக வுள்ள தாங்கள் தடுக்கிறீர்களா என்றான். (யார்?) அனாதி யாய்த் தோன்றியுள்ள நல்லறத்தைக் கலக்கமின்றி நிறுத்து வதற்காகத் தோன்றிய இராமன்.

வசிட்டர் வாய் மூடினர்

662 என்றபின் முனிவன்ஒன்று
இயம்ப நேர்ந்திலன் ;
நின்றனன் நெடுங்கணீர்
நிலத்து நீர்த்துஉக,
குன்றன தோளவன்
தொழுது, கொற்றவன்
பொன்திணி நெடுமதில்
வாயில் போயினான். கூரு

---

661. சான்றென - சாட்சி என்று சொல்லும்படி.

662. நீர்த்து - தாரையாக.

என்று கூறினபின்பு முனிவர் ஒரு சொல்லும் சொல்ல முற்படவில்லை. தொடர்ந்து வழிகிற கண்ணீர் நிலத்தில் வடிந்து பெருகுமாறு நின்றார். குன்றைப் போன்ற தோள்களையுடைய இராமன் முனிவரைத் தொழுது அரசனுடைய பொன்னினால் அலங்கரிக்கப்பட்ட நீண்ட மதிலின் (ஆசார) வாயிலை நோக்கிச் சென்றான்.

யாவரும் வருந்தினர்

663 அந்தணர், அருந்தவர்,
அவனி காவலர்,
நந்தலில் நகருளார்,
நாட்டு ளார்கள்தம்
சிந்தைஎன் புகல்வது!
தேவர் உள்ளமும்
வெந்தனர்; மேல்வரும்
உறுதி வேண்டலார். கூசு

அந்தணரும், அரியதவம் செய்பவரும், அரசரும், குறைவுபடாத நகரமக்களும் நாட்டின் பிற இடங்களிலிருந்து வந்த மக்களுமாகிய அனைவர்தம் உள்ளத்தின் நிலையை எப்படிச் சொல்லமுடியும். தேவரும் உள்ளம் வெந்துபோயினர். அவர்கட்கு இனிவரும் நன்மையையும் விரும்பினாரில்லை.

(வி - ம்) அந்தணர், தவம்முற்றி ஜீவன் முத்தராக மக்களிடம் கருணைகொண்டு அவர்களை அறவழிப்படுத்தும் பணி பூண்டவர். 'அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்-செந்தண்மை பூண்டொழுக லான்' (திருக்குறள் 30). அருந்தவர் எல்லோராலும் மேற்கொள்ள முடியாத அரிய தவங்களைச் செய்துகொண்டிருப்பவர் என்க. மக்கள் யாவ

---

663. அவனி - பூமி. நந்தல் - குறைதல். நாடு - தலைநகரையல்லாத ஊர்களின் தொகுதி.

ரும் கூடி முடிசூட்டு மங்கலங் காண, சொல்லமுடியாத ஆர்வத்தோடு காத்திருந்தனர். மன்னர் கோலத்துடன் இராமன் தேரில் சென்றதையும் பார்த்துக் குதூகலித்தனர். அப்பாற் சிறிது நேரத்தில், சடைகட்டி மாவுரி யுடுத்துக் கால்நடையாக வருங் காட்சியைக் கண்டு துயருறுவதை எப்படித்தான் சொல்லில் சொல்லமுடியும்? முடியாததலால், 'சிந்தை என் புகல்வது' என்றார். இராமன் காட்டுக்குப்போவது உலகுக்கே பொறுக்கமுடியாத துன்பமாகிவிட்டது. ஆனால் அரக்கரை யழித்து முனிவர்கட்கும் தேவர்கட்கும் நன்மை யுண்டாக்குவான் என்பது ஒன்றுதான் உண்டு. இங்கே அந்தணர் முனிவர் எல்லாரும் உயிரே போகும்படி வருந்துகிறார்கள். தேவர்களோ வருந்துவதோடு மட்டுமல்ல, அரக்கரைக் கொல்லவும் வேண்டாம் எங்கட்கு நன்மையும் வேண்டாம் என்கிறார்கள். இராமனை இப்படி அநியாயமாக இத்தனை மக்கள் துயருற நாட்டைவிட்டுத் துரத்துவதைவிட நிரந்தரமாக அரக்கர்க்கு அடிமையாக நாங்களிருப்பது குற்றமில்லை என்று அவர்கட்குத் தோன்றுகிறது, என்பது 'மேல் வரும் உறுதி வேண்டலார்' என்பதால் அறியப்படும்.

கடல்போன்ற மனைவியர்

664 அறுபதி னாயிரர்
அரசன் தேவியர்;
மறுவறு கற்பினர்;
மழைக்கண் நீரினர்;
சிறுவனைத் தொடர்ந்தனர்;
திறந்த வாயினர்
எறிதிரைக் கடல்என
இரங்கி ஏங்கினர். கஎ

664. மறு - குற்றம்.

குற்றமற்ற கற்புடைய அரசனது தேவிமார்கள் அறுபதினுயிரம் பேரும், கண்களிலிருந்து மழைபோல நீரைக் கொட்டினவராக, வாய்மூடாமல் அலேமோதுகிற கடலேப்போல, வருந்தி ஏங்கி அழுதுகொண்டு குழந்தையைத் (இராமனே) தொடர்ந்து சென்றனர்.

சிறகிழந்த பறவைகள்

665 கன்னிநன் மயில்களும்
குயில் கணங்களும்
அன்னமும் சிறைஇழந்து
அவனி சேர்ந்தன
என்ன, வீழ்ந்து உழந்தனர்
இராமன் அல்லது
மன்னுயிர்ப் புதல்வரை
மற்றும் பெற்றிலார். கூஅ

இராமனைத் தவிர நிலைபெற்ற உயிராகக் கருதத்தக்க பிள்ளையைப் பெருதவர்கள், இளமையான மயில்களும், குயிலின் கூட்டங்களும், அன்னப்பறவைகளும் சிறகு அறுந்து தரையில் விழுந்து கிடந்தன என்று சொல்லும்படி பூமியில் விழுந்து துடித்தனர்.

(வி-ம்) 'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும் மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழுநாளே' (புறம்-188) என்பதறிக. பிள்ளையில்லாவிட்டால் வாழ்க்கையின் தொடர்பு அறுகின்றது. மணம் புரிந்துகொண்ட இருவர்க்கிடையில் பிள்ளையில்லையாயின் வாழ்வு புதுமையற்று வறண்டு வீணுவதாம். இவ்

665. கன்னி - இளமை. கணம் - கூட்டம். சிறை - சிறகு. அவனி - பூமி. உழத்தல் - துன்புற்றுப் புரளல்.

வாறு பிள்ளைப்பேறின்றித் துன்புறுவோர் இராமனையே பிள்ளையென நம்பினர். அவனும் போகிறான் என்றால் என் செய்வர்? அவரை, வில்லடியில் வீழ்ந்த பறவையாயினர் என்றார்.

ஆம்பல் மலர்ந்த வயல்கள்

666 புகலிடம் கொடுவனம்
போலும்! என்றுதம்
மகன்வயின் இரங்குறும்
மகளிர் வாய்களால்,
அகன்மதில் நெடுமனை
அரத்த ஆம்பல்கள்
பகலிடை மலர்ந்ததோர்
பழனம் போன்றவே. கூகூ

இவனுக்குத் தங்குமிடம் கொடியவனம் போலும் என்று தம் பிள்ளையிடம் இரக்கப்படுகிற மகளிரின் வாய்களின் தன்மையால், அகன்ற மதிலையுடைய நெடிய அரண்மனை யானது சிவப்பு நிறமுள்ள அல்லிமலர்கள் பகலிலே மலர்ந்த ஒரு வயலைப் போன்றிருந்தது.

(வி - ம்) அரசன் தேவியர் அரண்மனை வெளியில் ஒரே கூட்டமாக நின்று வாய்திறந்து அழுகின்றனர். அக் காட்சி அறுபதாயிரம் செவ்வல்லிப் பூப்பூத்த மாதிரி இருந்தது. அல்லி இரவில்தான் பூக்கும். நீர்நிலைகளில்தான் அல்லி படர்ந்துகிடக்கும். இங்கே அதிசயமாகப் பூத்திருக்கிறது. எனவே இதை, 'அரத்த ஆம்பல்கள் பகலிடை மலர்ந்ததோர் பழனம் போன்றவே' என்றார். 'கொடுவனம் போதும்' என்று பாடங்கொண்டு 'கொடிய வனத்துக்குத் தாங்களும்

---

666. வயின் - இடம். அரத்த - சிவந்த. ஆம்பல் - அல்லிப்பூ. பழனம் - வயல்.

வருகிறோம்' என்று கூறினர் என்று பொருள் கண்டனர். போக விரும்பினவர், போகக் கூடியவர் யாவரும் இராமன் பின்னே சென்றுவிட்டனர். ஆனால் அரசன் தேவியர் சென்றாரில்லை. காரணம் சாகக்கிடக்கிற மன்னனை விட்டுப் பிரிதல் கூடாமையே. இதனை 'ஏவிய குரிசில் பின் யாவர் ஏகிலர், மாவியல் தானையம் மன்னை நீங்கலாத் தேவியர் ஒழிந்தனர்; தெய்வ மாநகர் ஓவியம் ஒழிந்தன உயிரிலாமையால்' (பாடல் 697) என்பதாலறிக. இவர்கள் நகரிலிருந்து மன்னன் உடலோடு தீக்குளித்தனர். எனவே குற்றுயிரான மன்னனைப் பிரிந்து வர விரும்பினரென்பது பொருந்தா தென்க.

தன்னலம் பெரிது

667 அஞ்சன மேனி இவ்
அழகற்கு எய்திய
வஞ்சனை கண்டபின்,
வகிர்ந்து நீங்கலா
நெஞ்சினும் வலிதுஉயிர்!
நினைப்பது என்? கடு
நஞ்சினும் வலியநம்
நலம்என் றார்சிலர். கூ00

மையைப்போன்ற உடல் நிறத்தையுடைய இவ் அழகிய இராமனுக்கு ஏற்பட்ட தீங்கைக் கண்டபின்னும், வெடித்து நீங்காத நெஞ்சைக்காட்டினும் உயிர் வலிமையுடையது; நினைத்துப் பார்க்க என்ன இருக்கிறது? கடுமையான நஞ்சைக் காட்டினும் நம்முடைய (சுய) நலம் வலியது என்றார் சிலர்.

(வி - ம்) இராமனுக்கு இயற்கையாகக்கூட இத் தீங்கு வரவில்லை. கொடிய வஞ்சனையால் வந்தது. அஃதாவது,

---

667. வகிர்தல் - பிளத்தல். கடு - கடுமையான. நம்நலம் - நம்முடைய சுயநலம்.

இவன் ஆளாமற் காடு செல்வதே அநியாயம்! அதுவும் வஞ்சனையால் போவது பெரிய அநியாயம். இதைப் பார்த்துக் கொண்டு வெடித்துப் போகாமல் இருக்கிற நெஞ்சு வலிது. அதைக் காட்டிலும் உடலைப் பிளந்துகொண்டு வெளியே போகாத உயிர் இன்னும் வலிது. அவை ஏன் போகின்றன! நம்முடைய சுயநலமிருக்கிறதே அது நஞ்சை விட வலிமையானது. அது உயிரை இறுக்கி உடலோடு பிணைத்துக் கொண்டிருக்கிறது. தியாக மிருந்தால்தானே அநீதியைக் கண்டதும் உயிர் போகும் என்றபடி.

குருடருக்குத்தான் இது நாடு

668 மண்கொடு வரும்என
வழியி ருந்துயாம்
எண்கொடு சுடர்வனத்து
ஏகல் காணவோ!
பெண்கொடு வினைசெயப்
பெற்ற நாட்டினில்,
கண்கொடு பிறத்தலும்
கடைஎன்றார் சிலர். கOக

பூவுலக ஆட்சிக்குரிய முடியைச் சூடிக்கொண்டு வருவான் என்று எண்ணிக்கொண்டு வழியில் நாம் காத்திருந்தது, தீப் பிடிக்கிற காட்டிற்குச் செல்வதைப் பார்க்கவா? பெண் கொடிய வினையைச் செய்யும்படி ஏற்பட்ட நாட்டில் கண் கொண்டு பிறந்ததும் கழிபட்ட காரியம் என்றார் சிலர்.

---

668. மண் - மண்ணுலக ஆட்சி. எண் - எண்ணுதல். சுடர் - தீ. ஏகல் - செல்லுதல். கண்கொடு - கண்கொண்டு. கடை - கடைப்பட்டது.

(வி - ம்) பெண் பிறப்பு அன்புக்கு உரியது ; இரக்கத்துக்குரியது. அரசன் நீதியுடன் செய்த காரியத்தை மாற்றி உலகுக்கே கொடுமையைச் செய்து விட்டாளே. இந்த நாட்டிலே பிறந்ததும் பிசகு. குருடாகப் பிறந்திருந்தால் இந்தக் கண்ராவியைப் பாராமலிருக்கலாமே என்றபடி. பிறத்தலும் என்ற உம்மையால் இருத்தலும் கடை என்பது பெறப்படும்.

அவன் போவது; நாம் இருப்பதா ?

669 முழுவதே பிறந்து உலகு
உடைய மொய்ம்பினேன்
உழுவைசேர் கானகத்து
உறைவென் யான்என
எழுவதே! எழுதல்கண்டு
இருப்ப தே! இருந்து
அழுவதே! அழகிதுஇவ்
அன்பென் றூர்சிலர். கOஉ

(மூத்தவனாகப்) பிறந்து முழு உலகுக்கும் உரிமையுடைய வலிமைபெற்ற இராமன், புலி நிறைந்த காட்டில் சென்று வசிப்பேன் யான் என்று எழுந்து செல்வதா ? அவ்வாறு எழுந்ததைக் கண்டு நாம் (உயிருடன்) இருப்பதா ? இருந்து அழுவதா ? இந்த (வெறும்) அன்பிருக்கிறதே ! இது வெகு அழகு ! என்றூர் சிலர்.

---

669. மொய்ம்பு - வலிமை. உழுவை - புலி. சேர் - சேர்ந்திருக்கிற.

உறவு ஒருவன்தானு ?

670 'திருஅரை சுற்றிய
சீரை ஆடையன்
பொருவரும் துயரினன்
தொடர்ந்து போகின்ருன்,
இருவரைப் பயந்தவள்
ஈன்ற கால்முளே
ஒருவனே இவற்குஇவ்வூர்
உறவு'என் ருர்சிலர். கO௩

அழகிய இடுப்பில் மரவுரியை ஆடையாக உடுத்திருப்பவனும், நிகரற்ற துயரினை உடையவனும் (இராமனைத்) தொடர்ந்து போகின்றவனும் ஆகிய, சுமித்திரை மகன் ஒருவன்தானு இவ்வூரில் இவனுக்கு உறவு ஆவார் என்று சிலர் கூறினர்.

மொழியைக் காக்கிருன்

671 நிறைமகவு உடையவர்,
நெறிசெல் ஐம்பொறி
குறைமக குறையினும்
கொடுப்ப ராம்உயிர் ;
முறைமகன் வனம்புக
மொழியைக் காக்கின்ற
இறைமகன் திருமனம்
இரும்புஎன் ருர்சிலர். கO௪

---

670. சீரை - மரவுரி. இருவரைப் பயந்தவள் - சுமித்திரை. கால்முளே - வழித்தோன்றல் மகன்.

671. மகவு - பிள்ளை. நெறி - நல்வழி. ஐம்பொறி - மெய் வாய் கண் மூக்கு செவி. மக - பிள்ளை. முறைமகன் - முறைப்படி யுள்ள ; மகன்.

நிறையப் பிள்ளைகளை உடைய பெற்றோர்கூட, நல்ல நெறியிலே செல்வதில் ஏற்படும் குறையும், ஐந்து பொறிகளில் குறையும் உடைய பிள்ளை தம்மைவிட்டு நீங்கினாலும் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறார்கள். (எல்லாம் அமைய வேண்டிய) முறைப்படி அமைந்த மகனாகிய இராமன், வனத்துக்குப் போக, மொழியைக் காக்கின்ற அரசனின் சிறப்பான மனமிருக்கிறதே அது இரும்பு என்றார் சிலர்.

(வி - ம்) நெறிசெல் ஐம்பொறிக்குறை என்பதை 'நெறிசெல் குறை—ஐம்பொறிக்குறை' எனக் கொள்க. செல்லுகின்ற நெறியிலும் குறைவுடையவனல்லன்; ஐம்பொறிகளிலும் குறைவுடையவனல்லன்; அகத்தும் புறத்தும் எல்லா நிறைவுமுள்ளவன் என்பதும், பட்டத்துக்குரிய மூத்த மகன் என்பதும் தோன்ற 'முறை மகன்' என்றார். பயனைக் கொண்டுதான் சொல்லுக்குப் பொருள் காண வேண்டுமென்பது மரபு. 'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' (குறள்—292) என்றவிடத்து பொய் என்ற சொல் பொருளற்றுப் போகிறது. அதோடு எதிர்மறையாகவும் மாறிவிடுகிறது. பொருளின் வலி இருந்தாலன்றிச் சொல்லுக்கு வலியில்லை என்பது தெரிகிறது. இங்கே தயாரதன் சத்தியம் என்று பொருளற்ற ஒரு சொல்லைச் சொல்லிக் கொண்டிருக்கிறான். (ஆளை விட்டு நிழலைப் பிடித்துக் காப்பாற்ற நினைப்பதைப் போல) சத்தியத்தைக் கைவிட்டு, மொழியை விடாமல் கட்டிக் காக்கிறான் என்றவாறு. 'மொழியைக் காத்தல்' 'இறை மகன்' 'திருமனம்' இவைகள் கேலியின் பாற்பட்டன. இது காறும் தயாரதனைப் புகழாதவர் இல்லை. அவர்கள் இறை மகன் என்றும், சொல்லும் சொல்லைத் தவறாது காப்பவன் என்றும், சிறந்த மனமுடையவன் என்றும் கூறிப் புகழ்வர்.

இப்பொழுது அச்சொற்கள் கேலிக் கிலக்காகிவிட்டன என்றவாறு.

மாதரின் ஏக்கம்

672 மழைக்குலம் புரைகுழல்
விரிந்து மண் ணுறக்
குழைக்குல முகத்தியர்
குழாம்கொண்டு ஏங்கினர் ;
இழைக்குலம் சிதறிட
ஏ உண்டு ஓய்வுறும்
உழைக்குலம் உழைப்பன
ஒத்துஒர் பால்எலாம். கoடு

மேகக் கூட்டத்தை ஒத்த கூந்தல் விரிந்து மண்ணில் கிடக்க, சிறந்த குண்டலங்களை அணிந்த காதோடு கூடிய முகத்தினையுடைய மகளிர் அணிந்துள்ள நகைகள் சிதறிட, அம்பினால் அடிபட்டு உயிர்விடப் போகும் மான் கூட்டம் வருந்துவதைப்போல ஒருபுறம் முழுதும் கூட்டம் கூட்டமாகக் கிடந்து ஏக்கமுற்றனர்.

எங்கும் இழந்த நிலை

673 அட்டிலும் இழந்தன
புகை;அ கிற்புகை
நெட்டிலும் இழந்தன ;
நிறைந்த பால்கிளி
வட்டிலும் இழந்தன ;
மகளிர் வான்மணித்
தொட்டிலும் இழந்தன
மகவும் சோரவே. கoசு

672. புரை - ஒத்த. குழாம் - கூட்டம். இழை - நகை. ஏ - அம்பு. உழை - மான். உழைப்பன - வருந்துவன. பால்-பக்கம்.

673. அட்டில் - சமையல் செய்யுமிடம். வட்டில் - கிண்ணம். சோர - களைத்துக் கிடக்க.

அடுப்படிகள் புகையை இழந்துவிட்டன. நீண்ட மாடி வீடுகள் அகிற் புகையை இழந்தன. கிளிகளின் உணவுக் கிண்ணங்கள் பாலை இழந்தன. உயர்ந்த மணிகள் அழுத்தப் பட்ட பிள்ளைக் கட்டில்கள், பிள்ளைகள் சோர்ந்து கிடக்கும் படி மகளிரை இழந்தன.

(வி - ம்) இராமன் காட்டுக்குப் போகிறான் என்றதும் பெண்கள் மனங்கலங்கி ஓடினர்; துயரத்தில் மூழ்கிப் போயினராதலால் வீடு திரும்பவில்லை. ஆதலால் அடுப்பு மூட்ட ஆளில்லை. காலை மாலை போடும் அகிற்புகை போடுவா ரில்லை. கிளிக்குப் பால் வைப்பாருமில்லை. குழந்தையைத் தொட்டிலில் போட்டால் பெண்கள் அங்கேயே இருந்து ஆட்டிக் கொண்டிருப்பர். பிள்ளையை மறந்துவிட்டன ராதலின், பிள்ளை தானாகக் கிடந்து அழுது களைத்துச் சோர்ந்து கிடக்கிறது. இவ்வாறு வீடுகள் தேடுவாரற்றுக் கிடந்தன என்க.

எங்கும் அழுகை ஒலி

674 முழவுஎழும் ஒலிஇல;
முறையின் யாழ்நரம்பு
எழஎழும் ஒலிஇல;
இமைப்பில் கண்ணினர்
விழவுஎழும் ஒலிஇல;
வேறும் ஒன்றில
அழஎழும் ஒலிஅலது
அரச வீதியே. க0எ

அரச வீதிகளில் அழுகை ஒலியைத் தவிர மத்தள ஒலி இல்லை; முறையோடு கட்டப்பட்ட வீணையின் நரம்பிலிருந்து

674. முழவு - மத்தளம். இமைப்பில் கண்ணினர் - தேவதை கள். விழவு - திருவிழா.

எழும் ஒலி இல்லை ; தேவதைகளுக்கு எடுக்கப்படும் திரு விழாக்களில் ஏற்படும் ஆரவாரங்களும் இல்லை ; வேறு எந்த நல்ல ஒலியும் இல்லை.

(வி - ம்) மகிழ்ச்சிக்குரிய ஒலிகளே பயின்ற முக்கிய வீதிகள் எல்லாம் இன்று அழுகை யொலியே பயின்றன. 'வளையொலி வயிரொலி மகரவீணையின், கிளையொலி முழவொலி கின்னரத்தொலி, துளையொலி பல்லியம் துவைக் கும் சும்மையின், விளையொலி கடலொலி மெலிய விம்முமே' (பாடல் 34) என்ற பாடலோடு ஒப்பு நோக்குக. விழவு இல என்றதனால் அங்கே நாள்தோறும் தெய்வங்களை நோக்கி ஏதாவது விழா நடந்துகொண்டே இருக்குமென்று கொள்க. அரச வீதி என்பது அரசர் குடியிருக்கும் வீதியன்று ; அரண்மனையைச் சுற்றிலுமுள்ள பெரிய வீதியாம். வீதிகளுக் குள்ளே அரசன் போன்றதென விரியும். அங்கே இராமனை எதிர்நோக்கி மக்கள் கூடி நிற்கின்றனர்.

சீதையிருக்குமிடம் சென்றான்

675 *உயங்கி அந்நகர் உலைவுற,
ஒருங்குஉழை சுற்றம்
மயங்கி ஏங்கினர் வயின்வயின்
வரம்பிலர் தொடர,
இயங்கு பல்லுயிர்க்கு ஒருயிர்என
நின்ற இராமன்,
தயங்கு பூண்முலைச் சானகி
இருந்துழிச் சார்ந்தான். க0அ

---

675. உயங்கி - வருந்தி. உலைவுற - நிலைகலங்க. உழை - பக்கம். வயின் - இடம். வயின்வயின் - இடந்தொறும். வரம்பிலர் - கணக்கிலடங்காதவர். இயங்கு - உலவுகிற. தயங்கு - விளங்குகிற. பூண் - நகை. இருந்துழி - இருந்த உழி ; இருந்த இடம்.

இவ்வாறு தளர்ச்சியடைந்து அந்த நகரத்திலுள்ள மக்கள் நிலைதவறிக் கலங்கவும், (இராமனைக் கண்டவுடன்) ஒரே கூட்டமாக அவன் பக்கத்தில் வந்து சுற்றிக்கொள்ள வும், மயங்கி ஏக்கமுற்றவராக அங்கங்கேயுள்ள எண்ண முடியாதவர் வரிசையாகத் தொடர்ந்து வரவும், இயங்குகின்ற பல உயிர்க்கும் ஓர் உயிர் என நின்ற இராமன், விளங்கு கின்ற ஆபரணமணிந்த மார்பினையுடைய சீதை இருந்த அரண்மனையை அடைந்தான்.

(வி - ம்) நகரமக்கள் வருந்திக் கலங்கிக் கிடந்தனர். இராமன் வந்துகொண்டிருக்கிறான். அங்கங்கேயுள்ளவர் கூட்டமாக அவனைச் சூழ்ந்து கொள்கின்றனர். அவன் நகரும் போது தாங்களும் நகருகின்றனர். இப்படியாக வழி முழுமையும் கூடிச் சூழ்ந்து தொடர, சீதையிருக்குமிடத் துக்கு வந்தானென்றவாறு.

சீதையின் மனத் துணுக்கம்

676 அழுது தாயரோடு அருந்தவர்
  அந்தணர் அரசர்
புழுதி ஆடிய மெய்யினர்
  புடைவந்து பொரும,
பழுது சீரையின் உடையினன்
  வரும்படி பாரா
எழுது பாவைஅன் னுள்மனத்
  துணுக்கமொடு எழுந்தாள். கOசு

தாய்மாரும் அருந்தவரும் அந்தணரும் அரசர்களும் அழுதுகொண்டு புழுதி படிந்த உடம்பை உடையவராகப்

676. ஆடிய - படிந்த. புடை - பக்கம். பழுது - அரசர்க்குத் தகாத. பாரா - பார்த்து. பாவை - சித்திரத்தில் உள்ள உருவம். துணுக்கம் - நடுக்கம்.

பக்கத்திலே பொருமிக்கொண்டு வர, தகாத மரவுரியை யுடுத்தினவனாகத் தன் கணவன் வரும் விதத்தைப் பார்த்து, எழுதிய ஓவியம் போன்ற சீதை நடுக்கத்துடன் எழுந்தாள்.

அழிந்த சிந்தையள்

677 எழுந்த நங்கையை மாமியர்
தழுவினர் ஏந்தி;
பொழிந்த உண்கணீர்ப் புதுப்புனல்
ஆட்டினர் புலம்ப,
அழிந்த சிந்தையள் அன்னமஃது
இன்னதென்று அறியாள்
வழிந்த நீர்நெடுங் கண்ணினள்
வள்ளலை நோக்கி. கக0

அவ்வாறு எழுந்த சீதையை மாமியர் ஏந்தி அணைத்தனர். தங்கள் மையணிந்த கண்களிலிருந்து கொட்டுகிற நீராகிய புதுவெள்ளத்தில் குளிப்பாட்டினவராகி வாய்விட்டுப் புலம்ப, மனம் அழிந்தவளாகிய அன்னத்தை யொத்த சீதை இதற்குக் காரணம் இன்னதென்று அறியாதவளாய்க் கண்களில் நீண்டு நீர் வடிந்து கொண்டிருக்க வள்ளலாகிய இராமனை நோக்கி,

அரசனுக்கு அபாயமா?

678 *பொன்னை உற்ற
பொலன்கழ லோய்புகழ்
மன்னை உற்றதுஉண்
டோ?மற்றுஇவ் வன்துயர்

---

677. நங்கை - பெண்: சீதை. உண்கண் - மையிடப்பட்ட கண். வள்ளல் - இராமன்.

678. பொலம் - அழகு. மன் - மன்னன்.

என்னை உற்றது?
இயம்பென்று இயம்பினள்
மின்னை உற்ற
நடுக்குத்து மேனியாள். கககஅ

மின்னலைப் போல நடுங்குகின்ற உடலையுடைய சீதை, பொன்னாலாகிய அழகிய வீரக்கழலை அணிந்தவனே! புகழுக்குரிய மன்னனுக்கு உற்ற துன்பம் ஏதேனும் உண்டா? அல்லது இந்த வலிய துயரம் ஏற்பட்டதற்குக் காரணமென்ன சொல் என்று சொன்னாள்.

(வி-ம்) மாமியர் முதலிய யாவரும் பொருமியழுதலில் தயரதன்தான் இறந்துபோயிருக்கவேண்டுமென்று நினைக்கிறாள். இல்லாவிட்டால் இவ்வளவு துயரத்துக்கு இடமேற்படாதென்று தோன்றுகிறது. ஆனால் அவன் இறந்துபோனால் மாமியரும் இவ்வளவு கூட்டமும் மன்னனைச் சுற்றிக் கொண்டிராமல் ஏன் இங்கே வரவேண்டுமென்ற ஐயமும் ஏற்படுகிறது. ஒன்றும் விளங்காததால் வந்த ஆபத்தென்ன என்றாள்.

காட்டுக்குப் போகிறேன் நீ வருந்தாதே!

679 பொருவில் எம்பி
புவிபுரப் பான்;புகழ்
இருவர் ஆணையும்
ஏந்தினென்; இன்றுபோய்க்
கருவி மாமழைக்
கல்தடம் கண்டு,நான்
வருவென். ஈண்டு
வருந்தலை! நீஎன்றான். கககஉ

679. பொருவு இல் - ஒப்பற்ற. இருவர் - தந்தை தாயர். கருவி - காரணம். கல்தடம் - கல் நிறைந்த காடு. வருந்தலை - வருந்தாதே.

ஒப்பற்ற என் தம்பி உலகை ஆளுவான், புகழுக்குரிய இருவருடைய கட்டளையையும் தாங்கிக் கொண்டேன். இன்று போய், உலகுக்கு (இன்றியமையாத) துணைக் காரணமாக இருக்கிற பெரிய மேகஞ் சூழ்ந்த கல் அடர்ந்த காட்டைக் கண்டு நான் வந்து சேருகிறேன். இங்கே நீ (இரு) வருந்தாதே என்றான்.

செவியைச்சுட்ட தீயசொல்

680 நாய கன்வனம்
நண்ணல்உற் றான்என்றும்
மேய மண்இழந்
தான்என்றும் விம்மலள் ;
' நீய்வ ருந்தலை
நீங்குவென் யான்'என்ற
தீய வெஞ்சொல்
செவிசுடத் தேம்புவாள். கக௫

கணவன் காட்டுக்குச் செல்ல முற்பட்டானென்றும் வருந்தவில்லை. அரசிழந்தான் என்றும் வருந்தவில்லை. நீ வருந்தாதே நான் போகிறேன் என்று சொன்ன தீய கொடிய சொல் செவியிற் புகுந்து பொசுக்கத் தேம்பினாள்.

(வி - ம்) நான் காட்டுக்குப் போகிறேன். அதற்காக நீ வருத்தப்படாதே என்று சாதாரணமாகத்தான் சொன்னான். விலக்கமுடியாத நிலை என்பது குறிப்பு. சீதை அப்படி எடுத்துக்கொள்ளவில்லை. பிரிந்து போகிறேன் என்றாலே பிராணன் போகக்கூடியது. அதிலும் துன்பமான காட்டுக்குப் போகிறேன் என்கிறான். அதுவும் போதாதென்று வருத்தமும் படக்கூடாதாம். இதில் எது முடிகிற காரியம்?

---

680. நண்ணல் - பொருந்துதல். மேய - கிடைத்த.

இச் சொற்கள் அவளுடைய பச்சை உள்ளத்தைச் சுட்டுப் பொசுக்கிவிட்டன. தேம்பித்தேம்பி அழுதாள்.

பிரிந்திருப்பாளா ?

681 துறந்து போம்எனச்
சொற்றசொல் தேறுமோ ?
உறைந்த பாற்கடற்
சேக்கை உடன்ஒரீஇ
அறந்தி றம்பும்என்று
ஐயன்அ யோத்தியில்
பிறந்த பின்பும்
பிரிவிலள் ஆயினள். ககசு

அனுதியாகத் தாம் வசிக்குமிடமான பாற்கடலாகிய படுக்கையோடு (இருந்த உறவை) நீங்கி, தருமம் நிலைகெடுமே என்று கருதித் திருமால் அயோத்தியில் இராமனாகப் பிறந்த பிறகும், பிரியாமல் சீதையாகத் தோன்றியிருப்பவளாயினள். (அவ்வாறிருப்ப) 'தன்னைவிட்டு நீங்கிப் போவான்' என்று (தான் கருதும்படி) சொன்ன சொல்லைப் பொறுப்பாளா ?

(வி - ம்) உலகில் அறத்தை நிலைநாட்ட அயோத்தியில் இராமனாகத் திருமால் பிறந்தார். அவ்வாறே இலக்குமி மிதிலையில் சீதையாகி வளர்ந்தாள்' திருமணத்தில் ஒன்று சேர்ந்தனர். 'பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ' (பாடல்170) எனவரும். இது கவிக் கூற்று.

---

681. துறந்து - விட்டுப்பிரிந்து. சொற்ற - சொன்ன. உறைந்த - வசித்த. சேக்கை - படுக்கை. ஒரீஇ - நீங்கி. திறம்பும் - நிலைகெடும்.

என்னை இரு என்கிறனே !

682 அன்ன தன்மையள்,
ஐயனும் அன்னையும்
சொன்ன செய்யத்
துணிந்தது தூயதே!
என்னை என்னை
இருத்திஎன் றனஎனு
உன்ன உன்ன
உயிர்உமி மூா நின்றாள். ககடு

அத்தன்மையை யுடைய சீதை, 'தந்தையும் தாயும் சொன்னதைச் செய்ய உறுதிகொண்டது தூய்மையுடையதாகும்; என்னை இரு என்றான். அது எதற்காக' என்று நினைக்க நினைக்க உயிரைக் கக்குவதுபோலப் பெருமூச்சு விட்டாள்.

(வி - ம்) பெற்றோர் சொல்லியபடி செய்வதென்று முடிவு செய்தது மிகவும் சரி. என்னை இரு என்கிறானே என்று எண்ண எண்ண அழுகையும் பெருமூச்சும் வருகின்றன. விம்மலில் சொல்வரவில்லை என்பதை, என்னை—என்னை என்று இழுத்து இழுத்து வருதலைக் கொண்டு அறிக.

கல்லில் மிதிக்கும் காலல்ல

683 வல்அ ரக்கரின்
மால்வரை போய்விழுந்து
அல்அ ரக்கின்
உருக்குஅழல் காட்டுஅதர்க்

682. ஐயன் - தந்தை. உன்னுதல் - நினைத்தல். உமிழ்தல் - கக்குதல்.

683. மால் - பெரிய. அல் - இருட்டு. அரக்கின் - அரக்கை. அழல்-வெப்பம். காட்டு அதர்-காட்டுவழி. அரக்குதல் - அழுத்துதல்.

கல்அ ரக்கும்
கடுமைய அல்லநின்
சில்அ ரக்குண்ட
சேவடிப் போதுஎன்றான். கக௩

சூரிய வெப்பமானது, கொடிய அரக்கரைப்போற் காணப்படுகிற பெரிய மலையின்மேல் தாக்குவதால், இரவிலும் அரக்கை உருக்கினது போன்ற வெப்பமான காட்டு வழியிலுள்ள கற்களில், அழுத்தி நடக்கக்கூடிய வலிமையுடையனவல்ல, உன்னுடை மெல்லிய செம்பஞ்சுக் குழம் பூட்டிய சிவந்த அடிகளாகிய தாமரை மலர்கள் என்றான்.

(வி - ம்) சூரியவெப்பம் கடுமையாகக் கல் மலைகளில் தாக்குவதால் இரவில் அம்மலைகள் திரும்ப அதனைக் கக்குகின்றன. கடுங்கோடையில் கல்மலைக் கருகில் இரவில் புழுக்கம் தாங்கமுடியாமலிருப்பதுண்டு. இங்கே அந்த வெப்பத்தால் வழிப்பாதையிற் கிடக்கும் கல்லெல்லாம் இரவில் உருகி நிற்கும் என்றால், பகலில் உன்னுடைய மெல்லிய கால்களால் கொதிக்கிற, ஈட்டிமுனைபோன்ற கற்களால் ஏற்பட்ட வழியில் எவ்வாறு நடக்கமுடியும் என்றான் என்க.

பிரிவைவிடக் காடு கோதிக்குமா?

684 பரிவு இகந்த
மனத்தொடு பற்றிலாது
ஒருவு கின்றனை ;
ஊழி அருக்கனும்

---

683. கடுமைய - கடுமையை உடையன. சில் - மெல்லிய. அரக்கு - செம்பஞ்சுக் குழம்பு. சே அடி - சிவந்த அடி. போது - மலர்.

எரியும் என்பது
யாண்டையது ? ஈண்டுநின்
பிரிவி னும்சுடு
மோபெருங் காடுஎன்ருள். கள

இரக்கமற்ற மனத்தோடு விருப்பமில்லாது தள்ளுகின்றனை ; ஊழிக்காலத்துத் தோன்றும் சூரியனும் சுடுவான் என்பது (நின்பிரிவால் உண்டாகும் வெப்பத்துக்கு முன்பு) எத்தன்மையுடையது ? இங்கே உன்னுடைய பிரிவைவிடப் பெருங்காடு அதிகமாகச் சுட்டுவிடுமோ ? என்ருள்.

(வி - ம்) என்னிடத்து இரக்கமு மில்லாமல் பாசமு மில்லாமல் தள்ளிவிடப் பார்க்கிருய், நீ பிரிகிருய் என்ருல் அந்த வெப்பத்திலேயே நான் வெந்து இறந்துபோவேன். உலகின் அழிவு காலத்தில் வருகிற சூரிய வெப்பம் இதன் முன்பு நில்லாது என்ருல், காட்டிலுள்ள வெப்பம் எம்மாத்திரம் என்ருள். இராமன் காட்டிலுள்ள வெப்பத்தைச் சிறிது மிகைப்படுத்தித்தான் கூறினன். சீதையின் உள்ளம் தன்னலத்தைக் காட்டிலும் இராமனின் நலத்தை நோக்குமென்பதை நினைக்கவில்லை. இராமனுடைய அடிகள் செந்தாமரைப் பூப்போன்றவை. அவை எப்படி அந்தக் காட்டுவழியில் நடக்கப்போகின்றன. அவற்றுடன் நம்முடைய கால்களும் நடக்கும் என்ற நம்பிக்கை அவளை யறியாமலேயே உள்மனத்தில் தோன்றிவிட்டது. அதனுலேதான் ‘ஒருவுகின்றனை’ என்ருள். என்ன ஆனுலும் ஆகட்டும் என்று உத்தரங் கூறினள்.

684. பரிவு - இரக்கம். பற்று - பாசம். ஒருவுதல்-கடத்தல். ஊழி - உலகின் அழிவு காலம். அருக்கன் - சூரியன். எரியும் - கொதிக்கும். யாண்டையது - எத்தன்மையது.

என்ன செய்வது ?

685 அண்ணல் அன்னசொல்
　　கேட்டனன் ; அன்றியும்,
உள்நி வந்த
　　கருத்தும் உணர்ந்தனன் ;
கண்ணின் நீர்க்கடற்
　　கைவிட நேர்கிலன் ;
எண்ணு கின்றனன்
　　என்செயற் பாற்றென. கக அ

இராமன் அவ்வாறான சொற்களைக் கேட்டான் ; கேட்டதோடல்லாமல் அவள் மனத்தில் எழுந்த கருத்தையும் உணர்ந்தான் ; கண்ணீர்க்கடலில் அவளைக் கைவிட்டுச் செல்லவும் ஒருப்படவில்லை. என்ன செய்யலாம் என்று ஆலோசித்தான்.

(வி - ம்) அழைத்துச் சென்றால் துன்பப்படுவாள் ; மனையின்பமற்ற தவம் செய்யும்படி தாயின் கட்டளை. இவளை இங்கேவிட்டுச் சென்றால் பிழைக்கமாட்டாள். என்ன செய்யலாமென்று சற்றே தயங்கினான். (தயங்குகிறான் என்பதைத் தெரிந்துகொண்டாள்.)

மரவுரி தரித்தாள்

686 அனைய வேலை
　　அகமனை எய்தினள் ;
புனையும் சீரம்
　　துணிந்து புனைந்தனள் ;

---

685. நிவந்த - மேல் எழுந்த. நேர்கிலன் - சமாதானப்படவில்லை. பாற்று - பாலது.

686. சீரம் - மரவுரி. நினையும் - ஆலோசித்துக்கொண்டிருக்கிற. அயல்-பக்கத்தில். பனையின்-மெருகேற்றிய பனைமரம்போன்ற.

நினையும் வள்ளல்பின்
வந்துஅயல் நின்றனள் ;
பனையின் நீள்கரம்
பற்றிய கையினள். கககூ

அப்பொழுது உள்வீட்டினுள் சென்றனள். இராமன் உடுத்தியிருப்பதைப்போலத் தானும் மரிவுரியைத் துணிச்சலோடு உடுத்திக்கொண்டாள். தயங்கி யோசித்துக்கொண்டிருக்கிற இராமனுக்குப் பின்புறமாக வந்து பக்கத்தில், பனையைப்போல நீண்ட அவனுடை கையைப் பிடித்துக் கொண்டவளாக நின்றாள்.

(வி - ம்) இருவரும் தவசிகளாகச் செல்ல இருக்கின்றனர். தான் இல்லறமகளாக இவர்களுடன் செல்லல்தகாது என்று கருதினள். தனது இளமையும் பெண்மையும் தவத்துக்கு உகந்ததா என்பதைக் கருதவில்லை. தவசிகளாகச் சென்றால் தவத்தியாகச் செல்வது பொருந்தும் என்று கருதி, இராமன் தயங்கியதைத் தனக்கு அனுகூலமாகக் கொண்டு ஆயத்தமாக வந்து கையைப் பிடித்துக்கொண்டாள். ‘ யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே ’ என்ற கருத்து நோக்கத் தக்கது. (திருவாச - பிடித்தபத்து 9). இளவயதில் அழகிய மென்மையான பெண், வாழ்வை நீங்கித் தவம் மேற்கொள்ளல் கடுமையான செயல் என்பதை, ‘ சீரம் துணிந்து புனைந்தனள் ’ என்று குறிப்பிட்டார் என்க. வயிரம் பாய்ந்த வலிய பனைமரத்தின் அடிப் பகுதியைச் செதுக்கி இழைத்து மெருகேற்றினால் கருமை நிறமும் வழுவழுப்பும் உறுதியும் கொண்டு விளங்கும். அதுவே கைக்கு உவமை கூறப்பட்டது.

சீதையைக் கண்டு துயரப்படுதல்

687　ஏழை தன்செயல்
　　கண்டவர் யாவரும்,
வீழும் மண்ணிடை
　　வீழ்ந்தனர் ; வீந்திலர் ;
வாழும் நாள்உள
　　என்றபின் மாள்வரோ !
ஊழி பேரினும்
　　உய்குநர் உய்வரே.　　கஉ0

சீதையின் செயலைக் கண்டவராகிய யாவரும் (கடைசியாக இறந்து) விழுகிற மண்ணில் விழுந்தனர். ஆனால் ஒருவரும் செத்தாரில்லை. வாழும் நாள் இன்னும் மிஞ்சி யிருக்கிறது என்றால் சாவார்களா ? ஊழிக்காலம் வந்து உலகம் நிலைபெயர்ந்தாலும் பிழைத்திருப்பவர் பிழைத்துத்தான் இருப்பார்கள் !

(வி - ம்) சீதை அணிகளை நீக்கிவிட்டுப் பொன்னுடைக்கு மாற்றாக மரவுரி அணிந்து ஏழைக் கோலத்தில் நின்றாளாதலால் 'ஏழை' என்றார். இந்தக் கோலத்தைக் கண்டு ஆற்றாமல் தான் எல்லோரும் மயக்கம்போட்டு விழுந்தனர். செத்திருக்க வேண்டும். சாகவில்லை. ஏன் சாகவில்லை என்றால் விதி இன்னும் அவர்களை வைத்திருப்பதனால் என்க.

இராமன் சீதைக்குச் சொல்கிறான்

688　தாயர் தவ்வையர்
　　தன்துணைச் சேடியர்
ஆயம் மன்னிய
　　அன்பினர் என்றிவர்

687. வீழும் - விழுகின்ற. வீதல் - சாதல். மாள்வரோ - சாவாரோ ? உய்குநர் - உயிருடனிருப்பவர்.

தீயின் மூழ்கினர்
ஒத்தனர் ; செங்கணான்
தூய தையலை
நோக்கினன் சொல்லுவான். கஉக

மன்னனின் மனைவியர், தமக்கை என்று சொல்லக் கூடியவர், தனக்குத் துணையாகவுள்ள சேடிமார், கூட்டாளி களாகப் பொருந்திய அன்புக்குரியவர் என்ற பலரும் தீயிலே விழுந்தவரைப் போல வருந்தித் துடித்தனர். சிவந்த கண்ணை யுடைய இராமன், குற்றமற்ற சீதையை நோக்கினவனாகச் சொல்லுகிறான்.

எல்லையில்லாத துன்பம்

689 முல்லை யும்கடல்.
முத்தும் எதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை
யாய் !விளைவு உன் னுவாய்
அல்லை ; போத
அமைந்தனை ; ஆதலின்
எல்லை அற்ற
இடர்தரு வாய்என்றான். கஉஉ

முல்லை அரும்பும், கடலில் குளித்தெடுக்கும் முத்தும் (சேர்ந்து) எதிர்த்தாலும் வெல்லக்கூடிய வெண்மையான பற்களையுடைய சீதாய்! வரப்போவதை நினைத்துப் பார்க்க மாட்டேன் என்கிறாய். உடன்வர முடிவு செய்துவிட்டாய்.

---

688. தாயர் - தாய்போலக் கருதப்படும் அரசனின் தேவிமார். தவ்வை - அக்காள். சேடியர் - தோழியர். ஆயம் - மகளிர் கூடுமிடம். மன்னிய - பொருந்திய. நோக்கினன் - நோக்கினவனாகி.

689. முல்லை - முல்லைமொட்டு. நகை - பல். உன்னுதல் - நினைத்தல். போத - (உடன்) வர. அமைதல் - முடிவு செய்தல். எல்லை - முடிவு. இடர் - துன்பம்.

ஆதலால் முடிவில்லாத துன்பத்தை உண்டாக்கப் போகிறுய் என்றுன்.

சீதையின் சீற்றம்

690 கொற்ற வன்அது
கூறலும், கோகிலம்
செற்ற தன்ன
குதலையள் சிறுவாள் ;
உற்று நின்ற
துயரம்இது ஒன்றுமே !
எற்று றந்தபின்
இன்பம்கொ லாம்என்றுள். கஉ௬

இராமன் அவ்வாறு கூறினவுடன் குயிலின் குரலை வென்றதை யொத்த மழலைச் சொல்லை யுடையவளாகிய சீதை சீற்றமுடையவளாகி, உம்மை வந்து பொருந்தியிருக்கிற துயரம் இது ஒன்றுதான்போலும் ; என்னை விட்டு நீங்கின பின் எல்லாம் இன்பந்தான்போலும் என்றுள்.

(வி - ம்) உமக்கேற்பட்ட துயரமெல்லாம் என்னுல் தான். என்னை ஒழித்துவிட்டால் பிறகு எல்லாம் இன்பந் தான்போலும் என்று சீறினுள்.

இராமன் பேசவில்லை

691 பிறிதொர் மாற்றம்
பெருந்தகை பேசலன் ;
மறுகி வீழ்ந்துஅழும்
மைந்தரும் மாதரும்

690. கொற்றவன் - அரசன். கோகிலம் - குயில். செற்ற - வென்ற. குதலை - மழலை. எற்றுறந்த - என்னைத்துறந்த.

691. பிறிது - வேறு. மாற்றம் - சொல். செறு - நெருக்கம். (‘ செறுத்த செய்யுட்செய் செங்நா ’—புறநா. 53)

செறுவில் வீழ்ந்த
நெடுந்தெருச் சென்றனன் ;
நெறி பெருமை
அரிதினில் நீங்குவான். கஉச

பெருமைக் குணத்தையுடைய இராமன் மறுவார்த்தை சொல்லவில்லை ; துன்பப்பட்டு விழுந்து அழுகின்ற ஆடவரும் பெண்டிரும் நெருக்கமாக விழுந்துகிடக்கிற நீண்ட தெருவில் சென்றவனுய் வழிகிடைக்காமல் முயற்சியோடு கடந்தான்.

(வி - ம்) இராமனின் பிரிவைத் தாங்காத மக்கள் அழுதுகொண்டு தெருவெல்லாம் கிடந்தனர். பிரிவைச் சகிக்க முடியாமல் இவர்கள் வழி மறித்துக்கிடந்தார்கள் எனினுமாம். கிடப்பவரையும், சூழ்ந்து நிற்பவரையுங் கடந்து செல்வதே பெரிய பாடாகிவிட்டது என்றவாறு. இராமன் கோசலையிடம் சென்றபோது அவளும் வருந்தித் துடித்தாள் ; உடன் வருவதாகச் சொன்னுள் ; இணங்காமல் மறுத்துத் தக்க மறுமொழி கூறித் தடுத்து விட்டான். (பாடல் 586) வசிட்டர் காட்டுக்குச் செல்லவேண்டாமென்று தடுத்தார் ; அவருக்குச் சரியான மறுப்புரைத்துக் கடத்திவிட்டான் (பாடல் 661). இங்கே சீதைக்கு மறுமொழி கூறமுடியாமல் வாய்மூடினுன் என்பதை, ‘ பிறிதொரு மாற்றம் பெருந்தகை பேசலன் ’ என்ருர்.

மூவரும் சென்றனர்

692 சீரை சுற்றித்
திருமகள் பின்செல,
மூரி வில்கை
இளையவன் முன்செலக்,

692. மூரி - வலிமை. காரை - மேகத்தை.

காரை ஒத்தவன்
போம்படி கண்டஅவ்
ஊரை உற்றது
உணர்த்தவும் ஒண்ணுமோ. கஉரு

மரவுரியை உடுத்துச் சீதை பின்னாலே செல்ல, வலிய வில்லைக் கையில்கொண்ட இலக்குவன் முன்னாலே செல்ல, மேக நிறத்தை ஒத்தவனாகிய இராமன் போகும் விதத்தைக் கண்ட, அவ்வூரடைந்த நிலைமையை உணரும்படி செய்யவும் முடியுமா ?

(வி - ம்) அந்த நகரில் உள்ள மக்கள் பட்ட துயரத்தைச் சொல்லால் உணர்த்தவா முடியும்? என்றதால், துன்பத் தையோ, இன்பத்தையோ, கசப்பையோ, இனிப்பையோ ஒருவர் ஒருவர்க்குச் சொல்லி உணர்த்த முற்படுவது ஓரளவு தான் முடியும் என்பதும், தமக்குத்தாமே அனுபவித்து உணர்வதே முடியக் கூடியது என்பதுமாம்.

அழுகை நின்றது, பயணமாயினர்

693 ஆரும் பின்னர்
அழுதுஅ வலித்திலர் ;
சோரும் சிந்தையர்
யாவரும் சூழ்ந்தனர் ;
வீரன் முன்வனம்
மேவுதும் யாம்எனப்
போர்என்று ஓஃலொலி
கைம்மிகப் போயினர். கஉசு

---

693. அவலித்தல் - வருந்துதல். மேவுதும் - செல்கிறோம். கைமிகுதல் - அதிகரித்தல்.

இவர்கள் புறப்பட்டபின்னர் யாரும் அழுது வருந்தவில்லை. சோர்ந்துபோன மனத்தையுடைய எல்லாரும் கூடினர். வீரனாகிய இராமனுக்கு முன்பு, காட்டிற்கு யாங்கள் போகிறோம் என்று கூறி, போர் என்ற முடிவான ஒலியானது மிகுதிப்படுமாறு போயினர்.

(வி - ம்) 'போர்' என்பது ஒலிக்குறிப்பென்பர். இந்த ஒலிக்குப் பிறகு அழுகை ஒலி முதலியன நின்றுவிட்டன. எல்லாரும் காட்டிற்குச் செல்வது என்ற ஒரே முடிவுக்கு வந்துவிட்டதால் நிலைமை தெளிவாயிற்றென்க.

மன்னனுக்கு ஆறுதல் கூறுக

694 தாதை வாயில்
குறுகினன் சார்தலும்,
கோதை வேலவன்
தாயரைக் கும்பிடா,
'ஆதி மன்னனை
ஆற்றுமின் நீர்'என்றான் ;
மாத ராரும்
விழுந்து மயங்கினர். கௌஎ

பூமாலைபணிந்த வேலையுடைய இராமன், தந்தையின் அரண்மனை வாயிலை நெருங்கினான். சேர்ந்தவுடன் தாய்மார்களைக் கும்பிட்டு, நீங்கள் சக்கரவர்த்தியைத் தேறுதலடையச் செய்யுங்கள், என்றான். அம்மாதர்கள் விழுந்து தளர்ந்தனர்.

---

694. குறுகுதல் - நெருங்குதல். கோதை - பூமாலை. ஆதி மன்னன் - மன்னருள் முதல்வன் : தயாதன். ஆற்றுதல் - தேறுதலடையச் செய்தல்.

கடவுளே! இவர்களைக் காப்பாற்றுக

695 வாழ்த்தி னார்தம்
மகனை ; மருகியை
ஏத்தி னார்;இளை
யோனை வழுத்தினார் ;
காத்து நல்குமின்
தெய்வதங் காள்என்றார் ;
நாத்த ழும்ப
அரற்றி நடுங்குவார். கஉஅ

(விழுந்து மயங்கிய தாய்மார்) தம் மகனை வாழ்த்தினர் ; மருமகளைப் புகழ்ந்தார்கள் ; இலக்குவனைத் துதித்தார்கள். தெய்வங்காள்! இவர்களைக் காத்து அருளுங்கள் என்றார்கள். நாத் தழும்பேறும்படி புலம்பி உடல் நடுங்கினர்.

(வி - ம்) மூவரும் வணங்க, இராமனை வாழ்த்தினர். சீதையின் உயர்ந்த குணத்தை எண்ணிப் புகழ்ந்தார்கள். இலக்குவனின் தொண்டினைக் கண்டு துதித்தார்கள். விழுந்து மயங்கிய அவர்கள், வாழ்த்தி விடை கொடுத்து மறுபடியும் புலம்பி நடுங்கினர். எத்தனை துயரத்திலும் கும்பிட்டவரைத் தெளிவாக வாழ்த்துதல் இயல்பு. துயரம் பிடித்தாட்டும் போதும், துயரத்துக்குக் காரணமாகப் பிரியும் அவர்களை நிமிர்ந்து நின்று வாழ்த்திவிட்டு, மீட்டும் துயரத்தில் தொடர்ந்து மூழ்கினர் என்றவாறு. தழும் பேறுதலாவது புலம்பப் புலம்ப, அப்புலப்பம் தன்னையறியாமலே நாவிற்குப் பழக்கமாகிவிடுவது. அப்பால் வாயைத் திறந்தால் புலப்பமே வெளிப்படுமென்க.

---

695. ஏத்துதல் - புகழ்தல். வழுத்துதல் - துதித்தல். தெய்வதம் - தெய்வம். தழும்ப - தழும்பேற. அரற்றுதல் - பொருள் குறியாத சொற்களை மன உணர்ச்சி வயமாகக் கூறிக்கொண்டிருத்தல்.

மூவரும் தேரில் ஏறினர்

696 அன்ன தாயர்
 அரிதில் பிரிந்தபின்,
முன்னர் நின்ற
 முனிவனைக் கைதொழா,
தன்னது ஆருயிர்த்
 தம்பியும் தாமரைப்
பொன்னும் தானும்ஓர்
 தேர்மிசைப் போயினான். கஉகூ

அவ்வாறு துயரப்பட்ட தாய்மார் பிரியமுடியாதவராகப் பிரிந்த பின்பு, முன்புநின்ற வசிட்டரைத் தொழுது தன்னுடைய அரிய உயிர்போன்ற தம்பியாகிய இலக்குவனும், தாமரை மலரிலிருக்கிற இலக்குமியான சீதையும், தானும் ஓர் தேரின்மேல் சென்றான்.

(வி - ம்) தம்பி, உயிரோடு ஒட்டியவன்; சீதை, தன்னோடு இரண்டறக் கலந்தவள் என்பது இலக்குமி என்றதனால் பெறப்படும். மூவரும் ஒருவரே யாயினர். மாறுபடாத ஒரே தன்மையான மூவர் என்பது தோன்ற வினைமுற்றை 'போயினான்' என்று ஒருமையிற் கூறினார். கைகேயி இராமனை மட்டுந்தான் வனத்துக்குப் போய்வரச் சொன்னாள். மூன்று ஒன்றாக இருக்கும்போது ஒன்று தனித்துப் போகுமா? என்றாலும் தாயின் சொல்லைக் காக்கும் இராமன் போயினான் என்றே கவி கூறினார். துணை சேர்த்துக்கொண்டு செல்லலாமா என்றால் அவனுடைய உறுப்பாகவே இருந்தாராதலின் இருவரும் பிரிந்து நின்றாரல்லர். இனி, கைகேயி இராமனை

---

696. ஆர்உயிர் - பொருந்திய உயிர். தாமரைப்பொன் - தாமரைமலரில் இருக்கும் இலக்குமி.

மட்டும் வனத்துக்குப் போகச் சொன்னாளாயினும் உடன் யாரும் செல்லக்கூடாதென்று கூறினாளில்லை! முனிவருடன், சேர்ந்து வசித்தலாகாதென்றும் கூறவில்லை என்பது நோக்கத் தக்கது.

---

5. தைலம் ஆட்டு படலம்

[பரதன் வரும்வரை தயரத மன்னனின் உடலைப் பழுது படாமலிருக்கும் பொருட்டு, எண்ணெயிட்டு வைத்த செய்தியைக் கூறும் படலம். தைலம்-பிற சரக்குகளுடன் சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய். ஆட்டுதல் - தோய்த்தல்]

ஓவியம் தவிர யாவரும் தொடர்ந்தனர்

697　ஏவிய குரிசில்பின்
　　யாவர் ஏகிலார்!
மாஇயல் தானைஅம்
　　மன்னை நீங்கலாத்
தேவியர் தவிர்ந்தனர்;
　　தெய்வ மாநகர்
ஓவியம் ஒழிந்தன
　　உயிரிலா மையால்.　　க

ஏவப்பட்ட இராமனைப் பின்தொடர்ந்து செல்லாதவர் யாவர்? (எல்லோரும் சென்றனர் ஆனால்) பெருமை பொருந்திய சேனையை யுடைய அந்தத் தயரத மன்னனை விட்டு நீங்க முடியாத அவனுடைய மனைவியர் செல்லவில்லை. தெய்வத்

---

697. ஏவிய-ஏவப்பட்ட. குரிசில் - பெருமையிற் சிறந்தோன். மா - பெருமை. மன்னை - மன்னனை.

தன்மை பொருந்திய பெரிய நகரத்திலுள்ள ஓவியங்கள் தமக்கு உயிரில்லாதபடியால் செல்வதினின்றும் நீங்கின.

(வி - ம்) கைகேயி ஏவச் சென்றவன் இராமன் ; யாரும் ஏவாமலே தாங்களாகக் கரைகடந்த அன்பினாலே சென்றவர் மக்கள். எனவே 'ஏவிய குரிசில்' என்றும் 'யாவர் ஏகிலார்' என்றும் கூறப்பட்டன. உடன் சென்றவர் தொகைப் பெருக்கில் யார் சென்றாரென்று கூறுதல் இயலாமையால் செல்லாது நின்றவரைக் குறிப்பிட்டார். மன்னன் குறையுயிரனாகக் கிடப்பதால் அவனை நீங்க முடியாத மனைவியர் முதலியோர் தங்கவேண்டியவராயினர். உயிரிருந்தால் எழுதிய சித்திரங்களும் சிற்பங்களும்கூடச் சென்றிருக்கும். கைகேயி அரசன் மனைவியரில் அடங்கிப்போனாள். கூனி ஓவியத்திலடங்கினாள் போலும். உயிரிருந்து பயனென்ன? உலகமே திரண்டிருக்கும்போது வெளியே தலைகாட்ட முடியாது பிணம்போல வீட்டினுள்ளே கிடந்தாளென்க.

இந்தக் கொடுமையைப் பாரேன்

698 மீன்புகழ் பெற, வெயில்
ஒதுங்க, மேதியோடு
ஆன்புகக் கதிரவன்
அத்தம் புக்கனன் ;
கான்புகக் காண்கிலேன்
என்று கல்அதர்
தான்புக முடுகினன்
என்னும் தன்மையான். உ

---

698. மீன் - நட்சத்திரங்கள். மேதி - எருமை. ஆன் - பசு. அத்தம் - அத்தமனமலை : (மாலையில் சூரியன் அம்மலைக்கு அப்பாற் சென்று மறைவான்) முடுகுதல் - விரைதல்.

இராமன் காட்டில் புகுவதைக் காணச் சகியேன் என்று கல் நிறைந்த வழியில் தான் புகுவதற்கு விரைந்து சென்றான் என்னும் தன்மையை யுடையவனாக, வானத்து மீன்கள் புகழ் (விளக்கம்) பெறவும், வெய்யில் நீங்கவும், எருமைகளுடனே பசுக்கள் நகரில் புகவும் சூரியன் மேற்கு மலையின் அப்பால் சென்றான்.

(வி - ம்) மிக்க புகழுடையவர் மறைந்தால் சாதாரண மானவரின் புகழ் விளங்கி நிற்கும் என்ற உண்மை விண் மீனில் வைத்துக் காட்டப்படுகிறது. சூரியன் தன் குலமகன் கல்லில் கால் வைப்பதைப் பொறாது அதற்கு முன்பாக நான் கல்லிற்கப்பால் செல்வேன் என்று பதறியடித்துக்கொண்டு ஓட முற்பட்டான் என்பதை 'கான் புகக் காண்கிலேன் என்று கல் அதர் தான் புக முடுகினன்' என்றார். காலையில் கோபத்தோடு தோன்றிய சூரியன் (பாடல் 539) நடந்துள்ள கொடுமைக்கு ஆற்றாது மறைந்தான் என்பது நோக்கத்தக்கது.

கைகேயி மனத்தைப்போல் இருள்சூழ்ந்தது

699 அந்தியில் வெயில்ஒளி
அழிய, வானகம்
நந்தலில் கைகயன்
பயந்த நங்கைதன்
மந்தரை உரையெனும்
கடுவின் மட்கிய
சிந்தையின் இருண்டது
செம்மை நீங்கியே. ௩

---

699. நந்தல் - கெடுதல். மந்தரை - கூனி. கடு - விடம். மட்குதல் - நல்ல பொருள் கெட்டு மண்ணாகப்போதல். செம்மை - நேர்மை, செவ்வானம் (சிலேடை)

மாலைப் பொழுதில் வெயிலின் ஒளி நீங்கியதனால், கூனி யின் சொல் என்னும் நஞ்சினால் பட்டுப்போன, கெடுதலில் லாத கேகயமன்னன் பெற்ற கைகேயியின் மனத்தைப்போலச் செம்மை நீங்கி வானம் இருண்டது.

(வி - ம்) கேகயன் எவ்வளவோ நல்லவன்; அவன்மகளும் மிக்கநல்லவளாகத்தானிருந்தாள். கூனியென்ற கொடும் பாம்பு கடித்தது. அந்த விடத்தினால் மனம் இருளடைந்தது. அந்த இருட்டைப்போல (இப்போது) இருட்டுவந்து சூழ்ந்து கொண்டது. நகரில் வெளிச்சத்தில் மகிழ்ச்சியோடிருந்த மக்கள் காட்டில் இருட்டில் துன்பத்தில் தவிக்கின்றனர் என்றபடி.

சோலையில் தங்குதல்

700 திருநகர்க்கு ஓசனை
இரண்டு சென்றுஒரு
விரைசெறி சோலையை
விரைவின் எய்தினான்;
இரதம்நின்று இழிந்தபின்
இராமன் இன்துணை
உரைசெறி முனிவரோடு
உறையும் காலையே. ௬

இராமன் அயோத்தியிலிருந்து இரண்டுயோசனை தூரம் விரைவாகச் சென்று மணம்மிக்க ஒரு சோலையை அடைந் தான். இரதத்திலிருந்து இறங்கியபின்பு இனிய துணையாக

---

700. ஓசனை - யோசனை. விரை - மணம். இழிதல் - இறங்கு தல். உரை செறி-செறி உரை : நிறை மொழி. உறைதல்-இருத்தல்-

வந்த அறிவு நிறைந்து உரையாடும் முனிவரோடு தங்கியிருக்கும்போது,

(வி - ம்) பொருள் ஆழமுள்ள பயனுள்ள பேச்சைப் பேசுகிற முனிவருடன் இருந்தான் இராமன். வீண் பேச்சிற் காலம் போக்காதவனுதலால் அறிவும் அதன் வழிப்பட்ட பேச்சுமுடைய முனிவருடன் பேசிக்கொண்டிருந்தான் என்பார் 'உரைசெறி முனிவரோடு' என்றார்.

மக்கள் சூழ்ந்து நின்றனர்

701 வட்டமோர் ஓசனை
 வளைவிற் றாய், நடு
எட்டனை இடவும்ஓர்
 இடம்இ லாவகைப்
புட்டகு சோலையின்
 புறத்துப் போர்த்தென
விட்டது குசிலை
 விடாத சேனையே. ரு

இராமனை விடாமல் தொடர்ந்து வந்த மக்கள் கூட்டம் ஒரு யோசனைச் சுற்றளவுக்கு வட்டமாக நடுவில் எள் விழுதற்கும் இடமில்லாத வகையில், பறவைகள் விளங்குகிற சோலையைச் சுற்றிப் போர்வை போர்த்தின மாதிரி தங்கியிருந்தது.

---

701. எட்டனை - எள்தனை. புட்டகு - புள் தகு. புள் - பறவைகள். தகு - விளங்குகிற. புறத்து - வெளியிடத்தில்: சுற்றிலும். விட்டது - தங்கியது (நடத்தலைவிட்டது) சேனை - மக்கள் கூட்டம்.

மக்களின் துயரம்

702 குயின்றிய குலமணி
நதியின் கூலத்தில்,
பயின்றுயர் வாலுகப்
பரப்பில், பைம்புலில்,
வயின்தொறும் வைகினர்;
ஒன்றும் வாய்மடுத்து
அயின்றிலர்; துயின்றிலர்;
அழுது விம்மினர். சு

உயர்ந்த மணிகள் பதிந்துகிடக்கிற நதிக்கரையிலும், திரண்டு உயர்ந்துள்ள மணற்பரப்பிலும், அழகிய புல் தரையிலும் (மற்றுமுள்ள) இடங்கள்தோறும் தங்கினர்கள். ஒன்றையும் வாயிற்கொண்டு உண்டாரல்லர்; (நெடுநேரம் வரை) தூங்கவுமில்லை; அழுதழுது விம்மினர்.

மண்தரையில் மாதர் துயிலல்

703 *வாவிவிரி தாமரையின்
மாமலரின் வாசக்
காவிவிரி நாண்மலர்
முகிழ்த்தனைய கண்ணார்,
ஆவிவிரி பால்நுரையின்
ஆடைஅணை யாக,
நாவிவிரி கூழைஇள
நவ்வியர் துயின்றார். எ

---

702. குயின்றிய - பதிந்துள்ள. குலம் - உயர்ந்த. கூலம் - கரை. வாலுகம் - மணல். வயின் - இடம். வைகுதல் - தங்குதல். மடுத்தல் - சேர்த்தல். அயின்றிலர் - உண்டிலர்.

703. வாவி - குளம். காவி - குவளை : நீலோற்பலம். முகிழ்த்தல் - மலர்தல். நாவி - கத்தூரி. கூழை - கூந்தல். நவ்வி - மான்.

குளங்களில் மலர்ந்திருக்கிற தாமரையின் பெரிய மலரில் (முகத்தில்) மணமுள்ள கருங்குவளையின் அன்றலர்ந்த மலர் மலர்ந்திருப்பதை ஒத்த கண்களை யுடையவரும், ஆவி யெழுகின்ற பாலினது நுரையைப் போன்ற (மெல்லிய) ஆடைகளை அணையாகக்கொண்டு கத்தூரி மணம் வீசுகின்ற கூந்தலினையுடைய இளம் வயதினருமான மான்போன்ற பெண்கள் தூங்கினர்.

(வி - ம்) முகமாகிய தாமரைப் பூவின்மேல் கண்க ளாகிய நீல மலர்கள் மலர்ந்திருந்தன. 'முண்டகத்தின் மீது முழு நீலம் பூத்ததுண்டு' என்றார் பிறரும். (தனிப்பாடல்) சூடான பாலைச் சூடாற்றும்போது உண்டாகும் நுரை, ஆடையின் நிறத்துக்கும் மென்மைக்கும் உவமை. அணிந் திருக்கிற சேலையே படுக்கையாகத் தூங்கினர். தூங்க வேண்டுமென்று யாரும் நினைக்கவில்லை. நேரம் ஆக ஆகத் தலைசுற்றி இருந்தபடியே சாய்கின்றனர் என்றவாறு.

இதுவும் அது

704 சம்பக நறும்பொழில்
களில்தருண வஞ்சிக்
கொம்பழகு ஒசிந்தன
எனச்சிலர் குழைந்தார்;
வம்பளவு கொங்கையொடு
வாலுகம் வளர்க்கும்,
அம்பவள வல்லிகள்
எனச்சிலர் அயர்ந்தார்.

அ

704. பொழில் - சோலை. தருணம் - இளமை. ஒசிந்தன - சாய்ந்தன. வம்பு - கச்சு. வாலுகம் - மணற்குன்று.

சம்பக மரம் நிறைந்த நல்ல மணமுள்ள சோலைகளில், இளம் வஞ்சிக் கொடிகள் இயற்கை அழகோடு வாடிச் சாய்ந்து கிடந்தாற்போலச் சிலர் துவண்டு கிடந்தனர். கச்சணிந்த தனங்களோடு மணல்மேடுகள் வளர்க்கும் அழகிய பவளக்கொடிகள் என்று சொல்லும்படி சிலர் மெய்மறந்து கிடந்தனர்.

இராமன் சுமந்திரனிடம் கூறல்

705 ஏனையரும் இன்னணம்
 உறங்கினர் ; உறங்கா
மானவனும் மந்திரிசு
 மந்திரனை வாவென்று
ஊனமில் பெருங்குணம்
 ஒருங்குடைய உன்னால்
மேனிகழ்வது உண்டுஅஉரை
 கேள்என விளம்பும். கூ

மற்றவரும் (வழிநடந்த களைப்பினால்) இவ்வாறு உறங்கினர்; உறங்காது விழித்திருந்த இராமன், மந்திரியாகிய சுமந்திரனை வா என்று அழைத்து, குற்றமற்ற சிறந்த குணங்களை ஒருசேரக் கொண்ட உன்னால் மேலே ஆக வேண்டுவது உண்டு; அவ்வுரையைக் கேட்பாயாக என்று கூறலானான்.

(வி - ம்) சுமந்திரன் மந்திரி சபையின் தலைவன். முதன் மந்திரி. ஆனால் அவனே அரசனுக்குத் தேரோட்டுபவனாகவும் அமைந்தவன்.

---

705. இன்னணம் - இவ்வாறு. மானவன் - பெருமையுடையவன்: இராமன். ஊனம் - குற்றம்.

தேரை ஓட்டிக்கொண்டு செல்லும்படி சொல்லல்

706 *பூண்டபேர் அன்பினுரைப் போக்குவது
அரிது ; போக்காது
ஈண்டுநின்று ஏகல்பொல்லாது ; எந்தை நீ !
இரதம் இன்னே
தூண்டினை மீள,நோக்கிச் சுவட்டை ஓர்ந்து
என்னை அங்கே
மீண்டனன் என்னமீள்வர் ; இதுநின்னை
வேண்டிற்று என்ருன். கo

கொண்டிருக்கிற மிக்க அன்பையுடைய மக்களைப் போகும்படி செய்தல் முடியாத காரியம். அவ்வாறு போக்காமல் இங்கிருந்து நாங்கள் செல்லுதல் இயலாது. என் தந்தை போன்றவனே! நீ இரதத்தை இப்பொழுதே (விடியு முன்பு - அவர்கள் விழிப்பதற்கு முன்பு) திரும்பச் செலுத்துவாய். பார்த்துச் சுவட்டை உணர்ந்து நான்அங்கே திரும்பி விட்டேனென்று (அவர்களும்) திரும்பிச் செல்வார்கள். இது தான் நான் உன்னிடத்து வேண்டுவது என்ருன்.

(வி - ம்) இராமன் காட்டுக்குள் செல்லவேண்டும். மக்கள் யாவரும் தொடர்ந்து வருகின்றனர். உண்ண உணவுமின்றிப் படுக்க இடமுமின்றித் தவிப்புக்கு ஆளாயினர். இவ்வாறே பின்தொடர்ந்து வருவாராயின் தவ வாழ்க்கை கைகூடுதற்கில்லை. மக்களும் துன்புறுவர். இவ்விடையூற்றை நீக்க வேண்டும். இங்கே இராமன் எவ்வளவு எடுத்துக் கூறினும் மக்கள் நகரை நோக்கித் திரும்பமாட்டார் என்பது உறுதி. எனவே வேறு போக்குக்காட்டியே, தான் பிரிய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. வேறு வழி இல்லையாதலின், ' போக்குவது அரிது ; போக்காது ஏகல்

706. இன்னே - இப்பொழுதே. சுவடு - அடையாளம்.

பொல்லாது' என்றான். ஒன்றைக் காட்டி வேறொன்றைச் செய்யலாமோ எனின், இயையாதவழிச் செய்யலாமென்க வெல்லத்தால்மூடி மருந்தைச் செலுத்தினாற்போல. 'கடுத் தின்னாதானைக் கட்டிபூசிக் கடுத்தீட்டிய வாறுபோல' (களவியலுரை) என்றதும் அது.

சுமந்திரன் வருந்தல்

707 *தேவியும் இளவலும்
 தொடரச் செல்வனைப்
பூவியல் கானகம்
 புகஉய்த்தேன் என்கோ?
கோவினை உடன்கொடு
 குறுகினேன் என்கோ?
யாவது கூறுகேன்
 இரும்பின் நெஞ்சினேன். கக

சீதையும் இலக்குவனும் பின்தொடர்ந்து செல்ல, மகனை மலர்பரப்பிய காட்டில் செல்லும்படி செலுத்திவிட்டு வந்தேன் என்று சொல்லவா? இராமனை உடன் கூட்டிக்கொண்டு வந்தேன் என்று சொல்லவா? எதைச் சொல்லுவேன்? இரும்பினாலே செய்த நெஞ்சினையுடைய நான்.

(வி - ம்) சுமந்திரன் கல்லுங் கரடுமான காட்டுப் பாதையை எண்ணி மனம் நைகிறான். மலர்மேலே நடக்கத் தக்க காலல்லவா? குழந்தையை மலர்மேலே நடக்க விட்டு வந்தேன் என்று சொல்ல? (இது, வருத்தந் தாங்காமல் வந்த சொல் என்க.) அல்லது மன்னனை உடன் அழைத்து வந்து விட்டேன் என்று பொய் சொல்லவா? என்று கேட்டான்.

---

707. உய்த்தல் - செலுத்துதல். என்கோ - என்று சொல்லவா? இரும்பின் - இரும்பைப்போன்ற.

சொல்ல என்ன இருக்கிறது. இந்தக் கொடுமைகளைக் கண்டும் என் நெஞ்சு வெடிக்கவில்லையே! இது இரும்புதான் என்கிறான். செல்வனை என்றதும், கோவினை என்றதும் பிரிவதாலேற்படும் துன்பத்தையும் அடைவதால் ஏற்படும் இன்பத்தையும் இனிது விளக்குவதாம்.

என்ன சொல்வேன் என்கிறான்

708 தாருடை மலரினும்
 ஒதுங்கத் தக்கிலா
வாருடை முலையொடு,
 மதுகை மைந்தரைப்
பாரிடைச் செலுத்தினேன் ;
 பழைய நண்பினேன் ;
தேரிடை வந்தனென் ;
 தீதிலேன் ; என்கோ ? கஉ

(இன்னும்) மாலை கட்டுதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மலரிலேயும் வைக்கப் பொருத பாதங்களையுடைய கச்சணிந்த தனங்களையுடைய சீதையோடு, வலிமையுள்ள பிள்ளைகளைக் கால் நடையில் செலுத்தினேன் ; நெடுநாளாக நட்புரிமை கொண்டநான் தேரில் ஏறி வந்தேன். எனக்கு ஒரு குறையு மில்லை என்று சொல்லவா ?

(வி - ம்) பூவின்மேல் நடக்கவும் இயலாத சீதையையும் மக்களையும் பருக்கைக் கற்களில் காலால் நடந்து செல்லுங்க ளென்று தள்ளிவிட்டு, நான் தேரில் ஏறி ஒரு குறைவு மில்லாமல் சுகமாக வந்து சேர்ந்தேன் என்று சொல்லச்

---

708. தார் - மாலை. ஒதுங்க - நடக்க. தக்கிலா - தகுதி யில்லாத. மதுகை - வலிமை. பாரிடை - நிலத்தில். (காலால் நடக்கும்படி)

சொல்கிருயா ? நீ பிறந்தது முதல் உன்னேடு நட்புப் பூண்ட நான் என்ன சொல்லுவேன் என்கிருன்.

நான் எமதூதனு ?

709 வன்புலக் கல்மன
மதிஇல் வஞ்சனேன்,
என்புஉலப் புறஉடைந்து
இரங்கும் மன்னன்பால்,
உன்புலக்கு உரியசொல்
உணர்த்தச் செல்கெனே ?
தென்புலக் கோமகன்
தூதிற் செல்கெனே ? கரு

வலிய புலன்களையும் கல்மனத்தையுமுடைய புத்தியில்லாத வஞ்சகனுகிய நான், எலும்பு கட்டுவிடும்படி மனமுடைந்து வருந்துகிற அரசனிடத்தில் (சென்று) உன்னுடைய நல்ல அறிவுக்கு ஏற்றதான சொல்லைத் தெரிவிப்பதற்குச் செல்வேனு? அல்லது தென்திசைத் தலைவனுன எமனுடைய தூதனுகச் செல்வேனு ?

(வி - ம்) என்னுடைய புலன்களின் அறிவு, உணர்ச்சியற்று இறுகிப் போய்விட்டது. மனமோ கல்லாகிவிட்டது. புத்தி எதிலும் செல்லவில்லை. சாகக்கிடக்கிற மன்னனிடத்தில் சென்று உன்னுடைய சாமர்த்தியமான சொல்லைச் சொன்னல் நான் செய்தி சொல்கிறமாதிரி இராது; எமதூதன் உயிரை வாங்குவதாக முடியும் என்ருன். துன்பந்தாழாமல் உயிர் குறையும் நிலையைச் சுமந்திரன் அடைந்து விட்டான் என்பதை 'வன்புலக் கல்மன மதியில்' எனப்பட்டது. இதனை,

---

709. புலம் - ஐம்புலன். என்பு - எலும்பு. உலப்புற - கட்டுவிட. புலக்கு - அறிவுக்கு. தென்புலம் - தென்திசை.

'புலனைந்தும் பொறிகலங்கி அறிவழிந்திட்டு' (சம்பந்தர் தேவாரம், திருவையாறு) என்பதனோடு நோக்குக.

என்னைவிடக் கைகேயி நல்லவள்!

710 அங்கிமேல் வேள்விசெய்து
அரிதிற் பெற்றநின்
சிங்கஏறு அகன்றதென்று
உணர்த்தச் செல்கெனோ!
எங்கள்கோ மகற்குஇனி
என்னிற் கேகயன்
நங்கையே கடைமுறை
நல்லள் போலுமால். கஎ

நெருப்பில் யாகம் செய்து அருமையாகப் பெற்ற உன்னுடைய ஆண்சிங்கத்தைப்போன்ற இராமன் அகன்றான் என்று உணரும்படி செய்யச் செல்வேனோ? நம்முடைய மன்னனுக்கு இனிமேல் என்னைக் காட்டினும் கேகயன் மகளே கடைசியாக நல்லவள் போலும்!

(வி - ம்) கைகேயி வரங்கேட்டுப் பெற்றதால் மன்னனது உயிர் போகவில்லை. தான்போய் இச் செய்தியைச் சொன்னவுடன் சாகப்போகிறான். ஆதலால் அவளை நான் நல்லவளாக்கிவிட்டேன் என்றான். மன்னனுக்கு யாவரும் நல்லவராக இருந்தனர். கைகேயிதான் தீயவளாக ஆனாள். இப்பொழுது நான் மன்னனைக் கொல்பவனாக ஆகிவிட்டதால் அவள் நல்லவர்களுள் கடைசியாகிவிட்டாள். நான்தானே இப்போது கடைசிக் காரியத்தைச் செய்பவனான ஆள் என்றான்.

---

710. அங்கி - தீ. சிங்க ஏறு - ஆண் சிங்கம். கடைமுறை - கடைசியாக.

சுமந்திரன் துயர்பொருமல் புரளுதல்

711 முடிவுற இன்னன
மொழிந்து, பின்னரும்
அடியுறத் தழுவினன் ;
அழுங்கு பேர்அரா
இடியுறத் துவளுவது
என்னும் இன்னலன் ;
படியுறப் புரண்டனன் ;
பலவும் பன்னினன். கரு

இவ்வாறே மறுபடியும் முடிவுபெறக் கூறிக் கால்களைக் கட்டிப்பிடித்தவனுகி, வருந்திய பெரியபாம்பு இடியின் ஓசை கேட்டுக் கிடந்துபுரளுவதைப் போன்ற துன்பத்தையுடையவனுய் நிலத்திற் கிடந்து புரண்டான். பலவாறு புலம்பினன்.

(வி - ம்) சுமந்திரன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். இராமன் கொண்ட கொள்கையை விட்டு அசைவதாக இல்லை. காலைப் பிடித்துக்கொண்டும், உடலை உழத்திக்கொண்டும் புலம்புகிருன். வருத்தம் முதலில் சொல்லில் நின்றது. இப்போது சொல்கலங்கிச் செயலாகிவிட்டது.

அவனை இராமன் தூக்கி எடுத்தல்

712 தடக்கையால் எடுத்து, அவற்
றழுவிக் கண்ணநீர்
துடைத்து, வேறுஇருத்தி, மற்று
இனைய சொல்லினன் ;

---

711. அடிஉற - பாதங்களைப் பொருந்த. அழுங்குதல்-வருந்துதல். அரா-பாம்பு. இன்னலன் - துன்பத்தையுடையவன். படி-நிலம்.

712. அவற்றழுவி - அவனைத் தழுவி. இனைய - இவ்வாருய செய்திகளை. ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. காணம் - மனம். வால் - தூய.

அடக்கும்ஐம் பொறியொடு
கரணத்து அப்புறம்
கடக்கும்வா லுணர்வினுக்கு
அணுகும் காட்சியான். கசு

அடக்கவேண்டிய ஐம்பொறியினுலுண்டாகும் அறிவுக்கும், மனம் முதலிய அகக் கரணங்கட்கும் அப்பாற்பட்ட (தத்துவ ஞானிகளின்) தூய உணர்வினுக்கு அணுகி நிற்கும் தோற்றத்தையுடைய கடவுளாகிய இராமன், (சுமந்திரனை) தன்னுடைய விசாலமான கைகளால் தூக்கி அவனைத் தழுவி அவனுடைய கண்ணீரைத் துடைத்துத் தனியிடத்தில் இருக்கச் செய்து இவ்வாறு கூறுவானுயினுன்.

(வி.-ம்) இவனை வாயினுல் சொல்லித் திருத்தமுடியாதென்று கருதித் தூக்கி எடுத்துக் கண்ணீர் துடைத்து ஆற்றினுன் ; பிறகுதான் அவனேடு பேச முடிகிறது. கருவிகளின் உதவிகொண்டு அறியும் அறிவைக் கடந்து அப்பாற் சென்று தூய உணர்வுமயமாக நிலைத்து நிற்கும் ஆன்மாக்களையே நெருங்குங் குணமுள்ளவன் கடவுள் ; அவனே இராமனுக வந்திருக்கிறுன் என்றபடி.

அறத்தை மறக்கலாமா ?

713 பிறத்தல்என்று உற்றபின்
பெறுவ யாவையும்
திறத்துஉளி உணர்வதோர்
செம்மை உள்ளத்தாய்!

---

713. உற்றபின் - அடைந்தபிறகு. பெறுவ - பெறக்கூடியன. உளி - உள்ளி. பொதுவின்று - பொதுவில்லாததாக : தனியாக. அவலம் - துன்பம்.

புறத்துறு பெரும்பழி
பொதுவின்றி எய்தலும்
அறத்திறம் மறத்தியோ
அவலம் உண்டுஎனு. கஎ

பிறவி என்பது ஒன்று உண்டான பின்பு பெறக்கூடிய யாவற்றையும், திறமையாக எண்ணி உணரும் ஆற்றலைப் பெற்ற ஒப்பற்ற செம்மையான உள்ளத்தை உடையவனே! மற்றவர்களால் கூறப்படும் பெரும்பழி உனக்குத் தனியானதாக ஏற்படுமென்றதனுலும், துன்பம் உண்டாகிறதே என்பதனுலும் அறத்தினது உண்மையை மறந்துவிட்டாயோ!

(வி - ம்) நீ மந்திரி. மேலும் ஒரு பேரறிஞன். பிறந்தால் என்னவெல்லாம் வருமென்பதை அறிந்திருக்கிருய். நீ மட்டும் திரும்பிப்போவதால் பெரும்பழிக்கு ஆளாக வேண்டியிருக்கலாம். அந்தப் பழியும் வேருெருவருக்குப் பங்கில்லாமல் உன் தலையிலேயே விழக்கூடும். இத்துன்பம் பொறுக்க முடியாததுதான். அதற்காக அறத்தைக் கைவிடலாமா? என்ருன்.

இன்பத்தில் ஒன்று, துன்பத்தில் வேரு?

714 முன்புநின்று இசைநிறீஇ
முடிவு முற்றிய
பின்புநின்று உறுதியைப்
பயக்கும் பேர்அறம்,
இன்பம்வந்து உறும்எனில்
இனிய தாய்இடைத்
துன்பம்வந்து உறும்எனில்
துறக்க லாகுமோ? கஅ

714. இசை - புகழ். நிறீஇ - நிறுவி: நிலைநாட்டி. உறுதி-பயன். துறக்கல் - கைவிடல்.

முதலில் புகழை உலகில் நிலைநாட்டி, அது நிலைத்து நின்று, முடிவான நிலைமை உறுதிப்பட்ட பின்பு, (என்றும்) நின்று பயனை அளிப்பதாகிய பெருமைபெற்ற அறத்தினால் இன்பம் வந்து பொருந்துமாயின் இனியதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இடையில் துன்பம் வந்து பொருந்துமாயின் கைவிடப்படலாகுமா?

(வி-ம்) அறம் நல்வினை பயக்கும். ஆனால் உடனே பயக்குமா? அதை எவ்வளவோ விடா முயற்சி செய்து நிலை நிறுத்த வேண்டும். ஆனால் எவ்வளவு பாடும்பட்டு அதை உறுதியாக நிலைக்கச் செய்துவிட்டால் பின்பு நற்பயனை அது நெடுங்காலம் அளித்துக்கொண்டே இருக்கும். இந்த முயற்சி யினிடையில் இன்பம் வந்தால் நல்லதென்று கொள்ளலும், துன்பம் வந்தால் தீயதென்று தள்ளலும் அறமன்று என்றான். இதனை, 'நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால், அல்லற்படுவ தெவன்' (திருக்குறள் 379) என்பதோடு நோக்குக.

என்னால் அறம் பிழைபடலாமா?

715 கான்புறம் சேறலில்
அருமை காண்டலால்
வான்பிறங் கியபுகழ்
மன்னர் தொல்குலம்,

---

715. அருமை - முடியாமை. சேறல் - செல்லுதல். காண்டல் - முடிவு காணுதல். பிறங்கிய - விளங்கிய. இழுக்கிற்று - தவறியது. ஊன் - உடல்.

யான்பிறந்து அறத்தில்நின்று
இழுக்கிற்று என்னவோ
ஊன்திறந்து உயிர்குடித்து
உழலும் வேலினய். கக

போர்க்களத்தில் எதிரிகளின் உடலைப் பிளந்து உயிரை உண்டு இன்னும் கிடைக்குமா என்று திரிகிற வேலினை யுடைய சுமந்திரனே! காட்டுக்குச் செல்லுதலில் துன்பம் ஏற்படும் என்று கருதினல், வானத்தை எட்டி விளங்கும் புகழையுடைய அரசரின் பழைமையான குலமானது யான் பிறந்ததால் அறவழியில் நின்றும் தவறியது என்று (உலகம்) சொல்லட்டுமா ?

(வி - ம்) அருமை என்பது இன்மை என்ற பொருளில் நின்றது. காட்டுக்குச் செல்வது துன்பமானதுதான். அதை யெண்ணிப் போகவேண்டாமென்று முடிவு கண்டோமானல் இடையருது குலத்துக்கு வந்த புகழ் இடை மறித்துப் போகுமே. உலகம் என்ன சொல்லும்? என்ருன். 'உலகம் என்ன சொன்னலென்ன? அறத்தைக் கைக்கொள்ள வேண்டியதுதானே' என்று கேட்கலாம். இராமனது கருத்து அதுதான். சுமந்திரன் இந்த உறுதியில் நிற்கவில்லை. நாடு திரும்புவதுதான் சரி என்கிருன். மேலும் மக்கள் தன் மீது கூறும் பழிக்கு அஞ்சுகிருன். ('புறத்துறு பெரும்பழி பொதுவின் றெய்தலும்' என்பதறிக.) ஆதலால் அவன் போக்கிலேயே அவனைச் சமாதானப்படுத்த எண்ணி, 'நீ நாட்டுக்குப் போவது பழியென்ருல், நான் காடு தவிர்ப்பதும் பழிதானே?' என்ருனென்க. அறத்துக்காக எவ்வளவோ உயிரைக் கொலை செய்யவேண்டி நேர்வதை அறிந்துதானே இருக்கிருய் என்று வீரத்தையும் எழுப்பினன் என்பது கடைசி அடியின் பொருளாம்.

அரசனுக்கு அது தவம் ; எனக்கு இது தவம்

716　வினைக்குஅரும் மெய்ம்மையன்
　　வனத்துள் விட்டனன்
மனக்குஅரும் புதல்வனை
　　என்றல், மன்னவன்
தனக்குஅரும் தவம்;அது
　　தலைக்கொண்டு ஏகுதல்
எனக்குஅரும் தவம்;இதற்கு
　　இரங்கல்! எந்தைநீ.　　உ0

செய்து காட்டுவதற்கு அருமையான சத்தியத்தை யுடைய தயாத மன்னன் மனத்துக்கு ஏற்ற அரிய புதல்வனை வனத்துள் விட்டனன் என்று கூறப்படுதல் மன்னவன் தனக்கு அரிய தவமாகும். அதனைத் தலைமீது ஏந்திக் காட்டுக்குச் செல்லுதல் எனக்கு அருமையான தவமாகும். தந்தாய்! நீ இதற்கு இரக்கப்பட வேண்டியதில்லை.

(வி - ம்) சத்தியம் சத்தியம் என்று எல்லாரும் சொல்ல லாம். ஆனால் சத்தியத்தைக் கைக்கொண்டு அவ்வழியிலே நடந்து காட்டுவது முடியாது. அதைச் செயலில் காட்டுபவன் தயாதன் என்பது 'வினைக்கு அரும் மெய்ம்மையன்' என்ற தாற் பெறப்படும். மனத்துக்கு இயைந்த மகனைக் காட்டுக்கு அனுப்புதல் வேறு யாருக்கும் கிடைக்காது. பலர் பல வற்றைச் செய்யக் காத்திருப்பர். ஆனால் செய்ய வாய்ப்புக் கிடைப்பதில்லை. என் தந்தைக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அதுவே அருமையான காரியம்! அதைப் போலவே இப்படி

---

716. வினை - செயல். மெய்ம்மையன் - தயாதன். மனக்கு - மனத்துக்கு. தலைக்கொள்ளல் - தலையான காரியமாகக் கொள்ளல். இரங்கல் - இரக்கப்பட வேண்டாம். எந்தை - எம்முடைய தந்தை போன்றவனே !

இருவரும் சேர்ந்து ஏவுமாறு கிடைத்தது என்னுடைய பாக்கியம் என்கிறான் இராமன்.

முனிவரைக்கொண்டு அரசனைத் தேற்றுக

717 ‘ஏழ்இரண்டு ஆண்டுநீத்து
ஈண்ட வந்துஉனைத்
தாழ்குவன் திருவடி;
தளரல் ஈண்டு’எனச்
சூழிவெம் கடகளிற்று
அரசற் சொல்லிப்பின்,
வாழிமா தவன்சொலான்
மனம்தெ ருட்டுவாய். உக

‘பதினான்கு ஆண்டைக் கடத்திவிட்டு விரைவாக வந்து உன்னைத் திருவடியில் விழுந்து வணங்குவான்; இங்கே இருந்து தளர்ச்சியடைய வேண்டாம்’ என்று முகபடாம் அணிந்த கொடிய மதம் பொழிகிற யானைகளையுடைய அரசனுக்குச் சொல்லி, பிறகு வாழ்த்துக் குரிய பெருமை பொருந்திய வசிட்டர் சொல்லினால் (அரசனது) மனத்தைத் தெளிவுபடுத்துவாயாக.

(வி - ம்) விரைவில் வந்துவிடுவேன் கவலைப்படாதே என்று மன்னனுக்குச் சொல்; வசிட்டர் அருகிலேயே இருக்கட்டும்; நீ சொல்வதைத் தொடர்ந்து அவரைக்கொண்டு அறமும் உறுதியுங் கூறச்செய்து அரசனின் மனக் குழப்பத்தையும் ஐயத்தையும் போக்குவாயாக என்றான்.

---

717. ஈண்ட - விரைவாக. தளரல் - தளரவேண்டாம். ஈண்டு- இங்கே. சூழி - யானையின் முகத்தில் அணியும் அலங்காரத் துணி. அரசற் சொல்லி - அரசனுக்குச் சொல்லி. தெருட்டுதல் - மனந் தெளியச் செய்தல்.

தாயர் மூவர்க்கும் வணக்கம்

718 முறைமையால் எற்பயந்து
எடுத்த மூவர்க்கும்
குறைவுஇலா என்நெடு
வணக்கம் கூறிப்பின்
இறைமகன் துயர்துடைத்து,
இருத்தி மாடுஎன்றான் ;
மறைகளை மறைந்துபோய்
வனத்துள் வைகுவான். உஉ

என்னைப் பெற்ற தாய்மார் மூவருக்கும் (வணங்கும்) முறைமையில் குறைவிலாத என்னுடைய நீண்ட வணக்கத்தைத் தெரிவித்துப், பிறகு அரசனின் துன்பத்தை நீக்கி, அவன் பக்கத்தில் இருப்பாயாக என்று கூறினன். (யார் ?) வேதங்கட்கு எட்டாமல் மறைந்துபோய் வனத்தினுள் தங்கியிருப்பவன்.

(வி - ம்) கடவுளை இயற்கையில்தான் காணலாம். செயற்கை மனிதனது அகங்காரத்தில் உருவாவது. நாடு நகரமெல்லாம் செயற்கையை நம்பி வாழும் அடிப்படையைக் கொண்டது. வேதமும் கடவுளைக் காண்பேன் என்று நிற்பதால்தான் அவனைக் காணமுடியவில்லை. முனிவர்கள் செயற்கையினின்றும் விடுபட்டு இயற்கையோடு ஒன்றி வாழ்பவர். ஆதலால் அவர்கள் அறிவிற் காட்சியளிக்கிறான் என்பது தோன்ற 'வனத்துள் வைகுவான்' எனப்பட்டதென்க. தான் இனிப் பல நாள்வரை தாய்மாரை அடிக்கடி கண்டு வணங்க முடியாததலால் நீண்ட நாளைக்கும் காணும்படியான வணக்கம் என்பான் 'நெடு வணக்கம்' என்றான்.

718. பயந்தெடுத்த - பெற்றெடுத்த. நெடுவணக்கம் - நிலைத்த வணக்கம். இறைமகன் - இறையாகிய மகன் : அரசன். மாடு - பக்கம். மறைகள் - வேதங்கள்.

சுமந்திரன் சீதையை வணங்கினன்

719 ஆள்வினை ஆணையில்
திறம்பல் அன்றுஎனுத்
தாள்முதல் வணங்கிய
தனித்திண் தேர்வலான்,
ஊழ்வினை வசத்துஉயிர்
நிலைஎன்று உன்னுவான் ;
வாழ்வினை நோக்கியை
வணங்கி நோக்கினன். உரு

(தான் செய்யத் தகுந்த) முயற்சி, அரசனுன இராமனது கட்டளையை மீறுவதன்று என்று எண்ணி, காலடியை வணங்கிய ஒப்பற்ற வலிய தேர்வலவனுன சுமந்திரன் உயிர் நிலைத்திருப்பது ஊழ்வினையின் வசத்திலுள்ளதாகும் என்று எண்ணியவனுகி, உலகத்தின் இன்ப வாழ்வை எதிர்நோக்கும் பருவமுள்ள சீதையை வணங்கி (ஏதேனும் செய்தி உண்டா? என்று) நோக்கி நின்றுன்.

(வி - ம்) சுமந்திரனைத் தந்தையாகவே இராமன் கருதி நடந்துவந்தான் ; அவ்வாறே அவனும் இராமனைப் பெற்ற பிள்ளையாகவே கருதி நடந்துவந்தான். அந்தப் பாசத்தினுல் இவ்வளவு நேரம் உரையாடினர். ‘ மன்னவன் தனக்கரும் தவம் அது ; எனக்கரும் தவம் இது ’ ‘ இதற்கு இரங்கல் நீ’ என்று இராமன் கூறியதும் சுமந்திரனின் மனம் சிந்திக்கத் துவங்கிவிட்டது. (பிறகு இராமன்தான் பேசிக்கொண்டிருக்கிறுன்.) யோசித்து முடிவு செய்துவிட்டான்; இனி வாதாடுவது சரியல்ல. ‘ இட்ட ஆணையைச் செய்வதே கடமை ’

---

719. ஆள்வினை - முயற்சி. ஆணை - கட்டளை. திறம்பல் - மாறுபடுதல். தாள் முதல் - காலின் அடி. வசத்து - வசத்தது : வசமாகவுள்ளது. உயிர்நிலை - உயிரின் நிலைபேறு.

என்பதை உணர்ந்தான் என்க. சீதை பிறந்த இடத்தில் செல்வமாக வளர்ந்தவள். இராமனை மணந்தாள். இன்ப வாழ்வில் அடி வைக்கிற காலம். அவளுடைய இளமை, வாழ்வை எதிர்நோக்கி யிருக்கிறது என்பதை யெல்லாம் அடக்கி 'வாழ்வினை நோக்கியை' என்றார். இது சுமந்திரனது பரிதாபத்தையும் விளக்கி நிற்கிறது.

பூவையையும் கிளியையும் போற்றுக

720 அன்னவள் கூறுவாள்
அரசற்கு அத்தையர்க்கு
என்னுடை வணக்கம்முன்
இயம்பி, யானுடைப்
பொன்நிறப் பூவையும்
கிளியும் போற்றுகென்று,
உன்னும்என் தங்கையர்க்கு
உணர்த்துவாய் என்றாள். உச

சீதை கூறுகிறாள் :—மன்னவனுக்கும் அத்தையர்க்கும் என்னுடைய வணக்கத்தை முதலில் கூறிவிட்டு, என்னுடைய அழகிய நிறமான நாகணவாய்ப் பறவையையும், கிளியையும் பேணிக் காப்பாற்றுங்கள் என்று, என்னை நினைத்துள்ள தோழியர்க்கு நினைவூட்டுவாயாக என்றாள்.

சுமந்திரன் தன் உயிர்போகவில்லையே என்று துடித்தல்

721 தேர்வலான் அவ்வுரை
கேட்டுத் தீங்குறின்
யார்வலார் உயிர்துறப்பு!
எளிதன் றே! எனப்

---

720. யானுடை - என்னுடைய. பூவை - நாகணவாய்ப்புள் : நாகரந்தான். உணர்த்தல் - நினைக்கும்படி செய்தல்.

போர்வலான் தடுக்கவும்,
பொருமி விம்மினன் ;
சோர்விலாள் அறிகிலாத்
துயர்க்குச் சோர்கின்ருன். உரு

தேர் வலவனை சுமந்திரன் சீதை கூறிய சொற்களைக் கேட்டுத் தீங்கு வந்தாலும் யாராலே சாக முடியும், (அது) எளிதன்று! என்று (வருந்தினன்) இராமன் தடுத்தும் (கேளாமல்) பொருமி விம்மினன். (யார்?) சோர்வு என்பதையே அறியாமலிருக்கிற சீதையின் அறியாமையாகிய துயரத்துக்கு வருந்துகின்றவனாகிய சுமந்திரன்.

(வி - ம்) இராமன் தடுத்தும் கேளாமல் சமந்திரன் வருந்தினன். உலகம் முழுமையும் வருந்தி உழல்கின்றது. ஆனல் சீதையோ அணுவளவும் வருந்தவில்லை. முழு உற்சாகமாக இருக்கிருள். 'சிறு குழந்தையாதலால் அனுபவமில்லை, நாட்டிலுள்ள இன்பமும் போய்த், தாங்கமுடியாத துன்பத்தைக் காட்டில் அனுபவிக்கப்போகிருளே, வரப்போவதொன்றும் விளங்கவில்லையே. பாவம்' என்று நினைக்கிருன். சுமந்திரன் எவ்வளவோ அறிவும் அனுபவமு முடையவன் தான். இராமனது உளப்பாங்கை அறியமுடியவில்லை. ஆனல் சீதையின் உள்ளம் விளங்கவேயில்லை. சீதைக்கு ஒன்றுதான் தெரிகிறது. 'இராமன் இரவுபகல் எப்பொழுதும் தன்னை விட்டுப் பிரியாதிருப்பான்; எல்லாம் அவன்' என்ற ஒரே மனப் பண்புடைமையால் வேறென்றும் அவளுக்குப் புலப்படவில்லை. 'நெஞ்சம் உனக்கே இடமாக வைத்தேன்' (அப்பர்-தேவாரம்)என்பதறிக. மனம் சரியாக ஒன்றைப்பற்றிவிட்டால் பிறகு கவலையேது? துன்பமென்று ஒன்று ஏது? கவலையும் துன்பமும் இருக்க இடந்தான் ஏது?

721. உயிர்துறப்பு - சாவு. போர்வலான் - போர்செய்தலில் வல்லவனை இராமன்.

இலக்குவன் கூறுவது என்ன ?

722 ஆறினன் போல்சிறிது
அவலம், அவ்வழி
வேறிலா அன்பினன்
விடைதந் தீகென,
ஏறுசே வகற்றெழுது,
இளைய மைந்தனைக்
கூறுவது யாதென,
இனைய கூறினன். உக

ஒன்றுபட்ட அன்பையுடைய சுமந்திரன், அப்போது துன்பம் சிறிது ஆறினவனைப்போல, சிங்கத்தை ஒத்த இராமனை வணங்கி 'விடை தந்தருளுக' என்று கூறிவிட்டு, இளையவனான இலக்குவனை(ப் பார்த்து) நீ சொல்லக் கூடியது யாது என்று கேட்க, (அவன்) இவைகளைக் கூறினன்.

(வி - ம்) ஆறினன்போல் என்றதால் ஆறவில்லை என்றவாறு.

யார் அரசன் ?

723 உரைசெய்துஎங் கோமகற்கு
உறுதி ஆக்கிய
தரைகெழு செல்வத்தைத்
தவிர, மற்றொரு
விரைசெறி குழலிமாட்டு
அளித்த மெய்யனை,
அரசன்என்று இன்னம்ஒன்று
அறையற் பாலதோ ! உஎ

---

722. அவலம் - துன்பம். அவ்வழி - அப்பொழுது. வேறிலா - ஒன்றுபட்ட. ஏறு - ஆண் சிங்கம். சேவகன் - வீரன்.

723. விரை - மணம். செறிதல் - பொதிதல். குழலி - கூந்தலையுடையவள். மாட்டு - இடத்தில். பாலது - தகுதியுடையது.

எமது தலைவனாகிய இராமபிரானுக்கு வாக்களித்து உறுதி செய்த பூமண்டலத்தோடு கூடிய செல்வத்தை (இராமபிரான் ஆள முடியாமல்) கைவிடும்படியாக, வேறொரு மணம்மிகுந்த கூந்தலையுடையவளுக்கு (கைகேயிக்கு)க் கொடுத்த 'சத்திய சந்தனை' அரசன் என்று இனிமேலும் ஒரு சொல்லினால் சொல்லத் தகுமா ?

(வி - ம்) கைகேயியின் அழகில் மயங்கியே அரசன் உரைதவறி அரசைக் கொடுத்தான் என்ற இலக்குவன் கருத்தை, 'மற்றொரு விரைசெறி குழலிமாட்டு' என்ற தொடர் தெரிவிக்கும். அரசன் என்ற தன்மையும் போய் விட்டது ; அரசையும் கொடுத்தாய்விட்டது. இனி அவனை அரசன் என்றுகூற என்ன இருக்கிறது என்றான்.

இன்னும் உயிரோடு இருக்கிறேன்

724 கானகம் பற்றிநற்
புதல்வன் காய்உணப்
போனகம் பற்றிய
பொய்யில் மன்னவற்கு
ஊனகம் பற்றிய
உயிர்கொடு இன்னும்போய்
வானகம் பற்றிலா
வலிமை கூறுஎன்றான். உஅ

மூத்த மகன் காட்டை அடைந்து காய்களை (உணவாக) உண்ண, (அரண்மனையிலிருந்து சிறந்த) உணவை உண்டு கொண்டிருக்கிற பொய்யில்லாத மன்னனுக்கு, உடலோடு

724. கானகம் - காடு. நற்புதல்வன் - மூத்தமகன் (நற்றாய், சுமந்திரன் என்றாற்போல). போனகம் - உணவு. ஊனகம் - உடல். வானகம் - மேலுலகம். வலிமை - (உயிரை விடாமல் நிறுத்துகிற) வன்மை.

கூடிய உயிரை வைத்துக்கொண்டு இன்னும் இறந்து வானுலகத்தை அடையாதிருக்கின்ற (எனது) உடலுறுதியை எடுத்துச் சொல்வாயாக என்றான்.

(வி - ம்) கைகேயியினிடம் கொண்ட மயக்கத்தினல் அரசைக் கொடுத்தான் மன்னன் என்று இலக்குவன் கருது கிறான். மனமார இராமனுக்கு நல்கிய அரசை மாற்றுவது எவ்வாறு நோக்கினும் பிசகு என்பதே அவன் கருத்து. இவ்வாறு சொல்புரண்ட அரசனை சத்தியசந்தன் என்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. எனவே 'பொய்யில் மன்னற்கு' என்றான். இது கேலி. முன்பாடலில் 'மெய்யனை' என்றதும் அது. 'போனகம் பற்றிய மன்னர்' என்றதால் போனகம் அரச உணவு என்க. 'கானகம்பற்றி காய்உண' என்றதால் அரண்மனையில் சிறந்த உணவு உண்ண எனலாயிற்று. நற்புதல்வன் - நல்ல மகன் எனினுமாம். 'எல்லா உயிர்கட்கும் நன்மகன்' (பாடல் 526) என வருதல் காண்க. வலிமை - இங்கே வன்கண்மை என்ற பொருளையுந்தரும்.

நான் நானகவே பிறந்திருக்கிறேன்

725 மின்னுடன் பிறந்தவாள்
பரத வேந்தற்கு, என்
மன்னுடன் பிறந்திலென் ;
மண்கொண்டு ஆள்கின்ற
தன்னுடன் பிறந்திலென் ;
தம்பி முன்னலென் ;
என்னுடன் பிறந்தயான்
வலியன் ; என்றியால். உகூ

ஒளியுடன் ஆக்கப்பட்ட வாளாயுதத்தை யுடைய் பரத மன்னனுக்கு, 'என்னுடைய மன்னனாகிய இராமனுடனும்

725. மன் - அரசன். முன் - முன்னவன் : அண்ணன்.

பிறக்கவில்லை ; மண்ணரசைப் பறித்துக் கொண்டு ஆளுகிற உன்னுடனும் பிறக்கவில்லை ; தம்பியாகிய சத்துருக்கன் இருக்கிறானே அவனுக்கு அண்ணனும் அல்லேன் ; என்னோடே நான் பிறந்தவன் ; ஒரு குறையும் எனக்கில்லை' என்று சொல் என்றான்.

(வி - ம்) உடன் பிறந்த ஒருவன் கொள்ளும் அறவினைக்கு இடையூறு நேர்ந்தால் அதை நீக்கி உதவிபுரிதலே உடன் பிறந்தவர் கடன். இராமன் முடிசூடுதல் நேர்மையான செயலாகும். அதைத் தாயும் தந்தையும் தடுத்தனர். மீண்டும் நிலைநாட்ட முற்பட்டவன் இலக்குவன். இதற்கு உடன் பிறந்தோர் மூவர் இருந்தும் உதவவில்லை. எனவே எனக்கு ஏது உடன் பிறப்பு? நான் தனியே தான் பிறந்தேன் என்று உள்ளம்எரிந்து கூறினனென்க. நீங்கள் யாவரும் கைவிட்டாலும் நான் கொண்ட நியாயநெறியினின்றும் அணுவளவும் விட்டுக் கொடுக்கமாட்டேன் என்பான் 'வலியன்' என்றான். 'பரதவேந்தன்' என்றது கேலி. அரசுக்குத் தகுதியற்றவன் அரசனாகிறான் என்றவாறு. எனக்கு உடன் பிறப்பு நான் தான் என்றது, உதவியற்று நிற்கும் தனிமையைக் குறிக்கும். இராமனை அரசாள வைப்பதே நேர்மையானது. ஆதலால் அதற்கு எல்லோரும் துணைபுரியவேண்டும். அவ்வாறு எவரும் உதவவில்லை. எனவே தான் தன்னந்தனியனாகி விட்டதாகக் கருதுகிறான்.

உடன் என்னும் மூன்றும் வேற்றுமை உருபு முதல் நிகழ்ச்சியை ஒட்டிவரும் என்ற உண்மை இங்கே காணக்கிடக்கிறது. மன்னுடன் தன்னுடன் என்றாற்போல தனக்குப் பின் பிறந்த தம்பியுடன் என்னாது தம்பி முன்னலென் என்றது காண்க.

இவ்வாறெல்லாம் பேசாதே

726 ஆரியன் இளவலை
நோக்கி, 'ஐய ! இச்
சீரிய அல்லன
செப்பல் !' என்றபின்
பாரிடை வணங்கினன் ;
பதைக்கும் நெஞ்சினன் ;
தேரிடை வித்தகன்
சேறல் மேயினான். ௩௦

அறிவுடையோனாகிய இராமன், தம்பியைப் பார்த்து ஐயனே ! இவ்விதமான தவறான சொற்களைச் சொல்லாதே ! என்றான். என்றவுடன் (இலக்குவன்) கலக்கம் நிறைந்த நெஞ்சினனாக நிலத்தில் விழுந்து (இராமனை) வணங்கினன். (தேர் ஓட்டும்) வித்தையில் வல்லவனான சுமந்திரன் தேரில் ஏறிச் சென்றான்.

(வி - ம்) ஆரியன் என்ற சொல், இந்நாளில் பெரிய பெரிய இடர்ப்பாட்டுக்கு இலக்காகி நிற்கிறது. இச் சொல்லை கம்பர் அறிவுடையோன் என்ற பொருளில் பல இடத்திலும் வழங்கியிருக்கிறார். இச்சொல் தமிழுக்குப் புதிய சொல்லன்று. வடமொழியாளரை 'ஆரியர்' என்றும், வடமொழியை 'ஆரியமொழி' என்றும் வழங்கப் பட்டிருப்பது காணத் தக்கது. 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' (அப்பர் தேவாரம் - திருமறைக்காடு), 'வடவாரியர் படைகடந்து' (சிலப். 23 - கட்டுரை 14) என்றவற்றால் அறியலாம். ஆரியநாடு என்பதும் அது. ஆரியன் என்ற சொல்லுக்கு, பெரியோன்

726. ஆரியன் - அறிவுடையோன். இளவல் - இளையவன். சீரிய - சிறந்தன. செப்பல் - சொல்லாதே. பரிவு - அன்பு. வித்தகன் - தொழிலில் வல்லவன். சேறல் - செல்தல்.

(அகப்பொருள் நிகண்டு) அறிவுடையோன் (திவாகரம்) என்ற பொருள்களுமுண்டு. இனி ஆசாரியனாக வந்து உபதேசிக்கும் தெய்வத்தைப் 'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே' (திருவாசகம் - சிவபுரா - 64) என்பதும் அறிக. ஒருசொல் பல பொருளைக் கொண்டு நிலவுவது மொழிப்பண்பாகும். பாரதியார், ஆரியவேன் மறவர், ஆரிய நாட்டினர் என்றும், பாரதநாடு என்றும் கூறுமிடங்கள் தோறும் 'இந்தியர்' 'இந்தியா' என்ற பொருளிலேயே வழங்குதல் காண்க. இளவலும் ஆரியனே யாதலாலும் சீரிய அல்லன செப்பல் என்றதனாலும் ஈண்டு ஆரியன் என்றது அறிவுடையோன் என்ற பொருளையே தருவதாம். மொழியை யேனும் நாட்டையேனும் ஆரியன் என்ற சொல் இங்கே குறிக்கவில்லை.

சுமந்திரன் அயோத்திக்குச் செல்லல்

727 கூட்டினன் தேர்ப்பொறி ;
 கூட்டிக் கொள்முறை
பூட்டினன் புரவி ;அப்
 புரவி போம்நெறி
காட்டினன் ; காட்டித்தன்
 கல்வி மாட்சியால்,
ஓட்டினன் ஒருவரும்
 உணர்வு ருமலே. ௩௧

தேரின் உறுப்புக்களைச் சேர்த்தான். சேர்த்து ஏற்ற வகையில் குதிரைகளைப் பூட்டினான் ; அக்குதிரைகளைப் போக வேண்டியவழியில் திருப்பிவிட்டான் ; திருப்பித் தன்னுடைய பயிற்சித் திறத்தால் ஒருவரும் உணராதபடி ஓட்டினான்.

727. பொறி - உறுப்பு. கொள்முறை - ஏற்றமுறை. புரவி - குதிரை. நெறி - வழி.

(வி - ம்) தேரில் இயல்பாக உள்ளவை தவிர அலங்காரம் செய்யப்படும் பொருள்கள் தனியாக எடுத்து வைக்கப்படும். அவைகளைத் தேரில் பொருத்தினன். தேர் புறப்படும்பொழுது சத்தம் ஏற்பட்டால் மக்கள் விழித்துக்கொள்வர்; அவ்வாறாயின் இராமனில்லாத வெறுந்தேர் செல்வதை அறிவர். ஆதலால் ஒருவரும் அறியாதிருக்கும்படி திறமையாக ஓட்டினன் என்க.

நடுஇரவில் மூவரும் புறப்பட்டனர்

728 தையல்தன் கற்பும், தன்
தகவும், தம்பியும்,
மையறு கருணையும்,
உணர்வும், வாய்மையும்,
செய்யகை வில்லுமே
சேமமா கக்கொண்டு,
ஐயனும் போயினன்
அல்லின் நாப்பணே. ௩௨

சீதையின் கற்பும், தன்னுடைய மேலான குணமும், தம்பியாகிய இலக்குவனும், களங்கமற்ற கருணையும், அறிவும், சத்தியமும், செம்மையான கையிலுள்ள வில்லும் தனக்குக் காவலாக அமையப்பெற்று இராமன் இரவின் நடுப்பாதியில் (அவ்விடத்தை விட்டுக் காட்டை நோக்கி) போயினன்.

(வி - ம்) சீதை பருப்பொருளாகத் தன்னுடன் வருகிருள். அவளைத் துணையென்னது நுண்பொருளான கற்பைத் துணை என்றார். சீதை உடற்பண்பைக் காட்டிலும்

728. தையல் - பெண்: சீதை. தகவு - ஆண்மை. மை - குற்றம். உணர்வு - அறிவு. செய்ய - செம்மையையே புரிகின்ற. சேமம் - பாதுகாப்பு. அல் - இருட்டு. நாப்பண் - நடு.

குணப்பண்பில் மிக்கவள் எனக் கொள்க. "விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீர் இலங்கை வெற்பில், நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டே னல்லேன், இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை என்ப தொன்றும், கற் பெனப் படுவதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்" எனும் (திருவடிதொழுதபடலம்) அனுமன் கூற்று நோக்கத் தக்கது. முதலில் சீதையின் அசையாத மன உறுதி, அடுத் தது தன்னுடைய ஆண்மை, மூன்ருவது தொண்டின் வடிவ மான தம்பி! ஆண் பெண் சக்தியும் தொண்டும் இணையு மாயின் முழுவடிவமாகிவிடும். அன்பு அறிவு உண்மை என்ற குணசக்திகள் மூன்றையும், களைகளை நீக்க வில்லையும் உடன் கொண்டு சென்றனன் என்ருர். தகவு என்றது ஆண்மக னுக்கு இன்றியமையாது வேண்டப்படும் ஆண்மைக் குணத்தை. கருணை முதலிய நற்குணங்கள் தொடர்ந்து கூறப்படுதல் அறிக. தவத்திற்குச் செல்வோர் வில்லைத் துணைக்கொண்டு செல்லலாமோ எனின் ஆம். இராமன் பற்றற்று முத்தியை நாடித் தவம் புரிவானல்லன். ஏதோ ஒரு குறிக்கோளில் தவம் மேற்கொள்கிருன். மேலும் அரச னுகப்பிறந்த அவனது கடமை தவத்தைக் காத்தலாகும். தவம் செய்வார்க்குத் தவஞ்செய்ய முற்படும் அளவிலேயே பயன் கிட்டுவதில்லை ; தவம் இடையூறடையாமல் காக்கப்படு தலினலேயே பயன்கிட்டுவதாம். அந்தணர் முதலியோர் தவ மியற்றுங்காலை அதனைக் காத்தல் இராமனைப்போன்ற அரசரின் கடமையாம். ஈண்டு தானே தவந்தலைப்படலின் தவம் புரித லும் இடையூற்றைத் தவிர்த்துக் கொள்ளலும் தன் கடமையே யாதலின் வில்லையும் உடன்கொண்டு சென்ருன் என்க. அருச் சுனன் தவம் புரியும்போது வில்லுடனேயே இருந்தானென் பது நோக்கத்தக்கது. 'அதிர்ந்துவரு கேழலைக்கண்டு அருந்

தவத்தை அழிக்குமென அஞ்சி......விரைவினில் தன் ஒரு வில் வாங்கி, முதிர்ந்த சினத்துடன் எய்தான்' (வில்லி - அர்ச்சுனன் தவநிலை - 90). தவம் புரியச் செல்பவன், உயிர்க் கொலை புரியலாமோ எனின் ஆம். 'கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ், களைகட்டதனொடு நேர்' (திருக்குறள் 550). தீய வழியில் வளைவுறாது ஆதலின் "செய்ய கை வில்" எனப்பட்டது.

வானம் கைவிளக்குக் காட்டியது

729 *பொய்வினைக்கு உதவும் வாழ்க்கை
அரக்கரைப் பொருந்தி, அன்னார்
செய்வினைக்கு உதவும் நட்பால்
செல்பவர்த் தடுப்பது ஏய்க்கும்;
மைவிளக் கியதே அன்ன
வயங்குஇருள் துரக்க, வானம்
கைவிளக்கு எடுத்தது என்ன
வந்தது கடவுள் திங்கள். நரு

வஞ்சகத் தொழிலைச் செய்தற்கு உதவுகின்ற வாழ்க்கையையுடைய அரக்கர்களோடு சேர்ந்து அவர்கள் செய்யும் தீங்குகட்கு உதவியாக இருந்துவருகிற நேசத்தினாலே, அவர்களின் அழிவுக்குக் காரணமாகச் செல்லும் இராமன் முதலிய மூவரையும் தடுப்பதை ஒத்ததும், கருநிறமுள்ள மையை விளக்கப்படுத்திய மாதிரி விளங்குவதுமான இருட்டு நீங்க, வானமானது ஒரு கைவிளக்கை எடுத்துக்காட்டுவதுபோல தெய்வத்தன்மை பொருந்திய சந்திரன் புறப்பட்டது.

(வி-ம்) வஞ்சக வாழ்க்கையை யுடையவர் அரக்கர். அவர்களின் செயலுக்கு இரவுநேரம் வாய்ப்புடையது.

---

729. பொய் - வஞ்சகம். ஏய்க்கும் - ஒக்கும். மை - கண்ணுக்கிடும் மை. வயங்கு - விளங்குகிற. துரக்க - நீங்க.

எனவே 'செய்வினைக்குதவும் நட்பு' என்றார். இராமன் மெதுவாக இருளில் செல்கிறான். சென்றால் அரக்கரை அழிப்பான். இருள் தன் நண்பர்களான அரக்கரை அழிக்க வொட்டாமல் தடுப்பதைப்போல் நெருங்கி வழி மறிக்கிறது. இராமன் முதலியோர்க்கு வழிகண்டு நடக்க முடியவில்லை யென்றபடி. அரக்கரின் நண்பன் தடுத்தால் தேவரின் நண்பனான சந்திரன் உதவிக்கு வருவது இயல்புதானே ! இருளில் தடவி நடக்க முயல்வார்க்கு ஒரு கைவிளக்கைக் காட்டினாற்போல சந்திரன் தோன்றினான். மை ஒரு குழம்புப் பொருள் ; அதனை விளக்குவது எப்படி ? மாபெருங் கவிகளின் கவிதை வேகம் இப்படி மலர்கிறது. சொல்லையும் பொருளையும் கடந்து உள்ளம் பேசுவதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். எதிர்பாராதபோது கிடைத்த எல்லை கடந்த பேருதவியாதலால் 'கடவுள் திங்கள்' என்றார். எல்லை கூறமுடியாத ஒன்றற்கு உவமை கடவுள்தான். மனிதச் செயலுக்கும் அறிவுக்கும் எட்டாதது எதுவோ அது கடவுள் எனப்பட்டதென்க.

நிலவு பரவியது

730 அஞ்சனக் குன்றம் அன்ன
அழகனும், அழகன் தன்மேல்
எஞ்சல்இல் பொன்போர்த் தன்ன
இளவலும், இந்து என்பான்
வெஞ்சிலைப் புருவத் தாள்தன்
மெல்லடிக்கு ஏற்ப, வெண்ணூல்
பஞ்சிடைப் படுத்தால் என்ன
வெண்ணிலாப் பரப்பப் போனார். ௩௪

---

730. அஞ்சனம் - கண்மை. எஞ்சல் - குறைதல். இந்து - சந்திரன். வெம் - கொடுமையான. இடை - கல்லுக்கும் காலுக்கும் இடையே. படுத்தல் - பொருந்தச் செய்தல்.

அஞ்சன மலையைப் போன்ற அழகனாகிய இராமனும், இராமன் திருமேனியின்மேல் மாற்றுயர்ந்த பொன்னைப் போர்த்தினாற் போன்ற இலக்குவனும், வில்லைப் போன்ற புருவத்தையுடைய சீதையினது மெல்லிய பாதங்களுக்குப் பொருந்த நூற்கப்படும் வெண்பஞ்சை காலுக்கும் தரைக்கும் இடைப்படுமாறு வழி யெங்கும் பரப்பினாற்போல, சந்திரன் என்று சொல்லப்படுகிறவன் வெள்ளிய நிலவைப் பரப்பச் சென்றார்கள்.

(வி - ம்) இராமனைப் போலவே உயரம் வடிவம் யாவற்றிலும் வேற்றுமையற்றிருக்கிறான். ஆனால் நிறம்மட்டும் பொன்னிறம் பெற்றவன். இராமனது உடலுக்குத் தங்கத்தால் அங்கி செய்து மூடினால் எவ்வாறிருக்குமோ அவ்வாறு இலக்குவன் விளங்குகிறான் என்பதை 'இராமன்தன்மேற் பொன் போர்த்தன்ன இளவல்' என்றார். இனி இராமன் முன்னே செல்ல இலக்குவன் பின்னே சென்றால் இராமனே செல்கிறான். ஆனால் அவன் உடலின்மேல் பொன் அங்கி போர்த்திருக்கிறான் என்று சொல்லும்படி தோன்றும் என்பதொன்று. இரவும் பகலும் எண்ணமும் செயலும் இராமனேயாக இலக்குவன் விளங்குவதால் அவன் இராமனேயாகத் தொண்டென்னும் பணியை மேற்போட்டுக் கொண்டவன் என்றும் உரைக்கலாம். தாதுப் பொருள்களில் பொன் சிறந்தாற்போல பணிகளில் சிறந்தது தொண்டு ஆதலால் 'பொன் போர்த் தன்ன' என்றாரெனல் பொருந்தும். 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிது' (ஒளவையார்.) இராமனைக் காட்டிலும் ஒருபடி தொண்டனான இலக்குவனைக் கவி உயர்த்திப் பேசியிருக்கிறார் என்க. சீதையின் பாதம் கல்லிலும் கரட்டிலும் நடக்கத் தாங்காது என்று, விண்மதியே இரக்கமுற்றுப் பஞ்சைப் பரப்பி வைத்தாற்போல

வெள்ளிய நிலவைப் பரப்பியது என்றார். சீதையின் பாதம் படுதற்கு சனகனது அரண்மனையின், அலங்கார மண்டபமே தகுதியற்றதென்று மலர்பரப்ப நினைத்த கவியுள்ளம் (' இவள் பாதம், மெல்லிய உறைக்குமென அஞ்சி வெளி எங்கும், பல்லவ மலர்த்தொகை பரப்பினளென ' பாடல் 347) இங்கே கண்டதைக் கொண்டு உதவிசெய்ய முன்வருகிறது. இவ் வுணர்ச்சி உணர்ந்து பாராட்டி அனுபவிக்கத் தக்கதாம். கடுங்கோடை வெயிலில் வழிநடப்போர் ஆற்றாதபோது அருகி லுள்ள செடிகளை ஒடித்துப்போட்டும் மேல் வேட்டியைப் போட்டும் அதன்மேல் பெண்களை நிறுத்தி ஆற்றுவர் என்பது அறிந்ததொன்று. வெஞ்சிலை இயற்கையடை.

விடியுமுன் இரண்டு யோசனை சென்றனர்

731 பரிதிவா னவனும் கீழ்பால்
பருவரை பற்று முன்னம்,
திருவின்நா யகனும் தென்பால்
ஓசனை இரண்டு சென்றான் ;
அருவிபாய் கண்ணும், புண்ணாய்
அழிகின்ற மனமும் தானும்
துரிதமான் தேரில் போனான்
செய்தது சொல்லல் உற்றாம். ௩௫

சூரியன் கிழ்த்திசையில் பெரிய மலையை அடைவதற்கு முன்பு, செல்வத்துக்குத் தலைவனான இராமனும் தென்திசை யில் இரண்டு யோசனை சென்றான். அருவியைப் போலப் (கண்ணீர்) பெருகுகின்ற கண்ணும், புண்ணாக வருந்து கின்ற மனமும், தானுமாக விரைவில் செல்கிற குதிரை

731. பரிதிவானவன் - பருதியாகிய வானவன் : சூரியன். பரு - பெரிய. பற்றுதல் - அடைதல். ஓசனை - யோசனை : (நாற் பது மைல் கொண்டதென்பர்). துரிதம் - விரைவு. மான் - குதிரை.

பூட்டிய தேரில் சென்றவனுன சுமந்திரன் செய்ததைச் சொல்லுகிறேம்.

(வி - ம்) இராமனும் சீதையும் சிறு வருத்தமும் இல்லாமல் மகிழ்ச்சியோடு கொடுமையான காட்டினுள் சென்றனர். ஆனல் அயோத்தி நகருக்குச் சென்ற சுமந்திரனே கண் புண்ணுகி மனம் அழிந்து செல்கிருன். அறத்தில் பற்றுக்கொண்டு உறுதிப்பட்டவர் வருந்துவதில்லே யென்பதும் அறத்தில் கலங்கிய மனமுடையவர் வருத்தத்திலிருந்து நீங்குதற்கில்லே யென்பதும் இங்கு விளக்கமுறும்.

சுமந்திரன் அயோத்தி அடைதல்

732 கடிகையோர் இரண்டு மூன்றில்
கடிமதில் அயோத்தி கண்டான்;
அடியிணே தொழுதான் ஆதி
முனிவனே; அவனும் உற்ற
படியெலாம் கேட்டு, நெஞ்சில்
பருவரல் உழந்தான்; முன்னே
முடிவுஎலாம் உணர்ந்தான், 'அந்தோ!
முடிந்தனன் மன்னன்' என்ருன். ௩௪

ஆறு நாழிகை நேரத்தில் காவலாக அமைந்த மதிலேயுடைய அயோத்தியை அடைந்தான். பழைமையான வசிட்ட முனிவரின் திருவடிகளில் வணங்கினுன். முனிவரும் நடந்தவற்றைக் கேட்டு மனத்திலே துன்பமடைந்தார். இனி இது எவ்வாறு முடியும் என்பதை யெல்லாம் முன்னதாகவே உணர்ந்தவராய், 'ஐயோ! அரசன் இறந்துபோனுன்' என்று (வாயினுற்) கூறினுர்.

---

732. கடிகை - நாழிகை. கடி - காவல். அடியிணே - இரு பாதங்கள். படி - விதம். பருவரல் - துன்பம். உழத்தல் - வருந்தல்.

(வி - ம்) ஏற்கெனவே இவ்வாறுதான் முடியப் போகிறது என்று எண்ணியிருந்த முனிவர், எண்ணியபடி தான் முடிந்தது; அரசன் இனிப் பிழைக்கமாட்டான் என்றார். உறுதிபற்றி முடிந்தனன் என இறந்த காலத்தாற் கூறப் பட்டது.

சுமந்திரன் அரசனை அடைதல்

733 நின்றுஉயர் பழியை அஞ்சி
நேர்ந்திலன் தடுக்க; வள்ளல்
ஒன்றும்நான் உரைத்தல் நோக்கான்;
தருமத்திற்கு உறுதி பார்ப்பான்;
வென்றவர் உளரே மேலை
விதியினை! என்று விம்மிப்
பொன்திணி மன்னன் கோயில்
சுமந்திர னோடும் போனான். ௩௭

(மன்னன்) நிலைநின்று வளரும் பழிக்குப் பயந்து இராமனைக் காடு செல்லாமல் தடுக்க உடன்படவில்லை. வள்ளலாகிய இராமன் நான் எடுத்துக் கூறியதை நோக்கினானில்லை; அறத்தின் நிலைபேற்றையே பார்ப்பவனானான். பழைய விதியை யார் வென்றவர் என்று (வருத்தத்தால்) விம்முதலடைந்து, பொன்னால் அலங்கரிக்கப்பட்டுள்ள அரசனிருக்கிற அரண்மனைக்குச் சுமந்திரனையும் அழைத்துச் (வசிட்ட முனிவர்) சென்றார்.

---

733. நேர்தல் - உடன்படல். வள்ளல் - இராமன். உளரே - உளரோ. மேலை - முன்னாள்.

இராமன் வரவில்லை யென்பதை அங்குள்ளார் உணர்தல்

734 தேர்கொண்டு வள்ளல் வந்தான்
என்றுதம் சிந்தை உந்த,
ஊர்கொண்ட திங்கள் என்ன
மன்னனை உழையர் சுற்ற,
கார்கொண்ட மேனி யானைக்
கண்டிலர்; கண்ணில் வற்ரு
நீர்கொண்ட நெடுந்தேர்ப் பாகன்
நிலைகண்டே நிலையில் தீர்ந்தார். ௩அ

தேரில் ஏறிக்கொண்டு இராமன் வந்துவிட்டான் என்று (நினைத்தலால்) தம்முடைய மனம் தூண்டிச் செலுத்த, சந்திரனை ஊர்கோள் சூழ்ந்தாற்போல தயரத மன்னனை அருகிலிருப்போர் சூழ்ந்துவர, (சூழ்ந்தவர்கள்) நீருண்ட மேகத்தை யொத்த திருமேனியையுடைய இராமனைக் கண்டாரல்லர்; கண்களில் இடையறாது நீரைப் பெருக்கிக்கொண்டிருக்கிற தேர்ப்பாகனான சுமந்திரனின் நிலையைக் கண்டு தம் நிலைகலங்கிப் போனார்கள்.

(வி - ம்) இராமனோடு சென்ற நகர மக்கள் யாரும் இன்னும் வந்து சேரவில்லை. அரசனை விட்டுப் பிரிய முடியாத மந்திரிகள் முதலியோர் இருந்தனர். அவர்கள் தாம் இரதத்தைக் கண்டதும் ஓடிச் சூழ்ந்தனர். இராமன் வந்துவிட்டான் என்று கருதிய கருத்து இடிந்ததால் உணர்வற்றுப் போனார்கள் என்க.

---

734. ஊர் - ஊர்கோள்: பரிவேடம்: (சிலபோது சந்திரனைச் சுற்றி வட்டமாகச் சூழ்ந்து தோன்றுவது). உழையர் - மந்திரிகள். வற்ரு - பெருக்கு வற்ருத. நிலை - தம்நிலை.

அரசன் மயக்கம் நீங்குதல்

735 இரதம்வந் துற்ற தென்றுஆங்கு
யாவரும் இயம்ப லோடும்
வரதன்வந் துற்ருன் என்ன,
மன்னனும் மயக்கம் தீர்ந்தான் ;
புரைதபு கமல நாட்டம்
பொருக்கென விழித்து, நோக்கி,
விரதமா தவனைக் கண்டான் ;
'வீரன்வந் தனனோ ?' என்ருன். ௩௯

தேர் வந்து சேர்ந்தது என்று அங்குள்ள யாவரும் சொன்னவுடனே இராமன் வந்துசேர்ந்தான் என்று எண்ணித் தயரத மன்னனும் மயக்கம் தெளிந்தான். மாசற்ற தாமரை மலர்போன்ற கண்களைத் திடீரென்று விழித்துப் பார்த்து (எதிரே நின்ற) நோன்புகளை மேற்கொண்ட பெரிய தவத்துக் குரிய வசிட்டரைக்கண்டான். 'வீரன் வந்துவிட்டானு' என்ருன்.

துன்பம் பொருமல் வசிட்டர் வெளியேறினர்

736 இல்லைஎன்று உரைக்கல் ஆற்ருன்
ஏங்கினன் முனிவன் நின்ருன் ;
நல்லவன் முகமே நம்பி
நடந்திலன் என்னும் மாற்றம்
சொல்லலும், அரசன் சோர்ந்தான் ;
துயர்உறும் முனிவன் நான்இவ்
அல்லல்காண் கில்லேன் என்ன,
ஆங்குநின்று அகலப் போனன். ௪0

---

735. வரதன் - இராமன். புரை - குற்றம். தபு - தவிர்ந்த. நாட்டம் - கண். பொருக்கெனல் - விரைவுக் குறிப்பு.

736. ஆற்ருன் - முடியாதவனய். நம்பி - ஆணிற் சிறந்தவன்: இராமன். நடத்தல் - திரும்பிவருதல். மாற்றம் - சொல். அல்லல்- துன்பம். காண்கில்லேன் - காணமாட்டேன்.

இராமன் வரவில்லை என்று சொல்ல முடியாமல் ஏக்கங் கொண்டு முனிவர் நின்ருர். நல்லவனாகிய முனிவரது முகமே இராமன் வரவில்லை என்ற சொல்லைச் சொல்லியது போல உணர்த்த அரசன் சோர்வடைந்தான். துயரடைந்த முனிவர் 'நான் இந்தத் துன்பத்தைக் கண்டு சகிக்கமாட்டேன்' என்று வெளியே போய்விட்டார்.

அரசன் ஆவி நீங்குதல்

737 நாயகன் பின்னும் தன்தேர்ப்
பாகனை நோக்கி, 'நம்பி
சேயனே அணிய னே'என்று
உரைத்தலும், தேர்வ லானும்
'வேய்உயர் கானம் தானும்,
தம்பியும், மிதிலைப் பொன்னும்
போயினன்' என்ருன் என்ற
போழ்தத்தே ஆவி போனன். சுக

அரசன் மீண்டும் தன்னுடைய தேர்ப்பாகனை சுமந்திரனைப் பார்த்து, 'இராமன் தூரத்தில் இருக்கிருனு, அருகில் இருக்கிருனு' என்று கேட்டவுடன், சுமந்திரன், 'மூங்கில் உயர்ந்து அடர்ந்திருக்கிற காட்டினுள் தானும் தம்பியும் மிதிலைத் தங்கமும் போய்விட்டனர்' என்று சொன்னன். என்று சொல்லி முடிக்கும்போதே அரசன் உயிர் நீங்கி (இறந்து) விட்டான்.

(வி - ம்) முனிவர் வருந்தி நிற்பதிலிருந்து இராமன் திரும்பி வரவில்லை என்று அறிந்தானுதலால், சுமந்திரனை நோக்கிப் பரிதாபமாக நீண்டதூரம் போய்விட்டானு? சிறு

---

737. நாயகன் - அரசன். சேய்மை - தூரம். அண்மை - அருகு. வேய் - மூங்கில். மிதிலைப்பொன் - மிதிலை அரசன் மகளான பொன்போன்ற சீதை.

தூரத்தில் இருக்கிறுன என்று கேட்டான். திரும்பி வருவதில்லை யென்று போனவன் எவ்வளவு தூரத்திலிருந்தாலென்ன வென்று தயரதனின் அன்புள்ளம் நினைக்கவில்லை. சிறிது தூரத்தில் இருக்கிறுன் என்ருவது வரும் பதிலைக் கேட்கலாமென்று நினைத்தான். அதுவுமில்லை. நடுக் காட்டுக்குள் போய்விட்டார்கள் என்ற பதில் காதிற் புகும்போதே உயிர் வெளியேறிவிட்டது. இச்சொற்கள் காதில் நுழைந்து தள்ள மூச்சு வெளியேறி விட்டதென்பதை 'என்ற போழ்தத்தே' என்ருர். சீதையின் பரிதாபத்தைக் கண்டு, மழலை உள்ளத்தையும் பேச்சையும் கேட்டுத் துடித்த சுமந்திரன் சீதை என்று சொல்வான்? 'மிதிலைப் பொன்னும்' என்ருன். இலக்குவனுக்கும் சீதைக்கும் உயிர் இராமனின் உயிரே என்பான் 'போயினன்' என்ருன். 'தன்ன தாருயிர்த் தம்பியும் தாமரைப் பொன்னுந் தானுமோர் தேர்மிசைப் போயினன்' என்பது காண்க. (பாடல் 696).

கோசலை துடித்தல்

738 உயிர்ப்பிலன் துடிப்பும் இல்லன்
என்றுணர்ந்து, உருவம் தீண்டி,
அயிர்த்தனள், நோக்கி மன்னற்கு
ஆருயிர் இன்மை தேறி,
மயில்குலம் அனைய நங்கை
கோசலை மறுகி விழ்ந்தாள் ;
வெயில்சுடு கோடை தன்னில்
என்பிலா உயிரின் வேவாள். சஉ

738. உயிர்ப்பு - மூச்சு. துடிப்பு - நாடித் துடிப்பு. அயிர்த்தல் - ஐயப்படுதல். தேறி - அறிந்து. மயில் குலம் - குலமயில். நங்கை கோசலை - நங்கையாகிய கோசலை. மறுகுதல் - கலங்குதல். வெயில் சுடு - வெயிலால் சுடப்படுகிற. என்பிலா உயிர்-புழு. வேதல்- நெருப்பிற்கிடந்து துடித்தல். என்பு - எலும்பு.

மூச்சு நின்றுவிட்டது, நாடியின் துடிப்பும் நின்றுவிட்டது என்பதை உணர்ந்து, ஐயப்பட்டு உடலைத்தொட்டுப் பார்த்து மன்னனுக்கு உயிர்போய்விட்டதென்பதை அறிந்து உயர்ந்த மயிலைப்போன்றபெண்ணான கோசலை மனங்கலங்கிக் கீழே விழுந்து கோடை காலத்தில் வெயிலில் கிடந்து துடிக்கும் புழுவைப்போலத் துன்பத்தால் துடித்தாள்.

இதுவும் அது

739 *தானே தானே தஞ்சம்
இலாதான் தகவில்லான்
போனான் போனான் எங்களை
நீத்துஇப் பொழுதுஎன்னு
வான்நீர் சுண்டி மண்அற
வற்றி மறுகுற்ற
மீனே என்ன மெய்தடு
மாறி விழுகின்றாள். சந

அடைக்கலப் பொருளைக் கைவிட்டவன்; அருளில்லாதவன். இப்பொழுது எங்களைக் கைவிட்டு விட்டுத் தானாகவே இறந்துபோனான் என்று, மழையும் பெய்யாமல் ஊற்று நீரும் வற்றியகுளத்தில் கிடந்து துடிக்கும் மீனைப் போல உடல் நடுங்கி விழுகிறாள்.

(வி - ம்) உலகம் இவனை அடைக்கலமாகக் கொண்டிருக்கிறது. அப்பொருளைக் காப்பாற்ற இராமனும் இல்லை, பரதனும் இல்லை; இந்நிலையில் அரசன் நோய் நொடியில்லாமலிருக்கும்போதே தற்கொலைசெய்து கொண்டானென்று கருதுகிறாளென்பதை ‘தானே தானே போனான் போனான்’

739. தஞ்சம் - அடைக்கலம். தகவு - அருள். நீத்து - விட்டுவிட்டு. சுண்டுதல் - வெப்பத்தால் வற்றிப்போதல். வற்றுதல் - வளங்குறைந்து வற்றுதல்.

என்றாள். இத்தனை உயிரிடத்தும் அருள் ஏதாவது சிறிதிருந்தால் உயிர்போகாதென்றபடி. உலகைக் காக்கும் பெரிய பொறுப்பை ஏற்ற அரசன் தன்மகன் பிரிந்த வருத்தத்தைப் பெருக்கித் தன்னலங்கொண்டு இறப்பது முறையன்று. மகனிடங்கொண்ட அன்பு உலகினரிடம் கொள்ளும் அருளைக்கலைத்து விடுதல் முறையாமோ என்க. எங்களை என்பது உலக மக்களை உடன்படுத்தி நின்றது. வானத்திலிருந்து பெய்த மழையும் நின்றுவிட்டது ; குளத்து நீரும் வற்றிவிட்டது என்பதில் வானநீர் இராமனையும், குளத்து நீர் தயரதனையும் குறிக்கும். மக்களுக்கு இரண்டு கிடைத்தும் ஒன்றுமிலதாயிற்று. கிடைத்ததும் போயிற்று ; அதோடு இருந்ததும் போயிற்று என்றவாறு.

மன்னன் மார்பில் துவள்கிறாள்

740 வடித்தாழ் கூந்தல் கேகயன்
மாதே! மதியாலே
பிடித்தாய் வையம்! பெற்றனை
பேரா வரம்! இன்னே
முடித்தாய் அன்றே மந்திரம்!
என்றாள் ; முகில்வாய்மின்
துடித்தால் என்ன மன்னவன்
மார்பில் துவள்கின்றாள். ௪௪

அழகுபெற்றுத் தொங்குகிற கூந்தலையுடைய கைகேயி ! புத்தி சாலித்தனத்தாலே உலகைக் கைப்பற்றினாய்! மாற்ற முடியாத வரமும் பெற்றாய்! இவ்விடத்திலே நினைத்த

740. வடித்தல் - அழகு பெறுதல். பேராவரம் - மாற்ற முடியாத வரம். மந்திரம் - எண்ணம். முகில் - மேகம். வாய் - இடம். துவள்தல் - நெருப்பில் வாடும் கொடி புரள்வதைப்போல நெளிதல். இன்னே - இவ்விடத்திலே.

காரியத்தை முடித்துவிட்டாய்! என்று கூறி, மேகத்தினிடையே துவளுகிற மின்னல் என்று சொல்லும்படி மன்னனுடைய மார்பில் கிடந்து துயரத்தால் துவண்டாள்.

(வி - ம்) இவளின் புத்தி, செயல், யோசனை எல்லாம் சேர்ந்து வாழ்வை வேரோடே சாய்த்து விட்டனவே! என்ற ஏக்கத்தில் நீ நினைத்ததையெல்லாம் செய்து முடித்த திறமை நன்றாக இருக்கிறது என்று இகழ்ந்தாள் என்க. பொதுநலங் கருதும் அருளும் அறிவும் கலவாமல் புத்திக்கூர்மை கொண்டு தன்னலங்கருதிச் செய்ததாகலின், 'மதியாலே பிடித்தாய் வையம்' எனப்பட்டது.

விண்ணுக்கு விருந்து

741 அருந்தே ரானைச் சம்பர
னைப்பண்டு அமர்வென்றாய்;
இருந்தார் வானோர் உன்அரு
ளாலே இனிதுஇந்நாள்;
விருந்தா கின்றாய் என்றனள்
வேழத்து அரசுஒன்றைப்
பிரிந்துஆர் அன்பில் தாழ்பிடி
என்னப் பிரிவுற்றாள். ௬௫

(தொடர்ந்து சென்று வெல்லுதற்கு) அரிய தேரை யுடையவனாகிய சம்பராசுரனை முன்னாளில் போரில் வெற்றி கொண்டாய்! (அதனாலே) வானவர் உன் கருணையினாலே இனிதாக வாழ்ந்திருந்தனர். இன்று அவர்களின் விருந்தினனாகச் செல்கிறாய்! என்றாள், அரச யானையைப் பிரிந்து

---

741. பண்டு - முன்னாளில். அமர் - போர். வேழத்து அரசு - அரசயானை. பிரிந்தார் - பிரிந்து + ஆர். ஆர் - நிறைந்த. தாழ் - தளர்கின்ற. பிடி - பெண்யானை.

நிறைந்த அன்பினல் மனந்தளர்கின்ற பெண்யானையைப் போலப் பிரிவுற்ற கோசலை.

(வி - ம்) நாட்டைப் பறிகொடுத்து வருந்திய தேவர்க்கு உதவிசெய்து மீட்டுக் கொடுத்தாய். இன்று உன்னுடைய நாட்டையும் வலியையும் விட்டு, அவர்களின் நாட்டில் விருந்தாளியாகச் செல்கின்றனையே இதுவோ நீதியென்று வருந்தினளென்க.

தேவியர் வந்தனர்

742 *ஆழி வேந்தன் பெருந்தேவி
அன்ன பன்னி அழுதுஅரற்ற,
தோழி அன்ன சுமித்திரையும்
துளங்கி ஏங்கி உயிர்சோர,
ஊழி திரிவது எனக்கோயில்
உலையும் வேலை, மற்றுஒழிந்த
மாழை உண்கண் தேவியரும்
மயிலின் குழாத்தின் வந்துஇரைத்தார். ௪௬

ஆட்சியையுடைய சக்கரவர்த்தியின் மூத்த மனைவி அவ்வாறு பலகூறி அழுது புலம்ப, அவளின் தோழிபோன்ற சுமித்திரையும் நடுங்கி ஏங்கி மயக்கமடைய, யுகம் மாறுகின்றது என்று சொல்லும்படி அரண்மனையே கலங்குகிற போது, மற்றுமுள்ளவரான மாவடுவை ஒத்த மையணிந்த கண்ணையுடைய தேவிமார்களும் மயிலின் பெருங்கூட்டத்தைப் போலவந்து பேரொலியுடன் அழுதார்கள்.

---

742. பெருந்தேவி - மூத்தமனைவி. அரற்றல் - புலம்பல். துளங்கி - நடுங்கி. உயிர்சோரல் - மயக்கமுறல். ஊழி - யுகம். கோயில் - அரண்மனை. உலைதல் - கலங்குதல். வேலை - பொழுது. மாழை - மாவடு. இரைத்தல் - சத்தமிடல். ஆழி - ஆட்சி.

(வி - ம்) ஒழிந்த தேவியர் என்றது கோசலை முதலிய மூவரை ஒழிந்த மற்றை அறுபதினுயிரம் தேவியரை. மூவருள் அழுதவர் இருவரே என்க. கைகேயி அழவுமில்லை ; வருந்தவுமில்லை என்றவாறு.

தீக்குளிக்க உறுதிகொண்டனர்

743 துஞ்சி னானைத் தம்உயிரின்
துணையைக் கண்டார் ; துணுக்குற்றார் ;
நஞ்சு கவர்ந்தால் எனஉடலம்
நடுங்கா நின்றார் ; என்றாலும்
அஞ்சி அழுங்கி விழுந்திலரால் ;
அன்பில் தறுகண் பிறிதுஉண்டோ ?
வஞ்சம் இல்லா மனத்தானை
வானில் தொடர்வான் மனம்வலித்தார். எஎ

இறந்தவனான தம்முடைய உயிர்த்துணைவனைக் கண்டு திடுக்கிட்டனர் ; நஞ்சு பரவினாற்போல உடல் நடுங்கினர் ; என்றாலும் பயந்து துயரப்பட்டு மயங்கி விழவில்லை. அன்பைக் காட்டிலும் வீரம்வேறு ஒன்று உண்டா ? வஞ்சனை இல்லாத மனத்தினனான மன்னனை வானுலகத்தில் சென்று அடைவதென்ற மனவுறுதியைக் கொண்டனர்.

(வி - ம்) அன்பு, நெகிழ்ந்தகுண மென்று கருதப்படுகிறது. நெருங்கிய அன்புக்கு இடையூறு ஏற்படுமானால் அங்கே தோன்றுகிற வீரத்துக்கு இணை வேறொன்றில்லை. தயாதனிடம் மிக்க அன்பினைக் கொண்ட இப்பெண்களுக்குச்

---

743. துஞ்சினான் - இறந்தவன். துணுக்கம் - திடுக்கிடல். அழுங்குதல் - மனம் வருந்தல். தறுகண் - அஞ்சாமையாகிய வீரம். (' கல்வி தறுகண் இசைமை கொடை எனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே ' - தொல் - பொருள் 257.)

சாவு விளையாட்டாகிவிட்டதென்க. தீக்குளிப்பதென்று முடிவுசெய்து விட்டனர். எனவே, தாங்கமுடியாத துன்பம் தோன்றி மறைந்துவிட்டது. அன்பு என்ற குணம் நெகிழ்ச்சி யுடையது. பிறர் துன்புறுதலைக்கண்டு வருந்தி மனங்கரையும் படி செய்வது. ஆனால் இங்கே கொடுமையுள் பெரிய கொடுமையான தற்கொலை கணவனிடத்துக்கொண்ட அன்பின் காரணமாக நிகழவிருக்கிறது. ஆதலின் 'அன்பில் தறுகண்பிறிதுண்டோ' என்றார். 'அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார், மறத்திற்கும் அஃதே துணை' (திருக்குறள் 76) என்பதும் நோக்கத்தக்கது.

வசிட்டரின் துயரம்

744 மாத ரார்கள் அறுபதினா
யிரரும் உள்ளம் வலித்திருப்பக்
கோதில் குணத்துக் கோசலையும்
இளைய மாதும் குழைந்துஏங்க
சோதி மணித்தேர்ச் சுமந்திரன்சென்று
அரசன் தன்மை சொலவந்த
வேத முனிவன் விதிசெய்த
வினையை நோக்கி விம்முவான். சஅ

அறுபதாயிரம் பெண்களும் மனவுறுதி கொண்டிருக்க, குற்ற மற்ற குணத்தையுடைய கோசலையும் சுமித்திரையும் வருந்தி ஏக்கமுற, ஒளியுள்ள மணிகள் பதித்த தேர்ப் பாகனான சுமந்திரன் சென்று அரசனது நிலையைச் சொல்ல, அரசன் கிடக்குமிடத்திற்கு வந்த வேதமறிந்த முனிவாாகிய வசிட்டர், விதி செய்த செயலை எண்ணி வருத்தத்தால் விம்மினார்.

---

744. கோது இல் - குற்றம் அற்ற. குழைந்து - வருந்தி.

தயிலக்கடல்

745 [செய்யக் கடவ செயற்குரிய
சிறுவர் ஈண்டை யார்அல்லர்;
எய்தக் கடவ பொருள்எய்தாது
இகவா என்ன, இயல்புஎண்ணி,
மையல் கொடியாள் மகன்ஈண்டு
வந்தான் முடித்தும் மற்றுஎன்ன,
தையல்கடல் நின்று எடுத்துஅவனைத்
தயிலக் கடலின் தலைஉய்த்தார். சகூ

செய்ய வேண்டிய செயலுக்கு உரிய மக்கள் இங்கே இருந்தாரல்லர்; வரக்கூடியவை வாராமல் தடைப்படாது என்று கருதி, இனி இயலும் காரியத்தை ஆலோசித்து, அறிவு மயங்கிய கொடியவளான கைகேயியின் மகன் இங்கே வந்து சேர்ந்த பிறகு முடித்துக்கொள்ளலாம் என்று (முடிவு செய்து,) பெண்கள் கூட்டத்தின் நடுவிற் கிடந்த அரசனது உடலை தைலக் கொப்பரையில் இட்டுவைத்தனர்.

(வி - ம்) பிள்ளைகளில் ஒருவருமில்லையே. அரசனது உடலை என்ன செய்வது என்ற கேள்வி பிறந்தது. இராம னும் இலக்குவனும் வரமாட்டார். பரதன் வரட்டும். பிறகு முடிவு செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தனர். அதுவரை உடல் கெடாதிருக்கும்படி தைலத்தில் போட்டு வைத்தனர். மனைவியர் ஒரு கடலைப் போலப் பெருகியிருக்க அவர்கட் கிடையில் உடல் கிடந்தபடியால் தையற் கடல் எனப்பட்டது. இராமன் பிறந்ததாலும், சீதையை மணங்கொண்டதாலும், பரசுராமனை வென்றதாலும், முடிசூட இணங்கியதனாலும்

---

745. கடவ - கடமைப்பட்டவை. இகவா - தீரா. இயல்பு - செய்யவேண்டிய செயல். மையல் - மயக்கம். முடித்தும் - முடிப் போம். தலை - இடம்.

தயரதன் இன்பக் கடலிலேயே கிடந்து திளைத்தான்; பின்னர் இராமன் பிரிந்ததால் துயர்க் கடலில் கிடந்தான்; உயிர் போனபிறகு தையல் கடலில் கிடந்தான்; இனித் தைலக் கடலில் கிடக்கிறான் என்ற நயம் நோக்கத்தக்கது. ஐயப் பொருளில் 'வந்தால் முடித்தும்' எனக் கொள்ளல் பொருந்தாது பரதன் வருதல் நிச்சயமாதலின்,

பரதனுக்கு ஓலை

746 தேவி மாரை இவற்குரிமை
செய்யும் நாளில் செந்தியில்
ஆவி நீத்திர் என நீக்கி,
அரிவை மார்கள் இருவரையும்
தாவில் கோயில் தலைஇருத்தி,
தண் தார்ப் பரதற் கொண்டுஅணைக என்று
ஏவி னான்மன் னவன்ஆணை
எழுதும் முடங்கல் கொடுத்துஅவரை. ௩0

(அரசனது) அறுபதாயிரம் மனைவியரையும் அரசன் உடலுக்குச் சடங்கு செய்கிற நாளில் செந்நிறமான நெருப்பில் உயிரைவிடலாம் என்று விலக்கி, கோசலையையும் சுமித்திரையையும் குற்றமற்ற (அவரவரது) அரண்மனையில் இருக்கும்படி செய்து, குளிர்ந்த மாலையணிந்துள்ள பரதனை அழைத்துவந்து சேர்க என்று கூறி, மன்னவன் உத்தரவு என்று எழுதப்பட்ட ஓலையைக் கொடுத்துத் தூதுவரை (வசிட்டர்) அனுப்பினர்.

(வி-ம்) அரசன் உடல் தீயிலிடப்படும்போது நீங்கள் உடன்கட்டை ஏறலாம் என்று அறுபதாயிரவர்க்குக்

---

746. இவற்கு - தயரதனின் உடலுக்கு. உரிமை - உரிமையுடையோன் செய்யும் ஈமச்சடங்கு. தா - குற்றம். தலை - இடம். ஆணை - கட்டளை.

கூறப்பட்டது. மனமகிழ்ச்சியோடு தீக்குளிப்பராதலின் வெந்தீயைச் 'செந் தீ' என்ருர். எவர் சொல்லேயும் கேளாத நிலேயில் கைகேயி நின்ருளாதலின் இருவரையும் என்று பிரித்துக் குறிப்பிட்டார் என்க. மன்னவன் இறந்த பிறகு அவன் பெயரால் உத்தரவு செலுத்தல்கூடுமா என்ருெரு வினு எழுதல்கூடும். அரசன் இறந்தால் மற்ருெருவன் அரசனுகும் வரை பழைய மன்னன் பெயராலேதான் எல்லா நடவடிக்கையும் நடைபெறவேண்டும். எனவே அரசு முறை நடத்துவோர் நிருவாக முறையில் ஓலே அனுப்பினர். ஆட்சிமுறையில் அனுப்பப்படும் கட்டளேகள் அரசனுல் அனுப்பப்படுவதாகவே கொள்ளப்படும். அவ்வாறே வந்து சேரும்படி பாதனுக்கு ஒரு கட்டளே அனுப்பப்பட்டது. அது இங்கே 'மன்னவன் ஆணே எழுதும் முடங்கல்' எனப்பட்டது. 'முடங்கல் கொடுத்து ஏவினுன்' என்றமையால் 'அவரை' என்றது தூதுவரை எனக் கொள்ளப்படும்.

பொழுது விடிந்தது

747　மீனுர் வேலே முரசு இயம்ப
　　　விண்ணேர் ஏத்த மண் இறைஞ்சத்
தூ நீர் ஒளிவாள் புடை இலங்கச்
　　　சுடர்த்தேர் ஏறித் தோன்றினுன்;
'வானே புக்கான் அரும்புதல்வன்
　　　மக்கள் அகன்ருர் வரும் அளவும்
யானே காப்பென் இவ் உலகை'
　　　என்பான் போல எறிகதிரோன்.　　௫௪

மீன்கள் பொருந்திய கடலாகிய முரச வாத்தியம் முழங்க, தேவர்கள் துதிக்க, மண்ணுலகத்தவர் வணங்க, தூய தன்மையை யுடைய ஒளியாகிய வாள் புறத்தே விளங்க,

---

747. மண் - மண்ணுலக மக்கள். தூ - தூய்மை. நீர் - தன்மை. எறி - வீசுகின்ற. கதிர் - கிரணங்கள்.

வீசுகின்ற கிரணங்களையுடைய சூரியன், அருமையான மகன் (தயரதன்) வானுலகிற் புகுந்துவிட்டான்; (அவனுடைய) மக்கள் நால்வரும் அப்பாற் சென்றுவிட்டனர்; அவர்கள் வந்து சேரும்வரை இந்த உலகை நானே காக்கின்றேன் என்று முன்வருபவனைப்போல ஒளி பொருந்திய தேரில் ஏறித் தோன்றினன்.

(வி - ம்) தயரதன் சூரியகுலத்து உதித்தவனாதலால் சூரியனின் அரும்புதல்வன் எனப்பட்டது. நாடு அரசனை இழந்துகிடப்பதால் அவ்வரச பரம்பரையின் முதல்வன் பொறுப்பெடுத்துக் காக்க முற்பட்டானென உருவகப் படுத்தப்பட்டது. முரசடித்தல், சிற்றரசர் வணங்கல், வாள் புடையாத்தல், தேரேறி வருதல் முதலியன அரச இலக் கணங்களாம். அரசன் இன்மையால் நாடு காவலற்றுக் குழப்ப மடையவில்லை என்பதை சூரியன் அயோத்தி அரசைக் காக்க முற்பட்டான் என்று நயம்படக் கூறிவிட்டு, இராமன் முதலி யோர் இருக்குமிடத்தை நோக்கிச் செல்கிறார் கவி.

இராமனைக் காணவில்லை

748 வருந்தா வண்ணம் வருந்தினர்
மறந்தார் தம்மை வள்ளலும்அங்கு
இருந்தான் என்றே இருந்தார்கள்;
எல்லாம் எழுந்தார்; அருள் இருக்கும்
பெருந்தா மரைக்கண் கருமுகிலைப்
பெயர்ந்தார் காணார்; பேதுற்றார்;
பொருந்தா நயனம் பொருந்திநமைப்
பொன்றச் சூழ்ந்த எனப்புரண்டார். ௯௨

748. பெயர்ந்தார் - இருக்கும் இடத்தை விட்டுப் பெயர்ந்து சென்றாராகி. பேதுறுதல் - மயங்குதல். நயனம் - கண். பொன் றல் - அழிதல். சூழ்ந்த - செய்தன.

(இதுவரை) யாரும் வருந்தியிராத வகையில் வருத்த முற்றுர்கள். (அவ்வருத்தத்தினிடையே) தம்மை மறந்து தூங்கி விட்டனர். வள்ளலாகிய இராமன் அங்கேயே இருந்தான் என்று கருதியிருந்தனர். (விடிந்தவுடனே) எல்லோரும் எழுந்தார்கள். பெயர்ந்துசென்று அருள் குடியிருக்கிற விசாலமான தாமரைப்பூப் போன்ற கண்களையுடைய கரு மேகத்தைக் கண்டாரில்லை. பித்துப்பிடித்தவர் போலாயினர். இமைபொருந்தாமல் விழித்திருந்த கண்கள் மூடி நம்மைச் சாகும்படி செய்துவிட்டன என்று தவித்தனர்.

(வி - ம்) நம்முடைய கண்கள்தாம் நம்மைக் கெடுத்தன என்று வருந்தினர். இரவிலே ஏமாற்றிச் செல்வான் என்று கருதினுரில்லை. இராமன்தான் என்ன செய்வான்? இத்தனை மக்களையும் அழைத்துக்கொண்டு காட்டுக்குச் செல்வதென்ருல் இருக்க இடமெங்கே? உண்ண உணவெங்கே? குழந்தைகளை என்ன செய்வது? அங்கே ஒரு நகரத்தை ஆக்குவதென்ருல் 'வனவாசவரம்' என்னவாகும்? ஆட்சிப் பொறுப்புள்ள இராமன் இவைகளை நினைத்தான். 'பொய்மையும் வாய்மை கிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' (திருக்குறள் 292) என்பதை மேற்கொண்டு புறப்பட்டான் என்க.

எங்குசென்ருலும் விடமாட்டோம்

749 எட்டுத் திசையும் ஓடுவார்;
எழுவார் விழுவார்; இடர்க்கடலுள்
விட்டுத் தீர்ந்தான் நமைஎன்பார்;
வெய்ய ஐயன் வினைஎன்பார்;

---

749. எட்டுத்திசை - கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு என்ற நான்கோடு நான்கு மூலைகளும். இடர்க்கடல் - துன்பமாகிய கடல். தீர்தல் - நீங்குதல். வெய்ய - கொடிய. ஒட்டி - தொடர்ந்து.

ஓட்டிப் படர்ந்த தண்டகம்இவ்
வுலகத்து உளதன் றே ;உணர்வைச்
சுட்டிச் சேராது ஆற்றுதுமோ
தொடர்தும் தேரின் சுவடுஎன்பார். ருரு

எட்டுத் திசைகளிலும் ஓடித் தேடுவார் ; விழுவார் ; துன்பமாகிய கடலுக்குள் நம்மைத் தள்ளிவிட்டு நீங்கிவிட்டான் என்பார் ; ஐயன் செய்த செயல் கொடுமையானது என்பார் ; நிலத்தை ஒட்டி விரிந்த தண்டகவனம் இந்த உலகத்தில்தானே இருக்கும் ? அறிவைக்கொண்டு ஆராய்ந்து அதை அடையாது இருப்போமா ? தேரின் தடத்தைத் தொடர்ந்து செல்வோம் என்பார்.

தேர்த்தடம் பார்த்தல்

750 தேரின் சுவடு நோக்குவார்;
திருமா நகரின் மிசைத்திரிய
ஊரும் திகிரிக் குறியொற்றி
உணர்ந்தார்; எல்லாம் உயிர்வந்தார்;
ஆரும் அஞ்சல் ஐயன்போய்
அயோத்தி அடைந்தான் எனஅசனிக்
காரும் கடலும் ஒருவழிக்கொண்டு
ஆர்த்த என்னக் கடிது ஆர்த்தார். ருசு

தேர் சென்ற தடத்தை நோக்குவர் ; சிறப்புற்ற அயோத்தி நகரத்தை நோக்கித் திரும்பிச் செல்லும் உருளை

---

749. பரந்த - விரிந்த. சுட்டி - குறிப்பிட்டு. ஆற்றுதல் - பொறுத்திருத்தல். சுவடு - தடம்.

750. மிசை - மேல் : நோக்கி. திரிய - திரும்ப. ஊரும் - செல்லுகின்ற. திகிரி - உருளை. குறி - அடையாளம். ஒற்றுதல் - அறிதல். அசனி - இடி. கார் - மேகம். ஆர்த்தல் - இரைதல். கடி - மிகுதி.

களின் அடையாளத்தைக் கண்டு உணர்ந்தனர் ; எல்லாருக்கும் போன உயிர் வந்தமாதிரியாய்விட்டது. யாரும் அச்சப்பட வேண்டாம், ஐயன்போய் அயோத்தியை அடைந்தான் என்று சொல்லிக்கொண்டு, இடியோடுகூடிய மேகமும் கடலும் ஒன்றாகச் சேர்ந்து ஆரவாரித்தன என்னும்படி மிகவும் இரைச்சலிட்டனர்.

அயோத்தி அடைந்தார்

751 ஆறு செல்லச் செல்லத்தேர்
    ஆழி கண்டார் ; அயல்அப்பால்
வேறு சென்ற நெறிகாணுர் ;
    விம்மா நின்ற உவகையராய்
மாறி உலகம் வகுத்த நாள்
    வரம்பு கடந்து மண்முழுதும்
ஏறி ஒடுங்கும் எறிகடல்போல்
    எயில்மா நகரம் எய்தினர். ௫௫

வழி நடக்க நடக்கத் தேரின் உருளைகள் பதிந்த அடையாளத்தை நன்றாகக் கண்டனர் ; அயற்புறத்தில் தேர் சென்ற தான த்தைக் காணவில்லை ; (துன்பத்தால் விம்மிய அவர்கள்) மகிழ்ச்சியினால் விம்மியவராக, உலகம் அழிந்து மீண்டும் அமைத்த காலத்தில் கரையைக் கடந்து நிலப்பரப்பு முழுமையும் பெருகிப் (பிறகு) ஒடுங்கும்படி அலையடிக்கிற கடலைப் போல மதில்களையுடைய நகரத்தை அடைந்தார்கள்.

(வி - ம்) யுக முடிவில் கடல் கொதித்துப் பெருகி நிலம் முழுதையும் கவர்ந்து மூழ்கச் செய்துவிடும். பிறகு

---

751. ஆறு - வழி. ஆழி - சக்கரம். உவகை - மகிழ்ச்சி. மாறி - மாறுபட. வகுத்தல் - உண்டாக்குதல். வரம்பு - கரை. எயில் - மதில்.

திரும்பிவந்து எல்லைக்குள் அடங்கும். அவ்வாறே நகரி லிருந்த மக்கள் ஆரவாரத்தோடு வெளியே சென்றனர். இப் போது திரும்பி நகருள் வந்து சேர்ந்தனர் என்றவாறு.

சொல்ல முடியாத துன்பம்

752 புக்கார்; அரசன் பொன்னுலகம்
போனுன் என்னும் பொருள்கேட்டார்;
உக்கார் நெஞ்சம்; உயிர்உகுத்தார்;
உற்றது எம்மால் உரைப்பரிதால்;
தக்கான் போனுன் வனம்என்னும்
தகையும் உணர்ந்தார்; மிகைஆவி
அக்கா லத்தே அகலுமோ
அவதி என்றுஒன்று உளதானல். ௫௬

(நகரத்திற்) புகுந்தனர்; அரசன் வானுலகம் சேர்ந் தான் என்ற செய்தியைக் கேட்டனர்; நெஞ்சு உடைந்த னர்; உயிர் கழிவதுபோலப் பெருமூச்சு விட்டனர்; நிகழ்ந்ததெல்லாம் சொல்ல எம்மால் முடியாது; இராமன் வனத்துக்கே போய்விட்டான் என்ற தன்மையையும் உணர்ந்தனர்; மிஞ்சி யிருக்கிற உயிர் அப்பெருந் துன்பம் நேர்ந்தகாலத்தினும் நீங்குமா? காலம் என்று ஒன்று உண்டு என்றால்.

(வி - ம்) இராமன் நகருக்குச் சென்றுவிட்டான் என்று ஒரே மகிழ்ச்சியில் வந்தனர். இராமனும் இல்லை; அரசனும் இறந்துபோனுன் என்ற செய்தி கிடைத்தது. என் செய்வார்.

---

752. பொருள் - செய்தி. உக்கார் - உடைந்தார். உயிர் உகுதல் - மூச்சு விடமுடியாது திணறல். தக்கான் - தகுதியுள்ள வன்: இராமன். தகை - தன்மை. மிகை - மிச்சம். அவதி - காலம்.

துன்பம் எல்லே கடந்துவிட்டது. செத்துப்போகலாமென்று தான் யாவரும் நினைக்கின்றனர். உயிர் போகவா செய்யும்? காலம் வரவேண்டாமா?

இராமனின் செய்தி என்ன?

753 வெள்ளத்து இடைவாழ் வடஅனலே
அஞ்சி வேலே கடவாத
பள்ளக் கடலின் முனிபணியால்
பையுள் நகரம் வைகிடமேல்
வள்ளற் ருதை பணியென்னும்
வானேர் தவத்தால் மயங்குஇருளின்
நள்ளிற் போன வரிசிலேக்கை
நம்பி செய்கை நடத்துவாம். ௧௭

கடலின் நடுவில் இருக்கிற வட அனலுக்கு அடங்கிக் கரையைக் கடவாதிருக்கிற ஆழமான கடலைப்போல, வசிட்ட முனிவரின் ஆணைக்கு அடங்கித் துன்பத்தில் ஆழ்ந்த நகர மக்கள் இருக்க, மேலே வள்ளலாகிய தந்தையின் பணி என்ற (பெயரில் விளங்குகிற) தேவரின் தவத்தின் பயனுல், செறிந்த இருளின் நடுப்பாதியில் போன கட்டமைந்த வில்லேக் கையிலே கொண்ட இராமனது செயலேச் சொல்லுகிறேம்.

(வி - ம்) கடலானது ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர்களால் பெருகிக் கொண்டிருக்கிறது. அளவுகடந்து பெருகுமானுல் கரை அளவில் நிறுத்துகிற சூடு அதன் அடியில்

---

753. வெள்ளம் - கடல் நீர். வட அனல் - வடவைத் தீ. வேலே - கரை. பள்ளம் - ஆழம். பையுள் - துன்பம். வைகிட - இருக்க. வள்ளற்ருதை - வள்ளலாகிய தாதை : தயரதன். வயங்குதல் - நெருங்குதல். நள் - நடு. நடத்துதல் - சொல்லுதல்.

இருக்கிறது. அதற்குப் பெயர் வடவைத் தீ என்பர். (வடவாமுகாக்கினி) அயோத்தி மக்கள் துன்பத்தால் குமுறுகின்றனர். துன்பம் கரைகடந்து போகிறது. ஊரைவிட்டு வெளியேறவும் செய்தனர். அவர்கட்கு ஆறுதல் கூறிக் கட்டளையிட்டுச் சிறிது அமைதிப் படுத்தினர் வசிட்டர். பிறகு ஒருவாறு அடங்கி யிருந்தனர் என்க. சத்தியத்திற்காக உயிரை வழங்கினனாதலால் 'வள்ளல்' என்றார். தேவர்களின் தவம் 'தந்தையின் கட்டளை' என்ற பெயரைப் பெற்றுக்கொண்டு செயலாற்றுகிறது என்பார் 'தந்தை பணிஎன்னும் வானோர் தவம்' என்றார்.

---

6. கங்கைப் படலம்

[கங்கையாற்றங் கரையில் நிகழ்ந்தவற்றைக் கூறும் படலம்.]

அழியாத அழகு

754 *வெய்யோன்ஒளி தன்மேனியின்
விரிசோதியின் மறைய,
பொய்யோஎனும் இடையாளொடும்
இளையானொடும் போனன்;
மையோ !மர கதமோ !மறி
கடலோ !மழை முகிலோ !
ஐயோ !இவன் வடிவென்பதுஓர்
அழியாஅழகு உடையான். க

---

754. வெய்யோன் - சூரியன். வடிவு - நிறம்.

சூரியனுடைய ஒளியானது தன்னுடைய மேனியினது விரிந்த ஒளியில் மறைய, (இடை உண்டென்று சொல்லுதல்) பொய்யோ எனும்படியுள்ள இடையையுடைய சீதையோடும், இலக்குவனோடும் சென்றான். (யாரென்றால்) திருமேனியின் நிறம் என்பது கண்மையோ மாரகதமோ மறித்து அலை வீசும் கடலோ நீருண்டமேகமோ என வியக்குமாறு ஒப்பற்ற மாறாத அழகையுடையவனாக இருக்கின்ற இராமன்.

(வி - ம்) முன்னே இலக்குவனும் அவனுக்குப் பின்னே இராமனும் கடைசியில் சீதையுமாக முதல் நாள் வந்தனர். 'சீரை சுற்றித் திருமகள் பின் செல மூரிவிற்கை இளையவன் முன்செல' இராமன் சென்றான் (பாடல் 692) என்றார். இன்று முதலில் இராமன் செல்கிறான். காலைச் சூரியனின் ஏறு வெயில் தன் மேனியில் மறையச் சீதையைத் தன் நிழலிலேயே அழைத்துச் சென்றான் என்க. இதனை 'வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறைய' என்று கூறினார். சீதை வெயிலைத் தாங்கமாட்டாளென்றமென்மை 'பொய்யோ என்னும் இடையாள்' என்றதனால் சுட்டப்பட்டது. 'ஐயோ' என்றது வியப்புக்குறி. இப்படிப்பட்டவன் காலால் நடந்து செல்கிறானே என்றதனால் ஏற்பட்டது. இரக்கக் குறியாகவுங் கொள்ளலாம். 'மைவளர்க்கும் மணியுருவம் மரகதமோ மழைமுகிலோ என்கின்றாளால்' (நாலாயிரம் 1654) என்று நான்கு உவமைகள் (இங்கே வந்தாற்போல) வருதல் காண்க. 'மேகம் கடல்மணி காளிந்தி பூவைமென் காவி கண்மை, மாகம்தொடுபச்சை நின்உருக் காட்ட மனமகிழ்ந்தேன்' (அழகர் கலம்பகம் 28) என்று பல உவமைகள் ஒரே இடத்தில் கூறப்படுதலும் நோக்கத்தக்கது.

பூவை மிஞ்சிய பொலங்கழல்

755 அஞ்சம்பையும் ஐயன்தனது
அலகம்பையும் அளவா,
நஞ்சங்களை வெலஆகிய
நயனங்களை உடையாள்;
துஞ்சும்களி வரிவண்டுகள்
குழலின்படி சுழலும்
கஞ்சங்களை மஞ்சன்கழல்
நகுகின்றது கண்டாள். உ

மன்மதனது ஐந்து அம்புகளையும் இராமனது கூர்மையான அம்புகளையும் அளந்து (கடந்து) பலவகை நஞ்சுகளையும் வெல்லுகின்ற கண்களையுடைய சீதை, களிப்புக்கொண்ட இசை வண்டுகள், கூந்தலைப் போலச் சூழ்ந்து சுழலுதற்கிடமான தாமரை மலர்களை இராமனது பாதங்கள் பார்த்துக் கேலி செய்வதைக் கண்டாள்.

(வி - ம்) இராமனது உள்ளத்தைச் சீதையின் கண்கள் வென்றன. சீதையின் கண்ணில் தான் அடிபட்டு வருந்தாமல் தடுத்துக்கொள்ள இராமனது கூரிய அம்புகள் பயனுடையன வாக இல்லை. பின்னர் மன்மதனது அம்பால் துன்புற்றுளாதலானும், இராமனுக்கு ஈடுபட்டாளாதலானும் வென்றன என்னாது அவைகளை அளந்தன என்றார். நஞ்சு உண்டாற் கொல்வது இயல்பு; இக்கண் உண்ணாதே தீண்டாதே பார்த்த அளவிலேயே இராவணனைக் கொன்றதாதலின் நஞ்சுகளை வென்ற நஞ்சு என்றார் என்க. 'அடியார்தம்மை மும்மையி

---

755. அஞ்சு அம்பு - மன்மதனது மலரம்புகள். அவை: அரவிந்தம், மா, அசோகு, முல்லை, நீலம் என்பன. அலகு - கூர்மை. நயனம் - கண். துஞ்சல் - தங்குதல். கஞ்சம் - தாமரைப்பூ. மஞ்சன் - மைந்தன்: இராமன். நகுதல் - கேலிசெய்தல்.

னும் காத்திடுநல் விழியாலே நோக்கினுள் முடிந்தான் காலன்' (பாரதியார்) இராமனுக்குப் பின்னே செல்லும் சீதை அவன் காலெடுத்துவைக்கும்போதெல்லாம் அவனுடைய பாதங்களைப் பார்க்கிருள். அருகில் இருமருங்கிலும் கிடக்கும் நீர் நிலைகளில் தாமரை பூத்திருக்கிறது. அப்பூக்களையும் இவன் பாதங்களையும் மாறி மாறி நோக்கி ஒப்புக்காண்கிருள். தாமரைப் பூவைச் சுற்றிலும் வண்டுகள் சுழல்கின்றன. கருமைக்கிடையில் பூக்கள் தெரிகின்றன. கூந்தலுக்கு இடையே வைத்துள்ள பூவைப்போலவும் அவை தோன்றுகின்றன. இராமனது கருநிறத்தின் இடையில் தோன்றும் சிவந்த பாதங்களுக்குப் பொருத்தமாகவும் உள்ளன. இவ்விரண்டையும் மாறி மாறி நோக்கும்போது தாமரைப் பூவைத் திருவடிக்கு ஒப்பன்று என்று சீதை கருதுவதை, 'மஞ்சன் கழல் கஞ்சங்களை நகுகின்றது கண்டாள்' என்ருர். 'கண்ணும் திருவடியும் கையும் திருவாயும் செய்ய, கரிய வணக் காணுத கண்ணென்ன கண்ணே' என்பது காண்க (சிலப், ஆய்ச்சியர்-குரவை).

நாகமும் பிடியும்

756 மாகந்தமும் மகரந்தமும்
அளகம்தர, மதியின்
பாகந்தரும் நுதலாளொடு
பவளந்தரும் இதழான்,
மேகந்தனி வருகின்றது
மின்னேடென, மிளிர்பூண்
நாகம்தனி வருகின்றது
பிடியோடென நடவா. ௩

756. கந்தம் - மணம். மகரந்தம் - பூவிலுள்ள தாது. அளகம் - கூந்தல். மதியின் பாகம் - அட்டமிச் சந்திரன். நுதல் - நெற்றி. பூண் - கவசம். நாகம் - யானை. பிடி - பெண்யானை.

மிகுந்த பூமணத்தையும் மகரந்தத்தையும் கூந்தல் பரப்ப, சந்திரனின் பாதியைப் போன்ற நெற்றியையுடைய சீதையோடு பவளம்போன்ற இதழ்களையுடைய இராமன், ஒப்பற்ற மேகமானது மின்னலோடு வருகின்றது எனவும், பெண்யானையோடு கவசமணிந்த ஒப்பற்ற ஆண்யானை வருகின்றது எனவும் நடந்து செல்ல,

(வி-ம்) மேகமும் மின்னலும் இடி முதலிய இன்றித் தனித்து வந்தாற்போலவும், ஆண்யானை பெண்யானையோடு வந்தாற்போலவும் என்க. இராமன் வில் அம்பு தூணியோடு வந்தானாதலால் கவசமும் அணிந்திருந்தா னென்பது, யானையை 'மிளிர் பூண் நாகம்' என்றதால் உணரப்படும். அவனுடைய நடையின் பெருமிதம் யானை நடையாகப் பாடலின் ஓசையிலும் காணக் கிடக்கிறது.

கங்கையை அடைந்தனர்

757 *பரிதி பற்றிய
பல்கலன் முற்றிய
மருத வைப்பின்
வளங்கெழு நாடுஓரீஇ,
சுருதி கற்றுஉயர்
தோமிலர் சுற்றுறும்
விரிதிரைப்புனற்
கங்கையை மேவினர். ௪

ஒளிபொருந்திய பல கலப்பைகளால் நிறைந்து விளங்கும் மருதநிலப் பரப்பையுடைய வளம் நிறைந்த (கோசல) நாட்டைக் கடந்து, வேதங்களைப் பயின்று உயர்வடைந்துள்ள

757. பரிதி - ஒளி. கலன் - கலப்பை. முற்றிய - நிறைந்த. மருதம் - வயலும் வயல்சார்ந்த நிலமும். கெழு - பொருந்திய. ஓரீஇ - ஒருவி : நீங்கி. தோம் - குற்றம்.

குற்றமற்ற முனிவர் சூழ்ந்து தங்கப்பட்ட பரவுகின்ற அலை நீரையுடைய கங்கைக் கரையை (மூவரும்) அடைந்தார்கள்.

(வி - ம்) வயல்களில் காலைநேர வெய்யிலில் ஏர் ஓடி உழும்போது ஒளியடிக்கிறது என்றதால் கலப்பையில் பூண்கள் கட்டப்பட்டும், மாட்டுக்கொம்புகளில் கொப்பிப் பூண்கள் பிடிக்கப்பட்டும் இருந்தன என்க.

செல்கதி வந்தது

758　கங்கை என்னும்
　　　கடவுள் திருநதி
　　தங்கி வைகும்த
　　　போதனர் யாவரும்,
　　'எங்கள் செல்கதி
　　　வந்தது'என்று ஏமுறு,
　　அங்கண் நாயகற்
　　　காணவந்து அண்மினர்.　　ரு

கங்கை என்ற தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த நதிக்கரையில் தங்கி இருந்து தவம் செய்கிறவர் யாவரும், நாங்கள் (தவம் செய்து) சென்று அடையும் பற்றுக்கோடான பரம்பொருள் இங்கே வந்தது என்று, மகிழ்ச்சியடைந்து அழகிய கண்களையுடைய தலைவனாகிய இராமனைக் கண்டு கொள்ள வந்து நெருங்கினார்கள்.

---

758. தபோதனர் - தவம்புரிவோர். செல்கதி - சென்று அடையும் பேறு : கடவுள். ஏமுறல் - மகிழ்தல். அம்கண் - அழகிய கண். அண்முதல் - நெருங்குதல்.

தாமரைக் கண்ணன்

759 எதிர்கொடு ஏத்தினர் ;
இன்னிசை பாடினர் ;
வெதிர்கொள் கோலினர் ;
ஆடினர் ; வீரனைக்
கதிர்கொள் தாமரைக்
கண்ணனைக் கண்ணினால்
மதுர வாரி
அமுதென மாந்துவார். ௬

மூங்கில் கழிகளினாலாய தண்டங்களை ஏந்திய முனிவர்கள் எதிர்கொண்டு துதித்தனர் ; இனிய பண்களைப் பாடினர் ; ஆனந்தத்தினால் ஆடிக் குதித்தனர் ; வீரனும் ஒளி பொருந்திய தாமரை மலர் போன்ற கண்ணிணையுடையவனுமான இராமனை இனிய சுவையுடைய கடலமுதத்தை (வாயினால் உண்பது போல) கண்ணினால் உண்டனர்.

(வி - ம்) முனிவர் திரிதண்ட முனிவர், ஏகதண்ட முனிவர் என இருவகைப்படுவர். பொருள் ஒன்றே என்பவர், கையில் ஒரு தண்டு வைத்திருப்பார் என்றும், முப்பொருள் உண்மை என்பவர், கையில் மூன்று தண்டுகளைச் சேர்த்து வைத்திருப்பார் என்றும் கூறுப. இராவணன் முக்கோல் கொண்ட துறவி வேடத்தில் வந்தானென்பது, 'முளை வரித் தண்டொரு மூன்று முப்பகைத், தளையரி தவத்தவர் வடிவந்தாங்கினன்' (சடாயு உயிர்நீத்த படலம்) என்றதால் அறிக. 'முக்கோலும் கமண்டலமும் செங்கல் தூசும் முந்நூலும் சிகையுமாய் முதிர்ந்து தோன்றும்' (வில்லி பாரதம்-தீர்த்த - 55) 'பாகன்ன மொழிக் கனிவாய் முத்தமூரல் பாவைநலம் பெற முக்கோற் பகவனானன்' (ஷை 49) என்

759. வெதிர் - மூங்கில். கோல் - முக்கோல்.

றதும் அது. ' நூலே கரகம் முக்கோல் மணையே, ஆயுங்காலை அந்தணர்க்குரிய (தொல் - பொருள் 625) ' கண்ணினுல் மதுரவாரி அமுதென மாந்து வார் ' என்றதை, ' இரு கண்ணும் முகந்து அழகு பருகநோக்கி ' என்றதனேடு (பாடல் 204) ஒப்பு நோக்குக.

பிரிந்தவர் கூடினர்

760 மனையின் நீங்கிய
 மக்களை வைகலும்
நினையும் நெஞ்சினர்
 கண்டிலர் நேடுவார்
அனையர் வந்துற
 ஆண்டுஎதிர்ந் தார்களின்
இனிய மாதவப்
 பள்ளிகொண்டு எய்தினர். எ

தமது வீட்டிலிருந்து நீங்கிச் சென்ற குழந்தைகளை, நாள்தோறும் நினைக்கின்ற மனத்தையுடையவராய்க் காணப் பெருமல் தேடித் திரிபவர், அக்குழந்தைகள் (எதிர்பாராமல்) வந்துசேர அவ்விடத்தில் எதிர்ப்பட்டவரைப் போல (முனிவர் தங்களின்) இனிய பெரிய தவக்கூடத்துக்கு அழைத்துச் சென்று சேர்ந்தனர்.

(வி - ம்) ஆன்மாவோடு ஒட்டியிருந்த இறைவன், தோன்ருது மறைய, அலைந்து தேடித் திரிய, அவனுக அருள் கொண்டு வந்தடைந்த மாதிரியாக இராமன் வந்தான் என்ருர். (மேலிரண்டு பாடல்களோடு இதையும் சேர்த்துப் பொருள் கொண்டனுபவிக்கவேண்டும்) ' பிரிந்தவர் கூடினுற் பேசல் வேண்டுமோ ?' (பாடல் 170) என்பதும் அது.

---

760. வைகல் - நாள்தோறும். நேடுதல் - தேடுதல். ஆண்டு - அங்கே. பள்ளி - தவக்கூடம்.

ஆட்டிச் சூட்டி ஊட்டினர்

761 பொழியும் கண்ணில்
    புதுப்புனல் ஆட்டினர்;
மொழியும் இன்சொலின்
    மொய்ம்மலர் சூட்டினர்;
அழிவில் அன்பெனும்
    ஆரமிழ்து ஊட்டினர்;
வழியின் வந்த
    வருத்தம் தணியவே. அ

வழி நடந்து வந்த களைப்புத் தீரும்படி, கண்ணிலிருந்து (களிப்பினால்) வெளிவருகிற புது நீரில் முழுகச் செய்தனர்; துதிக்கிற இனிய சொல்லாகிய மலர் மாலையை அணிவித்தனர்; குறைவில்லாத அன்பு என்ற நிறைந்த உணவை ஊட்டினர்.

(வி - ம்) மெல்லிய பாதங்களால் நீண்ட வழி நடந்து வந்த களைப்புத்தீர, நீராட்டி மலர்சூட்டி அமுதூட்டினர் என்றார்.

அமுது செய்க

762 காயும், கானில்
    கிழங்கும், கனிகளும்,
தூய தேடிக்
    கொணர்ந்தனர்; 'தோன்றல்! நீ
ஆய கங்கை
    அரும்புனல் ஆடினை,
தீயை ஓம்பினை,
    செய்அமுது' என்றனர். சு

---

761. மொய்ம்மலர் - மொய்த்த மலர்: மாலை.

762. ஆய - அமைந்த. ஓம்புதல் - வணங்குதல். ஆடினை, ஓம்பினை என்பன எச்சப் பொருளன.

(அம்முனிவர்கள்) காட்டிலிருந்து காய்களையும் கிழங்குகளையும் கனிகளையும் தூயனவாகத் தேடிக்கொண்டு வந்து, சிறந்தவனே! நீ (நீரின் சிறப்புக்கு) அமைந்த கங்கையின் அருமையான நீரில் குளித்துவிட்டுத், தீக்கடவுளை வணங்கி, அமுது செய்வாயாக என்றனர்.

(வி - ம்) இராமன் அரசனே யாயினும், தவவொழுக்கத்தை மேற்கொண்டானாதலால், முனிவர், தங்களின் உணவான காய் கிழங்கு கனி ஆகியவற்றை நல்கினர்.

விருந்து நடக்கிறது

763 துறைந றும்புனல்
ஆடிச் சுருதியோர்
உறையுள் எய்தி,
உணர்வுடை யோர்உணர்
இறைவற் கைதொழுது
ஏந்துஎரி ஓம்பிப்பின்,
அறிஞர் காதற்கு
அமைவிருந்து ஆகினான். ௧௦

(நீராடுதற்கு இயைந்த) துறையில் நல்ல நீரில் குளித்துவிட்டு, வேதமறிந்த முனிவரின் தங்குமிடத்தில் சேர்ந்து, அறிவுடையோரால் உணரப்படும் கடவுளைக் கைகூப்பித் தொழுது, எழுந்து எரிகிற நெருப்பை வளர்த்துப் பின்னர், அறிந்துணர்ந்த முனிவரின் அன்பினால் அமைந்த விருந்தினனாகி உண்டான்.

---

763. துறை - இறங்கும்வழி. நறும்புனல் - நல்லநீர். சுருதி - வேதம். எரி - எரிகிற நெருப்பு. ஓம்புதல் - வளர்த்து வணங்குதல். ஆகினான் - ஆகி உண்டான்.

குகன் வருகை

764 ஆய காலையின்,
ஆயிரம் அம்பிக்கு
நாய கன்;போர்க்
குகன்எனும் நாமத்தான் ;
தூய கங்கைத்
துறைவிடும் தொன்மையான் ;
காயும் வில்லினன் ;
கல்திரள் தோளினன். கக

அப்போது ஆயிரக்கணக்கான படகுகளுக்கு நாயகனை போரிலேவல்ல குகன் என்ற பெயரை யுடையவன் ; தூய்மை யான கங்கைத் துறையைக் கடக்கச் செய்வதில் பாரம்பரையாக உரிமை பெற்றவன். எதிர்ப்போரைக் கொல்லும் வில்லை யுடையவன் ; திரண்ட கல்போன்ற தோள்களையுடையவன் ;

குகனின் அலங்காரம்

765 காழம் இட்ட
குறங்கினன் ; கங்கையின்
ஆழம் இட்ட
நெடுமையி னன்;அரை
தாழ விட்டசெந்
தோலன் ; தயங்குறச்
சூழ விட்ட
தொடுபுலி வாலினன். கஉ

வயிரம் பாய்ந்த (வலிய மரம் போன்ற) தொடையை உடையவன் ; கங்கையின் ஆழத்தைப் போல உயரமானவன்;

---

764. அம்பி - படகு. துறைவிடுதல் - துறைக்குத் துறை கொண்டு விடுதல். கல்திரள் : திரள்கல் – தூண்.

765. காழ் - வயிரம். குறங்கு - தொடை. தயங்குற - விளங்கும்படி. சூழ – சுற்றி. தொடு - கட்டிய.

இடுப்பில் தொங்கவிட்ட சிவந்த தோலைக் கட்டியிருப்பவன்; விளங்குமாறு இடுப்பைச் சுற்றி வரும்படி கட்டிய புலி வாலை (கச்சையாக) உடையவன்.

(வி - ம்) எல்லா ஆறுகளையும் விடக் கங்கையாறு ஆழமாக இருப்பதைப் போல எல்லா மனிதரையும் விட இவன் உயரமாக இருக்கிறான் என்க. கங்கையின் அருகிலேயே இருப்பதால் அதன் ஆழத்தை அளவெடுக்க வளர்ந்தானென்று கூறலாம்போ லிருக்கிறது என்றார். உயரத்துக்கு வானையும் மலையையுங் கூறுவது இயல்பு. இங்கே உயரத்திற்கு ஆழம் உவமை கூறப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாம். வானும் மலையும் கோல்கொண்டு அளக்கப்பட முடியாதாயினும் கண்ணாற் கண்டு மதித்தல் கூடும். ஆனால் கங்கையின் ஆழம் கோல்கொண்டு அளத்தற் கியலாமையோடு கட்புலனுக்கும் காணமுடியாததென்பதாம். தோலை ஆடையாகக் கட்டியிருக்கிறான்; அது தொங்கிக்கொண்டு கிடக்கிறது. அதன்மேல் புலிவாலைக் கச்சையாக இறுக்கிக் கட்டியிருக்கிறான். தொடையைப் பார்த்தால் வலிய வயிரம் பாய்ந்த மரம் போலிருக்கிறது. காழ், காழம் என்றாயிற்று. 'இட்ட' என்பது ஒப்புமைப் பொருளது.

இதுவும் அது

766 பற்றொடுத் தன்ன
பல்சூற் கவடியன்;
கற்றொடுத் தன்ன
போலும் கழலினன்;

---

766. தொடுத்தல் - கோத்தல். சூல்தல் - தோண்டுதல். கவடி - சோகி. கழல் - கணுக்காலில் அணியும் அணி. அல்-இருட்டு. குஞ்சி - ஆணின் தலைமயிர். செறிந்த - அடர்ந்த.

அற்றெடுத் தன்ன
குஞ்சியன் ; ஆய்கதிர்
நெற்றெ டுத்து
நெரிந்த புருவத்தான். கரு

பற்களை வைத்து மாலை தொடுத்தாற் போன்ற பல சோகியைக் கோத்த மாலையைக் கழுத்திற் கட்டியிருப்பவன் ; கற்களைக் கோத்துக் கட்டியதுபோன்ற பெரிய வீரக் கழலை யுடையவன் ; இருட்டைச் சேர்த்து வைத்ததுபோன்ற தலை மயிரை உடையவன் ; தேர்ந்தெடுத்த நெற்கதிரைத் தொடுத்து வைத்தாற் போன்ற (ஒன்றோடொன்று ஒட்டாமல்) நெருங் கிய புருவத்தையுடையவன் ;

(வி - ம்) சோகியைக் கோத்து வேடர்கள் கழுத்தணி யாகக் கட்டிக் கொள்கின்றனர். இது கடலிலுள்ள ஒரு பூச்சியின் கூடு. இதிலுள்ள பூச்சியை அழுகிப் போம்படி செய்து வெளிப்படுத்தி விட்டுச் சுத்தம் செய்வர். ஆதலால் 'சூல் கவடி' என்றார். 'நெற்றெடுத்தன்ன' என்பதில் அன்ன எனும் உவம உருபு தொக்கது. நெல்லைப் போன்ற பருமனான மயிர் ஒன்றோடொன்று படியாமல் தனித்தனியாக நிமிர்ந்து அடர்ந்திருந்தன என்பார் 'நெற்றெடுத்து நெரிந்த புருவம்' என்றார். 'பல் தொடுத்தன்ன' என்பது 'பற் றெடுத்தன்ன' எனப் புணர்ச்சி விகாரம் பெற்றது. அவ் வாறே நான்கடியிலும் கண்டு கொள்க.

எண்ணெய் உண்ட இருள்புரை மேனி

767 பெண்ணை வன்செறும்
பிற்பிறங் கிச்செறி
வண்ண வன்மயிர்
வார்ந்துஉயர் முன்கையன் ;

---

767. பெண்ணை - பனை. செறும்பு - சிலாம்பு. பிறங்கி - விளங்கி. செறிதல் - நெருங்குதல். வண்ணம்-நிறம். வார்ந்து-நீண்டு.

கண்அ கன்தட
மார்பெனும் கல்லினன் ;
எண்ணெய் உண்ட
இருள்புரை மேனியான். கசு

பனைமரத்தின் வலிய சிலாம்பு போல விளங்கி அடர்ந்து (கருத்த) நிறமுள்ள வலிய மயிர், நீண்டு நிமிர்ந்திருக்கிற முன் கைகளையுடையவன் ; இடமகன்ற விசாலமான கல் என்று சொல்லப்படும் மார்பினன் ; எண்ணெயை ஊட்டிய இருளைப்போன்ற மேனியன் ;

(வி - ம்) முன் கையில் முளைத்திருக்கிற மயிர் பனை மரத்தின் சிலாம்பு மாதிரி நிமிர்ந்து நிற்கிறது. உடலின் நிறத்துக்கு இருட்டு உவமை. இருட்டின் நிறத்தில் தளதளப் பில்லை. இவனுடைய உடல் கருப்பாக இருட்டைப் போல இருந்தாலும் தளதள வென்றிருக்கிறது. அதை நோக்கும் போது இருட்டுக்கு எண்ணெய்ப் பூச்சுக் கொடுத்தாற்போல இருக்கிறது என்றார்.

கண்டவர் அஞ்சும் கண்கள்

768 கச்சொடு ஆர்த்த
கறைக்கதிர் வாளினன் ;
நச்ச ராவின்
நடுக்குறு நோக்கினன் ;
பிச்ச ராம்அன்ன
பேச்சினன் ; இந்திரன்
வச்சி ராயுதம்
போலும் மருங்கினன். கரு

767. கண் - இடம். தடம் - விசாலமான. புரை - ஒத்த.

768. கறை - இரத்தக்கறை. நச்சு அரா - நஞ்சையுடைய பாம்பு. பிச்சர் - பித்தர். மருங்கு - இடை.

இடைக்கச்சையில் செருகப்பட்ட இரத்தக்கறையுள்ள ஒளிபொருந்திய கத்தியை உடையவன்; நஞ்சையுடைய பாம்பைப் போன்று பிறரை நடுங்கச் செய்யும் கண்களையுடையவன்; பித்தரைப் போலப் பேசுதலை யுடையவன்; இந்திரனுடைய வச்சிராயுதத்தைப் போன்ற இடுப்பையுடையவன்;

(வி-ம்) கத்தியைச் சுத்தப்படுத்தவில்லை. குத்தின இரத்தத்தோடேயே செருகியிருக்கிறான். இவனுடைய கண்ணைக் கண்டவர் பாம்பைக் கண்டவர் போல நடுங்குவர்; பேச்சு முன் பின் தொடர்போடு ஆழ்ந்ததாக இல்லை. வாயிலே வருவதைப் பேசுகிறான். அவனுடைய இடுப்பைப் பார்த்தால் வச்சிராயுதந்தான் நினைவுக்கு வருகிறது. உறுதியும் ஒடுக்கமும் வச்சிராயுதத்துக்கு ஒப்பு. வயிறு வெளியே தள்ளாமல் அடங்கி ஒடுங்கிஉள்ளே மறைந்துகிடந்த தென்பதுமாகும். வயிறு உள்ளே நின்றால் மூச்சு மேலே நின்று வலிமையை உண்டாக்கும். வயிறு கீழே சரியுமானால் மூச்சுக் கீழ் நோக்கும். உடல்வலி இறங்கிப்போம். எனவே வீரனின் வயிறு மறைந்து கிடக்கவேண்டுமென்பது குறிக்கப்பட்டது.

தேனும் மீனும்

769 சிருங்கி பேரம்
எனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும்
நகருடை வாழ்க்கையன்;
ஒருங்கு தேனொடு
மீன்உப காரத்தன்;
இருந்த வள்ளலைக்
காணவந்து எய்தினான். கக

769. சிருங்கிபேரம் - ஒரு ஊர். மருங்கு - கரை. உபகாரம் - காணிக்கை: நன்கொடை.

சிருங்கிபேரம் என்ற பெயருடன் அலைமோதுகின்ற கங்கை நதியின் கரையில் விளங்குகிற ஊரை வாழுமிடமாகக் கொண்டவனும், தேனையும் மீனையும் சேர்த்துக் காணிக்கையாக வைத்திருப்பவனும், ஆகிய குகன் (முனிவர் பள்ளியில்) இருக்கிற இராமனைக் காணும்பொருட்டு வந்து சேர்ந்தான்.

(வி - ம்) 764-ம் பாடல் முதல் இப்பாடல்வரை ஒரே தொடராகும். 'ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு நாயகனும்.................மீனுபகாரத்தனும் ஆகிய குகன் வந்தெய்தினன்' என முடியும். இலையுணவின் இனமான தேனையும், புலாலுணவின் இனமான மீனையும் வேறுபாடு கருதாது ஒரு தரத்ததாகவே கருதிக் கொண்டுவந்தான் என்பது 'ஒருங்கு' என்று சுட்டப்பட்டது.

பொய்யிலா மனத்தான்

770 சுற்றம் அப்புறம்
நிற்கச் சுடுகணை
விற்று றந்துஅரை
வீக்கிய வாள்ஒழித்து,
அற்றம் நீத்த
மனத்தினன், அன்பினன்,
நற்றவப் பள்ளி
வாயிலை நண்ணினன். எஎ

தன்னுடைய படையினரெல்லாம் தள்ளி நிற்க, கொடிய அம்பையும் வில்லையும் நீக்கிவிட்டு, அரையில் செருகியிருந்த கத்தியையும் எடுத்துவைத்துவிட்டு, பொய் நீங்கிய மனத்தினனும் அன்புடையவனுமான (குகன்) நன்மைக்காகத் தவம் புரிகிற பள்ளியின் வாயிலை அடைந்தான்.

---

770. சுற்றம் - அவனைச் சேர்ந்தவர். விற்றுறந்து - வில் துறந்து. வீக்குதல் - கட்டுதல் : இறுக்குதல். அற்றம் - பொய்ம்மை.

(வி - ம்) பெரியவர்களைக் காணப் போம்பொழுது அடக்கமும், வணக்கமும் கொள்ளவேண்டுமென் றெண்ணிய தால் தனியன் ஆனுன் ; ஆயுதங்களையும் நீக்கிவிட்டான் என்க. தவம் புரிதல் பலவகைப்படும். கொடிய ஆயுதங் களைப் பெறுதற்கும், பிறரை அழிப்பதற்கும் கடுந்தவம் புரிபவருண்டு. இது நன்மையையே நோக்கமாக்கொண்டு தவம் புரிவோரது இருக்கையாதலின் 'நற்றவப் பள்ளி' எனப்பட்டது.

நாவாய் வேட்டுவன்

771 கூவா முன்னம்
இளையோன் குறுகி,'நீ
ஆவான் யார்?' என,
அன்பின் இறைஞ்சினன் ;
'தேவா! நின்கழல்
சேவிக்க வந்தனென் ;
நாவாய் வேட்டுவன்
நாய்அடியேன்' என்ருன். கஅ

கூப்பிடு முன்னதாகவே இலக்குவன் வந்து நீ யார் என, அன்போடு வணங்கினவனுக, 'தேவா! உன் திருவடியைச் சேவிக்க வந்தேன் ; படகு ஓட்டுகிற வேட்டுவன் ; நாய்க்குச் சமமான அடிமை' என்ருன்.

(வி - ம்) குகனுவான் அவனுவான் என்ருற்போல நீயாவான் என நின்றது. இலக்குவனைக் கண்டதும் இவனே இராமன் என்று நினைத்துக்கொண்டான். ஆதலால் 'தேவா' என்று வணங்கினன். இராமனைப் பார்க்க விரும்புகிருனென்

771. சேவித்தல் - வணங்குதல். நாவாய் - படகு. வேட்டு வன் - வேடன். நாயடியேன் - நாய்போல அடிமை செய்யக்கூடிய வன். (நன்றிமறவாத அடிமை)

பதை அறிந்துகொண்டான் இலக்குவன். இராமனுக்கு எழுதும் விண்ணப்பத்தில் எழுதக் கூடிய, 'தேவா', 'நின் கழல் சேவிக்க', 'நாயடியேன்' என்ற வாசகங்களைக் கேட்டவுடன் இச் சொற்கள் தன்னைச் சேர்ந்தன அல்லவென்று இலக்குவன் நினைத்தான் என்க. நாயைப் போல நன்றியோடு அடிமை செய்யத் தக்கவன் என்பான் நாயடியேன் என்றான். 'எறிந்தவேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்' (நாலடி 213) எனவரும். தனக்குரிய தலைவன் தன் உயிரையே போக்க நினைத்துத் தன்மீது வேலைப் பாய்ச்சினும் கலங்காத அன்புள்ள முடையது நாய் என்றவாறு.

தாயின் நல்லான்

772 *'நிற்றிஈண்டு' என்று புக்கு,
நெடியவற் றொழுது தம்பி,
'கொற்றவ! நின்னைக் காணக்
குறுகினன் நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும் தானும்; உள்ளம்
தூயவன்; தாயின் நல்லான்;
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு
இறைகுகன் ஒருவன்' என்றான். கக

தம்பியானவன் (குகனை நோக்கி) இங்கே நிற்பாயாக என்று சொல்லிவிட்டு, உள்ளே சென்று நெடியவனான இராமனைத் தொழுது, 'மன்னனே! நின்னைக் காணும்பொருட்டுப் பெரிய கூட்டமான தன் இனத்தோடு வந்திருக்கிறான்; தூய உள்ளமுடையவன்; தாயைப்போல நல்லவன்; அலையெறிகிற கங்கைக் கரையிலுள்ள படகு ஓட்டிகளின் தலைவனான குகன் என்ற ஒருவன் என்றான்.

---

772. நிற்றி - நிற்பாயாக. நெடியவன் - திருமாலாகிய இராமனை. நிமிர்ந்த - மிகுதியான. இறை - தலைவன்.

(வி - ம்) குகனை ஒருமுறைதான் எட்டிப் பார்த்தான். அவனுடைய தன்மை முழுமையும் அறிந்தான். 'குறிப்பிற் குறிப்புணராவாயின் உறுப்பினுள் என்ன பயத்தவோ கண்' (திருக்குறள் 705.) குகனிடமுள்ள பெருங் குணங்கள் இரண்டையும் குறிப்பாகக் கண்டுகொண்டான் இலக்குவன். ஆதலால் 'உள்ளம் தூயவன், தாயின் நல்லான்' என்றான். தாயின் நல்லான் என்றது தாயைப் போன்ற மேலான அன்புடையவன் என்றவாறு. 'அற்றம் நீத்த மனத்தினன் அன்பினன்' எனறதும் அறிக (பாடல் 770.)

கண்ணனைக் கண்டு கனிந்தனன்

773 அண்ணலும் விரும்பி, 'என்பால்
அழைத்திநீ அவனை' என்றான்;
பண்ணவன், 'வருக' என்னப்
பரிவினன் விரைவிற் புக்கான்;
கண்ணனைக் கண்ணின் நோக்கிக்
கனிந்தனன்; இருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து, மேனி
வளைத்துவாய் புதைத்து நின்றான். ௨௦

அண்ணலாகிய இராமன் விருப்பமுற்று என்னிடத்துக்கு அவனை நீ அழைப்பாயாக என்றான். நற்குணமுள்ள இலக்குவன் வருக என்று சொல்ல, அன்புடையவனான (குகன்) விரைந்து புகுந்தான்; இராமனைக் கண்ணாலே கண்டு (அன்புப் பெருக்கால்) கனிவுற்றான்; கருநிறமான தலைமயிர் மண்ணிலே படும்படி வணங்கி உடலை வளைத்து வாயைப் பொத்திக்கொண்டு நின்றான்.

---

773. அண்ணல் - பெருமையிற் சிறந்தோன். பண்ணவன் - நற்குணமுள்ளவன். பரிவினன் - அன்புள்ளவன். கனிதல் - அன்பினால் உருகுதல்.

(வி - ம்) காட்டிலிருக்கிற குகன் நடை உடை பாவனை எல்லாவற்றிலும் காட்டு மனிதனாகவே காணப்படுகிறான்; ஆனால் பெரியவர்களிடம், எப்படி மரியாதையாக நடக்க வேண்டுமென்பதை நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறான். இராமன் தாயிடம் நின்றபோது, 'சென்னி மண்ணுற வணங்கி வாய்த்த, சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து, மற்றைச் சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்' என்பர் (பாடல் 562). அரசரும் வேடரும் உடலுருவத்திலும் புறத் தோற்றத்திலும் வேறு பட்டனரேயன்றி உண்மை அன்பு தூய்மை பணிவு முதலிய அகப் பண்பாட்டில் ஒன்றாகவே இருந்தனரென்பது ஈண் டறியத் தக்கது.

திருவுளம் என்ன ?

774 இருத்திஈண்டு என்ன லோடும்
இருந்திலன்; எல்லை நீத்த
அருத்தியன்; 'தேனும் மீனும்
அமுதினுக்கு அமைவ தாகத்
திருத்தினென் கொணர்ந்தேன் என்கொல்
திருவுளம்' என்ன, வீரன்
விருத்தமா தவரை நோக்கி,
முறுவலன் விளம்பல் உற்றான். உக

இராமன் (குகனை நோக்கி) இரு என்றான். ஆனால் அவன் உட்காரவில்லை. அளவு கடந்த அன்புடையவனாக, உண்பதற்குப் பக்குவமாகத் தேனும் மீனும் செம்மைப்படுத் திக் கொண்டுவந்திருக்கின்றேன். திருவுள்ளம் எவ்வாறு ?

774. எல்லைநீத்த - அளவுகடந்த. அருத்தி - அன்பு. அமுது - உணவு. அமைவதாக - பொருத்தமாக. திருத்தினென் - திருத்தம் செய்து. முறுவல் - புன்சிரிப்பு.

என்று கேட்க இராமன் வயது முதிர்ந்துள்ள முனிவர்களைப் பார்த்துப் புன்சிரிப்புடன் சொல்கிறான்.

(வி - ம்) மீனைத் திருத்துதல் முள் முதலிய வேண்டாப் பொருளை நீக்குதல். பக்குவமாகச் சமைத்துக்கொண்டு வந்திருக்கிறேன் என்பதை 'அமுதினுக்கு அமைவதாக' என்றான் என்க. காயுங் கிழங்கும் உண்டு கடவுளை எதிர் நோக்கித் தவம்புரியும் வயது முதிர்ந்த துறவிகளின் நடுவில் தவசியாக இருக்கும் இராமனை நோக்கி இவ்வாறு கூறினான். குகனுக்கு அன்பும் உண்மையுந் தானே தெரியும். முனிவர் உணவைக் காண அவனுக்கு வாய்ப்பேது? குகனின் சொல்லைக் கேட்டதும் இராமனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. இருவேறுபட்ட பக்தர்கட்கிடையில் இருக்கிற இராமன், முனிவர் பக்கமாகத் திரும்பினான்.

பரிவினில் தழுவிய பவித்திரம்

775 'அரியதாம்; உவப்ப உள்ளத்து
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்,
அமிழ்தினும் சீர்த்த அன்றே!
பரிவினில் தழீஇய என்னில்,
பவித்திரம்! எம்ம னோர்க்கும்
உரியன; இனிதின் நாமும்
உண்டனெம் அன்றோ?' என்றான். உஉ

(இது) அருமையானதுதான், (மனம்) உவக்கும்படி உள்ளத்திலெழுந்த அன்பின் முதிர்ச்சியால் தோன்றிய பக்தி விளங்கக் கொண்டுவரப்பட்டது என்றால் தேவாமிர்தத்திலும்

---

775. சீர்த்த - சிறந்த. பரிவு - அன்பு. பவித்திரம் - பரிசுத்தம்.

சிறப்புடையது அல்லவா? அன்பில் தழுவிய என்ருல் எப்படிப் பட்ட பொருளாக இருந்தாலும் பரிசுத்தமானவை யாகும். நம்மைப் போன்றவர்க்கும் ஏற்கத்தக்கனவேயாம். இனிதாக (இவைகளை) நாமும் உட்கொண்ட மாதிரிதான்; அல்லவா? என்ருன்.

(வி-ம்) பவித்திரம் என்ற சொல்லுக்குப் பதிலாக வேறு சொல் வந்திருக்கலாம். இவ்விடத்தில் பரிசுத்தம் என் பதை ஆழமாக வற்புறுத்துதற்கு முனிவர் கருத்துப்படி யுள்ள உயர்ந்த ‘பவித்திரம்’ என்ற சொல்லே ஆளப்பட் டுள்ளதென்க. தாம் உண்பதற்கில்லை என்ருலும் அன்புதான் கருதப்படத்தக்கது; உணவின் தகுதியன்று! என்ற ஒரு உண்மை இங்கு முனிவர் முன்னிலையில் உறுதிப்படுத்தப் பட்டது.

நாளை விடிய வருக

776 சிங்கஏறு அனைய வீரன்
பின்னரும் செப்பு வான்;‘யாம்
இங்குறைந்து எறிநீர்க் கங்கை
ஏறுதும் நாளை; யாணர்ப்
பொங்குநின் சுற்றத் தோடும்
போய்உவந்து இனிதுஉன் ஊரில்
தங்கி, நீ நாவா யோடும்
சாருதி விடிய’ என்ருன். ௨௫

ஆண் சிங்கத்தை ஒத்த இராமன் மேலும் சொல்கிருன். ‘நாங்கள் இங்கு (இன்று) தங்கியிருந்து நாளை அலைவீசுகிற

776. ஏறு - ஆண். ஏறுதும் - ஏறிக் கடக்கவேண்டும்; (நிலப் பரப்புக்கு மேலே அலை எறியடிப்பதால் அதன் மேல் ஏறிக் கடக்க வேண்டுமென்ருன்). யாணர் - நன்மை. பொங்குதல் - மிகுதல். சாருதல் - சேர்தல். விடிய - பொழுது விடியும்போது.

கங்கையாற்றைக் கடக்கவேண்டும்; நன்மை மிகுந்த உன்னுடைய சுற்றத்தாருடன் போய் உன் ஊரில் இனிதாக மகிழ்ச்சியோடு தங்கி, படகுகளுடன் நீ விடிகாலத்தில் வந்து சேர்வாயாக ' என்றான்.

போக மாட்டேன்

777 கார்குலாம் நிறத்தான் கூறக்
காதலன் உணர்த்து வான்;'இப்
பார்குலாம் செல்வ! நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான்!
இன்னலின் இருக்கை நீங்கித்
தீர்கிலேன்; ஆனது ஐய
செய்குவென் அடிமை என்றான். உச

மேகம் போல் விளங்குகின்ற நிறத்தையுடைய இராமன் (இவ்வாறு) கூற, காதல் மிகுந்த குகன் கூறுகிறான். ' இவ்வுலக முழுதும் விளங்குகிற செல்வமானவனே! உன்னை இந்தக் கோலத்தோடு கண்ட கண்ணைத் தோண்டி எடுக்காத வஞ்சகன் யான்! துன்பம் நிறைந்த நீ இருக்கும் இவ்விடத்தை விட்டுப் போகமாட்டேன். ஐயனே! (இங்கிருந்து என்னால்) இயன்ற அடிமைத் தொழிலைச் செய்வேன் ' என்றான்.

(வி - ம்) தயாத சக்கரவர்த்தியின் மூத்த மகன் என்று தெரிந்தே குகன் வந்திருக்கிறான். இராமனின் அழகும் பெருந்தன்மையும் ஆற்றலும் எல்லாம் கண்ணுக்குத் தெரிகின்றன. இவன் சக்கரவர்த்தியாக இருக்கவேண்டுமே யன்றித் தவசியாக இருப்பதைத் தன்னால் சகிக்க முடிய

777. குலாம் - விளங்குகிற. காதலன் - பக்தன். ஈர்தல் - தோண்டுதல். இருக்கை - இருக்குமிடம்.

வில்லை. கண் இருப்பதினால் தானே இந்தக் கொடுமையைப் பார்க்கவேண்டியிருக்கிறது. ஆதலால் கண்ணைத் தோண்டியிருக்கவேண்டும். அதைச் செய்யமுடியவில்லை. என்னுடைய அன்பு பொய்யன்பு போலும் என்பதை 'ஈர்கிலாக் கள்வனேன் யான்' என்றான். காளத்தியப்பனுக்கு இடர் என்றபோது கண்ணப்பர் தங்கண்ணைத் தோண்டிய நிகழ்ச்சி ஈண்டு சிந்திக்கத்தக்கது.

அப்படியானால் இரு

778 கோதைவிற் குரிசில், அன்னான்
கூறிய கொள்கை கேட்டான்;
சீதையை நோக்கித் தம்பி
திருமுகம் நோக்கித் தீராக்
காதலன் ஆகும் என்று,
கருணையின் மலர்ந்த கண்ணன்,
'யாதினும் இனிய நண்ப!
இருத்திஈண்டு எம்மொடு' என்றான். ௨௫

வெற்றிமாலை சூடிய வில்லையுடைய ஆணிற் சிறந்த இராமன், அந்தக் குகன் சொல்லிய கருத்தைக் கேட்டான்; சீதையை நோக்கினான்; இலக்குவனின் அழகிய முகத்தை நோக்கினான்; 'தீராத பக்தியுடையவன் ஆவான்' என்று கருதிக் கருணையினாலே மலர்ந்த கண்களையுடைய இராமன், (குகனை நோக்கி) எல்லாப் பொருளினும் இனிமையான நண்பனே! இங்கே எங்களோடு இருப்பாயாக என்றான்.

(வி - ம்) குகனுடைய கருத்தை அறிந்தபிறகு அவனைப் போ என்று வற்புறுத்திக் கூற இராமனுக்கு நாவெழவில்லை. ஆனால் உடன் வைத்துக் கொள்வதில் சீதைக்கும் இலக்குவ

778. கோதை - மாலை. கொள்கை - கருத்து. தீரா-நீங்காத.

னுக்கும் உடன்பாடிருக்குமா என்று தெரிவதற்கு அவ்விருவரையும் நோக்கினன். மறுக்கவில்லை என்பதை முகக் குறிப்பால் அறிந்தான். பிறகு இருக்கும்படி பணித்தான் என்றவாறு. இராமனுடைய கண்கள் தோன்றும்போதே கருணையிலிருந்து தோன்றியன என்பதுமொன்று.

நிலமகள் தவம் பலிக்கவில்லை

779 திருநகர் தீர்ந்த வண்ணம்
மானவ தெரித்தி என்ன,
பருவரற் றம்பி கூற,
பரிந்தவன் பையுள் எய்தி
இருகணீர் அருவி சோரக்
குகனும் ஆண்டு இருந்தான் ;'என்னே!
பெருநிலக் கிழத்தி நோற்றும்
பெற்றிலள் போலும்' என்னு. உசு

மக்களில் சிறந்தவனே! நீங்கள் செல்வம் நிறைந்த அயோத்தி நகரை நீங்கி வந்த காரணத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று (குகன்) கேட்க, துன்பம் நிறைந்த இலக்குவன் நடந்தவற்றைக் கூற, பரிதாப மடைந்தவனுகத் துன்பப்பட்டு இருகண்களிலிருந்தும் கண்ணீர் அருவிபோலக் கொட்ட, 'பெரிய நிலமகள் தவம் செய்தும் இராமனைப் பெற்றும் அவனுலடையும் பயனைப் பெறமுடியாமற் போனுள் போலும். என்னே!' என்று கூறிக்கொண்டு குகனும் அங்கே இருந்தான்.

---

779. தீர்ந்த - நீங்கிய. வண்ணம் - விதம். பருவரல் - துன்பம். பரிவு - பரிதாபம். பையுள் - துன்பம். நிலக்கிழத்தி - நிலமகள். நோற்றல் - தவம் செய்தல்.

சூரியன் மறைந்தான்

780 விரிஇருட் பகையை ஓட்டித்
திசைகளை வென்று, மேல்நின்று
ஒருதனித் திகிரி உந்தி
உயர்புகழ் நிறுவி, நாளும்
இருநிலத்து எவர்க்கும் உள்ளத்து
இருந்து அருள்புரிந்து வீந்த
செருவலி வீரன் என்ன,
செங்கதிர்ச் செல்வன் சென்றான். உஎ

சூரியன் 1. விரிந்து பரந்த இருளாகிய பகையை விரட்டி, திசைகளை யெல்லாம் தன் ஒளியுள் அகப்படுத்தி, எல்லாவற்றுக்கும் மேலிடத்தில் நின்று, ஒப்பற்ற ஒருசக்கரத் தேரைச் செலுத்தி, உயர்ந்த புகழை நிலைநிறுத்தி, நாள் தவறாமல் பெரிய இந்நில வுலகத்திலுள்ள எவர்க்கும் உள்ளத்தில் தன்னைப் பாராட்டும்படி தங்கியிருந்து மறைந்த, போரிலே வல்ல வீரன் என்று சொல்லும்படி, செங்கதிர்ச் செல்வன் மறைந்தான்.

தயரதன் 2. பரவிய இருட்கூட்டம் போன்ற அறியாமையைப் புறங்காட்டி ஓடச்செய்து, எட்டுத் திசைகளின் முடிவிடம் வரைக்கும் தன் ஆட்சியினுள் அடங்கச் செய்து மேம்பட்ட குணமுடையவனாக நின்று, ஒப்பற்ற தனியாட்சி செலுத்தி, சிறந்த புகழை நிலைநாட்டி, பெரிய நிலத்திலுள்ள எவருடைய உள்ளத்திலும் இருந்து, அருள்செய்து நீங்கிய, போரில் வலிமைபெற்ற வீரனாகிய தயரதன் என்று சொல்லும்படி செங்கதிர்ச் செல்வன் மறைந்தான்.

---

780. நிறுவி - நிலைநாட்டி. வீந்த - இறந்த: மறைந்த. செரு - போர். செங்கதிர் - சிவந்த கிரணங்கள்.

(வி - ம்) இப்பாடல் சூரியனுக்கும் தயரதனுக்கும் சிலேடை. சூரியனைப்போலத் தயரதன் விளங்கினான் என்றவாறு. யாவருடைய உள்ளத்திலும் இருந்தான் என்பதை, 'உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன்' (திருக்குறள் 294) என்பதாலறிக. தனித்திகிரி - உலகுக்கெல்லாம் ஒரே ஆட்சி என்றவாறு.

வில்லேந்தி விடியும்வரை காவல்

781 மாலைவாய் நியமம் செய்து,
மரபுளி இயற்றி, வைகல்
வேலைவாய் அமுது அன்னாளும்
வீரனும், விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல்
வைகினன் ; வரிவில் ஏந்திக்
காலைவாய் அளவும் தம்பி
இமைப்பிலன் காத்து நின்றான். உஅ

மாலை நேரத்தில் கடமைகளைத் தொடங்கி முறைப்படி முடித்து, தங்குதலையுடைய கடலிற் பிறந்த அமுதத்தைப் போன்ற சீதையும் இராமனும், பரப்பப்பட்ட நாணற் புல்லானது வரிசையாகப் பொருந்தியிருக்கும், தரையாகிய படுக்கையில் படுத்துக்கொண்டனர். கட்டமைந்த வில்லைக் கையில் பிடித்துக்கொண்டு, விடிகிற வரைக்கும் இலக்குவன் கண் இமைப்பில்லாதவனாகக் காத்துக்கொண்டு நின்றான்.

(வி - ம்) 'செய்து, இயற்றி' ஒரு பொருட் பன்மொழி எனினும் ஆம். 'வைகல்' பொழுது கழிதல் (ஈடு 7, 10, 4)

781. நியமம் - கடமை. மரபுளி - முறைப்படி. வைகல் - தங்குதல். வேலை - கடல். பாயல் - படுக்கை. மாலை - வரிசை - வைகினன் - தங்கினன்.

என்ற உரை கொண்டு இரவில் என்று பொருள் கொள்ள லும் உண்டு.

குகன் மலைபோல நின்றான்

782 தும்பியின் குழாத்தில் சுற்றும்
சுற்றத்தன்; தொடுத்த வில்லன்;
வெம்பிவெந்து அழியா நின்ற
நெஞ்சினன்; விழித்த கண்ணன்;
தம்பிநின் றானை நோக்கி,
தலைமகன் தன்மை நோக்கி,
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவிசோர் குன்றின் நின்றான். உக

யானைக் கூட்டம்போலத் தன்னைச் சூழ்ந்திருக்கிற சுற்றத்தையுடையவனும், நாண் ஏறிட்ட வில்லையுடையவனும், வெதும்பி வெந்து அழிகிற மனத்தையுடையவனும், மூடாமல் விழித்த கண்ணையுடையவனும், படகுகளின் தலைவனுமாகிய குகன், நிற்கிறவனாகிய இலக்குவனை நோக்கி, இராமனுடைய நிலையை நோக்கி, (கண்களிலிருந்து கொட்டுகிற) கண்ணீருடனே நீர்அருவியைப் பெருக்குகிற மலையைப்போல நின்றான்.

(வி - ம்) இந்தப் படுகாட்டிலுள்ள கொடிய விலங்குகள் பாம்புகள் முதலியவற்றால் ஊறுவந்து விடக்கூடாதே என்று குகன் காவல் புரிந்தான் என்க. இராமனையும் சீதையையுங் காப்பது இலக்குவன் கடமை. மூவரையும் காப்பது தன் கடமை என்று குகன் கருதினான். குகன் எவ்வழியோ, அவ்வழி அவனுடைய சுற்றம். எனவே வேடரெல்லாரும் சூழ்ந்து காவல் புரிந்தனர். இனி, குகன் இராமனைக் கொன்றுவிடுவானோ என்று இலக்குவன் விழித்தபடியே

---

782. தும்பி - யானை. அம்பி - படகு.

போர்க்கோலத்தோடு நின்று காத்தனன் என்றும், பரதன் நாட்டைப் பிடுங்கிக் கொண்டானாதலாலும் இலக்குவன் அவன் தம்பியாதலாலும் கூடவே வந்து கொன்றாலும் கொல்லலாமென்று குகன் கருதினனென்றும், அதனால்தான் அவன் விழியை விழித்தபடியே போர்க்கோலங் கொண்டு காவல் புரிந்தானென்றும், குகன் இராம இலக்குவரைக் கொன்றாலும் கொன்றுவிடுவானென்று கருதிக் குகனுடைய சுற்றத்தார் விழித்திருந்து காத்தாரென்றும் கூறுகின்றனர். இவையெல்லாம் இந்நூற் கருத்துக்குப் புறம்பானவை. 'அற்றம் நீத்த மனத்தினன்' 'உள்ளந் தூயவன்' என்று கூறப்பட்ட குகனுடைய உள்ளத்தில் ஐயத்துக்கு இடமில்லை. ஒன்று பாராட்டுவான் அல்லது கொல்வான். இரண்டுதான் குகனைப்போன்றவருக்கு விளங்கக் கூடிய பொருள்களாம். இலக்குவன் குகனைக் கண்டவுடனேயே 'உள்ளம் தூயவன், தாயின் நல்லான்' என்று குகனைப் பற்றி முடிவு செய்துவிட்டான் (பாடல் 772) எனவே பிற கூற்றுக்கள் இங்கே வேண்டப்படா என்க. அருவியைக் கொட்டிக்கொண்டிருக்கிற பெரிய மலையைப் போல கண்ணீரைக் கொட்டிக்கொண்டு நின்றான்; அவனது பரிவாரம் சிறு மலைகள் சூழ்ந்திருந்தாற்போல நின்றன என்க.

அஞ்சன ஞாயிறு

783 செஞ்சவே சேற்றில் தோன்றும்
தாமரை, தேரில் தோன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி
நோக்கின விரிந்த வேரூர்

---

783. செவ்வே - அழகாக. செஞ்செவே - மிகவும் அழகாக. வெம்சுடர்ச் செல்வன் - சூரியன். நோக்கிய - பார்த்தனவாய். வாழ்- என்றென்றும் நின்றுவாழும். வதனம் - முகம்.

அஞ்சன நாயிறு அன்ன
ஐயனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதனம் என்னும்
தாமரை மலர்ந்தது அன்றே. ௩0

மிக்க அழகுடன் சேற்றில் தோன்றியிருக்கிற தாமரை, தேரில் தோன்றுகிற சூடான கிரணங்களைச் செல்வமாகவுவுடைய சூரியனது உருவத்தைக் கண்டவுடன் மலர்ந்தன; இயற்கையான சூரியனில் வேறுபட்ட அஞ்சனத்தால் அமைந்த கருநிற ஞாயிறு என்று சொல்லும்படியான இராமனை நோக்கி அழகிய வஞ்சிக்கொடிபோன்ற சீதையினது வாழ்வதனம் என்னும் தாமரையும் மலர்ந்தது.

(வி - ம்) தாமரையிலுண்டான பூ மலர்ந்தது என்பதை தாமரை மலர்ந்தது என்றார். தாமரை மலர் காலையில் மலர்வது. சூரியனைக் கண்டு மலர்வதுபோலத் தன் கணவனைக் கண்டு முகமலர்ச்சி பெற்றாள் என்றவாறு. இங்கே கண் விழித்தாள், விழிக்கும்போதே இராமனை நோக்கி விழித்தாள். விழிக்கும் போது இராமனையே முதலில் கண்டாள் என்றெல்லாம் கொள்க. 'கொழுநற் றொழுது எழுவாள்' என்றார் பெருந்தகை (திருக்குறள் 55). வெண்ணிற ஞாயிறு ஒன்று உண்டு; மற்றொரு ஞாயிறும் உண்டு; அது கருநிற ஞாயிறு; இராமன் கருநிற முடையான்; சோதி வடிவமானவன் என்றவாறு.

படகு கொண்டுவருக

784 நாள்முதற்கு அமைந்த யாவும்
நயந்தனன் இயற்றி, நாமத்
தோள்முதற்கு அமைந்த வில்லான்
மறையவர் தொடரப் போனான்;

784. நாள்முதல் - காலை. நயந்தனன் - விரும்பியவனாகி. நாமம் - அழகு. ஆள் - ஆட்செய்தல்: தொண்டு.

ஆள்முதற்கு அமைந்த கேண்மை
அன்பனை நோக்கி, 'ஐய!
கோள்முதற்கு அமைந்த நாவாய்
கொணருதி விரைவின்' என்றான். ௬௪

அழகிய தோளினிடத்து அணிந்த வில்லையுடைய இராமன், காலையில் செய்யவேண்டிய கடமைகள் யாவற்றையும் விரும்பிச் செய்துவிட்டு, முனிவர்கள் தொடர்ந்துவரச் சென்றான். தொண்டுக்கு முதல்தரமாக அமைந்த நட்பினனான அன்புடையானை (குகனை)ப் பார்த்து ஐயனே! ஏறிச் செல்வதற்கு முதல்தரமாக அமைந்த ஒருபடகை விரைந்து கொண்டு வருவாயாக என்றான்.

(வி - ம்) அயோத்தி மக்களை இரவில் ஏமாற்றிவிட்டுப் பிரிந்து வந்தவனாதலால், அவர்கள் பின் தொடர்வார்களோ என்ற அச்சத்தால் 'கொணருதி விரைவின்' என்றான்.

ஒரு வேண்டுகோள்

785 *ஏவிய மொழிகேளா
இழிபுனல் பொழிகண்ணான்,
ஆவியும் உலைகின்றான்;
அடியிணை பிரிகில்லான்;
காவியின் மலர்காசாக்
கடல்மழை அனையானை,
தேவியொடு அடிதாழாச்
சிந்தனை உரைசெய்வான். ௬௫

784. கேண்மை - நட்பு. கோள் - கொள்ளுதல்: ஏறிக் கொள்ளுதல். நாவாய் - படகு. கொணருதி - கொண்டுவருவாய்.

785. ஏவிய - கட்டளையிடப்பட்ட. இழிதல் - வெளிப்படுதல். புனல் - நீர். உலைதல் - கட்டுவிடுதல்: நிலைகலங்குதல். பிரிகல்லான் - பிரியாதவன். காவியின் மலர் - நீலோற்பலப் பூ. காசா - காயாம் பூ. சிந்தனை - எண்ணம்.

(இராமன்) கட்டளையிட்ட சொற்களைக் கேட்டு வெளிப்படுகிற நீரைச் சொரிகின்ற கண்ணையுடையவனும், உயிர் தளர்கின்றவனும், திருவடிகளைப் பிரியாது உடனிருப்பவனுமான குகன், நீலமலரையும் காயாமலரையும் கடலையும் மேகத்தையும் ஒத்த இராமனையும், சீதையையும் விழுந்து வணங்கித் தன் எண்ணத்தைச் சொல்ல முற்பட்டான்.

(வி - ம்) இராமனின் நிறத்திற்கு நீலமலர், காயாமலர், கடல், மேகம் என்ற நான்கு உவமைகள் கூறப்படுகின்றன. 'குன்றுடு கொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல் போல், நின்றுடு கண்மயில்போல் நிறமுடைய நெடுமால்' (நாலாயிரம் 410) என்று நான்கு உவமை கூறப்படுதல் காண்க.

இங்கேயே இருக்கவேண்டும்

786 பொய்ம்முறை இலரே ;எம்
புகலிடம் வனமேயால் ;
கொய்ம்முறை உறுதாராய் !
குறைவிலெம் ; வலியேமால் ;
செய்ம்முறை குற்றேவல்
செய்குதும் ; அடியோமை
இம்முறை உறவென்ன,
இனிதுஇரு, நெடிதுஎம்மூர். நரு

பொய் ஒழுக்கம் என்பதே இல்லாதவராவேம்; நாங்கள் வசிக்குமிடம் வனமேயாகும் ; கொய்துமுறையாகக் கட்டப்பட்ட மாலையையுடையவனே ! நாங்கள் குன்றாத வலிமையை

786. கொய் - கொய்தல் : செடியிலிருந்து எடுத்தல். முறை - முறையாக. உறு - பொருந்திய : கட்டப்பட்ட. குற்றேவல் - பணிவிடை. நெடிது - நீண்டநாள் : வேண்டிய வரை.

யுடையவராக இருக்கிறோம்; செய்ய வேண்டிய முறைப்படி பணிவிடை செய்கிறோம். அடியவர்களாகிய எங்களை இந்த வகையான பணிக்குச் சுற்றமாகக் கொண்டு இனிதாக எம் ஊரில் நீண்டநாள் தங்கியிருக்க வேண்டும்.

(வி - ம்) இராமனுடைய பரம்பரை சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது என்றறிந்ததால், பொய் என்ற பேச்சே இங்கு கிடையாது என்றான். காட்டிலே தான் தங்க வேண்டுமென்பது வரமாதலால் இது காடுதான் என்றான். வனவிலங்கோ வேறு படை எடுப்போ வந்தால் நாங்களே பார்த்துக் கொள்ளமுடியும் என்றான். இலக்குவனோடு பேசியதிலிருந்து வேண்டுமென்றே வலிந்து இராமனை வெளி யேற்றி யிருக்கிறார்கள் என்ற எண்ணம் குகன் மனத்தில் பட்டிருக்கிறது; ஆதலால் தான் 'குறைவிலேம் வலியேம்' என்றான்.

வெண்ணிற முறுவல்

787 *அண்ணலும் அதுகேளா,*
அகம்நிறை அருள்மிக்கான்,
வெண்ணிற நகைசெய்தான்;
'வீர! நின் உழையாம்அப்
புண்ணிய நதியாடிப்
புனிதரை வழிபாடுற்று,
எண்ணிய சிலநாளில்
குறுகுதும் இனிது' என்றான். ௩௪

இராமனும் குகன் சொன்னதைக் கேட்டு மனத்தில் (என்றும்) நிறைந்த அருள் (மேலும்) மிகுந்தவனாக

787. வெண்ணிற நகை - வெண்ணிறமான பற்கள் : பற்கள் தெரியச் செய்தான் : சிரித்தான். உழை - இடம். குறுகுதல் - சேர்தல்.

வெள்ளிய பற்கள் தெரிய முறுவல் செய்தான். மேலும் 'வீர ! நின் இடத்திற்கு நாங்கள் (வரத்தில் குறிப்பிட்ட) அந்தப் புண்ணிய நதிகளிலே ஆடிவிட்டுப், புனிதரான முனிவர்களுக்கு வழிபாடு செய்து குறிப்பிட்ட சில நாட்களில் இனிதாக வந்து சேர்கிறோம்' என்றான்.

(வி - ம்) நீ இருக்கும் இடம் வனந்தான், இருக்கலாம். வரத்தில் தவம் மேற் கொள்ளுவதும், புண்ணிய நதிகளாடுவதும் சேர்ந்திருக்கின்றன. அவைகட்கு இது இடமல்ல ஆதலால் இங்கு தங்கியிருப்பதற்கில்லை என்றான் என்க. ஊனும் மீனும் மலிந்த வேடர் வாழிடம் தவத்துக்குத் தகுதியுடையதன்றென்பது 'புனிதரை வழிபாடுற்' றென்பதால் விளங்கும். புனிதரைப் புனிதமான இடத்தில் வழிபாடுற்று என்றவாறு. பதினான்கு ஆண்டுகளையே, குறிப்பிட்ட சிலநாள் என்றான். அப்புண்ணிய என்பதிலுள்ள அ என்னும் சுட்டு கைகேயி இட்டகட்டளையைக் குறித்தது.

விடை தருக

788 சிந்தனை உணர்கிற்பான்
சென்றனன் விரைவோடும் ;
தந்தனென் நெடுநாவாய் ;
தாமரை நயனத்தான்,
அந்தணர் தமைஎல்லாம்
'அருளுதிர் விடை'என்னா
இந்துவின் நுதலாளோடு
இளவலொடு இனிதுஏறு. நஙு

இராமனுடைய கருத்தை அறிந்துகொண்ட குகன், விரைவாகச் சென்று ஒரு நீண்ட படகைக் கொண்டு

788. சிந்தனை-எண்ணம். நெடு - நீளமான. இந்து-சந்திரன்.

வந்தான். தாமரை மலர் போன்ற கண்ணையுடைய இராமன் முனிவர்களெல்லாரையும் நோக்கி விடை தந்தருள வேண்டுமென்று சொல்லிக் கொண்டே, மதிபோன்ற முகத்தாளோடும் இலக்குவனோடும் இனிதாகப் படகில் ஏறி,

மறையோர் மெழுகானார்

789 'விடுநதி கடிதுஎன்றான் ;
மெய்உயிர் அனையானும்,
முடுகினன் நெடுநாவாய் ;
முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினின் மடவன்னக்
கதிஅது செல,நின்றார்
இடர்அறும் மறையோரும்
எரிஉறும் மெழுகுஆனார். ௩௯

விரைவாக நதியைக் கட என்றான். இராமனுடைய உடலுக்கே உயிர் போன்ற குகன் நீண்ட படகை விரைவாகச் செலுத்தினான். மடங்குகிற அலையோடு கூடிய மிகுந்த நீரிலே விரைந்து, இள அன்னத்தின் வேகமான நடையில் அப்படகு செல்ல, கரையில் நின்றவரான உலகத்துன்பத்தைக் கடந்த முனிவரும் நெருப்பிற்பட்ட மெழுகைப்போல வருந்தி உருகினர்.

(வி - ம்) இங்கேயும் இராமன், 'விடு நதி கடிது' என்றான். அதற்கேற்பக் குகனும் 'முடுகினன்' என்றார். இருப்பவன் விரைவாக விடச்சொன்னாலும், ஓட்டுபவன் எவ்வளவு விரைய முயன்றாலும் படகு தனக்கு ஏற்பட்ட

---

789. முடுகுதல் - விரைவாகச் செலுத்துதல். முரி - மடங்கியடித்தல். மடம் - இளமை. கதி - நடை. இடர் - உலகப்பற்றினால் ஏற்படும் துன்பம்.

தற்குமேல் செல்லாது என்பார் 'மடஅன்னக் கதி அது செல' என்றார். 'என் உயிர் அனையாய் நீ' என்று பின்னே இராமன் குகனை நோக்கிக் கூறும் (பாடல் 792) தொடரை இங்கு முற்கூட்டியே கவி 'மெய் உயிர் அனையான்' என்கிறார்.

சித்திரகூடத்துக்கு வழி எது ?

790 அத்திசை உற்று, ஐயன்
அன்பனை முகம்நோக்கி,
'சித்திர கூடத்தில்
செல்நெறி பகர்' என்ன,
பத்தியின் உயிர்ஈயும்
பரிவினன் அடிதாழா,
'உத்தம ! அடிநாயேன்
ஓதுவது உளது' என்றான். ௩௭

அக்கரையை அடைந்த இராமன் அன்பனாகிய குகனின் முகத்தைப் பார்த்து, சித்திர கூடத்திற்குச் செல்லும் வழியைச் சொல்வாயாக என்று கேட்க, பக்தியினால் தன் உயிரையே வழங்கத்தக்க அன்புள்ள குகன், இராமனது காலில் விழுந்து வணங்கி, 'உத்தமனே ! அடியேன் சொல்லுவது உண்டு' என்றான்.

---

790. அத்திசை - அக்கரை (எதிர்த்தகரை). நெறி - வழி. பத்தி - பக்தி : நம்பிக்கையோடு பெரியோரிடமும் கடவுளிடமும் கொள்ளும் முதிர்ந்த அன்பு. பரிவு - அன்பு. தாழா - தாழ்ந்து வணங்கி. அடிநாயேன் - நாய்போன்ற அடியேன். ஓதுவது - விண்ணப்பம்.

உங்களோடு வருகிறேன்

791 நெறிஇடை நெறிவல்லேன் ;
நேடினென் வழுவாமல்,
நறியன கனிகாயும்
நறவுஇவை தரவல்லேன் ;
உறைவிடம் அமைவிப்பென் ;
ஒருநொடி வரைஉம்மைப்
பிறிகிலென், உடன்ஏகப்
பெறுகுவென் எனில்நாயேன். நஅ

நான் உங்களோடு வரும் பேற்றைப் பெறுவேனானால், கிளை வழிகளைக் கண்டு தெரிவிக்கும் திறமுடையேன் ; தவறாமல் தேடி மிகச் சிறந்தனவான கனிகளையும் காய்களையும் தேனையும் தரத் திறமை யுடையேன் ; தங்குவதற்கு இடம் உண்டாக்குவேன் ; ஒரு நொடியளவு நேரமும் உங்களை விட்டுப் பிரியாமல் உடனிருந்து காத்து வருவேன் (என்றான்).

(வி - ம்) காட்டுவழி, போய்க்கொண்டே யிருக்கும் போது இடையே பிரியும்; இரண்டு மூன்று பாதைகள் கூடும். வழி தெரியாதவர் கிளைப்பாதை வழி சென்றால் அவ்வழி எங்கேயாவது போய்க்கொண்டே யிருக்கும். வினவி யறிய ஆளும் கிடைக்காது. சிலபோது போகிற வழி வளைந்து பிரிந்த இடத்திலேயே மீண்டும் வந்து கூடிவிடும். காட்டு வழிகளில் கிளைப்பாதைகளைக் கண்டறிந்து செல்வது கடினமான காரியமாகும். கிளை வழிகளை அறிவதில் நன்கு பயிற்சி பெற்றிருக்கிறேன் என்பதை 'நெறியிடை நெறிவல்லேன்' என்றான். இராமன் முதலியோர் நாட்டிலுறைபவர், எனவே,

---

791. நேடுதல் - தேடுதல். நறியன - சிறந்தனவாகிய. நறவு - தேன். உறைவிடம் - வீடு. நொடி-விரலைச் சுண்டுகிற நேரம். பிறிகிலென் - பிரிய மாட்டேன்.

புலால் உண்ணக் கூடும் என்று குகன் கருதியதால், முனிவர் பள்ளியில் மீனைச் சமைத்துக் கொண்டு சென்று உண்ணு மாறு வேண்டினான். இவர்கள் தவசிகளாக ஆகிவிட்டபடி யாலும், தவசிகளான முனிவர் புலாலுண்பதில்லை யென்பதை அறிந்துகொண்டான் ஆதலாலும் இப்போது 'கனி காய் தேன் ஆகிய இவை தரவல்லேன்' என்றான் என்க. திருக்குறளில் புலான் மறுத்தல் துறவறவியலில் தவத்திற்கு முன்பு கூறப் பட்டிருத்தல் உணரத் தக்கது.

நீ என் உயிர்

792 அன்னவன் உரைகேளா,
அமலனும் உரைநேர்வான் ;
'எனஉயிர் அனையாய்நீ !
இளவல்உன் இளையான் ! இந்
நன்னுத லவள்நின்கேள் !
நளிர்கடல் நிலம்எல்லாம்
உன்னுடை யது ! நான்உன்
தொழில்உரி மையின்உள்ளேன்.' நகூ

அந்தக் குகனுடைய சொற்களைக் கேட்டு, இராமன் பதிலளிக்கிறான். என்னுடைய உயிரை ஒத்தவன் நீ ; இலக் குவன் உன் தம்பியாவான் ; இந்த நல்ல நெற்றியையுடைய சீதை உனக்குத் தோழியாவாள் ; குளிர்ந்த கடலால் சூழப் பட்ட நிலப்பரப்பெல்லாம்உன்னுடையது; நான் உன்னுடைய ஏவல் தொழிலைச் செய்யும் உரிமைக்குக் கட்டுப்பட்டவன் ;

(வி - ம்) இது முதல் மூன்று பாட்டுக்கள் குளகம். 'என்றான்' என்று முடியும். 'நீ என் உயிரனையாய்'

---

792. கேளா - கேட்டு. அமலன் - மலமற்றவன் : கடவுள். நேர்வான் - சொல்வான். நுதலவள் - நுதலையுடையவள் : சீதை. கேள் - தோழி. நளிர் - குளிர்ந்த. தொழில் - ஏவல்.

என்றது உயிர்த்தோழன் என்றபடி. கேள் என்ற சொல் அண்ணன் மனைவி என்ற பொருளில் வந்திருக்கிறது. கேள் - நட்பு. நட்புடையவன் கேள்வன் எனப்படுவது போல நட்புடையவன் மனைவியைக் குறிக்க ஒரு சொல் இல்லை. எனவே கேள் என்ற பகுதி தனித்து நிற்பதாயிற்று. 'இந்நிகழ்ச்சியை நினைந்த சீதையின் வாக்காக, 'ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய, ஏழை வேடனுக்கு எம்பி உன் தம்பி, நீ தோழன், மங்கை கொழுந்தி எனச் சொன்ன, வாழி நண்பினை உன்னி மயங்குவாள்' (காட்சிப்படலம்). 'கொழுந்தி' என்றதரிக.

இனி நாம் ஐவர்

793 துன்புளது எனின்அன்றோ
சுகம்உளது ? அது அன்றோ
பின்புளது ! இடை மன்னும்
பிரிவுளது எனஉன்னேல் !
முன்புளெம் ஒருநால்வேம் ;
முடிவுளது எனஉன்னா
அன்புள இனிநாம்ஓர்
ஐவர்கள் உளரானோம். ௪௦

துன்பம் உண்டென்றால்தான் சுகமென்பது ஒன்று உண்டு ; அது பின்னாலே அல்லவா இருக்கிறது. நடுவிலே பொருந்துகிற பிரிவு, நிலையானது என்று நினைக்காதே ! முன்பு நாங்கள் ஒரு நால்வராக இருந்தேம் ; இனிமேல், முடிவு உண்டு என்று நினைக்க முடியாத பேரன்புள்ள நாம் ஒப்பற்ற ஐந்து பேர் ஆகிவிட்டோம்.

(வி - ம்) இனிப்பையே ஒருவன் உண்டு கொண்டிருந்தால் அச்சுவையை உணர முடியாது. இடையில் புளிப்

793. மன்னுதல் - பொருந்துதல். உன்னா - நினைக்க முடியாத.

பையோ கசப்பையோ உண்டு விட்டு மீண்டும் இனிப்பை உண்டால் சுவையை அறிவான். அவ்வாறே துன்பம் உண்டானால்தான் இன்பத்தை உணர முடியும் என்றான். 'நிழலருமை வெய்யிலிலே நின்று அறிமின் ஈசன், கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச், சொல்லருமை ஆரியத்தில் சோமன் கொடைஅருமை, புல்லரிடத் தேஅறிமின் போய்' (ஔவை - தனி) என்றது மது. இன்பந்தான் உள்ளது, துன்பம் தோன்றி மறைவது! ஏன்? கடவுளும் உயிரும் ஆனந்தமுந்தான் நித்தியமானவை. ஆதலால் 'இடை மன்னும் பிரிவு' என்றார். செல்வம் நிலையாது; இளமை நிலையாது; யாக்கை நிலையாது என்று பலரும் கூறுவர். 'இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா, வளவிய வான் பெரும் செல்வமும் நில்லா' (மணிமேகலை-சிறைசெய். 135-136) இங்கே துன்பம் நிலையான தல்ல; செல்வம் இளமை யாக்கை நீங்குமாப் போலே துன்பமும் நீங்கக் கூடியதுதான் என்ற பேருண்மையை 'இடை மன்னும் துன்பு' என்றார். நீண்ட இன்பத்துக் கிடையில் துன்பம் வந்து போவது என்று கூறும் உண்மை நோக்கிஇன்புறத்தக்கது. துன்பமே மனித வாழ்வென்றும் அதனிடை செல்வம் முதலியன தோன்றி நீங்குவதென்றும் கூறுவார் கூற்று இங்கே மறுக்கப் படுதலும் காண்க.

அங்கே பரதன் இங்கே நீ

794 அங்குள கிளைகாவற்கு
அமைதியின் உளன்உம்பி;
இங்குள கிளைகாவற்கு
யார்உளர்? இசையாய்நீ!

---

794. கிளை - சுற்றம். அமைதி - பொருத்தம். உம்பி - உன் தம்பி: பரதன். இசையாய் - சொல்வாய். உறு - பொருந்துகிற.

உன்கிளை எனதுஅன்றோ ?
உறுதுயர் உறல்ஆமோ ?
என்கிளை இது ; கா !என்
ஏவலின் இனிதுஎன்றான். ௭௪

அயோத்தியிலுள்ள (நம்முடைய சுற்றத்தாரைக்) காப்பாற்றுதற்கு அமைந்தவனாக உன் தம்பி (பரதன்) இருக்கிறான். இங்கேயுள்ள (நம்முடைய) சுற்றத்தாரைப் பாதுகாப்பதற்கு (உன்னையன்றி) வேறு யார் இருக்கின்றனர் ? நீயே சொல்வாயாக ! உன்னுடைய சுற்றம் என்னுடைய சுற்றம் அல்லவா ? மக்களைப் பொருந்த வருகிற துயரத்தைப் பொருந்த விடலாமா ? இஃது என்னுடைய சுற்றம் ஆகும். என்னுடைய கட்டளைப்படி இவர்களைக் குறைவில்லாமல் காப்பாற்றி வருவாயாக என்றான்.

மூவரும் காட்டினுள்ளே சென்றனர்

795 பணிமொழி கடவாதான் ;
பருவரல் இகவாதான் ;
பிணியுடை யவன்என்னும்
பிரிவினன் விடைகொண்டான்
அணியிழை மயிலோடும்,
ஐயனும், இளையோனும்,
திணிமரம் நிறைகானில்
சேண்உற நெறிசென்றார். ௭௫

இராமனது கட்டளையைக் கடவாதவனும் துன்பம் நீங்காதவனும் ஆகிய குகன், அன்பினாலே (இராமனோடு கட்டப்

---

795. பணிமொழி - பணித்த மொழி : கட்டளை. பருவரல் - துன்பம். இகத்தல் - நீங்குதல். பிணி - பிணிப்பு. அணியிழை - பெண். திணி - நெருங்கி அடர்ந்த. சேண் - தூரம். நெறி - வழி.

பட்ட) கட்டு நீங்காதவன் என்று சொல்லத்தக்க பிரிவை உடையவனுகி, விடை கொண்டான். அழகிய மயில் போன்ற சீதையோடு இராமனும் இலக்குவனும் நெருங்கிய மரங்கள் நிறைந்த காட்டினுள்ளே தூரமான நீண்ட வழியிலே சென்றனர்.

---

7. வனம் புகு படலம்

[இராமன் வனத்தினுள்ளே சென்றதைக்கூறும் படலம்]

மகிழ்ச்சியோடு வழி நடந்தனர்

796 வெயில்இள நிலவேபோல்
விரிகதிர் இடைவீச,
பயின்மரம் நிழல்ஈன,
பனிபுரை துளிவானப்
புயல்தர, இளமென்கால்
பூஅள வியதெய்த,
மயிலினம் நடமாடும்
வழிஇனி யனபோனர். க

வெயிலானது இளநிலவைப் போல விட்டு விட்டு விரிந்த கிரணங்களை வீசிக் கொண்டிருக்கவும், நெருங்கியிருக்கிற மரங்கள் நிழலைச் செய்யவும், பனித்துளிகளை யொப்ப வானத்திலுள்ள மேகங்கள் மழைத் துளிகளைத் தூற்றவும், வளமுள்ள மெல்லிய காற்று, பூவிற் பொருந்திக் கலந்து, கொண்ட மணத்தை வீசவும் மயில்கள் ஆடுகின்ற இனியனவான காட்டு வழியிலே சென்றார்கள்.

---

796. பயில் - நெருங்கிய. புரை - ஒத்த. அளவியது - கலந்து கொண்டதை : மணத்தை.

பிறவிநோய் தீர்க்கும் மருத்துவன்

797 அருத்தியின் அகம்விம்மும்
அன்பினில் நெடுநாளில்
திருத்திய வினைமுற்றிற்று
என்றனன் தெரிகின்றான்
பரத்துவன் எனும்நாமப்
பரமுனி, பவநோயின்
மருத்துவன் அனையானை
வரவுஎதிர் கொளவந்தான். உ

மகிழ்ச்சியினாலே மனம் நிறைகின்ற அன்பினால் நெடுங் காலம் திருத்தமாகச் செய்யப்பட்ட தவமாகிய செயல் இன்று முடிவுபெற்றது என்று தெரிந்தவனாகிய பரத்துவன் எனும் பெயரையுடைய மேலான முனிவர், பிறவி நோய்க்கு மருத்து வனையொத்த இராமனை எதிர்கொண்டு வரவேற்கும் பொருட்டு வந்தார்.

பரத்துவரின் துயரம்

798 அம்முனி வரலோடும்
அநகனும் அலர் தூவி,
மும்முறை தொழுதான்;அம்
முதல்வனும் எதிர்புல்லி
இம்முறை உருவோ நான்
எய்துவது? எனஉள்ளம்
விம்மினன்; இழிகண்ணீர்
விழிவழி உகநின்றான். ந

797. அருத்தி - மகிழ்ச்சி. திருத்திய - திருத்தமாகச் செய்யப்பட்ட. வினை - தவம் செய்தலாகிய வினை. பவம் - பிறவி. மருத்துவன் - மருந்து கொடுத்து நோயை நீக்குபவன்.

798. அநகன்-இராமன். அலர் - மலர். முதல்வன் - முதன்மை பெற்ற முனிவர். புல்லி - தழுவி. இம்முறை உருவோ-இவ்வாறான கோலமா. எய்துவது-(காணும்படி) அடையப்பெறுவது. உக-சிந்த-

அந்த முனிவர் வரவும் இராமன் மலர்தூவி மூன்று முறை தொழுதான். அந்த முனிவரும் எதிராகக் கட்டித் தழுவி, இந்த வேடத்தோடு கூடிய உருவத்தையா நான் காண்பது என்று மனம் விம்மி வெளிப்பட்ட கண்ணீர், கண்ணின் வழியே சிந்த நின்றார்.

இவ்வேடம் ஏன் ?

799 அகல்இடம் நெடிதுஆளும்
 அமைதியை ; அதுதீரப்
புகலிடம் எமதாகும்
 புரைஇடை இதுநாளில்
தகவுஇல தவவேடம்
 தழுவினை வருவானேன் ?
இகல்அடு சிலைவீர !
 இளையவ னொடும்என்றான். ௯

நிலவுலகத்தைப் பரம்பரையாக ஆளுந் தகுதியை உடையவனே! அதை விட்டுவிட்டு, எமது வாசத்துக்குரிய ஆச்சிரமத்தை நோக்கி வயதுக்குத் தகுதியில்லாத தவவேடத்தை ஏற்றுக்கொண்டு தம்பியுடனே வருவானேன்? பகையை வெல்லுகிற வில்லையுடைய வீரனே! (சொல்வாயாக) என்றார்.

(வி - ம்) தயரதனுக்கு இவன்தான் மூத்த மகன். ஆட்சி இவனுடையது. உலகைத் துறந்து தவம் மேற்கொள்ளும் முதுமைப் பருவத்தையும் அடையவில்லை. எதிரிகள் நாட்டைக் கவர்ந்துகொண்டு இவனைத் துரத்திவிடவும் முடியாது. மனைவியையும் தம்பியையும் அழைத்துக்கொண்டு ஏன் இங்கே வந்தான் என்று திகைக்கிறார் முனிவர்.

---

799. அகல்இடம் - மண்ணுலகம். அமைதியை - தகுதியுடையவன். புகலிடம் - வசிக்குமிடம். புரை - ஆச்சிரமம். தகவு - தகுதி. இகல் - பகை. அடு - ஒழிக்கிற.

நிலமகள் தவப்பயன் அடையவில்லை

800 உற்றுள பொருள்எல்லாம்
உணர்வுற உரைசெய்தான் ;
நற்றவ முனி, அந்தோ
விதிதரு நவைஎன்பான் ;
'இற்றது செயல்உண்டோ
இனி' என இடர்கொண்டான் ;
பெற்றிலள் தவம்அந்தோ
பெருநில மகள்என்றான். ரு

பொருந்தியவைகளை எல்லாம் விளங்கும்படி இராமன் கூறினான். நல்ல தவமுனிவர், அந்தோ இது விதி செய்த பிழை என்றார். இவ்வாறான (வருந்தத்தக்க) செயல் இனி (எந்த நாளிலும்) உண்டாகவா போகிறது என்று கருதித் துன்பத்தை அடைந்தார். பெரிய நிலமகள் தவப்பயனைப் பெற்றாளில்லை ஐயோ! என்று கூறினார்.

(வி - ம்) பூமிதேவி பலகாலம் செய்த தவத்தினாலேயே இராமன் தோன்றினான். எனினும் அவன் முடிபுனைந்து நிலத்தை அறத்தில் நிறுத்தி ஆளுதற்கின்றி வனத்தில் வாழ நேர்ந்ததே என்று முனிவர் வருந்தினார். நிலமகள் செய்த தவம் முழுப்பயனையும் எய்தவில்லை என்பது கருத்து. இங்கே தவம் என்றது பயனின்மேல் நின்றது. 'பெருநிலக்கிழத்தி நோற்றும் பெற்றிலள்போலும்' (பாடல் - 779) என்றதும் அது.

---

800. பொருள் - நிகழ்ந்த செய்தி. நற்றவமுனி - நல்ல தவ முனிவர். நவை - பிழை. இற்றது - இவ்வாறான. இடர் - துன்பம். பெற்றிலள் - பெற்றாளில்லை. தவம் - தவத்தின் பயன்.

முனிவர் உபசாரம்

801 புக்குஉறை விடம்நல்கி,
பூசனை முறைபேணி,
தக்கன கனிகாயும்
தந்து,உரை தரும்அன்பால்
தொக்கநன் முறைகூறி,
தூயவன் உயிர்போலும்
மக்களின் அருளுற்றான்;
மைந்தரும் மகிழ்வுற்றார். ௬

பரத்துவ முனிவர் (மூவரையும்) அழைத்துச் சென்று தங்குதற்கு இடங்கொடுத்து, செய்யத்தக்க மரியாதையை முறையாகச் செய்து, உண்ணத்தக்க கனிகளையும் காய்களையும் கொடுத்து, அன்பு நிறைந்த சொற்களாலே மிகுந்த நல்ல உபதேசங்களைச் செய்து உயிரனைய மக்களிடத்துக் காட்டுவது போன்ற கருணைகாட்டினார். மக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

(வி - ம்) தந்தை, பிள்ளைகளிடத்துக் கொள்ளும் அன்பைக் கொண்டான் என்பதை, 'மக்களின் அருள் உற்றான்' என்றார். உலக உயிர்யாவற்றிலும் அருளுடைய அந்தணனுக்கு இவர்களைக் கண்டவுடன் பெற்ற பிள்ளைகளிடம் ஏற்படுகிற பாசம் ஏற்பட்டுவிட்டதென்க. மைந்தர் என்றாலும் அது மூவரையும் குறிக்கும்.

ஒரு செய்தி

802 வைகினர் இனிதன்னார்;
அவ்வழி மறையோனும்
உய்குவம் இவனெடுயாம்
உடன்உறை தலின்என்பான்

---

801. புக்கு - புகுந்து. உறைவிடம் - தங்குமிடம். பூசனை - மரியாதை. தக்கன - தகுந்த. நன்முறை - உபதேசம். தூயவன் - தூய்மையான ஒழுக்கமுள்ள பரத்துவமுனிவர்.

செய்தனன் இனிதெல்லாம்;
செல்வனை முகம்முன்னுக்
கொய்குல மலர்மார்ப!
கூறுவது உளதுஎன்றான். எ

அங்கே அம்மூவரும் இனிமையாகத் தங்கியிருந்தனர். முனிவரும் இந்த இராமனோடு நாம் உடனிருப்பதனால் நற்கதி பெறுவோம் என்று கருதினவராய், அவர்களுக்கு இனியவற்றைச் செய்து, இராமனை நோக்கி, கொய்த நல்ல மலரணிந்த மார்பை யுடையவனே! சொல்ல வேண்டியது உண்டு என்றார்.

தவம்செய்ய இதுவே இடம்

803 *நிறையும் நீர்மலர் நெடுங்கனி
கிழங்குகாய்; நேர்ந்த
குறையும் தீயவை; தூயவை
குறைவில; எம்மோடு
உறையும் இவ்வழி ஒருங்கினில்;
உயர்தவம் முயல்வார்க்கு
இறையும் ஈதலாது இனியதுஓர்
இடம்அரிது இன்னும். அ

நீரும் பூவும் மிக்க கனியும் கிழங்கும் காயும் நிறையக் கிடைக்கும். அடையும் துன்பம் நீங்கும். நன்மைக்குக் குறைவில்லை. எம்மோடு இவ்விடத்தில் (மூவரும்) சேர்ந்து தங்கியிருங்கள். உயர்ந்த தவம் புரிபவர்க்குத் தங்கத் தக்க இடமும் இஃது அல்லாமல் இனிமையான வேறு ஓர் இடம் கிடைப்பதரிது.

---

802. வைகினர் - தங்கியிருந்தனர். வழி - இடம்.

803. ஒருங்கினில் - சேர்ந்தாற்போல (மூவரும்). முயல்தல் – செய்தல். இறை - தங்குமிடம். இன்னும் - வேறு.

பலர் வந்து தொல்லே கொடுப்பர்

804　பூண்ட மாதவன் அவ்வழி
　　விரும்பினன் புகல,
‘நீண்ட தன்றுஇது; நிறைபுனல்
　　நாட்டுக்கு நடுவாம்;
மாண்ட சிந்தைய! இவ்வழி
　　வைகுவென் என்ருல்,
ஈண்ட யாவரும் நெருங்குவர்;
　　என்றனன் இராமன்.　　கூ

பெரிய தவத்தைப் புரிபவன் அவ்வாறு விருப்பத்துடன் கூற, கோசல நாட்டுக்கு நீண்ட தூரத்தில் உள்ளதன்று. நிறைந்த நீர்வளமுள்ள நாட்டுக்கு இது நடுவாகும். மாட்சிமைப்பட்ட மனத்தையுடைய முனிவரே! இவ்விடத்தில் இருப்பேனுனல் (கோசலநாட்டிலுள்ள) யாவரும் விரைந்து வந்து சேர்ந்துவிடுவார்கள் என்று இராமன் கூறினுன்.

சித்திரகூடம் சிறந்த இடம்

805　ஆவது உள்ளதே; ஐய! கேள்!
　　ஐயிரண்டு அமைந்த
காவதப் பொழிற்கு அப்புறம்
　　கழிந்தபின், காண்டி!
மேவு காதலின் வைகுதி!
　　விண்ணினும் இனிதால்;
தேவர் கைதொழும் சித்திர
　　கூடம்என்று உளதால்.　　கO

ஐயனே! நீ சொல்வது உண்மைதான். கேட்பாயாக. பத்துக்காத தூரம்வரை பொருந்திய இச் சோலேக்கு அப்பால்

804. பூண்ட - தவம் பூண்ட. மாண்ட - மாட்சிமைப்பட்ட. ஈண்ட - விரைவாக.

805. ஆவது - அது. காவதம் - எழரை நாழிகை வழி.

சென்றபின், தேவரும் கைகூப்பித் தொழத்தக்க சித்திர கூடம் என்று ஒருமலை இருக்கிறது. (நீ அதனை) காண்பாய்! பொருந்திய அன்போடு அங்கே தங்கியிரு. (அது) தேவ லோகத்தினும் இனிதாக இருக்கும்.

(வி - ம்) கங்கையின் அக்கரையை அடைந்ததுமே சித்திரகூடத்துக்கு இப்பால் இருத்தலாகாதென்றும், சித்திர கூட மலையே தமக்கேற்குமென்றும் தெரிந்துகொண்டான். ஆதலால்தான் குகனை நோக்கி, 'சித்திர கூடத்திற் செல் நெறி பகர்' (பாடல் 790) என்று கேட்டான். இங்கே கேளாமலே முனிவர் சித்திரகூடமே சிறந்த தென்கிறார்.

காளிந்தி நதியை அடைதல்

806 என்று காதலின் ஏயினன்;
அடிதொழுது ஏத்திக்
கொன்றை வேய்ங்குழற் கோவலர்
முல்லைஅங் குறிஞ்சி
சென்று, செங்கதிர்ச் செல்வனும்
நடுவுறச் சிறுமான்
கன்று நின்றுகள் கரையுடைக்
காளிந்தி கண்டார். கக

என்று கூறி அன்போடு வழியனுப்பினர். அவருடைய பாதங்களைத் தொழுது துதித்துவிட்டு, கொன்றையினாலும் மூங்கிலினாலுமுள்ள குழல்களை ஊதும் கோவலர் வாழும் முல்லை நிலத்தையும் அழகிய மலை நிலத்தையும்

---

806. ஏயினன் - ஏவினன். ஏத்துதல் - துதித்தல். கொன்றை - கொன்றைக் குழல். வேய் - மூங்கில். கோவலர் - பசுக் காப்போர். முல்லை - காடும் காடுசார்ந்த இடமும். குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும். செங்கதிர்ச் செல்வன் - சூரியன். நடு - உச்சி. உகள்தல் - தாவுதல்.

தாண்டி, சூரியனும் உச்சியை அடையச் சிறு மான்கன்றுகள் நின்று தாவித் திரியும் கரையை யுடைய காளிந்தி நதியை அடைந்தனர்.

(வி - ம்) நதிக்கரையில் மான்கன்று துள்ளி விளையாடித் திரிவது அழகு. 'வண்டுபாட மயில் ஆல மான்கன்று துள்ள' என்பர் ஆளுடைய பிள்ளை (சம்பந் - தேவாரம்). கோவலர் ஊதுங் குழல் வேய்ங்குழலே யன்றிக் கொன்றைக் குழலும் ஆம். 'கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன், இன்றுநம் ஆனுள் வருமேல் அவன் வாயில், கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி' (சிலப்பதி - ஆய்ச்சி)

பாலை நிலத்தை அடைதல்

807 அனையர் அப்புனல் ஏறினர் ;
அக்கரை அணைந்தார் ;
புனையும் வற்கலைப் பொற்பினர்
நெடுநெறி போனார் ;
சினையும் மூலமும் வேரும்வெந்து
இருநிலம் தீய்ந்து
நினையும் நெஞ்சமும் சுடுவதோர்
நெடும்சுரம் நேர்ந்தார். கஉ

அம்மூவரும் அந்த ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தார்கள். மரவுரி அணிந்த தன்மையையுடைய அவர்கள் (பிறகு) நீண்ட வழியைக் கடந்து போயினர். கிளைகளும் மரமும் வேரும் கருகி பெரிய நிலப்பரப்பு முழுமையும்

---

807. வற்கலை - மரவுரி. பொற்பு - தன்மை. சினை - கிளைகள். மூலம் - மரம் கிழங்கு ஆகிய இடைப்பட்டவை. வேர் - ஆணிவேர் சல்லி வேர் எல்லாம். இரு - பெரிய. நெடும் - நீண்ட. சுரம் - பாலைவனம்.

தீய்ந்து (அந்நிலத்தை) நினைத்த மனமும் கொதிக்கும்படியான தொரு நீண்ட பாலைவனத்தை அடைந்தார்கள்.

(வி - ம்) பாலை நிலத்தில் ஒன்றும் உண்டாக முடியாது. உயிர் வாழ இயலாது. ஒரே மணல். மழையே பெய்யாது. கரிந்த கள்ளியும் எரிந்த வேலாவும் இருக்குமென்பர். இரவில் கள்வர்கள் நின்று வழிப்பறி செய்வர். உற்றாரறியாமல் களவிற் செல்லுங் காதலர் இரவு நேரத்தில் இந்நிலத்தைக் கடந்து விடுவர் அடுத்தநாள் முழுமையும் இவ்வழிச் சென்று தேட யாராலும் இயலா தென்பதற்காக. இதனை, 'பொன் போலும் கள்ளிப் பொறி பறக்கும் கானல்' என்றும், 'விழுந்த துளி அந்தரத்தே வேம் என்றும் வீழின் எழுந்து சுடர் சுடுமென்று அஞ்சிச், செழுங் கொண்டல் பெய்யாத கானகம்' என்றும் (தனிப்பாடல்கள்)கூறினர். முந்தியபாடல்களில் முல்லையுங் குறிஞ்சியும்கூறி இங்கே பாலையைக்கூறினார். 'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை என்பதோர் படிவங் கொள்ளும்' (சிலப்பதி - காடுகாண்-64-66) என்றது காண்க.

சித்திரகூடம் தெரிந்தது

808 வெளிறு நீங்கிய பாலையை
மெல்லெனப் போனார்;
குளிறு வான்மதிக் குழவிதன்
சூல்வயிற்று ஒளிப்ப,
பிளிறு மேகத்தைப் பிடிஎனப்
பெரும்பனைத் தடக்கைக்
களிறு நீட்டும்,அச் சித்திர
கூடத்தைக் கண்டார். கங

808. வெளிறு-வெளிப்படுகை. பாலை-பாலைநிலம். குளிறு-ஒளி. மதிக்குழவி-மூன்றாம் பிறை. சூல் - கரு. பிளிறுதல் - பேரோசையிடல். பிடி - பெண்யானை. பனை - பனைமரம். களிறு-ஆண்யானை.

முளை வெளிப்படுதலில்லாத பாலை நிலத்தை (இரவில்) மெதுவாகக் கடந்து சென்றனர். ஒளியினையுடைய வானத்தில் உலவும் இளஞ்சந்திரன் தன்னுடைய சூல்கொண்ட வயிற்றில் மறையச் சத்தமிடும் மேகத்தைப் பெண்யானை என்று கருதி, பெரிய பனைமரம் போன்ற நீண்ட துதிக்கையை ஆண்யானையானது நீட்டுகின்ற சித்திரகூட மலையைக் கண்டனர்.

(வி - ம்) பாலை நிலத்தில் முளை உண்டாவதே யில்லை என்பதை 'வெளிறு நீங்கிய பாலை' என்றார். பாலை நிலம் பகலில் காய்ந்து பெற்ற வெப்பத்தை இரவிலும் ஒழிவதில்லை. நிலம் சுடுமாதலாலும், வழிதெரியாதாதலாலும், முட்கள் கிடக்குமாதலாலும் வருத்தத்துடன் மெல்லெனக் கடந்தார் என்றார். நீருண்ட மேகம், கருக்கொண்டமேகம் எனப்படும். அதன் வயிறுவது நடுஇடமென்க. அதில் மூன்றாம் பிறைச் சந்திரன் மறைவதும் தோன்றுவதும் இயல்பு. அவ்வாறே பெண்யானையின் வாயினுள் உள்ள சிறு தந்தம் மறைந்தும் வெளிப்பட்டும் தோன்றும். நீருண்ட கருமேகம் இடிக்கும். யானை பிளிறும். ஆதலால் மலையில் உலவும் மழை மேகத்தைப் பெண்யானை என உருவகப் படுத்தியது பொருத்தமாம்.

8. சித்திரகூடப் படலம்

[இராமன் சித்திரகூட மலையை அடைந்திருந்த செய்தி கூறும் படலம்.]

சீதைக்கு மலைவளங் காட்டல்

809 நினையும் தேவர்க்கும் நமக்கும்ஒத்து
ஒருநெறி நின்ற,
அனகன் ; அங்கணன் ; ஆயிரம்
பெயருடை அமலன் ;
சனகன் மாமட மயிற்குஅந்தச்
சந்தனம் செறிந்த
கனக மால்வரை இயல்பெலாம்
தெரிவுறக் காட்டும். க

மதிக்கப்படுகிற தேவர்கட்கும் நமக்கும் ஒத்து, ஒரே வழியில் நிற்கின்ற கடவுள் தன்மை யுள்ளவனும், அழகிய (கருணை நிறைந்த) கண்களையுடையவனும், ஆயிரக் கணக்கான பெயர்களையுடையவனுமான இராமன், சனக மன்னனது பெருமை பொருந்திய இளமயில் போன்ற சீதைக்கு, அந்தச் சந்தன மரங்கள் அடர்ந்திருக்கிற தங்கம் போன்ற பெரிய (சித்திரகூட) மலையின் தன்மைகளை யெல்லாம் தெரியும்படி காட்டினான்.

(வி - ம்) அங்கணன் - அழகிய கண்களையுடையவன். அழகிய கண்ணாவது - கருணை நிறைந்த கண் என்க. 'கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்' (திருக்குறள் 575) அனகன், அங்கணன், அமலன் என்ற சொற்கள் சைன -

---

809. ஒருநெறி - ஒரே வழியில். அனகன் - கடவுள். அங்கணன் - அழகிய கண்களை யுடையவன். அமலன் - மலமற்றவன். மடம் - இளமை. காட்டும் - காட்டுவான்.

வைணவ - சைவக் கடவுள்களின் தன்மைகளைப் பெற்றவன் எனினும் அமையும்.

மேகமா ? யானையா ?

810 வாளும் வேலும்விட்டு அளாயின
அனையகண் மயிலே !
தாளின் ஏலமும் தமாலமும்
சுடர்தரு சாரல்,
நீள மாலைய துயில்வன
நீருண்ட கமம்சூல்
காள மேகமும் நாகமும்
தெரிகில காணாய். உ

வாளினையும் வேலினையும் சேர்த்துக் கலந்தாற் போன்ற கண்களையுடைய மயில்போன்றவளே ! அடிப்பகுதியில் ஏலக் கொடியும், பச்சிலை மரமும் விளங்கித் தோன்றுகின்ற மலையின் (மேற்) பகுதியில் நீளமான மாலையைப்போல் பொருந்திக் கிடக்கும் நீருண்ட நிறைந்த, கருவுற்ற கரிய மேகமும் யானையும் வேற்றுமை காணமுடியவில்லை ; பாராய்.

யானைக்கு யானை தேனளித்தல்

811 உருகு காதலில் தழைகொண்டு
மழலைவண்டு ஓச்சி,
முருகு நாறுசெந் தேனினை
முழைநின்றும் வாங்கி,

---

810. அளாயின - கலந்த. தாள் - அடிப்பாகம். தமாலம் - பச்சிலை மரம் என்பர் : இது திருமாலின் நிறத்துக்கு உவமை கூறப் படுகிறது. சாரல் - மலை. மாலைய - மாலையைப்போல. துயில்தல் - படிந்துகிடத்தல். கமம் - நிறைவு. காளம் - கருமை. நாகம் - யானை.

811. உருகுதல் - அன்பு மிகுதியால் மனமிளகுதல். தழை - மரக்கொப்பு. மழலை - மெல் ஒலி. ஓச்சி - விரட்டி. முருகு - மணம்.

பெருகு சூல்இளம் பிடிக்குஒரு
பிறைமருப் பியானை,
பருக வாயினில் கையில்நின்று
அளிப்பன பாராய். ௩

மிகுந்த அன்பினால் (மரத்) தழையை (ஒடித்து)க் கொண்டு மென்மையாக ஒலிக்கின்ற வண்டுகளை விரட்டி, மணம் வீசுகின்ற செந்தேனை, மலை இடுக்குகளினின்றும் எடுத்து, முதிர்ந்த கருவைக் கொண்டிருக்கும் இளம் பெண் யானைக்கு, அது உண்ணும்படி அதன் வாயில், பிறைபோன்ற தந்தங்களையுடைய ஒரு ஆண்யானை தன் கையினாலே ஊட்டுவதைப் பாராய்!

செம்முருக்கும் செந்தீயும்

812 குழுவு நுண்தொளை வேயினும்,
குறிநரம்பு எறிவுற்று
எழுவு தண்டமிழ் யாழினும்,
இனியசொற் கிளியே!
முழுவ தும்மலர் விரிந்தன
முருக்கிடை மிடைந்த
பழுவம் வெங்கனல் கதுவியது
ஒப்பது பாராய். ௪

சிறு தொளைகள் பொருந்திய வேய்ங்குழலையும், இசையைக் குறித்து நரம்புகளைத் தடவி எழுப்பும் குளிர்ந்த தமிழ்

811. நாறு - வீசுகிற. முழை - கல் இடுக்கு. பெருகு சூல் - முதிர்ந்த கருப்பம். மருப்பு - தந்தம்.

812. குழுவு - பொருந்திய. வேய் - மூங்கில் (இங்கே புல்லாங்குழலைக் குறித்தது). குறி - இசையைக் குறிக்கிற. எறிவுறுதல் - தடவிச் சுண்டுதல். எழுவுதல் - எழச் செய்தல். தண் தமிழ் யாழ் - குளிர்ந்த தமிழ் நாட்டவர்க்கு உரிய யாழ். முருக்கு - செம்முருக்க மரம். இடை மிடைந்த - இடையிடையே நெருங்கியுள்ள. பழுவம் - சோலை. கதுவுதல் - பற்றிப் பிடித்தல்.

நாட்டவரின் யாழினையும் விட இனிமையாகப் பேசுகிற கிளி போன்றவளே! (மரம்) முழுதும் மலர் விரிந்துள்ளனவாகிய முருக்கமரங்கள் நடுவிலே நின்று நெருங்கப் பெற்ற சோலை, வெப்பமான நெருப்புப்பற்றி எரிவதை ஒத்திருப்பதைப்பார்.

(வி - ம்) செம்முருக்கமரம் பூக்கிற காலத்தில் இலை முழுதும் உதிர்ந்துபோய்விடும். வளமுள்ள மரமானால் ஒரே பூ மயமாகத் தோன்றும் தீ, பற்றி எரிவது போலவே இருக்கும். சோலையிலே நெருப்புப்பற்றியது என்பது எண்ணத்தின் வேகத்தைக் காட்டும் உயரிய கற்பனையாகும். 'அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாயவிழ, வெள்ளந்தீப் பட்டது என வெரீஇப் - புள்ளினம்தம், கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கௌவை உடைத்தரோ, நச்சிலைவேற் கோக்கோதை நாடு' என்ற முத்தொள்ளாயிரம் இங்கு நோக்கத்தக்கது. 'தண்டமிழ் யாழ்' குளிர்ந்த தமிழைப் போன்ற யாழ் எனினும் அமையும். இனியவற்றுளெல்லாம் இனிமையாயின குழலும் யாழுமென்க. அவைகளைவிட உன்பேச்சு இனிமை என்றான்.

முனிவர் வரவேற்பு

813 இனைய யாவையும் ஏந்திழைக்கு
இயம்பினன் காட்டி,
அனைய மால்வரை அருந்தவர்
எதிர்வர வணங்கி,
வினையின் நீங்கிய வேதியர்
விருந்தினன் ஆனான்;
மனையின் மெய்யெனும் மாதவம்
புரிந்தவன் மைந்தன். ரு

---

813. ஏந்திழை - பெண். வினை - நல்வினையும் தீவினையும். வேதியர் - வேதமறிந்து நல்வழியில் நடப்பவர்.

இத்தகைய (காட்சிகள்) யாவற்றையும் சீதைக்குச் சொல்லிக்காட்டி, அந்தப் பெரிய மலையிலுள்ள அரிய முனிவர் எதிர்கொண்டுவர, (அவர்களை) வணங்கி, வினைசெய்தலி லிருந்து விலகி நிற்கும் வேதியராகிய முனிவரின் விருந்தினன் ஆனான். (அவன் யாரெனில்) அரண்மனையிலிருந்துகொண்டே சத்தியம் என்ற பெரிய தவத்தைச் செய்த தயரதனின் மகன்.

(வி - ம்) தவம் காட்டில் சென்று செய்தால்தான் கைவருமென்பதன்று. வீட்டிலிருந்தும் செய்து பேறடையலாம் என்பார் 'மனையின் மாதவம் புரிந்தவன்' என்றார். 'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானம் செய்வாரிற்றலை'. (திருக்குறள் 295) என்றாராதலின் 'மெய் எனும் மாதவம்' என்றாரென்க. பாவ புண்ணியங்களைச் செய்யும் தொழிலை நீங்கி வனத்தில் புலனடக்கித் தவம் புரிகின்றாராதலின் 'வினையின் நீங்கிய வேதியர்' என்றார். 'தீவினை இரண்டும் தீர்ந்தோம்' (திருவிளை - வாதவூர - உபதே - 83) என்றவிடத்து நல்வினை தீவினை இரண்டும் பிறவிக்குக் காரணமாதலின் இரண்டையும் தீவினை என்றே குறிப்பிட்டமை காண்க.

சூரியன் மறைதல்

814 *மாவியல் உதயமாம்
துளப வானவன்,
மேவிய பகைஇருள்
அவுணர் வீந்துஉகக்,
காவியல் குடவரைக்
கால நேமிமேல்,
ஏவிய திகிரிபோல்
இரவி ஏகினான். ௬

814. மா - பெருமை. இயல் - பொருந்திய. உதயம்-உதயகிரி. துளபவானவன்-துளசிமாலையையுடைய தேவன்: திருமால். அவுணர்-அசுரர். வீந்து - இறந்து. குடவரை - மேற்குமலை. திகிரி-சக்கரம்.

பெருமை பொருந்திய உதயகிரியாகிய திருமால், எதிர்த்த பகை இருளாகிய அரக்கர் அழிந்துபட, சோலை மிகுந்த மேற்கு மலையாகிய காலநேமி எனும் அவுணர் தலைவன்மேல் ஏவிய சக்கராயுதத்தைப் போல சூரியன் சென்றான்.

(வி - ம்) காலநேமி என்ற அசுரன் திருமாலோடு ஒரு காலத்தில் படைகளுடன் சென்றெதிர்த்தான். அவன் மீது சக்கரத்தைவிட்டுக் கொன்று அவனுடைய படைகளையும் அழித்தார். இங்கே காலநேமி மேற்கு மலையாகவும், அசுரப் படை இருளாகவும், உதயகிரி திருமாலாகவும், சூரியன் சக்கரமாகவும் உருவகப்படுத்தப்பட்டன. கிழக்கே உதித்த சூரியன் மேற்கே போய் விழுந்தான் என்றவாறு. முன்பு சிவபெருமானைச் சூரியனாக உருவகப்படுத்தி, 'இரவியான கண்ணுதல் வானவன் கனகச்சடை விரிந்தாலென விரிந்த கதிர்களெல்லாம்' (பாடல் 200) என்று கூறப்பட்டிருப்பது காண்க.

சந்திரன் தோன்றினன்

815 சக்கரம் தானவன்
உடலில் தாக்குற,
எக்கிய சோரியில்
பரந்தது எங்கணும்
செக்கர்; அத் தீயவன்
வாயில் தீர்ந்துவேறு
உக்கவான் தனிஎயிறு
ஒத்தது இந்துவே. எ

---

815. தானவன் - அசுரன். எக்கிய - கொப்புளித்த. சோரி - இரத்தம். செக்கர் - செந்நிறம். தீர்ந்து - உடைந்து. உக்க - உதிர்ந்த. வான் - பருமனான. தனி - தனித்தமாதிரியான. எயிறு - பல். இந்து - சந்திரன்.

சக்கரமானது அசுரனது உடலில் தாக்கியவுடன் வெளியே தள்ளப்பட்ட இரத்தத்தைப்போல, வானம் முழுமையும் செங்கிறமாயிற்று. அந்தத் தீயவனுடைய வாயிலிருந்து உடைந்து வேருக உதிர்ந்த பெரிய தனிப்பட்ட பல்லினைப்போன்றது இளம்பிறை.

(வி - ம்) உடல் பலமாகத் தாக்கப்பட்டவுடன் கக்கிய இரத்தமானது வானம் முழுவதும் பரவிச் சிவந்துபோனுற் போல் தோன்றியது. அதே அடியில் உதிர்ந்த பல்லைப் போலத் தோன்றியது பிறைச்சந்திரன் என்ருர். அசுரரின் வளைந்த கோரப் பல் மூன்ரும் பிறைக்கு உவமை. மனிதர்க்கில்லாத பருமனுன வளைந்த பல் ஆதலால் 'வான்தனிஎயிறு' எனப்பட்டது. தாடகையைக் கூறும்போது, 'எயிறெனும் பிறைக்கடை பிறக்கிட மடித்த பில வாயள்' என்றதுங் காண்க. (பாடல் - 87)

மாலைப் பொழுது

816 மந்தியும் கடுவனும்
மரங்கள் நோக்கின;
தந்தியும் பிடிகளும்
தடங்கள் நோக்கின;
நிந்தைஇல் சகுந்தங்கள்
நீளம் நோக்கின;
அந்தியை நோக்கினுன்
அறிவை நோக்கினுன். அ

பெண்குரங்குகளும், ஆண் குரங்குகளும் மரங்களை நாடிச் சென்றன; ஆண்யானைகளும், பெண்யானைகளும் தாம்

816. மந்தி - பெண்குரங்கு. கடுவன் - ஆண்குரங்கு. தந்தி-ஆண்யானை. பிடி - பெண்யானை. தடம் - மலையடிவாரம். சகுந்தம் - பறவை. நீளம் - பறவைக்கூடு.

வாழும் மலையடியை நோக்கிச் சென்றன ; குற்றமற்ற பறவைகள் கூடுகளை நாடிச்சென்றன. அறிவையே நோக்கும் இராமன் அந்திப்பொழுதை நோக்கி யிருந்தான்.

(வி - ம்) மாலை நேரம் வந்தது. பகலெல்லாம் இரை தேடியும் ஓடியும் ஆடியும் பறந்தும் திரிந்த விலங்குகளும் பறவைகளும் இரவில் தங்குமிடங்களுக்குச் சென்று கொண்டிருந்தன. இராமன் அந்திநேர வானக் காட்சியைப் பார்த்து ஈடுபட்டிருந்தானென்க. அறிவை நோக்கினன் என்றது பாற் கடலில் அறிதுயில் அமர்ந்திருந்த திருமால் என்றபடி.

மூவரும் தியானத்தில் இருத்தல்

817 மொய்உறு நறுமலர்
முகிழ்த்த வாம்சில ;
மய்அறு நறுமலர்
மலர்ந்த வாம்சில ;
அய்யனோடு இளவற்கும்,
அமிழ்துஅ னாளுக்கும்,
கைகளும் கண்களும்
கமலம் போன்றவே. கூ

(இதழ்) நெருங்கிய மணமுள்ள சில மலர்கள் குவிந்தன ; குற்றமற்ற மணமுள்ள சில மலர்கள் மலர்ந்தன ; இராமனுக்கும் இலக்குவனுக்கும் அமுதத்தை ஒத்த சீதைக்கும் கைகளும் கண்களும் தாமரை மலரைப்போல் ஆயின.

(வி - ம்) காலையில் மலர்ந்த பூக்கள் மாலையில் சுருங்கிப் போயின. மாலையில் சிலவகையான பூக்கள் புதிதாக மலர்ந்

817. மொய் - நெருங்கிய. நறு - மணமுள்ள. முகிழ்த்த - மூடிக்கொண்டன. மை - குற்றம். அறு - அற்ற- கமலம் - தாமரைப்பூ. ஆம் - அசைகள்.

தன. வனத்திலுள்ள பூக்கள் குவிந்துகொண்டும் விரிந்து கொண்டும் இருக்க, இராமன் முதலிய மூவரிடமுமுள்ள கைகளும் கண்களுமாகிய பூக்கள் என்ன செய்தன? அவை செந்தாமரைப் பூக்களாதலால் குவிந்துகொண்டன என்றார். செந்தாமரைப்பூ காலையில் மலர்ந்து மாலையில் கூம்புவதாகு மன்றோ? அம்மூவரும் அந்திநேரத்தில் கைகுவித்துக் கண் மூடித் தியானத்திலிருந்தனர் என்றபடி.

பன்னசாலையை அடைதல்

818 மாலைவந்து அகன்றபின்,
மருங்கி லாளொடும்
வேலைவந்து உறைவிடம்
மேய தாம்என,
கோலைவந்து உமிழ்சிலைத்
தம்பி கோலிய;
சாலைவந்து எய்தினன்
தவத்தின் எய்தினன். ௧0

மாலை நேரம் கழிந்தபின் பாற்கடல் வந்து வசிக்கு மிடமாகப் பொருந்தியது என்று கூறும்படி, அம்பினை எய்கின்ற வில்லையுடைய தம்பி அமைத்த சாலைக்கு மெல்லிய இடையையுடைய சீதையோடு தவத்தினாற் பிறந்தவனாகிய இராமன் வந்து சேர்ந்தான்.

(வி - ம்) மருங்கிலாள் என்றது நுண்ணிய இடை உடைமை பற்றியாம். இருந்தும் இன்மையாகத் தோன்று கிறது என்க. அம்பினைச் சண்டமாருதம் போலப் பொழிகின்ற சிலை என்பதை 'கோலை வந்து உமிழ் சிலை' என்றார்.

---

818. மருங்கு-இடை. வேலை-கடல்: பாற்கடல். உறைவிடம்-தங்குமிடம். மேயது - பொருந்தியது. கோல் - அம்பு. வந்து - காற்று. உமிழ் - எய்யும். கோலிய - கட்டிய. சாலை - பன்னசாலை.

இலக்குவன் அமைத்த சாலை

819 நெடுங்கழைக் குறுந்துணி
நிறுவி, மேல்நிரைத்து,
ஒடுங்கலில் நெடுமுகடு
ஒழுக்கி, ஊழுற
இடுங்கலில் கைவிசித்து
ஏற்றி, எங்கணும்
முடங்கலில் வரிச்சுமேல்
விரித்து மூட்டியே. கக

நீண்ட மூங்கிலில் வெட்டிய குட்டையான துண்டுகளைத் தூணாக நட்டு, அவைகளின்மேல் (வளையை) ஒழுங்காகநீட்டி, சேருமிடங்களில் நீண்ட முகட்டு வளைகளைப் பொருத்தி, முறைப்பட(முகட்டுவளைக்கும் தூணின் மேலுள்ள வாரவளைக்கும்) இடையில் கைகளை ஏற்றிக் கட்டி (மேற்புறம்) முழுதும் கோணலில்லாத குறுக்கு வரிச்சுக்களை விரித்துப் பொருத்தி,

இதுவும் அது

820 தேக்கடைப் படலையில்
செறிவு செய்து,பின்
பூக்கிளர் நாணலின்
புல்லு வேய்ந்து,கீழ்

---

819. கழை - மூங்கில். துணி - துணிக்கப்பட்டது. நிறுவி - நிறுத்தி. நிரைத்து - ஒழுங்காகச் சேர்த்து. ஒடுங்கல் - சேருமிடம். ஊழ் - முறை. இடுங்கல் - இடைவெளி. விசித்து - இறுக்கிக் கட்டி. முடங்கல் - வளைதல்: கோணல். வரிச்சு - கைகளின் மெல் வைத்துக் கட்டப்படும் பருமனில்லாத நீண்ட மூங்கில்கள். மூட்டுதல் - பொருத்துதல்.

820. அடை - இலை. படல் - தட்டி. செறிவு செய்தல் - நெருக்கமாக மூடுதல். நாணலின் புல்லு - நாணற்புல். தீற்றுதல்- சுவரை மெழுகுதல்.

தூக்கிய வேய்களில்
சுவரும் சுற்றுறப்
போக்கி, மண் எறிந்து,அவை
புனலில் தீற்றியே. கஉ

தேக்கிலைகளாலான தட்டிகளால் நெருக்கமாக மூடி, பூ வெளிப்பட்ட நாணற்புல்லை (அதன்மேல்) வேய்ந்து கீழே (தூண்களுக்கிடையில்) நிறுத்திய மூங்கில்களினால் சுற்றிலும் சுவர் எடுத்து, மண்ணைக் குழைத்து அதன்மேல் அறைந்து அதனை நீர்விட்டு மெழுகி,

(வி - ம்) வரிச்சு வைத்துக் கட்டினாலும் இலைகளைத் தனித்தனியாகப் பரத்த இயலாது. படலாகக் கட்டிப் போட்டால்தான் இலை உள்ளே தொய்வுபெறாமல் இருக்கும்; ஆதலால்தான் படலாகக் கட்டிப் பரத்தினான். பிஞ்சு நாணலுக்கு வலிமையில்லை; ஆதலால் பூத்த நாணலை வேய்ந்தான். கனமில்லாத மண்சுவர் நீண்டுநில்லாது. ஆதலின் மூங்கில்களை வைத்துக் கட்டிச் சுவர் எடுத்தான். இடைவெளியில் எதுவும் நுழையாதிருக்கும்பொருட்டு மண்ணை அறைந்து தண்ணீரினால் தேய்த்துவிட்டான்.

சீதைக்காக

821 வேறிடம் இயற்றினன்
மிதிலை நாடிக்கும்
கூறின நெறிமுறை
குயிற்றி, குங்குமச்
சேறுகொண்டு அழகுறத்
திருத்தி திண்சுவர்
ஆறிடு மணியொடும்
கனகம் அப்பியே. கந

---

821. நாடி-நாட்டிற் பிறந்தவள். குயிற்றுதல்-செய்தல். சேறு-குழம்பு. திருத்தி-சீர்செய்து. கனகம் - பொன் : காக்கைப் பொன்.

மிதிலைநாட்டிற் பிறந்த சீதைக்கும் வேறான இடம் ஒன்றை அமைப்பவனாகி மேற்கூறின வழி முறைப்படி செய்து, அதன்மேல் குங்குமக் குழம்பைக்கொண்டு அழகாகக் கோலம் செய்து திண்மையான சுவரில் ஆற்றில் கிடக்கும் மணிகளையும் பொன்னையும் அப்பி,

(வி - ம்) சீதைக்கு மட்டும் முன்பாடல்களிற் கூறியபடியே தனியாக ஒரு இடத்தை அமைத்தான். ஆனால் சுவரைச் சிறிது உறுதியாகச் செய்தான். மண்பூச்சுக்கு மேலே குங்குமத்தைக் கரைத்துச் சித்திரங்களைச் சிறிது தீட்டிவிட்டான். ஆற்றுமணலில் மின்னுகிற சில கற்களையும் ஆங்காங்கே பதித்தான். காக்கைப் பொன்னை எங்கும் தூவிவிட்டான். பெண்கள் இருக்கிற இடம் ஆண்மக்கள் இருக்கிற இடத்தைக் காட்டிலும் நயமாக இருக்க வேண்டுமென்று கருதினான். முனிவர் முதலிய பலரும் வந்து அடிக்கடி உரையாடிக்கொண்டிருப்பாராதலால் சீதை இருப்பதற்குத் தனியிடம் அமைத்தனன் என்க.

புதுவீடு குடிபுகுதல்

822 இன்னணம் இளையவன்
இழைத்த சாலையில்,
பொன் நிறத் திருவொடும்
குடிபுக் கான் அரோ ;
நன்னெடும் திசைமுகன்
அகத்தும், நம்மனோர்க்கு
உன் னரும் உயிருளும்,
ஒக்க வைகுவான். கஅ

822. இன்னணம் - இவ்வாறு. சாலை - பன்னசாலை. நன்னெடு - நல்நெடு : நல்ல பெருமைமிகுந்த. திசைமுகன் - நான்கு திசைகளை முகமாகக்கொண்டவன்: பிரமன். அகம்-உள். உன்னுதல்–நினைத்தல். அரும் - முடியாத. ஒக்க – ஒரேவிதமாக.

இவ்வாருக இலக்குவன் கட்டிமுடித்த பன்னசாலையில், மிக்க பெருமைபெற்ற பிரமன் மனத்திலும், நம்மைப்போன்ற வருக்கு அறிய முடியாததான உயிரினுள்ளும் ஒரு மாதிரி யாகத் தங்கியிருக்கும் தெய்வமான இராமன், தங்க நிறமான இலக்குமியாகிய சீதையோடும் குடிபுகுந்தான்.

(வி - ம்) உயிர் என்ற ஒன்று இருக்கவேண்டுமென்று ஊகிப்பதைத் தவிர உயிரின் இருப்பை நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை என்பதை 'உன்னரும்' என்ருர். ஆனல் அப்படிப்பட்ட உயிருக்குள் உயிராக அவன் விளங்குகிருன். பிறப்பின் தலையாய பிரமனின் உள்ளேயும் அவ்வாறே வேறு பாடின்றி விளங்குகிருன் என்ருர். அகண்டமான கடவு ளுக்கு பெரிய பிரமனும் சிறிய உலக உயிரும் ஒன்றேயாம் என்றவாறு.

எம்பி கை சாலை அமைத்தது

823 *மேவு கானம்
மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய
பாதமும் போந்தன ;
தாவில் எம்பிகை
சாலை சமைத்தன ;
யாவை யாதும்
இலார்க்குஇயை யாதவே ? கடு

எதிர்ப்பட்ட காட்டுவழிகளில், மிதிலையரசன் மகளினது பூவைப்போன்ற மென்மையான பாதங்கள் நடந்து வந்தன; குறைவில்லாத என் தம்பியின் கைகள் பன்னசாலையைக் கட் டின. எந்த உதவியும் அற்றவர்க்கு எவைதாம் செய்யமுடி யாதவை? (எல்லாம் முடியும்)

---

823. மேவு -எதிர்ப்பட்ட. தாவு - குற்றம்.

(வி - ம்) இங்கே இராமன் வியப்படைகிறான். சீதையின் மெல்லிய அடிகள் எவ்வாறு கல்லும் முள்ளும் நிறைந்த சுடுகின்ற காட்டுப் பாதையைக் கடக்கும் என்ற கவலை ஊரை விட்டுப் புறப்படும்போதே ஏற்பட்டுவிட்டது. ஆனால் அது நடந்துதான் முடிந்தது. இந்தக் கட்டிட வேலை எதிர் நோக்காமல் நிகழ்ந்திருக்கிறது. இரண்டும் முன்பழகியறியாதவை. எப்படி இவை சாத்தியமாயிற்று ? உதவிக்கு ஒன்றுமில்லாத போது யாராலும் தேவையுள்ள எதையும் செய்யமுடியும் போலும் என்று எண்ணினான். ‘இல்லாதார்’ என்பதை உதவியில்லாதார் ; இன்றியமையாத வசதிகள் இல்லாதார் என விரித்துக்கொள்க.

எப்பொழுது படித்தாய் ?

824 என்று சிந்தித்து
இளையவற் பார்த்து,‘இரு
குன்று போலக்
குவவிய தோளினாய் !
என்று கற்றனை
நீ இது போல்’எனா,
துன்று தாமரைக்
கண்பனி சோர்கின்றான். கசு

என்று எண்ணி, இலக்குவனைப் பார்த்து ‘இரண்டு மலைகளைப்போலத் திரண்ட தோள்களையுடையவனே ! இதுபோல் செய்ய நீ எப்பொழுது கற்றுக்கொண்டாய்’ என்று கூறி, பொருந்திய தாமரைபோன்ற கண்களிலிருந்து நீரைக் கொட்டினான்.

---

824. குவவிய - திரண்ட. துன்று - பொருந்திய. பனி - நீர்.

(வி - ம்) இலக்குவனைவிட்டுப் பிரியாமல் தான் உடன் இருக்கிறபடியால் அவன் இத் தொழிலைக் கற்கவில்லை என்பதும், கற்கவேண்டியதேவையில்லை யென்பதும் தெரிந்தது தான். துன்பத்திலே தேவையின் காரணமாகத் துன்பத்தோடு செய்து முடித்திருக்கிறான் என்ற ஆற்றாமையால், நீ எங்கே கற்றாய்? தலைவிதி உன்கையில் மண்ணெடுத்து வருந்தச் செய்கிறதே என்றான் என்க. இவ்வாறு தாங்கமுடியாத வருத்தத்தால் மனம் புண்பட்டுக் கூறினான் என்பதை 'கண் பனிசோர்தல்' குறிக்கும்.

நாம் காட்டுக்குவந்தது உனக்குத்தான் துன்பம்

825 அடரும் செல்வம்
அளித்தவன் ஆணையால்,
படரும் நல்அறம்
பாலித்து, இரவியிற்
சுடரும் மெய்ப்புகழ்
சூடினென், என்பதென் ?
இடர்உ னக்குஇழைத்
தேன்நெடு நாள்என்றான். கஎ

சேர்ந்து பெருகுகிற செல்வமான அரசாட்சியை(ஆண்டு) காப்பாற்றிய தந்தையின் கட்டளைப்படி, (காட்டில்) செல்லும் நல்ல அறச்செயலை மேற்கொண்டு, சூரியனைப் போல விளங்கும் மெய்யான புகழைப் பெற்றேன் என்று கூறுவதற்கு என்ன பொருளிருக்கிறது? (உண்மையைச் சொல்வதானால்) நீண்ட நாள் உனக்குத் துன்பத்தைத்தான் செய்தேன் என்றான்.

---

825. அடரும் - வந்து குவிகிற. அளித்தல் - காத்தல். ஆணை - கட்டளை. படர்தல் - செல்லுதல். பாலித்தல் - மேற்கொள்ளல். இரவியில் - சூரியனைப்போல. இடர் - துன்பம்.

(வி - ம்) தந்தை சொல் காத்தேன்; ஆட்சியை விட்டேன்; காட்டில் வசிக்கின்றேன்; இன்பங்களை யெல்லாம் துறந்தேன்; துன்பங்களையெல்லாம் அடைந்தேன் என்றெல்லாம் உலகத்தார் என்னைப் புகழ்கிறார்கள் என்பது நடந்து கொண்டிருக்கிற காரியம். உண்மை யென்னவென்றால் அவை வீண் செய்தி. உனக்குத் தீராத துன்பம் செய்தது ஒன்று தான் உண்மை என்றான். சக்தியம் தருமம் எல்லாம், பிறர்க்குத் தன்னலமறுத்துச் செய்யும் தொண்டுக்கு இணையன்று என்றவாறு. 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' (தனிப் பாடல்). அதனை அறிவதுதானே தெய்வத்தின் செயல்! இராமன் நகரைவிட்டுப் பிரியும்போது கோசலை வருந்த, 'பத்தும் நாலும் பகலலவோ' என்றான். (பாடல் 587) அன்று தந்தைதாய் ஏவலை யெண்ணி மகிழ்ந்த மகிழ்ச்சியில் இது ஒரு விளையாட்டு என்ற மனப்பான்மையில் வந்தசொல் அவை. இன்று தம்பி படும் துன்பங் கண்டபோது 'நெடு நாள்' என்கிறான். தன் துன்பம் சிறிதாகவும், பிறர் துன்பம் பெரிதாகவும் கொள்ளும் உயர் குணம் வெளிப்பட்டதென்க.

---

9. பள்ளிபடைப் படலம்

[தயரத மன்னனது உடலை ஈமப்பள்ளியில் கிடத்திய செய்தி கூறும் படலம். பள்ளி - விறகினால் அடுக்கப்பட்ட பிணப் படுக்கை. படுத்தல் - கிடத்துதல்.]

கேகய நாட்டில் தூதுவர்

826 பொருவில் தூதுவர்
போயினர்; பொய்யிலார்;
இரவும் நண்பக
லும்கடிது ஏகினர்;
பரதன் கோயில்உற்
றார்;படி காரிர்!'எம்
வரவு சொல்லுதிர்
மன்னவற் கே'என்றார். க

ஒப்பற்ற தூதர்கள் சென்றனர்; அவர்கள் பொய்யே சொல்லாதவர்; இரவும் பகலுமாக விரைந்து சென்றனர்; பரதன் இருக்கிற அரண்மனை (கேகய நாட்டில்)யை அடைந்தனர்; காவலர்களே! எங்களுடைய வருகையை மன்னவனுக்குச் சொல்லுங்கள் என்றார்.

அரசன் சுகமா?

827 'தூதர் வந்தனர்
உந்தைசொல் லோடு'எனக்,
காதல் முந்திக்
களிக்கின்ற சிந்தையான்,

---

826. பொருவு - ஒப்பு. படிகாரர் - வாயில் காப்போர்.

827. உந்தை - உன் தந்தை. போதுக - வரட்டும்.

போது கென்றனன் ;
புக்கவர் கைதொழத்,
' தீதி லன்கொல் ?
திருமுடியோன் ' என்ருன். உ

(அவர் சென்று) உன் தந்தையின் செய்தியோடு தூதர் வந்திருக்கின்றனர் என்று கூற, ஆசை மிகுந்து அதனல் மகிழ்ந்த மனத்தையுடையவனுய், வரட்டும் என்றனன். புகுந்த தூதர் கைதொழ, திருமுடியோன் (தயரதன்)தீதின்றி இருக்கின்றனனு ? என்ருன்.

(வி-ம்) தீதிலன் கொல் என்பது நன்ருக இருக்கிருனு என்ற பொருளில்தான் வருகிறது. அந்த நாட்டில் அல்லது அக்காலத்தில் யாவரும் நாள்தோறும் நன்ருகவே குறைவின்றி வாழ்ந்தார்கள் ; இடையில் தீது வராமலிருக்கிறதா என்று கேட்கத் தோன்றியிருக்கிறது. தற்காலத்துத் தீது மலிந்துவிட்டபடியால் நன்ருக இருக்கிருனு என்று கேட்பது வழக்கில் வந்திருக்கிறது போலும்.

இராம லக்குவர் சுகமா ?

828 வலியன் என்றவர்
கூற, மகிழ்ந்தனன் ;
' இலேகொள் பூண் இளங்
கோன்,எம் பிராளெடும்
உலேவில் செல்வத்த
ளுே?' என,'உண்டு' என,
தலேயின் ஏந்தினன்
தாழ்தடக் கைகளே. ந

828. வலியன் - குறைவற்றவன். இலே - நகைகளில் செய்யும் வேலேப்பாடு. பூண் - நகை. எம்பிரான் - எமது தலேவன் : இராமன். உலேவு-குறைவு.

(தீதின்றி) நன்ருக இருக்கிருன் என்று அவர் கூற மகிழ்ச்சியடைந்தான். இலேவடிவில் செதுக்கு மானம் செய்யப் பட்ட நகைகளணிந்த இலக்குவன் எமது தலேவ (இராமன்) ஞேடு குறைவற்ற செல்வமுடையவனுக இருக்கிருனு என்று கேட்க, ஆம் என்று (தூதுவர்) கூற, இரு பெரிய கைகளே யும் தலேமீது ஏந்தி வணங்கினன்.

(வி - ம்) இந்தத் தூதுவர்களே யார் அனுப்பினர் என் பது கூறப்படவில்லே. அரசன் சுகமாக இருக்கிருன் என் கின்றனர். தூதுவர் 'பொய்யிலார்' என்று (பாடல் 826) கூறப்பட்டிருக்கிறது. இராமனும் இலக்குவனும் நன்ருக இருக்கிருர்கள் என்கின்றனர். அரசன் இறந்த பிறகு வசிட் டரால் அனுப்பப்பட்ட தூதுவராக இருந்தால், அரசன் இறந்து போனதை அறிந்த இவர், 'அரசன் நன்ருக இருக் கிருன்' என்றும், இராமலக்குவர் 'உலேவில் செல்வத்தர்' என்றும் கூறுதலாகாது. பொய்யிலார் என்று கவிக்கூற்றுப் பெறும் இவர் முழுப் பொய்யராக வேண்டும். ஓலேயில், சந்தனம் தோய்த்திருந்ததென்று (பாடல் 831) கூறப்படு கிறது. அரசன் இறந்த பிறகு வேருேர் அரசன் ஏற் படுகிற வரையும் முன்னேய அரசன் பெயரிட்டு எழுதுதல் மரபெனினும் சந்தனந் தோய்த்து ஓலே யெழுதவேண்டிய தில்லேயன்ருே? இராமனிடம் 'அரசனுணே' என்று துணிந்து கூறிய கைகேயி, இராமனுக்குக் கட்டளேயிடுமுன்பே அரசன் பெயரால் பரதனுக்கு ஓலேயெழுதிச் சந்தனம் தோய்த்து அனுப்பி விட்டாள் என்பதே பொருந்துவதாம். இதனுல் தூதுவரும் பொய்யிலாராவர். கைகேயியின் நோக்கம் பரதன் அரசுபெற வேண்டுமென்பதே யாகும். அவ்வரசுக்கு இடை

யூறுண்டாகாதிருப்பதற்கே இராமன் காடுசெல்ல வேண்டு மென்றாள். எனவே இராமன் காடு நோக்குமுன்பே பரதனை வரவழைக்க வேண்டுமென்ற எண்ணமுண்டாதல் இயல்பு. நீண்ட தூரத்திலிருக்கும் பரதன் விரைந்து வரவேண்டு மென்று தூதுவரிடம் கூறியதாலேயே தூதுவர் 'கடிதேகினர்' (பாடல் 826) என்றார் எனினும் ஆம். 'உலைவில் செல்வத் தனோ' என்றது இராமனுக்கு அடிமை செய்வதே குறை வற்ற செல்வம் என்று கருதியுள்ள பரதன் அத்தொண் டினை இலக்குவன் குறைவின்றிச் செய்துவருகிறானா? என்று வினவினன் என்பதுமொன்று.

இதோ மன்னன் திருமுகம்

829 மற்றும் சுற்றத்து
உளார்க்கும் வரன்முறை
உற்ற தன்மை
வினவி உவந்தபின்,
'இற்றுஅது ஆகும்
எழுதரு மேனியாய்!
கொற்ற வன்தன்
திருமுகம், கொள்க' என்றார். ௬

மற்றுமுள்ளவரான சுற்றத்தார்க்கும் உற்ற நிலைமைகளை வரிசையாகக் கேட்டு, மகிழ்ந்த பின்பு, 'ஓவியத்தில் தீட்ட முடியாத அழகுள்ளவனே! மன்னனது திருமுகம் இதுவா கும், பெற்றுக் கொள்க' என்றனர்.

---

829. வரன்முறை - நிகழ்ந்த முறை. தன்மை - நிலைமை. இற்றது - இது. திருமுகம் - பெரியோரிடமிருந்து வரும் செய்தி ஓலை.

சென்னிமேற் சூடினான்

830 என்று கூறலும்,
ஏத்தி இறைஞ்சினான்;
பொன்திணிந்த
பொருவில் தடக்கையால்
நின்று வாங்கி,
உருகிய நெஞ்சினன்,
துன்று நாண்மலர்ச்
சென்னியில் சூடினான். ௫

என்று (தூதுவர்) கூறியவுடனே, துதித்து வணங்கினான். பொன் அணிகள் பூண்ட ஒப்பற்ற பெருமையுடைய கைகளினால் எழுந்து நின்று பெற்று, அன்பினால் குழைந்த நெஞ்சினனாக, புதுமலர்களை யணிந்திருக்கிற தலையில் ஒற்றிக்கொண்டான்.

சந்தனம் தோய்த்த முத்திரை

831 சூடிச் சந்தனம்
தோய்த்துடை சுற்றுமண்
மூடு தோட்டின்
முடங்கல் நிமிர்த்தனன்;
ஈடு நோக்கிவந்து
எய்திய தூதர்க்குக்
கோடி மேலும்
நிதியம் கொடுத்தனன். ௬

---

830. ஏத்துதல் - துதித்தல். திணிந்த - நிறைந்த. தடம் - பெருமை. நாள் மலர் - புதுமலர். துன்று - பொருந்திய.

831. சுற்று உடை - சுருட்டுதலையுடைய. மண் - அரக்குப் போன்ற ஒருவிதப் பொருள். தோட்டின் முடங்கல் - ஓலைச்சுருள். ஈடு - பொருள். நிதியம் - செல்வம்.

அவ்வாறு ஒற்றிக்கொண்டு, சந்தனத்தில் தோய்த்து, சுற்றிமூடி மண்ணினால் முத்திரையிட்ட ஓலைச்சுருளை விரித்துப் பார்த்தான். அதில் எழுதியிருந்த பொருளை நோக்கி, வந்திருக்கிற தூதர்க்குக் கோடிக்கு மேற்பட்ட பொருளை வழங்கினான்.

அண்ணனைக் காணலாம்

832 வாள்நி லாநகை
தோன்ற, மயிர்புறம்
பூண, வான்உயர்
காதலிற் பொங்கினான் ;
தாள்நி லாமலர்
தூவினன் ; தம்முனைக்
காண லாம்எனும்
ஆசை கடாவவே. எ

நிலவு போன்ற ஒளி பொருந்திய பற்கள் தோன்றவும், மயிர்க்கூச்சு உண்டாகவும் வானத்தையளாவிய அன்பில் மிகுந்தவனாகத் தன் முன்னவனான இராமனைக் காணலாமென்னும் ஆசை தூண்டுவதால் சொல் மலர்களைத் தூவினான்.

(வி - ம்) நகை தோன்றுவதாவது புன்சிரிப்புத் தோன்றுதல். பூக்கள் தாளில் மலர்ந்து நிற்கும். தாள் நிலாமலர் எனவே இன் சொல்லாகிய மலர் எனக் கொள்க. அன்பு நிறைந்த சொற்களில் தன் மகிழ்ச்சியைக் காட்டினன் என்றபடி.

---

832. வாள் - ஒளி. நகை - பல். தாள் - தண்டு. நிலா - இல்லாத. கடாவுதல் - தூண்டுதல்.

புறப்பட்டான் பரதன்

833 'எழுக சேனை' என்று
ஏவினன்; எய்தினன்
தொழுது கேகயர்
கோமகன் சொல்லொடும்,
தழுவு தேரிடைத்
தம்பியொடு ஏறினன்;
பொழுதும் நாளும்
குறித்திலன் போயினன். அ

சேனைகள் புறப்படட்டும் என்று கட்டளையிட்டுவிட்டு, கேகய மன்னனிடம் சென்று வணங்கி அவனுடைய அனுமதி யோடு, தழுவநின்ற தேரில் தம்பியாகிய சத்துருக்கனேடு ஏறினன்; நேரமும் நாளும் நோக்கவில்லை, சென்றான்.

(வி - ம்) திருமுகம் கண்டதும் புறப்பட்டதால் ஓலையில் உடனே வரும்படி எழுதியிருந்ததென்க. 'தழுவு தேரிடை' என்றது கைபிடித்துத் தேரில் ஏற முற்பட்டவன் அப்படியே பிடித்த பிடியோடு நின்று, தம்பியை ஏற்றித் தான் ஏறினன் என்றவாறு. இவன் நல்லநாள் நல்ல நாழிகை என்ற எதையும் கவனிக்கவில்லை என்றார். இராமனுக்கு மகுடஞ் சூட்டுதற்கு நல்ல நாழிகை எல்லாம் ஒன்றுவிடாமல் பார்த்தார்கள். ஆனல் சக்கரவர்த்தி முடியைச் சூட்ட வைத்த நாளில் உடுத்திய வேட்டியையுமிழந்து காட்டுக்குச் சென்றான். எனவே எவ்வளவு பெரிய முனிவர் வந்து நாள் பார்த்தாலும் பார்க்காமல் போனலும் விதிப்படிதான் நடக்கும் என்பதற்காகவே 'பொழுதும் நாளும் குறித்திலன்' என்றார். 'ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே' (சம்பந்தர் - கோளறு). தொண்டு செய்ப

---

833. கோமகன் - அரசன். தழுவுதல்-அணைத்தல். பொழுது-நல்லநேரம். நாள் - நல்லநாள். குறித்தல் - பார்த்தல்.

வர்க்கு எல்லா நாளும் பொழுதும் நல்லனவே என்று கூறியிருப்பது இங்கே நோக்கத்தக்கது.

பயண ஆரவாரம்

834 'யானை சுற்றின;
தேர்இரைத்து ஈண்டின;
மான வேந்தர்
குழுமினர்; வாள்உடைத்
தானை சூழ்ந்தன;
சங்கம் முரன்றன;
மீன வேலையின்
விம்மின பேரியே. ௯

யானைகள் வந்து சூழ்ந்தன; தேர்கள் இரைச்சலோடு நெருங்கின; மதிப்புள்ள மன்னர்கள் கூடினர்; வாள்களையுடைய சேனைகள் வந்து பொருந்தின; சங்கு முழங்கிற்று; மீன் உள்ள கடலின் ஒலியைப்போலப் பேரிகைகளின் ஒலி மிகுந்தது.

இதுவும் அது

835 ஊன் அளைந்த
உடற்குயி ராம்எனத்
தான் அளைந்து
தழுவின தண்ணுமை;
தேன் அளைந்து
செவியுற வார்த்தென
வான் அளைந்தன
மாகதர் பாடலே. ௧0

---

834. இரைத்தல் - சத்தமிடுதல். ஈண்டின - நெருங்கின. மானம்-பெருமை. தானை-சேனை. வேலை - கடல். பேரி-பேரிகை.

835. அளைந்த - பொருந்திய. தண்ணுமை - மத்தளம். மாகதர் - அரசவையிலிருந்து இசைப் பாடல்களைப் பாடுவோர்.

மாகதருடைய இசைப் பாடல்கள், தேனிற் கலந்து செவியினுள்ளே வார்ப்பதைப் போல வானுலகம் வரையும் பரவின; ஊனுடலுக்கு உயிர் என்று சொல்லும்படி அப் பாடலில், தான் கலந்து மத்தள ஓசை தழுவியது.

(வி - ம்) மாகதர் பாடல் நன்ருக விளங்கும்படி, மத்தளம் உள் அடங்கி அந்தப் பாடல்களுக்கு உயிரூட்டி உணர்ச்சியை வெளிப்படுத்தி நின்றது. பாடலின் இசை முழுதும் மத்தள ஓசை கலந்து நின்றது உடலில் உயிர் நிறைந்து நிற்றல்போல.

ஏழுநாளில் கோசலம்

836 ஆறும் கானும்
அகன்மலை யும்கடந்து
ஏறி, ஏழ்பகல்
நீங்கிப்பின் எந்திரத்து
ஊறு பாகு
மடைஉடைத்து ஒண்முளை
நாறு பாய்வயற்
கோசலம் நண்ணினன். கக

ஆற்றையும் காட்டையும் பரந்த மலைகளையும் கடந்து சென்று, ஏழுநாட்களுக்குப் பிறகு கரும்பாலைகளில் உண்டாகும் பாகின்மடை யுடைத்துப் பாய்கின்ற, அழகிய முளையும் நாற்றுமாகவுள்ள வயல்களையுடைய கோசல நாட்டை (பரதன்) அடைந்தான்.

(வி - ம்) 'ஆற்றை நீந்தியும், மலையை ஏறியும், காட்டைக் கடந்தும் ஏழுநாட்களுக்குப் பின் என்றுங் கூறலாம்.

---

836. அகல் - பரந்த. நீந்தி - கடந்து. எந்திரம் - ஆலை. பாகு - கருப்பஞ்சாறு. ஒண்மை - அழகு. நாறு - நாற்று.

கரும்பைப் பிழிதலாலுண்டாகும் சாறு, 'ஊறு பாகு' எனப் பட்டது. 'உடைத்துப் பாய் ஒண் முளை நாறு வயல்' எனப் பிரித்துக் கூட்டுக. ஆலையிலே பிழியும் சாறு தொட்டியில் கொள்ளாமல் பெருகி வாய்க்கால்களில் ஓடி அடைப்பை உடைத்துப் பாயும் வயலென்க. என்றும் இவ்வாறான வள முடையது கோசலநாடு என்றபடி. இன்று நிலைதிரிந்துள்ளது என்பது அடுத்த பாடல்களில் காணப்படும்.

நாட்டின் அலங்கோலம்

837 ஏர்து றந்த
வயல்;இள மைந்தர்தோள்
தார்து றந்தன;
தண்டலை நெல்லினும்
நீர்து றந்தன;
தாமரை நீத்தெனப்
பார்து றந்தனள்
பங்கயச் செல்வியே. கஉ

வயல்களில் ஏரைக் காணவில்லை; இளமைந்தர்களின் தோள்களில் மாலையைக் காணவில்லை; சோலைகளிலுள்ள செடி கொடித்தூரிலும்,வயல்களிலும் நீர்ப்பெருக்கைக் காண வில்லை; தாமரையை விட்டுப் போனமாதிரியாக இலக்குமி யானவள் கோசலநாட்டைவிட்டே போய்விட்டாள்.

(வி - ம்) நாட்டிலுள்ள சோகங் காரணமாக வயலில் உழுவாரில்லை; மகிழ்ச்சி போனதால் இளைஞர் தோளில் மாலை யணிந்திலர்; தண்ணீர் பாய்ச்சுவார் சோம்பியிருந்தனர்; தாமரைப்பூக்கள் நாள்தோறும் எடுக்கப்படும், சிலநாளாக

---

837. ஏர் - கலப்பை. தண்டலை - சோலை. நெல் - நெல் வயல். பங்கயம் - தாமரை.

எடுப்பாரில்லை. எனவே அவை நீர்நிலைகளிலேயே வாடிக் கிடப்பதால் அழகும் உயிரும் இல்லாத மாதிரி இருக்கின் றன. அதோடு நாட்டில் செல்வமுண்டென்னும் அறிகுறியே காணப்படவில்லை. சீதை நாட்டை விட்டுப் போய்விட்டாள் என்பது குறிப்பு. 'சனகியாம் கடிகமழ் கமலத்து அவ்வை நீங்கும்' (பாடல் 499) என்றதறிக. 'பார்' என்பது ஏக தேசமாக நாட்டை உணர்த்திற்று.

இதுவும் அது

838 பாடல் நீத்தன
பண்தொடர் பண்குழல்;
ஆடல் நீத்தன
அரங்கொடு அகன்புனல் ;
சூடல் நீத்தன
சூடிகை; சூளிகை
மாடம் நீத்தன
மங்கல வள்ளையே. கஅ

பண்ணால் தொடரப்பட்ட புல்லாங்குழல்கள் இசையை விட்டுவிட்டன ; ஆடரங்கும் அகன்ற நீர் நிலைகளும் ஆடலை நீங்கின ; கோபுரங்களிலுள்ள தூபிகள், கட்டப்படும் தோர ணங்களை இழந்தன ; நிலா முற்றத்தையுடைய மாளிகைகள் மங்கல வள்ளைப்பாடலை இழந்தன.

(வி - ம்) குழல் ஊதுவாரில்லை. நாட்டியசாலைகளில் நடனமும் நீர்நிலைகளில் நீராடுதலும் நடைபெறவில்லை என்ற இருநிகழ்ச்சிகள் ஒரே வினைமுற்றைப் பெற்றன. கோபுரங் களின் மேல் செய்யப்படும் அலங்காரங்களைச் செய்வாரில்லை.

---

838. வண்குழல் - புல்லாங்குழல். ஆடல் - நடனம் - நீராடல். சூடிகை - கோபுரத்திலுள்ள தூபி. சூளிகை - நிலாமுற்றம்.

உலக்கை குத்தும்போது பெண்கள் பாடும் பாட்டு வள்ளைப் பாட்டெனப்படும். 'பாடல்சால் முத்தம் பவள உலக்கையால், மாடமதுரை மகளிர் குறுவரே, வானவர்கோன் ஆரம் வயங்கிய தோட் பஞ்சவன்தன், மீனக்கொடிபாடும் பாடலே பாடல், வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்' (சிலப்பதி - வாழ்த்துக்).

நகை இழந்த முகங்கள்

839 நகைஇ ழந்தன
வாண்முகம் ; நாறுஅகில்
புகைஇ ழந்தன
மாளிகை; பொங்குஅழல்
சிகைஇ ழந்தன
தீவிகை ; தேமலர்த்
தொகைஇ ழந்தன
தோகையர் ஓதியே. கசு

ஒளிபொருந்திய முகங்கள் சிரிப்பை இழந்தன. மாளிகைகள் மணமுள்ள அகிற்புகையை இழந்தன. விளக்குகள் எரியும் சுவாலையின் கொழுந்தை இழந்தன. தேன் பொருந்திய பூங்கொத்துக்களைப் பெண்களின் கூந்தல்கள் இழந்தன.

(வி - ம்) முகங்கள் சோகத்தால் வாடிப்போயின. வீடுகளில் அகிற்புகை போடுவாரில்லை. விளக்குகளுக்குக் கவனித்து எண்ணெய் வார்ப்பாரும் தூண்டுவாருமில்லாதபடியால் அவை உள்ளடங்கி மங்கி எரிந்தன. பெண்களின் கூந்தலில் மலர் சூடுதலென்பதும் மறந்துபோயிற்று.

---

839. நகை - சிரிப்பு. வாள்முகம் - விளக்கமான முகம். நாறு - மணமுள்ள. அழற்சிகை - பிழம்பின் கொழுந்து. தீவிகை — விளக்கு. தே - தேன். தோகையர் - பெண்கள். ஓதி - கூந்தல்.

ஒன்றும் விளங்கவில்லை

840 என்ற நாட்டினை
நோக்கி, இடர்உழந்து,
ஒன்றும் உற்றது
உணர்ந்திலன்; உன்னுவான்;
சென்று கேட்பதொர்
தீங்குள தாம்எனா
நின்று நின்று
நெடிதுயிர்த் தானரோ. கரு

மேலே கூறியவாறுள்ள கோசலநாட்டின் நிலையை நோக்கித் துன்பத்தால் வருந்தி, நேர்ந்த தொன்றையும் அறியமுடியாதவனாய் நினைத்துப் பார்க்கிறான்; நாம் நகருக்குள் சென்றதும் கேட்கக்கூடிய தீங்கு உள்ளது என்று மட்டும் கருதினவனாய், திணறித் திணறிப் பெருமூச்சுவிட்டான்.

தேருக்கு முந்துகிறது மனம்

841 மீண்டும் ஏகி, அம்
மெய்எனும் நல்அணி
பூண்ட வேந்தன்
திருமகன் புந்திதான்
தூண்டு தேரினும்
முந்துறத் தூண்டுவான்,
நீண்ட வாயில்
நெடுநகர் நோக்கினான். கசு

---

840. இடர் - துன்பம். உழந்து - வருந்தி. உன்னுதல் - நினைத்தல். நெடிதுயிர்த்தல் - பெருமூச்சுவாங்குதல்.

841. அணி - ஆபரணம். வேந்தன் திருமகன் - தயாத மன்னனின் செல்வமகனாகிய பரதன். புந்தி - எண்ணம். தான் - அசை.

மேலும் சென்று, அந்த உண்மை என்ற நல்ல அணியைப் பூண்ட மன்னனுடைய செல்வமகன், செலுத்தப்படுகிற தேரைக் காட்டிலும் விரைவாகத் தன் புத்தியைச் செலுத்து பவனாகி, நீண்ட வாசலையுடைய நெடிய அயோத்தி நகரைக் கண்டான்.

அழகழிந்த வீதிகள்

842 தேரும் மாவும்
களிறும் சிவிகையும்
ஊரும் பண்டியும்
ஊருநர் இன்மையால்,
யாரும் இன்றி
எழில்அழி வீதிகள்,
வாரி இன்றிய
வாலுக ஆற்றினே. கஎ

செல்லத்தக்க தேரும், குதிரையும், யானையும், பல்லக்கும், வண்டியும் ஏறிச் செல்லுவோர் இல்லாதபடியால், யாரும் இல்லாமல் அழகழிந்த தெருக்கள், நீர் இல்லாத மணல் நிறைந்த ஆற்றைப்போல (இருந்தன.)

தம்பி இது என்ன?

843 அன்ன தன்மை
அகநகர் நோக்கினன்;
பின்னை அப்பெரி
யோர்தம் பெருந்தகை,

---

842. மா - குதிரை. களிறு - ஆண்யானை. பண்டி - வண்டி. ஊருநர் - செல்லுவோர். எழில் - அழகு. வாரி - நீர். வாலுவகம் - மணல்.

843. அக நகர் - நகரின் உட்புறம். தன்மை - நிலைமை: அநியாயமான நிலைமை.

மன்னன் வைகும்
வளநகர் போலும்ஈது
என்ன தன்மை !
இளையவ னேஎன்றான். கஅ

அந்த நிலையை யடைந்த நகரின் உட் பகுதியைப் பார்த்தான். பிறகு, பெரியோர்களால் பாராட்டப்படும் பெரிய தன்மையையுடைய அப் பரதன், (சத்துருக்கனை நோக்கி) தம்பி! சக்கரவர்த்தி யிருக்கிற வளமையுடைய நகரமாகவா இருக்கிறது? இது என்ன அநியாயம்? என்றான்.

நகரின் திரு வெளியேறிவிட்டது

844 குருமணிப்பூண்
அரசிளங் கோளரி,
இருகை கூப்பி
இறைஞ்சினன் ; எய்தியது
ஒருவ கைத்தன்று
உறுதுயர் ; ஊழிவாழ்
திருந கர்த்திரு
தீர்ந்தன ளாம்என்றான். கக

நிறமுள்ள இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்துள்ள இளவரசனான சிங்கம் போன்ற சத்துருக்கன், இருகைகளையும் குவித்துத் தொழுதவனாக, நேர்ந்துள்ள துயரம் ஒரு எல்லைக்குட்பட்டதல்ல. ஊழிக் காலம் வரையும் வாழத்தக்க சிறப்புள்ள இந் நகரத்திலிருந்து, இலக்குமிதேவி வெளியேறி விட்டாள் போலிருக்கிறது என்றான்.

---

844. குரு - நிறம். கோளரி - சிங்கம்.

(வி - ம்) நாட்டின் தலைநகரம் என்ற தோற்றமின்றி, செழிப்பற்று வறண்டுபோனாற்போலிருக்கிற படியால், செல்வம் நீங்கிற்று என்றான். செல்வத்தை இலக்குமி என்பது மரபு.

அரசனது அரண்மனையை அடைதல்

845 அனைய வேலை
அரசுடைத் தோரண
மனையின் நீள்நெடு
மங்கல வாயிலை,
நினையும் மாத்திரத்து
ஏகிய நேமியான்
தனைய னும், தந்தை
சார்விடம் மேவினன்! ௨0

அப்பொழுது அரசன் வாழ்கின்ற தோரணம் கட்டிய அரண்மனையின் மிக நீண்ட மங்கலத்துக்கு உரிய வாசலை, நினைக்கிற அளவில் சென்றுசேர்ந்த அரசகுமாரனான பரதன் தந்தை இருக்குமிடத்தை அடைந்தான்.

(வி - ம்) பெருமூச்சுவிட்ட பரதன் அந்தக் கணத்திலேயே என்று சொல்லும்படி விரைந்து வீதிகளைக் கடந்து அரண்மனையை அடைந்தான் என்றபடி. 'மங்கல வாயில்' என்றது என்றும் மங்கலமாகவே அவ்வாயில் இருந்து வந்ததாதலின் என்க.

---

845. நினையும் மாத்திரம் - நினைத்த அளவு. நேமியான் - சக்கரத்தையுடையவன் - ஆட்சியை யுடையவன்: மன்னன். தனயன் - மகன். சார்விடம் - தங்கியிருக்கும் இடம்.

அரசனைக் காணவில்லை

846 விருப்பின் எய்தினன் ;
வெந்திறல் வேந்தனை
இருப்பு நல்லிடம்
எங்கணும் கண்டிலன் ;
அருப்பம் அன்றுஇதென்று
ஐயுற வெய்தினன் ;
பொருப்பு நாண
உயர்ந்த புயத்தினன். உக

மலையும் வெட்கப்படும்படி உயர்ந்த தோள்களையுடைய பரதன், விருப்பத்துடன் சென்று சேர்ந்தான். மிக்க வலிமையுடைய மன்னனை, இருக்கக்கூடிய சிறந்த இடமெங்கும் கண்டானில்லை. இது சிறிய காரியமன்று என்று சந்தேகமடைந்தான்.

அன்னை அழைக்கிறாள்

847 ஆய காலையில்
ஐயனை நாடித்தன்
தூய கையில்
தொழல்உறு வான்தனை,
'கூயள் அன்னை
குறுகுதிர் ஈண்டு' என,
வேய்கொள் தோளி
ஒருத்தி விளம்பினள். உஉ

---

846. திறல் - வலிமை. இருப்பு - இருக்கக்கூடிய. அருப்பம் - சிறிது. ஐயுறவு எய்தினன் - சந்தேகம் அடைந்தான். பொருப்பு - மலை. புயம் - தோள்.

847. ஆயகாலையில் - அப்பொழுது. ஐயன் - இராமன். நாடி - தேடி. கூயள் - கூப்பிட்டாள். குறுகுதிர் - வருவீராக. ஈண்டு - இங்கே. வேய் - மூங்கில். தோளி - தோள்களையுடையவள். விளம்பினள் - சொன்னாள்.

அப்போது இராமனைத் தேடித் தன்னுடைய தூய்மையான கைகளால் தொழலாமென்று முற்பட்டவனாகிய பரதனை, 'அன்னை கூப்பிடுகிறாள் இங்கே வாருங்கள்' என்று மூங்கிலை யொத்த தோள்களையுடைய ஒருத்தி கூறினாள்.

(வி - ம்) ஊர் அடங்கிக் கிடப்பதை யறிந்து கவலை கொண்ட பரதன், தந்தையைப் பார்க்கலாமென்று தேடினான். காணவில்லை. இராமனையாவது பார்க்கலாமென்று எண்ணினான். அப்பொழுது தாய் அழைத்தாள்.

என் தந்தை முதலியோர் சுகமா ?

848 வந்து தாயை
    அடியில் வணங்கலும்,
சிந்தை ஆறத்
    தழுவினள் ; தீதிலர்
எந்தை என்னையர்
    எங்கையர் என்றனள் ;
அந்தம் இல்குணத்
    தானும்'அது ஆம்'என்றான். உரு

பரதன் வந்து அடியில் விழுந்து தாயை வணங்க, அவள் அவனை மனமாரக் கட்டித் தழுவிக்கொண்டே என் தந்தையும், என் தாய்மாரும், என் தங்கையர் முதலிய மற்றையோரும் தீதில்லாமல் இருக்கிறார்களா ? என்றனள். முடிவில்லாத நற்குணமுள்ள பரதனும் அப்படியே (நன்றாக இருக்கிறார்கள்) என்றான்.

(வி - ம்) முடிசூட வந்த பிள்ளையல்லவா ? கண்டவுடன் பேராவலில் உடலும் மனமும் ஒன்றுபடக் கட்டித் தழுவினாள். அவளுடைய சுற்றத்தாரின் தீதில்லாத நல்

---

848. ஆர - பொருந்த. அந்தம் - முடிவு.

வாழ்வில் பேரார்வங்கொண்டு கேட்கிருள். கணவனும் இறந்தான். அவனது சுற்றம் முழுமையும் தீராத் துயரில் கிடந்து கரைகாணுமல் தவிக்கின்றனர். கைகேயியின் உள்ளம் துன்பத்தில் சாராமல் இன்பத்திலேயே நிற்கிறது. அவள் போக்கு ஒரே ஒழுங்காகப் போய்க்கொண்டிருக்கிறது; அப்போக்கு, இடையில் என்ன நேர்ந்தாலும் நிற்கவில்லை என்பது நோக்கத்தக்கது. என் தந்தை—எந்தை என்றும், என் தங்கை—எங்கை என்றும் வந்தாற்போல என் அன்னையர்—என்னையர் என வந்ததென்க. பரதனுடைய எண்ணமெல்லாம் வேறிடத்தில் இருப்பதால் கேட்டதற்கு 'அது ஆம்' நீ கேட்கிறபடிதான் என்று பட்டும் படாமலும் பதில் கூறினன்.

அரசன் எங்கே?

849 மூண்டுஎழு காதலான்
முளரித் தாள்தொழ
வேண்டினென்; எய்தினென்;
உள்ளம் விம்முமால்;
ஆண்டகை நெடுமுடி
அரசர் கோமகன்
யாண்டையான் பணித்திர்!
என்றுஇருகை கூப்பினன். உச

கிளர்ந்தெழுகின்ற காதலையுடைய பரதன், ஆண் தகையான நீண்ட முடிதரித்த அரசர்க்கரசன் எங்கே யிருக்கிருன்? அவனது தாமரைமலர் போன்ற திருவடிகளைத் தொழ விரும்பினேன்; (அதற்காக) வந்தேன்; உள்ளம் வெடித்துப்

849. மூண்டு - கிளர்ந்து. காதலான் - பரதன். முளரி - தாமரை. ஆண் தகை - பெருமையிற் சிறந்தோன். அரசர் கோமகன் - சக்கரவர்த்தி. யாண்டையான் - எங்கே யிருக்கிருன். பணித்திர் - சொல்லி யருளுவீராக.

போகும்போலிருக்கிறது. சொல்லுங்கள் என்று இருகை களையும் குவித்து வணங்கி நின்றான்.

அவன் மேலுலகம் சென்றான்

850 ஆனவன் உரைசெய,
அழிவில் சிந்தையாள்,
'தானவர் வலிகெட
நிமிர்ந்த தானைஅத்
தேனமர் தெரியலான்,
தேவர் கைதொழ,
வானகம் எய்தினன் ;
வருந்தல் நீ !' என்றாள். ௨௫

அப்பரதன் கேட்டதற்கு, வருத்தமில்லாத மனத்தை யுடைய கைகேயி, அசுரர்கள் வலி அழியும்படி உரம்பெற்ற சேனையை உடைய அந்தத் தேன் பொருந்திய மாலையணிந்த மன்னன் தேவர்கள் கைகூப்பித் தொழுது நிற்க, வானுலகை அடைந்தான் ; (அதற்காக) நீ வருந்த வேண்டாம் என்றாள்.

(வி - ம்) யார் வருந்தினாலும் உலகம் என்ன ஆனாலும் தன்குறி ஒன்றே கொண்டு நிற்கிறாள் கைகேயி. கல்லாக இரும் பாக அவள் மனம் இருக்கிறதென்பார், 'அழிவில் சிந்தை யாள்' என்றார். வானகம் எய்தினன் என்று மனத்தில் சாராமல் கூறுவது அவளுடைய மனத்தடிப்பைக் காட்டுவ தாகும். அரசன் பிரிவினால் ஏற்படும் வருத்தத்தினும் பரதனுக்குக் கிடைத்தற்கரிய அரசு கிடைப்பதால் அரசன் பிரிவை யெண்ணி வருந்தவேண்டாமென்றாள் என்க. 'நீ வருந்தலை நீங்குவென் யான் என்ற, தீய வெம்சொல் செவி

850. ஆனவன் - அவன் : பரதன். தானவர் - அசுரர். தெரி யல் - மாலை. வான் அகம் - மேலுலகம். வருந்தல் - வருத்தப் படாதே.

சுடத் தேம்புவாள்' (பாடல் 680) என்ற இடத்தையும் இவ்விடத்தையும் ஒப்புநோக்குக.

கேட்டான் கீழே விழுந்தான்

851 எறிந்தன கடியசொல்
செவியுள் எய்தலும்,
நெறிந்துஅலர் குஞ்சியான்
நெடிது வீழ்ந்தனன்;
அறிந்திலன்; உயிர்த்திலன்;
அசனி ஏற்றினுல்
மறிந்துஉயர் மராமரம்
மண்உற்று என்னவே. உசு

வீசி எறிந்தாற்போலக் கைகேயி சொன்ன கடுமையான சொற்கள், செவியினுள்ளே புகுந்தவுடன், நெளித்து பரந்துள்ள தலைமயிரையுடைய பரதன், உயர்ந்த பெரிய மராமரமானது பேரிடியினுல் தலைமடிந்து மண்ணில் விழுந்ததென்று சொல்லும்படி விரைத்துப்போய்க் கீழே விழுந்தான்; உணர்ச்சியுமில்லை; மூச்சுமில்லை.

(வி - ம்) அவள் சொல்லிய சொல், சொல்லாக இல்லை. கல்லைவிட்டு வீசியமாதிரி இருந்தது. இச்சொல்லைக் கேட்டதும் உணர்ச்சியற்று, பட்ட மரம்போல ஆகிவிட்டான். பின்பு என்ன? விழவேண்டியதுதானே. பேச்சுமில்லை மூச்சுமில்லை. விழுந்தவனைக் கைகேயி தூக்கினுளா? இல்லை. 'நல் அருள் துறந்தனள்' (பாடல் 489) அருளென்பதே அவள் உள்ளத்தைவிட்டு முன்னமேயே போய்விட்டது.

---

851. கடிய - கடுமையான. நெறிந்து - நெளி நெளியாக. அலர் - விரிந்த. குஞ்சி - ஆண்மயிர். நெடிது - நீட்டமாக (உடலில் நெளிவு சுளிவு இல்லாமல்; உணர்ச்சியற்று) உயிர்ப்பு - மூச்சு. அசனி ஏறு - ஆண்இடி. மறிந்து - தலைசாய்ந்து. மராமரம் - பெரியமரம்.

உன்னைத் தவிர யார் சொல்வார்?

852 வாயொளி மழுங்க,தன்
　　மலர்ந்த தாமரை
ஆயலர் நயனங்கள்
　　அருவி சோர்தரத்,
'தீயெரி செவியில்வைத்
　　தனைய தீயசொல்,
நீயலது உரைசெய
　　நினைப்பரோ?' என்றான். உஎ

உதடு வெளுத்துப்போகவும், மலர்ந்த தாமரை மலர் போன்ற பரந்த கண்களில் நீர் வடிந்து கொண்டிருக்கவும், நெருப்புச் சுவாலையைக் காதில் வைத்தமாதிரியான தீய சொல்லை உன்னைத் தவிர (வேறு யாராவது) சொல்ல நினைப் பார்களா என்றான்.

(வி - ம்) சிறிது நேரத்தில் உணர்ச்சி வர இவ்வாறு சொன்னான். சோகத்தால் வாய் வெளுத்தது. கண்ணீர் பெருகுகிறது. உலகத்தில் உள்ள எவராலும் சொல்லலா மென்று நினைக்க முடியாத இத்தீச் சொல்லைக் காதினுள்ளே கொள்ளிக் கட்டையைத் திணிக்கிறமாதிரியாக இவள் எப் படிச் சொன்னாள் என்று நினைக்கிறான்.

தேவருலகத்தில் ஆசையா?

853 பற்பகல் நிழற்றும்நின்
　　கவிகை பாய்நிழல்
நிற்பன பல்லுயிர்
　　உணங்க, நீநெடும்

852. தாமரை - தாமரை மலர்.

853. பற்பகல் - பலநாள்: அறுபதாயிரம் ஆண்டு. நிழற்று தல் - நிழலைச் செய்தல். கவிகை - குடை. பாய் - பரவிய. உணங் கல் - வருந்துதல். பக - வெளிப்பட.

கற்பக நறுநிழல்
காத லித்தியோ?
மற்பக மலர்ந்ததோள்
மன்னர் மன்னனே. உஅ

பல நாளாக நிழலைச் செய்த உன்னுடைய வெண் கொற்றக் குடையிலிருந்து விரிந்த நிழலிலே நின்று வாழும் பலவகைப்பட்ட உயிரினமும் வருந்தும்படி, நீ நீண்ட கற்பகத்தின் நறுமணமுள்ள நிழலை விரும்பி அடைந்தனையோ? மல் தொழில் வெளிப்படும்படி அகன்ற தோள்களையுடைய சக்கரவர்த்தியே!

(வி-ம்) உலகுக்கு நிழலாக இருந்து காத்த நீ, வேறொரு நிழல் தேடிச் செல்லலாமா? நிழலிலிருந்து வாழ்ந்த உயிரெல்லாம் வாடும்படிவிட்டு நீ மட்டும் நறு நிழல் நாடுதல் நியாயமாகுமா? நீ அரசன் மட்டுமல்லவே, அரசர்களுக்கெல்லாம் அரசனன்றோ? தன் குடையின் கீழுள்ள மக்கள் துன்புறத் தான் இன்புற நினைத்தல் ஆகுமோ? என்ற எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றுதல் காண்க. தயரதனிடம் பரதன் கொண்டுள்ள அளவிறந்த மதிப்பு இங்கே வெளிப்படுகிறது. நல்லவர்கள் எத்தனை யாண்டு இருந்தாலும் இறக்கும்போது இன்னும் இல்லாது போயினரே என்ற எக்கம் பெருகிநிற்கும் என்ற உண்மை இங்கே விளக்கமாகிறது.

சம்பரன் மேலுலகத்திலா இருக்கிறான்

854 இம்பர்நின்று ஏகினை;
இருக்கும் சார்புஇழந்து
உம்பர்வந்து உன்கழல்
ஒதுங்கி னார்கொலாம்!

---

854. இம்பர்-இவ்வுலகம். ஏகினை-சென்றாய். சார்பு-இடம். உம்பர்-தேவர். தானை-சேனை. தானவர் - அசுரர். அம்பரம் - வானம்.

சம்பரன் அனைய அத்
தானைத் தானவர்
அம்பரத்து இன்னமும்
உளர்கொலாம்! ஐயா! உக

இவ்வுலகைவிட்டுச் சென்றுவிட்டாய்! தேவர்கள், தாம் இருக்கும் இடத்தை இழந்து உன்னுடைய திருவடியில் அடைக்கலம் புகுந்தனரா? சம்பரனைப் போன்ற அந்தச் சேனைகளையுடைய அசுரர்கள் மேலுலகத்தில் இன்னும் இருக்கிறார்களா? ஐயா!

(வி - ம்) நீ இவ்வுலகை விட்டுத் தேவர் உலகுக்குப் போகவேண்டிய காரணமென்ன? என்றான். புலப்பத்தில் வருவன இவை. மனிதன் பிறந்து வாழ்ந்து இறப்பவன் என்ற எண்ணமே பரதனுக்கு ஏற்படவில்லை. வேண்டுமானால் தேவலோகத்துக்குச் செல்வது, இல்லையென்றால் இங்கேயே நிரந்தரமாக இருப்பது என்ற நினைவிலிருக்கிறான். இது, பிரிவுத் துன்பம் தலைக்கேறிவிட்டதால் தோன்றிய உணர்ச்சியில் எழுந்ததாம்.

இராமனைப் பாராமல் துயர் தீராது

855 'எந்தையும் யாயும்எம்
பிரானும் எம்முனும்
அந்தம்இல் பெருங்குணத்து
இராமன் ஆதலால்,
வந்தனை அவன்கழல்
வைத்த போதுஅலால்,
சிந்தைவெம் கொடுந்துயர்
தீர்கலாது' என்றான். ௩0

---

855. யாய் - தாய். பிரான் - கடவுள். வந்தனை வைத்தல்- வணங்குதல்.

என் தந்தையும், தாயும், என்னுடையகடவுளும், எனது அண்ணனும் முடிவில்லாத உயர்ந்த குணங்களையுடைய இராமனே யாதலால், அவனுடைய திருவடிகளில் வணக்கம் புரிந்தால் அல்லாமல் என் மனத்திலேற்பட்ட இக் கொடிய துயரம் தீராது என்றான்.

(வி - ம்) தந்தை இறந்தான் ; தாயும் இவ்வாறாயினாள்; உயிரினத்துக்கு எல்லாமாயுள்ளவன் இறைவனே யன்றோ. அவனே இராமனாதலால் அவனுடைய திருவடியே சரண் என்று கருதினான். ' தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால், மனக்கவலை மாற்ற லரிது ' (திருக்குறள் 7) 'அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ......இறைவன்நீ ஏறார்ந்த செல்வன் நீயே ' (அப்பர் தேவாரம்) என்பவை நோக்கத் தக்கன.

மூவரும் காட்டுக்குப் போய்விட்டனர்

856 அவ்வுரை கேட்டலும்
அசனி ஏறுஎன
வெவ்வுரை வல்லவள்
மீட்டும் கூறுவாள் ;
' தெவ்அடு சிலையினாய் !
தேவி தம்பிஎன்று
இவ்விரு வோரொடும்
கானத்தான்' என்றாள். ௩௧

அந்தச் சொற்களைக் கேட்டவுடனே ஆண் இடியைப் போல, கொடுஞ்சொல் பேசுவதில் நிகரற்ற கைகேயி மறுபடியும் சொன்னாள் ; பகைவரை வெல்லுகிற வில்லையுடையவனே!

---

856. அசனி ஏறு - ஆண் இடி : பேரிடி. தெவ் - பகை. கானத்தான் - காட்டில் வசிப்பவன்.

மனைவி, தம்பி என்ற இந்த இருவருடனே காட்டுக்குப் போய்விட்டான் என்றாள்.

(வி - ம்) கணவன் இறந்தானென்றும், அதற்கு வருந்த வேண்டாமென்றும், இராமன் காட்டுக்குப் போய்விட்டானென்றும் கலக்கமில்லாமல், நாக் கூசாமல் மன அமைதியோடு உறுதியாக நின்று பதில் கூறுதலால், ‘அசனி ஏறென வெவ்வுரை வல்லவள்’ என்றார். பிறருடைய துன்பம், சாவு முதலியன கண்டு இரங்கும் குணமே அவளிடமில்லை. ஏற்கெனவே, ‘நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்’ (பாடல் 489) என்றும், ‘பசை அற்றாள்’ பாடல் 534) என்றும் கூறியிருத்தல் காண்க. அருளில் நின்று அடியோடு கழன்ற உள்ளம், எவ்வாறு செயற்படும் என்பதற்குக் கைகேயி ஒரு தெளிவுபட்ட பாத்திரமாவாள் என்பது தொடர்ந்து பார்க்கத் தக்கது.

வினை இனி என்னதான் செய்யும்?

857 வனத்தினன் என்றவள்
இசைத்த மாற்றத்தை
நினைத்தனன்; இருந்தனன்
நெருப்புண் டான்என;
‘வினைத்திறம் யாதினி
விளைப்பது? இன்னமும்
எனைத்துள கேட்பன
துன்பம்யான்’ என்றான். ௩உ

வனவாசியானான் என்று அவள் சொன்ன சொல்லை எண்ணினான்; நெருப்பையே உண்டவனைப் போல

---

857. இசைத்த - சொல்லிய. மாற்றம் - சொல். திறம் - வலிமை.

(எரிந்துகொண்டு) இருந்தான். வினையினுடைய வலிமை இனிச் செய்ய என்ன இருக்கின்றது ? இன்னும் யான் கேட்கப் போகும் துன்பம் எத்தனை உண்டோ ? என்று (நடுங்கிக்) கூறினன்.

(வி - ம்) நெருப்பு என்றது தணலும் விறகும் அற்ற தனிப் பிழம்பை என்க. அந்தத் தனித் தீயின் கற்றை வயிற்றினுள்ளே புகுந்து மண்டிவிட்டால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு ஆனன் பரதன். வயிற்றெரிச்சல் மண்டிப் பரவி உடலும் உள்ளமும் ஒருசேரப் பற்றி எரிவதான உணர்ச்சியை அடைந்தான் என்றவாறு.

ஏன் போனன் ?

858 ஏங்கினன் விம்மலோடு
 இருந்த ஏந்தல்,அப்
பூங்கழற் கால்அவன்
 வனத்துப் போயது
தீங்கிழைத் ததனினோ ?
 தெய்வம் சீறியோ ?
ஓங்கிய விதியினோ
 யாதி னோ?'எனா. ௫௫

ஏக்கமுற்றுப் பொருமிக்கொண்டு இருந்த பரதன், கழலணிந்த மலர்போன்ற பாதங்களையுடையவன் (இராமன்) வனத்துக்குச் சென்றது பெரியோருக்குத் தீங்கு செய்த காரணத்தாலா, தெய்வக் கோளாறு ஏற்பட்டதனலா, தலைக்கு மேலே போய்க் கொண்டிருக்கிறதே விதி அதனலா, எதனல் என்று கேட்டவனய்.

---

858. ஏந்தல் - பெருமையுடையவன். ஓங்கிய - அறிவுக்கு அகப்படாத.

(வி - ம்) தீங்கு செய்தால் காட்டுக்கு ஓட்டப்படலாம்; புத்தி சுவாதீன மில்லாவிட்டால் காட்டில் சுற்றித் திரியலாம்; இவற்றைத் தவிர நமக்கு அறியமுடியாதபடி விதி ஏதாவது செய்யலாம். இவற்றுள் எதனுல் என்று கேட்டான். கண்டறியமுடியாது, விதியின் செயல் என்பார் 'ஓங்கிய விதி' என்ருர்.

போனது அரசனுக்கு முன்னு பின்னு ?

859 'தீயன இராமனே
செய்யு மேல்,அவை
தாய்செயல் அல்லவோ
தலத்து ளோர்க்கெலாம்?
போயது தாதைவிண்
புக்க பின்னரோ ?
ஆயதன் முன்னரோ ?
அருளுவீர்!' என்ருன். ௩௪

தீயனவான செயலை (குற்றமென்பதைச் செய்யாத) இராமனே செய்வானுனல், இவ்வுலகத்திலுள்ளவர்களுக்கு அவை தாய் செய்கிற செயலைப் போன்றதுதானே! அவன் (காட்டுக்குச்) சென்றது தந்தை இறந்த பிறகா? அதற்கு முன்பா? அருளிச் செய்யவேண்டும் என்ருன்.

(வி - ம்) தகப்பன் இருக்கிறபோது இராமன் காட்டுக்குப்போயிருந்தால் குற்றம் செய்து போயிருக்க வேண்டும்; தகப்பன் இறந்தபிறகு போயிருந்தால் புத்தி குழம்பியிருக்க வேண்டும். ஏன் போனுன்? எப்படிப் போனுன்? என்ற விவரம் தெரிவதற்காக முன்பா? பின்பா? என்ருன். இராமன் தீமை செய்ய மாட்டான்; செய்தாலும் நன்மைக்காகத்

---

859. ஆயதன் - நிகழ்ந்ததற்கு. அருளுவீர் - அருளிச் செய்யுங்கள்.

தான் செய்வான் என்ற பரதனின் உறுதி 'இராமனே' என்ற ஏகாரத்தால் உணரப்படும். செய்யத் தகாததைச் செய்துவிட்டுத் தகுதியுடைய செயலைச் செய்தாற்போல மறுமொழி கூறிக்கொண்டிருக்கிறாளாதலின் 'அருளுவீர்' என்றான். இது ஆத்திரத்தில் ஏற்பட்ட கேலி. 'தாய்செயல்' என்றது எந்தத் தாயும் தன் மக்களுக்குத் தீமை ஏற்படுமாறு செய்யாள் என்றவாறு.

அரசன் இருக்கும்போதே !

860 'குருக்களை இகழ்தலின்
 அன்று; கூறிய
செருக்கினால் அன்று;ஒரு
 தெய்வத் தாலும்அன்று;
அருக்கனே அனையஅவ்
 அரசர் கோமகன்
இருக்கவே, வனத்துஅவன்
 ஏகினான்' என்றாள். ௩டு

பெரியோர்களை இகழ்ந்ததனாலல்ல; பேச்சினாலாகிய அடங்காத் தனத்தினாலு மல்ல; எந்தத் தெய்வத்தின் கோளாறினாலும் அல்ல; சூரியனைப் போன்ற பெருமையுள்ள அந்த மன்னர் மன்னன் உயிருடன் இருக்கும்போதே, அவன் வனத்துக்குச் சென்றான் என்றாள்.

(வி - ம்) குருக்கள் என்றது ஐம்பெருங் குரவர்களை: 'அரசன் உவாத்தியான் தாய் தந்தை தம்முன், நிகரில் குரவர் இவர், இவரைத் தேவரைப்போலத் தொழுதெழுக என்பதே, யாவருங்கண்ட நெறி' (ஆசாரக்கோவை 16) 'கூறிய செருக்காவது' சொற்செருக்கு. அஃதாவது அடங்காமல் எதிர்த்துப் பேசுதல்.

---

860. அருக்கன் - சூரியன்.

அவன் ஏன் போனுன்? இவன் ஏன் இறந்தான்?

861 'குற்றம்ஒன்று இல்லையேல்,
கொதித்து வேறுளோர்
செற்றதும் இல்லையேல்,
தெய்வத் தால்அன்றேல்,
பெற்றவன் இருக்கவே
பிரிந்து கான்புக
உற்றதென்? மன்னவன்
உலந்ததென்!' என்ருன். கூசு

ஒரு குற்றமும் செய்யவில்லை என்றால், மற்றையோர் போரிட்டு வென்றதுமில்லை யென்றால், தெய்வத்தாலும் அல்ல என்றால், பெற்ற தந்தை உயிருடனிருக்கும்போது (மகன்) பிரிந்து காட்டுக்குப் போகும்படி ஏற்படக் காரணமென்ன? அரசன் இறந்ததற்குக் காரணமென்ன? என்ருன்.

(வி - ம்) குற்றம் செய்தால் தண்டித்துக் காட்டுக்கு அனுப்பப்படலாம். ஒரு அரசன் மற்றொரு அரசனோடு போரிட்டு வெற்றிகண்டால் தோற்றவனைச் சிறையிலடைத்து வலியழியச் செய்தலும், அல்லது காட்டில் செல்லும்படி துரத்திவிடுதலும் இயல்பு. தெய்வக் கோளாறினுல் புத்தி குழம்பி ஓடிச் சுற்றித்திரியலாம். இவையெல்லாம் காரணமல்ல என்றால் வேறு காரணம் என்ன ஏற்பட்டதென்ருன்.

நானே காரணம்

862 'வாக்கினுல் வரம்தரக்
கொண்டு, மைந்தனைப்
போக்கினேன் வனத்திடை;
போக்கிப் பார்உனக்கு

861. செற்றது - வலியழித்தது. உலத்தல் - இறத்தல்.
862. நேமி - சக்கரம். நேமிவேந்து - சக்கரவர்த்தி.

ஆக்கினேன் ; அன்னது
பொறுக்க லாமையால்
நீக்கினுன் தன்உயிர்
நேமிவேந்து!' என்ருள். ௩எ

அவனுடைய வாக்கினுல் வரம்தர நான் பெற்றுக் கொண்டு, மகனைக் காட்டுக்குப் போகும்படி செய்தேன் ; அவ்வாறு போக்கி, இந்த உலக ஆட்சியை உனக்கு உரிமையுள்ளதாகச் செய்தேன் ; மகன் பிரிந்த துயரைப் பொறுக்க மாட்டாமையால் சக்கரவர்த்தி தன் உயிரை விட்டுவிட்டான் என்ருள்.

(வி - ம்) கைகேயி நடந்ததைத் தெளிவாகச் சொன்னுள். தானே காட்டுக்கு அவனைப் போக்கினதாகச் சொன்னுள். அரசை உனக்கு ஆக்கினேன் என்ருள். அதனுலே அரசன் உயிர் 'நீங்கினுன்' என்று கூறலாம். அவ்வாறு கூடக் கூருமல் தற்கொலை செய்துகொண்டான் என்ற பொருளில் 'நீக்கினுன்' என்ருள். தானே இயற்கையாக உயிர் போகவில்லை ; வலிந்து மாய்ந்தான் ; வருந்தி வருந்தி உயிரை வெளிப்படுத்தினுன் என்ற அவள் கூற்று இரக்கமற்ற மனவலிமையால் வந்ததென்க. கூனியின் பேச்சைக் கேட்டு, பரதனுக்குப் பட்டங்கட்டுவது, இராமனைக் காட்டுக்குத் துரத்துவது, இரண்டும் முடியா தென்ருல் சாவது என்று (பாடல் 495) முடிவு செய்தாள். இதன் பிறகு கைகேயி மூன்றுமுறை இதனை வற்புறுத்திப் பேசியிருக்கிருள். (பாடல்கள் 509, 565, 599) மன்னனிடம் வரத்தைப் பெற்ற பிறகு, பேசியதெல்லாம் இம் மூன்றைப்பற்றி யல்லாமல் வேறு பொருளைப்பற்றிப் பேசவில்லை. யார் என்ன சொன்னுலும், எவ்வளவு கோபித்தாலும், எவ்வளவு திட்டினுலும் கைகேயி நிதானமாகப் பதிலுரைத்தாளே யன்றி,

கோபப்படவுமில்லை, கடுமொழி பேசவுமில்லை யென்பது நோக்கத் தக்கது.

குறிப்பு:—இதுதான் கைகேயியின் கடைசிப்பேச்சாகும். இனி அவள் வாய் பேசாத பாத்திரமானாள். இனி மற்றிரு தாயருடன் ஒன்றி நடந்துகொள்வாளுமாயினாள். அவள் செய்த முயற்சியெல்லாம் பரதன் அரசாள வேண்டுமென்பதே யாகும். அவன் கண்டிப்பாக அரசைத் தீவினை யென்று கருதித் தள்ளிவிட்டான் என்பதைஅறியவே அடங்கினாள்.

கண்கள் இரத்தம் கொட்டின

863 சூடின மலர்க்கரம்
சொல்லின் முன்செவி
கூடின ; புருவங்கள்
குனித்துக் கூத்துநின்று
ஆடின ; உயிர்ப்பிடை
அழற்கொ ழுந்துகள்
ஓடின ; உமிழ்ந்தன
உதிரம் கண்களே. ௩அ

(இதுவரை தலையின்மேல்) ஏறிக் குவிந்திருந்த கைகள், (இவள்) சொல்லி முடிக்குமுன்பு செவிகளில் பொத்திக் கொண்டன. புருவங்கள் தம்மை வளைத்துத் துடித்தன. மூச்சுக் காற்றில் நெருப்புச் சுவாலைகள் வெளிப்பட்டன. கண்கள் இரத்தத்தையே கக்கின.

(வி - ம்) தந்தையையும் அண்ணனையும் எண்ணிக் கையைத் தலைமேல் கூப்பிக் கொண்டிருந்தான் பரதன்.

---

863. சூடின - குவிந்திருந்த. குனித்தல் - வளைத்தல். உயிர்ப்பு - மூச்சு. அழற்கொழுந்து - நெருப்புச் சுவாலை. உமிழ்தல் - கக்குதல். உதிரம் - இரத்தம்.

இப்போது அவனை அறியாமலே அவன் கைகள் காதுகளை மூடின. அவனுடைய அளவுகடந்த பொறுமைக் குணம் இதுவரை செயல் பட்டது. இத்தனை கேட்டுக்கும் இவளே காரணம் என்றவுடன் பொறுமை சிதறிப்போய்விட்டது. வெகுளியின் மெய்ப்பாடு சிறந்து காணப்படும் பாடல் இது.

பரதன் கோதித்துப் பேசுகிறன்

864 கொடியவெம் கோபத்தால்
கொதித்த கோளரி,
கடியவள் தாய்எனக்
கருது கின்றிலன் ;
நெடியவன் முனியும்என்று
அஞ்சி நின்றனன் ;
இடியுரும் அனையவெம்
மொழி இயம்புவான். ௩௬௪

மிகக்கொடிய கோபத்தினல் கொதிப்படைந்த பரதன், விலக்கத்தக்க அவளைத் தாய் என்று கருதவில்லை. இராமன் கோபிப்பானே என்று பயந்து (அவளைக் கொல்லாமல்) நின்று, பெரிய இடியை ஒத்த கடும் சொற்களைக் கூறுவானாயினன்.

(வி - ம்) தானே இத்தனை காரியத்தையும் செய்தேன் என்றபிறகு இவளைக் கொல்லவேண்டியதுதான் என்று பரதனுக்குத் தோன்றியது. இக் கொடியவள் தன் தாய் என்ற நினைப்பே அற்றுப் போய்விட்டது. இராமன் என்ன சொல்லுவான் என்று நினைத்தான். கைதடைப்பட்டதென்க. தனக்கு

864. கோளரி - சிங்கம்: பரதன். கடியவள் - விலக்கத்தக்கவள். நெடியவன் - இராமன். இடி உரும் - (ஒரு பொருட் பன்மொழி) பேரிடி. வெம்மொழி - கடிய சொற்களை.

மேல் ஒருவன் உண்டு என்ற எண்ணம் உண்டாமாயின் தீமை யில் ஏற்படும் முனைப்புத் தலைதாழுமென்பது பெறப்பட்டது. கோபத்தின் முதிர்ச்சி கொலையாக வெளிப்பட இருந்தது. அதற்குத் தடை ஏற்படவே சொல்லாக வெளிப்படுகிறது. தாயின் செயல் பிழையாக இராது என்று கண்மூடி நம் பலாம் என்ற கருத்தில் பரதன் 'தாய்செய லல்லவோ தலத்து ளோர்க்கெலாம்' (பாடல் 859) என்று கூறினான். தாய் பிள்ளைக்குத் தீமைதரும் செயலைச் செய்யமாட்டாள் என் பது, என்றும் எங்கும் உள்ள அசைவிலா உண்மையாகும். இதனை 'தாயினும் சாலப்பரிந்து' (திருவாசகம்) என்பப தாலும் அறியலாம். ஆனால் இங்கே செய்யப்பட்ட செயல் உலகுள்ளளவும் தீராப்பழி தருவதாக இருப்பதால் இதைத் தனக்குத் தேடித்தருபவளைத் தாய் என்று பரதனின் தூய உள்ளம் எண்ணவில்லை. எனினும் கைகேயியின் தாய் உள்ளம் தன் மகனுக்குச் செல்வத்தையும் புகழுள்ள அர சாட்சியையுமே தேடியது. நன்மைஎன்று தாயுள்ளம் கருதுவ தெல்லாம் நன்மையாக இருப்பதில்லை. பெருங் கொடுமை யான செயலைச் செய்ய முற்பட்டதால் தாய் என்ற சொல்லே பொருளிழந்து போய்விட்டதென்க.

உன்வாயைக் கிழிக்க முடியவில்லையே

865 மாண்டனன் எந்தைஎன்
தம்முன் மாதவம்
பூண்டனன் நின்கொடும்
புணர்ப்பினால் என்றால்,

---

865. மாண்டனன் - (மாள் பகுதி) உயிரைவிட்டான். தம் முன் - அண்ணன். புணர்ப்பு - சூழ்ச்சி. கீண்டிலென் - கிழித்தே னல்லேன்.

கீண்டிலென் வாயது!
கேட்டு நின்றயான்,
ஆண்டனெ னேஅன்றே,
அரசை! ஆசையால்! ௪0

என் தந்தை இறந்ததும்; என் அண்ணன் அருந்தவக் கோலம் பூண்டு காட்டுக்குச் சென்றதும் உன்னுடைய கொடுமையான தந்திரத்தினுலென்ருல் (அவ்வாறு நிகழுதற் கிடஞய வரங்கேட்ட உன்) வாயைக் கிழிக்காமல், அதைக் கேட்டும் (உயிருடன்) நிற்கிற யான் ஆசையினுலே அரசைக் கைக்கொண்டவனே அல்லவா?

(வி-ம்) வரங்கேட்ட உன் வாயைக் கிழித்திருக்கவேண்டும்; உடனே நானும் செத்திருக்க வேண்டும்என்ருன். ஏன்? தான் பிறவாவிட்டால் அவள் கேட்டிருக்கமாட்டாள் என்றபடி. 'யான் பிறத்தலால் துறந்த பெரியாள் என்ருன்' (பாடல் 942) என வருதல் காண்க. இக் கொடுமையைக் கேட்டவுடன் உயிர் போகாதிருப்பதனுல் தான் குறையுடையவன் என்றும், அரசை ஏற்றுக்கொண்ட மாதிரிதான் என்றும் எண்ணுகிருன்.

நீயும் இருக்கிருய்! நானும் நிற்கிறேன்?

866 நீஇனம் இருந்தனை;
யானும் நின்றனென்;
ஏஎனும் மாத்திரத்து
எற்று கிற்றிலென்;
ஆயவன் முனியும்என்று
அஞ்சி னேன்அலால்,
தாயெனும் பெயர்எனைத்
தடுக்கற் பலதோ? ௪௧

---

866. மாத்திரம் - அளவு. எற்றுதல் - அடித்துத் தள்ளுதல். ஆயவன் - தாய்போன்றவன். பெயர் - பெயர்ச் சொல்.

நீ இன்னும் உயிரோடிருக்கிறாய்; யானும் (புலம்பிக் கொண்டு) நிற்கிறேன். ஏ என்று சொல்லக்கூடிய நேரத்தில் (உன்னை) அடித்துக் கொன்றேனில்லை. இராமன் கோபிப் பானே என்று அஞ்சுகிறேன்; அல்லவென்றால் தாய் என்ற பெயர்ச் சொல் என்னைத் தடுத்துவிடக் கூடியதா?

(வி - ம்) இவ்வளவு கொடுமையைச் செய்த நீயும் உயி ரோடு இன்னும் இருக்கிறாய்; நானெங்கே போனேன்? எதி ரில் நிற்கத்தான் செய்கிறேன். என்னுடைய பலம் பொருந் திய கைகளும் உன் எதிரேதான் தொங்குகின்றன. ஓங்கி அறைய நேரமா பிடிக்கும்? அல்லது தாய் என்ற வெறும் சொல் என்னைத் தடுக்கப்போகிறதா? ஒரே அறை கொடுத் தால் செத்துக் கீழே விழுவாய். இராமனின் நினைப்பு என் நெஞ்சில் நின்றல்லவா தடுக்கிறது என்றான். கைகேயி இரா மனுக்குத் தீமை செய்தாள்; இராமன் வாழ்த்திவிட்டுப் போய்விட்டான்; இப்போது அவன் இங்கேயில்லை. என் றாலும் அவனுக்கு ஈடுபட்ட பரதனின் மனம் இங்கே இருக் கிறது. அம் மனத்திலுள்ள இராமன் இவளைக் காக்கிறான் என்ற தத்துவம் உணரத்தக்கது. 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு' (திருக் குறள் 987) என்ற இராமனது உயர்குணம் நினைப்பாரையும் அவ்வழி நிறுத்துகிற தென்க. 'தாய் எனும் பெயர் எனைத் தடுக்கற்பாலதோ?' என்றான் பரதன். பொருள் இருந்தால் தான் சொல் எனப்படும். பொருளற்ற எழுத்துச்சேர்க்கை சொல்லன்று. 'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரிற் சொல் ஆம்' (நன்னூல் 128). 'தாய்' என்பது ஒரு பெயர்ச்சொல். பெற்று வளர்த்த தாய் ஒருத்தி யிருக்கிறாள். அவளை அச்சொல் குறிக்கிறது. இங்கே தாய் என்ற சொல் லுக்கு உரியபொருளாயிருந்த கைகேயி பேயர்கிவிட்டாள்.

இப்போது தாய் என்ற சொல்லுக்குப் பொருளில்லை. தாய் என்பது பொருளிழந்த வெறும் பெயர்ச்சொல்லாக இருக்கிறது. அழகிய அரண்மனை இருந்து இடிந்து அப்புறப்படுத்தப்பட்டுக் கள்ளி முளைத்துப் பாழடைந்த இடத்தை அரண்மனை யென்றுகூறினாற்போல. "தாயைக் கொல்லக்கூடாது என்பது எனக்குத் தெரியும். தாயின்மேலே 'தாய்' என்று பெயரெழுதப்பட்டது. ஆனால் எழுதிய பெயரிருக்கத் தாய் பேயாகிவிட்டாள். பேய் ஒழிக்கப்பட வேண்டியது. அதன் மேலே முன் எழுதப்பட்ட தாய் என்ற பெயர் இருந்து என்னைத் தடுக்க முடியுமா" என்றான். தகுதியில்லாதவர் கொள்ளும் பெயரும் வேடமும் கண்டிக்கத்தக்கன என்பது மொன்று.

இது விதிக்கோளாறு! வேறென்ன?

867 மாளவும் உளன்ஒரு
மன்னன்; வன்சொலால்
மீளவும் உளன்ஒரு
வீரன்; மேயபார்
ஆளவும் உளன்ஒரு
பரதன் ஆகினுல்,
கோள்அலது அறநெறி
குறைஉண் டாகுமோ? ௬௨

(அறத்துக்கு ஊறு ஏற்படாதிருக்கும் பொருட்டு) ஒரு மன்னன் உயிரையே கொடுக்க இருந்தான்; கொடிய சொல்லை ஏற்றுக் காட்டுக்குச் செல்ல ஒரு வீரனும் இருந்தான்; கிடைத்த நிலத்தை ஆளுதற்கு ஒரு பரதன் ஏற்படுவானென்

867. மீள - திரும்பிச் செல்ல. மேய - தாய் தேடித் தந்த. கோள் - கோளாறு: இராகு கேதுக்களின் செயல்.

ருல் (அது விதியின்) கோளாறே அல்லாமல் அறநெறி குறைவுபட்டதாகிவிடுமா ? (என்ருன்).

(வி - ம்) நீ தந்திரமெல்லாம் செய்தாய். என்ன ஆயிற்று. அறந்தான் வென்றிருக்கிறது. அரசன் இறந்ததாலும் இராமன் காட்டுக்குச் சென்றதாலும் அறம் வெற்றி பெற்றிருக்கிறது. இனி மூன்ருவதாக நான் அரசை ஏற்ருல் அது விதிசெய்யும் வேடிக்கையே அல்லாமல் அறத்துக்கு ஊறு ஏற்படுமா ? விதியும் நீயும் சேர்ந்து எத்தனை சூழ்ச்சிகளைச் செய்தாலும் அறத்தை அழிக்க முடியாது என்ருன். நான் அரசாளுதல் என்ற மூன்ருவது முயற்சியிலும் அறந்தான் வெல்லும் என்பது, தானே பெறப்படும். கோள் - சந்திரனைத் தீண்டும் பாம்பு ; தீண்டினும் சிறிது பொழுதில் விழுங்க முடியாது கக்கிவிடுவதுபோல, மீண்டும் அறமே நிலைபெறு மென்றுங் கொள்ளலாம். மீட்சிப் படலத்தில், குறித்த நாளில் இராமன் திரும்பிவரவில்லை என்றதற்காகப் பரதன் தீக்குளிக்க முற்பட்டு, சத்துருக்கனை நோக்கி அரசை ஏற்றுக்கொள் என்றபோது, அவன், 'கானுள நிலமகளைக் கைவிட்டுப் போவானைக் காத்துப் பின்பு, போனும் ஒரு தம்பி, போனவர்கள் வருமவதி போயிற்றென்று, ஆனுத உயிர்விடவென் றமைவானும் ஒரு தம்பி அயலே நானுது, யானுமிவ் அரசாள்வென் என்னே இவ் அரசாட்சி இனிது நன்றே' என்று கூறினன் என்பது நோக்கத்தக்கது. தவம் செய்து பெறக்கூடிய செல்வம் வந்து பொருந்த, அதை விட்டுத் தவத்துக்குத் திரும்பியதால் மீள எனப்பட்டது. சத்தியத்தை நோக்கி உயிரைக் கொடுத்ததால் மன்னன் என்றும், தியாகம் செய்து வனமேகியதால் வீரன் என்றுங் கூறினன். 'பரதன்' என்று தன் பெயரையே சொன்னது, தன்னைக் காட்டிலும் இழிவான வேறு ஒரு பொருள் இலை கூறுதற்

குக் கிடையாது என்ற ஆத்திரத்தில் சொன்னதாம். 'வாதுனில் ஒளிபெற வளர்ந்த தொல்குலம், பரதன் என்றொரு பழிபடைத்த தென்னுமால்' (பாடல் 873) என வருதலும் நோக்கத்தக்கது.

பரதன் கோசலை இடம் செல்லல்

868 இன்னணம் இனையன
இயம்பி, 'யானும்இப்
பன்னரும் கொடுமனப்
பாவி பாடிரேன்;
துன்னரும் துயர்கெடத்
தூய கோசலை
பொன்அடி தொழுவென்;' என்று
எழுந்து போயினன். சஅ

இவ்வாறு மேலே சொன்னபடி சொல்லிவிட்டு, சொல்ல முடியாத இந்தக் கொடிய மனத்தையுடைய பாவியின் அருகில் யான் இருக்கமாட்டேன்; அடையமுடியாத துன்பம் நீங்குமாறு பரிசுத்தமான கோசலையின் பொன்போன்ற பாதங்களை வணங்குவேன் என்று (அவ்விடத்தை விட்டு) எழுந்து சென்றான்.

(வி - ம்) இங்கே இருக்க இருக்கக் கோபமும் ஆத்திரமும் துன்பமும் பெருகின. ஆற்றிக்கொள்ள அரசனுமில்லை; இராமனுமில்லை; எனவே சோசலையிடம் செல்லலாமென்று கருதிச் சென்றான். இங்கே கைகேயி 'பன்னரும் கொடுமனப் பாவி' எனப்படுகிறாள். முன்பு 'துன்னருங் கொடுமனக்கூனி தோன்றினாள்' (பாடல் 461) என்றதிலுள்ள ஒற்றுமை நயம் காணத்தக்கது.

---

868. பன்ன அரும் - சொல்லுதற்கு அருமையான. பாடு - பக்கம். துன்னுதல் - அடைதல்.

காலைக் கட்டிக்கொண்டு அழுகிறான்

869 ஆண்தகை கோசலை
அருகர் எய்தினன்;
கீண்டுமண் கிழிதர
வீழ்ந்து, கேழ்கிளர்
காண்தகு தடக்கையில்
கமலச் சீறடி
பூண்டனன், கிடந்தனன்,
புலம்பி னான்அரோ. ௯௯

ஆணிற் சிறந்த பரதன் கோசலையின் அருகே சென்றான்; தரை வெடித்துக் கிழியும்படி விழுந்து ஒளி விளங்குகிற காணத் தகுந்த (அழகுள்ள) விசாலமான கைகளினால் தாமரை மலர் போன்ற (கோசலையின்) சிறிய பாதங்களைப் பிடித்துக்கொண்டு கிடந்து புலம்பினான்..

(வி - ம்) பரதன் விழுந்த அதிர்ச்சியில் பூமியே பிளந்துபோனமாதிரி தோன்றியது. கோசலையின் சிறிய பாதங்களைத் தன்னுடைய பெரிய கைகளால் பிடித்துக் கொண்டான்; பிடித்தபடியே கிடந்தான்; கிடந்தபடியே புலம்பினான் என்க.

தந்தை எங்கே? தமையன் எங்கே?

870 எந்தைஎவ் வுலகுஉளான்?
எம்முன் யாண்டையான்?
வந்தது தமியென்இம்
மறுக்கம் காணவோ?

---

869. ஆண் தகை - ஆண்களில் தகுதியுள்ளவன். அருகர் - அருகு. கேழ் - ஒளி: தளதளப்பு. கமலம் தாமரைப்பூ. சீறடி - சிறிய அடி. கீள்தல் - உடைதல்.

சிந்தையின் உறுதுயர்
தீர்த்தி ரால் !எனும்
அந்தரத்து அமரரும்
அழுது சோரவே. ௬௫

என் தந்தை எந்த உலகத்திலிருக்கிறுன்? என் அண்ணன் எவ்விடத்திலிருக்கிறுன்? நான் வந்தது இந்தக் கலக்கத்தாலாகிய துன்பத்தைக் காண்பதற்காகவா? என் மனத்தில் வந்து பொருந்தியுள்ள துயரத்தைத் தீர்க்கமாட்டீரோ? என்று மேலுலகத்திலுள்ள தேவர்களும் அழுது சோரும் படி கூறினன்.

(வி-ம்) இங்கு வந்து காண நினைத்த இருவரும் இல்லையாதலால் தன்னைத் 'தமியன்' என்றுன். அவர்களைக் கண்டு அவர்களோடு மகிழ்ந்திருக்கலா மென்றல்லவா வந்தேன் என்றபடி. 'தாள் நிலா மலர் தூவினன் தம்முனைக், காணலாமெனும் ஆசை கடாவவே' (பாடல் 832) என்றது காண்க. தயரதன் இறந்து போனுன் என்பது பரதனுக்குத் தெரிந்ததுதான். எனினும் இங்கே, 'எந்தை எவ்வுலகுளான்' என்று கேட்கிறுன். புதியவரைக் காணும்போது இறந்தவனைக் குறித்து 'எங்கே போய்விட்டான்' 'எவ்வுலகிலிருக்கிறுன்' என்று கேட்பது மரபாம். இவ்வாறே (பாடல் 878, 1002) பல இடங்களிலும் வருவதறிக.

---

870. யாண்டை - எவ்விடம். தமியன் - தனிப்பட்ட நான். மறுக்கம் - நிலைகொள்ள முடியாத துன்பம். உறு - வந்து பொருந்திய. தீர்த்திரால் - தீர்ப்பீராக. அந்தரம் - மேலுலகம்.

நீராவது பிடித்து நிறுத்தக்கூடாதா?

871 அடித்தலம் கண்டிலென்
யான்என் ஐயனை!
படித்தலம் காவலன்
பெயரற் பாலனோ!
பிடித்திலிர் போலும்நீர்!
பிழைத்தி ரால்!எனும்;
பொடித்தலம் தோள்உறப்
புரண்டு சோர்கின்றான். ௭௬

என்னுடைய தந்தையின் திருவடிகளை யான் காண முடியவில்லை; இராமன் மண்ணிலே நடந்து போகத்தக்கவனோ? நீர் பிடித்து நிறுத்தவில்லை போலிருக்கிறது. பிழை செய்துவிட்டீர் என்பான்; புழுதி மண் தோள்களிற் படியும் படி புரண்டு தளர்கிறான்.

(வி - ம்) தந்தையைக் காண முடியாமற் போய்விட்டதே என்றான். அண்ணனைக் காலால் நடக்க விடலாமா? நீர் கட்டிப் பிடித்துக்கொண்டால் எப்படிப் போவான்? அப்படிச் செய்யாமல் தவறிப் போய்விட்டீரே என்றான். செய்வதின்னதென்று தெரியாமல் கிடந்து புரண்டு தவித்தான்.

---

871. அடித்தலம் - பாதமாகிய இடம். ஐயன் - தந்தை படித்தலம் - நிலம். காவலன் - அரசன்: இராமன். பெயரல் - போதல். பெயரற் பாலனோ - போகும் தகுதியுடையவனோ? பிழைத்தீர் - தவறிவிட்டீர். பொடி - புழுதி.

பாவி வயிற்றிற் பிறந்த பாவி

872 கொடியவர் யாவரும்,
குலங்கள் வேர்அற
நொடிகிலர்; யான்அது
நுவல்வது எங்ஙனம்?
கடியவள் வயிற்றினில்
பிறந்த கள்வனேன்!
முடிகிலென்! அருந்துயர்
முடிய! என்னுமால். சஎ

இந்தக் கொடுமைக்குக் காரணமாக இருந்த எல்லாரும் குலத்தோடு ஒழிந்தாரில்லை. நான் அதை எடுத்துப் பேசுவது எவ்வாறு? கொலைகாரியின் வயிற்றினில் பிறந்த வஞ்சகனாகிய நான் இந்த அருந்துன்பந் தீருமாறு செத்தேனில்லையே என்பான்.

(வி - ம்) அரசன் மாளவும் இராமன் காடுசெல்லவுமான கொடுமையைச் செய்த யாவரும் அடியோடு ஒழிய வேண்டாமா? நான் சொல்ல என்ன இருக்கிறது. முதற் காரணமாக இருந்த பாவியின் வயிற்றிற் பிறந்த நான் சாகவில்லையே. நான் ஏற்கெனவே செத்திருந்தால் இத்தனை துயரமும் உண்டாகியிராதே என்று புலம்பினான். 'தான் பிறந்ததே தீமைக்குக் காரணமானபடியால் தான் இறந்தொழிதலே தகுதி' என்று தோன்றுகிறது. ஆனால் உயிர் போகவில்லை. அவ்வாறு போகாத வழி மனம் வேறு, செயல் வேறாகிறது. எனவே தன்னை வஞ்சனை உள்ளவன் என்று கருதுகிறான், தான் இறந்தால் இத்தனை கொந்தளிப்பும் அடங்கிப் பழைய நிலை ஏற்படக்கூடுமென்று நினைக்கிறானாதலால் 'அருந்துயர் முடிய முடிகிலென்' என்றான்.

---

872. நொடிதல் - அழிதல். கடியவள் - கடிந்து ஒதுக்கத் தக்கவள். கள்வன் - மனத்திற் களங்கமுள்ளவன். முடிதல்-சாதல்.

என்னாலே பழிவந்து விட்டதே !

873 இரதம்ஒன்று ஊர்ந்துபார்
இருளை நீக்கும்அவ்
வரதனில், ஒளிபெற
வளர்ந்த தொல்குலம்,
பரதன்என்று ஒருபழி
படைத்தது என்னுமால் ;
மரகத மலைஎன
வளர்ந்த தோளினான். ௪அ

ஒரே தேரில் ஏறிவந்து உலக இருட்டை நீக்குகிற அந்தச் சூரியனைப்போல, வளர்ந்து வந்த பழைமையான இந்த அரச பாரம்பரையானது, பரதன் என்ற ஒரு பழியைப் பெற்றுவிட்டது என்று, மரகத மலையைப்போல் வளர்ந்த தோள்களையுடைய பரதன் கூறினான்.

(வி - ம்) பழிக்குக் காரணமான தன்னைப் பழி என்றே கூறினான்.

தருமமே அனைய பரதன்

874 வாள்தொடு தானையான்
வானில் வைகிட,
காடுஒரு தலைமகன்
எய்த, கண்ணிலா

873. வரதன் - சூரியன். தொல் - பழைய. குலம் - பரம்பரை. பழி - நிந்தை. மரகதம் - பச்சைக் கல்.

874. தானை - சேனை. வைகுதல்-இருத்தல். ஒரு - ஒப்பற்ற. தலைமகன் - மூத்த மகன். கண்இலா - பார்வையற்ற : குருடான. நைதல் - வருந்துதல்.

நாடுஒரு துயரிடை
நைவ தே !எனும் ;
தாள்தொடு தடக்கைஅத்
தருமமே அனன். ௪௬

முழந்தாளைத் தொடுகிற நீண்ட கைகளையுடைய தரும தேவதையைப் போன்ற பரதன், வாள் பிடித்த சேனையையுடைய மன்னன் மேலுலகில் சேரவும், ஒப்பற்ற மூத்தமகன் காட்டை அடையவும், இருகண்களையும் இழந்த நாடு ஒரே துன்பத்தில் பட்டு நைந்துகிடப்பதா என்றான்.

(வி - ம்) அரசு புரிந்தவனும் அரசுபுரிய வேண்டிய வனுமாகத் தகுதிவாய்ந்த இருவரிருந்தனர். அவ்விருவரை யும் ஒரே பொழுதில் பிரிந்து வருந்துகிற நாட்டை நினைத் தான். ஆதரவற்று மேற்செல்லும் நெறியறியாமல் மக்கள் தவிப்பதா என்று நிலையாக நின்றுவிட்டான். இதுவரை அவன்பட்ட வருத்தம் ஏக்கம் புலப்பம் யாவற்றுக்கும் நாட்டு மக்களின் துன்ப நினைப்பு மேலே போய்விட்டது. ஒரே கருணைவடிவமாய்விட்டான். ஆதலின் ‘ தருமமே அனன் ’ எனப்பட்ட தென்க.

கோசலை துயரம்

875 *தூய வாசகம்
சொன்ன தோன்றலை,
தீய கானகம்
திருவின் நீங்கிமுன்

---

875. தோன்றல் - மகன் : பரதன். திருவின் - செல்வத்தி னின்றும். பொம்மல் - விளக்கமுறுதல். ஆய - பெருகிய. புல்லு தல் - தழுவுதல்.

போயி னுன்வரக்
கண்ட பொம்மலாள் ;
ஆய காதலால்
அழுது புல்லினுள். ௫௦

உளத் தூய்மையோடு களங்கமற்ற சொற்களைச் சொன்ன மகனை, கொடிய காட்டுக்குச் செல்வத்தைவிட்டு நீங்கி முன்னர்ச் சென்ற இராமன் திரும்பிவரக் கண்டதுபோன்ற உணர்ச்சி யுடையவளாய், பெருகிய அன்பினுல் அழுது கொண்டே தழுவினுள்.

(வி - ம்) பரதனுடைய துடிக்கும் தோற்றமும், வருத்தம் நிறைந்த உள்ளமும், களங்கமற்ற பேச்சும் அவன் அரசு பெற நினைந்தானில்லை என்பதைத் தெளிவுபடுத்தின. இவனுடைய தூய்மையையும், பெருகிய அன்பையும், தீராத் துயரத்தையும் கண்ட கோசலை இராமன் காட்டுக்குச் சென்றுனென்ற துயரம் ஆறினுள் போலாயினுள். பொம்மலாள் என்பது துயரினின்று சற்று விலகி என்ற பொருளில் நிற்கிறது. மகிழ்ச்சிக்கு இடமொன்று மில்லை. ஒரே துக்கத்திலிருப்பவர் ஒரு மாற்றத்திற்கு இடம் பெற்ருல், தொடர்ந்த துன்பத்தினிடையே சிறிது உணர்ச்சி பெறுவர். அதைத் தான் இங்கே பொம்மல் என்ருரென்க.

மன்னர் மன்னவா ?

876 முன்னை நும்குல
முதல்உ ளோர்கள்தாம்,
நின்னை யாவரே
நிகர்க்கும் நீர்மையார் ?

876. முதல் உளோர் - முதன்மை பெற்றுள்ளவர். யாவரே தாம் - எவர்தாம் : (அழுத்தமாக, ஒருவருமில்லை என்றபடி) நீர்மை-தன்மை. உன்ன - நினைக்க.

மன்னர் மன்னவா !
என்று வாழ்த்தினுள் ;
உன்ன உன்னநைந்து
உருகி விம்முவாள். ருக

பரதனின் உயர்ந்த குணத்தை நினைக்க நினைக்க மனம் நைந்து உருகி விம்மி யழுதுகொண்டே கோசலையானவள், “ முற்காலந்தொட்டு உங்கள் குலத்தில் முதன்மை பெற்றவர் களில் யாவர்தாம் உன்னை ஒத்த தன்மையுள்ளவர் !’ (எவரு மில்லை) ‘ மன்னர் மன்னவா ’ என்று வாழ்த்தினுள்.

(வி - ம்) கோசலைக்கு ஏற்பட்ட ஈடுபாட்டில் நீதான் சக்கரவர்த்தி என்று வாயார வாழ்த்தினுள். பரதன் முடிசூடு கிறுன் என்று இராமன் கூறியபோது ‘நிறை குணத்த வன் நின்னினும் நல்லனுல்’ (பாடல் 572) என்ற கோசலை, இப்பொழுது பரதனின் அளவுகடந்த மேலான குணத்தை யறிந்ததும் இதற்கு முன் உள்ளவர்களெல்லாரும் இவனுக்குக் கிட்ட நெருங்கவும் முடியாதென்று தோன்றவே, “ அவர்களென்ன ? நீதான் உண்மையான சக்கரவர்த்தி ’ என்றுளென்க.

அங்கே வசிட்டர் வருதல்

877 உன்ன உன்னநைந்து
உருகி, அன்புகூர்
அன்னை தாளின்வீழ்ந்து
இளைய அண்ணலும்,
சொன்ன நீர்மையால்
தொழுது மாழ்கினுன் ;
இன்ன வேலைவாய்
முனிவன் எய்தினுன். ருஉ

---

877. அண்ணல் - ஆணிற் சிறந்தோன். மாழ்குதல் - கலங்கு தல். வேலை - நேரம்.

நினைக்க நினைக்க நைந்து உருகுகின்ற அன்புமிகுந்த தாயின் பாதங்களில் பரதன் விழுந்து வணங்கி அவள், 'மன்னர் மன்னவா' என்று சொன்ன தன்மையை எண்ணி மனங் கலங்கி நின்றான். இந்த நேரத்தில் வசிட்ட முனிவர் வந்து சேர்ந்தார்.

(வி - ம்) கணவனாகிய மன்னனையும் ஒப்பற்ற மகனாகிய இராமனையும் பறிகொடுத்துவிட்டு, இரு கொடுமைக்கும் காரணமாகவுள்ள தன்னைநோக்கி 'மன்னர் மன்னவா' என்று சொல்கிறாளே என்று கலங்கிப்போனான். பரதனது தூய மனத்தை அறிந்ததும் பரதனைத் தவிர வேறு யாருமே மன்னர் மன்னனாகத் தகுதியுள்ளவர் இலர் என்று கோசலை கருதினாள். ஆனால் பரதனோ, தான் அரசை ஏற்றுக்கொண்டு விட்டதாக எண்ணியே அவள் சொல்கிறாள் என்று கருதி விட்டான்.

என் தந்தை எங்கே?

878 வந்த மாதவன்
    தாளில் வள்ளல்வீழ்ந்து
எந்தை யாண்டையான் ?
    இயம்பு வீர்என
நொந்து மாழ்கினான் ;
    நுவல்வது ஓர்கிலா
அந்த மாதவன்
    அழுது புல்லினான். ருடு

வந்த மாதவனுடைய பாதங்களில் வள்ளலான பரதன் விழுந்து என் தந்தை எங்கேயிருக்கிறான் சொல்லுவீராக

878. யாண்டையான் - எங்கே யிருக்கிறான். மாழ்கினான் - வசமழிந்தான். நுவல்வது - சொல்வது.

என்று கேட்டுத் துன்பப்பட்டு, அத் துன்பத்திலேயே முழுகிப்போனான். பதில் சொல்வதற்கு ஒன்றுந் தோன்றாமல் அந்தப் பெரிய தவமுனிவர் அழுது பரதனைக் கட்டிக் கொண்டார்.

பரதன் அரசன் உடலைக் காணல்

879 அன்னை ஏவினாள் ;
அடி இறைஞ்சினான் ;
பொன்னின் வார்சடைப்
புனித னோடும்போய்,
தன்னை நல்கிய
தருமம் நல்கினான்
பன்னு தொல்அறப்
படிவம் நோக்கினான். ௫௪

தாய் கட்டளையிட்டாள் ; அவளுடைய பாதங்களில் வணங்கினான் ; பொன்நிறமான நீண்ட சடையையுடைய புனிதமான வசிட்டருடன் சென்று, தன்னைப் பெற்றவனும் அறத்தை நிலைநிறுத்தியவனுமான அரசனது, சிறப்பித்துச் சொல்லப்படுகிற பழைய அறத்தின் வடிவம்போன்ற உடலைப் பார்த்தான்.

(வி - ம்) தன்னை நல்கிய தயாதன் ; தருமத்தை நல்கினானாய தயாதன் ; அவனது சிறப்பித்துச் சொல்லப்பட்ட பழைய அறத்தின் வடிவம்போன்ற உடலைக் கண்டான் என முடிக்க.

---

879. வார் - நீண்ட. பன்னு - சிறப்பித்துச் சொல்லப்படும். படிவம் - வடிவம்.

கண்ணீரால் கழுவினன்

880 மண்ணின் மேல்விழுந்து
அலறி மாழ்குவான்;
அண்ணல் ஆழியான்,
அவனி காவலான்,
எண்ணெய் உண்டபொன்
எழில்கொள் மேனியை,
கண்ண நீரினல்
கழுவி ஆட்டினன். ௫௫

நிலத்தில் விழுந்து அலறித் துன்பப்பட்டவனுகி, அண்ணலான சக்கரவர்த்தியும், உலகைக் காப்பாற்றியவனுமான தயரதனது, எண்ணெயில் இடப்பட்டதும் பொன்போல அழகியதுமான உடலைத் தன் கண்ணீரினல் கழுவி நீராட்டினன்.

(வி - ம்) எண்ணெய்க் காப்பிட்ட உடலை நீரில் முழுக்காட்டுதல் இயல்பு. இங்கே அன்புப் பெருக்கமான கண்ணீரில் முழுக்காட்டினன் என்ருர். 'தையற்கடல் நின்று எடுத்து அவனைத் தைலக் கடலின் தலை உய்த்தார்' (பாடல் 745). இப்போது தைலக்கடலிலிருந்து எடுத்துக் கண்ணீர்க் கடலில் ஆட்டினன் என்க.

அரசன் உடலை விமானத்தேற்றல்

881 பற்றி அவ்வயின்
பரிவின் வாங்கினர்
சுற்று நான்மறைத்
துறைசெல் கேள்வியார்,

---

880. அவனி - பூமி. காவலான் - காப்பாற்றியவன். கண்ண நீர் - கண்ணீர். ஆட்டுதல் - குளிப்பாட்டுதல்.

881. வயின் - இடம். பரிவு - வருத்தம். துறை - வழி. கொற்றம் - வீரம். மண்கணை-முரசு. மானம்-விமானம். மற்று-அசை.

கொற்ற மண்கணை
குமுற மன்னனை
மற்றோர் பொன்னின்மா
மானம் ஏற்றினர். ௫௬

நாலு வேத வழிகளிலும் சென்றறிந்த கேள்வியை யுடையவர்கள் அவ்விடத்தினின்று சூழ்ந்து பற்றி மனவருத் தத்துடனே தூக்கி யெடுத்து, வெற்றி வீரனுக்கு முழக்கப் படும் பிணமுரசு, மேக முழக்கம் போல் குமுற, மன்னனைப் பொன்னாலான பெரிய விமானத்திலே ஏற்றினர்கள்.

(வி - ம்) எண்ணெயிலிடப்பட்ட அரசனது உடலைச் சுற்றத்தாரே யன்றி வேத உண்மையினை அறிந்த பேரறிஞர் களும் முன்னின்று தூக்கி விமானத்தில் சேர்த்தார்கள். மண் கணை என்றது தோற்கருவி வகையை. முரசு என்பதொரு பொதுச்சொல். மணம், இழவு, போர், வெற்றி, தோல்வி என்ற பலவேறு நிகழ்ச்சிகளைத் தனிப்படுத்திக் காட்டும் வகையில் முரசங்களின் உருவ வேறுபாடும் ஒலி வேறுபாடும் உள்ளன. இங்கே வீரனின் பிணச் சடங்கிற்கு ஒலிக்கும் முரசு ‘மண்கணை’ என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

சரயு நதியை அடைதல்

882 மாவும் யானையும்
வயங்கு தேர்களும்
கோவும் நான்மறைக்
குழுவும் முன்செல,

---

882. மா - குதிரை. வயங்கு - விளங்குகிற. கோ - மன்னர். குழு - கூட்டம். தெண் - தெளிவு. திரை - அலை. தாவுதல் - புரண்டு மடங்குதல். வார் - நீண்ட.

தேவி மாரொடும்
கொண்டு தெண்திரை
தாவு வார்புனற்
சரயு எய்தினர். ௫எ

குதிரைகளும், யானைகளும், விளங்குகின்ற தேர்களும், அரசரும், நால்வேத மறிந்தோர் கூட்டமும் முன்னே செல்ல, அறுபதாயிரம் தேவிமாருடன் விமானத்தை நடத்திக் கொண்டு தெளிந்த அலைகள் புரளுகின்ற மிக்க நீரையுடைய சரயு நதியை அடைந்தனர்.

இருந்தோர் பரதனைக் கடன்கழிக்க ஏவுதல்

883 எய்தி, நூலுளோர்
மொழிந்த யாவையும்
செய்து, தீத்தலம்
திருத்திச் செல்வனை
வெய்தின் ஏற்றினர் ;
'வீர ! நுந்தைபால்
பொய்யில் மாக்கடன்
கழித்தி போந்து' என்றனர். ௫அ

சரயு நதியை அடைந்து நூலறிந்தவர் செய்யவேண்டு மென்று சொல்லப்பட்டவைகளைச் செய்து, சிதையைச் செப்பம் செய்து, தயரதனின் உடலை துக்கத்துடன் (சிதையின் மீது) சேர்த்துவிட்டு, (பரதனைச் சார்ந்து) வீரனே! உன் தந்தையின் உடல் இருக்கும் இடத்திற்கு வந்து குற்றமற்ற உரிய கடமையைச் செய்க என்று கூறினர்.

---

883. நூலுளோர் - நூல்களை அறிந்தவர். தீத்தலம் - பிணத்தைக் கிடத்திச் சுடுவிக்கும் சிதை. திருத்தி - செம்மைப்படுத்தி. செல்வன் - தயரதன் (இந்திர திருவன் ஆதலால்). வெய்து-துக்கம். நுந்தை - உன் தந்தை. மாக்கடன் - கொள்ளிவைத்தல்.

(வி - ம்) பெற்ரோர்க்குச் செய்யும் இறுதிக் கடன் மக்களுக்கு இன்றியமையாக் கடன் ஆதலால் 'மாக்கடன்' என்ருர்.

பரதனை வசிட்டர் தடுத்தல்

884 என்னும் வேலையில்
எழுந்த வீரனை,
'அன்னை தீமையால்
அரசன் நின்னையும்
துன்னு துன்பத்தால்
துறந்து போயினன்
முன்ன ரே'என
முனிவன் கூறினன். ௫௬

என்று சொன்னபோது, எழுந்த பரதனை, 'உன் தாய் செய்த கொடுமையினலே அரசன் மிகுந்த துன்பத்தை யடைந்து, முன்னமேயே உன்னையும் வெறுத்து (ஒதுக்கி விட்டு) இறந்தான்' என்று வசிட்ட முனிவர் சொன்னர்.

(வி - ம்) முனிவர் பரதனை முதலில் கண்டபோதே, ஈமக்கடன் செய்யக்கூடா தென்று பரதன் விலக்கப்பட்டுள்ள செய்தியைக் கூறி யிருக்கலாகாதோ எனின், ஆகாதென்க. அரசியல் திறமையுடையோர் காலம் அறியாமல் எதையுங் கூறுதல் ஆகாது. முன்னமேயே சொல்லியிருந்தால் இதைப் பற்றி ஒரு பேச்சு எழுந்து வளரும். மக்கள் உள்ளம் பல வாறு பிளவுபடக்கூடும். எந்தப் பேச்சுக்கும் இடமின்றி அரசனது உடல் வந்து சேர்ந்த பின்னர் சொல்லியதே திறமை யுடையதாம். அவசரத்தில் ஈமம் நடைபெறுமிடத் தில், எந்தக் கருத்துக்கும் இடந்தராமல் வந்த காரியத்தைப்

884. வேலை - பொழுது. வீரன் - பரதன். துன்னுதல்- நெருங்குதல்.

பெருமையுடன் நிறைவேற்றவே பலரும் எண்ணுவர் என்பது உணரத்தக்கது. நின்னையும் என்றதிலுள்ள உம்மையால் கைகேயியையும் என்பது பெறப்படும். எவராலும் எதிர்த்துத் தடுக்க முடியாதவனாதலின் வீரன் எனப்பட்டான். விதிவசத்தால் இங்கே பின்வாங்க நேர்ந்ததென்பது குறிப்பிடத்தக்காம்.

தாங்க முடியாத துயரம்

885 இடிக்கண் வாள்அரா
இடைவ தாம்எனா,
படிக்கண் வீழ்ந்துஅகம்
பதைக்கும் நெஞ்சினன்,
தடுக்க லாகலாத்
துயரம் தன்னுளே
துடிக்க, விம்மிநின்று,
அழுது சொல்லுவான். ௬௦

இடி இடிக்கும்போது ஒளிபொருந்திய நாகப்பாம்பு அஞ்சி நடுங்குவதைப்போல, நிலத்தில் விழுந்து உள்ளே படபடத்த நெஞ்சத்தை யுடையவனாய், தடுத்து நிறுத்த முடியாத துயரம் தன்னுள்ளே துடிக்க, பொருமி நின்று அழுதவண்ணம் சொல்கிறான்.

பெற்றவள் செய்த உதவியா?

886 துன்னு தாள்வளம்
சுமந்த தாழையில்,
பன்னு வான்குலைப்
பதடி ஆயினேன்;

---

885. அரா - பாம்பு. இடைதல்-அஞ்சி நடுங்குதல். படி-பூமி.
886. தாழை - தென்னை. பன்னு - பொருந்தி நெருங்கிய. பதடி - பதர். ('மக்கட் பதடி எனல்' - திருக்குறள் 196) செய்தவா-செய்தவாறு : செய்தவிதம்.

என்னை என்னையே
ஈன்று காத்தஎன்
அன்னை யார்எனக்கு
அழகு செய்தவா. சுக.

பொருந்திய தாளிலிருந்து வளத்தைப் பெற்று நிற்கும் தென்னை மரத்தில் பொருந்திய, உயர்ந்த குலையிலுள்ள ஊமைக்காயைப்போல ஆய்விட்டேன். என்னைப்பெற்று வளர்த்த என் தாயார் எனக்கு அழகு செய்த விதம்...... (அடடா)

(வி - ம்) தென்னைமரம் வளமாக வளர்க்கப்பட்டிருக்கும். உயர்ந்து நிற்பதிலும் குறையில்லை. குலையும் போடும். ஆனால் அந்தப் பெருங்குலையில் இரண்டொரு காய், என்றோ ஒரு காலத்தில் ஊமைக்காயாகப் போவதுமுண்டு. ஊமைக்காயென்பது வெளியே தென்னங்காயாகவே இருக்கும். உள்ளே ஒன்றுமிராது. அவ்வாறு பயனற்றவனானேன் என்று வருந்தினன் என்றவாறு. என்னை ! என்னையே ! என்றது விம்மிப் பொருமுவதால் வந்த அடுக்கு. ஈன்று காத்த—என்—அன்னையார்— எனக்கு—அழகு— செய்தவா என்று விட்டுவிட்டுப் பொருமிப் பொருமி அழுதுகொண்டே உரைத்தான். ஆனால் சொல் முடியுமுன்பு பொருமலால் வாய் அடைத்துக்கொண்ட தென்க. பரதன் என்செய்வான்? தந்தை எங்கே? இறந்தான். அண்ணனெங்கே? வனவாசம் பொய்விட்டான். ஏன் நடந்தது? நான்தான் நடத்தினேன். ஏன் நடத்தினாய்? உனக்கு முடிசூட்ட. இப்படி ஒன்றன்மேலொன்றாகக் கேட்டு நைந்து தேய்ந்த அவன், சுடுகாட்டில் கொள்ளிவைக்க எழுந்தபோது நீ உன் தகப்பனுக்கு மகனல்ல என்ற சொல்லைக் கேட்டானென்றால் எப்படியிருக்கும்?

சத்துருக்கன் ஈமக்கடன் ஆற்றுதல்

887 என்று கூறி,நொந்து,
இடரின் மூழ்கும்அத்
துன்று தாரவற்கு
இளைய தோன்றலால்,
அன்று நேர்கடன்
அமைவது ஆக்கினன்;
நின்று நான்மறை
நெறிசெய் நீர்மையான். ௮௭

நான் மறையின் முறையில் நின்று வழி செய்கின்ற தன்மையையுடைய வசிட்டர், மேற்கண்டவாறு சொல்லி நொந்துபோய்த் துன்பத்தில் முழுகி நிற்கும் மாலை பொருந்துதற்கு உரிய அப் பரதனுக்கு இளைய தோன்றலாகிய சத்துருக்கனைக்கொண்டு அன்று செய்யவேண்டிய கடன்களைச் செய்து முடித்தார்.

தாமரைக் காட்டில் புகுந்த அன்னக்கூட்டம்

888 இழையும் ஆரமும்
இடையும் மின்னிடக்
குழையும் மாமலர்க்
கொம்ப னார்கள்தாம்,
தழைஇல் முண்டகம்
தழுவு கானிடை
நுழையும் மஞ்ஞைபோல்
எரியின் மூழ்கினார். ௮௮

887. இடர் - துன்பம். அமைவது ஆக்கினன்-பொருந்துமாறு செய்தான். நீர்மையான் - தன்மையையுடையவன்: வசிட்டர்.

888. இழை - அணிகள். ஆரம் - வடம். குழைதல்-துவளுதல். தழை இல் - இலை இல்லாத. முண்டகம்-தாமரைப்பூ. மஞ்ஞை-மயில்.

நகைகளும் பொன்வடமும் இடையும் மின்னலைப்போல் விளங்க, மிகுந்து பூத்து வளைந்து துவளும் பூங்கொம்பு போன்ற தேவிமார், இலைகளில்லாத தாமரைப் பூக்கள் நிறைந்த காட்டினிடையே நுழைகின்ற மயில்களைப்போல (கணவனுடல் எரிகின்ற) நெருப்பில் விழுந்து முழுகினார்கள்.

(வி - ம்) இழையும் ஆரமும் மின்னின; இடை மின்னலைப்போலத் தோன்றியும் மறைந்தும் திகழ்ந்த தென்க. பிள்ளைப் பேறில்லாத பெண்கள் அறுபதினாயிரவரும் தீக் குளித்தனர். கணவன் இறந்தபிறகு கற்புடைய பெண்கள் உயிர் வாழ்தலை விரும்பார். எனவே தானே உயிர் பிரியப் பெறுவர். அவர் கோப்பெருந் தேவி போல்வார். அவ்வாறு உயிர் பிரியப் பெறாதவர் தீப் பாய்வர். அவர் நெருப்பில் தாமரைக் குளத்தில் மூழ்குவார்போல் மூழ்குவர். உடலின் பற்றற்று மனம் வேறாகப் பிரிந்து போவாராதலின் இவர் நெருப்பின் சூட்டை உணர்வதில்லை. ‘பெருங்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற, வள்ளிதழவிழ்ந்த தாமரை, நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே’ (புறநா—246) ‘காதலன் வீயக் கடுந்துயர் எய்திப், போதல் செய்யா உயிரொடு புலந்து, நளியிரும் பொய்கை ஆடுநர்போல, முளிஎரிப் புகூஉம் முதுகுடிப் பிறந்த, பத்தினிப் பெண்டிர்’ (மணிமே 18) என வந்தனவுங் காண்க. தழைஇல் தாமரை - இல் பொருள் உவமை. இலைகளில்லாமல் குளம் நிறையத் தாமரை பூத்திருப்பதைப்போல நெருப்பு எரிகிற தென்றவாறு.

10. ஆற்றுப் படலம்

[பரதன் சித்திரகூடத்துக்கு வழி நடந்து சென்றதைக் கூறும் படலம். ஆறு - வழி.]

யாவரும் பரதனைச் சூழ்தல்

889 *மந்திரக் கிழவரும்,
நகர மாந்தரும்,
தந்திரத் தலைவரும்,
தரணி பாலரும்,
அந்தர முனிவரோடு
அறிஞர் யாவரும்,
சுந்தரக் குரிசிலை
மரபிற் சுற்றினர். க

மந்திரிமார்களும், நகரத்தின் பிரதிநிதிகளும், சேனைத் தலைவர்களும், சிற்றரசர்களும், தெய்வத்தன்மை பொருந்திய முனிவர்களும், அறிவு நிரம்பிய பெரியோர் யாவரும் அழகிய பரதனை முறைப்படி சூழ்ந்தனர்.

(வி - ம்) அரசன் இறந்ததுமுதல் ஆளும் அரசனின்றி யிருப்பதால் மேல் நடக்கவேண்டிய காரியத்தை ஆலோசிக்கவே இவர்கள் வந்திருக்கின்றனர். நகரமாந்தர் என்றது நகரிலுள்ள குறிப்பிட்ட சிலரை என்க.

---

889. மந்திரம் - மந்திரிகள் சபை. கிழவர் - உரிமையுடையவர். தந்திரம் - படை. தரணிபாலர் - பூமியைக் காப்பவர்: அரசர். அந்தரம் - தெய்வத் தன்மை. மரபில் - முறைப்படி.

சுமந்திரன் வசிட்டரை நோக்கினுன்

890 சுற்றினர் இருந்துழிச்
சுமந்தி ரப்பெயர்ப்
பொற்றடம் தேர்வலான்,
புலமை உள்ளத்தான்,
கொற்றவற்கு உறுபொருள்
குறித்த கொள்கையான்,
முற்றுணர் முனிவனை
முகத்து நோக்கினுன். உ

சூழ்ந்து இருக்கும்போது, சுமந்திரன் என்ற பெயரை யுடையவனும் அழகிய பெரிய தேரைச் செலுத்துபவனும், புலமைத் தன்மையுள்ள உள்ளமுடையவனும் அரசர்க்குப் பொருந்திய பொருளையே குறியாகக் கொண்டவனுமான (சுமந்திரன்) யாவற்றையும் உணர்ந்தவரான வசிட்டமுனிவரின் முகத்தை நோக்கினுன்.

(வி - ம்) பொற்றடந் தேர் - அரசனுடைய தேர். இச் சுமந்திரன் அரசனின் தேரை ஓட்டிச்செல்வான் ; மந்திரி சபைத் தலைவனும் ஆவான். 'எல்லோரும் வந்து சேர்ந்து விட்டனர் ; சொல்லலாம்' என்ற குறிப்பை வசிட்டருக்கு உணர்த்தினுன் என்பார், 'முகத்தை நோக்கினுன்' என்றுர். பெரியோர் கூட்டத்திலுள்ள தகுதியுடைய ஒருவர் மற்றவரைப் பேசும்படி வெளிப்படையாகச் சொல்வது நாகரிகமன்றுதலான்.

---

890. உழி - பொழுது. தேர்வலான் - சாரதி. உறுபொருள்- பொருந்தத்தக்க காரியம். குறித்த - தேர்ந்தெடுத்த.

வசிட்டர் கூறுகிறார்

891 நோக்கினாற் சுமந்திரன்
நுவலல் உற்றதை,
வாக்கினால் அன்றியே
உணர்ந்த மாதவன்,
காக்குதி உலகம்நின்
கடன்அ தாம்எனக்
கோக்கும ரனுக்குஅது
தெரியக் கூறுவான். ௫

பார்வையினாலே சுமந்திரன் சொல்லவேண்டுமென்று கருதியதை, வாய்ச் சொல்லாலல்லாமல் உணர்ந்துகொண்ட வசிட்டர், 'உலகத்தைக் காப்பாற்றுவாயாக! அது உன் கடமையாகும்' என்று அரசகுமாரனுக்கு அது தெரியும்படி விளக்கிக் கூறலானார்.

நாங்கள் சொல்வதை எண்ணிப்பார்!

892 வேதியர் அருந்தவர்
விருத்தர் வேந்தர்கள்
ஆதியர் நின்வயின்
அடைந்த காரியம்,
நீதியும் தருமமும்
நிறுவ நீஇது
கோதுஅறு குணத்தினாய்
மனத்துட் கோடியால். ௬

---

891. நுவலல் - சொல்லல். காக்குதி - காப்பாயாக. கடன் - கடமை. கோக்குமரன் - அரச குமாரன்.

892. வயின் - இடம். நிறுவ - நிலைப்படுத்த. கோது - குற்றம். கோடி - கொள்ளுதி - கொள்வாயாக.

நூலறிவில் வல்லவர், அரிய தவம் செய்பவர், வயது முதிர்ந்தவர், சிற்றரசர் முதலிய யாவரும் உன்னிடத்து வந்ததற்கான காரியம், நீதியையும் அறத்தையும் நிலைநிறுத்து தற்காகவே யாகும். குற்றமற்ற குணத்தை யுடையவனே ! நீ இதனை மனத்தில் கொள்வாயாக ;

(வி - ம்) நாங்கள் யாவரும் ஒன்றாகச்சேர்ந்து வந்திருப் பது நல்லகாரியம்; பெரிய காரியம் ; இன்றியமையாத காரியம் என்றெல்லாம் படும்படி அடிப் படைபோட்டுப்பேச்சை முனி வர் தொடங்குகிறார். நீதியும் அறமுமே நிலைத்து நிற்கவேண்டு வன; அதன் பொருட்டே வந்திருக்கிறோம் என்றார். கோதறு குணமென்றது தள்ளுதற்கு ஒன்றுமில்லாத நற்குணமே உரு வானவன் என்றவாறு. கோது-சக்கை. 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்; பள்ளமெனும் கடலான்'(பாடல் 213) என்பர்.

ஆட்சிப்பொறுப்பில்லாத நாடு உயிரிலா உடல்

893 வள்ளுறு வயிரவாள்
அரசில் வையகம்,
நள்ளுறு கதிர்இலாப்
பகலும், நாளொடும்
தெள்ளுறும் மதிஇலா
இரவும், தேர்தரின்
உள்ளுறை உயிர்இலா
உடலும் ஒக்குமே. ௫

ஆராய்ந்தால், கூர்மை பொருந்திய உறுதியான வாட் படையை யுடைய அரசாட்சி இல்லாத உலகம், நடுவில் உறு கின்ற சூரியனில்லாத பகலையும், நட்சத்திரங்களுடன் தெளிவு

893. வாள் - கூர்மை. வயிரம் - உறுதி. வாள் - வாளினாற் போர் செய்யும் படை. அரசு - ஆட்சிப்பொறுப்பு. நள் - நடு (பல கோள்களுக்கும் நடுவிலுள்ளது). நாள்-நட்சத்திரம். தெள்-தெளிதல்.

பொருந்திய சந்திரனில்லாத இரவையும், உள்ளே பொருந்தி யிருக்கும் உயிர் இல்லாத உடலையும் ஒக்கும்.

(வி - ம்) அரசு என்பது ஆட்சி என்ற பொருளில் வந்ததாம். அரசன் உடல்; மக்கள் உயிர். 'உயிரெல்லாம் உறைவதோர் உடம்பு மாயினான்' (பாடல் 44). இங்கே உலகை உடலாகவும் ஆட்சியை உயிராகவும் சுட்டினார். மக்களின் உயிருக்கும் உயிராகப் பரந்து நின்று நீதியும் அறமும் முறைசெய்தல் வேண்டும். அந்த நீதியும் அறமுமே இங்கு ஆட்சியாகக் குறிப்பிடப்படுகின்றன. நீதியும் கடமையும் மக்களிடையே நேர்பெற நடைபெற வேண்டுமானால் அரசு முறைவேண்டும். அரசுமுறை யின்றேல் உலகம் உலகமாக நடைபெற முடியாதாதலின் மக்களின் உயிராக விளங்குவது ஆட்சி என்றார் என்க. சூரியன் நீதிக்கும் சந்திரன் கடமைக்கும் உவமையாம். அரசுக்கு வலிய படை வேண்டுமென்பார் 'வள்ளுறு வயிரவாள் அரசு' என்றார். 'உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை, வேந்தன் வெறுக்கையு ளெல்லாந் தலை' (திருக்குறள் 761) என்றது காண்க.

தலைவனை இல்லாத நாடு உண்டா?

894 தேவர்தம் உலகினும்,
தீமை செய்துஉழல்
மாவலி அவுணர்கள்
வைகும் நாட்டினும்,
ஏவெவை உலகம்என்று
இசைக்கும், அன்னவை
காவல்செய் தலைவரை
இன்மை கண்டிலம். ௬

894. உழலுதல் - திரிதல். மா வலி - மிக்க வலிமையுடைய. வைகும் - வசிக்கும். ஏவெவை-எவை எவை. இசைக்கும் - சொல்லப் படும். அன்னவை - அவை. காவல் - பாதுகாத்தல்.

தேவர் வாழும் உலகிலும், தீமையையே செய்துதிரிகிற மிகுந்த வலிமையைப் பெற்ற அரக்கர்கள்வசிக்கும் நாட்டிலும், எவை எவை உலகம் என்று சொல்லப்படுகின்றனவோ அவையெல்லாம் காவல் செய்கிற தலைவரை இல்லாமலிருப்பதைக் கண்டோமில்லை.

(வி - ம்) நல்லவர் வாழ்கிற உலகமாயினும், தீயோர் வாழுகிற உலகமாயினும், இரண்டிற்குமிடையே யுள்ள எந்த உலகமாயினும் ஒரு தலைவனைப் பெற்றே இருக்கிறது. இல்லாமல் இல்லை என்றதால் இருந்தே தீரவேண்டுமென்பது பெறப்படும். 'தீமை செய்துழல் அவுணர்' என்றதால் 'நன்மை புரிகின்ற தேவர்' எனக்கொள்க. அரசனை இன்மை கண்டிலம் என்னாது தலைவரை இன்மை கண்டிலம் என்றுரென்பது நோக்கத் தக்கது.

நீதான் காக்க வேண்டும்

895 உந்தையோ இறந்தனன் ;
உம்முன் நீத்தனன் ;
வந்ததும் அன்னைதன்
வரத்தின் ; மைந்த ! நீ
அந்தம்இல் பேர்அரசு
அளித்தி ! அன்னது
சித்தனை எமக்குஎனத்
தெரிந்து கூறினன். எ

உன் தந்தை இறந்துவிட்டான் ; உன் தமையன் அரசைத் துறந்து சென்றுவிட்டான் ; (இவ்வரசு உனக்குக்) கிடைத்ததும் தாயின் வரத்தினாலாம். மகனே ! முடிவில்லாத பெரிய அரசாட்சியை நீ ஏற்றுக் காப்பாயாக. அது

895. அளித்தி - காப்பாற்று. சிந்தனை - எண்ணம்.

தான் எங்கள் கருத்து என்று (வசிட்டமுனிவர்) முடிவு செய்து சொன்னார்.

(வி - ம்) தந்தை இறந்ததற்கும் தமையன் சென்றதற்கும் நீ காரணன் அல்லன்; என்னவோ நடந்தது. அரசை நீ விரும்பவில்லை; தாய் ஏற்கெனவே பெற்ற வரத்தினால் வந்திருக்கிறது. இடைமறிக்கப்படாமல் சிறந்து தொடர்ந்து வந்த அரசு இது. மக்கள் அரசனின்றித் தவிப்படையாமல் நீ ஆட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் எல்லாரும் சேர்ந்து ஒருமுகமாக வேண்டுகிறோம் என்று, உண்மையாகவும் நயமாகவும் வசிட்டர் எடுத்துச் சொன்னார். 'இறந்த தந்தை வரமுடியாது; சென்ற தமையன் இப்பொழுது வரமாட்டான்; உன்னைத்தவிர வேறுகதியில்லை' என்ற குறிப்பை, 'உந்தையோ இறந்தனன்; உம்முன் நீத்தனன்' என்பது வலியுறுத்துவதாகும்.

பரதனின் நடுக்கம்

896 'தஞ்சம்இவ் வுலகம்நீ
தாங்கு வாய்எனச்
செஞ்சவே முனிவரன்
செப்பக் கேட்டலும்,
'நஞ்சினை நுகர்'என
நடுங்கு வாரினும்
அஞ்சினன்; அயர்ந்தனன்;
அருவிக் கண்ணினன். அ

'இவ்வுலகம் உனக்கு அடைக்கலம். நீ ஆளுவாயாக' என்று வெளிப்படையாகவே முனிவர்கூறக் கேட்டவுடன்,

---

896. தஞ்சம் - அடைக்கலம். செஞ்சவே - வெளிப்படையாக. முனிவரன் - வசிட்டர். நுகர் - உண்பாய். என - என்றுசொல்ல.

நஞ்சை உண்பாய் என்று கூற (அதைக் கேட்டு) நடுங்குபவரைக் காட்டிலும் அதிகமாக நடுங்கினான்; சோர்ந்தான்; கண்ணிலிருந்து நீரை அருவிபோலக் கொட்டினான்.

பரதன் தன் எண்ணம் கூறல்

897 நடுங்கினன் நாத்தடு
மாறி, நாட்டமும்
இடுங்கினன், மகளிரின்
இரங்கும் நெஞ்சினன்
ஒடுங்கிய உயிரினன்;
உணர்வு கைதரத்
தொடங்கினன் அரசவைக்கு
உள்ளம் சொல்லுவான். ௯

நடுங்கினனாகி நாக்குழறி, கண்ணும் குறுகலாயினான்; பெண்களைப் போலப் பரிதாபப்படும் மனத்தை அடைந்தான்; மூச்சு அடங்கிவரப் பெற்றான்; உள்ளே இருந்த உணர்ச்சியின் உதவியால் அரசவையைச் சேர்ந்த அவர்கட்குத் தன் உள்ளக்கிடக்கையைச் சொல்லத் தொடங்கினான்:

(வி - ம்) பெண்கட்கு இரக்கப்படுகிற குணம் இயல்பாகும். துன்பத்தைக் கண்டபோது எழுந்து எதிர்த்து அதை நீக்க முற்படுவது ஆண்மைக்குணமாகும். இங்கே வசிட்டர் முதலிய பேரறிஞர் கூடி இவ்வாறு சொன்னதைக் கேட்டவுடன் இரக்கந்தான் ஏற்பட்டது; துன்பத்திலே கிடந்து நொந்து போனவன்; ஆண்மை அடங்க அயர்ந்திருந்தான். பிறகு தெளிவேற்பட்ட தென்பதை உணர்வு கைதர, சொல்லுவான் தொடங்கினான் என்றார்.

---

897. நாட்டம் - கண். இடுங்குதல் - குறுகுதல். உயிர் - மூச்சு. கைதர - உதவி செய்ய.

அவன் இருக்க நான் மகுடம் சூடுவதா ?

898 மூன்றுல கினுக்கொரு
முதல்வ னுய்முதல்
தோன்றினன் இருக்க,யான்
மகுடம் சூடுதல்
சான்றவர் உரைசெயத்
தருமம் ஆயதே !
ஈன்றவள் செய்கையின்
இழுக்குண் டாகுமோ ? க0

மூன்று உலகங்களுக்கும் ஒரே முதல்வனுய், முதற் பிள்ளையாகப் பிறந்தவன் (இராமன்) உயிருடன் இருக்கும் போது, நான் முடி சூடுதல் அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர் வாயில் சொல்லத்தக்க தருமமாக ஆய்விட்டதே! (இங்ஙனமானல் என்னைப் பெற்ற) தாய் செய்கையில் குற்றம் உண்டாவது எவ்வாறு ?

(வி - ம்) கைகேயி செய்ததுபோல் தவறு செய்தல் கொடுமை கொடுமை என்று உலகெல்லாம் கூறித் துன்புற்றுத் தவிக்கிறதே ! அவள் என்ன செய்தாள் ? வரம்பெற்ருள். இராமனைக் காட்டுக்கு அனுப்பினுள். என்னை அரசாளச் சொன்னுள். அதைத்தானே அறம் என்று பேரறிஞரான நீங்கள் இத்தனைபேருங் கூடியிருந்து சொல்கிறீர்கள் ! நீங்கள் இப்போது சொல்லுவதைத்தானே அவள் செய்திருக்கிருள் என்ருன். அவள் செய்த பெருங் கொடுமையை நீங்களும் அறமென்று கூற முற்பட்டுவிட்டீர்களே ! என்றவாறு. இராமன் மன்னனுக்கு முதல் மகன் ; அதோடு அவனே மூவுலகுக்கும் முதல்வனுவான் என்பதையும் சேர்த்துப் யார்க்கவேண்டும். எவ்விதத்திலும் தான் இராமனுடைய

898. இழுக்கு - குற்றம்.

பதவியைத் தாங்கக் தகுதியற்றவன் என்று கருதினன் என்க.

சான்று காட்டுக!

899 வேத்தவை இருந்தநீர்,
விமலன் உந்தியில்
பூத்தவன் முதலிய
புவியில் தோன்றினர்,
மூத்தவர் இருக்கவே
முறைமை யால்நிலம்
காத்தவர் உளர்எனில்
காட்டிக் காண்டிரால். கக

அரசவையில் இருக்கிற நீங்கள், திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமன் முதலாகப், பூவுலகில் பிறந்த மன்னர்களில் மூத்தவன் உயிருடன் இருக்கும்பொழுது, இளையவர் முறைப்படி நிலவுலக அரசைப் பெற்று ஆட்சிசெய் தவர் உண்டு என்றால் அதை எடுத்துக்காட்டிச் சொல்லுங்கள்.

(வி - ம்) நீங்கள் உலகை நீதி நெறியில் செலுத்தக் காரணமான அரசவையில் இருக்கிறீர்கள். சமயத்துக்குத் தக்கபடி பேசுதல் ஆகாது. இந்த உலகம் உண்டானது முதல், ஏன்? இந்த உலகை உண்டாக்கினபிரமன் உண்டானது முதல் இதுவரை கோடிக்கணக்கான அரசர்கள் பிறந்திருக் கிறார்கள். யாராவது எப்போதாவது மூத்தவன் உயிருடன் இருக்கிறபோது பின் பிறந்தவன் முறைப்படி முடிசூடி ஆண்ட துண்டா என்பதற்கு மேற்கோள் காட்டுங்கள் - பிறகு பேசுங்

899. வேத்து - வேந்து. அவை - சபை. விமலன் - மல மற்றவன்: கடவுள் (திருமால்). உந்தி - கொப்பூழ். உந்தியில் பூத்த வன் - பிரமன். முறைமையால் - நேரான வழியில். காட்டி - எடுத் துக் காண்பித்து. காண்டிர் - சொல்லுங்கள்.

கள் என்றான். பொறுப்புள்ள பதவி வகிப்போர் வரம்பு தவறுதல் ஆகாதென்று கண்டித்தான் என்க. நிலங் காத்தவர் என்றதனால் தோன்றினர் என்றது அரசரையாம். தவறான வழியில் யாரேனும் பெற்றிருப்பின் அது சான்றாகாதென விலக்குதற்கு, 'முறைமையால்' என்றான். எந்த உலகத்திலும் ஆளும் தலைவனில்லாதிருத்தல் கிடையாதென்று வசிட்டர் கூறியதற்கு மறுமொழியாகவே மூத்தவனிருக்க இளையவன் ஆண்டது அந்த உலகங்களில் உண்டா என்றான். அவ்வுல கங்களில் மட்டுமென்ன? பிரமன் தோன்றிய காலத்திலிருந்து தான் பாருங்களேன் என்றான்.

அவனை அழைத்து முடிசூட்டுங்கள்

900 நன்நெறி என்னினும்,
நான் இந் நானிலம்
மன் உயிர்ப் பொறை
சுமந்துஇருந்து வாழ்கிலேன்;
அன்னவன் தனைக்கொணர்ந்து
அலங்கல் மாமுடி
தொன்நெறி முறைமையிற்
சூட்டிக் காண்டிரால். கஉ

(நிலைமையை நினைத்து நீங்கள்) இது நல்ல வழி என்று கூறினாலும், நான் இந்த உலகிற் பொருந்திய உயிர்களைக் காக்கும் பொறுப்பைத் தாங்கியிருந்து வாழமாட்டேன். அவனைக் (இராமனை) கொண்டுவந்து மாலையணிந்த பெரிய முடியைப் பழைய ஒழுங்கு முறைப்படி சூட்டிக் காண்பீராக.

---

900. நன்நெறி - நல்லவழி. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நால்வகை நிலம். மன் - மன்னிய. உயிர் - மக்கள். பொறை - ஆளுகை. அலங்கல் - மாலை. தொல் - பழை மையான. முறைமை - முறைப்படி.

(வி - ம்) கடுமையாகப் பேசிய பரதன் வரவர அணைத்துப் பேசுகிறான். நீங்கள் பெரிய அறிவாளிகள்; அனுபவமுடையவர்கள்; நல்லனவே சொல்லக்கூடியவர்கள். அவ்வாறான நீங்கள் இதுதான் நல்லது என்று சொன்னாலும் முடியைத் தாங்க என்மனம் இடந்தரவில்லை. கட்டாயப்படுத்தினால் உயிர் நில்லாது. ஆதலால் உரியவனைக் கொண்டுவந்து முடிசூட்டிக் கண்டு மகிழுங்கள் என்றான். காண்டிர் என்று முன்னிலைப் படுத்திக் கூறினாலும் தன்னையும் உளப்படுத்தியே கூறினானென்க. காணுங்கள், நானும் வருகிறேன் என்று கொள்ளவேண்டும். சூட்டக் காண்டிரால் என்றும், சூட்டல் காண்டிரால் என்றும் பாடங்கொண்டு 'நான் சூட்டுகிறேன் பாருங்கள்' என்று பொருள் கூறினர். பரதன் இறுமாப்பு அற்றவன். தன்னொருவனாலேயே ஆகுமென்று கருதியிருந்தால் இராமனை அழைக்கத் தானே தனியாகச் சென்றிருப்பான். நகர மக்களில் ஒருவரையும் விடாமல் அழைத்துச் செல்ல முற்பட்டிருக்கமாட்டான். அவனை அழைத்து வர வேண்டிய பொறுப்பு உலக மக்களின் பொறுப்பென்றான். உலக மக்களுள் தானுமொருவன் என்பதைச் செயலாற் காட்ட முற்பட்டான். இவ்வாற்றால் பிறர் கொண்ட பாடம் சிறவாமை யறிக.

இனி ஏதாவது சொன்னால் சாவேன்

901 'அன்றெனில் அவனொடும்
அரிய கானிடை
நின்றினிது இருந்தவம்
நெறியின் ஆற்றுவென்;

---

901. அரிய - வாழ்தற்கு அரிய. ஆற்றுவென் - செய்வேன். உரைப்பின் - உரைத்தால்.

ஒன்றுஇனி உரைப்பின்என்
உயிரை நீக்குவென்'
என்றனன்; என்றபோது,
இருந்த பேர்அவை. கரு

அவ்வாறு அவன் வந்து அரசைப் பெறுவிட்டால் வாழ்வதற்கரிதான காட்டிலே அவனோடு மகிழ்ச்சியுடன் பெரிய தவத்தை முறைப்படி செய்வேன்; இனி ஏதாவது சொல்வீர்களானால் என் உயிரை இங்கேயே விட்டுவிடுவேன் என்றான். அவ்வாறு (அவன் துன்புற்றுக்) கூறியபொழுது அந்தப் பெரிய சபையிலுள்ளவர்,

(வி-ம்) பரதனுடைய கடமையெல்லாம், உரிமையில்லாத ஒன்றைப் பெறக்கூடா தென்பதுதான். இஃது அவனுடைய தனியான கடமை. இராமன் ஆளுவதுதான் இயல்பு. ஆனால் அவனை அழைத்துவந்து முடி சூட்டுவிப்பது பரதனுக்குத் தனிக் கடமையன்று. உலகில் ஒருவன் என்ற வகையில் ஏற்பட்டதொரு பொதுக் கடமையே யாகும். ஆதலால்தான், இராமன் திரும்பி வராவிட்டால் தான் உயிரை விடுவேன் என்று கூறவில்லை. தனித்த கடமையில் வழுவுதல் கூடாது; வழுவ நேருமானால் உயிரை விடவேண்டுமென்பது அறம். ஆதலின் 'மீண்டும் முடி சூடவேண்டும் என்றால் உயிரை விடுவேன்' என்பது தோன்ற 'ஒன்றினி உரைப்பின் என் உயிரை நீக்குவென்' என்றானென்க.

வாழிய நின்புகழ்

902 'ஆழியை உருட்டியும்,
அறங்கள் போற்றியும்,
வேள்வியை இயற்றியும்
வளர்க்க வேண்டுமோ!'

‘ஏழிேனாடு ஏழெனும்
உலகும் எஞ்சினும்
வாழிய நின்புகழ்’
என்று வாழ்த்தினர். கச

சக்கரத்தைச் சுழற்றியும், அறத்தைப் பேணிக் காத்தும், வேள்விகளைச் செய்தும் (தியாகத்தை) வளர்க்கவா வேண்டும்? பதினான்கு உலகங்களும் அழிந்தாலும் உன்னுடைய புகழ் நிலைபெற்று வாழ்க என்று வாழ்த்தினார்கள்.

(வி - ம்) வாழ்வதாவது புகழ் உண்டாகும்படி வாழ்தலாம். ‘ஈதல் இசைபட வாழ்தல் அவையல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு’ (திருக்குறள் - 231). ஈதல் என்பது இல்லார்க்கு உதவுதல். இசைபட வாழ்தலாவது புகழ் தன்னை வந்து பொருந்தும்படியான செயல்களைச் செய்து வாழ்தலாம். இசைபட வாழும் வழி மூன்றென்றார். அவை, அரசு புரிவதும், தவமியற்றுவதும், அறங்களைச் செய்வதும் ஆம். பிறருக்குச் செய்யும் உதவியை நோக்கமாகக்கொண்டு தன்னல மறுத்துப் பற்றற்று விண்ணடைவது இதன் குறிக்கோளென்க. நல்வழியில் செல்லும் மக்களின் வாழ்வுக்கு ஊறு ஏற்படாமல் காத்து, அவ்வாழ்வு வளம் பெற்று உயர்தற்கு உதவுதலே அரசனது கடனாம். இதை அவன் சரிவர ஆற்ற முன்னிற்கும்போது செய்யப்பட வேண்டிய தியாகம் பெரிது. போரில் உயிரையே இழக்க நேரும்! எந்த நேரத்திலும் உலக இன்பங்களை விட்டுச் சாவதற்குப் பின்வாங்காது மகிழ்ச்சியோடு முன்னிற்பவனே ஆழியை உருட்டத் தகுதியானவன்.உலகில் சிறந்த அறிவுடையோராகக் கருதப்படுவோர் அறத்தைப் பேணுவோராவர். அறவழியில் தாமும் நின்று

902. ஆழி - ஆட்சி. உருட்டுதல் - நடத்துதல். எஞ்சுதல் - அழிதல். வாழிய - வாழ்வதாக.

பிறரையும் அவ்வழியில் செல்விக்க முயல்வதே அறங்களைப் பேணுவதாம். இவர் பொதுமக்களுள் இருந்து அவர்களின் நன்மைக்காகப் பாடுபடுவோராவர். அறத்தை அரசன் மீறுவானாயின் அவனையும் எதிர்த்து அறத்தைப் பேண உயிரையும் தியாகம் செய்ய முன்னிற்பாரென்க. உலக நலனுக்காகவே முனிவர் வேள்விகளைப் புரிகின்றனர். அதன் பொருட்டு உலக இன்பங்களை அறவே துறக்க முற்படுகின்றனர். எவ்வளவோ இன்னல்களை அனுபவிக்கின்றனர். எனவே, அரசர், அறம்பேணுவோர், முனிவர் என்ற மூவகையினரும் புகழை அடைகின்றனர். ஆனால் அப்புகழ் பிறர் அடையும் நன்மையின் பொருட்டுச் செய்யப்படும் தியாகத்தி (தன்னல மறுப்பி) னால்தான் ஏற்படுகிறதென்ற உண்மை உணரத்தக்கது. புகழுக்குரிய செயல்களைச் செய்பவர் அரசரும் முனிவரும் இவ்விருவரல்லாத மக்களுள் அறிவுடையோருமாவர் என்றவாறு.

‘ வளர்க்க வேண்டுமோ ’ என்றதற்கு, புகழை வளர்க்க வேண்டுமோ என்று பொருள் கண்டனர். புகழை விரும்பிச் செய்யுங் காரியங்கள் போலியாகவும் முடிதல்கூடும். தியாகத்திலிருந்து தோன்றும் புகழே உண்மைப் புகழாம். இங்கே புகழுக்காகப் பரதன் எதையும் செய்தானல்லன். பிறருக்கு உரிய பொருளை ஏற்க மறுத்தான். தன் கைக்கு வந்த சக்கரவர்த்திப் பதவியை உதறித் தள்ளினான். அவனுடைய தன்னல மறுப்பை அறிந்த குழுவினர், ‘ தியாகத்தில் திளைப்பதற்கு ஆட்சிபுரிந்தும் அறம் பேணியும் தவமியற்றியும் முயற்சி செய்யவேண்டுமா ? உனக்கு இயற்கையிலேயே தன்னல மறுப்பு எய்தியிருக்கிறதே !’ என்று வியந்தனர். பிறக்கிற மக்களில் பெரும்பாலோர் அறத்தில் நிற்பவராக இல்லை ; அரசரும் அவ்வாறேயாவர் ; முனிவராதலும் எளிதன்று ;

ஆதலால்தான் அம்மூவகைத் துறையில் முற்பட்டுத் தன்னலத்தைவிட்டு நெறியோடு செயலாற்றி உண்மைப்புகழுடைவது போற்றுதற்குரியதாக இருக்கிறது. பரதனுக்கு வாய்த்த இவ்வுயர் குணம் உலகிலுள்ள பலருக்கும் வாய்க்குமானல் மேலே சொல்லிய மூவகை முயற்சியும் தேவையற்றவை என்பது விளங்குமென்பார், 'வளர்க்க வேண்டுமோ?' என்றார். அங்கே பரதனைச் சூழ்ந்திருந்தோரில், அம் மூவகையினரும் இருந்தன ரென்பது, 'மந்திரக் கிழவரும்......அந்தர முனிவரோடு அறிஞர் யாவரும், சுந்தரக் குரிசிலை மரபிற் சுற்றினர்' (பாடல் 889) என்றதால் அறியப்படும். பரதனின் நினைப்பு இருக்கிறவரை அவனுடைய இந்த செயற்கரும் செயல் நினைக்கப்படும். ஆதலின் என்றென்றும் 'வாழிய நின்புகழ்' என வாழ்த்தினர். எதிரே இருக்கிற பரதனை நீ வாழ்க என்று வாழ்த்தாமல் அவன்புகழை ஏன் வாழ்த்தினர் எனின் பரதனின் உடல் அழிவுக் குட்பட்டது. ஆதலின் ஊனுடலோடு கூடிய அவனை வாழ்த்தாது, அவனை உள்ளடக்கி விரிந்து என்றும் நின்று நிலவும் புகழை வாழ்த்தினர் என்க.

இராமனை அழைத்துவரப் போகிறோம்

903 குரிசிலும் தம்பியைக்
கூவிக் கொண்டலின்
முரசு அறைந்து, 'இந்நகர்
முறைமை வேந்தனைத்
தருதும் ஈண்டு' என்பது
சாற்றித் தானையை
விரைவினில் எழுகென
விளம்புவாய்! என்றான். கடு

---

903. குரிசில் - பரதன். தம்பி-சத்துருக்கன். தருதல் - அழைத்தல். தானை - சேனை.

பரதன், தம்பியைக் கூப்பிட்டு மேக முழக்கத்தைப் போல முரசடித்து, இந்த நகருக்கு முறைப்படி அரசனாக வேண்டிய இராமனை இங்கே அழைத்துவரப் போகிறோம் என்று தெரிவித்து, சேனையை விரைவாகப் புறப்படும்படி சொல்லுவாயாக என்றான்.

நகரமக்களின் ஆரவாரம்

904 நல்லவன் உரைசெய
நம்பி கூறலும்,
அல்லலில் அழுங்கிய
அன்பின் மா நகர்,
ஒல்லென இரைத்ததால்
உயிரில் யாக்கைஅச்
சொல்எனும் அமிழ்தினால்
துளிர்த்தது என்னவே. கசு

நல்லவன் (பரதன்) உரைக்க, நம்பி (சத்துருக்கன்) தெரிவித்தவுடனே, துன்பத்தில் அமிழ்ந்து கிடந்த அன்பே உருவமான பெரிய நகரமக்கள், உயிர்நீங்கிக் கிடந்த உடல் அந்தச் சொல்லாகிய அமிர்தத்தால் உயிர்பெற்றது என்று சொல்லும்படி ஒல் என இரைச்சலிட்டனர்.

(வி - ம்) ஒருவழியுந் தெரியாமல் இராமனாகிய உயிரைப் பிரிந்த உடல்போலச் செயலற்றுக் கிடந்த அந்த நகரமக்களுக்கு சத்துருக்கனின் சொல், அமிர்தத் துளியை வார்த்தமாதிரியாயிற்று. சோர்ந்து விழுந்து கிடந்த மக்கள்

904. நம்பி-ஆணிற் சிறந்தவன். அல்லல் - துன்பம். அழுங்கிய - வருந்திய. இரைத்தல் - ஆரவாரம் செய்தல். யாக்கை-உடல். துளிர்த்தல் - உயிர் ஏறப்பெறுதல்.

குதூகுலத்துடன் எழுந்து ஆரவாரித்தனர். சத்துக் குறைந்த உயிர்ப் பொருள், சத்து ஏறப்பெறுதலே துளிர்த்த லாம்.

கைகேயியின் ஆசை அழிந்தது

905 எழுந்தது பெரும்படை
ஏழு வேலையின்,
மொழிந்தபேர் ஊழியின் ;
முழுங்கி முந்தெழ,
அழிந்தது கேகயன்
மடந்தை ஆசை,போய்க்
கழிந்தது துயர்,நெடும்
காதல் தூண்டவே. கள

சொல்லப்பட்ட பெரிய ஊழிக் காலத்தில் (பொங்கி வருகிற) ஏழு கடல்களைப்போல, பெரியசேனையானது எழுந்தது. (அவை) ஆரவாரஞ் செய்துகொண்டு முன்னே புறப்பட, கேகய மன்னன் மகளின் ஆசை அழிந்தது; இராமன் மீதுள்ள நெடிய பேரன்பு தூண்டுதலினாலே (மக்களின்) துன்பம் போய் ஒழிந்தது.

(வி - ம்) பரதனுக்கு முடிசூட்டவேண்டுமென்ற கைகேயியின் ஆசை இவ்வளவோடு ஒழிந்தது. கூனியையும் கைகேயியையும் தவிர வேறு ஒருவரும் எதிர்ப் புலத்தில் இல்லையாதலால் முயற்சிக்குச் சூழல் இல்லை. எனவே, பரதனை அரசனுக்கும் ஆசைபோய் அழிந்தது எனப்பட்டது. விதி இவ்விருவரைத் துணைப்பற்றித் தன் வேலையைத் தொடங்கிக் கொண்டது என்றவாறு. இனி கைகேயி உலகமக்களில் ஒருத்தியாக இருக்கிறாளென்பது அறியத்தக்கது.

---

905. வேலை - கடல்.

இராமன் தங்கிய சோலையில் தங்கினர்

906 மொய்பெரும் சேனையும்
　　முடிவில் மன்னரும்
கைகலந்து அயல்ஒரு
　　கடலில் சுற்றிட,
அய்யனும் தேவியும்
　　இளைய ஆளியும்
வைகிய சோலையில்
　　தானும் வைகினன். கஅ

நெருங்கிய பெரிய சேனையும், அளவில்லாத மன்னரும் ஒன்றாகத் திரண்டு பக்கத்தில் ஒரு கடலைப்போலச் சூழ்ந்து கொள்ள, இராமனும் சீதையும் இளைய சிங்கமும் தங்கிய சோலையில் தானும் தங்கியிருந்தான்.

பரதன் நடந்து செல்லுதல்

907 ஆண்டுநின்று ஆண்டகை
　　அடியின் ஏகினன்
ஈண்டிய நெறிஎன,
　　தானும் ஏகினன்;
தூண்டிடு தேர்களும்,
　　துரக ராசியும்
காண்டகு கரிகளும்,
　　தொடரக் காலினே. கசு

906. மொய்த்தல் - நெருங்குதல். கைகலத்தல் - கூடுதல். அயல் - பக்கம். ஆளி - சிங்கம். வைகினன் - தங்கினன்.

907. ஆண்டு - அவ்விடம். ஈண்டிய - நெருங்கிய. நெறி - வழி. துரக ராசி-குதிரைத்தொகுதி. கரி - யானை. காலின்-காலால்.

அவ்விடத்திலிருந்து இராமன் காலால் நடந்து நெருங்கிய வழியில் சென்றான் என்று கூறக்கேட்டு, தூண்டிச் செலுத்தப்படும் தேர்களும் குதிரைப் பந்திகளும் பார்த்தற்கு இனிய யானைகளும் தொடர்ந்து வரக் காலால் நடந்து சென்றான்.

---

11. குகப் படலம்

[பரதன், குகனைச் சந்தித்த செய்தி கூறும் படலம்.]

காவிரி நாட்டைப்போன்ற கழனிநாடு

908 **பூவிரி பொலன்கழல்**
பொருவில் தானையான்,
காவிரி நாடுஅன்ன
கழனி நாடுஒரீஇ,
தாவர சங்கமம்
என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக்
கங்கை எய்தினன். க

பூவேலை செய்த அழகிய வீரக்கழலணிந்த ஒப்பற்ற சேனையையுடைய பரதன், காவிரி பாயும் சோழநாட்டை ஒத்த வயல்களையுடைய கோசல நாட்டைக் கடந்து, நிற்பனவும் நடப்பனவுமான தன்மையுள்ள யாவையும் பரிதவிக்கக் கங்கைக் கரையை அடைந்தான்.

(வி - ம்) கவி சோழநாட்டின் வளத்தை நன்கறிந்தவராதலால் அதைப்போன்ற கோசல நாடு என்றார். சோழ

---

908. பூ - பூக்களைப்போன்ற வேலைப்பாடு. பொலன்-அழகிய. பொருவு இல் - ஒப்புஅற்ற. கழனி - வயல். தாவரம் - அசையாப் பொருள் : நிற்பன. சங்கமம் - அசையும் பொருள் : நடப்பன.

நாடு முழுமையும் நன்செய் நிலத்தைக் கொண்டுள்ளது. காவிரி பாய்வது மட்டுமன்று. எத்தனையோ நாடுகளில் எத்தனையோ ஆறுகள் பாய்கின்றன. ஆனால் பண்பட்ட வயல் வளம் வாய்ப்பதில்லை. சோழநாட்டிற் காவிரி நீர் முழுமையும் நன்செய் நிலங்களிலேயே பாய்கின்றதென்பது எண்ணி யெண்ணிப் பெருமித மடையத்தக்கதாம். பரதனுடைய பரிதாபத்தைக் கண்ட மரஞ் செடிகளும் பறவை விலங்கு முதலியனவும் இரங்குவதாகவே (பரதனிடம் இரக்கஉணர்ச்சி கொண்டு) பார்ப்போர் கண்களுக்குத் தோன்றுகின்றன. காண்போர் மனநிலையே எதிர்ப்படுவதி லெல்லாம் காட்சி யளிப்பது இயல்பு.

இங்கே சோழநாடு காவிரிநாடு எனப்பட்டது. நூல்களில் காவிரி என்றும் காவேரி என்றும் இவ்வாற்றின் பெயர்வழங்கப் படுகிறது. 'கங்கையிற் புனிதமாய காவிரி' (நாலாயிரம் 894) 'நடந்தாய் வாழி காவேரி' (சிலப்பதி. கானல்–26) விநாயகர் கொண்டுவந்த கங்கைநீர்க் கமண்டலத்தைக் காக்கை சாய்த்து விட நீர் ஓடியதால் கா+விரி என்றாயிற் றென்றும், கவேரன் என்பவன் மகளாதலால் காவேரி என்றாயிற்றென்றும் கூறுப. 'தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை கவேரனாங் கிருந்த கவேர வனமும்' (மணிமே 3–55).

அறுபதாயிரம் அக்குரோணி

909 கான்தலை நண்ணிய
  காளை பின்படர்
தோன்றலை அவ்வழி
  தொடர்ந்து சென்றன,

---

909. கான் - காடு. தலை - இடம். காளை-காளைபோன்ற இராமன். படர்தல்-செல்லுதல். தோன்றல் - பரதன்.

ஆன்றவர் உணர்த்திய
அக்கு ரோணிகள்
மூன்றுபத் தாயிரத்து
இரட்டி முற்றுமே. உ

காட்டிற் சென்ற இராமனைத் தொடர்ந்து சென்ற பரதனை, அவ்வாறே பின்தொடர்ந்து சென்றனவாகிய சேனைகள் அறிவாளிகள் அறிவித்தபடி அறுபதாயிரம் அக்குரோணி ஆகும்.

(வி - ம்) யானை 21,870, தேர் 21,870, குதிரை 65,610 காலாள் 1,09,350. ஆக 2,18,700 கொண்டது ஒரு அக்குரோணி எனப்படும். இப்படி 60 ஆயிரம் அக்குரோணி படைகள் பரதனைத் தொடர்ந்து சென்றன. அவற்றொடு நகரமக்களும் முனிவர்களும் தொடர்ந்து சென்றனர். தமக்கு முன்பு இராமகதை கூறிய பெரியவர்கள் சொன்னபடி நானும் சொல்கிறேன் என்பார் 'ஆன்றவர் உணர்த்திய' என்றார். மூன்று பத்தாயிரம்—முப்பதாயிரம்; அதன் இரட்டி—அறுபதாயிரம்.

இராமனை எதிர்க்கவா ?

910 அப்படை கங்கையை
அடைந்த ஆயிடை,
துப்புடைக் கடலின்நீர்
சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோடு
உடற்றவே கொலாம்,
இப்படை எடுத்ததென்று
எடுத்த சீற்றத்தான். ந

---

910. ஆயிடை - அப்பொழுது. துப்பு - தூய்மை. சுமந்த - உண்ட. ஒப்பு - சமம். உடற்றல் - போர் செய்தல். சீற்றம்-கோபம்.

அந்தப் படை, கங்கைக் கரையை அடைந்தபொழுது, தூய கடலின் நீரைக் குடித்த மேகத்தை ஒப்பாக உடைய இராமனோடு போர்செய்யத்தான் இச்சேனை எழுந்தது என்று கருதி, மிகுந்த கோபத்தை யுடையவனாகிய,

குகனின் கோபம்

911 குகன்எனப் பெயரிய
கூற்றின் ஆற்றலான்;
தொகைமுரண் சேனையைத்
துகளின் நோக்குவான்;
நகைமிக, கண்கள்தீ
நாற, நாசியில்
புகைஉற, குனிப்புறும்
புருவப் போர்விலான். ௯

குகன் என்னும் பெயரையும் எமனின் ஆற்றலையும் பெற்றவன். பெருந்தொகை யுள்ளதும் வலிமை யுள்ளது மான பரதனது சேனையைத் தூசிக்கு நிகராக நோக்கு கின்றான். கோபச் சிரிப்பு அதிகரிக்க, கண்களில் கோபத்தீ தோன்ற, மூக்கில் புகை பொருந்த, வளைகின்ற புருவமாகிய போர் செய்கின்ற வில்லை உடையவன்;

(வி - ம்) எமன் பிறருடைய உயிரை வாங்குவதில் நிகரற்றவன். அவ்வாறே எதிர்த்தவர் உயிரை வாங்குவதில் குகனும் நிகரற்றவனாதலால் குகனுக்கு எமன் உவமை. அவ்வளவு பெரிய சேனையைத் தூசிக்குச் சமமாக நினைத்தான் என்பதைத் 'துகளின் நோக்கினான்' என்றார். தூசியினாலே எனப் பொருள் கொள்ளல் பொருந்தாது, முன் பாடலில்

911. கூற்று - எமன். முரண் - வலிமை. நாற-வீச. குனித்தல் - வளைத்தல். விலான் - வில்லையுடையவன்.

சேனையைக் குகன் பார்த்துவிட்டானாதலால். புருவம் வளைந்து வளைந்து நிமிர்ந்து கொண்டிருக்கிறது. அது வில்லில் அம்பு பூட்டி விடுவதுபோலத் தோன்றுவதால் 'புருவப் போர் விலான்' எனப்பட்டது.

போர் கிடைத்தது

912 கட்டிய சுரிகையன்;
கடித்த வாயினன்;
வெட்டிய மொழியினன்;
விழிக்கும் தீயினன்;
கொட்டிய துடியினன்;
குறிக்கும் கொம்பினன்;
கிட்டியது அமர்எனக்
கிளர்ந்த தோளினன். ரு

இடுப்பில் கட்டின உடைவாளை யுடையவன்; கடித்த உதட்டை யுடையவன்; தாட்சணிய மில்லாத சொல்லை யுடையவன்; விழிக்கின்ற தீயை (கண்களை) உடையவன்; உடுக்கை என்னும் பறையை அடிக்கின்றவன்; கொம்பை ஊதுகின்றவன்; போர் கிடைத்தது என்று பூரிப்படைந்த தோள்களை யுடையவன்;

(வி-ம்) வெட்டிய மொழி - எழுவாய் பயனிலையோடு ஒழுங்கான வாக்கியப் போக்கமையாமல் உதறிப் பேசும் மொழி. கோபத்தோடு கடுமையாகத் தாட்சணியமின்றிப் பேசுதல். வீரர்களுக்குப் போர் கிடைப்பது என்றால் பெரிய கொண்டாட்டம். தீமையை ஒழிப்பதில் அவ்வளவு ஆர்வம்.

---

912. சுரிகை - உடை வாள். துடி - ஒருவகைப் பறை: உடுக்கு. கொம்பு - ஊதுகின்ற குழாய் வடிவமானது. அமர்-போர். கிளர்தல் - எழுச்சி யுறுதல்: பூரித்தல்.

பகைவர் என்றால் அறத்தின் பகைவர் என்று கொள்ள வேண்டும். அறவழி நிற்பார்க்குப் பகைவர் என்றால் தீய வழிச் செல்வோர் என்பதாம். அவர்களை அழிப்பது அறம். ‘கிட்டியது அமர் எனக் கிளர்ந்த தோளினன்’ என்றதை, ‘மொய்பெருத் தினவுறு முழவுத் தோளினன்’ (பாடல் 46) ‘போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள் திண்டோள்’ (பாடல் 305) என்பவற்றோடு நோக்குக.

குகன் தென்கரையை அடைந்தான்

913 மருங்குஅடை தென்கரை
வந்து தோன்றினன்
ஒருங்குஅடை நெடும்படை
“ஒல்”என் ஆர்ப்பினோடு;
அருங்கடை உகம்தனில்
அசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக்
கலந்து சூழவே. சு

ஒன்றாகக் கூடிய பெரிய படை வீரர்கள் ஒல் என்ற பெரிய ஆரவாரத்தோடு, (எவரும் உயிர் பிழைத்தற்கு முடியாத) யுக முடிவில் இடியோடு கூடிய பெரிய மேகமும், கரிய நிறமுள்ள கடலும் எழுந்தாற்போலக் கலந்து தன்னைச் சூழ்ந்துவர, பக்கத்திலிருக்கிற (கங்கையின்) தென்கரையில் வந்து சேர்ந்தான்.

(வி - ம்) துடியைக் கொட்டிக் கொம்பையும் ஊதின வுடன் சேனையெல்லாம் சூழ்ந்துவரக் கங்கைக் கரையைக்

913. மருங்கு - பக்கம். ஒருங்கு - முழுமையும். அடைதல் - வந்து சேர்தல். அருமை - இன்மை. உகம் - யுகம். கடை உகம் - உகம் கடை: யுகமுடிவு. அசனி - இடி. மழை - மேகம். கிளர்தல் - எழுதல்.

குகன் அடைந்தான். 'குகனெனப் பெயரிய கூற்றின் ஆற்ற லான், (பாடல் 911) கலந்து சூழத் தென்கரை வந்து தோன்றி ஞன்' என முடியும்.

இப்படையை மேலே அனுப்பவேண்டும்

914 தோன்றிய புளிஞரை
நோக்கி, சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை
உம்பர் ஏற்றுதற்கு
ஏன்றனென், என்னுயிர்த்
துணைவற்கு ஈகுவான்
ஆன்றபேர் அரசு ; நீர்
அமைதிராம் என்ருன். ஏ

(இங்ஙனம் வந்து) எதிரில் நிற்கின்ற வேடர்களைப் பார்த்து, என்னுடைய உயிர்த் துணைவஞன இராமனுக்கு, சிறப்புள்ள பெரிய அரசாட்சியைக் கொடுக்கும் பொருட்டு, சாமர்த்தியமாக (எதிரில்) வந்து நிற்கிற (பரதனுடைய) சேனையை (கொன்று) மேலுலகத்துக்கு ஏற்றுவதற்கு உடன் பட்டிருக்கிறேன். நீங்களும் இணங்கவேண்டும் என்ருன்.

தோழமை என்றது ஒரு சொல்

915 *ஆழ நெடுந்திரை ஆறு
கடந்துஇவர் போவாரோ!
வேழ நெடும்படை கண்டு
விலங்கிடும் வில்லாளோ!

914. புளிஞர் - வேடர். சூழ்ச்சி - சாமர்த்தியம். ஊன்றிய- எதிரே நிற்கிற. உம்பர் - மேலுலகம். ஏல்தல் - உடன்படல். ஆன்ற - சிறந்த. அமைதிர் - உடன்படுங்கள்.

தோழமை என்றவர் சொல்லிய
சொல்ஒரு சொல்அன்றோ!
ஏழமை வேடன் இறந்திலன்
என்றுஎனை ஏசாரோ. அ

ஆழமானதும் பெரிய அலையெறிவதுமான (இந்த) ஆற்றைக் கடந்து செல்ல இவரால் முடியுமா? பெரிய யானைப் படையைக் கண்டு விலகிப் போகக்கூடிய வில்வீரனா (நான்!) நட்பு என்று (என்னை நோக்கி) அந்த இராமன் சொல்லிய சொல் (மதிக்கத்தக்க) ஒரு சொல் அல்லவா? (அவர் சொல்லிய சொல்லைக் காப்பாற்றாமல் இவர்களை விட்டுவிட்டால்) ஆற்றாத வேடன் செத்தாவது தொலைந்தானா என்று என்னை உலகத்தார் ஏசிப் பழியாமல் இருப்பார்களா?

(வி - ம்) சேனையைப் பார்த்து என் எண்ணத்துக்கு இணங்கவேண்டும் என்று கேட்ட குகன், திரும்பி எதிர்க் கரையைப் பார்த்தான். வந்துவிட்டது கோபம். அந்தக் கோபத்தில் இவ்வாறு கூறத் தொடங்கினான் என்க. பரதனோடு போர் செய்து அவனை ஒழிக்க வேண்டுமென்பதுதான் குகனின் எண்ணம். ஆனால் ஒரு வேளை அவனை வெல்ல முடியாதெனின் இறப்பதுதான் நீதி என்று கருதினானாதலின் 'இறந்திலன் என்று எனை ஏசாரோ' என்றான். ஆழத்தையும் அகலத்தையும் வலிமையையும் உடைய ஆற்றைக் கடத்தல் எளிதன்றென்பான் 'ஆழ நெடுந்திரை ஆறு' என்றான். யானைக்குத் தீனி போட்டுப் பாதுகாத்தல் எல்லா அரசர்க்கும் இயல்வதன்று. பேரரசர்க்கே இயலும். ஆதலால் இங்கே வந்திருக்கும் கணக்கற்ற யானையைக் குறிப்பிட்டு 'வேழ நெடும்படை' என்றான்.

---

915. திரை - அலை. வேழம் - யானை. விலக்குதல் - விலகிச் செல்லுதல்.

மன்னவர் நெஞ்சினில் வேடர் விடும் சரம்

916 முன்னவன் என்று நினைந்திலன்;
மொய்புலி அன்னான்ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்;
அன்னவை பேசானேல்,
என்இவன் என்னை இகழ்ந்தது! இவ்
எல்லை கடந்துஅன்றோ!
மன்னவர் நெஞ்சினில் வேடர்
விடும்சரம் வாயாவோ. ௬

(இப்பரதன், இராமனை) தனக்கு மூத்தவன் என்று நினைத்தானில்லை; வலிய புலியை யொத்தவனாக ஒரு தம்பி (இராமனுக்குத் துணையாக அவனைக் காத்து) நிற்கின்றான் என்றும் நினைத்தானில்லை; அவைகளை எண்ணாவிட்டாலும், இவன் என்னை ஒரு பொருளாக ஏன் மதிக்கவில்லை? இந்த எல்லையைத் தாண்டியல்லவா......அரசருடைய மார்பிலே வேடர் எய்கிற அம்புகள் பாய மாட்டாவோ?

(வி - ம்) குகன் நினைத்ததைச் சொல்வானே தவிர, சொற்கள் இணைந்து முறைப்பட வாரா என்பதை இப்பாடலும் முன் பாடல்களும் விளக்கி நிற்கின்றன. 'கடந்தன்றோ' என்ற பிறகு, 'இராமனை எதிர்ப்பது இருக்கிறது' என்று உள்ளே நினைத்துக்கொள்கிறான். 'நான் அற்பமான வேடன் எனவும், என்னால் என்ன செய்யமுடியும் எனவும் நினைக்கிறார்கள் போலும்' என்று நினைத்துக்கொள்கிறான். அப்பால் 'வேடர் விடும் சரம்' என்ற சொற்கள் வருகின்றன. நகரத்திலிருந்து நாகரிகமாக அரசாளும் செல்வர்கள், கிராமங்களிலுள்ள மக்களை மதிக்கமாட்டார்களென்றாலும், அம்பின் முனையானது இருவர் மேலும் ஒரு மாதிரியாகத்தான் பாயும்

---

916. மொய் - வலியுள்ள. சரம் - அம்பு.

என்கிறான். மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வைக் கற்பித்துக் கொள்வதைத் தவிர, உண்மையில் எல்லாம் ஒன்று தான் என்றபடி. 'தெண்கடல் வளாகம் பொதுமையின்றி, வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும், நடுநாள் யாமத் தும் பகலும் துஞ்சான், கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும், உண்பது நாழி, உடுப்பவை இரண்டே, பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே' (புறம் 189) என்றதும் நோக்கத்தக்கது. பேசல் என்பது எண்ணுதல் என்ற பொருளில் வந்தது. 'தெருளுறு பண்பு புலனிவை மாறியும் சேர்ந்திடுமே' (பிரயோகவிவேகம் 48).

இச்சேனை கிடக்கட்டும்

917 போன படைத்தலை வீரர்
 தமக்குஇரை போதா! இச்
சேனை கிடக்கிடு! தேவர்
 வரிற்சிலை மாமேகம்
சோனை படக்குடர் சூறை
 படச்சுடர் வாளோடும்
தானை படத்தனி யானை
 படத்திரள் சாயேனோ. ௧௦

(முன்னே) போயிருக்கிற (படை வீரர்களிலெல்லாம்) தலைமையான வீரர்களுக்கு (இராம இலக்குவர்க்கு) இரை யாகத் தகுதியற்றது இச்சேனை. இது கிடக்கட்டும்! (அற்பம்) மனிதப் படை மட்டுமல்ல, தேவர்களின் படையெல்லாம் சேர்ந்துவந்தாலும் (என்னுடைய) வில்லாகிய பெரிய மேகத்தி லிருந்து வரும் விடாத (அம்பு) மழை பொழிய, அவர்க

917. இரை - சாப்பாடு. கிடக்கிடு - கிடக்கட்டும். சோனை - விடா மழை. சூறை - கொள்ளை. தானை-சேனை. திரள் - கூட்டம். சாய்த்தல் - கீழே விழச் செய்தல்.

ளுடைய குடல் கொள்ளை போக, பிடித்த வாள்களோடு சேனைகள் பட்டுவிழ, தனித் தனியாக யானைகள் செத்துவிழ, அந்தக் கூட்டத்தைக் (கீழே) சாய்த்து வீழ்த்த மாட்டேனா ?

(வி-ம்) இராமனும் இலக்குவனும் வீரர்களுக்குள்ளேயே அடக்க முடியாத தலைமை சான்ற வீரர்கள். அவர்கட்கு இதெல்லாம், ஒரு பொருளல்ல. அவர்களிடம் போவதிருக்கட்டும், இங்கே நான் வில் வளைத்தாலோ, இதுமட்டுமல்ல ; மனிதச் சேனையெல்லாம் வரட்டும்; அதற்கு மேலே முப்பத்து முக்கோடி தேவர்களாகிய சேனை வேண்டுமானாலும் வரட்டும். குடல் வேறு கும்பி வேறாகச் செய்து, பேய்கள் சூறையாடும் படி செய்ய மாட்டேனா என்றான். வீரனுக்கு ஏற்பட்ட வெறியினால் வரும் உரைகள் இவை என்க. பெரிய உயர்ந்த யானைக்கூட்டம் இவன் கண்ணுக்கு நன்றாகத் தெரிகிறது. ஆதலால்தான் 'சேனைபட' என்று சொன்ன பிறகும் 'தனி யானை பட' என்றான். 'வீரர் தமக்கு இரை' என்றதை வீரர் தம் வில்லுக்கு இரை' எனக் கொள்ளவேண்டும். 'தம்பி ! வில்லினுக் கிரைமிக விளையுதடா' (பாஞ்சாலி சபதம் 134) என வருதல் காண்க. போன என்பதற்கு வந்த என்று பொருள்கொண்டு, குகனின் சேனை வீரர் என்று பொருள் கூறினர். தானே ஒரு வில்லைக் கொண்டு ஒழிப்பேன் என்று நிற்கிற குகன், தனக்குக் கீழுள்ளவரைப் பற்றிக் குறிப்பிட்டு உங்கட்கு இரையாகத் தகுதியற்றது இப் படை என்று கூறல் பொருந்தாது. இரை என்பதைக் கண்டு மலைத்தனர் போலும். கூறுபவன் வேடனாதலின் அப்படித்தானே வரும். 'தேவர் வரின்' என்பதில் உம்மை தொக்கது ; வரமாட்டார் என்றவாறு. 'வாளோடும் தானை பட' என்பதை 'மரங்கள் போல் நெடு வாளொடு தோள் விழ' என்றதனோடு (கரன்வதை) ஒப்பு நோக்குக.

வேடு கொடுத்தது பார்

918 ஆடு கொடிப்படை சாடி
அறத்தவ ரேஆள,
வேடு கொடுத்தது பார்எனும்
இப்புகழ் மேவீரோ!
நாடு கொடுத்தஎன் நாயக
னுக்கு,இவர் நாம்ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி
எடுத்தது காணீரோ. கக

ஆடுகின்ற கொடிகளையுடைய (பரதனின்) படையை எதிர்த்துத் (தொலைத்து) அறத்தைக் காப்பாற்றுபவர்களே (இராம இலக்குவரே நிலத்தை) ஆளும்படி, வேடர்கள் (அநியாயக்காரரிடமிருந்து) நாட்டை (வாங்கி)க் கொடுத்தார்கள் என்ற இந்தப் புகழை (நீங்கள்) அடையமாட்டீர்களா? தனக்கு உரிமையான நாட்டைத் தியாகமாகக் கொடுத்த என்னுடைய தலைவனுக்கு, இவர்கள் நம்முடைய ஆட்சியிலுள்ள காடு கொடுப்பதைக் கூடப் பொறுதவராகிப் (படை) எடுத்த கொடுமையை நீங்கள் அறியவில்லையா?

(வி - ம்) தனக்கு உரிமையான நாட்டை, மகிழ்ச்சியுடன் கொடுத்துவிட்டு வந்த எனது தலைவனை, நம்முடைய காட்டில் கூடத் தங்கக்கூடாதென்று விரட்டப் படையெடுத்து வந்துவிட்டார்களே என்று, தம் படைகட்கு எடுத்துச் சொன்னான். இதுவரை காட்டிலுள்ளவர்க்கும், நாட்டிலுள்ள அரசர் தாம் முறை செய்வதில் தலையிடுவதுண்டே தவிர, நாடாளும் அரசர் தவறு செய்தால் காட்டிலிருப்பவர் சென்று

918. சாடி - எதிர்த்து. வேடு - வேடர். எடுத்தது - படையெடுத்தது.

திருத்துவதென்பது கிடையாது. ஆனால் இப்போது நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசர் தவறு செய்ய வேடர் திருத்தி நீதி செய்தனர் என்ற பெயர் கிடைக்கப்போகிறது. அதை நழுவ விடலாமா? என்று அவர்களை ஊக்கப் படுத்தினன்.

பரதனிடம் சுமந்திரன் கூறுதல்

919 என்பன சொல்லி, இரும்பன
மேனியர் ஏனோர்முன்,
வன்பணை வில்லினன் மல்உயர்
தோளினன் வாள்வீரற்கு
அன்பனும் நின்றனன்; நின்றது
கண்டுஅரி ஏறுஅன்ன
முன்பனில் வந்து மொழிந்தனன்
மூரிய தேர்வல்லான். கஉ

என்ற இச்சொற்களைச் சொல்லி, இரும்பை ஒத்த உடலை யுடைய மற்றைய வேடர்கட்கு முன்பு, வலிய பெரிய வில்லை யுடையவனும், மற்போர் செய்து பழகியதால் உயர்ந்த தோள் களையுடையவனும், வாள் வீரனான இராமனுக்கு நண்பனு மான குகன் (தென்கரையில்) நின்றான். இவன் நிற்பதைப் பார்த்து, வலிமையுடைய தேரைச் செலுத்துபவனான சுமந் திரன் ஆண் சிங்கத்தை ஒத்த வலிமையுடைய பரதனிடத்தில் வந்து சொல்லலானான்.

---

919. ஏனோர் - மற்றைய வேடர். பணை - பெரிய. மல் உயர் - மற்பயிற்சியால் பருத்த. வாள் வீரன் - இராமன். அரிஏறு - ஆண் சிங்கம். முன்பன் - வலிமையுடையவன். மூரிய - வலிமையுள்ள.

தனி நாதற்கு உயிர்த்துணைவன்

920 *கங்கைஇரு கரைஉடையான்,
கணக்கிறந்த நாவாயான்,
உங்கள்குலத் தனிநாதற்கு
உயிர்த்துணைவன், உயர்தோளான்,
வெங்கரியின் ஏறுஅனையான்,
விற்பிடித்த வேலையினான்,
கொங்குஅலரும் நறும்தண்தார்க்
குகன்என்னும் குறியுடையான். கஅ

கங்கையின் இரு கரைகளையும் (தனக்குச் சொந்தமாக) உடையவன் ; எண்ணற்ற படகுகளை உடையவன் ; உங்கள் குலத்தில் பிறந்த ஒப்பற்ற தலைவனான இராமபிரானுக்கு உயிரை யொத்த நண்பன் ; உயர்ந்த தோள்களையுடையவன் ; வீரமுள்ள ஆண் யானையை ஒத்தவன் ; வில்லைப் பிடித்த (சேனையாகிய) கடலையுடையவன் ; தேன் துளிக்கிற மணமுள்ள குளிர்ந்த மாலையணிந்த குகன் என்ற பெயரையுடையவன் ;

(வி - ம்) குகனைப் பற்றிய இத்தனை விவரங்களை முன்னரே சுமந்திரன் அறிந்துள்ளான். இராமன் சென்ற வழிகளையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் ஒற்றர்மூலர் அறிந்திருந்தான் என்னலாம்.

---

920. கணக்கு இறந்த - கணக்கற்ற. நாவாய் - படகு. கரி - யானை. ஏறு - ஆண். வேலை - கடல். விற்பிடித்த கடல் - சேனைக் கடல். கொங்கு - தேன். அலர்தல் - துளித்தல். நறு - மணம் வீசுகிற. தண் - குளிர்ந்த. குறி - பெயர்.

உன்னைக்காண விரும்புகிறான்

921 கற்காணும் திண்மையான்,
கரைகாணாக் காதலான்,
அற்காணில் கண்டனைய
அழகமைந்த மேனியான்,
மற்காணும் திருநெடும்தோள்
மழைகாணும் மணிநிறத்தாய்!
நிற்காணும் உள்ளத்தான்
நெறிஎதிர்நின் றனன்என்றான். கசு

மற்போரின் எல்லைகண்ட சிறந்துவளர்ந்த தோள்களையும், மழைமேகத்தை ஒப்புக்காணும்படியான அழகிய நிறத்தையு முடையவனே! மலையைக் கண்டாற்போன்ற திணிந்த உடலை யுடையவனும், வரம்பற்ற அன்புடையவனும், நோக்குமிடத்து இருட்டைப் பார்த்த மாதிரி அழகமைந்த நிறத்தையுடைய வனுமான குகன், உன்னைக் காணும் விருப்பத்தையுடையவன் (போல) வழியில் வந்து நிற்கின்றான் என்று (சுமந்திரன்) கூறினான்.

(வி - ம்) பார்த்தால் அவன் உடல் கல்லில் செய்த மாதிரி தான் இருக்கும்; ஆனால் உள்ளமோ அன்பில் இளகியது; நிறமோ நல்ல கருப்பு; ஆனால் உடலுக்குரிய அழகெல்லாம் நிறைந்திருக்கும் என்றான் சுமந்திரன். பரதன், மற்போரிற் சிறந்தவன் என்று பிற இடங்களிலும் குறிப்பிடப்படுகிறான்.

துருசிலாத் திருமனத்தான்

922 தன்முன்னே அவன்தன்மை
தந்தைதுணை முந்துரைத்த
சொல்முன்னே உவக்கின்ற
துரிசிலாத் திருமனத்தான்,

---

921. அல் - இருட்டு. மேனி - நிறம். மல் - மற்போர். மழை - மேகம். நெறி - வழி.

மன்முன்னே தழீஇக்கொண்ட
மனக்கினிய துணைவனேல்,
என்முன்னே! அவற்காண்பேன்
யானேசென்று எனஎழுந்தான். கஉ

தன்னெதிரில் வந்து, குகனுடைய தன்மைகளைத் தன் தந்தையின் துணைவனான சுமந்திரன், முற்பட்டுச் சொன்ன சொல்லுக்கு முன்பாகவே மகிழ்ந்து ஏற்ற, குற்றமற்ற சிறந்த மனத்தையுடைய பரதன், எனது மன்னன் முன்னே ஏற்றுக் கொண்ட மனத்துக்கினிய துணைவனென்றால், எனக்கு மூத்தவனே ஆவான். அவனை நானே முதலில் சென்று காண்பேன் என்று எழுந்தான்.

குகன் திடுக்கிட்டான்

923 என்றெழுந்து, தம்பியொடும்
எழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதுஎனக்
குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை, நோக்கினான்;
திருமேனி நிலைஉணர்ந்தான்;
துன்றுகரும் நறுங்குஞ்சி
எயினர்கோன் துண்என்றான். கசு

---

922. முந்து - முன்னதாக: தொடக்கத்திலேயே. துரிசு - குற்றம். மன் - அரசன்: இராமன். தழீஇ - தழுவி. என்முன்னே - எனக்கு முன்பிறந்த அண்ணனாவான். அவற்காண்பேன் - அவனைக் காண்பேன்.

923. குறுகி - அடைந்து. துன்று - நெருங்கிய. நறு - மலரின் மணம் வீசுகிற. குஞ்சி - ஆணின் தலைமயிர். எயினர் - வேடர். கோன் - அரசன். துண் எனல் - திடுக்கிடல்.

என்று, கூறி எழுந்து, தம்பியுடனும், எழுந்த (தன்னை இழுத்துக்கொண்டு முன்னே செல்கின்ற) அன்பினோடும், மலையே எழுந்து செல்கின்றதென்று கூறும்படி, குளிர்ந்த கங்கையின் கரையை அடைந்து நின்ற பரதனை, நெருங்கிய பூவணிந்த கரிய தலைமயிரையுடைய வேடர் தலைவன் நோக்கினான்; அழகிய உடல் இருக்கிற நிலையை உணர்ந்தான்; திடுக்கிட்டான்.

கையிலிருந்த வில் நழுவிற்று

924 வற்கலையின் உடையானை,
மாசடைந்த மெய்யானை,
நற்கலைஇல் மதிஎன்ன
நகைஇழந்த முகத்தானை,
கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்;
விற்கையின்நின்று இடைவீழ,
விம்முற்று நின்றொழிந்தான். கஎ

மரவுரியை உடையாக அணிந்தவனும், தூசி படிந்த உடம்பையுடையவனும், நல்ல ஒளியை இழந்த சந்திரன் என்று சொல்லும்படியான மலர்ச்சியற்ற முகத்தையுடையவனும், கண்ட கல்லும் கரைந்து உருகும்படி மிகுகின்ற துயரத்தையுடையவனுமான பரதனைக் கண்ணுற் கண்டான். கையிலிருந்த வில் நழுவிக் கீழேவிழ, மூச்சுத் திணறிச் சிலைபோல அப்படியே நின்றுவிட்டான்.

---

924. வற்கலை - மரவுரி. மாசு - தூசி. கலை - ஒளி. நகை - புன்சிரிப்பு: மலர்ச்சி. கனிகின்ற - மிகுதிப்படுகின்ற. நல்+கலை= நற்கலை. கல்+கனிய=கற்கனிய. வில்+கை=விற்கை.

இராமன் தம்பியர் பிழைசெய்வரோ ?

925 நம்பியும்என் நாயகனை
ஒக்கின்றான் ; அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் ;
தவவேடம் தலைநின்றான் ;
துன்பம்ஒரு முடிவில்லை ;
திசைநோக்கித் தொழுகின்றான் ;
எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு?என்றான். கஅ

பரதனும் என்னுடைய தலைவனையே ஒத்திருக்கின்றான்; அருகே நிற்பவன் இலக்குவனை ஒத்திருக்கின்றான் ; தவவேடத்தை மேற்கொண்டுள்ளான் ; அவன் கொண்டிருக்கிற துன்பத்துக்கு முடிவேயில்லை ; இராமன் சென்ற திசையை நோக்கித் தொழுதுகொண் டிருக்கிறான்; எம்பெருமானுக்குப் பின்னே பிறந்தவர்கள் பிழையைச் செய்வார்களா ? என்றான்.

(வி - ம்) படை திரட்டிக்கொண்டு பரதன் வந்திருக்கிறான் என்று கருதியதால்தான் குகனுக்குக் கோபம் எழுந்தது. இப்பொழுது பரதனின் நிலையைப் பார்த்தால் படையெடுப்பல்ல ; பரிதாபமாக இருக்கிறது. விரைத்து நின்ற குகனுடைய உடல் தளர்ந்து வில்லைப் பிடிக்கும் தகுதியை இழந்துவிட்டது. உள்ளமோ எமது தலைவனுக்குத் தம்பியாகப் பிறந்தவன் பிழை செய்யமாட்டான் என்று கூறுகிறது. இந்தத் தத்துவம் முன்னர் ஏற்படவில்லை. அறிவைக் கொண்டு எல்லா உண்மையையும் அறிதல் இயலாது. அனுப

925. நம்பி - ஆணிற்சிறந்தவன் : பரதன். நாயகன் - இராமன். அயல்நின்றான் - அருகில் நிற்பவன் : சத்துருக்கன். தம்பி - இலக்குவன். தலைக்கொள்ளல் - மேற்கொள்ளல். இழைத்தல் - செய்தல். பிழைப்பு - தவறுதல்.

வத்தால் அறிய முடிகிறது என்ற உண்மை இங்கே தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது. இராமன் பரிபூரணமான நற்குண முடையவன். அவன் தம்பி பிழைசெய்யான் என்பதை அறிவைக்கொண்டு குகனால் அறிய முடியவில்லை. இப்போது நேரே கண்டு அறிந்தான் என்க.

கண்டறிந்து வருகிறேன்

926 உண்டுஇடுக்கண் ஒன்றுடையான் ;
உலையாத அன்புடையான்
கொண்டதவ வேடமே
கொண்டிருந்தான் ; குறிப்புஎல்லாம்
கண்டுஉணர்ந்து பெயர்கின்றேன் !
காமின்கள் நெறிஎன்னா,
தண்துறையோர் நாவாயில்
ஒருதனியே தான்வந்தான். கக

உண்டாகிற பெரிய துன்பத்தை உடையவனாகத் தெரிகிறது. அன்பு நீங்காத இராமபிரான் கொண்டிருந்த தவ வேடத்தையே (இவனும்) கொண்டிருக்கிறான். (அவனுடைய) மனக்கருத்து முழுமையும் தெரிந்து உணர்ந்து திரும்புகிறேன். (அவர்கள்) செல்லக்கூடிய வழிகளைக் காத்துக் கொண்டிருங்கள் என்று கூறிவிட்டு, தோணித் துறையில் நின்ற ஒரு படகில் தான் மட்டும் தனியாகச் சென்றான்.

(வி - ம்) பரதனுடைய தோற்றம் அன்புமயமாக இருக்கிறது. ஆனால் படை திரண்டு வந்திருப்பதைப் பார்த்தால் ஐயமேற்படுகிறது. எதற்கும் வழியை விடாதீர்கள் ; நான்

---

926. இடுக்கண் - துன்பம். உலையாத - நீங்காத. குறிப்பு-கருத்து. பெயர்தல் - திரும்புதல். நெறி - வழி. தண்துறை - குளிர்ந்த தோணித்துறை. நாவாய் - படகு.

சென்று உண்மையைத் தெரிந்து வருகிறேன் என்று குகன் புறப்பட்டான்.

இருவர் சந்திப்பு

927 வந்து,எதிரே தொழுதானை
வணங்கினான்; மலர்இருந்த
அந்தணனும் தனைவணங்கும்
அவனும்அவன் அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத்
தழுவினான் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும்
வீற்றிருக்கும் சீர்த்தியான். ௨௦

(குகன்) வந்து தன் எதிரே நின்று தொழுதுகொண்டிருக்கிற பரதனை வணங்கினான். மலரிலே வீற்றிருக்கிற பிரமதேவனும் தன்னை வணங்கத் தக்க பெருமையையுடைய பரதனும், குகனுடைய பாதத்தில் விழுந்து வணங்கினான். அறிவாளிகளின் உள்ளத்திலும் தலைமேலும் வீற்றிருக்கத் தக்க புகழுக்கு உரியவனான குகன், பெற்ற தந்தையைக் காட்டினும் பெருமகிழ்ச்சி யடைந்து (பரதனைத்) தழுவினான்.

(வி - ம்) குகன் படகில் வந்துகொண்டே யிருந்தான். பரதன் திசை நோக்கித் தொழுதுகொண்டே யிருந்தான். குகன் கரையில் இறங்கியவுடன் பரதனை வணங்கினான். பதிலுக்குப் பரதன் குகனுடைய பாதத்தில் விழுந்து வணங்கினான். குகன், பெற்ற தகப்பனைப்போல மகிழ்ச்சியோடு தூக்கித் தழுவிக்கொண்டான். இதிலே ஐயத்துக்கோ குழப்பத்துக்கோ இடமில்லை. வேடன் காலில் அரசன் விழலாமா? என்ற கலக்கத்தால் உரைகண்டாரிற் சிலர் குழம்பினர். பாத

927. மலரிருந்த அந்தணன்-பிரமன். களி - களிப்பு. தகவு-அறிவு. சென்னி - தலை. சீர்த்தி - புகழ்.

னும் குகனும் கண்டது ஒன்றே; அதுதான் இராம பக்தி. அதில் மூழ்கிப்போயினர். கடவுள் அன்பராயினர். 'புலைய ரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே' (அப்பர் - தனித்திருத் தாண்டகம்). பரதன் குகனைத் தனது அண்ணனாகவே கருதி விட்டான். 'மன்முன்னே தழீஇக் கொண்ட மனக்கினிய துணைவனேல் என்முன்னே' (பாடல் 922) என்பதாலறிக.

மன்னனை அழைக்க வந்தேன்

928 *தழுவின புளினர் வேந்தன்,
தாமரைச் செங்க ணானை
'எழுவினும் உயர்ந்த தோளாய்!
எய்தியது என்னை' என்ன,
'முழுதுலகு அளித்த தந்தை
முந்தையோர் முறையி னின்றும்
வழுவினன்; அதனை நீக்க,
மன்னனைக் கொணர்வான் வந்தேன்' உக

அவ்வாறு தழுவிக்கொண்ட வேடர் மன்னன், தாமரைமலர் போன்ற சிறந்த கண்களையுடைய பரதனை (நோக்கி) 'தூணைக்காட்டிலும் உயர்ந்த தோள்களையுடையவனே! இங்கே வந்தது யாது காரணம்பற்றி' என்று கேட்க, உலகம் முழுதையும் (ஒரு குடையின்கீழ்) காத்த (நம்முடைய) தகப்பன் முன்னோர்களின் ஒழுங்கிலிருந்து தவறி விட்டான். அந்தக் குறையை நீக்கும் பொருட்டு மன்னனை அழைத்துக்கொண்டு போவதற்காக வந்தேன் (என்றான்).

(வி - ம்) இராமனை மன்னன் என்றான். அரசுக்கு உரியவன் அவன்தான் என்றபடி.

---

928. புளினர்-வேடர். எழு-தூண். அளித்த-காத்த. முந்தையோர்-முன்னோர். முறை-ஒழுங்கு. வழுவினன் - தவறிவிட்டான்.

காலில் பூட்டிய கையன்

929 கேட்டனன் கிராதர் வேந்தன்
கிளர்ந்தெழும் உயிரன் ஆகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்
விம்மினன்; உவகை வீங்கத்
தீட்டரும் மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவில்,
பூட்டிய கையன் பொய்யில்
உள்ளத்தான் புகலல் உற்றான். உஉ

(இதனை) வேட மன்னன் கேட்டதும் மிகுந்து எழுந்த உயிரையுடையவன்போலாகி (தழுவிப் பிடித்திருந்த கைகளை) விடுவித்துக்கொண்டு கீழே விழுந்து (பரதனை வணங்கி) பொருமினான். மகிழ்ச்சி பெருக, எழுத முடியாத அழகை யுடைய பரதனின் சிவந்த திருவடிகளாகிய தாமரைப் பூவில் கட்டிக்கொண்ட கையையுடையவனாய், பொய்யில்லாத உள்ளத்தை உடைய குகன் சொல்லத் தாவங்கினான்.

(வி - ம்) இதைக் கேட்டானோ இல்லையோ உயிர் உடலினுள் அடங்கவில்லை. அவ்வளவு வியப்பும் மகிழ்ச்சியும். பொய்யில் உள்ளம் பொய்யை அறியாத உள்ளம் ஆம். 'மீட்டு' என்றதை 'தழுவின புளினர் வேந்தன்' என்றதனோடு கூட்டித், 'தழுவின புளினர் வேந்தன் (கைகளை) மீட்டு' என்று கொள்ளல் வேண்டும். மீட்டு என்ற சொல்லுக்கு மறுபடியும் என்று பொருள் கொண்டதனால் முன் பாடலில் 'அவனும் அவன் அடி வீழ்ந்தான்' என்பதை 'குகனும் பரதன் அடியில் வீழ்ந்தான்' என்று கொள்ளும்

929. கிராதர் - வேடர். கிளர்தல் - மிகுதல். மீட்டு - பிடியிலிருந்து கையை எடுத்து. உவகை - மகிழ்ச்சி. வீங்க - மிக. தீட்டல் - வரைதல். கமலப்பூ - தாமரைப்பூ.

இடர்ப்பாடு ஏற்பட்டதென்க. 'கிளர்ந்தெழும்உயிரன் ஆகி' என்றது உள்ளே இருக்கிற உயிர்த் தத்துவமே எழுச்சியுற்று உடல் இடம் போதாமல் வெளிப்படத் தோன்றின மாதிரி யான உணர்ச்சியை என்க.

ஆயிரம் இராமர் ஈடாகார்

930 தாயுரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச்
சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து
புகழிேனாய்! தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ தெரியின் அம்மா. உஉ

புகழையுடையவனே! தாயின் சொல்லைக் கொண்டு தந்தை அளித்த உலக ஆட்சியைத் தீவினை என்று கருதித் தள்ளி விட்டு, நெஞ்சிலுள்ள கவலையை முகத்தில் பெருக்கிக் கொண்டு (அண்ணனை அழைக்க) வந்திருக்கின்றாய் என்ற பொழுது (உன்னுடைய) தன்மையை நோக்கி ஆராய்ந்து பார்த்தால் ஆயிரம் இராமர் (கூடினாலும்) உனக்கு ஒப்பு ஆவரோ? அம்மா!

(வி - ம்) ஒரு இராமன் பிறந்ததே உலகம் செய்த பெரும் புண்ணியத்தினால் என்று கருதுகிறோம். அவ்வாறு ஆயிரம் இராமர் பிறக்க, அவர்களெல்லாரையும் ஒரு தட்டில் ஏற்றி, உன்னை மற்றொரு தட்டில் ஏற்றினால் உன்

930. தரணி-உலகம். நீத்து - உதறிவிட்டு. சிந்தனை - மனக் கவலை. தேக்கி-பெருக்கி. போயினை-வந்தாய். கேழ்- ஒப்பு. தெரியின் ஆராய்ந்தால்.

னுடைய எடைதான் அதிகமாகும் என்றான் என்க. இராம னுக்கு இயற்கையாகவே கிடைக்கவேண்டிய அரசை விட்டுத் துறந்துபோனது பெரிய காரியந்தான். ஆனால் பரதனுக்கு இந்தப் பிறப்பில் இந்த அரசு கிடைக்குமென்று எண்ணவும் இடமில்லை. அது கிடைத்தது. தாயின் வரத்தினால் 'நின்மகன் ஆள்வான் நீ இனிதாள்வாய் நிலமெல்லாம், உன் வயமாமே ஆளுதி தந்தேன் உரை குன்றேன்' (பாடல் 526) என்று தந்தை, தந்த அரசு. அதை வேண்டா மென்றது மட்டுமா? வந்து சேர்ந்த தீவினையை வெறுத்துத் தள்ளுவதுபோலத் தள்ளிவிட்டாயே! மேலும் அவனை அழைத்து முடி சூட்ட வும் புறப்பட்டனையே! என்று வியந்து புகழ்ந்தான். 'ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர் ஈயேனென்றல் அதனி னும் இழிந்தன்று; கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர் கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று' (புறம் 204) என்பது இங்கு நோக்கத்தக்கது.

புகழெல்லாம் உன்புகழ்

931 என்புகழ் கின்றது? ஏழை
ஏயினனேன்; இரவி என்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்,
மன்புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன்புகழ் ஆக்கிக் கொண்டாய்!
உயர்குணத்து உரவுத் தோளாய்! உச

உயர்ந்த குணங்களையும் வலிய தோளையுமுடையவனே! உன் குணத்தைப் பற்றி எப்படித்தான் புகழ்கிறது? நான்

931. எயினன் - வேடன். கற்றை - தொகுதி. மன்-மன்னர். நுங்கள் - உங்கள். உரவு - வலிமை.

ஒரு அறிவில்லாத வேடன். சூரியன் என்பவனுடைய கிரணத்தொகுதி, மற்றை ஒளிகளை மழுங்கச் செய்வதைப் போல, மன்னர்களால் புகழப்படும் பெருமையையுடைய உங்கள் குலத்தில் பிறந்தவர் பெற்ற புகழ்கள் யாவும், உன் புகழில் அடங்கும்படி செய்துகொண்டாய்.

(வி-ம்) சூரியன் தோன்றினல் சிறிய ஒளியெல்லாம் சூரியனது பேரொளியில் சேர்ந்துகொள்ளும். அவ்வாறு புகழ்பெற்ற உங்கள் குல முன்னேரின் புகழ் இருக்கத்தான் செய்கிறது. ஆனல் அவை உன் புகழினுள்ளே அடங்கி நிற்கவேண்டியதாய் விட்டது என்றபடி. முன்னேர் புகழெல்லாம் இராமனின் புகழில் அடங்கியது என்று அயோத்தி மக்கள் கருதினர் என்பது இதனேடு ஒப்புக் காணக்கூடிய தாம். 'பேர்கெழு சிறப்பின் வந்த பெரும்புகழ் நிற்பது ஐயன், தார்கெழு திரள்தோள் தந்த புகழினைத் தழுவி என்பார்' (பாடல் 556). ஏழை என்று குகன் தன்னைக் கூறிக் கொண்டது அடக்கத்தினலாம்.

சரி; அண்ணன் எங்கே தங்கினன்?

932 அவ்வழி அவனை நோக்கி,
அருள்தரு வாரி அன்ன
செவ்வழி உள்ளத் தண்ணல்
தென்திசைச் செங்கை கூப்பி,
'எவ்வழி உறைந்தான் நம்முன்'
என்றலும், எயினர் வேந்தன்,
'இவ்வழி! வீர! யானே
காட்டுவல்! எழுக!' என்ருன். உடு

932. வழி - பொழுது: இடம். வாரி - கடல். செவ்வழி - செம்மையான நெறி. எயினர் - வேடர். காட்டுவல் - காட்டுவேன்.

அப்பொழுது குகனை நோக்கி, அருட் கடலை யொத்த செவ்விய வழியிலே செல்லும் உள்ளத்தையுடைய பரதன், தென்பக்கம் (நோக்கிக்) கைகூப்பித்தொழுதுகொண்டு, ' எவ்விடத்தில் தங்கியிருந்தான் நம்முடைய அண்ணன் ' என்று கேட்டதும், வேடர் தலைவன், ' இவ்விடத்தில்தான் வீரனே! நான் காட்டுகிறேன் எழுங்கள் ' என்றான்.

பள்ளி கண்டான் பதைத்து வீழ்ந்தான்

933 கார் எனக் கடிது சென்றான் ;
கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான் ;
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் ;
பருவரல் பரவை புக்கான் ;
வார்மணிப் புனலான் மண்ணை
மண்ணுநீர் ஆட்டும் கண்ணான். உசு

மேகத்தைப் போல விரைந்து சென்றான் ; கற்களுக்கு இடையே பரப்பிய புல்லில், நீண்ட வில்லைத் தாங்கிய பெரிய கைகளையுடைய இராமபிரான் படுத்திருந்த படுக்கையைக் கண்டான்; பதைத்துக் கீழே விழுந்தான்; கடல்போன்ற துன்பப் பெருக்கில் முழுகிப்போனான். தொடர்ந்து வடிகின்ற கண்ணீரினால் நிலத்தைக் குளிப்பாட்டிய கண்களை யுடையவனானான்.

(வி - ம்) காற்றினால் தள்ளப்பட்ட மேகத்தைப் போல் தன் வசமிழந்து சென்றான் என்க. ' நின்னை யுள்ளி வந்த

---

933. கார் - மேகம். வள்ளல் - இராமன். வைகிய - தங்கிய. பள்ளி - படுக்கை. பருவரல் - துன்பம். பரவை - கடல். வார் - வடிகின்ற. மணிப்புனல் - கண்ணீர். மண்ணுதல் - நீராடுதல். மண்ணுநீர் - குளித்தற்குரிய நீர்.

னென் நன்னுத லரிவை காரினும் விரைந்தே' (ஐங்குறு 492). வைகிய என்பது தங்கிய என்ற பொருளைத் தரும். 'வைகிய பள்ளி' என்றதால், இராமன் இந்தப் புல்லில் படுத்ததால் தூங்கியே இருக்கமாட்டான் என்று கருதினான் என்னலாம். கீழே விழுந்த பரதனின் கண்களிலிருந்து கண்ணீர் பேருற்றாக வெளிப்பட்டதால் பூமி முழுமையுமே நனைந்துவிட்டதோ என்று கருதும்படி யாகிவிட்டது. மணிப்புனல் - கண்ணின் சிறந்த பகுதியாகிய உள்மணியே உருகி நீராக வருவதென்று எண்ணும்படியான துன்ப நீர் என்க. இராமன் காட்டில் வருந்துவான் என்பதை நினைந்து தயரதன் வருந்துவதாக வுள்ள திவ்யப் பிரபந்தப் பாசுரம் இங்கு நோக்கத்தக்கது. 'மெல்லணைமேல் முன் துயின்றாய் இன்றினிப் போய் வியன் கான மரத்தின் நீழல், கல்லணைமேல் கண் துயிலக் கற்றனையோ காகுத்தா கரிய கோவே' (நாலாயிரம் 732).

ஆவி போகவில்லையே

934 இயன்றதுஎன் பொருட்டி னால்இவ்
இடர்உனக்கு என்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும் காயும்
அமிர்தென வலிய புல்லில்
துயின்றனை எனவும், ஆவி
துறந்திலென்; சுடரும் காசு
குயின்றுயர் மகுடம் சூடும்
செல்வமும் கொள்வென் யானே. உஎ

என் பொருட்டால் (வனவாசம் செய்யும் படியான) இந்தத் துன்பம் உனக்கு ஏற்பட்டது என்று (கைகேயியினால்)

---

934. இயன்றது - ஏற்பட்டது. இடர் - துன்பம். அயில்தல் - உண்டல். சுடர்தல்-ஒளி செய்தல். காசு-மணிகள். குயின்று-பதித்து.

அறிந்தபோதும், கிழங்கையும் காயையும் அமிர்தம் என்று நினைத்து உண்டாய், உறுத்தும் தன்மையுள்ள புல்லில் தூங்கினாய் என்று கேட்ட இப்போதும் உயிர் நீங்கப் பெற்றேனில்லை. ஒளி விடுகிற இரத்தினங்கள் பதித்து உயர்ந்து விளங்குகிற முடியைச் சூடுகின்ற செல்வத்தையும் யான் அடைந்தவனே யாவேன்.

(வி - ம்) பெரும்பிழை அல்லது பெரிய இழப்பு ஏற்பட்டால் அந்தச் செய்தி அறிந்தபோதே உயிர் நீங்கவேண்டும். அதுவே தலையாய குணம். கற்புடைய மகளின் உயிர், கணவன் இறந்தானென்று கேட்டதும் பிரிந்துபோதல் போல. அவ்வாறு பிரியாவிட்டால் உலகச் செல்வத்தில் உற்ற பற்று, அன்பைக் காட்டிலும் வலிதாகிவிடும். தன் பொருட்டாக ஏற்பட்டது இந்த நிகழ்ச்சிகள் யாவும். தந்தையோ இறந்தான் ; இராமனோ காட்டுக்குச் சென்றான். இச்செய்தியைக் கேட்ட அப்பொழுதே உயிர் போயிருக்க வேண்டும் ; போகவில்லை. கிழங்கும் காயும் தின்று புல்லில் கிடந்தான் என்று கேட்ட இப்பொழுதாவது போயிருக்க வேண்டும் ; போகவில்லை. அன்பெங்கே எனக்கிருக்கிறது? அன்பு பெரிதல்லவென்றால் பிறகு உள்ளதெது ? செல்வப் பற்றுத்தானே ! என் மனம் வருந்துகிறது உண்மைதான் ! ஆனால் அது செயல்படவில்லையே ? ஆதலின் பொய்யாக முடிகிறது என்று வருந்துகிறான்.

இளையவன் பொழுதைக் கழித்தது எங்கே ?

935 தூண்தர நிவந்த தோளான்,
பின்னரும் சொல்லு வான் ;அந்
நீண்டவன் துயின்ற சூழல்
இதுஎனில், நிமிர்ந்த நேயம்

பூண்டவன், தொடர்ந்து பின்னே
போந்தவன், பொழுது நீத்தது
யாண்டு?என இனிது கேட்டான் ;
எயினர்கோன் இதனைச் சொன்னான். உஅ

தூணைப்போல உயர்ந்திருக்கிற தோள்களையுடைய பரதன், மீண்டும் சொல்லுகிறான் ; அந்தப் பெரியவன் தூங்கிய இடம் இது என்றால், தலை நிமிர்ந்த அன்பு கொண்டவனும், பிரியாமல் பின்னே தொடர்ந்து சென்றவனுமான இலக்குவன் இராப்பொழுதைக் கழித்தது எவ்விடத்தில்? என்று ஆவலோடு கேட்டான். வேடர் தலைவன் இவ்வாறு பதிலளித்தான் ;

(வி-ம்) இலக்குவன் தூங்கியிருக்கமாட்டான், புல்லில் படுத்திருந்த கொடுமையை எண்ணினால் தூக்கம் வரவா செய்யும் என்று கருதியதனாலேயே 'பொழுது நீத்தது' என்று கேட்டான் என்க. தன்னுடைய அன்பு தலை நிமிர்ந்து நிற்கவில்லை யென்றும், இலக்குவனின் அன்பே தலையன்பு என்றும் கருதியபடியால் 'நிமிர்ந்த நேயம் பூண்டவன்' என்றான்.

விழித்தபடி விடிகிற வரை நின்றான்

936 அல்லைஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச,
வில்லைஊன் றியகை யோடும்,
வெய்துயிர்ப் போடும் வீரன்,

---

935. தர - ஒப்ப. நிவர்ந்த - உயர்ந்தெழுந்த. நீண்டவன் - இராமன். சூழல் - இடம். நிமிர்ந்த நேயம் - தலையன்பு. நீத்தல்- கழித்தல். யாண்டு - எவ்விடம். இனிது - ஆவலோடு.

936. அல் - இருட்டு. ஆண்டு - ஒத்து. கல் - மலை. கங்குல் - இரவு. எல்லை - முடிவு. நயனம் - கண்.

கல்லையாண்டு உயர்ந்த தோளாய்!
கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்,
இமைப்பிலன் நயனம் என்றான். ௨௧

மலையினை ஒத்து உயர்ந்த தோள்களையுடைய பரதனே! இருளினைக் கொண்டு அமைந்தாற் போலுள்ள திருமேனியையுடைய அழகமைந்தவனும் (இராமனும்) அவளும் (சீதையும்) துயில்கொள்ள, வீரனாகிய இலக்குவன், வில்லை (தரையில்) ஊன்றிப் பிடித்த கையினோடும், பெருமூச்சோடும் கண்களில் நீர் சொரிந்துகொண்டிருக்க, இரவு நீங்குகிறவரை நின்று கொண்டிருந்தான். கண்ணை இமைக்கவேயில்லை என்றான்.

(வி - ம்) மேற்கொண்ட செயல் முற்றும்வரை சோர்வடையாமல் செய்து முடிப்பவனே வீரனாதலாலும் இங்கே இலக்குவன் விடியும்வரை சோராமல் காத்து நின்றானதலாலும் 'வீரன்' எனப்பட்டான். இராமனை அழகன் என்று கூறிய குகன், அழகின் எல்லையான சீதையை, அவள் என்றான் அவளைக் கூர்ந்து நோக்காமையின்.

அன்புக்கு எல்லை உண்டா?

937 என்பத்தைக் கேட்ட மைந்தன்,
இராமனுக்கு இளையார் என்று,
முன்புஒத்த தோற்றத் தேமில்,
யான்என்றும் முடிவுஇ லாத
துன்பத்துக்கு ஏது வானேன்;
அவன்அது துடைக்க நின்றான்;
அன்பத்துக்கு எல்லை உண்டோ?
அழகிதுஎன் அடிமை! என்றான். ௩௦

937. என்பத்தை - என்பதை. மைந்தன் - பரதன். ஒத்த தோற்றம் - ஒப்பான பிறப்பு. துடைக்க - நீக்க. அன்பத்துக்கு - அன்புக்கு. அழகிது - அழகாக இருக்கிறது.

என்ற சொற்களைக் கேட்ட பரதன், இராமபிரானுக்கு இளையவர் என்று ஒரே மாதிரியாகப் பிறந்த எங்கள் இருவரில், யான் என்றைக்கும் முடிவில்லாத துன்பத்திற்குக் காரணமாயினேன் ; இலக்குவனோ அத்துன்பத்தை நீக்க முற்பட்டு நிற்கிறான்; அன்புக்கு எல்லை ஏது? என்னுடைய தொண்டின் தன்மை அழகாக இருக்கிறது என்றான்.

(வி - ம்) இராமனுக்குத் தம்பி என்று இருவருந்தான் பிறந்தோம். என்னாலேதான் (தாய் செய்த கொடுமையால்) அவனுக்கு முடிவில்லாத பெருந்துன்பம் ஏற்பட்டுவிட்டது. அதை உடனிருந்து மாற்ற இலக்குவனுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு உண்மை அன்புதானே காரணம் என்று கருதுகிறான். உண்மையான அன்புக்கு ஒரு அளவும் உண்டோ ? என்று வியக்கிறான். அந்தப் பேறு தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஏங்குகிறான். தான் உண்மையான அடியான் என்று கூறிக்கொள்ள என்ன இருக்கிறது என்று அவனுடைய எண்ணத்திலேற்பட்ட வெறுப்பினை, ' அழகிது என் அடிமை ' என்ற தொடர் விளக்குவதாகும். இராமன் பிரிவுக்குப் பரதன் காரணனாகவும், இலக்குவன் துணை சென்று உதவியவனாகவும் கொள்ளப்படும்போது, இரண்டுக்கும் உட்படாத சத்துருக்கன் தனிப்பட்டுப் போகிறான் ; ஆதலின் அவனை விலக்கி, தோன்றிய இருவர் என்று கூறினானென்க. இப்பாடலின் தொடக்கத்திலேயே பின்வரும் எதுகை நோக்கி, ' என்பதை ' என்ற சொல் ' என்பத்தை ' என்று திரிக்கப்பட்டிருக்கிறது. கடையடியும் அவ்வாறே உள்ளது. கதைத் தொடர்பு கருதியே இப்பாடல் இங்கே இருக்கிறது.

கங்கையைக் கடக்க உதவிசெய்

938 அவ்விடை அண்ணல் தானும்
அன்றுஅரும் பொடியின் வைகித்
தெவ்விடை தரநின்று ஆர்க்கும்
செறிகழல் புளிஞர் கோமான்!
'இவ்விடைக் கங்கை ஆற்றின்
ஏற்றினை யாயின், எம்மை
வெவ் இடர்க் கடல்நின்று ஏற்றி
வேந்தன்பால் விடுத்தது' என்றான். ௩௧

அவ்விடத்தில் பரதன் (அன்றிரவு) படுக்கத்தகாத புழுதியில் தங்கியிருந்து, 'பகைவர் பின்வாங்கும்படி நின்று ஒலிக்கிற நெருங்கிய வீரக்கழலை யணிந்துள்ள வேடர் தலைவனே! இப்பொழுது கங்கை ஆற்றின் (அக்கரையிலே) ஏறும்படி செய்வாயாயின் கொடிய துன்பக் கடலினின்று எங்களைக் கரையேற்றி மன்னனிடத்தில் சேர்த்ததாகும்'' என்றான்.

சேனையைப் படகில் ஏற்றுக

939 வந்தன வரம்பில் நாவாய்,
வரிசிலைக் குரிசில் மைந்த!
சிந்தனை யாவது என்று
சிருங்கிபே ரியர்கோன் செப்ப,

---

938. இடை - இடம். அண்ணல் - பரதன். அரும் - (தங்குதற்கு) அரிதான. பொடி - புழுதி. வைகி - தங்கி. தெவ் - பகைவர். இடைதருதல் - பின்வாங்குதல். புளிஞர் - வேடர். இடை-பொழுது ஏற்றுதல் - கரையேற்றுதல். வெவ் இடர் - கொடிய துன்பம்.

939. குரிசில் மைந்தன் - தயரத மன்னனின் மகன். சிந்தனை - கருத்து. யாவது - யாது. சிருங்கி பேரியர் - சிருங்கி பேரமென்னும் ஊரிலுள்ளவர் (இது குகனுடைய ஊர்.) எந்தை - எமது தந்தையே. தானை - சேனை.

துடுப்புகளாகிய கால்களைக் கொண்டு ஆற்றின்மேல் நடந்து செல்கிறான் என்று கூறும் நயம் உணர்ந்து பாராட்டுதற்குரியதாம்.

செல்வத்தைத் துறந்த பெரியவள்

942 *சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி,
வெற்றித்தார்க் குரிசில்!'இவர் ஆர்'என்று
குகன்வினவ, 'வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல்தேவி, மூன்றுலகும்
ஈன்றானை முன்ஈன் றானைப்
பெற்றத்தால் பெறும்செல்வம், யான்பிறத்த
லால்துறந்த பெரியாள்' என்றான். ௩௫

உறவினரும் தேவர்களும் தொழும்படி படகில் நின்ற கோசலையைத் தொழுது நோக்கி, வெற்றிமாலையை அணிந்துள்ள பரதனே! இவர் யார்? என்று கேட்க, 'அரசர்கள் காத்துக்கிடக்கும் முன்வாயிலையுடைய சக்கரவர்த்தியின் முதலாவது மனைவி; மூன்று உலகையும் தோற்றுவித்த பிரம தேவனை முன்பு தோற்றுவித்த திருமாலை, (பிள்ளையாகப்) பெற்றதனாலே அடையவேண்டிய பாக்கியத்தை நான் பிறந்ததனால் இழந்த பெரியவள்' என்று கூறினான்.

(வி - ம்) இவர் யாரென்று விரலாற் சுட்டிப் பெரியவர்களை வினவுதல் தகாதாதலின் 'தொழுது நோக்கி' கேட்டனன் என்க. சிறந்த குணமுடைய அரசி என்றதனால் சுற்றத்தார்

---

942. சுற்றத்தார்-உறவினர். தார்-மாலை. குரிசில்-பரதன். முற்றம் - வாயில். முன்ஈன்றான் - திருமால்: இராமன். பெற்றத்தால் - பெற்றதால். பெறும் - அடையவேண்டிய. செல்வம் - இராம தரிசனம். துறந்த - இழந்த.

தொழுகின்றனர். இராமனைப் பெற்று அறம் நிலைபெறத் தந்ததால் தேவர் தொழுகின்றனர். இராமனை மகனாகப்பெற்ற கோசலை, அவனருகிலிருந்து அவனைக் கண்டு கண்டு மகிழ்வதே உண்மைச் செல்வமென்று கருதினாளே யன்றிச் சக்கரவர்த்திச் செல்வத்தை யன்று. சக்கரவர்த்திச் செல்வத்தைத் துறந்தாள் என்று உரைகண்டனர் சிலர். அரசு இராமனுக் கில்லை என்று கேட்டதும் கோசலை வருந்தவில்லை. இதை 'மன்னவன் ஏவியது, அன்று எனாமை மகனே உனக்கு அறன், நன்று நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து, ஒன்றி வாழுதி ஊழி பல என்றாள்' (பாடல் 573.) என்பதாலறிக. அவள் இழந்த செல்வம் இராமனே என்க. 'திருவே என் செல்வமே' (அப்பர் - தேவாரம்) உண்மையான செல்வம் இராமனேயாம். அதைப் பலமாதம் வயிற்றில் தாங்கியும் பெற்றும் வளர்த்தும் கண்டும் கேட்டும் அனுபவித்த அவள், அதனைப் பறிகொடுத்துத் தவிக்கிறாள் என்றவாறு. உலகச் செல்வம் மக்களைவிட்டுப் பிரியும்; அல்லது அதைவிட்டு மக்கள் பிரிவர். அது நிலையான செல்வமன்று. அதைக் கோசலை பொருட்படுத்தினா ளென்பதும், பரதன் குறித்துக் கூறினானென்பதும் பொருந்தாவாம். அடுத்த பாட்டில் 'கன்றுபிரி காராவின் துயருடைய' என்ற தொடர் இதனை வலியுறுத்தும். 'சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற கோசலையைத் தொழுது நோக்கி' என்பது வரை, கவிக் கூற்று. தேவர் தொழுதலை குகன் அங்கே காண்பதற் கில்லை. இராமனைப் பெற்ற கோசலையைத் தேவர் தொழுதே தீர்வர் என்ற உறுதி கவிக்கு உண்டென்க. சுற்றத்தார் 'ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்' ஆம். 'அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தவாத்தொழில் தூதுவர், சாரணர் என்றிவர், பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே'

‘ கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், நளிபடைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர், இனையர் எண்பே ராயமென்ப.’ (திவாகரம்). ‘சுற்றத்தாற் சுற்றப் படஒழுகல் செல்வந்தான், பெற்றத்தாற் பெற்ற பயன் ’ (திருக்குறள் 524) என்று அறம் கூறும். ‘கோசலை பெறற்கரிய செல்வத்தை (இராமனை)ப் பெற்றாள். அதன் பயனாக சுற்றத்தாரால் மட்டுமல்ல, தேவராலும் சூழ்ந்து பாராட்டப்படுகிறாள். ஆனால் நான் பிறந்ததால் அச் செல்வத்தையே இழந்து நிற்கிறாள் ’ என்று பரதன் வருந்திக் கூறினான் என்க. செல்வத்தைப் பெற்றாள்; பயனையும் பெற்றாள் ; ஆனால் பயன் உலகில் நிலைபெற்று நிற்க, செல்வத்தைத் தன்கையினின்றும் பறிகொடுத்துவிட்டாள் என்ற நயம் பாராட்டத் தக்கதாம்.

குன்றனைய திருநெடுந்தோட் குகன்

943 என்றலுமே அடியின்மிசை நெடிதுவிழ்ந்து
அழுவானை, ‘இவன்யார்’ என்று
கன்றுபிரி காராவின் துயர்உடைய
கொடிவினவ, கழற்கால் மைந்தன்,
‘இன்துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான் ;
குன்றுஅனைய திருநெடுந்தோள் குகன்என்பான்
இன்நின்ற குரிசில்’ என்றான். ௩௬

என்று (பரதன்) கூறியதும் கோசலையின் திருவடிகளில் விழுந்து அழுகின்ற குகனை, இவன் யார் ? என்று கன்றைப் பிரிந்த காராம்பசுவைப்போன்ற துயரத்தினையுடைய கொடி-

---

943. மிசை - மேலே. கார் ஆ - காராம் பசு. கொடி - பூங்கொடி : கோசலை.

போன்ற கோசலைகேட்க, கழலணிந்த கால்களையுடைய பரதன், 'இங்குள்ள ஆணிற் சிறந்தோனாகிய இவன், இராகவனுக்கு இனிய தம்பியாவான்; இலக்குவனுக்கும் சத்துருக்கனுக்கும் எனக்கும் மூத்தவன்; மலைபோன்ற சிறந்த உயர்ந்த தோள்களோடு விளங்கும் குகன் என்று கூறப்பெறுவான்' என்றான்.

(வி - ம்) எனக்கும் இலக்குவனுக்கும் இளையவனுக்கும் மூத்தவன் என்று பிறந்த வரிசைப்படி கூறியிருக்கலாம். சிறந்தவன் இலக்குவன் என்ற எண்ணம் பரதனின் உள்ளத்தில் அழுந்தியிருப்பதால் அவனை முன்னே வைத்துக் கூறினான் என்க. இதனைப் பின்பாடலிலும் 'இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான்' (பாடல் 945) என்று வற்புறுத்தப்படுவது உணரத்தக்கது. சத்துருக்கனை ஏன் தனக்குமுன் வைத்தான் எனின் அவன் பிறந்ததால் தீமை ஏற்படவில்லையாதலின் நன்மை செய்யும் இலக்குவனின் பின் அவனை வைத்தான் என்பதாம். தான் பிறந்ததாலேயே இராமன் காடுசெல்ல நேர்ந்ததென்பதால் தன் பிறப்பு, கடைப்பட்டதென்று பரதனது மாசற்ற உள்ளம் கருதியது. அதனால் தன்னைக் கடைசியில் எண்ணிப் பேசினான். குகனிடம், இராமன் கூறும்போது பரதனைக் குகனின் தம்பி என்று கூறினான் என்பதை, 'அங்குள கிளைகாவற்கு அமைதியின் உளன் உம்பி' (பாடல் 794) என்பதுகொண்டு அறியலாம். காராம்பசு என்பது உடலும் நாவும் முலைக் காம்புகளும் கருநிறமுள்ள பசுவாம்.

காட்டுக்கு வந்ததும் நன்மைதான்

944 நைவீர்அலீர் மைந்தீர் இனித்துயரால்
நாடுஇறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்று
ஆம்அன்றே விலங்கல் திண்தோள்

கைவீரக் களிறுஅனைய காளைஇவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர் என்றாள். ௩௭

மைந்தர்களே! இனித் துயரத்தினால் வருத்தப்படாதீர்கள். நாட்டை நீங்கிக் காட்டை நோக்கி உண்மையான வீரர்கள் (இராம இலக்குவர்) சென்றதும் நன்மையாகத் தான் முடிந்திருக்கிறது. மலைபோன்ற இறுகிய தோள்களையுடையவனும், துதிக்கையுடைய வீரம் பொருந்திய யானையை ஒத்தவனும், காளைபோன்றவனுமாகிய இவனோடும் சேர்ந்து நீங்கள் ஐவரும் ஒருவராக அகன்ற உலகத்தை நெடுங்காலம் காப்பாற்றுவீராக என்றாள்.

(வி - ம்) இராம இலக்குவர் காட்டுக்குச் சென்றது பெருந்துயரந்தான் ஆனாலும் அதிலிருந்து குகனைப் பெறும்படியான நன்மையும் ஏற்பட்டிருக்கிறதுஎன்று பாராட்டினாள். 'ஒருவீர்' என்றது ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதவராக வாழுங்கள் என்றும் ஆம். ஒருவுதலாவது - பிரிதல்.

அன்பின் நிறைந்தாள்

945 அறந்தானே என்கின்ற அயல்நின்றாள்
தனைநோக்கி, 'ஐய! அன்பின்
நிறைந்தாளை உரைஎன்ன' நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி

---

944. நைதல் - நினைந்து நினைந்து வருந்துதல். விலங்கல் - மலை. கை - தும்பிக்கை. களிறு - ஆண்யானை. காளை - காளை போன்ற குகன். ஐவீரும் - ஐவரும். ஒருவீர் - ஒருவர்: ஒரே கருத்துடையவராக. அளித்திர் - ஆளுங்கள்.

945. அயல் - பக்கம். திறம்பா - விலகாத. தொழுகுலம் - தெய்வம். பயந்த - பெற்ற.

இறந்தான்தன் இளந்தேவி, யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு,
பிறந்தானும் உளன்என்னப் பிரியாதான்
தனைப்பயந்த பெரியாள்' என்றான். ௩௮

அறமே உருப்பெற்று வந்தமாதிரி கோசலையின் பக்கத்தில் நிற்கிறவளை நோக்கி, 'ஐயனே! பரிபூரண அன்போடு நிற்கிற இவள் யாரென்று சொல்லவேண்டும்' என்று (குகன்) கேட்க, நல்வழியை விட்டு விலகாது, தனக்குப் பிறப்புரிமையான சத்தியத்தை நிலைநிற்கச் செய்து, இறந்து போன சக்கரவர்த்தியின் இளையமனைவி; எல்லோருக்கும் குலதெய்வமாகிய இராமபிரானுக்குப் பின்பு (தம்பியாக) பிறந்தவனும் உண்டு என்று கருதும்படி, பிரியாது தொண்டு செய்யும் இலக்குவனைப்பெற்ற பெருமையுடையவள் என்றான்.

(வி - ம்) தருமதேவதையே உருப்பெற்று வந்தாற்போல் சுமித்திரை நின்றாள். கோசலைக்குத் தோழிபோல வாழ்பவள் சுமித்திரை யாதலால் அவளருகே நின்றாள். ஆதலால் அடுத்து நின்ற அவளை யாரென்று கேட்பானாயினான். சுமித்திரையின் அகத்திலுள்ள நிறைந்த அன்பு அவளுடைய முகத்தில் விளங்கித் தோன்றலால் அதை அறிந்த குகன் 'அன்பின் நிறைந்தாளை உரை' என்றான். தயாதனுக்குச் சுமித்திரை கடைசி மனைவியாதலால் 'இளந்தேவி' எனப் பட்டாள். தொழுகுலம்—தெய்வம். 'துலங்குகின்றேன் அடியேன் உடையாய் என் தொழுகுலமே' (திருவாசகம் – நீத்தல். 28).

'எந்தொழுகுலம் தாங்களே' (திருவாய் 3, 7, 8) இலக்குவன் உடன்வராவிட்டால் இராமனுக்குத் தம்பி உண்டென்பதை உலகம் அறியாது. மூவர் பிறந்தும் பயனில்லை என்றான் என்க. சத்தியத்தை நிலைநாட்டுவதில் நிகரற்றவன்

ஆதலால் மெய்ம்மையே அவனுடையது என்ற அழுத்தத்தைக் காட்டித் ' தன்மெய் ' என்றான். மனைவிகளில் சிறியவளானாலும் தன்மையில் பெரியவள் என்றவாறு. எதுகை மோனை நயத்துக்கும், பொருளமைதிக்கும், உணர்ச்சி பாவத்துக்கும் உரைகல் போன்றது இப்பாடல்.

உலகைக் கொடுமையால் அளந்தவள்

946 சுடுமயா னத்திடைதன் துணைஏக,
தோன்றல் துயர்க்கடலின் ஏக,
கடுமையார் கானகத்துக் கருணைஆர்
கலிஏக, கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த உலகெல்லாம்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை, 'யார்இவர்என்று
உரை'என்னக் குரிசில் கூறும். ௩௪௬

பிணஞ்சுடுகிற மயானத்துக்குக் கணவன் செல்லவும், மகன் துன்பக்கடலில் முழுகிப்போகவும், கடுங்காட்டில் கருணைக்கடலான இராமன் செல்லவும், கழலணிந்த திருவடிகளையுடைய திருமால் (வாமனாவதாரத்தில்) அளந்த உலகம் முழுமையும், தன்னுடைய மனத்திலே நினைத்துச் செய்யும் கொடுமையினாலே அளந்தவளான கைகேயியை நோக்கி, ' இவர் யார் என்று கூறுவாயாக ' என்று குகன் கேட்க, பரதன் கூறுகிறான்.

(வி - ம்) இது கவியின் கூற்று. ' சுற்றத்தார் தேவரொடுந் தொழ நின்ற ' என்று கோசலையையும் ' அறந்தானே

---

946. துணை - கணவன். தோன்றல் - மகன். கடுமை - கொடுமை. ஆர்கலி - கடல். மாயன் - திருமால். அன்று - வாமனாவதாரமெடுத்த நாளில். அளத்தல் - எண்ணிமுடிவு செய்தல்.

என்கின்ற அயல் நின்றுள்' என்று சுமித்திரையையும் கூறி யமைந்த கவி, கைகேயியைப்பற்றித் தம் சொந்த உரையாக ஒரு பாடலேயே கூறிவிட்டார். திருமால் இரு திருவடிகளால் இரு உலகத்தை இடமின்றி அளந்தார். இவளோ இரு உலகத் தில் இதுவரை நிகழ்ந்தது இனி நிகழப்போவது எல்லாவற்றை யும் தன் மனத்திலே நினைத்து வேண்டுமென்றே நிலைபெறும் படி கொடுமையைச் செய்தாள். திருமாலும் மூன்றுஅடி அளவு கொண்டார். இவளும் மூன்றுகொண்டாள் என்ருர். கண வனை ஒழித்தாள்; மகனைத் துன்பவெள்ளத்தில் கிடத்தினுள்; இராமனைக் காட்டுக்குச் செலுத்தினுள். திருமால் செய்த தைத் தடுப்பாரில்லை; பிறர் தடுக்க நினைத்தாலும் முடியாது. அவ்வாறே இவள் போட்டதிட்டத்தை எவராலும் தடுக்க முடியவில்லை; முனிவர்களும், அரசர்களும், பிள்ளைகளும், உலக மக்கள் யாவருமே ஒன்றுகூடி இம் மூன்றையும் தடுக்க முற்பட்டனர்; ஆனுல் முடியவில்லை. அரசன் செத்தே தீர்ந் தான்; இராமன் குறித்தபடி பதினுன்காண்டைக் காட்டி லேயே தீர்ப்பான்; பரதன் துன்பத்திலேயே காலங் கழிப் பான். கைகேயி பரதனே நாட்டை ஆளவேண்டுமென்ருள்; அதுவும் அவ்வாறே பரதன் ஆண்டதாக முடிந்தது. அரசி யலில் திறமுடையவர் ஒரு திட்டம் போட்டால், எது தவறி ஞலும் அது தவருது என்பதற்குக் கைகேயியின் செயல் ஒரு எடுத்துக்காட்டாகும். இதனைத்தான் 'நினைந்து செய்யும்' என்ருர். செய்தது கொடுமையாகவா இருக்கவேண்டும் என்ற ஏக்கமும் 'கொடுமையால் அளந்தாளை' என்பதில் காணப் படும். அரசியலில் ஈடுபட்டு ஒரு சார்புபற்றி ஆட்சியைத் திருப்ப முயல்வோர் எந்தக் கொடுமைக்கும் அஞ்சாது துணிந்து முற்படுவர் என்பதும், இடையில் எது நின்று தடுத்தாலும் அதைப் பொருட்படுத்தமாட்டா ரென்பதும்

கைகேயியின் செயலில் காணக்கிடைக்கும். என்ன செய்தால் என்ன நிகழுமென்று கணக்கிட்டு முடிவுசெய்துவிட்டாள் என்பார் ‘அளந்தாளே’ என்றார். அவ்வாறு அளவிட்ட தாவது :—பரதன் ஆளவேண்டும் ; அது என்றும் இடையறாது அமைதியோடு நிலைபெற வேண்டும் ; இராமன் இருந்தால் கட்சியுண்டாகும் ; ஆதலால் இராமன் காட்டுக்குச் செல்லவேண்டுமென்று செய்தது ஒரு முடிவு. அவன் நேரில் இல்லாவிட்டால் மக்களிற் பெரும்பாலோர் அவனை மறந்து விடுவர் ; சிலர் தண்டனைக்கு அஞ்சி அடங்கிவிடுவர் ; எஞ்சியிருப்போர் உண்டானால் வெளியேறிக் காட்டுக்குச் செல்வர். எனவே எதிர்ப்பு நீங்கிவிடும் என்பது மற்றொரு முடிவு. இராமனுக்குக் குழந்தை பிறக்குமானால் அது பரம்பரை உரிமைக்கு வழக்கிடும். எனவே பதினான்கு ஆண்டுவரை குழந்தையற்றுப்போக வேண்டுமென்று கருதியே ‘தாங்கரும் தவம் மேற்கொண்டு’ என்று விதித்தாள். பதினான்கு ஆண்டுகள்வரை ஒருவர் ஆட்சியில் நிலைத்த அரசை மாற்றுவது எளிதல்ல என்று கருதினாள். பதினான்கு ஆண்டு தவ வாழ்க்கையை மேற்கொண்ட பிறகு ஒழுக்கநெறி நிற்கும் இராமனுக்கு உலக வேட்கை தோன்றுதலரிதென்பதுமொன்று. பாரதத்திலும் பாண்டவருக்குப் பதின்மூன்றாண்டுகளே வனவாசம் விதிக்கப்பட்டது. ஒரு தலைமுறையைக் கடந்துவிட்டால் மக்கள்நிலை மாறிப்போகுமென்பது உலகியலறிந்தோர் உணர்ந்ததேயாம். முந்திய இரு தாயரையும், ‘தொழுது நோக்கி’யும், ‘அன்பின் நிறைந்தாளை உரை’ என்றும் கேட்டகுகன் கைகேயியைப்பற்றி ‘யார் இவர்’ என்று கேட்டபோதே இவள் அவ்விருவரின் வேறுபட்டிருக்கும் நிலையை உணர்ந்தான் என்பது அறியப்படும்.

என்னைப் பெற்றவள்

947 படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய,
உடரெலாம் உயிர் இலா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே,
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்,
இந்நின்றாள் என்னை ஈன்றாள். ௬0

எல்லாத் துன்பங்களையும் உண்டாக்கியவளை, பழிக்குச் செவிலித்தாயாக இருந்து வளர்ப்பவளை, தன்னுடைய பாழாகப்போன பாவமயமான குடலிலே பலநாள் கிடந்த எனக்கும், உயிர் ஒரு சுமையாகித் தேய்ந்து கழிய (உலகத்தினுள்ள) உடலெல்லாம் உயிரைப் பிரிந்தமாதிரியாகத் துன்பத் தோற்றமளிக்கிற இவ்வுலகத்தில், ஒருத்தியாக விளங்கும் துன்பமில்லாத முகத்தையுடையவளை (நீ அறிந்திருக்க வேண்டும்) அறியவில்லையானால் (சொல்லுகிறேன்) இதோ நிற்கிறவள் என்னைப் பெற்றவள் (என்றான்).

(வி - ம்) துன்பமென்பதே இன்னதென்றறியாதிருந்த அயோத்தி துன்பமயமாகிவிட்டது. அத்தனை துன்பமும் இவள் பெற்ற பிள்ளைகள்தாம் என்றான். வளர்க்கும் தாய் இல்லையென்றால் பிள்ளை பிழையாது; பழி உயிர்பெறாத இடத்தில் அதைப்பேணி வளர்க்கும் செவிலித்தாய் என்றான். இவள் வயிற்றில் நெடுங்காலங் கிடந்து ஊறியதால் என் உயிர் போகாமலும் நிலை பெறாமலும் தேய்கிறது என்றான். இவள் ஒருத்தியைத் தவிர உலக உயிர் முழுமையும் வருந்

947. படர் - துன்பம். படைத்தாள் - உண்டுபண்ணினவள். செவிலி - பிள்ளை வளர்ப்பவள். பாரம் - சுமை. இடர் - துன்பம்.

இத் துன்புறுகின்றன. துன்பக் குறியே இல்லாத முகம் இது ஒன்றுதான் உண்டு. இவளின் முகத்தைப் பார்த்தாலே யாரென்பது விளங்குமே! விளங்க வில்லையானால் சொல் கிறேன் என்றான். உயிரை வைத்திருப்பது தூக்கமுடியாத சுமையாகத் தோன்றுகிறது. விருப்பமில்லாத சுமையைத் தூக்குபவன் அதனைக் கீழே தள்ளிவிட முயல்வதைப்போல உயிரை விட்டுவிடப் பார்க்கிறானதலால் 'உயிர்ப் பாரம்' என்றான்.

தோணி கரைசேர்ந்தது

948 *என்னக் கேட்டு, அவ்
இரக்கம் இலாளையும்,
தன் நற் கையின்
வணங்கினன் தாய்என ;
அன்னப் பேடை
சிறைஇல தாய்க்கரை
துன்னிற்று என்னவும்
வந்தது தோணியே. சுக

என்று கூறியதைக் கேட்டு (குகன்) அந்த இரக்கமற்ற கைகேயியையும் தாய் என்று கருதித் தன்னுடைய நல்ல கைகளினாலே கும்பிட்டான். பெண்அன்னப் பறவை சிறகு இல்லாததாகக் கரைசேர்ந்தது என்று சொல்லும்படி தோணி வந்தது.

(வி - ம்) இரக்கமில்லாதவர் வணக்கத்திற் குரியவராகார் என்பதை 'இலாளையும்' என்பதிலுள்ள உம்மை விளக்கும். 'நற்கை' நல்ல செயலைச் செய்யும் கை ஆம். அந்த நல்ல

948. இரக்கமிலாள்-இரக்கமற்ற கைகேயி. பேடை-பெட்டை. சிறை - சிறகு. துன்னிற்று - சேர்ந்தது. தோணி - படகு.

கைகளினல் தீயவளைக் கும்பிடலாமோ எனின்? ஆம். பரதன் பத்துமாதம் தங்கியிருந்த வயிற்றை உடைமை பற்றி அவளைத் 'தாய் என வணங்கினன்' என்ருர். எத்தனை துன் பங்களைக் கைகேயி உண்டாக்கினலும் 'ஆயிரம் இராமர் நின் கேள் ஆவரோ தெரியின் அம்மா' என்று குகனல் பாராட்டப் பெற்ற பரதனை அவள் தானே பெற்றுத் தந்தாள்? படகு, அன்னம் நீரில் ஊர்ந்து வருவதுபோல வந்தது. அன்னத்திற் குச் சிறகுண்டு; படகுக்கு இல்லையாதலின் சிறகில்லாத அன் னப் பறவைபோல என்ருர். இல்பொருளுவமை. இனி இக் காட்சி நீளுவது சுவைப்படாதாதலால், தோணிகரையை அடைந்தது என்று முடித்துவிட்டமை நோக்கி இன்புறத் தக்கதாம்.

பல காதம் நடந்தான்

949 இழிந்த தாயர்
சிவிகையின் ஏறத்தான்
பொழிந்த கண்ணில்
புதுப்புனல் போயினன்;
ஒழிந்தி லன்குக
னும்உடன் ஏகினன்;
கழிந்த னன்பல
காவதம் காலினே. சஉ

(படகிலிருந்து) இறங்கிய தாய்மார் பல்லக்கில் ஏற, பரதன் வருத்தத்தினல் நீர் பெருகிக்கொண்டிருந்த கண்களில் புதிய (ஆனந்தக்) கண்ணீரைக் கொட்டுபவனயினன். குக னும் விட்டு நீங்காதவனய் உடன் சென்ருன். பலகாத தூரம் காலினலேயே (பரதன்) நடந்து சென்ருன்.

---

949. இழிந்த - இறங்கிய. சிவிகை - பல்லக்கு. போயி னன் - போகுமாறு ஆயினன். காவதம் - காதவழி.

(வி-ம்) இனி இராமனைக் காண்பது திண்ணம் என்று கருதியதால், இதுவரை கொட்டிய துக்கக் கண்ணீர் ஆனந்தக்கண்ணீராகக் கொட்டிய தென்க. ஆனந்தம் புதிதாக ஏற்பட்டதால் அது காரணமாக வெளிப்படும் நீர் 'புதுப் புனல்' எனப்பட்டது. நீண்டு பழகிய துன்பக் கண்ணீர் நின்றுவிட்டது. தானே பெருகிவழிதலால் 'போக்கினான்' என்னாது 'போயினான்' என்றார்.

---

12. கிளைகண்டு நீங்கு படலம்

[இராமன் சுற்றத்தாரைக் கண்டு, அவரை நீங்கி வனத்தினுட் சென்ற செய்தி கூறும் படலம். கிளை - சுற்றம்.]

பரத்துவன் எதிர்கொள்ளல்

950 பரத்தின் ஓங்கும்
 பரத்துவன் என்னும்அவ்
வரத்தின் மிக்குஉயர்
 மாதவன் வைகிடம்
அருத்தி கூர
 அணுகினன் ; ஆண்டுஅவன்
விருத்தி வேதிய
 ரோடுஎதிர் மேவினான். க

பாரமார்த்திகத்தில் தலைதூக்கி நிற்கும் பரத்துவன் என்ற பெயரையுடைய அனுக்கிரக சக்திமிகுந்த உயர்வுடைய பெரிய தவமுனிவர் தங்கியிருக்கிற இடத்திற்கு அன்பு

950. பரம் - மறுமைக்கு வேண்டிய ஒழுக்கம். வரம் - அனுக்கிரக சக்தி. வைகிடம் - தவச்சாலை. அருத்தி - அன்பு. ஆண்டு - அவ்விடம். விருத்தி வேதியர் - வேதங்களைக் கற்று யோகசாதனம் செய்பவர்.

மிகுந்தவனாய் பரதன் நெருங்கினன். அப்போது அப்பரத்துவ முனிவர் யோகப் பழக்கமுள்ள வேதியர்களுடன் எதிர்கொண்டார்.

பரத்துவன் ஆசிகூறல்

951 வந்த மாதவத்
தோனை, அம் மைந்தனும்
தந்தை ஆம்எனத்
தாழ்ந்து வணங்கினன்;
இந்து மோலிஅன்
னானும் இரங்கினன்,
அந்த மில்நலத்து
ஆசிகள் கூறினன். உ

எதிர்கொண்டு வந்த பெரிய தவமுனிவரை, அந்தப் பரதனும் தந்தையைக் கண்டாற்போலத் தலைகுனிந்துவணங்கினன். சந்திரனை முடியில் தாங்கிய சிவபெருமானை ஒத்த முனிவரும், இரக்கங் கொண்டு எல்லையற்ற நன்மைகள் உண்டாகும்படி ஆசியுரைகளைக் கூறினர்.

முனிவர்வேடந் தாங்குவானேன்?

952 எடுத்த மாமுடி
சூடிநின் பால்இயைந்து
அடுத்த பேர்அரசு
ஆண்டிலை; ஐயநீ!

---

951. மைந்தன் . பரதன். இந்து - சந்திரன். மோலி - முடி. இந்து மோலி - சிவபெருமான். அந்தம் - எல்லை.

952. எடுத்த - உயர்ந்த. அடுத்த - வந்தடைந்த. ஆண்டிலை - ஆளவில்லை. வார் - நீண்ட. தூசு - ஆடை. நண்ணுதல் - வந்து சேர்தல்.

முடித்த வார்சடை
யோடும், முனிவர் தூசு
உடுத்து நன்னுதற்கு
உற்றுளது யாது ?என்றான். ௯

அழகாய் உயர்ந்துள்ள பெரிய முடியைச் சூடி, உன்னிடத்தில் பொருத்தமாக வந்துசேர்ந்த பெரிய அரசை ஆளாமல், ஐயனே! நீ கட்டப்பட்ட நீண்ட சடையோடும் முனிவர் உடுக்கும் ஆடையோடும் வருதற்கு ஏற்பட்ட காரணம் என்ன என்றார்.

முறைதவறி ஆட்சி ஏற்கமாட்டேன்

953 மறையின் கேள்வற்கு
மன் இளந் தோன்றல்'பின்
முறையின் நீங்கி
முதுநிலம் கொள்கிலேன் ;
இறைவன் காக்கில
னும்எனில், யாண்டுஎலாம்
உறைவென் கானத்து
ஒருங்குட னே'என்றான். ௰

வேதங்களின் தலைவனாகிய இராமனுக்குப் பொருந்திய தம்பியாகிய பரதன், 'பின்னவன் என்னும் முறையினின்றும் நீங்கிப் பழமையாகவரும் பூவுலக ஆட்சியை ஏற்றுக்கொள்ள மாட்டேன்; இறைவனாகிய இராமன் ஏற்று அரசுபுரிய மாட்

953. மறை - வேதம். கேள்வன் - தலைவன். மறையின் கேள்வன் - கடவுள்: இராமன். மன்னுதல் - பொருந்துதல். இளந் தோன்றல் - தம்பி. பின் - பின்னவன்: தம்பி. முதுநிலம்-பழைமை யான பூமி. இறைவன் - தலைவன்: இராமன். யாண்டு - பதி னன்கு ஆண்டு. உறைவென் - இருப்பேன். ஒருங்கு - சேர்ந்து. உடன் - கூடவே.

டான் என்றால், வனவாசத்துக்கு எல்லையான பதினான்கு ஆண்டுகாலம் முழுமையும் காட்டிலேயே அவனோடுகூட இருப்பேன்' என்றான்.

முனிவர்களின் உள்ளம் குளிர்தல்

954 உரைத்த வாசகம்
கேட்டலும், உள்எழுந்து
இரைத்த காதல்
இரும்தவத் தோர்க்குஎலாம்,
குரைத்த மேனியொடு
உள்ளம் குளிர்ந்ததால்,
அரைத்த சாந்துகொண்டு
அப்பியது என்னவே. ௫

பரதன் உரைத்த வாசகத்தைக் கேட்டதும், உள்ளிருந்து எழுந்து (விம்மிப்) பெருமூச்சு விடும்படி செய்த பேரன்பினை யுடைய பெரிய தவத்தைச் செய்வோர் யாவருக்கும் (தவத்தால்) பெருமையடைந்த உடலோடு உள்ளமும் அரைத்த சந்தனத்தை (அள்ளி) அப்பினாற்போலக் குளிர்ந்தது.

(வி - ம்) பரதனுடைய தியாகத்தையும், நீதியையும் உணர்ந்த முனிவர்கட்கு உள்ளங் குளிர்ந்ததோடு, நெருப்பின் முன்பு இருந்தும் விரதங் காத்தும் வளமிழந்து வறண்ட உடலும் குளிர்ச்சியடைந்தது என்றார். சந்தனத்தை உடலில் மட்டுமல்ல, உள்ளத்திலும் பூசியதுபோல என்றதால் உள்ளும் புறமும் ஒருசேரக் குளிர்ந்தன என்றவாறு.

---

954. வாசகம் - சொற்கள். இரைத்தல் - பெருமூச்சு விடுதல். மேனி - உடம்பு. சாந்து - சந்தனம். குரை - பெருமை (ஈடு 4.9.9)

சேனைக்கு விருந்து

955 ஆய காதலோடு
ஐயனைக் கொண்டு,தன்
தூய சாலை
உறைவிடம் துன்னினான் ;
மேய சேனைக்கு
அமைப்பென் விருந்துஎனாத்
தீயின் ஆவுதி
செங்கையில் நீக்கினான். ௬௬

அவ்வாறாய அன்புடனே (பாரத்துவ முனிவர்) பரதனை அழைத்துக்கொண்டு தம்முடைய தூய்மையான பன்னசாலையாகிய தங்குமிடத்தை அடைந்தார். வந்து சேர்ந்த சேனைகட்கும் விருந்து செய்வேன் என்று கூறித் தீயில் ஆகுதியைச் செம்மையான கையினால் பெய்தார்.

ஒரே மகிழ்ச்சி

956 துறந்த செல்வன்
நினையத் துறக்கந்தான்
பறந்து வந்து
படிந்தது ; பல்சனர்,
பிறந்து வேறோர்
உலகுபெற் றார்எனா,
மறந்து வைகினர்
முன்னைத்தம் வாழ்வுஎலாம். ௭

955. ஐயன் - பரதன். சாலை - பன்னசாலை. உறைவிடம்- இருக்குமிடம். துன்னுதல் - சேர்தல். மேய - பொருந்திய. ஆவுதி- யாக,த்தீயில் பெய்யும் நெய் முதலிய பொருள்கள்.

956. துறக்கம் - தேவருலகம். படிந்தது - பொருந்தியது. சனர் - மக்கள்.

பற்று நீங்கிய அருட்செல்வனை பரத்துவ முனிவர் நினைக்க, பொன்னுலகமே பறந்து கீழே வந்து பொருந்தியது. (பரதனுடன் வந்த) பல மக்களும் புதிதாகப் பிறந்து வேறு ஒரு உலகத்தை அடைந்தாரைப் போல, முன்னைய வாழ்வை மறந்து (பெரிய இன்பத்தில்) திளைத்தனர்.

(வி - ம்) பொருள் முதலிய செல்வத்தைத் துறந்து, வனத்திற் சென்று தவமியற்றி, அருள்வடிவமாக விளங்குபவரே அந்தணராவர். அவருள் ஒருவர் பரத்துவர் என்க. 'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம், பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள' (திருக்குறள் 241) ஆதலின் பொருட் செல்வத்தைத் துறந்து அருட்செல்வத்தைப் பெற்றவராதலால் 'துறந்த செல்வன்' எனப்பட்டார். சாதாரணமான மக்கள் பெருந்துன்பத்தை அடையும்போது மற்றவற்றை மறந்து துன்பப்படுவர். இன்பம் நேரும்போது மற்றெல்லாவற்றையும் மறந்து இன்பத்தில் திளைப்பர். இவ்வுண்மை இங்கே, இராமன் பிரிவினல் பெருந்துன்பத்தை அடைந்துவந்த மக்கள் உண்டுகளித்து நிலைமறந்தனர் என்பதால் உணரப்படும்.

பொன்னன மேனி புழுதி படிந்தது

957 இன்னர் இன்னணம்
யாவரும் இந்திரன்
துன்னு போகங்கள்
துய்த்தனர்; தோன்றல்தான்,

957. இன்னர் - இத்தன்மையர். இன்னணம் - இவ்வண்ணம். போகம் - இன்பம். துய்த்தல் - அனுபவித்தல். தோன்றல் - பரதன். பகல் - நாள். பொடி - புழுதி.

அன்ன காயும்
கிழங்கும்உண்டு, அப்பகல்
பொன்னின் மேனி
பொடிஉறப் போக்கினுன். அ

இத்தன்மையராய் இவ்வாறு யாவரும் இந்திரன் பெறத் தக்க இன்பங்களை அனுபவித்தனர். பரதனே அதே காயையும் கிழங்கையும் உண்டு அந்த நாளைப் பொன்போன்ற உடலில் புழுதி படியுமாறு கழித்தான்.

(வி - ம்) 'பொன்னின் மேனி' என்றது அருமை நோக்கியதன்றி நிறத்துக்கன்றென்க. 'அன்ன' என்றது, இராமன் உண்ணும் காய் கிழங்குகளை என்றவாறு. உடன் வந்த மக்கள் யாவரும் தேவருணவுண்டு தம் நிலைமறந்து இன்புற்றிருக்க, பரதன் மட்டும் காயும் கிழங்கும் உண்டு மண்ணில் கிடந்தான் என்றதால் சாதாரண மக்கள் நிலையும் பரதனின் நிலையும் தெள்ளிதின் உணரப்படும். பொதுமக்கட்கும் பொறுப்புள்ள தலைவனுக்கும் உள்ள வேறுபாடு இத்தன்மையதென்பது நோக்கத்தக்கது. இராமனது பிரிவினுல் ஏற்பட்ட துன்பம் மக்களால் தாங்கமுடியவில்லை என்பது உண்மைதான். இத்துன்பத்தைத் தாங்கமுடியாமல் உயிரை விடவும் அவர்கள் பின்வாங்கவில்லை. என்ருலும் அவ்வுணர்ச்சி கடைசிவரை இடையருது நிற்பதற்கில்லை யென்பது தெளிவு.

பரதன் சேனை பாலைநிலம் அடைதல்

958 *காலைஎன்று எழுந்தது
கண்டு வானவர்
வேலைஅன்று அனிகமே
என்று விம்மறச்,

சோலையும் கிரிகளும்
சுண்ண மாய்எழ,
பாலைசென்று அடைந்தது
பரதன் சேனையே. க

காலையில் சூரியன் எழுந்ததைக் கண்டு, பரதனைத் தலைமையாகக் கொண்ட சேனையானது, தேவர்கள், கடல் அல்ல (இது) சேனைதான் என்று (உணர்ந்து) மகிழ்ச்சி நீங்க (வழியிலுள்ள) சோலைகளும் மலைகளும் புழுதியாகிக் கிளம்பும்படி சென்று பாலைநிலத்தை அடைந்தது.

(வி - ம்) சேனை எழுந்து செல்வதால் ஏற்பட்ட இரைச்சலைக் கேட்ட தேவர்கள் கடல்தான் பொங்கி எழுகிற தென்று கருதி அமிழ்தம் எழும் என்று மகிழ்ச்சியுற்றனர். ஆனால் எழுந்த புழுதியைக் கண்டு இது கடலல்ல சேனைதான் என்று தெளிந்தனர் என்றவாறு. கடல் எழுவதைக் கண்டு தேவர் மகிழ்தலை, 'குமுதன் இட்ட குலவரைக் கூத்தரில், திமிதம் இட்டுத் திரியும் திரைகடல், துமிதம் ஊர்புக வானவர் துள்ளினர், அமுதம் இன்னும் எழும்எனும் ஆசையால்' (திருவணைப்படலம்) என்பதனால் அறியலாம்.

சித்திரகூடத்தை நெருங்கியது

959 வன்தெறு பாலையை
மருதம் ஆம்எனச்
சென்றது சித்திர
கூடம் சேர்ந்ததால்,

---

958. என்று - சூரியன். வேலை - கடல். அனிகம்-சேனை. கிரி - மலை. சுண்ணம் - புழுதி. பாலை - பாலைநிலம். விம்முதல் - மகிழ்தல்

ஒன்றுஉரைத்து, உயிரினும்
ஒழுக்கம் நன்றெனப்
பொன்றிய புரவலன்
பொருவில் சேனையே. ௬0

ஒரு சொல் உரைத்து, உயிரினும் ஒழுக்கமே சிறந்த தென்று உயிரைவிட்ட சக்கரவர்த்தியின் ஒப்பற்ற சேனை யானது, கொடுமையான வருத்துந் தன்மையுள்ள பாலை நிலத்தை மருத நிலமென்று கருதும்படி கடந்து சித்திர கூடத்தை நெருங்கியது.

(வி - ம்) பாலைநிலத்தை வருத்தந் தெரியாமல் எளி தாகக் கடந்தார் என்பது மருதம் எனும்படி கடந்தார் எனப் பட்டது. பாலையைக்காட்டிலும் வெப்பமான வருத்தம் மனத் திலிருந்தபடியால், பாலை மருதம் போல் ஆய்விட்டதென்க. பாலைநிலமாவது மழையும் பயிரும் வளமுமற்றது. பகலெல் லாம் கொடுமையான வெயில் காய்ந்து இரவெல்லாம் சூட் டைக் கக்கும் மணல் நிறைந்துள்ளது. ' நன்றே நடாத்தும் எம் மங்கைபங் காளர்தம் நாட்டினிலே, அன்றே இராமன் அணைகட்டும் போதங் கவன்படைகள், குன்றேன் சுமந்த ? எம்மான்சென்ற பாலைக் குறும்பரலில், ஒன்றே இடில்அக் கடல்ஊற்றும் வற்ற உறிஞ்சிடுமே ' (தனிப்பாடல்) என்ப தால் அதன் சூட்டினை அறிக. மக்களும் மக்களைச் சார்ந்த மற்றைய பொருள்களும் திரண்டு சென்றதால் அப் பாலை நிலம் மருத நிலம்போற் காட்சியளித்தது எனலும் பொருந் தும். வயலைச்சார்ந்து நீர்வளம் நிலவளம் பொருந்தி மக்கள் வாழும் நிலம் மருதநிலமாம். சொன்ன சொல்லை மாற்றி

959. வல் - வலிய. தெறு - துன்புறுத்துகிற. பாலை - பாலை நிலம். ஒன்று - ஒருசொல். பொன்றிய - இறந்த. புரவலன் - மன்னன். பொரு - ஒப்பு.

உரையாதவன் என்பதை, 'ஒன்றுரைத்துப் பொன்றிய புரவலன்' என்றார். 'நாத்தான் இரண்டுரையா நாகரிகன்' (வருணகுலா-மடல் 468) என்பதும் அது.

படையின் ஆரவாரத்தை இலக்குவன் அறிதல்

960 தூளியின் படலையும்
துரகம் தேரொடு
மூள்இரும் சினக்கரி
முழங்கும் ஓதையும்,
ஆள்இரும் குழுவினர்
ஆர வாரமும்,
கோள்இரும் படைஇதுஎன்று
உணரக் கூறவே. கக

புழுதியின் திரளும், குதிரைகளும், தேர்களும், அடங்காது எழுகிற மிக்க கோபத்தையுடைய யானைகளும் முழங்குகிற முழக்கமும், காலாளாகிய பெரிய கூட்டத்தினர் செய்யும் ஆரவாரமும், இஃது ஒரு வலிமையுடைய படை (வருகிறது) என்று அறியும்படி சொல்ல.

குன்றில் ஏறிப் படையை நோக்கினன்

961 எழுந்தனன் இளையவன்;
ஏறி னன்நிலக்
கொழுந்துஉயர்ந் தனையதுஓர்
நெடிய குன்றின்மேல்;

---

960. தூளி - புழுதி. படலை - தொகுதி. துரகம்-குதிரை. மூள் - மூண்ட. கரி - யானை. ஓதை - ஓசை. ஆள் - காலாள். இரு - பெரிய. கோள் - வலிமை.

961. செழு - செழித்த. பரவை - கடல். சிறுமை பேசிய - குறைத்துச் சொல்லும்படி செய்த. கழுந்து - வலிமை. கடல் - கடல் போன்ற சேனை.

செழுந்திரைப் பரவையைச்
சிறுமை பேசிய
கழுந்துடை வரிசிலைக்
கடலை நோக்கினன். கஉ

இலக்குவன் எழுந்தான்; நிலமானது கொழுந்துவிட்டு உயர்ந்து நின்றாற்போன்ற ஒரு உயர்ந்த மலையின்மேல் ஏறினன்; செழித்த அலைகளையுடைய கடலைச் சிறிதாகச் சொல்லத் தக்க வலிமைமிக்க கட்டமைந்த வில்லேந்திய சேனையாகிய கடலை நோக்கினன்.

(வி - ம்) நிலத்தைச் செடியாகவும் மலைச்சிகரத்தைக் கொழுந்தாகவும் உருவகப்படுத்தியது எண்ணி எண்ணி வியக்கத் தக்கதாம்.

பரதன் ஏன் வருகிறன்?

962 பரதன்இப் படைகொடு
படர்வ தென்?மறம்
கருதிஉள் கிடந்ததுஓர்
கறுவு காதலால்,
விரதம்உற்று இருந்தவன்
மேல்வந் தான்;இது
சரதம்;மற்று இலது!எனத்
தழங்கு சீற்றத்தான். கங

பரதன் இவ்வளவு படைகளையும் கூட்டிக்கொண்டு வருதல் எதற்காக? வலிமையை மேற்கொண்டு மனத்தினுள்ளே படிந்திருந்ததான ஒரு பொறாமையினால் ஏற்பட்ட

962. படர்தல் - வருதல். மறம் - வலிமை (போர்). காதல் - ஆசை. விரதம் - கட்டுப்பட்டிருத்தல். சாதம் - உண்மை. தழங்குதல் - சீறி ஒலித்தல்.

ஆத்திரத்தோடு பொருந்திய ஆசையினாலே, தவத்தைப் பொருந்தி இருக்கிற இராமபிரான்மீது படையெடுத்து வந்திருக்கிறான்; இது உண்மை; வேறு காரணம் எதுவுமில்லை; என்று கருதி மிக்க கோபமுடையவனாய்.

(வி - ம்) பரதன் ஏன் நால்வகைச் சேனையோடு வர வேண்டும் என்று கருதினான் இலக்குவன். இதற்கு விடை, போர் என்பதைத் தவிர வேறு கிடைக்கவில்லை. பரதனுக்கு அரசில் விருப்பமில்லையென்றால், கைகேயி இவ்வளவு உறுதியாக மகனுக்கு அரசு வேண்டுமென்று வம்பு செய்திருக்க மாட்டாள் என்று கருதியிருந்த இலக்குவனுக்கு எதிரில் அயோத்தியின் படை முழுமையும் திரண்டு வருகிறதென்னில் வேறு என்ன தோன்றமுடியும்? இராமனுடைய அரசைக் கவரும் எண்ணம் திடீரென்று ஏற்பட முடியாது; எனவே இவனும் தாயும் பலநாளாக மனத்தில் நினைத்து இதைக் கவர வேண்டுமென்று கறுவிக்கொண்டேயிருந்து சமயம் பார்த்துப் பிடுங்கிக் கொண்டனர் என்றும், பதினான்கு ஆண்டில் திரும்பி வந்தால் மறுபடியும் அரசு கைமாறுமாதலால் தனித்திருக்கிற இப்பொழுதே கொன்று தீர்க்கலாமென்று படையெடுத்து வருகிறான் என்றும் இலக்குவன் உறுதிப்பட்டு விட்டான். பிறனுடைய பொருள்கண்டு பொறாமைப்பட்டு அதைப் பிடுங்கிக்கொள்ள வழி பார்த்துக்கொண்டிருப்பது கறுவுதலாம். பின்னாலே பரதனிடம் இராமன், 'தந்தை அளித்தபடியால் அரசு உன்னது ஆள்வாயாக' என்று கூறும் போது, அதற்கு விடையாக பரதன், 'வகையில் வஞ்சனாய் அரசு வௌவயான் பகைவனேகொலாம் இறவு பார்க்கின்றேன்' (பாடல் 1014) என்றதும் இங்கே இலக்குவன் கருதியதும் ஒன்றே என்க. அரசை பரதன் விரும்பினான் என்றால் இலக்குவன் கருத்து சரியானதென்பதைப் பரதன் கூற்று அரண்செய்வதாம்.

பரதன் படைஎடுத்து வருகிறான்!

963 குதித்தனன் பாரிடைக்
குவடு நீறுஎழ
மிதித்தனன்; இராமனை
விரைவின் எய்தினான்;
மதித்திலன் பரதன்நின்
மேல்வந் தான்மதிற்
பதிப்பெரும் சேனையின்
பரப்பினான் என்றான். கசு

நின்ற மலைச்சிகரம் தூளாகி எழும்படி மிதித்து நிலத்தில் குதித்தான்; விரைவாக இராமனிடம் சென்றான்; பரதன் மதிக்கவில்லை; மதிலையுடைய அயோத்தியிலுள்ள சேனையின் பெருக்கத்தோடு உன்மேல் (படையெடுத்து) வந்தான் என்றான்.

இலக்குவன் போர்க்கோலம்

964 கட்டினன் சுரிகையும்
கழலும்; பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன்;
கவசம் பூட்டுஅமைத்து
இட்டனன்; எடுத்தனன்
வரிவில்; ஏந்தலைத்
தொட்டுஅடி வணங்கிநின்று
இனைய சொல்லினான். கரு

---

963. பார் - பூமி. குவடு - மலைச்சிகரம். நீறு - தூள். வந்தான் - படை எடுத்து வந்தான். மதிற் பதி - மதிலையுடைய ஊர் : அயோத்தி. பரப்பு - தொகுதி : பெருக்கம்.

964. சுரிகை - வாள். கணைப் புட்டில் - அம்பறாத்தூணி. பொறுத்தல் - தாங்குதல். இனைய - இவ்வாறு.

(என்று சொல்லிக்கொண்டே) உடைவாளையும் வீரக் கழலையும் கட்டினான்; பல அம்புகளையுடைய அம்பறாத் தூணியையும் தாங்கினான்; (உடம்பிலே) கவசத்தின் பூட்டு களை இணைத்து அணிந்துகொண்டான்; கட்டமைந்த வில்லை எடுத்துக்கொண்டான்; இராமபிரானின் திருவடிகளைத் தொட்டு வணங்கி நின்று இவ்வாறு கூறினான்.

நடக்கப்போவதைப் பார்

965 இருமையும் இழந்தஅப்
பரதன் ஏந்துதோள்
பருமையும், அன்னவன்
படைத்த சேனையின்
பெருமையும், நின்னொடு
பின்பு வந்தஎன்
ஒருமையும் கண்டுஇனி
உவத்தி உள்ளம்நீ. கசு

(இம்மை மறுமை என்ற) இரு பேறுகளையும் இழந்த அந்தப் பரதனுடைய எடுப்பாகவுள்ள தோள்களின் பருத் திருக்கும் தன்மையும், அவன் பெற்றிருக்கிற சேனையின் மிகுதியும், உன்னோடு பின்தொடர்ந்துவந்த என்னுடைய தன்னந்தனியான தன்மையும் நீ கண்ணாலே கண்டு மனம் மகிழ்வாய்!

(வி - ம்) பரதன் தோளை வியவாதவர் இல்லை. பரத னைக் கண்டவரெல்லாருக்கும் அவனுடைய தோள்களே முற் படத் தோன்றியிருக்கின்றன. புகழ் பெற்ற தோள் பரத

---

965. இருமை - இம்மையும் மறுமையும். பருமை - பருத்திருக் கும் தன்மை. படைத்த - பெற்றுள்ள. பெருமை - மிகுதி. ஒருமை- ஒருவனான தன்மை.

னுடைய தோள் என்று தெரிகிறது. அத்தோளின் பருமை யும் பெரிய சேனையும் என்னவாகிற தென்று பார்! ஒரு சேனையுமில்லாமல் தனியாகவுள்ள நான் என்ன செய்கிறே னென்று பார்! என்று வீராவேசங்கொண்டு பேசுகிறான். உன்னைக் காப்பதற்காகவென்று உன்பின் வந்தேன். வாய்ப் புக் கிடைத்தது என்றவாறு. இவன் சுமந்திரனிடம் என்ன கருதி என்ன சொன்னானோ அஃது உண்மையாய்விட்ட தென்று முடிவு செய்துவிட்டான். இலக்குவன் சுமந்திர னிடம், 'மின்னுடன் பிறந்தவாட் பாதவேந்தற்கு, மன்னுடன் பிறந்திலென்; மண் கொண்டாள்கின்ற தன்னுடன் பிறந்தி லென்; தம்பி முன்னலென்; என்னுடன் பிறந்தயான் வலி யன் என்றியால்' (725) என்று கூறியதையே இங்கு 'என் ஒருமை' என்றானென்க.

இதுவும் அது

966 படர்எலாம் படப்,படும்
பரும யானையின்,
திடர்எலாம் உருட்டின,
தேரும் ஈர்த்தன,
குடர்எலாம் திரைத்தன,
குருதி ஆறுகள்
கடர்எலாம் மடுப்பன
பலவும் காண்டியால். கஎ

துன்பமெல்லாம் ஒழிய, மடிகின்ற முகபடாமணிந்த யானையின் உடலினாலான திட்டுகளை யெல்லாம் உருட்டிக்

---

966. படர் - துன்பம். பட - ஒழிய. பருமம் - யானையின் முகபடாம். திடர் - திட்டு. ஈர்த்தல் - இழுத்தல். குடர்-குடல். திரைத்தல் - அலைத்துத் தள்ளுதல். குருதி - இரத்தம். கடர் - கடல். மடுப்பன - பாய்வன.

கொண்டும், (ஒடிந்து கிடக்கிற) தேர்களையெல்லாம் இழுத்துக் கொண்டும், (உடல் கிழிந்து) இறந்துகிடக்கும் குடல்களை யெல்லாம் புரட்டிக்கொண்டும் கடல்களில் போய்ப் பாய்வன வாகிய இரத்த ஆறுகள் பலவற்றைக் காண்பாயாக.

(வி - ம்) பாதனை ஒழிக்கப் போகிறேன். எல்லாத் துன்பங்களும் இவனாலேதான் ஏற்பட்டன. இவன் ஒழிந் தால் துன்பமெல்லாம் ஒருவழியாக ஒழியுமென்பான் 'பட ரெலாம் பட' என்றான்.

இதுவும் அது

967 நிவந்தவான் குருதியின்
நீத்தம் நீந்திமெய்
சிவந்தசா தகரொடு,
சிறுகண் கூளியும்,
கவந்தமும், உலகம்நின்
கையது ஆயதுஎன்று
உவந்தன குனிப்பன
காண்டி உம்பர்போல். கஅ

மேலெழுந்த பெரிய இரத்த வெள்ளத்தில் நீந்துவதால் உடல் சிவப்பேறிய பூதங்களோடு, சிறிய கண்களையுடைய பேய்களும், தலையற்ற உடற்குறைகளும், 'உலகம் உன் கைவசப்பட்டதாய் விட்டது' என்று தேவர்கள் (மகிழ் வதைப்) போல, மகிழ்ந்தனவாய்க் கூத்தாடுவனவற்றைக் காண்பாயாக.

(வி - ம்) இராமன் கைக்கு அரசு வந்தால் தேவர் மகிழ் வர்; பூதங்கள் பேய்கள் முதலியவற்றுக்கு மகிழ்ச்சி ஏற்ப

---

967. நிவந்த - உயர்ந்த. குருதி - இரத்தம். நீத்தம் - வெள் ளம். சாதகர் - பூதகணங்கள். கூளி - பேய். கவந்தம்-தலையறு பட்டும் உயிர் நீங்காத முண்டம். குனிப்பன - கூத்தாடுவன.

டாது. ஆனல் இப்பொழுதோ பரதனைப் படைகளுடன் கொன்று உனக்குப் பட்டம் சூட்டப் போகிறேன் ஆதலால், தேவரும் மகிழ்வர் ; அவ்வாறே பேய்களும் இரத்தத்தைக் குடித்து மகிழும் என்றவாறு.

இதுவும் அது

968 ஒருமகள் காதலின்
உலகை நோய்செய்த
பெருமகன் ஏவலில்,
பரதன் தான்பெறும்
இருநிலம் ஆள்கைவிட்டு
இன்றுஎன் ஏவலால்
அருநரகு ஆள்வது
காண்டி ! ஆழியாய் ! கக

ஒரு (கைகேயி என்னும்) பெண்ணிடத்துக் கொண்ட ஆசையால், உலகத்தையே (தீராத்) துன்பத்துக்குள்ளாக்கிய பெரிய மனிதனின் (தயரதன்) கட்டளைப்படி பரதன், தான் பெற்றுக்கொண்ட பெரிய நிலத்தை ஆளுதலைவிட்டு, இன்று என்னுடைய கட்டளையினல் யாரும் அடைய முடியாத நரக லோகத்தை ஆளப்போவதை, ஆட்சிச் சக்கரத்தை யுடையவனே ! பார்ப்பாயாக.

(வி - ம்) ஒருத்தியிடம் கொண்ட ஆசையினல் உலகுக்கே கேடு சூழ்ந்தவனைப் பெருமையுடையவனென்றும், சத்திய சந்தன் என்றும் சொல்கிறார்கள். அவனுடைய கட்டளைப்படி இவன் நிலத்தை ஆளுகிறானா, என்னுடைய கட்டளைப்படி நரகத்தை ஆள்கிறானா என்று பார் என்றான். பர

---

968. நோய் - துன்பம். ஏவல் - கட்டளை. இருநிலம் - பெரிய பூமி. அரு நரகு - எவரும் அணுகமுடியாத நரகம்.

தன், கைகேயி, தயரதன் ஆகிய மூவர்பேரிலும் ஏற்கெனவே இலக்குவனுக்கு ஏற்பட்ட ஆத்திரம் முற்றி இப்போது போர்வெறியாக மாறிவிட்டது. நன்மையை முட்டமுடியச் செய்தவர் முக்தியை அடைவர்; அவ்வாறே முட்டமுடியத் தீமை செய்தவர் பெரிய நரகத்தை அடைவர். சிறிது சிறிது நன்மை புரிபவர் பலவகைப்பட்ட நல்லுலகங்களை அடைவர். அவ்வாறே சிறிதுசிறிது தீமையைச்செய்தவர் அதற்குத் தக்க படியுள்ள நரகங்களை அடைவர். பலரும் விரும்பிப் பாடுபட்டுப் பெரு நன்மையைச் செய்யப் பெருமுயற்சி செய்கின்றனர். ஆதலால் அதில் முழுப்பயனான முக்தியை அடைந்துள்ளனர். பாவத்தை யாரும் விரும்பிப் பாடுபட்டுச் செய்வதில்லை யாதலால் தலைமையான பெரிய நரகத்தை இதுவரை யாரும் அடையவில்லை. அதை என்றும் யாராலும் அடைதல் முடியாது; ஆதலின் 'அருநரகு' என்றான். பரதன் ஒருவனே அவ்வளவு பெரிய தீங்கைச் செய்திருப்பதால், அவன் அவ்வருநரகில் போட்டியின்றி முடிமன்னனாக இருந்து ஆளப்போகிறான் என்றவாறு. இலக்குவனின் கோபவெறியின் உச்சநிலையும், பரதன்மேல் அவனுக்கு ஏற்பட்ட வெறுப்பின் எல்லையும் இங்கு காணப்படும்.

இதுவும் அது

969 வையகம் துறந்துவந்து
அடவி வைகுதல்
எய்தியது உனக்குஎன,
நின்னை ஈன்றவள்

---

969. வையகம் - உலகம். (இங்கே நாட்டைக் குறித்தது) அடவி - காடு. நைதல் - துன்பப்படுதல். நவை - குற்றம். கைகயன் மகள் - கைகேயி. அரற்றல் - புலம்பல்.

நைதல்கண்டு உவந்தவள்,
நவையின் ஓங்கிய
கைகயன் மகள்,விழுந்து
அரற்றக் காண்டியால். ௨௦

நாட்டைவிட்டு நீங்கிக் காட்டில் தங்கியிருக்கும் நிலைமை உனக்கு வந்து சேர்ந்துவிட்டது என்று உன்னைப்பெற்ற கோசலை, துன்பப் படுவதைக்கண்டு மகிழ்ந்தவளும் குற்றம் செய்வதில் மேம்பட்டவளுமான கைகேயி, விழுந்து புலம்பு கிறதைப் பார்ப்பாயாக.

(வி - ம்) உனக்கு முடி போய்விட்டதென்று மகிழ்ந்த வள், தன்மகன் இறந்தே போனான் என்று புலம்பப் போகி ருள் பார் என்கின்ருன். கோசலை துடித்துக் கதறும்போது பார்த்து மகிழ்ந்தாளே என்று எரிகிருன். 'கைகயன் மகள்' என்பது ஒரு சொல், 'கைகேயி' என்பதாம்.

பதினன்கு உலகையும் நீ கலக்குவாய்

970 இலக்குவ ! உலகம்ஓர்
ஏழும் ஏழும்நீ
கலக்குவென் என்பது
கருதி னல்,அது
விலக்குவது அரிது;அது
விளம்பல் வேண்டுமோ?
புலக்குஉரித்து ஒருபொருள்
புகலக் கேட்டியால். ௨௧

இலக்குவனே! நீ ஒரு பதினன்கு உலகங்களையும் கலக்குவேன் என்று சொல்வதைக் கருதினல், அதை விலக்கு வது முடியாத காரியந்தான். அதைச் சொல்லிக்காட்ட வேண்

970. புலக்கு - புலத்துக்கு. புலம்-அறிவு.

டுமா? (அது இருக்கட்டும் இப்போது) அறிவுக்கு ஏற்ற தான ஒரு செய்தி சொல்கிறேன் கேள்:

நம் குலத்தில் பிறந்தவர் பிழை செய்வரா?

971 நங்குலத்து உதித்தவர்
நவையுள் நீங்கினர்,
எங்குலப் புறுவர்கள்?
எண்ணில் யாவரே
தங்குலத்து ஒருவுஅரும்
தருமம் நீங்கினர்?
பொங்குஉலத் திரளொடும்
பொருத தோளினய். உஉ

விளங்குகிற திரண்ட கல் தூணோடு போட்டியிடும் தோள்களையுடையவனே! நம்முடைய குலத்தில் உதித்தவ ராகிய குற்றமற்ற அரசர்கள் எவ்வாறு அளவிட்டு (இத்தனை பேர் என்று) எண்ணி முடிக்கப்படுவர்? நினைத்துப் பார்த் தால் (அவர்களுள்) தம்முடைய குலத்துக்கு நீங்கக் கூடாத தான தரும வழியினின்றும் விலகியவர் யாவர்?

(வி - ம்) சூரியன் முதலாக இறுகாறும் நம்முடைய குலத்தில் பிறந்துள்ள அரசர்கள் எத்தனையோ பேர். அவர் களை எண்ணி முடியாது. ஆனல் அவர்களுள் யாராவது தரும வழியைவிட்டு நீங்கினரென்று நீ கேட்டிருக்கிறாயா என்று கேட்டான் இராமன். முன்பு தயரதன் 'நங்குலக் குரவர்கள் நவையில் நீங்கினர்........எங்குலப் புறுவரென் றெண்ணி நோக்குகேன்' என்றான் (பாடல் 414).

---

971. நவை - குற்றம். உலப்புறுதல் - அளவிடப்படுதல். ஒருவு - நீங்குதற்கு. உலம் - கல்தூண். உலத்திரள் என்றதை திரள் உலம் என மாற்றிக்கொள்க. திரள் - திரண்ட. பொருதல் - எதிர்த்தல்: போட்டியிடுதல்.

பரதன் செய்கை வரம்பு கடக்குமா ?

972 எனைத்துள மறைஅவை
இயம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப்
பரதன் செய்கையே
அனைத்திறம் ; அல்லன
அல்ல ; அன்னது
நினைத்திலை என்வயின்
நேய நெஞ்சினுல். உ௫

எத்தனை வேதம் உண்டோ அவை எடுத்துச் சொல்லக் கூடியனவாகிய எல்லா அறங்களும், பனையைப்போலத் திரண்ட கையையுடைய யானைபோன்ற பரதனது செய்கையே ஆம். (பரதன் செயலுக்குப்) புறம்பானவை (அறமென்று சொல்லப்படுவன) அல்ல. அவ்வுண்மையை என்னிடத்தில் கொண்ட பற்று மிகுந்த மனத்தினுல் நினைத்தாயில்லை ;

(வி - ம்) பரதன் செயல்தான் அறம். அவன் செய் யாதுவிட்டதுதான் அறத்துக்குப் புறம்பு. நீ என்னிடத்தில் ஒரே சார்பு கொண்டிருக்கிறபடியால் உன் நினைவிற்கு இது எட்டவில்லை என்று இராமன் கூறினன். 'காய்வதன்கண், உற்ற குணம்தோன்ரு தாகும் ; உவப்பதன்கண், குற்றமும் தோன்ருக் கெடும்' (அறநெறிச்சாரம் 22)

என்னைக் காணவே வருகிருன்

973 சேண்உயர் தருமத்தின்
தேவைச் செம்மையின்
ஆணியை அன்னது
நினைக்கல் ஆகுமோ ?

---

972. எனைத்து - எவ்வளவு. மறைகள் - வேதங்கள். பனை- பனைமரம். கரம் - தும்பிக்கை. கரி - யானை. அனை - அந்த. திறம்- கோட்பாடு. நேயம் - பற்று.

பூணியல் மொய்ம்பினுய் !
போந்தது ஈண்டுஎனைக்
காணிய ; நீஇது
பின்னும் காண்டியால். உச

ஆபரணம் அணியும் தோள்களை உடையவனே! வானத்தை எட்டும்படி உயர்ந்த தருமதேவதையைப் போன்றவனை, ஒழுங்கின் (மாற்றுரைத்து அறியும்) ஆணியை, நீ அவ்வாறு நினைக்கலாமா? அவன் இங்கே வந்தது என்னைக் காணும்பொருட்டே யாகும். இவ்வுண்மையைப் பின்பும் நீ காண்பாய் ;

(வி - ம்) தங்கத்தின் தரத்தைக் கண்டுபிடிக்க, பல வகைப்பட்ட மாற்று ஆணிகளை உரைத்துப் பார்த்து, இத்தனை மாற்றுத் தங்கம் இது என்று கண்டுகொள்வர். அவ்வாறு செம்மைக்கு ஒப்புநோக்கிப் பார்க்க உயர்ந்த ஆணியாக அமைந்திருப்பவன் பரதனேயாவான் என்றவாறு. பரதனின் ஒழுக்கத்தை ஒப்புநோக்கியே பிறருடைய ஒழுக்கம் சரியானதா பிழையானதா என்று பார்க்கவேண்டும். பரதனின் ஒழுக்கத்திற்கு மற்றவை மாறுபடின் அவை ஒழுக்கத்தின் பாற்படாதென்க. இனி, செம்மை என்றது தேருக்கு அச்சாணிபோன்றவன் பரதன் என்பது மொன்று. பரதனில்லையென்றால் கடையாணி இல்லாத தேர் எவ்வாறு ஆகுமோ அவ்வாறு செம்மை என்ற குணம் சிதைவுபட்டுப்போம் என்றவாறு.

---

973. சேண் - வானம். தருமத்தின் தேவு - தருமதேவதை. பூண் - ஆபரணம். மொய்ம்பு - தோள். காணிய - காணும் பொருட்டு.

சேனையை நிறுத்திவிட்டுப் பரதன் முந்துகிருன்

974 என்றனன் இளவலை
நோக்கி ஏந்தலும்
நின்றனன் ; பரதனும்
நிமிர்ந்த சேனையைப்
பின்தருக என்றுதன்
பிரிவில் காதலின்,
தன்துணைத் தம்பியும்
தானும் முந்தினுன். உடு

என்று சொல்லிவிட்டு இலக்குவனைப் பார்த்த வண்ணமாக இராமன் நின்ருன். பரதன் மிகுந்த சேனைகளைப் பின்னே வரச்செய்க என்று கட்டளையிட்டுவிட்டு, தன்னினின்றும் பிரிதலில்லாத அன்பையுடைய தனக்குத் துணையான சத்துருக்கனும் தானுமாக முந்தி நடந்தான்.

அவலத்தின் உருவம்

975 தொழுதுஉயர் கையினன் ;
துவண்ட மேனியன் ;
அழுதுஅழி கண்ணினன் ;
அவலம் ஈதுஎன
எழுதிய படிவம்ஒத்து,
எய்து வான்தனை,
முழுதுஉணர் சிந்தையான்
முடிய நோக்கினுன். உசு

---

974. இளவல் - இலக்குவன். ஏந்தல் - இராமன். நிமிர்ந்த - மிகுந்த. தருக என்று - வரச்செய்யுங்கள் என்று கூறி. பிரிவுஇல் - பிரிதலில்லாத. காதலின் - காதலையுடைய. தம்பி - சத்துருக்கன்.

975. உயர் - உயர்ந்த. துவள்தல் - தளர்தல். அவலம் - துன்பம். படிவம் - வடிவம்.

தலைமேல் உயர்த்தித் தொழுகின்ற கையை உடையவனும், மெலிந்து சோர்ந்த உடலையுடையவனும், அழுது அழுது அழகழிந்த கண்ணையுடையவனுமாக, துன்பமே இது என்று எழுதிக் காட்டிய சித்திரத்தை ஒத்துவந்து அடைபவனை, யாவும் அறிந்த உள்ளத்தையுடைய இராமபிரான் முழுவதும் நன்றாகப் பார்த்தான்.

(வி - ம்) துன்பம் என்ற பொருளைச் சரியாகப் படத்தில் எழுதிக் காட்டினால் எவ்வாறிருக்குமோ அவ்வாறிருந்தான் பரதன். அவனைப் பார்ப்பவர் அவனது உடலையோ உறுப்புக்களையோ காணஇயலாது; துன்பம் ஒன்றுதான் கண்ணுக்குப் புலப்படும். அப்படி, துன்பம் ஒன்றினாலே ஆக்கிய உள்ளமும் உடலுமே பெற்றிருந்தான் என்றவாறு.

போர்க் கோலத்தைப் பார்!

976 கார்ப்பொரு மேனிஅக்
கண்ணன் காட்டினான்;
ஆர்ப்புறு வரிசிலை
இளைய ஐய! நீ
தேர்ப்பெரும் தானைஅப்
பரதன் சீறிய
போர்ப்பெரும் கோலத்தைப்
பொருந்த நோக்கு!என. உஎ

கார் மேகத்தை ஒத்த அவ்விராமபிரான், (இலக்குவனை நோக்கி) ஆரவாரித்தலையுடைய கட்டமைந்த வில்லையுடைய தம்பி! நீ பெரிய தேர்ப்படையை யுடைய அந்தப் பரதன் சீற்றமடைந்து வருகிற போருக்குரிய வடிவத்தை நன்றாகப் பார் என்று காட்டினான்.

---

976. கார் - மேகம். பொரு - ஒத்த. கண்ணன் - இராமன். ஆர்ப்பு - ஆரவாரம். கோலம் - வடிவம்.

உணர்வுசோர வில் நழுவிற்று

977 எல்ஒடுங் கியமுகத்து
இளவல் நின்றனன் ;
மல்ஒடுங் கியபுயத்
தவனை வைதுஎழும்
சொல்லொடும், சினத்தொடும்,
உணர்வு சோர்தர,
வில்லொடும் கண்ண நீர்
நிலத்து வீழவே. உஅ

ஒளி யிழந்த முகத்துடன் இலக்குவன் நின்றான் ; வலிமை ஒடுங்கிய தோள்களையுடைய பரதனைத் திட்டி எழுகின்ற சொல்லோடும் கோபத்தோடும் உணர்ச்சியே சோர்ந்து அடங்க, கையிற் பிடித்திருந்த வில்லும் கண்ணீரும் (சேர்ந்து) நிலத்தில் விழும்படி, ஒளியிழந்த முகத்தோடு இலக்குவன் (சிலையாக) நின்றனன்.

(வி - ம்) விரதத்தில் இளைத்த உடலையுடைய பரதனை வைத வாய் சோர்ந்தது, கோபமும் மறைந்தது ; உணர்ச்சியும் ஒழிந்துபோயிற்று ; கண்ணீர் கொட்டியது ; கையிற் பிடித்த வில் தானாக நழுவிக் கீழே விழுந்தது. சிலையாக நிற்கிறான் இலக்குவன். அவலச் சுவைக்கு இப்பாடல் ஒரு எடுத்துக் காட்டாகும். வாயில் சொல் வந்துகொண்டிருக்கிறபோதே— கறுவுகிற உணர்ச்சி செயற்பட்டுக்கொண்டிருக்கிற போதே பரதனைக் கண்டதும் உணர்ச்சி நின்று உடல், பட்ட கட்டையாகிவிட்டது. உடனிகழ்ச்சியைக் காட்ட வேறு என்ன வேண்டும்? இனி கோபம் மாறி அவலமாகி, கண்ணிலிருந்தெழுந்த தீமாறி நீராகிக், கணநேரத்தில் கொட்டியது

---

977. எல் - ஒளி. மல் - வலிமை. வைது - திட்டி. கண்ண நீர் - கண்ணீர்.

என்றார் ; கண்ணீர் கீழே விழும்போதே வில்லும் வீழ்ந்தது! யாவும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. பரதனைக் கண்ட குகன், ‘விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்’ (பாடல் 924) என்றது இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

நிலமகள் விட்ட தூது

978 கோதுஅறத் தவம்செய்து,
 குறிப்பின் எய்திய
நாதனைப் பிரிந்தனள்,
 நலத்தின் நீங்கினாள்,
மேதினித் திருமகள்
 மெலிகின் றாள்விடு
தூதுஎன, பரதனும்
 தொழுது தோன்றினான். உக

பூமிதேவியாகிய செல்வமகள், குற்றமற்ற தவத்தைச் செய்து தன் கருத்தின்படி கிடைத்த தலைவனைப் பிரிந்து, எல்லா நன்மைகளினின்றும் நீங்கி வாட்டமடைந்தவளாய், (அவள்) விட்ட தூதன் என்று சொல்லும்படி பரதன் தொழுதுகொண்டே வந்தான்.

(வி - ம்) பூமியாகிய பெண் தனக்கு நல்ல நாயகன் வேண்டுமென்று பலநாள் தவங்கிடந்தாள் ; அவ்வாறே இராமன் வந்தான். பூமி தேவியை மணம் செய்துகொள்ளும் நாளுங் குறித்து, வேண்டுவன யாவும் சித்தமாயின. எனினும் கடைசி நேரத்தில் இழந்தாளாதலின் ‘எய்திய நாதனைப் பிரிந்தனள். என்றார். இதனைத் தயரதன் ‘பெருமகன் என்வயிற் பிறக்கச் சீதையாம், திருமகள் மணவினை தெரியக்

---

978. கோது - குற்றம். குறிப்பின் - குறித்தபடி. மேதினி- பூமி.

கண்டயான், அருமகள் நிறைகுணத்து அவனி மாதெனும், ஒருமகள் மணமுங்கண்டு உவப்ப தாயிலேன்' (பாடல் 419) என்று கூறினன். புவி மகள் நன்மையை நீங்கினள்; வேதனைப்படுகிருள்; மெலிகிருள். இவையெல்லாம் தலைவி படும் பாடுகளாம். அப்பொழுது செய்வதென்ன? தலைவனுக்குத் தூதுவிடலாம். பாதனையே தூதுவிட்டாள் என்றார். பூமிதேவி படும்பாட்டைக் காட்டிலும் மிக்க துன்பத்தோடு தூதன் வருகிருன் என்ற நயம் உணரத்தக்கது.

இராமன் காலில் விழ்ந்தான்

979 அறந்தனை நினைந்திலை!
அருளை நீத்தனை!
துறந்தனை முறைமையை!
என்னும் சொல்லினன்,
மறந்தனன் மலரடி
வந்து வீழ்ந்தனன்;
இறந்ததன் தாதையை
எதிர்கண் டென்னவே. ௩௦

அறத்தை மறந்தாய்! அருளைக் கைவிட்டாய்! முறைமையை நீங்கினை! என்ற சொற்களைச் சொல்லியவனாய், இறந்துபோன தந்தையை எதிரில் கண்டவனைப்போல (இராமனுடைய) மலர்போன்ற அடிகளில் வந்து வீழ்ந்தான்; (தன்னை) மறந்தான்.

(வி - ம்) கடமையை நினைக்கவில்லை; கருணையும் போய்விட்டது; முறையையும் விட்டுவிட்டாய் என்றான்.

---

979. அறம் - கடமை. அருள் - கருணை. நீத்தல் - ஒழித்தல். முறைமை - தொன்றுதொட்ட வழக்கம். சொல்லினன் - சொல்லையுடையவன். மறந்தனன் - தன்னை மறந்தனன்.

கடமை—மூத்தவனுகப் பிறந்தால் அரசாள வேண்டுமென்பது. கருணையை விட்டது - உலகமெல்லாம் உயிர்போனற்போல வருந்த,இரக்கமே இல்லாது கல்நெஞ்சோடு காட்டுக்கு வந்தது. முறைமை துறந்தது—பரதன் முடி சூடலை ஒப்புக்கொண்டது. மூன்றும் பிழை என்முன் என்றவாறு. தந்தையையும் தமயனையுங் காணுது தவித்த அவன், தமயனைக் கண்டதும் ஏற்பட்ட ஆற்றுமை அவனை மூர்ச்சை யடையச் செய்துவிட்டது. இருவரையும் ஒருவடிவிற் கண்டது போன்ற பேருணர்ச்சி அவனை விழுங்கிவிட்டது என்க.

கண்ணீர், சடையை நனைத்தது

980 உண்டுகொல் உயிர்என
    ஒடுங்கி னுன்,உருக்
கண்டனன், நின்றனன்,
    கண்ணன் கண்எனும்
புண்டரீ கம்பொழி
    புனல்,அ வன்சடா
மண்டிலம் நிறைந்துபோய்
    வழிந்து சோரவே. ௩௧

உயிர் இருக்கிறதா என்று ஐயப்படும்படி வற்றி வறண்டிருக்கிற உருவத்தை இராமன் கண்டான் ; (அப்போது) கண் என்று கூறப்படும் தாமரை மலர்களிலிருந்து பொழிந்த கண்ணீர் காலில் விழுந்துகிடக்கிற பரதனுடைய சடைமுடியில் நிறைந்து பெருகி வழிந்துஓடுமாறு நின்றுன்.

(வி - ம்) பரதன் பலநாள் நல்ல உணவின்றி நீண்ட தூரம் வழிநடந்து தீராத் துயரத்தோடு வந்தானுதலின் உடல் வற்றி வறண்டு போய்விட்டது. முன்பு இருந்ததையும் இப்

---

980. ஒடுங்கினுன் - பரதன். உரு - உடல். புண்டரீகம் - தாமரைப் பூ. சடாமண்டிலம் - சடை முடி.

போதிருக்கிறதையும் இராமன் எண்ணித் துன்பக் கடலில் முழுகினுன். பொறுக்கமுடியாமல் கண்ணீரை ஆருகப் பெருக்கினுன் என்க.

இரக்கம் அறத்தைத் தழுவியது

981 அயாஉயிர்த்து அழுகணீர்
அருவி மார்பிடை
உயாஉறத் திருவுளம்
உருகிப் புல்லினுன் ;
நியாயம்அத் தனைக்கும்ஓர்
நிலையம் ஆயினுன்,
தயாமுதல் அறத்தினைத்
தழீஇயது என்னவே. ௩௨

அருள் வடிவமான முதற்கடவுள், தருமதேவதையைத் தழுவினுற்போல, எல்லா நீதிகளுக்கும் ஒரு இருப்பிடமாக உள்ள இராமபிரான், பெருமூச்சுவிட்டு அழுதலாலாகிய கண்ணீர் அருவியைப்போலப் பெருகுகின்ற மார்பில், மன மானது பெரிய துன்பத்தை அடைய உருக்கமெய்தி (பரத னைக்) கட்டித் தழுவினுன்.

(வி - ம்) அருள் அறத்தைத் தழுவியது. அருள் இராமன் ; அறம் பரதன். தனி அருளோ தனி அறமோ செயற்படா. இரண்டும் சேர்ந்துதான் பயனை அளித்தல் வேண்டும். அறம், அருளைத் தழுவுவது இயல்பன்று. கருணைதான் யாவற்றையும் தானே தழுவுந் தன்மையுள்ளது என்றவாறு.

---

981. அயாவுயிர்த்தல் - பெருமூச்சு விடுதல். உயா - வருத்தம். நியாயம் - நல்லநெறி. நிலையம் - இருப்பிடம். தயா - கருணை : அருள். முதல் - கடவுள்.

தந்தை சுகமா ?

982 புல்லினன் நின்றுஅவன்
புனைந்த வேடத்தைப்
பன்முறை நோக்கினன் ;
பலவும் உன்னினன் ;
'அல்லலின் அழுங்கினை !
ஐய ! வாளுடை
மல்லுயர் தோளினன்
வலிய னோ ?' என்றான். ௯௮௨

தழுவிக்கொண்டு நின்றபடியே பரதன் கொண்டிருந்த தவவேடத்தைப் பலமுறை பார்த்தான் ; பலவகையாக நினைத்தான் ; 'ஐயனே ! துன்பத்தில் நிலையழிந்திருக்கிறாய். வாளினையுடையவனும் மற்போரில் வளர்ந்த தோள்களையுடையவனுமான (தந்தை) குறைவிலாதிருக்கிறானா என்றான்.

(வி - ம்) வாள், ஆட்சியையும், தோள், உடலையும் குறிக்கும். ஆட்சியில் குறைவில்லையா ? உடல் நலமாக இருக்கிறானா ? என்பது கருத்து. இராமனுக்கு, பரதனின் நிலை கலங்கியிருப்பதற்குக் காரணம் விளங்கவில்லை. தகப்பன் கொடுத்த அரசை ஆளவேண்டியதுதானே. இவ்வளவு துன்பமடைய வேறு காரணமிருக்க வேண்டும் ; இருந்தாலும் துறவு பூண்டு தவக்கோலம் ஏற்றுக் காலால் நடந்து வருவானேன் என்ற ஐயமெல்லாம் ஏற்பட்டன. அதனால்தான், 'வேடத்தைப் பன்முறை நோக்கினன் ; பலவும் உன்னினன்' என்றார். பரதன், முடியை ஏற்கமாட்டானென்ற எண்ணமே இராமனுக்கு இல்லை ; ஆதலால் துயரத்திற்குக் காரணங் காண இடர்ப்பட்டான். இதனை, 'வாதன் துஞ்சினன் வையம் ஆணையால், சரதம் நின்னதே ! மகுடம் தாங்க

---

982. அல்லல் - துன்பம். அழுங்குதல் - நிலையழிதல்.

லாய், விரத வேடம் நீ என்கொல் வேண்டுவான்?' (பாடல் 1007) என்று கேட்டதறிக.

அவன் மேலுலகம் சென்றான்

983 அரியவன் உரைசெயப்
 பரதன், ஐய! நின்
பிரிவெனும் பிணியினால்
 என்னைப் பெற்றஅக்
கரியவள் வரமெனும்
 காலனால், தனக்கு
உரியமெய்ந் நிறுவிப்போய்
 உம்பரான்' என்றான். ௩௪

இராமபிரான் அவ்வாறு கேட்க, பரதன் 'ஐயனே! உன்னுடைய பிரிவு என்ற நோயினாலும், என்னைப்பெற்ற அந்தக் கரியாகப் போனவள் (கைகேயி) பெற்ற வரம் என்ற எமனாலும் தனக்குப் பிறப்புரிமையான சத்தியத்தை நிலை பெறச் செய்துவிட்டுப்போய் மேலுலகத்தவனானான்' என்றான்.

(வி - ம்) தகப்பன் பிறந்தது முதல் நோயை அறியான்; உன்னுடைய பிரிவுதான் அவனுக்குத் தீராத நோயாயிற்று. அவனுடைய உயிரைப் பிரிக்கவேண்டுமென்று எமனும் நினைக்கவில்லை. கைகேயி பெற்ற வரந்தான் எமனாகிப் பிரித்தது என்றான். நீங்கள் இருவருந்தான் தந்தை பிரிவுக்குக் காரணம் என்று தோன்றும்படி பரதன் தன்னை மறந்த நிலை

983. அரியவன் - இராமன். பிணி - நோய். கரியவள் - கரியாகப் போனவள்: மனிதத் தன்மையாகிய இயல்பு கெட்டவள். (மரம் கரியானதுபோல) காலன் - எமன். நிறுவுதல் - நிலைபெறச் செய்தல். உம்பரான் - மேலுலகத்தவன்: தேவன். உம்பர் - மேலுலகம்.

யில் கூறினன்; அதுதானே உண்மை. இராமன் காட்டுக்கு வாராதிருப்பின் தயரதன் இறவான் என்பது பரதனின் உள்ளூறக் கிடந்த எண்ணமாகும். அரியவன்—காணுதற்கு அரியவன்; உணர்தற்கு அரியவன் எனப் பலவாறு விரியும்: கடவுள் என்றவாறு.

மண்ணில் விழுந்தான்

984 'விண்ணிடை அடைந்தனன்'
என்ற வெய்யசொல்,
புண்இடை அயில்எனச்
செவிபு காமுனம்,
கண்ணொடு மனம்சுழல்
சுறங்கு போலவாய்,
மண்ணிடை விழுந்தனன்
வானின் உம்பரான். ௩௫

தந்தை மேலுலகத்துக்குச் சென்றான் என்ற கொடிய சொல்லானது புண்ணிலே வேலைச் செலுத்தினாற்போலக் காதிலே நுழைவதற்கு முன்பே, கண்ணும் மனமும் சுழல்கின்ற காற்றாடியைப்போல ஆகி, வானுலகத்துக்கும் மேலே உள்ள பரமபதத்திற்குரிய இராமபிரான் மண்ணிலே விழுந்தனன்.

(வி - ம்) சொல் செவியில் புகுந்துதானே விழவேண்டும்: 'புகா முனம் விழுந்தனன்' என்றது விரைவுபற்றி என்க. தந்தை மண்ணிலிருந்து விண்ணில் சேர்ந்தான் என்று பரதன் சொன்னான். இங்கே கவி, 'விண்ணுக்கு

---

984. அயில் - வேல். புகா - புகுதற்கு. சுறங்கு - காற்றாடி. ஆய் - ஆகி. வானின் - வானுலகத்திற்கு. உம்பரான் - மேலுலகத்தில் உள்ளவன். (பரமபத நாதன்)

அப்பாலிருக்கும் உலகிலுள்ள இராமன் மண்ணில் விழுந்தான்' என்றார். இது உணர்ந்து பாராட்டத்தக்க நயமாகும். தத்துவத்தில் இராமன் கடவுள்தான். அந்தக் கடவுள் மனித உடலினுள் இருக்கிறது. கடவுள் செய்யும் செயல்களை மனித உடல்மூலம் செய்தல் இயலாது. மனிதச் செயலில் கடவுள் தன்மை கலந்து நிறைந்திருக்கும்; அரக்கத்தன்மை கலவாது; இந்த உறுதியில் காவியம் செல்லவேண்டும். அல்லாமல் கடவுளின் பேராற்றலுக்கு ஏற்பச் செல்லுமாயின் அது தத்துவ நூலாகிவிடும். அல்லது குழப்பமாக முடியும். இராமன் மனிதனாகவே இருக்கிறான்; மனிதனாகவே நடக்கிறான்; ஆனால் அவனுடைய உயிர், பாவமற்றதாகவும் கருணையும், தியாகமும் உள்ளதாகவும் காணப்படுகிறது. மனிதப் பண்பிலும் தெய்வத்தன்மையிலும் இயங்குவது அவதாரமெனப்படும். கடவுளின் பூரண ஆற்றலை அவதாரம் பெறுவதென்றால் அவதாரம் தேவைப்படாது. கடவுளே நேரில் நின்று செயலாற்றலாமன்றோ? மனிதன் கெட்ட குணங்களில் நீங்கி நற்குணங்களில் பூரணமடைந்து தெய்வமாவான்; உலகில் நடுநிலைமை கலங்கித் தடுமாறும்போது, தெய்வம் மனித உருப்பெற்று, கலக்கத்தை நீக்கி அளவு படுத்துகிறது. அவதாரமானாலும் மனித உடலினால் ஆற்றக்கூடியதையே ஆற்றும். ஆதலின் கடவுள் அவதாரமான இராமன் தந்தை இறந்த சோகத்தால் துடித்துக் கீழே விழுந்தான் என்க.

இராமன் புலம்பல்

985 இருநிலம் சேர்ந்தனன்;
இறை உயிர்த்திலன்;
உரும்எறி அரவென
உணர்வு நீங்கினன்;

அருமையின் உயிர்வர
அயா உயிர்த்துஅகம்
பொருமினன் ; பன்முறை
புலம்பி ஞன்அரோ. ௩௮௬

பெரிய நிலத்தில் விழுந்த கடவுள் (இராமன்) மூச்சு அடங்கி, இடியினுல் தாக்கப்பட்ட பாம்பைப்போல உணர்ச்சியும் அற்றுப்போனுன் ; அரிய முயற்சியினுல் உயிர்வர, பெருமூச்சுவிட்டு உள்ளம் பொருமினுன் ; விட்டுவிட்டுப் பலமுறை புலம்பினுன்.

(வி - ம்) மூச்சடங்கி விட்டது. தொட்டால் அறியும் உணர்ச்சியுமில்லை. அருகிலிருந்தவர் செய்த உதவியால் உணர்வு வந்தது. பிறகு மூச்சு வந்தது. இது துக்கத்தில் ஏற்பட்ட மெய்ப்பாடு. தொடர்ந்து புலம்பவும் முடியாதவனுன் என்பதை 'பன்முறை புலம்பினுன்' என்ருர். புலம்பிக்கொண்டிருக்கும் போதே மூச்சைத் துக்கம் அடைக்கிறதென்றவாறு. இவ்வாறு பட்டது 'இறை' என்ருர். இராமன் என்று கூறவில்லை. கடவுள் இவ்வாறு இறந்தவரை எண்ணி வருந்தலாமா எனின் வருந்தலாம் என்பதாம். கடவுள் மனித உடலில் வந்தால் வருந்தியே தீரவேண்டும். அது போட்ட வேடத்துக்காக அன்று. கடவுள் நடிக்கிருன் என்பதும் பிழை. கடவுள் மனிதனுனுல் மனிதனுகத்தான் இயங்குதல் வேண்டும். மனித உடலை நிகழ்ச்சிகள் பற்றியே நிற்கும். தகப்பன் இறந்த துன்பம் உண்மை மகனை எப்படிப்படுத்தும் என்பது விளங்கவேண்டும். தெய்வம் உண்மையைக் காட்ட வேண்டுமேயன்றி நடித்தலாகாது. ஆதலால் துக்கத்தால்

985. இரு - பெரிய. இறை - கடவுள் : இராமன். உயிர்த்தல் - மூச்சுவிடல். உரும் - இடி. அரவு - பாம்பு. உணர்வு - பிறர் தொடுவதை அறியும் உணர்ச்சி. அருமையின் - பிறர் செய்த பலவகை முயற்சியால். அயா உயிர்த்து - பெருமூச்சுவிட்டு.

உயிர்போகிற நிலையில் அவன் ‘ இறை ’ என்பதில் ஐயமில்லை என்று கவி உறுதிப்படுத்துவாராயினர். இராமன் திருமால் மட்டுமல்ல ; உலகமெல்லாம் ஏற்கும் கடவுள் ஒன்றே ; அது தான் திருமால். இங்கே இராமன் என்பார் யாவராலும் ஏற் கப்படும் ‘ இறை ’ என்ற சொல்லை ஆண்டுள்ளார் என்க.

நந்தா விளக்கு

986 *‘நந்தா விளக்குஅனைய
நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனிஅறத்தின்
தாயே! தயாநிலையே
எந்தாய்! இகல்வேந்தர்
ஏறே! இறந்தனையே!
அந்தோ! இனிவாய்மைக்கு
ஆர்உளரே மற்று’என்றான். ௩எ

அணையாத விளக்கை ஒத்த புவியின் நாயகனே! நால் நிலத்தோர்க்கும் தந்தையே! ஒப்பற்ற தருமத்திற்குத் தாய் போன்றவனே! கருணையின் இருப்பிடமானவனே! எனது தந்தையே! (யானையைப் போன்ற) போர் அரசர்களுக்குச் சிங்கம் போன்றவனே! இறந்து போயினையே! ஐயோ! இனி சத்தியத்தைக் காப்பதற்கு வேறு யார் இருக்கிறார்கள்? என்றான்.

(வி - ம்) குலத்தை நன்மையால் விளங்கச் செய்தவன் ஆதலால் அணையா விளக்கு எனப்பட்டான். விளக்கைப் போல அறிவைப் பரப்பி அறியாமையைப் போக்கியதனாலும்

---

986. நந்தா - அவியாத. நால்நிலம்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். எந்தாய் - எம் தந்தாய். இகல் - போர். ஏறு - ஆண் சிங்கம்.

விளக்கெனப்பட்டான். அவன் புகழ் என்றும் அழியாது நிலவுமாதலின் ' நந்தா விளக்கு ' ஆம். இனி அறுபதாயிரம் ஆண்டு புகழ்பெற ஆண்டானுதலின் இவன் ஆட்சி முடிவுறாது ஆண்டுகொண்டே இருப்பான் என்று பலரும் கருதினர். ஆதலின் 'நந்தா நாயகன்' என்றுங் கொள்ளலாம். 'அறமும் தயையும்' மன்னர்க்கு நீங்கத் தகாத பொருள்களாகும் என்பதை ஈண்டேயன்றி இராமனை நோக்கி, பரதன் கூறுவது கொண்டும் அறிக. 'அறந்தனை நினைந்திலை, அருளை நீத்தனை' (பாடல் 979).

நீ சென்றாய் நான் இருக்கிறேன்

987 தேன்அடைந்த சோலைத்
திருநாடு கைவிட்டுக்
கான்அடைந்தேன் என்னத்
தரியாது, காவல! நீ!
வான்அடைந்தாய்! இன்னம்இருந்
தேன்நான் வாழ்வுஉகந்தே!
ஊன்அடைந்த தெவ்வர்
உயிர்அடைந்த ஒள்வேலோய்! ௩௮

உடலிலே வலிமை அடைந்த பகைவர்கள் உயிரை வாங்கிய நல்ல வேலையுடையவனே! தேன், அடையாகப் பொருந்தியிருக்கிற சோலைகளையுடைய சிறந்த நாட்டை நீங்கிக் காட்டை அடைந்தேன் என்று கேட்டுப் பொறுக்காமல், அரசனே! நீ வானுலகத்தை அடைந்து விட்டாய்! உலக வாழ்வை விரும்பி நான் இன்னமும் இருக்கிறேன்.

(வி - ம்) நான் இறக்கவில்லை; திரும்பி வருவேன் என்றாலும் சிறிது நாள் பிரிந்து வந்ததையே பொறுக்க

987. உகந்து - விரும்பி. ஊன் அடைந்த - உடல் வலிமை பெற்ற. தெவ்வர் - பகைவர். ஒள் - ஒண்மை : நன்மை.

முடியாமல் இறந்துவிட்டாய். நானே, நீ திரும்ப முடியாதபடி இறந்துபோனாய் என்பதறிந்தும் உயிரோடு இருக்கிறேன் என்று வருந்தினான். உலக வாழ்வைத் துரும்பாக எண்ணி உதறிவிட்டாய் நான் முடியாதவனானேன் என்றவாறு. தெவ்வர் என்றது அறத்திற்குத் தெவ்வர் என்க. அறத்துக்குப் பகைவரே தயரதனுக்கும் பகைவராவர். ஆதலால் 'ஒள் வேலோய்' என்றார். வேலுக்கு ஒண்மையாவது அறத்திற்குக் குறைவு ஏற்படாமல் கொல்லுதல் ஆம்.

எல்லாம் போய்விட்டனவே !

988 வண்மையும், மானமும்,மேல்
வானவர்க்கும் பேர்க்ககிலாத்
திண்மையும், செங்கோல்
நெறியும், திறம்பாத
உண்மையும், எல்லாம்
உடனேகொண்டு ஏகினையே!
தண்மை தகைமதிக்கும்
ஈந்த தனிக்குடையோய்! ௩௯

குளிர்ச்சியைப் பெருமையுள்ள சந்திரனுக்கும் அளித்தாய் என்று சொல்லக்கூடிய ஒப்பற்ற சந்திரவட்டக் குடையை உடையவனே ! ஈகையையும், மானத்தையும், தேவர்களாலும் எதிர்க்கமுடியாத உறுதியையும், செம்மையான ஆட்சி நெறியையும், தவறாத சத்தியத்தையும் (இன்னுமுள்ள) எல்லா (நல்ல குணங்களையும்) உன்னுடனே கொண்டு போய் விட்டனையே !

---

988. வண்மை - ஈகை. பேர்க்ககிலா - அசைக்கமுடியாத. திண்மை - உறுதி. திறம்புதல் - தவறுதல். தண்மை - குளிர்ச்சி. தகை - பெருமை. மதி - சந்திரன்.

(வி - ம்) தயரதனாலேயே இந்த நற்குணங்கள் நிலை பெற்றிருந்தன என்று இராமன் கருதுகிறான். குடை என்பது ஆட்சியைக் குறிப்பது. ஆட்சியானது வெய்யிலில் இருக்கும் மக்களுக்கு நிழல் செய்வது போல்வதாகுமென்பது குறிப்பு. தயரதனது ஆட்சி நல்லோருக்கு வெப்பத்தைச் செய்யாது. இதைக்கண்டு சந்திரன் கற்றுக்கொள்கிறான் என்பதை 'தகை மதிக்கும் தண்மை ஈந்த' என்றார். நல்லவர்களான இரு காதலர் ஒன்றினால் இன்பமும், பிரிந்தால் துன்பமும் செய்வது சந்திரனின் இயற்கையல்லவா ? தயரதனுடைய குடையினிட மிருந்து நல்லவர்க்கு நன்மை செய்வதில் பாதியளவுதான் பெற்றுக்கொண்டிருக்கிறான் என்னலாம். உயர்ந்த ஒருவர் இறந்தால் அவருடல் அழிவதோடு துன்பம் ஒழிவதில்லை. அவருடைய நல்ல குணம் பண்பு செயல் எல்லாமே தொலைந்து போவதுதான் மிக்க வருத்தந் தருவதாம். மனிதனின் உடல் அழிவதால் உலகுக்கு நட்டமில்லை. குணம், செயல் நட்ட மாவதே வருந்துதற்குரியது. இவ்வுண்மை 'உடனே கொண்டேகினையே' என்பதில் ஏக்க உணர்ச்சியோடு வெளிப் பட்டு நிற்கிறது. நல்ல குணங்கள் என்றுமே நிலைபெற் றுள்ளன. அவை ஒருநாளும் அழிவதில்லை. ஆனால் அவை புகுந்து செயல்படுதற்கு ஏற்ற நல்ல உடல் கிடைப்பதில்லை. அவ்வாறு ஏற்ற பண்பட்ட தயரதனின் உடல் போனது மிகவும் வருந்தத்தக்க தென்றவாறு.

வசிட்டர் தேற்றினர்

989 என்றுஎடுத்துப் பற்பலவும்
பன்னி இடர்உழக்கும்,
குன்றுஎடுத்த ஒக்கும்
குவவுத்தோள் கோளரியை,

வன்தடக்கைத் தம்பியரும்
மற்றுள்ள மன்னவரும்
சென்றுஎடுத்துத் தாங்கினர் ;
மாவசிட்டன் தேற்றினன். ௯0

என்று இவ்வாறு குரலெடுத்துப் பல பலவற்றைக் கூறிப் புலம்பித் துன்பப்படுகிற, மலைகள் வடிவம் எடுத்து வந்ததை ஒத்த திரண்ட தோள்களையுடைய, சிங்கம் போன்ற இராம பிரானை, வலிய பெரிய கைகளையுடைய தம்பிமார்களும் மற்றப்படி (அங்கே) வந்திருக்கிற அரசர்களும் அருகிற் சென்று பிடித்துத் தாங்கிக்கொண்டனர். பெருமை பொருந்திய வசிட்டர் தேறுதல் கூறினர்.

(வி-ம்) எழுவதும், இருப்பதும், விழுவதுமாக இடர்ப் பட்டபடியால் மற்றவர் சென்று தூக்கி யணைக்கும்படியாய் விட்டது. இப்போது வசிட்டரும் வந்து சேர்ந்துவிட்டா ரென்பதறியப்படுகிறது.

இறத்தலும் பிறத்தலும் இயற்கை

990* துறத்தலும் நல்லறத்
துறையும் அல்லது
புறத்துஒரு துணையிலைப்
பொருந்தும் மன்னுயிர்க்கு ;
இறத்தலும் பிறத்தலும்
இயற்கை என்பதை
மறத்தியோ! மறைகளின்
வரம்பு கண்டநீ! ௯௧

---

989. பன்னி - புலம்பி. இடர் - துன்பம். உழத்தல்-மறுக் கடிப்படுதல். குவவு - திரண்ட. கோளரி - சிங்கம். வல் தடம் கை - வலிய பெரிய கைகள்.

990. துறை - வழி. புறத்து - புறம்பாக. வரம்பு - எல்லை.

உலகில் வந்து பொருந்திய நிலைபெற்ற உயிருக்கு, மனம் பற்றற்றிருத்தலும், நல்ல அறவழியில் நிற்றலும் அல்லாது (இவைகளுக்குப்) புறம்பாக ஒரு துணையும் கிட்டாது. இறத்தலும், பிறத்தலும் இயற்கையாக நிகழ்வனவே யாகும் என்பதை வேதங்களின் எல்லையைக் கண்ட நீ மறந்து விட்டாயோ ?

(வி - ம்) துறத்தல் என்பது உலக பாச பந்தங்களில் மனம் நீங்கியிருப்பது. அறத்துறை - அறவழி : தரும மார்க்கம் என்பதும் அது. நல்ல நெறி எனினும் அமையும். இவ்விரண்டைத் தவிர உயிருக்கு உதவி செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்பார் 'புறத்து ஒரு துணையிலை' என்று வற்புறுத்திக் கூறினரென்க. 'நல்' இயற்கையடை. குழந்தை பிறக்கும்போது மகிழ்வதும் இறக்கும்போது அழுவதும் ஏன் ? இரண்டும் இயற்கையேயாம். இறந்தது பிறக்கும் ; பிறந்தது இறக்கும் ; இதைக் கண்டு அழ என்ன இருக்கிறது ? என்றார். 'சாதலும் புதுவதன்றே' (புறம் 192).

எமனிடம் இரக்கம் ஏது ?

991 உண்மையில் பிறவிகள்
உலப்பில் கோடிகள்
தண்மையில் வெம்மையில்
தழுவி னார்எனும்,
வண்மையை நோக்கிஅவ்
வறிய கூற்றின்பால்
கண்மையும் உளதுஎனக்
கருதல் ஆகுமோ ? சஉ

நிலையில்லாதனவாகிய பிறப்புக்கள், நன்மையிலும் தீமையிலும் எண்ணி அளவிட முடியாதபடி கோடிக் கணக்

991. உலப்பு-அளவு. கண்மை-கண்ணின் தன்மை : கருணை.

காகும். அவற்றுள், (அன்பு கொண்டு உயிரினத்தைத்) தழுவினவர் என்ற ஈகைக்குணத்தை நோக்கி, அந்தக் கொடிய எமனிடத்தில் தாட்சணியம் உண்டு என்று எதிர் பார்க்க முடியுமா?

(வி-ம்) உலகில் நாள்தோறும் கோடிக்கணக்கான பிறப்புக்கள் தோன்றிக்கொண்டே யிருக்கின்றன. அவற்றுள் அன்பு தியாகம் முதலிய குளிர்ந்த குணத்தோடு வாழ்வன வும், பொருமை தன்னலம் போன்ற கொடுங் குணத்தோடு வாழ்வனவும் உண்டு. பிறவற்றைத் தழுவி அன்புடன் வாழ்ந்தார்கள் என்றதற்காக எமனிடத்தில் ஈகையை எதிர் பார்க்கலாமா? என்றவாறு. எமன் இரக்கமற்ற உள்ளமுடைய வனுதலால், 'வறிய கூற்று' என்முர். 'எப்போதாயினும் கூற்றுவன் வருவான், அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப், போற்றவும் போகான், பொருளொடும் போகான், சாற்ற வும் போகான், தமரொடும் போகான், நல்லாரென்ருன் நல் குர வறியான், தீயா ரென்ருன் செல்வரென்றுன்ருன், சற் றும் தரியான் தறுகணுளன்' (கபிலரகவல்) என்றதும் காண்க.

முதியவன் இறப்பது இயல்புதானே!

992 பெறுவதன் முன்உயிர்
பிரிதல் காண்டியால்;
மறுவறு கற்பினில்
வையம் யாவையும்
அறுபதி னுயிரம்
ஆண்டும் ஆண்டவன்,
இறுவது கண்டுஅவற்கு
இரங்கல் வேண்டுமோ? சா

992. மறு - குற்றம். கற்பு - கல்வி. ஆண்டவன் - ஆட்சி புரிந்தவன். இறுவது - இறப்பது. அவற்கு - அவனுக்காக.

பிள்ளையைப் பெற்றெடுப்பதற்கு முன்பாகவே அதன் உயிர்போய் விடுவதையும் காண்கின்ருயல்லவா? குற்றமற்ற கல்விமாட்சியால் உலகம் முழுவதையும் அறுபதினுயிரம் ஆண்டு முழுமையும் ஆட்சிபுரிந்த அவன் இறத்தலைக் கண்டு அவனுக்காக வருந்தல் வேண்டுமா?

(வி - ம்) மக்கள் வாழ்வு நம்பிக்கையற்றது. பிறக்கு முன்னே சாகும்; பிறந்தவுடனே சாகும்; சில நாளில் சாகும்; ஆனல் தயாதனே சில நாளா! சில ஆண்டா! அறுபதாயிரம் ஆண்டு, அதிலும் சக்கரவர்த்தியாக ஆண்டு இறந்திருக்கிருன். இதற்கு வருந்தலாமா? என்ருர். 'பீட் பிதுக்கிப், பிள்ளையைத் தாய் அலறக் கோடலால்' (நாலடி 20) என்றவாறு இறந்துபோகாமல் நீண்ட நாள் இருந்ததே பெரிதென்க. இனி எத்தனையாண்டு இருந்தாலும் பயனற்று உண்டுடுத்துத் திரிவார் போலன்றி, 'கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார், துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்' (நாலடி 35) என்றபடி பயன்பட்டவன் என்பார், 'மறுவறு கற்பினில் ஆண்டவன்' என்ருர். இவன் இறந்த தற்கு வருந்தவேண்டியதில்லை என்றபடி.

இதற்காகக் கவலைப்படக் கூடாது

993 ஐய! நீ யாதொன்றும்
அவலிப் பாயலை:
உய்திறம் அவற்குஇனி
இதனின் ஊங்குண்டோ?

---

993. அவலித்தல் - துன்பப்படுதல். உய்திறம் - உய்யும் வழி. ஊங்கு - மேம்பட்டது. வரன்முறை - வழக்கப்படி. திருத்தி - செவ்வையாகச் செய்து. சேந்த - சிவந்த. ஒழுக்குதி - நீரை அள்ளி விடுவாய். கடன் - தகப்பனுக்குச் செய்யுங் கடன்.

செய்வன வரன்முறை
திருத்திச், சேந்தநின்
கைகளால் ஒழுக்குதி
கடனெ லாம்என்ருன். சச

ஐயனே! நீ எது ஒன்றையும் (நினைத்து) துன்பப்பட வேண்டாம். இதைக்காட்டிலும் அவனுக்கு ஈடேறும் வகை (வேறு) உண்டாகுமா? முறைப்படி செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து சிவந்த உன்னுடைய கைகளால் நீர்க் கடன் செய்வாயாக என்ருர்.

(வி - ம்) இராமனை மகனைகப் பெற்று, அவனை நினைத்த நெஞ்சினனுகவே உயிரைவிட்டான் தயரதன். இது வேறு யாருக்கும் கிடைக்காது என்றதை 'உய்திறம் இதனின் உண்டோ' என்று கூறினர்.

நீர்க்கடன் செய்தான்

994 புக்கனன் புனலினின்
முழுகிப் போந்தனன்;
தக்கநன் மறையவன்
சடங்கு காட்டத்தான்
முக்கையின் நீர்விதி
முறையின் ஈந்தனன்;
ஒக்கநின்று உயிர்தொறும்
உணர்வு நல்குவான். சரு

எல்லா உயிர்ப்பொருளிலும் ஒரு தன்மையாக நின்று உணர்வைத்தருகின்ற கடவுளான இராமன், நீரினுள்ளே அமிழ்ந்து முழுகிவிட்டு வந்தான். தகுதியையுடைய நல்ல

994. புக்கனன் - புகுந்தனன். புனல் - நீர். முக்கையின் - மும்முறை கைகளினல்.

மறை அறிந்த வசிட்டன் சடங்குசெய்கிற முறையைக்காட்ட, தான் (இராமன்) கைகளினால் மூன்றுமுறை விதித்த முறைப் படி (நீரை அள்ளித் தந்தையை எண்ணி) ஈந்தான்.

சீதையின் தவச்சாலை

995　ஆனவன் பிறஉள
　　யாவும் ஆற்றிப்பின்,
மானமந் திரத்தவர்
　　மன்னர், மாதவர்,
ஏனையர், பிறர்களும்
　　சுற்ற ஏகினன்,
சானகி இரும்தவச்
　　சாலை எய்தினான்.　௬௬

இராமன், மேலுமுள்ள சடங்குகள் யாவற்றையும் செய்து பின்பு, பெருமையையுடைய மந்திரிகளும், அரசர் களும், முனிவர்களும், மற்றைய பிறரும் சூழ்ந்துவரச் சென்று சீதை இருந்து அரியதவம் புரிகிற சாலையை அடைந்தான்.

(வி - ம்) இப்போது சுமந்திரனொழிந்த மந்திரிகளும் மன்னர்களும் சேனை முதலிய ஆடவர் யாவரும் வந்து சேர்ந்து விட்டனர்.

---

995. ஆனவன் - இராமன். மான - பெருமை பொருந்திய. மந்திரத்தவர் - மந்திரிகள். சுற்ற - சூழ்ந்துவர. இரும் - பெரிய. தவச்சாலை - தவம் செய்யும் பன்னசாலை.

பரதன் விழுந்து புலம்பினன்

996 எய்திய வேலையில்
தமியள் எய்திய
தையலை நோக்கினன் ;
சாலை நோக்கினன் ;
கைகளில் கண்மலர்
புடைத்துக் கால்மிசை
ஐயன்அப் பரதன்விழ்ந்து
அரற்றி னன்அரோ. சஎ

(சாலையை) அடைந்தபோது, தனியாக வந்த சீதையைக் கண்டான் ; தழைகளாலான குடிசையையும் பார்த்தான் ; மலர்போன்ற கண்களில் கைகளால் அடித்துக்கொண்டு, (சீதையின்) திருவடிகளில் சிறப்புடைய பரதன் விழுந்து புலம்பினன்.

(வி - ம்) அரண்மனைக்குப் பதில் ஓலைக்குடிசை. பொன்னுடை பட்டாடைக்குப் பதிலாக மரவுரி. ஆயிரந்தாதியரும் சேடியரும் தற்சூழ இருந்தவள் தன்னந்தனியாக இருக்கிருள். இடமோ படுகாடு. இக்கோலத்தைக் கண்டான். கண்ட கண்களில் அறைந்துகொண்டான். கீழே விழுந்தான். புலம்புகிறுன்.

இராமன் தாங்கி எடுத்தான்

997 அந்நெடும் துயர்உறும்
அரிய வீரனைத்
தன்நெடும் தடக்கையால்
இராமன் தாங்கினன்,

---

996. வேலை - பொழுது. தமியள் - ஒருத்தியாக. தையல் - சீதை. சாலை - குடிசை. கண்மலர் - மலர்போன்ற கண்கள்.

997. கூந்தலை-கூந்தலையுடைய சீதையை. நாயகன்-அரசன்.

நல்நெடும் கூந்தலை
நோக்கி, நாயகன்
என்நெடும் பிரிவினில்
இறந்திட்டான் என்றான். சஅ

அப்படிப்பட்ட பெருந்துயரத்தை யடைந்த அரிய வீரனாகிய பரதனைத், தன்னுடைய நீண்ட பெரிய கைகளால் இராமபிரான் அணைத்துத் தாங்கினவனாய், நல்ல நீண்ட கூந்தலையுடைய சீதையை நோக்கி, அரசன் என்னுடைய நீண்ட பிரிவைத் தாங்காமல் இறந்துவிட்டான் என்று கூறினான்.

(வி - ம்) சீதையினிடம் செய்தியைச் சொல்லத்தான் சென்றனர். போன இடத்தில் பரதன் திடீரென்று விழுந்து புலம்பவும், அவனை இராமன் தூக்கி எடுக்கவும் கண்ட சீதை திகைத்துப்போனாள் ; இராமன், செய்தியைச் சொன்னான்.

சீதையின் துயரம்

998 துன்எனும் நெஞ்சினள்
துளங்கி னாள்; துணைக்
கன்எனும் நெடுங்கடல்
கலுழி கான்றிட,
மன்எனும் செவிலிமேல்
வைத்த கையினள்,
பண்எனும் கிளவியால்
பன்னி ஏங்கினாள். சகூ

---

998. துண்ணெனல் - திடுக்கிடல். துளங்குதல் - நடுங்கித் தடுமாறுதல். கலுழி - கலங்கல் நீர். கான்றிட - கொட்ட. செவிலி- வளர்ப்புத் தாய் (மன்னர் மக்களுக்கு ஐந்து தாயர் உண்டு : அவர் ஈன்ற தாய், முலைத்தாய், ஊட்டுந்தாய், கைத்தாய், செவிலித்தாய் எனப்படுவர்). பண் - பாடல்களைப் பாடுதற்காக வகுக்கப்பட்ட இசை முறை. கிளவி - சொல்.

நடுக்கத்தை அடைந்த நெஞ்சையுடையவளாய் உடல் ஆடிப்போனுள். இரு கண்களென்னும் கடல், கலங்கிய நீரைச் சொரிய, பூமிதேவியாகிய வளர்ப்புத்தாயின் (மடியின்) மேல்வைத்த கைகளையுடையவளாய், இசை என்று கருதும்படி யான சொற்களால் புலம்பி ஏக்கமுற்ருள்.

(வி - ம்) உள்ளம் நடுங்கி, உடல் ஆடி, பக்கவசமாகக் கீழே விழுந்து, கண்ணீரைப் பெருக்கிக்கொண்டுகிடந்து, புலம்பினளென்றவாறு. காட்டிலே அவளை வளர்க்கும் செவிலி மண்ணேயன்றி வேறு யாருளர் ? சீதைக்கு அழவா தெரியும் ? ஏதோ புலம்பினுள். அதுவும் கேட்போருக்கு ஒரு இசையாகவே இருந்தது.

துன்பக்கடலில் கால் வைத்தாள்

999 கன்னகு திரள்புயக்
கணவன் பின்செல,
நன்னகர் ஒத்தது
நடந்த கானமும் ;
மன்னவன் துஞ்சினன்
என்ற மாற்றத்தால்,
அன்னமும் துயர்க்கடல்
அடிவைத் தாள்அரோ. ௫௦

மலையைக் கண்டு கேலிசெய்கிற திரண்ட தோள்களை யுடைய கணவன்பின்னுலே சென்றதால், நடந்து கடந்த காடும் (சீதைக்கு) அழகிய அயோத்திநகரையேஒத்திருந்தது;

---

999 கல்+நகு=கன்னகு - கல்லைக் கேலி செய்கிற. புயம் - தோள். நல்+நகர்=நன்னகர் - அழகிய நகரம் (அயோத்தி). துஞ்சி னன்-இறந்தனன். மாற்றம் - சொல். அன்னம் - அன்னம் போன்ற சீதை.

மன்னவன் இறந்தான் என்ற சொல்லால் அன்னம்போன்ற சீதையும் துயரமான கடலில் இறங்கினாள்.

(வி - ம்) சீதைக்கு இதுவரை துன்பம் இன்னதென்றே தெரியாது. காட்டிலே கல்லிலும் முள்ளிலும் கால்நடையாக வந்தது பெரிய துன்பமானாலும், இராமனோடு இருப்பதால் துன்பம் தெரியவில்லை. உடனிருப்பவரில் ஏற்பட்ட முதற் சாவு இதுதான். தயரதமன்னனுக்கு இணை யாருளர்? திருமணக்காலத்தில் அவன் மிதிலைக்குச் சென்றிருந்ததும், அவனுக்கு ஏற்பட்ட பெருமையும் ஆகிய எல்லாம் நினைவுக்கு வருகின்றன. பெருந்துன்பம் திடீரென்று பற்றியதென்பதை, 'கடலில் கால்வைத்தாள்' என்றார். குட்டை, குளம் போன்ற சிறிய நீர்நிலைகளிலல்ல என்றவாறு. கடைசி அடியுடன், 'கௌவைஅம் பெருங்கடல் முனியும் கால்வைத்தான்' (பாடல் 655). 'சூழ்ந்தனை கொடியாய் என்னாத் துடித்து அரும் துயர வெள்ளத்து, ஆழ்ந்தனள் புலம்பலுற்றாள் அழக்கண்டும் அறிந்திலாதாள்' (அதிகாயன்வதை) என்றவற்றோடு ஒப்புநோக்குக.

முனிபத்தினிமார் ஆற்றினர்

1000 ஆயவள் தன்னைநேர்ந்து
அங்கை ஏந்தினர்
தாயரின் முனிவர்தம்
தருமப் பன்னியர்;
தூயநீர் ஆட்டினர்;
துயரம் நீக்கினர்;
நாயகற் சேர்த்தினர்;
நவையுள் நீங்கினார். ௰க

1000. ஆயவள் - சீதை. நேர்ந்து - அருகிற் சென்று. அம் கை - அழகிய கை. தாயரின் - தாயரைப்போல. பன்னியர்- மனைவிமார். நவை - குற்றம்.

குற்றங்களின் நின்று நீங்கியவரான, முனிவர்களின் தருமபத்தினிமார், அருகிற்சென்று அவ்வாறான (கீழே விழுந்து புலம்பும்) சீதையை அழகிய கைகளில் பெற்ற தாயைப்போலத் தூக்கினர் ; தூய்மையான நீராட்டினர் ; துயரத்தை நீக்கினர் ; இராமனிருக்கும் இடத்தில் சேரும்படி செய்தார்கள்.

(வி - ம்) வேறு பெண்கள் யாருமில்லாதபடியால் அங்குள்ள முனிவர்களின் மனைவியர் சீதைக்கு ஆறுதல் கூறித் தூக்கியெடுத்துத் துன்பத்தை ஆற்றினர். இதுவரை கோசலை முதலிய பெண்கள் யாரும் வந்துசேரவில்லை.

தாயரும் சுமந்திரனும் வருதல்

1001 தேன்தரும் தெரியல்அச்
செம்மல் நால்வரை
ஈன்றவர் மூவரோடு,
இருமை நோக்குறும்
சான்றவர் குழாத்தொடும்,
தருமம் நோக்குறும்
தோன்றல்பால், சுமந்திரன்
தொழுது தோன்றினன். ௫௨

தேன் துளிக்கின்ற மாலை யணிந்த மக்கள் நால்வரையும் பெற்றவராகிய மூவரோடும், இம்மை மறுமைக்குரிய இன்ப துன்பங்களை ஆராய்ந்தறிந்த பெரியோர் கூட்டத்தோடும்,

---

1001. தேன் தரும் - தேனை வெளிப்படுத்துகிற. தெரியல் - மாலை. செம்மல் - பிள்ளை. இருமை - இம்மையும் மறுமையும். சான்றவர் - பெரியோர். குழாம் - கூட்டம். தோன்றல் - அரசன் (இராமன்).

தருமத்தையே சிந்திக்கும் தன்மையுள்ள இராமபிரானிடத்திற்குச் சுமந்திரன் தொழுதுகொண்டே வந்து சேர்ந்தான்.

(வி - ம்) கோசலை முதலிய தாயர் மூவரைப் பிரித்துக் கூறுது, நால்வரைப் பெற்ற மூவர் என்றது ஒவ்வொரு பிள்ளைக்கும் தாயர் மூவரும் என்றவாறு. ஒவ்வொரு தாய்க்கும் நான்கு பிள்ளைகள் எனினும் அமையும். மூவரோடு என்பதில் உம்மை தொக்கது. கைகேயியின் மனத்தில் ஏற்பட்ட திரிபுணர்ச்சி இங்கே நீங்கிய தென்க. பரதனுக்கு அரசு என்பது கைவிடப்பட்டுவிட்டதால் கைகேயியின் எண்ணமும் மாறிவிட்ட தென்பார். 'நால்வரை ஈன்ற மூவர்' என்ருர்.

என் தந்தை எங்கே?

1002 *'எந்தை யாண்டையான்?
இயம்பு விர்!'என
வந்த தாயர்தம்
வயங்கு சேவடிச்
சிந்தி நின்றனன்
சேந்த கண்ண நீர்,
முந்தை நான்முகத்
தவற்கும் முந்தையான். ௫௩

பழைமையான பிரமனுக்கும் பழைமையான இராமன், என் தகப்பன் எங்கே யிருக்கிருன் சொல்லுங்கள் என்று, வந்த தாய்மாரின் விளங்குகின்ற சிவந்த பாதங்களில் செந்நிறம்பெற்ற கண்ணிலிருந்து நீரைப் பெருக்கிக்கொண்டு நின்ருன்.

1002. எந்தை - என் தந்தை. யாண்டை - எவ்விடம். வயங்கு - விளங்குகிற. முந்தை - முற்பட்ட. நான் முகத்தவன் - பிரமன்.

(வி - ம்) தந்தை இறந்தான்; வரமாட்டான்; இருக்கு மிடத்தை யாவர் அறிவார்? இவையெல்லாம் யாவருக்கும் தெரிந்தவைதாம். ஆனல் தாய்மாரைக் கண்டவுடன் துக்கம் தாங்க முடியாமல் பெருகிவிட்டது. தன் அளவில் ஏற்பட்டது இதுவரை ஏற்பட்ட துக்கம். இப்போது தாய்மாரின் துன்ப நிலை எதிரே நிற்கிறது. இரண்டும் சேர, துக்கவெறி தலைக்குமேல் போய்விட்டது. அதிலிருந்து தோன்றியதே 'எந்தை யாண்டையான் இயம்புவீர்!' என்றது என்க. முந்தையான்—கடவுள் என்றவாறு.

தீயில் தீயும் மெழுகு

1003 தாய ரும்தலைப்
பெய்து தாம்தழீ இ
ஓய்வில் அன்பினல்
உரறல் ஓங்கினர்;
ஆய சேனையும்
அணங்க னர்களும்
தீயில் வீழ்ந்துதீ
மெழுகில் தேம்பினர். ௫௪

தாய்மாரும், இராமன்மேல் சேர்ந்து (விழுந்து) கட்டிக்கொண்டு குறையாத அன்பினலே கதறி யழுதார்கள். வந்து சேர்ந்த சேனையும், தேவமாதரைப்போன்ற பெண்களும் தீயில் விழுந்து தீகின்ற மெழுகைப்போல வாடித் தேம்பித் தேம்பி அழுதனர்.

1003. தலைப்பெய்து - சேர்ந்து. தழீஇ - தழுவி. உரறல் - கதறல். அணங்கு - தேவமாது. அனர் - ஒத்தவர். தீ - தீகின்ற. மெழுகில் - மெழுகைப்போல.

சீதையை மாமியர் அடைதல்

1004 பின்அவ் வீரரைப்
பெற்ற பெற்றிஅப்
பொன்ன னார்களும்,
சனகன் பூவையைத்
துன்னி மார்புறத்
தொடர்ந்து புல்லினர்,
இன்னல் வேலைபுக்கு
இழிந்து அழுந்துவார். ௫௫

பின்பு அவ்வீரர் நால்வரையும் பெற்ற பெருமையை யுடைய திருமகளைப் போன்ற அவர்களும், சனகனது மகளான, நாகணவாய்ப் பறவையின் சொல்லைப் போன்ற இனிய சொல்லையுடைய சீதையை அடைந்து மார்பிற் பொருந்தும்படி வரிசையாகக் கட்டித்தழுவியவராகித் துன்பக் கடலில் புகுந்து விழுந்து அமிழ்ந்தார்கள்.

சூரியன் மறைந்தான்

1005 படஞ்செய் நாகணைப் .
பள்ளி நீங்கினன்,
இடஞ்செய் தொல்குலத்து
இறைவன் ஆதலால்,

1004. பெற்றி - பெருமை. பொன் - இலக்குமி. பூவை - நாகணவாய். சனகன்பூவை - சீதை. துன்னி - பொருந்தி. தொடர்ந்து - வரிசையாக. இன்னல் - துன்பம். வேலை - கடல். இழிந்து - விழுந்து.

1005. படம் - பாம்பின் படம். நாக அணை - சேட சயனம். பள்ளி - படுக்கை. இறைவன் - தலைவன். தடம் - பெருமை. தேரினன் - சூரியன்.

தடஞ்செய் தேரினன்
தானும் நீரினல்
கடன்செய் வான்எனக்
கடலில் மூழ்கினன். ருசு

படத்தை விரிக்கின்ற பாம்பணைப் படுக்கையைவிட்டு நீங்கினவனுகிய இராமன் அவதரித்தற்கு இடம் செய்து கொண்ட பழைய குலத்துக்குத் (தான்) தலைவனுதலால், பெருமைபொருந்திய தேரையுடைய சூரியன், தானும் நீரினல் கடன் கழிப்பவனைப்போல (மேலைக்) கடலில் முழுகினன்.

(வி-ம்) தயரதனுடைய குலம் சூரிய குலம். அக்குலத்துக்கு முதல்வன் சூரியன். ஆதலால் இறந்த செய்தி கேட்ட உறவினர் உடனே நீரில் முழுகுவதைப் போலக் கடலில் விழுந்தான் என்ருர். நாள்தோறும் கடலில் விழுந்து கொண்டுதானிருக்கிருன். பொழுது இருட்டிவிட்ட தென்பது பொருள்.

யாவரும் இராமனைச் சூழ்ந்தனர்

1006 அன்று தீர்ந்தபின்
அரச வேலையும்,
துன்று செஞ்சடைத்
தவரும், சுற்றமும்,
தன்து ணைத்திருத்
தம்பி மார்களும்,
சென்று சூழ,ஆண்டு
இருந்த செம்மல்தான். ருஎ

1006. வேலை - கடல். துன்று - நெருக்கமான. தவர் - முனிவர். செம்மல் - இராமன்.

அன்றைய (இராப்) பொழுது கழிந்தபிறகு, கடல் போன்ற அரசர்களும், நெருக்கமான சிவந்த சடையையுடைய முனிவர்களும், சுற்றத்தார்களும், தன்னுடைய துணைவர்களான சிறந்த தம்பிமார்களும் சென்று சூழ்ந்திருக்க அவ்விடத்தில் அமர்ந்திருந்த இராமபிரான் ;

பரதா! ஏன் இவ்வேடம் பூண்டாய்?

1007 'வரதன் துஞ்சினன் ;
வையம் ஆணையால்
சரதம் நின்னதே :
மகுடம் தாங்கலாய்
விரத வேடம்நீ
என்கொல் வேண்டினய்
பரத கூறு!'எனப்
பரிந்து கூறினன். ௫அ

'பரதனே! வேண்டியவற்றைக் கொடுக்கும் சக்கரவர்த்தி இறந்துபோனன்; (இந்த) உலகம் அவனுடைய கட்டளைப்படி உண்மையாக உன்னுடையதுதான். மகுடம் சூடாமல் தவவேடத்தை நீ ஏன் விரும்பினய்? சொல்வாயாக' என்று அன்போடு (இராமன்) கூறினன்.

(வி - ம்) விரதத்துக்கு வேண்டிய வேடத்தை விரத வேடம் என்ருர். தாம் மேற்கொள்ளும் செயலுக்கு ஏற்பப் புறவேடமும் இன்றியமையாததென்க. வெளி வேடத்துக்கேற்ப உள்ளமும் செயலும் இயைந்திருத்தல் வேண்டும்; இராமன் பேரரசைத் துறந்து தவம் மேற்கொண்டான்; அதற்

1007. வரதன் - வரத்தைத் தருபவன். துஞ்சுதல் - இறத்தல். ஆணை - கட்டளை. சரதம்-சத்தியம். தாங்கலாய்-தாங்காமல். விரதவேடம் - தவவேடம்.

குரிய தவவேடத்தையும் கொண்டான். அவ்வாறே இலக்குவனும் சீதையும் கொண்டனர். பரதனும் அரசைத் தீவினை என்று நீத்துவிட்டான்; ஆதலின், தவவேடம் பூண்டான். தவவேடம் உண்மைத் தவம் புரிவார்க்கே ஆம் என்பதும், தவம் புரிவார் தவவேடம் தாங்குதல் இன்றியமையாத தென்பதும் ஈண்டு உணரப்படும். 'தவமும் தவமுடையார்க்காகும் அவம் அதனை, அஃதிலார் மேற்கொள்வது' (திருக்குறள் 262) என்றது நோக்கத்தக்கது.

அறநெறியை நீ தவறலாமா?

1008 என்ற லும்பதைத்து
எழுந்து கைதொழா
நின்று, தோன்றலை
நெடிது நோக்கி, 'நீ!
அன்றி யாவரே
அறத்து ளோர்அதர்
பின்று வாய்கொலாம்'
என்னப் பேசுவான். ௫௬

என்று கூறியதைக்கேட்டு, (பரதன்) மனம் பதைத்து எழுந்து, கைகூப்பித் தொழுது, இராமனை நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, 'உன்னைத் தவிர அறவழியில் நிற்போர் வேறு யாவர் இருக்கிறார்? (நீயும்) அவ்வற வழியில் நின்றும் பின்னடைவாயோ' என்று கூறிப் பின்னும் பேசுகிறான்.

(வி - ம்) இராமன் சொல்லைக் கேட்டதும் பரதன் கிடுகிடுத்துப் போனான். வழக்கம்போல் எழுந்தான்; தொழு

1008. தொழாநின்று - தொழுது. அதர் - வழி. பின்றுதல் - பின்வாங்குதல்.

தான் ; பார்த்தான் ; என்ன சொல்வதென்று தெரியவில்லை. அதை 'நெடிது நோக்கி' என்றார். அறநெறியில் நடக்கக் கூடியவன் நீ ஒருவன்தான் இருக்கிறாய்! நீயும் மற்றவரோடு சேருகிறாயா? என்றான் என்க. இராமன் காட்டுக்குச் செல்லுதலும் பரதன் அரசாளுதலும் கொடிய செயலென்பது பரதனின் முடிந்த முடிபாகும். ஆனால் அவனே அரசாள வேண்டுமென்று முனிவரும் மற்றுமுள்ள யாவரும் கேட்ட போது, 'முதல் தோன்றினன் இருக்க யான் மகுடம் சூடுதல், சான்றவர் உரைசெயத் தருமமாதலால் ஈன்றவள் செய்கையின் இழுக்குண்டாகுமோ?' என்று கூறினான். இங்கு அவ்வாறே இராமனும் கூறியதைத் தாங்க முடியவில்லை.

பாவியின் மகன் தவம்செய்தலும் ஆகாதா?

1009 மனக்கொன் றுதன
வரத்தின் நின்னையும்
நினக்கொன் றுநிலை
நிறுவி, நேமியான்
தனைக்கொன் றுள்தரு,
தனயன் ஆதலால்
எனக்கொன் று! தவம்
அடுப்பது! எண்ணினால்! ௬௦

நல்ல மனத்தினாலே நினைக்கவும் பொருந்தாதனவாகிய வரங்களால், உன்னையும் உனக்குப் பொருந்தாத நிலையில் நிறுத்தி, சக்கரவர்த்தியைச் சாகும்படி செய்த கைகேயி பெற்ற மகன் ஆதலால், எனக்கு எண்ணிப் பார்க்கும்போது தவம் பொருந்தத்தக்க தொன்று ஆகுமா?

1009. மனக்கு - மனதுக்கு. வரத்தின்-வரங்களால். ஒன்றா-பொருந்தாத. நிறுவி - ஏற்படுத்தி. நேமியான் - சக்கரவர்த்தி. தனயன் - மகன். ஒன்று - ஒன்றுகுமா? அடுப்பது-பொருந்துவது.

(வி - ம்) நான் ஒரு கொடும்பாவியின் மகன் ஆதலால் எனக்குத் தவம் வேறேயா? சரிதான் நீ சொல்வது! என்று வெறுத்துக் கூறினன். பரதனின் தவ வேடத்தைக் கண்டு வருந்தி, நீயும் ஏன் தவவேடங் கொண்டாய் என்று அன்பு நிறைந்த வருத்தத்தில்தான் இராமன் சொல் எழுந்தது. ஆனல் பரதனே அதையும் பிழையாக உணர்கிருன். தவத்திற்கும் தான் தகுதியில்லையோ என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றுகிறது. பெருமையிலோ சிறுமையிலோ மனம் பறி போனவரை நோக்கி, யார் எதைச் சொன்னுலும் அவர் தம் மன நிலையை யொட்டியே பொருள் காண்பர் என்ற மன இயல்பு இங்கே விளக்கப்படுகிறது. பரதனுக்கு, இப்பாவி வயிற்றில் பிறந்தது பிழை என்ற எண்ணம் தலைக்கேறிப் போயிருந்ததால்தான் இவ்வாறு பொருள் கொண்டான்.

சாகத் தெரியவில்லை! தவமும் ஆகாதா?

1010 நோவ தாகஇவ்
உலகை நோய்செய்த
பாவ காரியில்
பிறந்த பாவியேன்,
சாவது ஓர்கிலேன்;
தவம்செய் வேன்அலேன்;
யாவன் ஆகிஇப்
பழிநின்(று) ஏறுவேன்! சுக

வருந்தும்படி இந்த உலகம் முழுதையும் துன்பப்படுத்திய பாவியின் வயிற்றில் பிறந்த பாவியாகிய எனக்குச் சாகும் வழியும் தெரியவில்லை; தவம் செய்து பாவத்தைப் போக்கலா

1010. பாவகாரி - பாவத்தையே செய்பவள். ஓர்கிலேன் - தெரிந்தேனில்லை. பழிநின்று - பழியில் நின்று.

மென்றால் அதுவும் கூடாது. என்ன வழியைக் கடைப் பிடித்து இந்தத் தீராப் பழியினின்று கடைத்தேறுவேன்?

(வி - ம்) பிறவிப் பாவியாகிவிட்டேன் என்கிறான். இப்பழிச் சொல்லைக் கேட்காமல் செத்துப் போகலாமென்றால் உயிரைப் போக்கும் வழி தெரியவில்லை என்றான். தானே உயிர் போகவேண்டுமென்றபடி. தற்கொலை செய்துகொள் வது பிழையாதலால் தானாக உயிர் பிரியும் வழி தெரியவில்லை என்றானென்க. 'வஞ்சவினைக் கொள்கலனும் உடலைத் தீவாய் மடுக்கிலேன்; வரையுருண்டு மாய்ப்பேன் அல்லேன்; நஞ் சொழுகு வாளாலும் குறைப்பேன் அல்லேன், நாதனே அது வும் உன்றன் உடைமை என்றே அஞ்சினேன்' (திருவிளையா- வாதவூ–55) என்றது காண்க. துன்பத்தைப் பொறுக்க முடியாதபோது உயிர் போகாதா என்ற ஏக்கம் உண்டாவது இயல்பு. அடுத்தது வாழ்வைத் துறந்து காட்டுக்குச் செல் வது. இரண்டும் இயலவில்லை என்றதால் பழியை எப்படி நீக்கிக்கொள்வது என்ற ஏக்கம் பெரிதாகிவிட்டது. இராமன் கூறுவது அறமென்று கருதினவனாதலால், தவம் கூடா தென்று இராமன் கூறியதை, 'பாவியாகிய தான் தவம் செய் யக்கூடாது போலும்' என்று கருதிவிட்டான். கைகேயி யின்பாலிருந்த வெறுப்பு இராமன்மேலுள்ள நம்பிக்கை இரண்டும் சேர்ந்து வரும் சொற்கள் இவை என்க.

முறை தவறிய அரசைவிடக் கொடியது உண்டா?

1011 நிறையில் நீங்கிய
மகளிர் நீர்மையும்,
பொறையின் நீங்கிய
தவமும், பொங்குஅருள்

1011. நிறை - கற்பு. நீர்மை - குணம். பொறை - இடை யூற்றைப்பொறுத்து மனம் ஒரு நிலைநிற்றல். அருள்துறை-அருள்வழி.

துறையின் நீங்கிய
அறமும், தொல்லையோர்
முறையின் நீங்கிய
அரசின் முந்துமோ ? சுஉ

கற்பு நெறியிலிருந்து விலகிய மாதரின் குணமும், மனத்தை ஒருவழி நிறுத்துதலிலிருந்து விலகிய தவமும், நிறைந்த அருள் வழியைவிட்டு விலகிய அறவினையும் முன்னை யோர் முறையிலிருந்து விலகிய அரசாட்சியை வென்று விடுமோ ?

(வி - ம்) கற்பு நீங்கிய மகளிர் குணம், மனங்கலங்கிய வரின் தவம், இரக்கம் கலவாத அறம் ஆகிய மூன்றும் பய னற்றனவாம். இம் மூன்றும் வரல் முறையை நீங்கிய அர சுக்குப் பிற்பட்டதுதான் என்றான். கடமையாற்றும்போது அன்பில்லையேல் கடமை கொடுமையாக முடிவதுண்டு. எம் னுடைய செயல் அன்பு கலவாத கடமையாம்.

அறத்தைக் கத்தியால் அறுத்துத் தின்னவா !

1012 பிறந்து நீயுடைப்
பிரிவில் தொல்பதம்
துறந்து, மாதவம்
தொடங்கு வாய்என்றால்,
மறந்தும் நீதியில்
திறம்பி வாளிற்கொன்று
அறந்தின் றுல்என
அரசது ஆள்வெனோ? சுங

1012. நீ உடை - நீ பெற்று உடைய. தொல் - நீண்டநாளாக வருகிற. பதம் - பதவி. திறம்பி - விலகி.

மூத்தவனாகப் பிறந்ததனாலே, நீ பெற்றுடைய, பிரிக்க முடியாத, தொன்றுதொட்ட (ஆளும்) பதவியைத் துறந்து பெரிய தவம்செய்ய முற்படுகிறாய் என்றால், (யான்) மறந்தும் நீதிமுறையிலிருந்து வழுவி அறத்தை வாளினால் கொன்று தின்பதைப்போல அரசை ஆளுவேனா?

(வி - ம்) உரியவன் தவம் பூண, நான் அரசை ஆளுவதென்பது எப்படியிருக்கும் தெரியுமா? அறம் என்ற பொருளைக் கத்தியினாலே வெட்டி வெட்டித் தின்பதையே ஒக்கும். அப்படிப்பட்ட புன்செயலை நான் செய்வேனா என்றான்.

நான் என்ன பகைவனா?

1013 தொகையில் அன்பினால்
இறைவன் துஞ்ச, நீ
புகையும் வெம்சுரம்
புகுதப், புந்தியால்
வகையில் வஞ்சனாய்
அரசு வவ்வ,யான்
பகைவ னேகொலாம்?
இறவு பார்க்கின்றேன்! ௨௪

அரசன் (உன்னிடம் கொண்ட) அளவு கடந்த அன்பினால் இறந்துபோக, நீ புகைந்து எரிகிற கொடிய காட்டில் செல்ல, மனத்தினாலே முறையற்ற வஞ்சகனாய் அரசைக் கவர்ந்துகொள்ள, சோர்வடைகிற சமயம் பார்த்து நிற்கிறவனாகிய பகைவனா நான்?

(வி - ம்) தரையில் காய்கிற சூரிய வெப்பம் கானலாக மேலெழுவதைப் புகை என்றார். 'விழுந்ததுளி அந்தரத்தே

1013. தொகை இல் - அளவு அற்ற. இறைவன் - சக்கரவர்த்தி. துஞ்ச - இறக்க. சுரம் - காடு. புந்தி - மனம். வகை- முறை. வவ்வுதல் - கவருதல். இறவு - தளர்ச்சி (இறு பகுதி).

வேம் என்றும் விழின், எழுந்துசுடர் சுடுமென்று அஞ்சிச் - செழுங்கொண்டல், பெய்யாத கானகத்தே பெய்வளேயும் சென்றனளே, பொய்யா மொழிப் பகைஞர் போல்' (தனிப்பாடல்).

இருவர் தீமையும் நீக்குவாய் !

1014 உந்தை தீமையும்,
உலகு ருதநோய்
தந்த தீவினைத்
தாய்செய் தீமையும்,
எந்தை! திரமீண்டு
அரசு செய்கஎனச்
சிந்தை யாவதும்
தெரியக் கூறினன். சுஙு

எனது தந்தையே! உன்னுடைய தகப்பன் செய்த தீமையும், உலகம் இதுவரை கண்டறியாத துன்பத்தைத் தந்த தியவினையையுடைய தாய் செய்த தீமையும் ஒழியும்படி (நகருக்குத்) திரும்பி அரசு செய்க என்று தன் உள்ளத்திலுள்ளவற்றை விளங்கக் கூறினன்.

(வி - ம்) தயரதன் பரதனைத் தன் மகனல்ல னென்று கூறினனுதலால், 'உந்தை' என்ருன். தயரத மன்னனுக்குப் பதில் நீதான் என்பது தோன்ற இராமனை 'எந்தை' என்றமை நோக்கத்தக்கது. தந்தை செய்த தீமை பரதனை அரசாள ஒப்பியது. தாய் செய்த தீமை இராமனைக் காட்டுக்கனுப்பியது. நீ திரும்பி அரசாண்டால் இருதீமையுந் தீருமென்ருன். தந்தை, தாய் தீமை செய்வராயின் அதனை நீக்குதல் மக்கள் கடமை என்ருன் என்க.

1014. உந்தை - உன் தந்தை. உருத - அடையாத. எந்தை- என் தந்தையே. மீண்டு - திரும்பி.

மனம் ஒடிந்து போனன்

1015 சொற்ற வாசகத்
துணிவுஉ ணர்ந்தபின்,
இற்ற தோஇவன்
மனமென்று எண்ணுவான்,
'வெற்றி வீர!யான்
விளம்பக் கேள்'எனு
முற்ற நோக்கினுன்
மொழிதல் மேயினுன். சுசு

(பரதன்) சொன்ன வார்த்தையின் உறுதியை உணர்ந்த பின்பு (இராமன்) இவனுடைய மனம் ஒடிந்துபோய்விட்டது போலும் என்று நினைத்தவனுய், 'வெற்றியையுடைய வீரனே! யான் சொல்லுவதைக் கேள்' என்று (கூறி) அங்கிருந்த யாவரையும் நோக்கினவனுய்ச் சொல்லத் தொடங்கினுன்.

(வி - ம்) பரதன் மனம் ஒடிந்துவிட்டான். அதிகமாகப் பேசுவதில் பயனேற்படாதென்று கருதிய இராமபிரான், நீ சொன்னதெல்லாம் இருக்கட்டும்; நானென்று சொல்லுகிறேன் கேள் என்று அவனுடைய நீதிப் பேச்சைச் சிறிது அடங்கச் செய்து அங்கு கூடியிருந்த யாவரையும் பொதுவாக நோக்கிக் கூறமுற்பட்டான். இனி இவனுகச் சரிப்பட்டு வரமாட்டான் என்று கருதினுதலால் பிறருக்கும் உண்மை கூறவேண்டியதாயிற்றென்க.

1015. சொற்ற - சொன்ன. துணிவு - உறுதி. இற்றது - ஒடிந்தது. முற்றும் - முழுமையும்.

தந்தை நரகடையும்படி அரசாளமாட்டேன்

1016 இம்மை பொய்உரைத்து
இவறி, எந்தையார்
அம்மை வெம்மைசேர்
நரகம் ஆள,யான்
கொம்மை வெம்முலைக்
குவையின் வைகிவாழ்
செம்மை சேர்நிலத்து
அரசு செய்கெனோ? சுஎ

இப் பிறவியிலே பொய்யுரைத்து, லோபித்தனத்தைச் செய்து, எமது தந்தை மேலுலகத்தில் கொடுமையான நரகத்தில் கிடந்து வருந்த, நான் இளமை பொருந்திய தனபாரங்களில் திளைத்து வாழுகின்ற செம்மைப்படுத்தப்பட்ட நிலத்திலிருந்து அரசு செய்வேனோ?

(வி - ம்) தந்தை தவசியாகக் காட்டுக்குப்போ என்று கட்டளையிட்டான். அது நடைபெற வேண்டும். நடவாமற் போனால் (தந்தை) பொய் சொன்னவனாவான். ஆதலின் அவன் அதற்குரிய நரகத்தை அடைவான். அவன் நரகத்தில் கிடக்க, நான் இன்பத்தில் திளைத்து அரசுபுரிவதென்பது நடவாத காரியம் என்றான். 'தாங்கரும் தவம்' மேற்கொள்ள வேண்டுமென்பது கட்டளை. அதன்படி தவம் மேற்கொண்டு வந்திருக்கிறேன். ஆதலின் மனைவியோடு வாழும் வாழ்க்கையைக் கொண்ட நாட்டிற்கு நான் வரப் போவதில்லை என்றான். இதனால் தவம் பூண்டார்க்குப் பெண்ணின்பம் புறம்பென்பது பெறப்படுதல் அறிக. லோபித்தனம்

1016. இம்மை-இவ்வுலகம்- இவறி-உலோபப்பட்டு. அம்மை-மேலுலகத்தில். ஆள - கிடக்க. கொம்மை - இளமை. வெம்-விருப்பத்தைத் தருகிற. குவை-முகடு. வைகி-பொருந்தி.

செய்தலாவது : மகன் காட்டுக்குச் செல்லவேண்டுமென்ற வரத்தை நல்காமை. இராமன் நகருக்குத் திரும்புவதானல் தயரதன் லோபித்தனம் செய்ததாக முடியுமென்ருன் என்க. ‘உள்ளம் உவந்தது செய்வென் ஒன்றும் உலோபேன், வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை என்ருன்’ (பாடல் 506) என்றது இங்கே நோக்கத்தக்கது. மனைவியுடன் கூடி இன்புற்று வாழும் வாழ்வு அரசவாழ்வெனவே, மனைவியோடு கூடுதலின்றி வாழும் வாழ்வே தவத்திற்குரிய தென்பது பெறப்படும். தவத்தில் ஈடுபட்டவர் காமவின்பந் துய்த்தல் கூடாதென்பதை, ‘தாம் விட்ட காமவின்பத்தை உரனின்மையிற் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாய தீயவொழுக்கம்’ என்று திருக்குறள் கூடாவொழுக்க அதிகார விளக்கத்திற் பரிமேலழகர் கூறுவதாலறிக. பரதன் மனம் ஒடிந்துபோய்விட்டான் என்று கருதிய இராமன், அவையினரை நோக்கிக் கூறினுதலால், ‘எந்தையார்’ என்ருன் என்க.

அரசு உன்னது ஆள்க!

1017 வரனில் உந்தைசொல்
　　மரபி னுடைத்
தரணி நின்னதுஎன்று
　　இயைந்த தன்மையால்,
உரனின் நீபிறந்து
　　உரிமை ஆதலால்,
அரசு நின்னதே
　　ஆள்க என்னவே. கூஅ

1017. வரன்நில்-வரத்தில் நிலைத்துநின்ற. சொல்மரபு. சொல் வழக்கு. உடை-அவனுடைய. தரணி-நிலம். உரனில்-வலிமையோடு.

கொடுத்த வரத்தில் நின்ற உன் தந்தை சொல்லிய முறைப்படி அவனுடைய ஆட்சி உன்னுடையது என்று ஏற்பட்டுவிட்ட தன்மையினாலும் (ஆளுதற்கு ஏற்ற) தகுதியோடு நீ பிறந்து உரிமை பெற்றவன் ஆதலாலும் அரசு உன்னுடையதுதான்; போய் ஆள்வாயாக என்றதும்;

(வி - ம்) அரசு தயரத மன்னனுடையது. அவன் அதை யார்க்கும் கொடுக்கலாம். நிபந்தனை யில்லாமல் இறந்து போயிருந்தால் மூத்தவனே அடையக்கூடும். இங்கே அதற்கிடமில்லை. அவன் கொடுத்த வரம் நிலையானது. அவனுடைய அரசை உரிமை நீதிப்படி உனக்குத் தந்துவிட்டான்; ஏற்று நடத்துகிற அரச இலக்கணமெல்லாம் உனக்குப் பொருந்தியிருக்கிறது. நீ தள்ளிவிடமுடியாது. நீ என்ன வழக்குப் பேசினாலும் 'அரசு நின்னதே! ஆள்க!' என்று கடுமையாகவே இராமபிரான் கூறிவிட்டான். 'ஊனில் நீ பிறந்து உரிமை ஆதலால்' என்றது, 'கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும், வில்வினை யுரிமையும் அழகும் வீரமும், எல்லையில் குணங்களும் பரதற்கு ஏயது' (பாடல் 480) என்க. கைகேயியை மணம்புரிகிறபொழுது அவளுடைய மகனுக்குப் பட்டம் கட்டுவேன் என்று தயரதன் கூறியதாகக் கூறி தயரதனைக் குறையுடையவனென்றும் கைகேயி நிறையுடையவளென்றும் உரைப்பாருளர். இது கம்பர் இயற்றிய இராம காதைக்குப் பொருந்துவதன்று. பரதனுக்குப் பட்டம் வேண்டுமென்ற செய்தியை உண்டாக்கியவள் கூனி. 'ஆடல் வென்றியான் அருளிய வரம் அவை இரண்டும் கோடி' (பாடல் 492) என்றும், 'ஒன்றினால் அரசுகொண்டு, இராமன் பெருவனத்திடை ஏழிருபருவங்கள் பெயர்ந்து திரிதரச் செய்தி ஒன்றினால்' (பாடல் 493) என்றும் தன்னறிவு கொண்டே கூறினாள். இந் நிகழ்ச்சிக்கு முன்பு அரசாட்சி

யைப் பரதனுக்குக் கொடுக்கும் பேச்சே எழுந்ததில்லை. இங்கே ' வரனில் உந்தை சொல்மரபினால் உடைத்தரணி நின்னது' எனப்பட்டது. இவ்வாற்றால் தரணி வரத்தினால் கிடைத்ததன்றி, திருமண ஒப்பந்த உறுதியில் வந்ததன்றென்பது தேற்றம்.

என்னது ஆனால் உனக்குத் தந்தேன்

1018 முன்னர் வந்துதித்து
உலகம் மூன்றினும்
நின்னை ஒப்பிலா
நீபி றந்தபார்
என்ன தாகில்,யான்
இன்று தந்தனென் ;
மன்ன போந்துநீ
மகுடம் சூடு !என. ௬௬

எனக்கு முன்னதாக வந்து பிறந்து மூன்று உலகங்களிலும் நின்னை ஒப்பவரில்லாத நீ பிறந்தபூமி (நீ சொல்கிறபடி) என்னுடைய தாகுமானால் இப்பொழுதே (அதை உனக்குத்) தந்தேன்; மன்னனே! வந்து நீ முடிசூடி ஆள்வாயாக என்று;

(வி - ம்) பரதனுக்கு எப்படியாவது இராமனை அரசனாக்கித், தான் விலகிக்கொள்ள வேண்டுமென்ற ஆத்திரம் ஏறிவிட்டபடியால், வரம் இரண்டு என்பதை மறந்துவிட்டான். தான் தப்பவேண்டுமென்ற எண்ணம் வலிமை பெற்றதால் அரசைப்பற்றியே பேசுகிறான். இராமன் காட்டிலிருந்து தவம் புரிய வேண்டுமென்ற பேச்சே அவன் நினைவுக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அரசு பிறப்புரிமை யுடையதென்று நான் கருதியிருக்கிறேன். அது ஒருவர்க்கொருவர்

1018. முன்னர் - எனக்கு முன்பு. பார் - பூமி.

கொடுத்து வாங்கக்கூடிய பொருள் என்று கூறுகிறாயா? நல்ல காரியம். நீ சொல்லுகிறபடி-அரசன் தந்ததால், என்னுடைய தாகுமானால் நான் இப்பொழுதே அதை உனக்குத் தந்து விட்டேன். 'புறப்படு! முடியைச் சூட்டுகிறேன்' என்றான்.

என் உத்திரவுப்படி நீ ஆள்க

1019 எந்தை ஏவஆண்டு
ஏழொடு ஏழ்என
வந்த காலம்நான்
வனத்துள் வைக, நீ
தந்த பாரகம்
தன்னை, மெய்ம்மையால்
அந்த நாள்எலாம்
ஆள்என் ஆணையால்! எ0

நம் தந்தை கட்டளையிட அந்த ஆண்டு பதினான்கென்று ஏற்பட்ட காலம்வரை நான் வனத்துள் தங்கியிருக்க, நீ (எனக்கு) தந்த பூவுலகத்தை அந்தப் பதினான்கு ஆண்டு கால மெல்லாம் என்னுடைய கட்டளைப்படி உண்மை தவறாமல் அரசாள்வாயாக.

(வி - ம்) பரதனோடு விவாதம் நடத்துவதில் பயனில்லை என்று கருதிய இராமன், தந்தை கொடுத்த வரம் ஒன்றல்ல, இரண்டு என்று நினைவூட்டுவான் போல, தந்தையின் கட்டளைப்படி பதினான்காண்டு நான் வனத்தில் தங்குகிறேன். இங்கே தங்கவேண்டியிருப்பதால் அங்கேயும் இருந்து ஆள முடியாது. ஆதலால் என்னுடைய அரசாக—எனக்குப் பதிலாக நீயே பதினான்கு ஆண்டும் ஆளவேண்டும் என்று கட்டளையிட்டான். நீண்ட விவகாரம் தீராமல்வளர்ந்துகொண்டே

1019. பாரகம் - பூமி. ஆணையால் - கட்டளைப்படி.

போகுமானல் திறமையுடையோர், இருப்பதைக்கொண்டு வழக்கை நல்லமாதிரியாக முடிப்பார். பரதனோடு வழக்குப் பேசி வெல்வது முடியாதென்று கருதிய இராமபிரான் 'சரி நீ சொல்கிறபடி என்னுடையதாகவே வைத்துக்கொள் ; என் உத்திரவுப்படி போய் நாட்டை ஆள்வாய்' என்று முடித்து விட்டான்.

பதினன்காண்டில் வராவிட்டால் சாவேன்

1020 ஆமெனில் ஏழ்இரண்டு
ஆண்டில், ஐய! நீ
நாமநீர் நெடுநகர்
நண்ணி, நானிலம்
கோமுறை புரிகிலே
என்னில் கூர்எரிச்
சாம்இது சரதம் ; நின்
ஆணை ; சாற்றினேன். எக

அப்படியானல் பதினன்கு ஆண்டுக் காலத்தில், ஐயனே! நீ (பகைவர்க்கு) அச்சத்தைத் தரத்தக்க அகழி சூழ்ந்த பெரிய அயோத்திநகரை அடைந்து, பூமியை அரசுமுறை செய்யாவிட்டால் (நான்) மிகுந்து எரிகிற நெருப்பில் விழுந்து சாவேன் ; இது சத்தியம் ; உன்மேலே ஆணை ; சொல்லி விட்டேன் ;

(வி - ம்) குறித்த நாளுக்குமேல் ஒருநாள்கூடத் தரிக்க மாட்டேன் என்று உறுதி கூறினன். இந்த முடிவு அவனுக்கு ஒரு தலைச்சுமை நீங்கினமாதிரியாய் விட்டது. சாவேன் என்று

1020. நாமம்-அச்சம். நீர்-நீர் நிறைந்த அகழி. கோமுறை - அரசாட்சி. கூர்-மிகுந்த. எரி-எரிகின்ற நெருப்பு. சாம்-சாவேன். சரதம்-சத்தியம்.

சொன்னாலே போதியதாயிருக்க, பல கூறியது உறுதியின் வலிமையைக் காட்டும்.

அவ்வாறே ஆகட்டும்

1021 என்பது சொல்லிய
பரதன் யாதும்ஓர்
துன்பிலன் ; அவனது
துணிவை நோக்கினான் ;
அன்பினன் உருகினன் ;
'அன்னது ஆக' என்றான்,
தன்புகழ் தன்னினும்
பெரிய தன்மையான். எஉ

என்ற சொற்களைச் சொல்லிய பரதன், எந்தவிதமான துன்பமும் இல்லாதவனாகக் காணப்பட்டான். தன்னுடைய புகழைக் காட்டிலும் பெரிய தன்மையையுடைய இராமன், பரதனது உறுதிப்பாட்டை நோக்கினான் ; அன்புகொண்டு உருகினான் ; அவ்வாறே ஆகட்டும் என்றான்.

(வி - ம்) இராமன் புகழைக்கண்டு உலகம் புகழ்கிறது. அந்தப் புகழுக்கு எல்லையில்லை. இராமனுடைய தன்மையை நோக்கினால், புகழைவிட எத்தனையோ மடங்கு தன்மை பெரிதாக இருக்கிறது என்றார். அவன் புகழையும் புகழுக்குக் காரணமான தகுதியையும் எடுத்துச் சொல்ல முடியாது என்றபடி. இவ்வளவு துன்பப்பட்ட பரதன் ஒரு சொல்லில் துன்பம் முழுமையும் மறந்துவிட்டானே ! என்ன உறுதிப் பாடு என்று இராமனுக்குப் பெருவியப்புண்டாய் விட்டது.

பாதுகை தருக

1022 விம்மினன் பரதனும்
வேறு செய்வதுஒன்று
இன்மையின் அரிதென
எண்ணி ஏங்குவான்,
செம்மையின் திருவடித்
தலம்தந்து ஈகென,
எம்மையும் தருவன
இரண்டும் நல்கினுன். எஉ

பரதன் வேறு செய்யும் வகை ஒன்றும் இல்லையாதலின் வருந்தி விம்மினுன் ; இராமனைப் பிரிவதும், பெரிய அரசாட்சியை நடத்துவதும் அருமையான செயலென்று கருதி ஏங்குவானுகி, (இராமனை நோக்கி) உனது திருவடியின் நிலையை (பாதுகையை) அன்புடன் தந்து அருள்க என்று கேட்க, எல்லாவுலகத்திலும் பெறத்தக்க யாவற்றையும் தரத்தக்கன வான (தன்) இரண்டு திருவடிகளின் பாதுகைகளையும் கொடுத்தருளினுன்.

(வி - ம்) பரதன் தன் பொறுப்பு ஒருவாறு எல்லைக்குள் வந்ததென்பதில் ஓரளவு ஆறுதலடைந்தான் எனினும் இராமபிரானைப் பிரியவேண்டுமே என்ற நினைப்பு வந்ததும் விம்மல் வந்துவிட்டது. அரசியலை நடத்த வேண்டுமே என்ற கவலையும் ஏற்பட்டது. என்றுலும் வேறு செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஏக்கத்தோடு உன்நினைவாக பாதுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டான். இராமனும் கொடுத்தான். அது சாதாரணமான பாதுகை அன்று ! எந்தப் பதவியையுந் தரவல்லது என்றுர். கடைசி அடி கவிக்கூற்று.

1022. இன்மையின்-இல்லாதபடியால். அடித்தலம்-பாதுகை. தந்து ஈக என - தந்தருள வேண்டும் என. எம்மை - எல்லா உலகப் பதவிகள்.

வசிட்டர் முதலியோர் செல்லல்

1023 ஈன்றவர் முதலிய
எண்இல் சுற்றமும்,
சான்றவர் குழுவொடு
தவத்து ளோர்களும்,
வான்தரு சேனையும்,
மற்றும் சுற்றுற,
மூன்றுநூல் கிடந்ததோள்
முனியும் போயினன். எச

பெற்ற தாயர் முதலிய எண்ணற்ற சுற்றத்தாரும், அறிஞர் கூட்டத்தோடு முனிவர்களும், பெருமைபெற்ற சேனையும், மற்றவரும் சூழ்ந்துவர முப்புரி நூலணிந்த தோளையுடைய வசிட்ட முனிவரும் சென்றார்.

பரதன் நந்திக்கிராமத்தில் இருத்தல்

1024 நந்தியம் பதியிடை
நாதன் பாதுகம்,
செந்தனிக் கோல்முறை
செலுத்த, சிந்தையால்
இந்தியங் களைஅவித்து
இருத்தல் மேயினன்;
அந்தியும் பகலும்நீர்
அருத கண்ணினன். எடு

1023. வான் தரு - பெருமைபொருந்திய. சுற்றுஉற-சூழ்ந்துவர. மூன்று நூல் - முப்புரி நூல். முனி-வசிட்டர்.

1024. நந்தியம்பதி-அயோத்தியின் அருகிலுள்ள ஊர். செம்-செம்மையான. தனி - ஒப்பற்ற. கோல் - ஆட்சி. இந்தியம் - ஐம்பொறி (அவை: மெய், வாய், கண், மூக்கு, செவி.)

இரவும் பகலும் கண்ணீரை நீங்காத கண்களையுடைய பரதன், நந்தியம்பதி என்ற ஊரில் இராமபிரானுடைய பாதுகை, செம்மையான ஒப்பற்ற அரசுமுறை செலுத்த, மனத்தினால் ஐம்பொறிகளையும் அடக்கி இருக்கலானான்.

(வி - ம்) சிம்மாசனத்தின்மீது பாதுகையை வைத்து, அவை அரசு செய்வதாகப் பாவித்துத் தான் இராமன் இருந்து அரசு செய்யவில்லையே என்ற வருத்தத்தோடு காத்துக்கொண்டிருந்தான் என்றவாறு. இந்திரியங்களான ஐம்பொறிகளை அவித்தலாவது, மனத்தை அவற்றின் வழியில் செல்லவிடாமல் கட்டுப்படுத்துதலாம்.

இராமன் காட்டினுள் சென்றான்

1025 குன்றினில் இருந்தனன்
என்னும் கொள்கையால்,
நின்றவர் நலிவரால்
நேயத் தால்என,
தன்துணைத் தம்பியும்,
தானும், தையலும்,
தென்திசை நெறியினைச்
சேறல் மேயினான். எசு

(சித்திரகூட) மலையில் இருக்கிறான் என்ற எண்ணத்தால் அயோத்தியில் உள்ளவர் அன்பினாலே (அடிக்கடி) வந்து துன்புறுத்துவர் என்று கருதித் தனக்குத் துணையான தம்பியும் தானும் சீதையும் தெற்குத் திசையை நோக்கிய வழியில் செல்ல முற்பட்டனர்.

(வி - ம்) இம்மலை, காட்டின் நடுவிலுள்ளதாக எண்ணியே இங்கு தங்கினர். முன்பு, பரத்துவமுனிவர் அவர்

1025. குன்று - மலை. கொள்கை-எண்ணம். நலிவர் - துன்புறுத்துவர். சேறல் - செல்தல்.

இருக்குமிடத்தில் தங்கும்படி கூறியபோது 'மாண்ட சிந்தைய! இவ்வழி வைகுவென் என்ருல், நீண்ட யாவரும் நெருங்குவர் என்றனன் இராமன்' (பாடல் 804). மனிதர்கள் நெருங்காத வனத்தினுள் செல்லவேண்டுமென்றே சித்திர கூடத்தை அடைந்தான். அவனது நினைப்பிற்குச் சித்திர கூடமே தகுந்ததென்று பரத்துவரும் கூறினர். இங்கேயும் பரதன் முதலியோர் வந்துவிட்டா ராதலின் இதுவும் ஆகா தென்று இன்னும் உள்ளிடத்திற்குச் செல்ல முற்பட்டான். அன்பு மிக்குடையவரும் அடிக்கடி வந்து வேலையைக் கெடுத்தல் இயல்பாதலின், 'நேயத்தால் நலிவர்' என்ருர். இன்றியமையாத வேலை இல்லாமலும் வந்து பொருந்தும் கூட்டத்தை இராமன் வெறுத்தான் என்பது இதனுல் பெறப்படும். சுக்கிரீவன் இராமனைத் தன் இருக்கையில் இருக்கும்படி வேண்ட, 'போந்தவண் இருப்பின் எம்மைப் போற்றவே பொழுது போமால்' (கிட்கிந்தை—அரசியல்) என்று விடை இறுத்ததுங் காண்க.

அயோத்திக் காண்டம் முற்றும்.

கதைச் சுருக்கம்

மந்திரப் படலம்

ஒருநாள் தயரதன், தன் அமைச்சர்கள் யாவரையும் அரசவைக்கு வரவழைத்து, இராமனுக்கு முடிசூட்ட வேண்டுமென்று தன் கருத்தைத் தெரிவிக்கிறான். அனை வரும் அதை ஒருமுகமாகப் பாராட்டுகின்றனர். பிறகு, சுமந்திரனை அனுப்பி இராமனை வரவழைத்து, முன்னோர் நெறிகளை விளக்கி அரச பாரத்தை ஏற்குமாறு கூறு கின்றான். இராமனும் விருப்பு வெறுப்பற்றுத் தந்தையின் கட்டளையைத் தலைமேல் ஏற்கின்றான்.

எல்லா நாட்டு மன்னர்களுக்கும் ஓலை போக்கி, அவர் களை வரவழைத்து, அவர்களிடத்தும் தன் கருத்தைத் தெரி விக்கிறான் தயரதன். அவர்களும் மகிழ்ச்சியுடன் உடன்படு கின்றனர். இராமனுக்கு முடிசூட்டப்போகும் செய்தியை, அரண்மனையிலுள்ளார் அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின் றனர். இவ்வாறு மகிழ்ச்சியுற்ற மகளிர்மூலம், தன் மகன் பட்டம் எய்தப் போவதை அறிகிறாள் கோசலை; தன் மகன் பாராளப் போகிறான் என்ற செய்தியால் ஒருபால் இன்ப மும், தன் கொழுநன் துறக்கப் போகிறான் என்ற செய்தி யால், ஒருபால் துயரமும் எய்துகிறாள்; சுமித்திரையுடன் திருமால் கோவிலை யடைந்து தன் மகனுக்கு எல்லா நலன் களையும் அருளவேண்டுமென்று வணங்கி வேண்டுகிறாள்.

மந்தரை சூழ்ச்சிப் படலம்

இராமன் முடி புனையும் நாள் வள்ளுவன் மூலம், நகர மாந்தர்க்கு அறிவிக்கப் பெறுகின்றது. எங்கும் ஒரே கொண்டாட்டம். நகர் பல்வேறுவிதமாக அணி செய்யப்

பெறுகிறது. இக் காட்சியைக் கைகேயியின் சீதனத் தாதியாகிய மந்தரை கண்ணுறுகின்ருள். இராமன் சிறு பிள்ளையாக இருந்தபொழுது, மண்ணுண்டையை வில்லில் வைத்துத் தன் கூன் முதுகில் அடித்ததை எண்ணுகிருள். முடி புனையும் நிகழ்ச்சியைக் காண மனம் பொருது, கைகேயியின் கோயிலை அடைகிருள். உறங்கிக் கொண்டிருக்கும் கைகேயியை எழுப்புகிருள். "பெருந்துயரம் விளையப் போகும் இந்நேரத்தில் உறங்குவது தகுதியோ?" என்று அவளிடம் கூறுகிருள்; பிறகு இராமன் முடி புனையப் போவதைத் தெரிவிக்கிருள்.

அந்த நற்செய்தியைக் கேட்ட கைகேயி, மந்தரைக்கு ஒரு பொன் மாலையைப் பரிசாக வழங்குகிருள். மந்தரை அதனைக் கழற்றி எறிந்து விட்டுப் பல்வேறு தீய உரைகளால் பால்போன்ற தூய்மையான கைகேயியின் உள்ளத்தைக் கலக்குகிருள். முதலில் அவள் தீய உரைக்குச் சிறிதும் சிதையாத உள்ளம், சிறிது சிறிதாக மாறுபடுகின்றது. 'என் மகன் நீள் முடி பெறுவதற்கு உபாயம் என்ன?' என்று வினவுகின்ருள் கைகேயி. உடனே, மந்தரை முன்னர்ச் சம்பராசுரப் போரில் உதவியதற்காகத் தயரதன் வாக்களித்துள்ள இரு வரங்களையும் நினைவுபடுத்தி, ஒன்றினுல் அரசாட்சியைக் கவரவும், மற்ருென்றினுல் இராமனைப் பதினுன்கு ஆண்டுகள் கானிடைப் போக்கவும் யோசனை கூறுகிருள். கைகேயி, அவ்வாறு கூறிய மந்தரையைப் புகழ்ந்து கொண்டாடி அவளை அனுப்பிவிட்டுத் தன் அணிகளையெல்லாம் களைந்தெறிந்து, தலைவிரி கோலத்துடன் பூமியின்மீது புரண்டவண்ணம் மூதேவிபோல் கிடக்கிருள்.

கைகேயி சூழ்வினைப் படலம்

அன்று இரவு தயரதன் கைகேயியின் மாளிகைக்குப் போகிருன்; அலங்கோல நிலையில் இருக்கும் அவளைக் காண்கிருன். கைகேயி, தனக்கு வாக்களித்திருந்த இரண்டு

வரங்களையும் தர உறுதி கூறுமாறு உரைக்கின்முள். தயரதன் இராமன்மீது ஆணையிட்டு, அங்ஙனம் தருவதாகக் கூறுகின்முன். உடனே, கைகேயி ஒரு வரத்தால் தன் சேய் அரசாள வேண்டுமென்றும், மற்ருென்றினல் சீதை கேள்வன் வனம் ஆளவேண்டுமென்றும், தன் கருத்தை அறிவிக்கிருள். 'யாரேனும் துர்ப்போதனை செய்தனரா' என்று தயரதன் வினவ, கைகேயி அப்படி யொன்றும் இல்லை யென்றும், வாக்களித்த வரங்களைத் தராவிடில் தான் மாளுவதாகவும் கூறுகிருள். மன்னன் மிகவும் வருந்தி, முதலில் அவளைப் பழித்துரைக்கிருன்; இரந்தால் மனம் இளகக்கூடும் என்று எண்ணி, இரந்து பார்க்கிருன். பரதன் அரசாளட்டும், இராமன் மாத்திரம் நாட்டில் இருக்கட்டும் என்று கெஞ்சுகிருன்; இராமன் கானகம் சென்ருல், தன் உயிர் நீங்கிப்போகும் என்றும் உரைக்கின்ருன்; அடைக்கலம் என்று சொல்லி அவள் காலிலும் வீழ்கின்ருன். கைகேயி மனம் இளகவில்லை; விடாப்பிடியுடன் இருக்கிருள்; கொடுக்காவிட்டால் தான் இறந்துபடுவதாக உரைக்கின்ருள். என்ன செய்வான் தயரதன்! 'ஈந்தேன் வரம்; என் மகன் கானகம் செல்ல, யான் வானகம் செல்லுகின்றேன்; நீ உன் மகனேடும் வசைக் கடலில் அழுந்துக' என்று உரைத்து மூர்ச்சையுறுகிருன். தன் குறிக்கோள் முற்றியது கண்டு, கைகேயி நன்ருகத் துயில்கின்ருள்.

இரவு கழிகிறது. இராமன் முடி புனையும் காட்சியைக் காணவேண்டுமென்று மக்கள் திரள்கின்றனர். மன்னர்கள் இராமன் முடிசூடப் போவதைக் காண வருகின்றனர். வசிட்டன் மேற்படி நிகழ்ச்சிக்கு வேண்டிய அனைத்தையும் ஆயத்தம் செய்துகொண்டு, அரசவைக்கு வருகிருன்; வந்து விரைவில் இராமனைக் கொணருமாறு பணிக்க, சுமந்திரன் கைகேயி மாளிகைக்கு வருகிருன். கைகேயி இராமனை அழைத்து வருமாறு அவனைப் பணிக்கிருள். சுமந்திரனும்

இராமனிடம் போந்து, மகுடஞ் சூட விரைந்து வருமாறு வேண்டுகிறான். இராமனும் திருமால் ஆலயம் சென்று, அவனை வணங்கிவிட்டு, அரசர்கள் சூழவும் பல வாத்தியங்கள் ஒலிக்கவும் தேரில் இவர்ந்து வருகிறான். கைகேயி, தந்தையை நாடிவரும் இராமனுக்கு எதிர்சென்று தந்தையின் ஆணையொன்று இருப்பதாக உரைக்கிறாள். உரைக்குமாறு வேண்டிய இராமனிடம், ‘ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆளவும், நீ தவக்கோலத்துடன் பதினான்கு ஆண்டுகள் கானகத்தில் வசித்து வரவும் வேண்டும்’ என்று அரசன் கூறியதாக உரைக்கின்றாள். ‘அரச பாரத்தைத் தாங்கவேண்டும்’ என்று தந்தை உரைத்த நாளையினும், கைகேயியின் கட்டளையைக் கேட்ட நாளன்று, அவன் முகம் இன்னும் விளக்கமுறுகிறது. உடனே பணியை மேற்கொண்டு அவளிடம் காட்டிற்குச் செல்ல விடையும் பெறுகிறான்.

நகர் நீங்கு படலம்

கைகேயியிடம் விடைபெற்ற இராமன், கோசலை மாளிகைக்கு வருகிறான். முடி புனைவதற்குரிய அடையாளங்களின்றி வரும் தன் அருமை மைந்தனை நோக்கி, ‘நெடு முடி புனைதற்கு இடையூறு உண்டோ’ என்று வினவ, இராமன், பரதன் முடி புனைந்துகொள்ளப் போவதாகக் கூறுகிறான். கோசலை தம்பியுடன் ஒற்றுமையாக நீண்ட காலம் வாழும்படி வாழ்த்துகிறாள். பின்னர், தான் வனவாசம் போவதைக் குறிப்பிட, கோசலை துடிதுடித்துப் பலவாறு கூறிப் புலம்புகிறாள். கோசலை தானும், காட்டிற்கு உடன் வருவதாக உரைக்க, இராமன் தவம் செய்யப் போகும் தந்தையைத் தேற்றுமாறும் அருமை நோன்புகள் புரியுமாறும் வேண்டுகிறான். என்ன சொல்லியும் கேளாமல், இராமன் காட்டுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக, மன்னன் இருக்கும் இடம் செல்லுகிறாள் கோசலை.

சுமித்திரை கோசலையையும் தேற்றுவாள் என்று எண்ணி சுமித்திரையின் மாளிகைக்குப் போகிருன் இராமன்.

மன்னன் மூர்ச்சித்திருப்பதைக் கண்டு பலவாறு புலம்புகிருள் கோசலை. அவ் ஒலி கேட்டு, வசிட்டன் அந்தப்புரத்துக்கு வந்து, நிலைமையை அறிகிருன். மன்னனுக்கு உயிர்ப்பு வருகிறது. முனிவன் கைகேயிக்குப் பலவாறு மதி கூறியும் அவள் விடாப்பிடியுடன் இருக்கிருள். மன்னவனும் மீட்டும் வேண்டுகிருன். அவள் இரங்காதது கண்டு, "நீ என் தாரமல்லள்; பரதன் எனக்கு மகன் அல்லன்; அவன் என் உரிமைக்கு ஆகான்" என்று கூறுகிருன். பிறகு, தன் மகன் காடு செல்லப் போவதை எண்ணி எண்ணிப் பலவாறு புலம்புகிருன். கோசலை மன்னனைத் தேற்றுகிருள். முனிவனுடன் இராமன் வரக்கூடும் என்று உரைக்கிருள்.

இதற்குள், இராமன் முடி புனைதற்குத் தடை நேரிட்ட செய்தி எங்கும் பரவுகிறது. இலக்குவன் இதைக் கேள்வியுறுகிருன்; பெருஞ் சினத்துடன் போர்க்கோலங் கொள்ளுகிருன். "எவர் வரினும் வருக; கோமகன் முடி புனைவதற்குத் தடை செய்வோரைத் தொலைத்து விடுகிறேன்" என்று கூறிக்கொண்டு, நகர் நடுவில் திரிந்து கொண்டிருக்கிருன். சிற்றன்னைபாலிருந்து ஏகும் இராமன், அவன் நாணொலி கேட்டு, போர்க்கோலம் பூண்ட காரணத்தை வினவி, 'அனைத்தும் விதியின் செயல்' என்று கூறுகிருன். சினம் மீண்டும் பொங்கி வழிகிறது. 'நான் விதிக்கும் விதியாவேன்; என் வில்லின் முன்னே விதி என்ன செய்யமுடியும்?' என்று கூறுகிருன் இலக்குவன். ஒருவாறு, இராமன் தம்பியைத் தேற்றுகிருன். இருவரும் சுமித்திரையின் கோயிலை அடைகின்றனர். இதற்குள் கைகேயி, சேடியர் மூலம் மரவுரியை அனுப்பி வைக்கிருள். இராமனைப்போல் இலக்குவனும் மரவுரியைத் தரித்துக்கொண்டு காட்டிற்குப் போகத் தயாராக இருக்கிருன். தாய் தந்தையரைத் தேற்

றிக்கொண்டு, நகரிலேயே இருக்குமாறு இராமன் இலக்கு வனை வேண்ட, அவன் இராமனைப் பிரிந்து ஒரு கணமும் உயிர் வாழ முடியாது என்று கூறுகிறான். இராமன் இலக்குவன் தன்னுடன் வருவதற்கு ஒருப்படுகின்றான். இச் சமயம் வசிட்டன் வந்து 'கானகஞ் செல்ல வேண்டா' என்று தடுக்க, இராமனும் தான் செல்வதற்குரிய நியாயங் களை எடுத்துக் கூறுகிறான். முனிவனும் வாய் மூடிக் கொள்ளுகிறான்.

பின்னர், இராமன் சீதையின் இருப்பிடம் நோக்கி வருகிறான். அனைவரும் துயரக்கடலில் அழுந்தி விடுகின் றனர். மரவுரி தரித்த கோலத்துடன் வந்த இராமனைக் கண்டு, சீதை துணுக்குறுகிறாள். அதன் காரணத்தை வினவிய அவளுக்குத் தான் கானகம் செல்லப் போவதைக் கூறுகிறான் இராமன்; அவளை வருந்தாதிருக்கும்படியும் உரைக்கிறான். தன்னையும் கூட்டிக்கொண்டு செல்லும்படி சீதை வேண்ட, "காடு உன் மெல்லிய பாதங்களைச் சுடும்; எனக்கு வருத்தமும் உண்டாகும்" என்று கூறுகிறான். ஆனால், சீதை மன உறுதியுடன் மரவுரி தரித்து இராமனைத் தொடர்கிறாள். இளையவன் முன்னே செல்லவும், சீதை பின்னே வரவும், இராமன் காட்டுக்குச் செல்வதைக் கண்ட அனைவரும் துயரத்தால் வருந்துகின்றனர். மூவரும் சுமந் திரன் கொண்டு வந்த தேரில் ஏறிப் போகின்றனர்.

தைலம் ஆட்டு படலம்

இராமன் தேரில் சென்றபோது நகர மாந்தர் அனை வரும் தேரைத் தொடர்ந்து செல்லுகின்றனர். இரண்டு யோசனை தூரம் சென்றதும் பகலவன் மறைகிறான்; அனை வரும் ஒரு சோலையில் தங்குகின்றனர்; மணற்பரப்பு, புல்தரை ஆகிய இடங்களில் உறங்குகின்றனர். இராமன் சுமந்திரனிடம் தேரைத் திருப்பி ஓட்டிக்கொண்டு சென்

ருல், மக்கள் தான் அயோத்திக்குத் திரும்பிவிட்டதாக எண்ணி நகர் ஏகிவிடுவர் என்று கூறுகிருன். சுமந்திரன் இராமனைப் பிரிந்து செல்வதற்கும், இராமனை வனத்தில் விட்டு வந்த செய்தியைத் தயரதனிடம் சொல்வதற்கும் மிக வருந்த, இராமன் ஒருவாறு அவனைத் தேற்றி அனுப்பு கிருன். இராமன், சீதை அயோத்தியிலுள்ள தந்தை முதலி யோர்க்குச் செய்திகளைச் சொல்லி யனுப்புகின்றனர். இலக்குவன் கிட்டுரமாகப் பேசுகின்ருன். இராமன் அவனைத் தணிவிக்க, சுமந்திரன் விடைபெற்றுச் செல்லு கிருன். இராமன் முதலியோர் நள்ளிரவில், கால்நடை யாகவே, கதிரவன் புறப்படுவதற்கு முன்னதாக இரண்டு யோசனை தூரம் செல்லுகின்றனர்.

அயோத்தியை அடைந்த சுமந்திரன் வசிட்டனை அணுகி, இராமன் சென்றிட்ட செய்தியைத் தெரிவிக் கிருன். இருவரும் தயரதன் மாளிகைக்குச் செல்லுகின் றனர். இராமன் கானகம் சென்ற செய்தியைச் சுமந்திரன் மூலம் அறிந்த அரசன் ஆவி நீங்குகிறது. கோசலை, சுமித்திரை, ஏனைய தேவியர் முதலியவர்கள் துயரத்தால் கதறுகின்றனர். வசிட்டன் அமைச்சர்களுடன் ஆலோ சித்து, பரதன் வரும் வரை தயரதன் உடலைத் தைலத் தில் போட்டு வைக்கின்ருன். கேகய நாட்டிலுள்ள பரதனைக் கொணருமாறு தூதரைப் போக்குகின்ருன் வசிட்டன்.

இராமனுடன் சென்ற நகரத்து மாந்தர் பொழுது விடிந்ததும், இராமனைக் காணுது வருந்தி, தேர்ச் சுவட் டைப் பற்றி அயோத்திக்குத் திரும்புகின்றனர்; இராமன் நகரத்திற்குத் திரும்பி யிருத்தல் கூடும் என்ற மகிழ்ச்சி யுடன் வருகின்றனர். வந்தவுடன் கண்டதென்ன? கேட்ட தென்ன? தயரதன் வான் புகுந்ததைக் காண்கின்றனர்; இராமன் கான் புகுந்ததைக் கேள்வியுறுகின்றனர்; சொல்ல முடியாத துன்பத்தை அடைகின்றனர்; வசிட்டன் அவர்

களைப் பலபடியாகச் சொல்லித் தேற்ற, அவர்களும் ஒருவாறு துயரத்தை அடக்கிக் கொள்ளுகின்றனர்.

கங்கைப் படலம்

இராம லக்குமணர் கோசல நாட்டெல்லையைக் கடந்து கங்கைக் கரையை அடைகின்றனர். நதிக் கரையிலிருந்த தவசியர் இராமனை வரவேற்று உபசரிக்கின்றனர்; இராமன் அவர்கள் தந்த காய் கனி கிழங்குகளை உண்டு மகிழ்ந்திருக்கையில், அந் நதிக்கரையிலுள்ள சிருங்கி பேரபுரத்து அரசனை குகன் பல காணிக்கைப் பொருள்களுடன் இராமனை வந்து காண்கின்றான். மறுநாள் கங்கை யாற்றைக் கடக்க நாவாய் கொணருமாறு, இராமன் அவனைப் பணிக்க, அவன் இராமனைப் பிரிந்து செல்வதற்கு வருந்துகிறான். இராமன் அன்றிரவு குகன் தன்னோடு இருக்க இசைகிறான். குகன் இளையபெருமாளைப் போலவே, தன் சேனையுடன் இரவு முழுவதும் வில்லேந்திய கையுடன் இராமனையும் சீதையையும் காவல் புரிகின்றான். மறுநாள் பொழுது புலர்கிறது. காலைக் கடன்களை முடித்துக்கொண்டதும் இராமன், 'விரைவில் நாவாய் வரட்டும்!' என்று குகனிடம் கூறுகிறான். அதனைக் கேட்ட குகன் இராமன் பிரிவுக்கு மிகவும் வருந்தி, கழிக்க வேண்டிய நாட்களைக் கங்கைக் கரையிலேயே கழிக்குமாறு வேண்டுகிறான். இராமன் புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபடவேண்டும் என்ற கருத்தினைத் தெரிவிக்க, குகனும் நாவாய் கொணர்ந்து 'ஏறுக' என்கின்றான். இராமன் முனிவர் முதலியவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு நாவாய் மூலம் கங்கை யாற்றைக் கடக்கிறான். மறுகரை சேர்ந்ததும் இராமன் குகனிடம் சித்திர கூடம் செல்லும் வழியை வினவ, குகன் தன் சேனையுடன் இராமன் செல்லுமிடந்தோறும் வந்து, அவனுக்கு ஏவல் புரிய இசைவு தருமாறு வேண்டுகிறான். அதனைக் கேட்ட இராமன், "நீ என் உயிரை ஒத்த நண்பன். என் தம்பி

உன் தம்பி; சீதை கொழுந்தி. நாங்கள் தயரதருக்கு நான்கு புதல்வர்களாக இருந்தோம்; இன்று உன்னோடு ஐவர்களானோம். இனி உன் சுற்றமெல்லாம் என் சுற்றமே. எனவே, சிருங்கிபேர புரத்தைப் பாதுகாப்பாயாக. கோசலத்தைப் பாதுகாக்கப் பரதனை வைத்தோம். இங்குள்ளாரைக் காக்க உன்னை வைக்கின்றோம். இவர்களைப் புரப்பாயாக!'' என்று உரிமை பாராட்டிச் சொல்லுகின்றான். குகன், இராமன் இட்ட பணியைக் கடக்க மாட்டாமல், விடைபெற்றுக் கொள்ளுகிறான்; இராமன் முதலியோர் காட்டு நெறியை நோக்கி நடக்கின்றனர்.

வனம் புகு படலம்

இராமன் முதலியோர் காடு வழியாகச் செல்லும் பொழுது, வெயில் இள நிலவைப்போல் விட்டு விட்டு வீசுகிறது; மரங்கள் நிழலைத் தருகின்றன; மேகங்கள் பனித் துளிபோல் மழைத் துளிகளை உதிர்க்கின்றன; பூவிற் பொருந்திய மென் காற்று வீசுகிறது; மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன. இக் காட்சிகளைக் கண்டு கொண்டே, இராமன் முதலியோர் நெடுந்தூரம் நடந்து பரத்துவாசன் ஆசிரமத்தை நெருங்கி வருகின்றனர். அம் முனிவன் அவர்களை எதிர்கொண்டு அழைக்க வருகிறான். அக் கோலத்துடன் அவர்களைக் காண்பதற்கு வருந்தி, பிறகு, 'எல்லாம் விதியின் செயல்' என்று கூறித் தேற்றுகிறான். பின்னர்த் தன் உறையுளுக்கு இட்டுச் சென்று, காய் கனிகளால் உபசரிக்கின்றான். பிறகு, அவ்விடத்திலேயே இருந்து தவம் செய்யுமாறு வேண்ட, இராமன் அயோத்தி அண்மையிலுள்ளதாதலால், அடிக்கடி மக்கள் வந்து தொல்லை கொடுக்கக்கூடும் என்று கூறுகிறான். முனிவன் பத்து காவதத்திற்கு அப்பாலுள்ள சித்திரகூடமலை தவத்திற்குச் சிறந்த இடம் என்று உரைக்கின்றான். முனிவரிடம் விடைபெற்று மூவரும் காளிந்தி நதியை அடைந்து,

அதனைக் கடந்து, ஒரு பாலைவனத்தையும் கடந்து, சித்திர கூட மலையைக் கண்ணுறுகின்றனர்.

சித்திரகூடப் படலம்

சித்திரகூடம் குறுகியதும், இராமன் சீதைக்கு அம் மலையின் வளங்களையும் ஏனைய காட்சிகளையும் ஒவ்வொன்றாகக் காட்டுகின்றான். பிறகு, அம்மலையின்கண் இருந்த முனிவர்கள், அம் மூவரையும் தம் இருப்பிடத்திற்கு இட்டுச் சென்று உபசரிக்கின்றனர். இரவு கழிகிறது. மறுநாள் இலக்குவன் இனியதோர் பன்னசாலையை அமைக்கிறான். இராமன் அச் சாலையைக் கண்டு பெரிதும் வியப்புறுகிறான். என்றாலும், தான் காட்டிற்கு வந்தது தம்பிக்குத்தான் துன்பம் என்று கூறுகிறான். மூவரும் பன்னசாலையிலிருந்து கொண்டு காலங் கழிக்கின்றனர்.

பள்ளி படைப் படலம்

இங்ஙனம் இராமன் சித்திரகூடத்தில் இருக்க, வசிட்டன் அனுப்பிய தூதர்கள், கேகய நாட்டை அடைகின்றனர்; பரதனிடம் ஓலையைத் தருகின்றனர். பரதன் சத்துருக்கனுடனும், சேனையுடனும் ஏழாம் நாள் கோசல நாட்டை அடைகின்றான்; நாட்டில் பல அலங்கோல நிலைகளைக் காண்கின்றான். நகரம் பூமகள் நீங்கியதுபோல் பொலிவற்றுக் காணப்படுகிறது. அரண்மனையை அடைந்து, தந்தை இருக்கும் இடங்களுக்கெல்லாம் செல்லுகிறான்; தந்தை காணப்படவில்லை. பின்னர் தாய் கூப்பிடுவதாக அறிந்து, அவளை அடைந்து தந்தை முதலியோர் சுகத்தை வினவுகின்றான். அவள் மூலம் தந்தை மறைந்த செய்தியையும், அண்ணன் காடு சென்றதையும் அறிகிறான்; அவற்றின் காரணத்தையும் தெரிந்து கொள்ளுகிறான். துக்கம் தாங்கமுடியாது பலவாறு புலம்புகிறான்; தனக்கு நாடு தேடிக் கொடுக்கும் நிமித்தம் இடையறா இன்னல்களைத்

தனக்குத் தந்த தன் அன்னையை மிகவும் கடிகிருன்; பலபடியாகப் பழித்துரைக்கின்ருன். தன் தாய் முன்னர் நிற்கவும் விரும்பாமல் கோசலேயின் இருப்பிடத்திற்குச் சென்று, அவள் காலைக் கட்டிக்கொண்டு புலம்பி அழு கிருன். அவளும் கானகம் சென்ற இராமன் திரும்பி வந்தது போன்ற உணர்ச்சி பெற்று அவனை அணைத்துக் கொள்ளு கிருள். இந்நிலையில் வசிட்டன் வருகிருன். அவனுடன் சென்று தந்தையின் உடலைக் கண்டு புலம்புகிருன். பிறகு, நான்மறையாளர், அரசன் உடலை விமானத்திலேற்றி மன்னவரும் நகரத்தவரும் கண்ணீருடன் சூழ சரயூ நதிக் குக் கொண்டு செல்லுகின்றனர்; அங்கு பரதனை ஈமக் கடன் கழிக்குமாறு ஏவுகின்றனர். அருகில் இருந்த வசிட் டன் "அன்னை தீமையால் அரசன் நின்னைத் துறந்தனன்; நீ ஈமக்கிரியைகளைச் செய்ய உரியன் அல்லை" என்று தடுக் கின்ருன். பரதன் தன் நிலைமைக்கு மிகவும் வருந்துகிருன். பிறகு முனிவன் சத்துருக்கனைக் கொண்டு ஈமக் கடனைச் செய்விக்கிருன். கோசலை முதலிய மூவரைத் தவிர ஏனைய தேவிமார் எரியுள் மூழ்குகின்றனர்.

ஆற்றுப் படலம்

அமைச்சர்கள், நகரத்துப் பெரியோர்கள், சேனைத் தலைவர்கள், சிற்றரசர்கள் ஆகியோர் பரதனிடம் வருகின் றனர். சுமந்திரன் வசிட்டனைக் குறிப்புடன் நோக்குகிருன். அக்குறிப்பு உணர்ந்த வசிட்டன் பரதனிடம், நாட்டைக் காத்தல் அவன் கடமை என்பதைப் பலவாறு உணர்த்து கிருன். பரதன் நஞ்சு நுகர்ந்தான் போன்று நடுநடுங்கி, நாக்குழறக் கண்ணீர் அருவிபோற் பொழிய மூர்ச்சிக்கின் ருன்; பின்னர்த் தெளிகிருன். இராமனைக் கொணர்ந்து முடிசூட்டுவதே முறை என்று உரைக்கின்ருன். அனைவரும் பரதனின் பெருங் குணத்தை மெச்சிப் புகழ்கின்றனர். அவர்கள் இராமனை அழைத்துவரப் பரதனுடன் புறப்படு

கின்றனர்; இராமன் தங்கிய சோலையில் தங்குகின்றனர். பரதன் நடந்தே செல்லுகிறான்.

குகப் படலம்

காலினால் நடந்து சென்ற பரதன், கோசல நாட்டைக் கடந்து கங்கைக் கரையை அடைகிறான். சேனைகளுடன் பரதன் வருவதைக் குகன் காண்கிறான். இராமனைக் காட்டிற்கு அனுப்பியதுடன் அமையாது, சேனையுடன் அவனோடு போர் தொடுக்கவும் பரதன் எண்ணி வருகின்றான் போலும் என்று கருதுகிறான் குகன். போர்க்கோலங் கொண்டு சேனா வீரர்கள் சூழ, கங்கையின் தென் கரையை வந்தடைகிறான். தந்திரமாக வந்துள்ள சேனையைக் கொன்று, அரசை இராமனுக்கு ஈதலே தன் கடன் என்று தன் தோழர்களிடம் சாற்றுகின்றான் குகன். மேலும் தாங்கள் இன்றி எங்ஙனம் ஆற்றைக் கடக்கமுடியும் என்று எண்ணி, ஒருவரும் நாவாய் விடக்கூடாது என்று பணிக்கிறான். இவ்வாறிருக்கையில் சுமந்திரன், வழியில் நிற்கும் குகனைச் சேய்மையிற் கண்டு, குகனைப் பற்றிப் பரதனுக்குத் தெரிவிக்கிறான். இராமனின் இன்துணைவன் குகன் என்பதை அறிந்த பரதன், தானே அவனை முதலில் சென்று காண வருகிறான். அங்ஙனம், பரதன் வருங்கால், அவன் கோலத்தைக் கண்ட குகன் திடுக்கிடுகிறான்; கையில் இருந்த வில் நழுவிக் கீழே விழுகிறது. உண்மையை அறியும் பொருட்டு, ஒரு நாவாயில் தனியாகப் பரதனைக் காண ஆற்றைக் கடந்து வருகிறான். வந்து, பரதன் வந்த காரணத்தை வினவ, பரதன் 'தந்தை முந்தைமுறை வழுவினன்; அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன்' என்று கூறுகிறான். அதைக் கேட்ட குகன் பரதன் தன்மையைக் கொண்டாடிப் பாராட்டுகிறான். பிறகு, இராமன் வைகிய பள்ளி முதலியவற்றைக் குகன் காட்டப் பரதன் காண்கிறான்; மற்றும் இலக்குவன் செயலைக் கூறக் கேட்ட

பரதன் 'நான் துன்பத்துக்கு ஏதுவானேன்; அவன் அது துடைக்க நின்ருன்' என்று தம்பியின் சேவையைப் பாராட்டுகின்ருன். அன்றிரவு, தரையிற் படுத்திருந்து, மறுநாள் கங்கையைக் கடக்க உதவி செய்யுமாறு குகனை வேண்டுகிருன். குகன் உதவியால், அனைவரும் கங்கையைக் கடக்கின்றனர். பரதன், தன் தாய்மார், தம்பி, சுமந்திரன், குகன் ஆகியோர் ஒரு படகில் செல்லுகின்றனர். அங்ஙனம் செல்லும்போது, பரதன் குகனுக்குத் தன் தாய்மாரை அறிமுகம் செய்து வைக்கிருன். எதிர்க் கரையை அடைந்ததும், தாய்மார் சிவிகையில் செல்ல, பரதன் காலாலேயே பல காத தூரம் நடந்து சென்று பரத்துவாசன் இருக்கும் இடத்தை அடைகிருன்.

கிளை கண்டு நீங்கு படலம்

பரத்துவாசன் வேதியர்களுடன், பரதன் முதலியோரை வரவேற்கிருன். முனிவன், பரதன் தவக்கோலம் கொண்ட காரணத்தை வினவ, அதற்குப் பரதன் முறை தவறி ஆட்சியை ஏற்க முடியாது என்று கூறுகிருன். அவ் உரையைக் கேட்ட முனிவன் உள்ளம் குளிர்கிறது. முனிவன் அவர்களைத் தன் ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று, தவ வலியால் அனைவர்க்கும் விருந்து அளிக்கிருன். சேனை பெரு மகிழ்ச்சி அடைகிறது. பரதன் மட்டும், காய் கிழங்கை உண்டு, தரையிற் படுத்துக் கிடக்கின்ருன். மறுநாள் பரதன் சேனையுடன் இடையிலிருந்த பாலைவனத்தைக் கடந்து சித்திரகூடத்தை நோக்கி வருகிருன். சேனை வரும் ஆரவாரத்தைக் கேட்டு இலக்குவன், மலையுச்சியிலேறிப் பார்த்து, பரதனைச் சேனையுடன் காண்கிருன். உடனே போர்க்கோலங் கொண்டு, இராமனிடம் வந்து பரதனையும் அவன் சேனையையும் ஒரு நொடியில் ஒழித்துவிடுவதாக உரைக்கிருன். இராமன், 'இலக்குவ! நின்னல் முடியாதது ஒன்றுமில்லை; ஆனல், பரதன் என்னைக் கண்டு, அரசாட்

சியை என்னிடம் ஒப்படைக்கவே இங்கு வருகிறுன்!' என்று சொல்லி அடக்குகிறுன். இதற்குள் பரதன் சித்திர கூடத்துக்கு வந்து விடுகிறுன்; தானும் தம்பியுமாக முன் வருகையில் இராமன், இலக்குவனுக்கு அவலத்தின் உருவமாகக் காட்சி அளிக்கும் பரதனைக் காட்டி, 'பரதனது போர்க் கோலத்தைக் காண்க' என்று கூறுகிறுன்; இலக்குவன் நாணத்தினுல் முகங் கவிழ்ந்து நிற்கிறுன். பரதன் இராமனைக் கிட்டி, அவன் அடிகளை வணங்குகிறுன். இராமன் அவனைத் தன் மார்புடன் எடுத்துப் புல்லி, அவன் வேடத்தை உற்று நோக்கி 'தந்தை சுகமா?' என்று வினவுகிறுன். பரதன், தந்தை திருநாட்டை அலங்கரித்த செய்தியைத் தெரிவிக்கிறுன். அதைக் கேட்ட இராமன் மனம் வருந்தி, மண்ணிடை விழுந்து பலபடியாகப் புலம்புகிறுன். வசிட்டன் தேற்றத் தேறி, தந்தையாருக்கு ஆற்ற வேண்டிய கிரியைகளைச் செய்து முடிக்கிறுன். பிறகு, சீதை இருக்குமிடம் சென்று, தயரதன் மறைந்த செய்தியை அவளுக்கு உரைக்க, அவள் வருந்துகிறுள். முனிவர் பத்தினிமார், அவளை நீராட்டுகின்றனர்; பிறகு, அவள் இராமனை அடைகிறுள். சுமந்திரன் தாயரை அழைத்து வருகிறுன்; இராமன் அவர்களை வணங்கி நிற்க, அவர்கள் வருந்தி நிற்கின்றனர். கதிரவனும் மறைகிறுன்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், யாவரும் இராமனைச் சூழ்கின்றனர். இராமன் பரதனை நோக்கி, 'மன்னவன் துஞ்சினன்; நாடு நின்னது; விரத வேடம் பூண்ட காரணம் என்ன?' என்று வினவுகிறுன். பரதன் பதைபதைத்துத் தன் தாயின் செயலை வெறுத்து, தன்னையும் நொந்து, 'நீ மீண்டு வந்து அரசு செய்க' என வேண்டுகிறுன். அதற்கு இராமன், பரதன் மனக் கருத்தை நன்குணர்ந்து 'பெற்ருேரை மெய்யராக்குதல் புதல்வர் கடமை; தந்தை வரமாக அளித்த பாரை நீ அரசு புரிதலே முறையாகும்' என்று கூறுகிறுன். பரதன் 'அரசு என்னதாகில், அதை யான்

உனக்குத் தந்திட்டேன்; நீ மகுடம் புனைந்து கொள்க' என்று வேண்டுகிறான். இராமன் தான் பதினான்கு ஆண்டுகள் கானில் உறைவதே முறையென்று கூறி, தன் ஆணைப்படி அரசு புரியும்படி சமாதானம் செய்கிறான். பதினான்கு ஆண்டில் வராவிட்டால், தான் எரியுட் புக்கு மாள்வதாகச் சபதம் கூறி, அரசு புரிவதாக ஒருப்பட்டு அவனுடைய பாதுகைகளைப் பெற்றுக்கொண்டு திரும்புகிறான் பரதன். ஆனால், அவன் அயோத்தி செல்லவில்லை; நந்தியம்பதியில் இருந்து கொண்டே, இராமன் பாதுகைகளுக்குப் பட்டம் சூட்டித் தான் இந்திரியங்களை அடக்கித் துறவிபோல் காலங் கழிக்கிறான். இராமனும், தான் சித்திரகூடத்திலிருந்தால் அயோத்தியில் உள்ளவர் அன்பினால் அடிக்கடி வந்து தொல்லை கொடுக்கக் கூடும் என்று நினைந்து, தென் திசை நோக்கிச் செல்லுகிறான்.

கதைப் பாத்திரங்கள்

19. **சுமந்திரன்**

தசரதனுடைய மந்திரக் கிழவர்களில், மிகவும் முக்கியமானவன் ; காவியத்தில் அமைச்சர்களின் பிரதிநிதிபோல் திகழ்பவன் ; நம்பிக்கைக்குப் பாத்திர மானவன் ; அரச காரியங்கள் அனைத்திலும் பங்கு கொள்பவன் ; காவியத்தில் அமைச்சனாகவும் தேர்ப் பாகனாகவும் கூறப்படுகிறான் ; முக்கியமான சந்தர்ப் பங்களிலெல்லாம் இவன்தான் தேரை இவர்ந்து செல் வதாகக் கூறப்படுகிறது.

20. **மந்தரை**

கைகேயிக்கு அந்தப்புரத்தில் தோழியாக இருப் பவள் ; வஞ்சகத்திற்கும் தந்திரத்துக்கும் எடுத்துக் காட்டாக இருப்பவள் ; கோணல் புத்தியை உடைய வள் ; இராமனைக் காட்டிற்கு அனுப்புவதற்கு முதற் காரணமாக இருப்பவள் ; பாற்கடலைக் கடைந்த மந்தர மலைபோல், பாற்கடல் போன்ற கைகேயி உள்ளத்தை யும் மாற்றித் தீய செயலில் ஈடுபடச் செய்தவள் ; இவள் காவியத்தின் முதல் திருப்பு மையம் ; பெரு விசைபோல் நின்று, காவியத்தைப் பேரெடுப்பாக இயங்கச் செய்பவள் ; இவள் கூனி யென்றும் வழங் கப்படுவாள்.

21. **குகன்**

வேடர் தலைவன் ; கங்கைக் கரையிலுள்ள சிருங்கி பேரம் என்ற ஊரிலிருந்து ஆண்டவன் ; கங்கையாற்

றில் நாவாய் வலிக்கும் தொழிலே மேற்கொண்டிருப்பவன் ; ஆயிரம் அம்பிக்கு நாதன் ; காவியத் தலைவனாகிய இராமனுக்கு இன்துணைவன் ; 'குகனொடும் ஐவரானேம்' என்று அவனால் உடன் பிறந்தவனாகக் கொள்ளும் அளவுக்குத் தோழமை பூண்டவன் ; 'இலக்குவற்கும், இளையவற்கும் எனக்கும் மூத்தான்' என்று பரதனாலும் உரிமை பாராட்டப் பெறுபவன் ; இராம பக்தியின் சிகரமாகத் திகழ்பவன்.

22. பரத்துவாச முனிவன்

அயோத்திக்கு அருகிலுள்ள காட்டில் வதிந்து வந்த ஒரு பெருந் தவசி ; காவியத் தலைவனான இராமனிடம் பேரன்பு கொண்டவன் ; குகனுக்குப் பிறகு, இராமன் காட்டில் சந்தித்தது இவனைத்தான். சித்திர கூடம் தவக் கோலத்துடன் வாழ்பவர்கட்கு ஏற்ற இடம் என்று தேர்ந்து உரைத்த மாமுனிவன் ; பதினான்கு ஆண்டுகள் கழித்து இராமன் அயோத்திக்குத் திரும்பினபொழுது இராமனுக்கும், அவனைச் சார்ந்த வானரங்கள், அரக்கர்கள் முதலியோருக்கும் விருந்தளித்து உபசரித்தவன்.

குறிப்பு : இக்காண்டத்தில் வரும் ஏனைய பாத்திரங்களைப் பற்றிப் பாலகாண்டத்தில் காண்க.

பாடல்களில் காணப்படும்

கதைக் குறிப்புக்கள்

இராகு சந்திரனை விழுங்குதல்

பாடல் 467

பாற்கடலைக் கடைந்தபோது, அமுதம் தோன்றியதும் அசுரர்கள் கலத்துடன் தூக்கிக்கொண்டு ஓடிவிடுகின்றனர். திருமால் மோகினி அவதாரம் கொண்டு, தேவர்களையும் அசுரர்களையும் இரண்டு வரிசையாக உட்கார வைத்து அமுதத்தை வாங்கிப் பரிமாறுகிறார். முதலில் தேவர் வரிசைக்கு ஊற்றிக்கொண்டே வருகிறார். இந்தச் சூழ்ச்சியை ஓரளவு அறிந்துகொண்ட இராகு, கேது என்ற இரண்டு அசுரர்களும் தமக்கு (அசுரர்களுக்கு) அமுதமே இல்லாது போகக்கூடும் என்று எண்ணி, சூரிய சந்திரர்களுக்கு இடையில் உட்கார்ந்து அமுதத்தை வாங்கி உண்கின்றனர். இதைச் சூரிய சந்திரர்கள் காட்டிக் கொடுக்கின்றனர். திருமால் சக்கரத்தை ஏவி, அவர்கள் சிரத்தைக் கொய்ய முயல, அமுதம் உண்டதால் அவர்களைக் கொல்ல முடியவில்லை. இந்த விரோதத்தை மனத்தில் வைத்துக்கொண்டு இராகு சந்திரனையும், கேது சூரியனையும் விழுங்கி வருவதாகக் கூறுவது புராண மரபு.

சம்பராசுரனுடன் போர்

பாடல்கள் 492, 741, 854

பாலகாண்டம் 396-ஆம் பக்கத்தில் காண்க.

கடலை அகழ்ந்த கதை

பாடல் 556

இட்சுவாகு வமிசத்து ஆறு சக்கரவர்த்திகளில் ஒருவனாகிய சகரன், இந்திரப் பட்டத்தை விரும்பித் தொண்ணூற்றொன்பது அசுவமேத யாகம் செய்து முடித்து, நூறாவது செய்யத் தொடங்குகையில், இந்திரன் அசுவமேதப் புரவியைக் கவர்ந்து பாதலத்தில் தவஞ் செய்து கொண்டிருந்த கபில முனிவர் ஆசிரமத்தில் கட்டிச் செல்லுகிறான். சகர புத்திரர்கள் அறுபதினாயிரவரும் குதிரையை நிலமெங்கும் தேடிக் காணாது, புவியைத் தோண்டிச் சென்று பாதலத்தி லிருந்த புரவியைக் காண்கின்றனர். முனிவர்தான் புரவியைக் கவர்ந்தவர் என்று எண்ணி அவரைத் துன்புறுத்துகின்றனர். அம் முனிவர் வெகுண்டு, இவர்களைச் சாம்பராக்குகிறார். சகரர்கள் தோண்டிய இடந்தான் சாகரம்; கடல்.

கங்கை அவனிக்கு வந்த வரலாறு

பாடல் 556

இட்சுவாகு வமிசத்தில் பிறந்த பகீரதன் என்பான், தன் பாட்டன்மார் கபில முனிவர் சாபத்தால் நற்கதியடையாது பாதலத்தில் சாம்பராய்க் கிடப்பதை உணர்ந்து, ஆகாய கங்கையை நோக்கிக் கடுந் தவம் செய்து, கங்கையைத் தரிசித்து, கங்கையின் வேகத்தைத் தாங்கும்படி சிவபிரானை நோக்கித் தவம் செய்து, அவ் இறைவன் அருள் பெற்று, பூமியில் சிறிதளவு கங்கையைக் கொணர்ந்து பாதலத்திலிருந்த பிதிரர் என்பினை நனைப்பித்து அவர்களை நற்கதி யடையச் செய்தான் என்பது புராண வரலாறு. பகீரதனாற் கொண்டுவரப் பெற்றதால், கங்கைக்குப் பாகீரதி என்ற பெயரும் உண்டு.

கஜேந்திர மோட்சம்

பாடல் 555

இந்திரத் துய்மன் என்னும் அரசன் அகத்திய முனிவரைக் கண்டு பணியாதிருந்தமையின், அவர் சாபத்தால் யானையானவன்; இயற்கையான திருமால் பக்தியுடன் ஒரு தடாகத்தில், தாமரை மலர் கொய்து கொண்டிருக்கையில், சாபத்தால் முதலை வடிவேற்றிருந்த ஹூஹூ என்னும் கந்தர்வன், யானையின் காலைப் பற்றி ஈர்த்தான். இருவரும் போர் புரிந்து இறுதியில் ஆற்றாது, கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று திருமாலைக் கூவ, திருமால் யானைக்குக் காட்சி தந்து, சக்கரத்தால் முதலையைக் கொன்று யானையைக் காத்தார். யானையும் முதலையும் தம் உருவை இழந்து முத்தியடைந்தன.

திருப்பாற் கடல் கடைந்த வரலாறு

பாடல் 632

பாலகாண்டம்—395-ம் பக்கத்தில் காண்க.

மாயன் உலகை நெடுமையால் அளந்த வரலாறு

பாடல் 946

மாபலிச் சக்கரவர்த்தியை அடக்கும் நிமித்தம் திருமால் காசிபருக்கும் அதிதிக்கும் மகனாகப் பிறந்து, மாபலியிடம் வந்து மூவடி மண் வேண்டி அதனைப் பெற்றுப் பிறகு பேருருவங் கொண்டு பூமியை ஓரடியாலும், வானத்தை மற்றோரடியாலும் அளந்து மூன்றாவது அடிக்கு இடங் கேட்க, மாபலி தன் தலையைக் காட்ட, அதில் தன் அடியை வைத்து அவனைப் பாதலத்தில் அமுத்தினார். பேருருவங் கொண்டதைத் திருவிக்கிரமாவதாரம் என்று கூறுவர்.

பாட்டு முதற் குறிப்பு

[எண் பாடல்களின் எண்ணைக் குறிக்கும்]